Saxaphone

வித்தியாவிருத்தித்தருமாலய வெளியீடு.

உ

சிவமயம்.

# சொற்பொருள் விளக்கம்

என்னும்

# தமிழகராதி.

இது

யாழ்ப்பாணம் பருத்தித்துறை

வித்தியாவிருத்தித்தருமாலய கர்த்தரும்

**பிரபல சோதிடகணிதசித்தாந்தியும் ஆகிய**

பிரமஸ்ரீ.

**ச. சுப்பிரமணியசாஸ்திரிகளால்**

புதிதாய்எழுதி அச்சிடப்பட்டபிரதிக்கிணங்க,

இக்காலத்துக்கியைந்தனவாகக் கூட்டியும் மாற்றியும்

அவர்கள் எழுதிவைத்த சில சொற்களையுஞ் சேர்த்து,

அவர் சகோதரர்

பிரமஸ்ரீ. ச. சோமசுந்தரஐயரால்

பருத்தித்துறை

**கலாநிதியந்திரசாலையிற்**

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம்பதிப்பு

விகாரிஞு மாசிமீ] 1960. [விலை ரூபா 5.

*All Rights Reserved.*

கலிகோபயின்ட் ரூபாஆறு,

உ

# முகவுரை.

தமிழ்ப்பாஷையிலுள்ள சொற்களையும் பொருள்களையும் அறியும்பொருட்டுப்பண்டைக்காலத்தில்வழங்கிய நூல்கள், திவாகரம் பிங்கலம் சூடாமணிநிகண்டு முதலியவைகளே. அந்நூல்கள் மாணாக்கரால் இனிது மனனஞ்செய்யத்தக்கனவும் சொற்களையும் பொருள்களையுஞ் சுருக்கியுணர்த்துவனவுமாயமைந்துள்ளன.

கிறீஸ்து௵ 1700-ன்மேல் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவில் வந்திருந்த கத்தோலிக்ககுரவருள்ளொருவராகிய வீரமாமுனிவரென்பவரால் தமிழ்ப்பாஷையில் ஓரகராதி இயற்றப்பட்டது. அது சதுரகராதியென்னும்பெயருடன் அச்சிடப்பட்டது. அதன்மேல் மானிப்பாயில் 1842-ம் ஆண்டில் ஒருஅகராதி அச்சிடப்பட்டது. மேல் அப்புத்தகங்களிற் பலசொற்களையும் பொருள்களையும் உதாரணங்களையுஞ்சேர்த்துக் காலந்தோறும் பலஅகராதிகள் அச்சிடப்பட்டன. அவை பரம்பியபின் நிகண்டுகற்கும் வழக்கங்குன்றியது. தற்காலத்திற் பெரும்பாலார் சொற்பொருள்களையறிதற்கு அகராதிப்புத்தகத்தையே உபயோகிக்கின்றார்கள்.

எங்கள்தேசபாஷைகளாகிய சம்ஸ்கிருதம் தமிழ் என்னும் இரண்டையும் அபிவிருத்திசெய்தலையே தருமமாகக் கொண்ட எனக்கு இப்புத்தகத்தை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்துவது அத்தியாவசியகமாயிற்று.

இப்புத்தகம் இதுகாறும் தமிழில் வெளிவந்திருக்கிற அகராதிகளொன்றையும் பின்பற்றாது சூடாமணி பிங்கலம் முதலிய நிகண்டுகளையும் சங்கப்புலவர்களாற் செய்யப்பட்ட நூல்களையும் உரைகளையும் பலகாப்பியங்களையும் வடநூலகராதியையும் ஆதாரமாகக்கொண்டு சுருக்கமாகவும் விளக்கமாகவும் என்னால் எழுதப்பெற்றது. சொற்களையும் பொருள்களையும் இனிது விளக்குதலாற் சொற்பொருள் விளக்கமென்னும் பெயர்த்தாயிற்று. பலஅறிஞர்கூடிச் செய்யவேண்டிய இம்முயற்சியைத் தனியே செய்யநேர்ந்தமையால் எனக்கு அதிககஷ்டம் உண்டானபோதும் அதனைப்பொருட்படுத்தாது தமிழ்மொழியைப் பயில்வார்க்கோர் சிறந்த கருவியாக இப்புத்தகத்தை நிறைவேற்றி வெளிப்படுத்தினேன்.

இப்புத்தகம் உருவத்தாற் சிறியதாயினும் தமிழிலுள்ள சொற்களையும் தமிழில் வழங்கத்தக்க பல வடசொற்களையும் அவற்றிற்குரிய உண்மையான பொருள்களையும் அமைத்திருக்கின்றது. எவரும் உணர்ந்துகொள்ளுதற்கேற்ற செந்தமிழ்நடை

யிலெழுதப்பட்டது. ஐயப்படக்கூடிய பலபொருள்களுக்கு அங்கங்கே உதாரணங்களும் மேற்கோளின் குறிப்புக்களும் அமையப்பெற்றது. பல்பெயர்க்கூட்டமான தொகையகராதி வேறாகவைக்கப்பெறாது ஒருங்கே தொடர்த்திஎழுதப்பட்டது. சங்கப்புலவர்களுடைய வழக்கிலுள்ளனவும் பிறஅகராதிகளிற்காணப்படாதனவுமாகிய பலசொற்களும் பொருள்களும் சேர்ந்துள்ளது. ஊர்ப்பெயர் அரசர்பெயர் வைத்தியநூலில் வழங்குவனவாகிய மருந்துகளின்பெயர் முதலியவைகளிற் சில, கண்டுழியுணரத்தக்கனவும் அவசியமற்றனவுமாதலின் இதிற்சேர்க்கப்பட்டில. தற்காலத்தில் அகராதிப்புத்தகங்களையச்சிடுவோர் சிலர் சொற்களையும் பொருள்களையுஞ் சேர்த்தலிலும் புத்தகத்தைப்பெரிதாக்குதலிலும் ஆவலுறுவதுபோலவே, நான், உபயோகமில்லாதவைகளையுந் தவறானவைகளையும் நீக்குதலிலும் புத்தகத்தைச் சிறிதாக்குதலிலும் ஆவல்கொண்டேன். இக்காரணத்தால் இப்புத்தகம் மிகச்சிறிதாயினும் வேண்டியசொற்களையும் பொருள்களையும் குறைவற அமைந்திருத்தலினால் பெரியபுத்தகங்களினின்று அதிகமானபிரயோசனத்தைத் தரத்தக்கது. தமிழ்மக்களனைவர்க்கும் இன்றியமையாதது. வடசொற்களுக்குச் சுத்தமான பொருள்களெழுதப்பட்டிருத்தலாற் சம்ஸ்கிருதபாஷையைக்கற்குந் தமிழர்க்கும் மிக உபயோகமானது.

எனது ஆசிரியரும் மாதுலரும் சம்ஸ்கிருதம்தமிழ்என்னுமிருபாஷைகளிலுஞ் சிறந்தபாண்டித்தியமுடையவருமாகிய பிரமஸ்ரீ. ம. முத்துக்குமாரசாமிக்குருக்களவர்கள் இவ்வகராதி அச்சிடுங்காலங்களிற் பார்வையிட்டதற்காக நன்றியறிதலுடையவனாய் அவருடையபாதாரவிந்தங்களுக்கு எனதுவணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

ச. சுப்பிரமணியசாஸ்திரி.

---

## இவ்வகராதியை உபயோகிப்பவர்கள் அறியவேண்டிய சில குறிப்புக்கள்.

க. இப்புத்தகத்திற் சொற்களின் பொருள்கள் மற்றைப் தமிழகராதிகளிற்போல எழுத்துநிரையே வைக்கப்படவில்லை. வழக்கிற்குந்தொடர்புக்கு மேற்றவாறு முன்பின்னாய் நிரைக்கப்பட்டன.

உ. சில சொற்களும் பொருள்களும் இணைப்பகரத்தாலமைக்கப்பட்டிருக்கின்றன. அவை இலக்கியங்களிற் காணப்படாதனவாய் வழக்கிலிருப்பன. இணைப்பகரம் ☞ [ ]

௩. இணைப்பிறையுள்ளமைக்கப்படிருப்பன சொல்லின்பின்னுள்ளனவாயின் அச்சொல்லின்பேதம் அல்லது பிரிப்பு முதலியவற்றையும், பொருளின் பின்னுள்ளனவாயின் அப்பொருளுக்குரிய விளக்கம் உதாரணம் முதலியவற்றையும் உணர்த்தும். இணைப்பிறை ☞ ( )

௪. ஒன்றோடொன்று தொடரப்பெற்ற தனிச்சொற்களின் பொருளாலுணரத்தக்க தொடர்சொற்களும் பொருள்களும் பெரும்பாலும் இப்புத்தகத்திலெழுதப்பட்டில. எழுதப்பட்ட தனிச்சொற்களின்பொருளால் உணர்தற்பாலன. (சூரியகாந்தம் என்பதன்பொருளால் இரவிகாந்தம் முதலியசொற்களுக்கும் கருடக்கொடியோன் என்பதன்பொருளால் உவணகேதனன் முதலியசொற்களுக்கும் பொருள்உணர்தற்பாலன. பிறவுமிவ்வாறே). நட்சத்திரம் இராசி முதலியவற்றிற்கு அவ்வவற்றின் உருவம் அதிதேவதைமுதலியவற்றின் பரியாயமானசொற்களும் பெயராம். அவற்றையும் ஏற்றவாறு ஊகித்துக்கொள்க.

௫. ஒருவிகுதியோடு பொருளெழுதப்பட்ட பெயர்ப்பகுபதங்கள் அப்பாலுக்குரிய வேறுவிகுதிகளோடும் இடைநிலைமுதலியவற்றோடுங்கூடிவந்தபோது பொருள் அதுவே. (சான்றவர் என்பதன்பொருளே சான்றோர் முதலியவற்றிற்கும்; மறவி என்பதன்பொருளே மறதிக்கும்; அணங்குதல் என்பதன்பொருளே அணங்கலுக்கும். பிறவுமிவ்வாறே).

௬. சிலசொற்கள் சாரியைபெற்றும் பெறாதும் வழங்கும். சிலசொற்கள் ஈறு பலவகையாகத் திரிந்தும் வழங்கும். அங்ஙனம் வேறுபடினும் பொருள் ஒன்றே. (மருது மருதம்; விள விளவு விளா; இவைபோல்வன பலபேதமடைந்து வழங்கினும் எழுதிய சொல்லின்பொருளே அதன்திரிபானதும் எழுதப்படாததுமாகிய சொற்குமாமென்க.)

௭. வினைப்பகுதிகளின்பொருள் அவற்றிலிருந்து பிறக்குந் தொழிற்பெயர்களிற் குறிக்கப்பட்டன. அவற்றிலிருந்தும் பெயர் முதலிய வேறு சிலசொற்களிலிருந்தும்பிறக்கும் வினைமுற்று பெயரெச்சம் வினையெச்சம் முதலியவைகளுக்கு, பாலிடங்காலம் வாய்பாடு முதலியவற்றிற்கேற்றவாறு பொருளைத்திரித்துக் கூறுக. (அகழ்ந்தானென்னும் வினைமுற்றுக்கும் அகழ்தல் என்னுந் தொழிற்பெயர்க்கும் பகுதிஒன்றே; ஆதலின் தோண்டுதல் என்னும்பொருளை ஆண்பாற்கும்படர்க்கைக்குமிறந்தகாலத்துக்கு மேற்பத்திரித்து, தோண்டினான் எனக்கூறுக. இவ்வாறே அகழ்ந்த என்பதற்குத் தோண்டிய எனவும், அகழ்ந்து என்பதற்குத்தோண்டி எனவும் கூறுக. அழுக்கற்றான் என்னும்வினைமுற்றின்பகுதி அழுக்கறு. இதுபொறாமை என்னும் பொருளதா

கிய அழுக்காறுஎன்னும்பெயரின்றிரிபு. ஆதலின் பொறாமையுற்றானெனப்பொருள்கூறுக. பிறவுமிவ்வாறே).

௮. இலக்கியத்தில் அருகிவழங்குவனவாகிய சொற்களும் பொருள்களும் * மலரடையாளமிடப்பட்டன.

௯. மொழிமுதலில் வாராத எழுத்துக்கள் மொழிமுதலில் வருவனவாகவும் இடைநிலையில் மயங்கா என்ற எழுத்துக்கள் மயங்குவனவாகவும் தமிழெழுத்தாகத் திரியுமென்ற எழுத்துக்களுட்சில திரியாதனவாகவும் குறிக்கப்பட்ட சொற்களும் பொருள்களும் வடநூலிலக்கணம்பற்றியமைக்கத்தக்கன.

௧௦. சிலவடசொற்கள் தமிழிற்பலவடிவாகவழங்குகின்றன. ஒரு வடிவத்திற்குமாத்திரம் பொருளெழுதப்படினும் அப்பொருளே மற்றைவடிவமான சொற்குமாமெனக்கொள்க. (கார்ப்பாசம் காற்பாசம், யமன் எமன், யந்திரம் எந்திரம், இவைபோல்வன.)

௧௧. சிலசொற்கள் போலியெழுத்துக்களாலும் வழங்குகின்றன. வழங்கினும் ஒருசொற்கெழுதப்பட்ட பொருளே மற்றைச் சொற்குமாமெனக்கொள்க. (கௌசிகன் கவுசிகன், கடையம் கடயம், மராளம் மராலம், பலம் பலன் இவைபோல்வன).

௧௨. பெயர்த்தன்மையப் பொருளெழுதப்படாதனவும் அசைநிலையெனவும் அதிசயம் இரக்கம் முதலியவற்றின் குறிப்பெனவும் எழுதப்பட்டனவும் ஆனசொற்கள் அவ்வப்பொருள்களிற் பெரும்பாலும் இடைச்சொற்களாம்.

௧௩. ஒருசொற்குப்பொருள் அதன்பரியாயமான வேறு சொல்லில் முன் விரித்தெழுதப்பட்டதேயாயின், சுருங்குதற்காக, பின்னெழுதியசொற்கு முந்தியசொல்லையே பொருளாகக்குறித்தாம்.

௧௪. விகுதிகளும் இடைநிலைகளும் சாரியைகளும் இடைச்சொல்லின்பாற்படுமாயினும், தம்மைக்கூறும்வழியல்லது சொல்லெனப்படாமையானும், அவை சார்ந்தசொல்லின் பொருணிலைக்குதவுவனவன்றித் தமக்கென வேறுபொருளுடையனவாகாமையானும் வடநூல்கராதியெழுதினோரும்அவற்றைச் சொல்லாகக் கொண்டிலராதலானும் அவை சொற்களாகச்சேர்க்கப்பட்டில.

௧௫. உயிர்மெய்யென்பது உயிருமெய்யுங்கூடிய கூட்டெழுத்தேயாதலால் சொற்களை அகராதியாய்நிரைக்கும்போது மெய்யெழுத்தின் பின் (அகரமுதலிய உயிரெழுத்துக்கள்தொடர்ந்து வருஞ்சொற்கள்முன்னும் மெய்தொடர்ந்துவருஞ்சொற்கள் பின்னும் வைக்கப்பட்டன. அவ்வம்மெய்யீறுளசொற்கள் இருவகைச்சொற்களுக்கும்பிரிவுதோன்ற இடையே நிரைக்கப்பட்டன. வடவெழுத்துக்களோடுகூடியசொற்களைச்சேர்ப்பது அனுவசியகமாயினும் சிறுபான்மை வழக்குநோக்கிப் பின் சேர்க்கப்பட்டன.)

கஎ. இப்புத்தகத்திற்குறிக்கப்பட்ட நூல்களின் முழுப்பெயர்கள் இதற்கடுத்தபக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. பலபெயர்முதலியன அவ்வந்நூல்களிற்காணத்தக்கன.

கஅ. இலட்சம்கோடிமுதலியபேரெண்களின்பெயர்கள் தமிழ் நூல்களில் ஒன்றேடொன்று மாறுபடக்கூறப்பட்டிருத்தலின கணிதபண்டிதராகிய பாஸ்கராசாரியர் லீலாவதியிற்கூறியபடி நிச்சயிக்கப்பட்டன.

கக. பலபொருட்சொற்கள் வினை இனம் சார்பு முதலியவற்றிற் கேற்ற பொருளையே வழக்கிலுடையனவாம்.

---

# பதிப்புரை.

எனது தமையனர் பிரமஸ்ரீ. ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் இவ்வகராதியைத் தமது சிரமத்தைப் பொருட்படுத்தாது நிறைவேற்றி 1925ம்ஆண்டில் வெளிப்படுத்தினர். அறிவிற்சிறந்த பெரியாரும் ஆசிரியர்களும் வித்துவான்களும் ஏற்று உபயோகித்தனர். அக்காலத்தில் ஆசிரியகலாசாலையிலிருந்த செயலாளர்கள் பாடஅட்டவணைகளில் வெளிப்படுத்தி உபயோகப்படுத்தியதால் சில வருடங்களில் முழுப் புத்தகங்களும் செலவாய் விட்டன, இரண்டாம்பதிப்பாக வெளியிடும்படி அனேகர் வேண்டிக்கொண்டதற்காக, காலத்துக்கியைந்த சிலமாறுதல்களைச்செய்து, அதை அச்சிட்டு வெளியிடுமாறு எனக்கு உத்தரவுசெய்தனர். சிலகாலத்தில் தமையனரவர்கள் சிவபதமடைந்தனர். அதன்மேல் என்னை, பேராசிரியர்சிலரும் வித்தியாபகுதியைச் சேர்ந்தவர்கள் சிலரும் அச்சிட்டுவெளியிடும்படி ஊக்கப்படுத்தினர். தொடங்கி மூன்றிலொருபாகம் அச்சிட்டுநிறைவேறியசமயம் கடுமையானசுகவீனமடைந்து சுமார் மூன்று மாசம் வீணுய்க் கழிந்து ஒருவாறு சுகமுற்றபின்னும், குறித்த அகராதியை நிறைவேற்ற முடியாமல் வருந்தினேன். அச்சமயம் என்னை ஊக்கப்படுத்தி உதவிகள்செய்து பலசமயங்களில் அச்சிடும்பிரதிகளை ஒப்புநோக்கல் முதலிய வற்றிற்குத் துணைபுரிந்த பருத்தித்துறைச் சித்திவிநாயகர் வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர், வித்துவான், பண்டிதர் ஸ்ரீமான். க. கிருஷ்ணபிள்ளை அவர்கட்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

ச. சோமசுந்தரஐயர்.

## நூற் பெயர்க்குறிப்பு.

| குறிப்பு. | நூற்பெயர். | குறிப்பு. | நூற்பெயர். |
|---|---|---|---|
| அரிச் | அரிச்சந்திரபுராணம். | திருவா | திருவாதவூரர்புராணம். |
| ஆத் | ஆத்திசூடி. | திருவி | திருவிளையாடற்புராணம். |
| இரகு | இரகுவம்சம். | திவா | திவாகரம். |
| இராமா | இராமாயணம். | தொல் | தொல்காப்பியம். |
| உலகி | உலகியல்விளக்கம். | நல் | நல்வழி. |
| ஏகா | ஏகாதசிப்புராணம். | நளவெ | நளவெண்பா. |
| ஐங்குறு | ஐங்குறுநூறு. | நாலடி | நாலடியார். |
| கந் | கந்தபுராணம். | நாலாயிரப் | நாலாயிரப்பிரபந்தம். |
| கலித் | கலித்தொகை. | நி | சூடாமணிநிகண்டு. |
| காஞ்சி | காஞ்சிப்புராணம். | நெடுநல் | நெடுநல்வாடை. |
| காம | காமந்தகீய நீதிஸாரம்। | பட்டணத் | பட்டணத்தார்பாடல். |
| குறிஞ் | குறிஞ்சிப்பாட்டு. | பட்டினப் | பட்டினப்பாலை. |
| கூர்ம | கூர்மபுராணம். | பதிற்று | பதிற்றுப்பத்து. |
| சங்கற்ப | சங்கற்பநிராகரணம். | பாரத | வில்லிபுத்தூரர்பாரதம் |
| சப்த | ஸப்த ஶ்லோக ஸங்க்ரஹம் | பிங் | பிங்கலநிகண்டு. |
| சித்தா | ஸித்தாந்த சிகாமணி: | பிரமோத் | பிரமோத்தரகாண்டம். |
| சிந் | சீவகசிந்தாமணி. | பிரயோ | பிரயோகவிவேகம். |
| சிலப் | சிலப்பதிகாரம். | புலியூ | புலியூரந்தாதி. |
| சிவதரு | சிவதருமோத்தரம். | புற | புறநானூறு. |
| சிவரக | சிவரகசியம். | புறப் | புறப்பொருள்வெண்பாமாலை. |
| சிவரா | சிவராத்திரிபுராணம். | பெரிய | பெரியபுராணம். |
| சிறுபா | சிறுபாணாற்றுப்படை. | பெரும் | பெரும்பாணாற்றுப்படை. |
| சூளா | சூளாமணி. | பொருந | பொருநராற்றுப்படை. |
| சேது | சேதுபுராணம். | மணிமே | மணிமேகலை. |
| சைவச | சைவசமயநெறி. | மதுரைக் | மதுரைக்காஞ்சி. |
| ஞானவா | ஞானவாசிட்டம். | மருதா | மருதூரந்தாதி. |
| தசகாரிய | தசகாரியவிளக்கம். | மலைபடு | மலைபடுகடாம். |
| தணிகை | தணிகைப்புராணம். | முல்லை | முல்லைப்பாட்டு. |
| தனிப் | தனிப்பாடற்றிரட்டு. | யாப்பருங் | யாப்பருங்கலக்காரிகை. |
| திரிகடு | திரிகடுகம். | வச்சணந் | வச்சணந்திமாலை. |
| திருக் | திருக்குறள். | வாக் | வாக்குண்டாம். |
| திருக்கோ | திருக்கோவையார். | விவேகசிந் | விவேகசிந்தாமணி. |
| திருஞா | திருஞானசம்பந்தமூர்த்திதேவாரம். | வெற்றி | வெற்றிவேற்கை. |
| திருப் | திருப்புகழ் | ஹேமா | ஹேமாத்ரி। |
| திருமந் | திருமந்திரம். | | |
| திருமுரு | திருமுருகாற்றுப்படை. | | |

சிவமயம்

# சொற்பொருள் விளக்கம்.

## அ

அ அந்த, இதுதூரத்திலுள்ளபொருளை அல்லது முன் சொன்ன பொருளைச் சுட்டும். (உ-ம்: அக்கொற்றன். இந்தச் சுட்டு, சொல்லின் பகுதியாய் நின்று விகுதிமுதலியவற்றையேற்றும் விகாரப்பட்டும் வரும். உ-ம்: அவன் அவள் அவர் அது அஃது அவை அன்னவன் அன்னான் அனையன் அனையான் அனையவன் ஆயவன் முதலியன பெயர்ச்சொற்கள்; அற்று அன்ன அனைய முதலியன குறிப்புவினைமுற்றுக்கள்; அந்த அங்கு அங்கண் ஆங்கண் ஆயிடை ஆங்ஙனம்ஆங்கனம் முதலியன இடைச்சொற்கள்). இந்தச்சுட்டினடியாகப்பிறந்த அன்ன அனைய என்னுமிடைச்சொற்கள் உவமைப்பொருளிலும் வழங்கும்.

வடமொழி யிடைச் சொல்லாகிய ந என்பதன்விகாரமாய்ச் சில சொற்களின்முன்னேவழங்கும்போது சுட்டன்று. அதன்பொருளை 'ந' என்பதிற் காண்க.

அஃகம்-தானியம், தானியவிலை, *ஊற்றுநீர்.

அஃகான்-அ என்னுமெழுத்து.

அஃகி - ஊற்றுபுனல், அஃகு என்னும் பகுதியாற்பிறந்தவினையெச்சம்.

அஃகுதல்-குறைதல், சுருங்குதல், நுட்பமாதல், (திருக்-வெஃகாமை ௫).

அஃதல்லி-உக்காரியென்னுஞ் சிற்றுண்டி.

அஃகேனம்-ஆய்தம்.

அஃறிணை (அல் + திணை)- உயர்திணையல்லாததிணை. (விலங்கு பறவை ஊர்வனநீர்வாழ்வன தாவரம் என்னும் உயிருள்பொருள்களினதும் உயிரில் பொருள்களினதும் பெயர்களை இலக்கணநூலார் அஃறிணையென்பர்).

அகக்காழ் - உள்வைரமுள்ள மரங்கள். (வேம்பு புளி முதலியன).

அகங்காரம் (ஆங்காரம்)-தன்னைப்பெரியவனாக நினைத்தல், அந்தக்கரணங்களுளொன்று. (நானென்னுமுணர்ச்சி).

அகங்கை (அங்கை)-உள்ளங்கை.

அகசியம்-பரிகாசக்கூத்து.

அகசு-பகல்மானம்.

அகச்சுட்டு-சொல்லினுள்ளே முதனிலையாக அமைந்துநிற்குஞ்சுட்டு. (உ-ம்: அவன்).

அகடம்-அநீதி, பொருந்தாமை.

அகடு- வயிறு, நடு, உள்.

அகணி-மருதநிலம், வயல், உள்.

அகண்டம் - முழுப்பொருள், எல்லாம்.

அகதம் - மருந்து. உயிர்தருமருந்து.

அகதி - (அகுதி) ஏழை.

அகத்தான் - இல்வாழ்வான், சுற்றத்தான்.

அகத்தி - அகத்திமரம்.

அகத்திணை - தலைவனுந் தலைவியுமாகிய இருபாலாருள் ஒருவர்மேல் மற்றவர் கொள்ளுங்காதல்பற்றிய சிற்றின்பவொழுக்கம்.

அகத்தியம் - அகத்தியமுனிவராற் செய்யப்பட்ட இலக்கணநூல்.(தமிழில்முதலுண்டான இலக்கணநூலிதுவே).

அகத்தியன் - ஒருமுனிவர், (உத்தரதேசத்தார் விந்தமலையைத்தாண்டித் தக்ஷிணதேசத்திற்கு வரலாகாதென்னுங் கட்டுப்பாட்டைநீக்கி வந்து, பொதியமலையில் வசித்தவர்).

அகத்தியன்மாணாக்கர்பன்னிருவர்-செம்பூட்சேஎய், வையாபிகர், அதங்கோட்டாசான், அவிநயர், காக்கைபாடினியார், தொல்காப்பியர், துராலிங்கர், வாய்ப்பியர், பனம்பாரனார், கழாரம்பர், நற்றத்தர், வாமனர் என்பவர்கள்.

அகநானூறு- அகப்பொருட்டுறைகளுக்கிலக்கியமாகிய ஒருநூல்.

அகநிலை - ஊர். (சிலப்).

அகந்தை . அகங்காரம்.

அகப்படுதல்-உட்படுதல், சிக்குப்படுதல், வசப்படுதல்.

அகப்பா - மதில், மதிலுண் மேடை, அகழி.
அகப்பாடு-உண்ணிகழ்ச்சி, அகப்படுதல்.
அகப்பை - சட்டுவம். (அன்னம் கறிமுதலியவற்றையெடுக்குங்கருவி).
அகப்பொருள் - பஞ்சலக்கணங்களுள் பொருளிலக்கணத்தின் ஓர்பகுதியாகிய அகப்பொருளைவிளக்கும் நூல்.
அகம் - இடம், வீடு, உள்ளிடம், மனம், மார்பு, மலை, ஆசௌசம், பாவம், மாசு, தானியம், நான் (தன்மையொருமை), பூமி, விசாலம், *ஆகாயம், *ஆழம், *ஓர்மரம், *ஆன்மா, *சூரியன், *துக்கம், பாம்பு, எழாம்வேற்றுமையுருபு.
அகம்படியார்-அரசர்வீடுகளிலுந் தேவாலயங்களிலும் உள்வேலைசெய்த ஓர் சாதியார்.
அகம்பிரமம் } அகங்காரம்.
அகம்மதி }
அகரம் - ஊர், வீடு, அ என்னுமெழுத்து.
அகராதி-அகரமுதலிய எழுத்துக்களின் முறையே நிரைக்கப்படுஞ் சொற்கோவை.
அகரு - அகில்.
அகர்நாதன் }
அகர்ப்பதி } சூரியன்.
அகர்மணி }
அகர்முகம் - வைகறை.
அகலம் - விசாலம், மார்பு, விரிவுரை, வித்தாரகவி.
அகலல் - விசாலித்தல், விலகுதல், நீங்குதல், இறத்தல்.
அகலறை - பாசறை, மலைப்பக்கம்.
அகலிகை (அகலியை) - கௌதமமுனிவரின்மனைவி.
அகலிடம் - பூமி.
*அகலியம் - மரம்.
அகலுள் - அகலம், ஊர், நாடு, பூமி.
அகல்-ஓர்வகைச்சட்டி, தகழி, *அங்குல்.
அகவர் - அழைத்துப்புகழ்வோர், சூதர், நாட்டில் வாழ்வோர்.
அகவல் - ஆசிரியப்பா, தாவிய இசை, மயிற்குரல், அழைத்தல், கூத்தாடல், பாய்தல், ஒழித்தல், அசைதல்.
அகவிதழ் - பூக்களினுள்ளிதழ்.
அகவை - உள்ளிடம், வயது.
அகழான் - அகழெலி.
அகழி - மதில்சூழ்கிடங்கு.
அகழ்தல் - தோண்டுதல்.
அகளங்கமூர்த்தி - புத்தன்.
அகளம் (அகளி) - மிடா, சாடி.
அகற்றுதல்-இருந்தவிடத்தினின்று அப்புறப்படுத்தல், விரியச்செய்தல்.
அகன் - ஓரரசன். (கஞ்சனுடையசேனைத்தலைவன்).
அகன்மகம்-செயப்படுபொருளில்லாதவினை.
அகன்றில் - ஆணன்றில்.
அகாதம்-ஆழம், ஆழமான நீர்நிலை. [து.
அகாரம் (அகரம்)-வீடு, அ என்னுமெழுத்
அகி - பாம்பு, இரும்பு.
அகிஞ்சனன் - தரித்திரன்.
அகிலம் - உலகம், எல்லாம்.
அகில் - ஓர்மரம்.
அகிற்கூட்டு - கூந்தலுக்குப் பூசும் வாசனைக்கலவை(ஏலம் கர்ப்பூரம் எரிகாசு சந்தனம் தேன் என்னுமைந்தின் கலவை; ஆறன்கலவையாகச் சிந்தாமணியுரையில்).
அகைதல்-எரிதல், களைதல், கொய்தல், செறிதல், வருந்துதல், உயர்தல், தழைத்தல்.
அகைத்தல் - முறித்தல், அடித்தல், கிளர்தல், செலுத்துதல், அறுத்தல், கிளைத்தல், வருத்துதல்.
அகோ - அதிசயக்குறிப்பையுணர்த்துமிடைச்சொல்.
அகோரம்-சிவனுடைய ஐந்துமுகங்களுளொன்று, ஓர்மந்திரம், உக்கிரம்.
அக்கசாலை - உலோகங்களை உருக்குதல் முதலான தொழில்செய்யுமிடம். (கம்மாலை).
அக்கசாலையர்-கம்மியர், தட்டார். [மாலை).
அக்கட (திசைச்சொல்) - அங்கே.
அக்கதம் (அக்கதை)-முழுஅரிசி. (இவை ஆசீர்வதித்தற்கும்பூசித்தற்குமுரியன)
அக்கந்து - களத்தில் நெல்லைத்தூற்றிய பின் நெற்குவையின்புறத்தே பதர்களோடுகலந்துகிடக்கும் நெல்.
அக்கபாடம்-திரைமுதலியவற்றாற் செய்யும் மறைப்பு.
அக்கபாதன் - நியாயசூத்திரஞ் செய்த கௌதமமுனிவர்.
அக்கம்-உருத்திராக்கம் (இப்பொருளில் அக்கு எனவும்), கண், பூகோளத்தில் மத்தியரேகையினிருபுறத்தும் கிழக்கு

மேற்காயுள்ளனவாகப் பாவிக்கப்படு பிரேகைகள், அருகு, கயிறு.
அக்கரச்சுதகம்-சித்திரகவிகளுளொன்று
அக்கரம் - எழுத்து, பிரமம், முத்தி, (இந்த மூன்றுபொருள்களிலும்அட்சரமெனவும்), ஓர்நோய்.
அக்கன்-நாய்.
அக்கா (அக்கை) - தாய், மூன்பிறந்தாள்.
அக்காரம் - ஓர்வகைச் சர்க்கரை, *புடைவை.
அக்கி - கண், ஓர்நோய்.
அக்கிரகாரம் - பிராமணர்வீதி.
அக்கிரசந்தானி-யமலோகத்திற் சீவான்மாக்களின் பாவபுண்ணியங்களையறிந்து எழுதப்படுங்கணக்கு.
அக்கிரசன் - தமையன், மூத்தோன்.
அக்கிரமம்-ஒழுங்கின்மை, நீதியின்மை.
அக்கிரம்-நுனி, உச்சி, முன், முதன்மை.
அக்கினி-நெருப்பு, நெருப்பின்றெய்வம்.
அக்கினி ௩ - காருகபத்தியம் ஆகவனீயம் தக்ஷிணாக்கினி என்பன. (இவை வேதாக்கினிகளென்று சொல்லப்படும், வைத்தியநூலில் தீபாக்கினி கமலாக்கினி கடாக்கினி என மூன்றும்)
அக்கினிகணம் - தீப்பொறி.
அக்கினிகருப்பன் - கந்தசுவாமி.
அக்கினிகாரியம்- ஓமத்துக்குரிய அக்கினியை விதிப்படி உண்டாக்கல்.
அக்கினிகோத்திரம் - வேதமுறைப்படி நித்தியாக்கினிவளர்த்தல்.
அக்கினிட்டோமம் - ஓர்யாகம்.
அக்கினிதன்-பிரேதத்தை விதிப்படி தகனஞ்செய்பவன்.
அக்கினித்தம்பம்-நெருப்பைச் சுடாவண்ணந்தடுத்தல். (சுசு சுலைகளுளொன்று).
அக்கினிநாள்-பரணியின் நான்காம்பாதமும் கார்த்திகையும் ரோகிணியின் முதற்பாதமும் ஆகியஇந்நட்சத்திரங்களிற் சூரியனிற்குங்காலம். (பரணியின்மூன்றும் பாதத்தினிற்குங்காலத்தையுஞ்சேர்த்துக் கூறுவர் சிலர்).
அக்கினிமுகன் - ஓரசுரன்.
அக்கினியுற்பாதம் - கொள்ளிவிழுதல்.
அக்கினியோகம் - சிலவாரங்களிற்சிலதிதிகள்பொருந்தின் மனைசெயல் முதலியவற்றிற்குக்குற்றமாகுங்காலம்.
அக்கு - எலும்பு, இடபத்தின் முரிப்பு, சங்குமணி.

அக்குசை - விதவை, (சமணர்வழக்கு).
அக்குரன்-இடைவள்ளலெழுவரிலொருவன்.
அக்குரோணி - சேனைத்தொகையிலொன்று.(சேனைத்தொகையிற்பார்க்க)
அக்குள் - கமுக்கட்டு.
அக்கோ - அதிசயத்துடன்கூடிய இரக்கம்.
அங்ககாரம் - நடனத்தில் விரல்முதலிய உறுப்புக்களை சிலமாற்றிவைத்தல்.
அங்கசன் - மன்மதன்.
அங்கணம் - முற்றம், சேறு, இரண்டு தூண்களினிடையிடம், மதகின்வாய், சலதாரை.
அங்கணன்-சிவன், கடவுள். [சொல்.
அங்கதம் - வாகுவலயம், பாம்பு, வசைச்
அங்கதன்-வாலியின்மகன், இலக்குமணரின் புத்திரன்.
அங்கமந்திரங்கள்-இருதயமுதலிய ஆறுறுப்புக்களின் பெயராலமைந்த மந்திரங்கள்.
அங்கமாலை-அங்கங்களைநிரைந்து வெண்பா அல்லது வெளிவிருத்தத்தாற் பாடும்பாடல்.
அங்கம் - உடல், சரீரத்தின் உறுப்பு, அடையாளம், களங்கம், எலும்பு, உபகரணம், கட்டில், மடி, சமீபம், ௵ தேசங்களுளொன்று, வேதாங்கங்கள்.
அங்கம் ௫ - திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்பன. (இவை நாளின் உறுப்புக்கள்).
அங்கராகம் - மெய்ப்பூச்சு.
அங்கர்கோமான் - கன்னன்.
அங்கவடி - குதிரைமுதலிய வாகனங்களிற்பந்திக்கும் அணி.
அங்கனை - பெண்.
அங்காடி - கடைவீதி.
அங்காதிபாதம் - ஓர் வைத்தியநூல்.
அங்காத்தல் - வாயைத்திறத்தல்.
அங்காரகன் - செவ்வாய், அக்கினி.
அங்காரம் - குறைக்கொள்ளி.
அங்காரவல்லி - குறிஞ்சி.
அங்கி - அக்கினி, பலஅங்கங்களையடக்கியபொருள், கார்த்திகைநட்சத்திரம், அத்தநட்சத்திரம், சட்டை.
அங்கிதம்-அடையாளம், உடற்றழும்பு.

அங்கிரா - ஓர்முனிவர்.
அங்கிரி - கால், செய்யுளடி, மரம்.
அங்கீகரித்தல் - ஏற்றுக்கொள்ளுதல்.
அங்கு - அவ்விடத்தில்.
அங்குசபாசமேந்தி - விநாயகக்கடவுள்.
அங்குசம் - ஓர்படை, யானைத்தோட்டி.
அங்குட்டம் - பெருவிரல்.
அங்குரம் - வித்துக்களின்முளை.
அங்குரார்ப்பணம் - சௌளம் முதலான சுபகருமங்களுக்கங்கமாகப் பாலிகை யிடுதல்.
அங்குலம்-எட்டுநெல்லிடைகொண்ட அளவு.
அங்குலி - விரல்.
அங்குலிகம்-(அங்குலீயகம்) - மோதிரம்.
அங்கை - உள்ளங்கை.
அங்கோலம் - அழிஞ்சில்மரம்.
அசகரம் - பெரும்பாம்பு.
அசகவம் - சிவன்வில்.
அசக்குதல் - கட்டுதல்.
அசங்கதம் - பொய், பொருத்தமற்றது.
அசங்கல் - அசைதல். நடுங்கல்.
அசடு - குற்றம், கீழ்மை.
[அசட்டை- பராமுகம்,]
அசதி - கற்புநெறியில்லாதவள், சிரிப்பு) ஔவையாற்பாடப்பட்ட ஓரிடையன்.
அசதியாடல்- சிரிப்புடன் பரிகாச வசனம் பேசல்.
அசத்தல்-சோர்தல்,நித்திரைகொள்ளல்.
அசத்து - உள்ளதல்லாதது, பொய், குற்றமுடையது.
அசத்துவம்- எடுத்துக்கொண்டபொருளிற் சொல்லப்படுங் குணமில்லாமை,
அசபை - ஓர் மந்திரம். [வலியின்மை
அசப்பியம் - பெரியோர்முன் பேசத்தகாத சொல், (இடக்கர்)
அசமுகி - சூரபன்மனது தங்கை.
அசமோதகம் (அசுமதாகம்)- ஓமமென்னுஞ்சரக்கு.
அசம் - ஆடு, வெள்ளாட்டாண், மூன்று வருடஞ்சென்ற நெல்.
அசம்பவம் - யாதேனுமொருபொருளிற் சொல்லப்படும் குணமுதலியன இல்லாமை, (இது தருக்க நூல்களிற் சொல்லப்படும் மூவகைக் குற்றங்களிலொன்று )
அசம்பாவிதம்- ஏற்றுக்கொள்ளத் தகாத கோட்பாடுமுதலியன.

அசாரம் - நிலையியற்பொருள்கள். (மரம் மலை முதலியன).
அசரீரி-ஆகாயவாணி. (மனிதராற்பேசப் படாமல் தெய்வீகத்தாலெழும் வாக்கு.
அசலம் - மலை, அசையாநிலை.
அசலை - பூமி.
அசவல் - கொதுகு, சேறு.
அசறு - சேறு.
அசனம் - சோறு, உணவு.
அசனி - இடி, வச்சிராயுதம்.
அசன் - தசரதருடையபிதா.
அசா - தளர்ச்சி, இளைப்பு.
அசாவிடல் - இளைப்பாறுதல்.
அசாவேரி - ஓரிராகம்.
அசி - வாள், ஆயுதம், அவமதிச்சிரிப்பு, ஆகிருய் எனப் பொருள்படும் வடமொழிவினைமுற்று. (வேதாந்தநூல்களின் உரையாசிரியர்கள் தமிழ்நடைக்கியைய ஆனுய் எனப்பொருள் கூறினர்).
அசிதம் - கருமை, சைவாகமங்களிலொன்று.
அசிதை - அவுரி.
அசித்தல் - அழித்தல், சிரித்தல்.
அசித்து - சடப்பொருள்.
அசிதி - எண்பது.
அசிரணம் - புசித்தஉணவு உதராக்கினி மந்தமுதலிய காரணங்களாற் பக்குவப்படாமை.
*அசு-பிராணன்முதலிய ஐவகைவாயுக்கள்.
அசுணமா - கேகயப்புள். (இது இன்னிசையைக்கேட்பின்மகிழும்; இடியொலியைக்கேட்பின்இறக்கும்).
அசுத்தம் - சுத்தமற்றது, பிழையானது.
அசும்பு - கிணறு, வழுக்குநிலம், சேறு.
அசுரகுரு - சுக்கிரன்.
அசுரநாள் - மூலம்.
அசுரமந்திரி - சுக்கிரன்.
அசுரர் - அவுணர்.
அசுவகந்தி-அமுக்கிராஎன்னும்மூலிகை.
அசுவத்தாமன்-துரோணசாரியரது புத்திரராகிய ஒருவில்வீரர்.
அசுவமேதம் - ஓர்யாகம்.
அசுவம் (அச்சுவம்) - குதிரை.
*அசுழம் - நாய்.
அசூயை - குணங்களை மறைத்துக்குற்றமேற்றிப் பேசுதல்.

அசேடம் - முழுதும்.

அசை - அசைநிலை யாப்பிலக்கணத்தின் படி செய்யுளிற்சீரினுறுப்பாய்ப் பகுக்கப்படும் அசை. (இது நேரசையும் நிரையசையுமென இருவகைப்படும்).

அசைச்சீர் - ஓரசையால்வருஞ்சீர். (நாள் மலர் என்னும் வாய்பாட்டையுடையது).

அசைத்தல்-ஆடுதல், இயங்குதல், உலாவுதல், நிலைதவறுதல், இடம்பெயர்தல், தளர்தல், சோம்புதல், இளைத்தல், தங்குதல், செல்லுதல், பின்னிடுதல், வருந்துதல், துவளல், கூத்தாடல், * இளைப்பாறுதல்.

அசைத்தல் - ஆட்டுதல், இயக்குதல், நிலை தவறச்செய்தல்.

அசைநிலை - பொருள்பயவாமற் பெயர்வினைகளின்பின்னே சார்த்தப்பட்டு நிற்குஞ்சொல். (அசைத்தல் - சார்த்துதல்).

அசைப்பு - சொல்.

அசைவிடுதல்-அசைவெட்டுதல். (பசுமுதலிய சிலமிருகங்கள் தின்றஇரையை மீட்டுச் சப்புதல்).

அசோகம் - அசோகமரம்.

அசோதை (யசோதை) - நந்தகோபனுடையமனைவி. (கிருஷ்ணமூர்த்தியை வளர்த்த தாய்.)

அச்சடை - கீழ்காய்நெல்லி. [டிவு.

அச்சம் - பயம், அகத்திமரம், * தகட்டுவ

அச்சன் (திசைச்சொல்) - பிதா.

அச்சாணி-தேர் பண்டிமுதலியவற்றினுருளை கழலாவண்ணம் அச்சின்கடைகளிற் கோக்கப்பட்ட ஆணி.

அச்சிரம் - கோணம். (வேற்றுத்திக்கா யோடும் இரண்டுகிறுகளின் பொருத்துப்போன்றது).

அச்சு - உருவம், தேகம், ஆதாரம், உயிரெழுத்து, அச்சாணி, பண்டிமுதலியவற்றின் உருளைகளைக் கோக்கும் அச்சு, அடையாளம், அழுத்தல் முதலிய தொழில்வகையினால் ஒன்றோடொன்றொப்புமையுடையனவாக அணிகலன் முதலியவற்றையமைத்தற்குக் கம்மியர் முதலாயினோர் உபயோகிக்கும் அச்சு.

அச்சுதம் - அக்கதம்.

அச்சுதன் - விஷ்ணு, கடவுள்.

அச்சுதன்முன்வந்தோன் - பலதேவன்.

அச்சுவத்தம் - அரசமரம். [லாவது.

அச்சுவினி-உஎ நட்சத்திரங்களுள் முத

பண்டைக்காலத்தில் அயனசலனத்திற்கேற்றவாறு வேறுசில நட்சத்திரங்கள் முதலாகக்கொள்ளப்பட்டனவென்றும், சூரியன் பூமியின் சமரேகையில் வரும்போது எந்தநட்சத்திரத்திற்காணப்படுவாரோ அந்தநட்சத்திரமேஅவ்வக்காலத்தில் முதலாகக்கொள்ளற்பாலதென்றும் கூறுவர்சிலர். அது சோதிடகணிதசித்தாந்தங்களுக்கு விரோதமாம்.

அச்சுவினிதேவர்-தேவவைத்தியர்களிருவர் (அச்சுவினிநட்சத்திரத்தின்தெய்வங்கள்).

அச்சென-விரைவாக.

அச்சோ (இடைச்சொல்) - அதிசயத்தோடுகூடிய இரக்கத்தைக்குறிக்கும்.

அஞர் - துன்பம், அறிவிலார்.

அஞலம் - கொதுகு, நுளம்பு.

அஞ்சத்தான் - பிரமா.

அஞ்சம் - அன்னப்பறவை, அசபாமந்திரம், (காஞ்சி திருவேகம் உஅ), நால்வகைச்சந்நியாசங்களுளொன்று, (ஹம்ஸம்.)

அஞ்சலி - விரித்தேந்திய இரண்டுகைகளையும் பொருந்திக் கோலச்செய்த குழி, அந்தக்குழிகொள்ளத்தக்க அளவு, கும்பிடுகை.

அஞ்சலிகை - வாவற்பறவை.

அஞ்சனம் - கறுப்பு, இருள், மை, மேற்றிசையானை, நீலமலை.

அஞ்சனவித்தை-கெடுதிமுதலியவற்றை ஓர் மையிற்பார்த்து அறிந்து சொல்லும் பயிற்சி.

அஞ்சனி - காயாமரம்.

அஞ்சனை - அனுமன்றாய்.

அஞ்சித்தல் - பூசித்தல்.

அஞ்சுகம் - கிளி

அஞ்சுதல் - பயப்படுதல்.

அஞ்சுமான் - சைவாகமங்களுளொன்று.

அஞ்ஞானம்-அறியாமை, பகுத்தறிவின்

அஞ்ஞை - அறிவிலான், தாய். [மை.

அடகு-இலைக்கறி, கடனுக்கீடாகக் கொடுக்கும் ஆபரணமுதலியபொருள்.

அடங்கலன் - பகைவன்.

அடங்கல்-அமைதல், உட்படுதல், ஒடுங்குதல், கீழ்ப்படிதல், (முற்றும்மை கூடின்) எல்லாம்.
அடங்கன்முறை-தேவாரப்பதிக முழுதமடங்கிய புத்தகம்.
அடசுதல் - செறித்தல்.
அடதாளம் - தாளவகைகளுளொன்று.
அடம் - பொல்லாங்கு, வலாற்காரம்.
அடம்பு-அடம்பங்கொடி (அடும்பு எனக் கலித்தொகையில்).
அடரொலி - அதட்டு.
அடர் - தகடு, தகட்டுவடிவு.
அடர்தல் - நெருங்குதல்.
அடர்த்தல் - நெருக்குதல், பொருதல், கொல்லுதல், வருத்துதல்.
அடலை - சாம்பல், போர்க்களம்.
அடல் - போர், வலி, கொல்லுதல்.
அடவி - காடு, தொகுதி.
அடனம் - அலைந்து திரிதல்.
அடனி-வில்நுனியில் நாண்கொளுவுதற்குரிய இடம்.
அடா-தன்னிற் கீழ்ப்பட்டவனை யழைக்கும்விளி.
அடாணு - ஓர்ராகம்.
அடார் - மிருகம்முதலியவைகளை அகப்படுத்தும்பொறி.
அடி-கால், காலடி, காற்சுவடு, காலடியளவான நீட்டலளவை, (இதைஇக்காலத்தில் ௧௨ இஞ்சுஆக வழங்குகின்றனர்), முதல், தொடக்கம், பழமை, செய்யுளினடி, மரம்முதலியவற்றின் அடி, சூதாடுவோரின் குழூஉக்குறிச்சொற்களுளொன்று, தன்னிற்கீழ்ப்பட்ட பெண்பாலாரை விளிக்கும் விளி, *இடம், குதிரைவையாளிவீதி.
அடிகள் - குரு, தலைவன், தலைவி, முனிவர், மூத்தோர்.
அடிசில் (அடப்பட்டபொருள்) - போசனம், சோறு.
அடிச்சேரி - நகரவெல்லையிலிருக்குமூர்.
அடித்தல் - கையால் அல்லது தடி முதலியவற்றால் தாக்குதல். [தல்.
அடிப்படுதல் - கீழ்ப்படுதல், பழமைப்படு
அடிப்படை - ஆதாரம்.
அடிப்பாடு-கால்மிதித்துநடத்தலால் காடுமுதலியவற்றிற்றோன்றும் வழி.
அடிமறி-செய்யுளிலுள்ள அடிகளைமாற்றிப் பொருள்கொள்ளுதல், அவற்றை மாற்றிப் பொருள்கொள்ளப்படவேண்டிய செய்யுள், சிலஅடிகளைப் பலவாறு மாற்றியவழியும் மாற்றாதவழியும் ஓசையும்பொருளும் பிறழாது நிற்குஞ்செய்யுள்.
அடிமறிமண்டிலம்-செய்யுளிலுள்ள அடிகளையெல்லாம் மாற்றி எங்கெங்கேயினைத்தவழியும் ஓசையும் பொருளும் பிறழாதுநிற்குங்கவி. (இது அளவொத்தஅடிகளையுடைய ஆசிரியப்பாவிலும் விருத்தத்திலும் வரத்தக்கது).
அடிமை - பரம்பரையாகப் பொருந்தி ஏவல்செய்பவன் அல்லது செய்பவள், அவர்செய்யுமேவல்.
அடியான் - அடிமைவேலை செய்வோன், கடவுளுடைய தொண்டன். [தல்.
அடியிடுதல் - தொடங்குதல், கால்வைத்
அடியுறை - காணிக்கை.
அடுக்கம் - மலைப்பக்கம், அடுக்குவீதி, மரச்செறிவானசோலை.
அடுக்கல் - மலை.
அடுக்களை - பாகசாலை.
அடுக்கு-ஒழுங்கு, நிரை, தொகுதி, தன்னொடுதானே தொடர்ந்த சொற்றொடர்.
அடுக்குதல் - நிரைத்துச்செறித்தல்.
அடுதல் - அழித்தல், கொல்லுதல், வருத்துதல், சமைத்தல், நெல்முதலியவற்றைக்குத்துதல்.
அடுத்தல்-சமீபித்தல், சிநேகஞ்செய்தல், சேர்த்தல், ஏற்றதாயிருத்தல், (உ-ம்: இது நம்மனோர்க் கடுத்ததன்று), *கூத்தாடல்.
அடுப்பு - சமையலுக்காகத் தீமூட்டும் அடுப்பு, பரணிநட்சத்திரம், நிரை, *அச்சம்.
அடை - இலை, இலைக்கறி, வெற்றிலை, அப்பம், கனம், முளை, வழி, விசேடணம், விலை.
அடைகல் - கம்மியரது பட்டடை, மதகடைக்குங்கல்.
அடைகிடத்தல் - பறவைகள் தாமீன்ற முட்டைகளினின்று குஞ்சு வெளிப்படும்வரை அம்முட்டைகளின் மேல் தம்முடலினனல் படக்கிடத்தல்.
அடைகுளம் - பாய்தலில்லாதகுளம்.

அடைகுறடு - அடைகல்.
அடைகொளி - விசேடியம்.
அடைக்கலங்குருவி - ஊர்க்குருவி.
அடைக்காய் - பாக்கு.
அடைசுதல் - நெருங்குதல், செருகுதல், செறித்தல்.
அடைதல் - சேர்தல், செறித்தல்.
அடைதூண் - கடைதறி.
அடைத்தல் - அடையச்செய்தல், காவல் வைத்தல், தடுத்தல், கதவுமுதலியவற்றையடைத்தல்.
அடைப்பன் - பசுமுதலிய சில மிருகங்களுக்குவரும் நோய்களுளொன்று.
அடைப்பு-பாத்திரங்களின்மூடி, கதவு, வேலி, வேலியடைக்கப்பட்ட நிலம், மிடறடைப்பு.
அடைப்பை - வெற்றிலையையும் பாக்கு முதலிய பிற உபகரணங்களையும் அடக்கிவைக்கும் பை. [மண்.
அடைமண்-கலப்பைக்கொழுவிற்பற்றும்
அடைமழை - விடாமழை.
அடைய - முழுதாக.
அடையலர் - பகைவர்.
அடையாளம் - அறிகுறி.
அடைவு - முறை, வழி கடனுக்கீடாகக் கொடுக்கும் ஆபரணமுதலியன.
அட்சரகணிதம் - அறியப்படாத ஒருதொகைக்கிணையாகஓரெழுத்தைவைததுச் செய்யுங்கணிதம். (Algebra).
அட்டகம் - எட்டுச்செய்யுளாலியற்றப்படும் பாடல், எண்மடங்கு.
அட்டகை - சிராத்தவகைகளிலொன்று (மார்க்கசீர்ஷமுதலிய நான்குமாதங்களில் அபரபக்ஷஸப்தமிமுதலிய மூன்று திதிகளிற்செய்யப்படுவது).
அட்டணை - கால்களைமடித்து ஒன்றற்கூடே மற்றொன்றமையச் செறித்திருத்தல்.
அட்டநாகபந்தம் - ஓர் சித்திரகவி.
அட்டமங்கலம்-எட்டுவகையானமங்கலப்பொருள்கள்.(இவைதேவர்க்குரியவும் அரசர்க்குரியவுமென இருவகையின; இவற்றுள் தேவர்க்குரியன: கண்ணாடி நிறைகுடம் இடபம் இரட்டைச்சாமரம் ஸ்ரீவற்சம் சுவத்திகம் வலம்புரிச்சங்கு தீபம் என்பன; இவற்றில் இடபம் ஸ்ரீவற்சம் சுவத்திகம் சங்கு என்னும் நான்கையுநீக்கி, கொடி முரசு மணி அங்குசம் என்பவற்றைச் சேர்ப்பின் அரசர்க்குரியனவாம். சில நூல்களிற் சிலபெயர்கள் மாறுபடவும் கூறப்பட்டன).
அட்டமி - எட்டாந்திதி.
அட்டமூர்த்தி-சிவன், (எண்வகைப்பொருள்களினதும் வடிவாயிருப்பவரென்பது சொற்பொருள். எண்வகைப் பொருளென்றது நிலமுதலிய பூதங்களைந்து சூரியன் சந்திரன் ஆன்மா என்பனவற்றை).
அட்டம் - அருகு, நேர், எட்டென்னுமெண், வாழை நெல் முதலியவற்றில் நிலத்தின்கீழிருந்து முளைத்துவளரும் அட்டம்.
அட்டாலை (அட்டாளை) - பரண்.
அட்டில் - அடுக்களை.
அட்டுதல் - செறித்தல்.
அட்டை -நீர்க்கசிவுள்ள இடங்களில் ஊருகிறஓர்வகைப்பிராணி,புத்தகங்களினிருபுறத்திலும்அடுக்கப்படும் அட்டை.
அணங்கு-பெண், தெய்வப்பெண், பெண் பேய், சொல்லியம்பாவை, தெய்வம், வருத்துந்தெய்வம், தெய்வத்தன்மை, அழகு, ஆசை, கொலை, துன்பம், நோய், அச்சம், வெறியாட்டு (வேலனாடல்).
அணங்குதல் - அஞ்சுதல், வருந்துதல், கொல்லுதல், விரும்புதல், மயிர்முதலியன பின்னிவளர்த்தல்.
அணத்தல் (அணர்தல்)-தலையெடுத்துநிற்றல், மேனோக்கிநிற்றல்.
அணரி - அண்ணம். [உண்மிடறு.
அணல்-மேல்வாய்ப்புறம், கழுத்து, தாடி,
அணவு - நடு.
அணவுதல்-கிட்டல், தழுவல், எட்டுதல்.
அணுப்புதல் - வய்த்தல்.
அணர் - கழுத்து.
அணி-அழகு, செய்யுள் முதலியவற்றினலங்காரம்,அவ்வலங்காரத்தைக்கூறும் இலக்கணநூல், கவிப்பனவும் கட்டுவனவும் செறிப்பனவும் பூண்பனவுமாகிய ஆபரணவகை, வரிசை, படைவகுப்பு, படையுறுப்பு, மாலை, சமீபம், உவமவிடைச்சொல், *கூட்டம், *பெருமை.

அணிகலம் - ஆபரணம்.
அணிதல்-அழகுசெய்தல், நிரைபடுத்து தல், ஆபரணங்களையணிதல்.
அணிந்துரை - பாயிரம்.
அணிமா-எண்வகைச் சித்தியுளொன்று (தன்னுருவத்தை அணுப்போற் சிறிதாக்கிக்காட்டல்).
அணியல் - மாலை, வரிசை.
அணில் - ஓர்பிராணி.
அணிவிரல்-சிறுவிரற்குப்பக்கத்திலுள்ள விரல்
அணு - நுண்மை, சிறுதுகள், பரமாணு, உயிர், ஆன்மா.
அணுகலர் - பகைவர்.
அணுகுதல் - கிட்டுதல்.
அணுக்கம் - சமீபம், அந்தரங்கம்.
அணுத்துவம் - சிறுமை.
அணை - செய்கரை, நீர்க்கரை, வரம்பு, ஆசனம், படுக்கை, மெத்தை.
அணைதல் - சேர்தல், புணர்தல், தணிதல்.
அணைத்தல் - சேர்த்தல், தணித்தல், கட்டுதல்.
அணையார் - பகைவர்.
அண்டகை-(அண்டிகை) அப்பவர்க்கத்துளொன்று.
அண்டங்காகம் - காகவினங்களுளொன்று,
அண்டசம் - முட்டையிற்பிறப்பன.
அண்டப்புத்தேள் - விராட்புருடன்.
அண்டம் - ஆகாயம், முட்டை, பீசம்.
அண்டயோனி-சூரியன்.
அண்டர் - தேவர், இடையர், பகைவர்.
அண்டலர் (அண்டார்) - பகைவர்.
அண்டவாயு - ஆடவர்களுக்குப்பீசத்தில் வரும் வாயுநோய்.
அண்டிகம் - செந்நாய், நோய்.
அண்டுதல் - சமீபித்தல், சார்தல், அமைதல்.
அண்டை - சமீபம், நீர்தூவுங்கருவி.
அண்ணணித்தல்-மிகக்கிட்டுதல். (அண்ணணித்தூராயின்; கலித்தொகை).
அண்ணம் - மேல்வாய்.
அண்ணல்-அரசன், அருகன், தலைவன், தமையன், புத்தன், பெருமையிற் சிறந்தோன், *முல்லைநிலத் தலைவன், தலைமை, பெருமை.
அண்ணன் - தமையன்.
அண்ணு - உண்ணுக்கு.
அண்ணுத்தல்-அங்காத்தல்,மேனோக்கல் இறுமாத்தல்.
அண்ணுமலை - ஓர் சிவதலம்.

அண்ணி - தமையன்மனைவி.
அண்ணித்தல் - பொருந்துதல், மதுரித்தல்.
அண்ணுதல் - சார்தல், கிட்டுதல்.
அண்பல் - மேல்வாய்ப்பல்.
அண்முதல் - சமீபித்தல்.
அண்மை (அணிமை) சமீபம்.
அதகம் - (அகதமென்னும் வடமொழியின்றிசிபு) மருந்து.
அதகன் - வைத்தியன்.
அதக்குதல் - நசுக்குதல், கெடுத்தல்.
அதட்டம்- பாம்பினுயிர்ப்பு.
அதட்டல் - உரத்துப்பேசுதல்.
அதமம் - கடையானது.
அதம்-அழிவு, கீழ், பர்தலம்,அத்திமரம்.
அதரபானம்- புணர்ச்சிக்காலத்தில் இதழூறலைப் பருகுதல்.
அதரம் - கீழுதடு, கீழுள்ளது.
அதரிகொள்ளுதல் - கடாவிடுதல்-
அதரிசனம் - காணப்படாமை.
அதர்- விலங்குசெல்வழி, பிரசித்தியற்ற சிறுவழி, கிடங்கு, புழுதி, ஆட்டின் கழுத்தில் தூங்குவது, நுண்மணல்.
அதர்கோள்- வழிப்போக்கருடையபொருளைப் பறித்தல்.
அதர்மம் பாவம்.
அதர்வணம் - நான்காம்வேதம்.
அதலம் - கீழேழுலகங்களுளொன்று.
*அதவா - அல்லது.
அதவு- அத்திமரம்.
அதவுதல்- கொல்லுதல்.
அதழ் - பூவிதழ்.
அதளை - நிலப்பீர்க்சங்கொடி.
அதள்- தோல், பூவிதழ்.
அதி-(அதிஎன்னும் வடமொழியின் சமமாயின் மிகவும், (சுயி என்னும் வடமொழியின் திரிபாயின்)மேலாக, பெருக்கமாக, அதிகமாக.
அதிகண்டம்- உஎயோகங்களுளொன்று
அதிகதம் - கடந்துபோனது. படித்து முடிந்த பாகம், நன்கறியப்பட்டது.
அதிகம் - மிகுதி, சிறப்பு, இலாபம்.
அதிகமாதம் - ஒரு சௌரமாதத்துள் தொடங்கிமுடியுஞ் சாந்திரமாதம்.
அதிகாணம் (அதிகாரம்)-எடுத்துகொண்டபொருளைக் கூறத்தொடங்குதல், தலைமைவகித்தல், உரிமைப்படுத்தல், ஒருபொருள்கருதிவரும் பல இயல் முதலியவற்றின்றொகுதி, முறை.

அதிகன் - பெரியோன், ஓர்வள்ளல், கடவுள்.
அதிகாயன் - இராவணனது புதல்வருளொருவன்.
அதிகாரம் - தலைமை, நூலின்பகுதி, (எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் என்பனபோல). [வோன்.
அதிகாரி - தலைவன், நீதிவிசாரணைசெய்
அதிகிருச்சிரம் - ஓர்விரதம்.
அதிகை - ஓர்சிவதலம்.
அதிகோரம் - ஓர்நகரம்.
அதிக்கிரமம் - கடத்தல், நீதிதவறுதல்.
அதிங்கம் - அதிமதுரம்.
அதிசயம் - ஆச்சரியம், ஓரலங்காரம், (உயர்ந்தோர் வியப்பச் சொல்வது), புதுமை.
அதிசாரம் - ஓர்நோய். [ன்.
அதிசூரன்-சிங்கமுகாசுரனுடையபுதல்வ
அதிட்சேபம் - (அதிக்ஷேபம்) - அனுப்புதல், நிந்தித்துத்தள்ளுதல்.
அதிட்டம்-முயற்சியின்றி விதிப்பயனால் வரும் நன்மைதீமைகள்.
அதிட்டானம் - மேற்கொண்டுநிற்றல்.
அதிதபனம்-ஓர்வகைக்கிருச்சிரவிரதம்.
அதிதி - வேறிடத்திலிருந்து போசனத்துக்காய்வந்தோன், காசிபமுனிவரின் மனைவியர்களுள் தேவர்களின் தாய், (அற்றைத்திதியிரண்டும் அதிகவியாபகமுதலிய காரணங்களால் முறையே முசனுளிலும் மறுநாளிலும் நியமிக்கப்படச்) சிராத்தத்திற்குபயோகமின்றி நிற்குந்தினம்.
அதிதிநாள் - புநர்பூசம்.
அதிதேசம் - அநீதி.
அதிதேவதை - அதிட்டித்துநிற்கும் அல்லது இணையாய்நிற்குந்தேவதை.
அதிபதி (அதிபன்) - அரசன், தலைவன், எப்பொருட்கு மிறைவன்.
அதிபலை - பேரமுட்டிப்பூடு.
அதிபாதம்-நீதியை அல்லதுதொல்லோர் வழக்கம் முதலியவற்றைக்கடத்தல்.
அதிமதுரம் - ஓர் மூலிகை.
அதிரல் - புனலிமரம், காட்டுமல்லிகைக்கொடி, விரிதூறு, அதிர்தல்.
அதிராத்திரம் - ஓர்யாகம்.
அதிரேகம் - அளவுக்கதிகமானது.
அதிரோகிணி - ஏணி.
அதிர்தல்-நடுங்கல், ஒலித்தல், அசைதல்
அதிர்த்தல் - உரத்தசத்தமாக ஒலித்தல், அதிரச்செய்தல்.
அதிர்ப்பு-நடுக்கம், அதிரொலி, (துந்துபிமுதலியவற்றினொலி), அச்சம்.
அதிர்வு - நடுக்கம்.
அதிவர்ணாச்சிரமி-வருணாச்சிரம தருமங்களைக்கடந்த மகாஞானி.
அதிவாசம்-இயற்கையான இடத்தினின்றுநீங்கி வேறோர்சிறந்தஇடத்திலிருத்
அதிவிடயம்-ஓர்மருந்துமூலிகை. [தல்.
அதிவியாத்தி-தருக்கநூலிற் சொல்லப்படும் மூவகைக் குற்றங்களுளொன்று. (ஒருபொருட்குச்சொல்லுமிலக்கணம் வேறோர்பொருளினுமுளதாதல்).
அதீசன் (அதீச்சுரன்) - அதிதேவதை.
அதீதம்-எட்டாதது, கடந்தது. [தது.
அதீந்திரியம் - இந்திரியங்களுக்கெட்டா
அதீனம்-கீழ்ப்படுத்துதல், வசப்படுத்துதல்.
அது - ஆறும்வேற்றுமையுருபு, ஒன்றன்பார்சுட்டு.
அதுக்குதல்-கடித்தல், நருக்குதல், ஒதுக்குதல், அடைசுதல், அடித்தல்.
அதுலம் - ஒப்பற்றது.
அதூரம் - சமீபம்.
அதெந்து - பயந்தழைத்தார்க்குக் கூறும் அபயமொழி.
அதைத்தல் - சாக்கிமீளல், வீங்குதல்.
அதோகதி - கீழ்மை, நரகம். (கீழுலகம்).
அதோமுகம்-கீழ்நோக்கியமுகம்.
அத்தகிரி-சூரியன் அத்தமிக்கும்மலை.
அத்தமனம் - சூரியன் முதலிய கிரகங்களும் நட்சத்திரங்களும் மேற்றிசைபோய் மறைதல், சாயங்காலம், மறைவு, சந்திரன் முதலிய கிரகங்கள் சூரியனைச் சமீபித்தலால்வரும் மறைவு, உதயத்துக் கேழாமிராசி.
அத்தம் - அத்தநட்சத்திரம், கை, வழி, அருநெறி, காடு, பொன், (இப்பொருளில் அருத்தமென்பதன்றிரிபு), அத்தமனம், கண்ணாடி, வருடம்.
அத்தவாளம் - மேற்போர்வை.
அத்தனை - அவ்வளவு.
அத்தன்-பிதா, மூத்தோன், சிவன், குரு, உயர்ந்தோன், அருகன்.
அத்தாணி - அரசிருக்குமண்டபம்.

அத்தான் - மைத்துனன்.
அத்தி - அத்திமரம், எலும்பு, யானை, கடல், கோலை.
அத்திசஞ்சயனம் - பிரேதத் தீயைத் தணித்து எலும்புகளைப் பொறுக்கிச் சேர்த்து அடக்கஞ்செய்யுங் கிரியை.
அத்திசுரம் - எலும்பைப் பற்றிய சுரம்.
அத்திநகம் - நகரவாயிற் படிச்சுருள்.
அத்திநாத்தி - சமணருடையதோர்மந்திரம்.
அத்தியட்சன் - அதிகாரி.
அத்தியந்தம் - மிகவும்.
அத்தியயனம் - வேதமோதுதல், படித்தல்.
அத்தியவசாயம் - ஐயப்பட்ட ஒருபொருளை ஆராய்ந்து நிச்சயித்தல், (கயிற்றைக்கண்டோன் இது அரவோ கயிறோஎன்னுமையமுண்டாக, ஆராய்ந்து கயிறேயென நிச்சயித்தல் போல).
அத்தியாகாரம் - அவாய்நிலை.
அத்தியாசம் - ஒன்றை மற்றொன்றென்று நினைத்தல், (கயிற்றை அரவென்று நினைத்தல்போல.)
அத்தியாபகன் - உபாத்தியாயன்.
அத்தியாயம் - நூலின்பகுதி. (படலம் சருக்கம் என்பனபோல்).
அத்தியாரோபணம் - ஒருபொருளில் மற்றொரு பொருளோ வென்னுமையத்தையுண்டாக்கல்.
அத்திரம் - அம்பு, ஓர் மந்திரம், கைவிடுபடை.
அத்திரி - எழுமுனிவருளொருவர், மலை, உலைத்துருத்தி, ஒட்டகம், கழுதை, குதிரை, கோவேறுகழுதை, (குதிரையிலோர்சாதி), *ஆகாயம்.
[அத்திவாரம் - அடிப்படை]
அத்தினபுரி - பாண்டவருடைய ராசதானி.
அத்தினி - மதனநூலிற் சொல்லப்பட்ட நால்வகைப் பெண்களுளொருத்தி, பெண்யானை.
அத்து - சிவப்பு. துவர், தையல், அரைப்பட்டிகை.
அத்துதல் - தைத்தல்.
அத்துவர்யு - யாகபுரோகிதருளொருவன்
அத்துவா - வழி.
அத்துவாக - மந்திராத்துவா பதாத்துவா வர்ணாத்துவா புவனாத்துவா தத்துவாத்துவா கலாத்துவா என்பன.
அத்துவைதம்(அத்துவிதம்) - இரண்டாந்தன்மையின்மை. (பரமான்மாவுஞ் சீவான்மாவும் ஒருதன்மைய வெனவுணர்தல்).
அத்தை - தலைவி, தமக்கை, மாமி, குருவின்மனைவி, முன்னிலையசை.
அத்தோ(இடைச்சொல்) - அதிசயத்தோடு கூடிய இரக்கக்குறிப்பு.
அநாமிகை - ஆழிவிரல். (சிறுவிரலுக்கடுத்த கைவிரல்)
அநிசம் - எப்போதும்.
அநித்தியம் - நிலையற்றது.
அநிந்திதை - உமாதேவியின் தோழியரிலொருத்தி, நிந்திக்கப்படாதவள்.
அநிருத்தன் - கிருஷ்ணமூர்த்தியின்புத்திரன்
அநிர்வசனீயம் - (இத்தகைத்தென்று விளக்கிச்) சொல்லமுடியாதது.
அநு (உபசர்க்கம்) - சமமாக, பின், உடன், தாழ்வாக, ஒன்றன்பின்னொன்றாக, சமீபமாக, அற்பமாக, இடையீடின்றி, கலப்பாக, (இப்பொருள்களுக்குரிய உதாரணங்கள் பின்வருஞ் சொற்களில் அமைந்திருக்கின்றன).
அநுகமனம் - பின்றொடர்ந்துபோதல்.
அநுகரணம் - ஒருவருடைய செயல் முதலியவற்றிற்கெதிராகமற்றையோர் செய்யுஞ்செயல் முதலியன.
அநுகரணவோசை - இம்மெனல் கல்லெனல் முதலிய ஒலிக்குறிப்புகள்.
அநுகீர்த்தனம் - மேன்மேலும் புகழ்தல்.
அநுகுணம் - ஒன்றன் குணத்தோடியைபான மற்றோர்பொருளின் குணம்.
அநுகூலம் - செய்தகருமத்துக்கிணக்கமாய்க்கிடைக்கும் நன்மை.
அநுக்கிரகம் - தாழ்ந்தோருடைய அன்புக்குச்சமமாக உயர்ந்தோர் காட்டுங்கருணை.
அநுக்கிரமணிகை - ஒன்றன்பின்னொன்றாய் நிரைதல்.
அநுசங்கம் (அநுஷங்கம்) - அதிகாரத்தால்வருவித்தல், தொடர்ச்சி.
அநுசந்தானம் - இடைவிடாமற்சிந்தித்தல், செபித்தல், தொடர்த்துதல்.
அநுசயம் - தொடர்பு.
அநுசரன் - ஏவற்காரன். (ஒருவனுடைய கோட்பாட்டிற்கிணங்கி அவனுடன் திரிவோன்).
அநுசன் - பின்பிறந்தோன்.

அநுசீவி - பிறனையடுத்துச்சீவிப்பவன்.
அநுசைவர் - அரசகுலத்தாருள் அல்லது வைசியருட் சைவதீக்கை பெற்றோர்.
அநுஞ்ஞை-வேண்டுகோள், அநுமதி.
அநுட்டானம் - விதிப்படியொழுகுதல், சந்தியாவந்தனம்.
அநுட்டுபு - வேதத்தின் சந்தங்களு ளொன்று.
அநுதாபம் - ஒருவர்படும் துன்பத்தைக் கண்டோர் அல்லது கேட்டோர்அவர் படும்துன்பத்திற்காகத் தாமும்கவலைப் படுதல், முன்செய்தகருமத்தால்விளைந் ததீங்கை யெண்ணித் துன்பப்படுதல்.
அநுதாவனம் - திருடர் முதலியோரைப் பின்றொடர்ந்தோடுதல்.
அநுதினம் - தினந்தோறும்.
அநுபந்தம் - தொடர்ச்சி.
அநுபல்லவி - கீர்த்தனங்களிற் பல்லவிக் குப்பின்வருமுறுப்பு.
அநுபவம் - இன்பமுதலியவற்றினுகர்ச்சி.
அநுபானம் - மருந்துடன் சேர்த்துப்பருக வேண்டிய பானம்.
அநுபூதி - அநுபவம்.
அநுப்பிராசம் - வழியெதுகை, செய்யு ளின் ஒவ்வோரடியிலும் பலசீர்கள் இரண்டா மெழுத்து முதலியன ஒன் றிவரத்தொடுப்பது.
அநுமதி - ஒருவன் ஒருகருமத்தைச்செய் யும்படி நிச்சயித்துத் தெரிவிக்கும் போது பிறர் அதுநன்றென்று உடன் பாட்டுமொழி கூறுதல்.
அநுமரணம் - வேறொருவரிறந்த துக்கத் தை ஆற்றாமையால் தாமும் இறத்தல் (மனைவி உடன்கட்டையேறல் முதலி யன).
அநுமானம் - ஒருபொருளைக்காணாதபோ தும் அதன்காரியமுதலியவற்றால் அப் பொருளுண்டென நிச்சயித்தல்.
அநுமேயம் - அநுமானத்தாலறியப்பட்ட பொருள்.
அநுராதி-ஒருவர்தம்மேற்காதல்வைப்பத் தாமும் அவர்மேற்காதல் வைத்தல். ஆண்பெண்களுக்கிடையேநிகழ்வது.
அநுலாபம்-ஒன்றைக்குறித்துப் பலகாற் பேசுதல்.
அநுலேபம் - சுகந்தக்கலவை.
அநுலோமன் - நாற்குலத்தாருள் உயர் குலத்தாண் இழிகுலப் பெண்ணுடன் கூடிப் பெற்றபிள்ளை.
அநுவகன் - எழுவாயுக்களு ளொன்று.
அநுவக்கிரம் - ஒருஇராசியிலிருந்து அல் லது நட்சத்திர பாதத்திலிருந்துமுந்தி யபாதத்திற்குவக்கிரகதியாய்ப்போன கிரகம் மேலும் அதற்குமுந்திய இரா சிக்கு அல்லது பாதங்கட்குவக்கிர மாய்ப்போதல்.
அநுவதித்தல் - சொன்னதைப்பின்னுஞ் சொல்லுதல்.
அநுவழி - புதன்.
அநுவாகம் - வேதமந்திரங்களின் ஓர் வகைப்பிரிவு. [டன்.
அந்தகன் - யமன், ஓரசுரன், சனி, குரு
அந்தகாரம் - இருள், நரகம்.
அந்தகாரி - சிவன்.
அந்தக்கரணம் - உட்கருவிகள்; அவை மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பன.
அந்தணர்தொழில் கூ-ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்பன.
அந்தணன் - பிராமணன், பிரமன், அரு கன், வியாழன், கடவுள், முனிவன்.
அந்தப்புரம் - அரசனுடைய தேவிமாரி ருக்குமில்லம், பெண்களில்லம்.
அந்தம் - அழகு, முடிவு, குருடு, ஆகா யம், இருள், எல்லை.
அந்தரகணம் - காப்பியமுதற்செய்யுளின் முதற்சீர் பாட்டுடைத் தலைவனுக்குத் தீமைபயக்கத்தக்கதாயிருப்பது. (நி ரை நிரை நேர்ஆய்வரத்தொடுப்பது)
அந்தரங்கம் - இரகசியம்.
அந்தரம் - இடை, ஆகாயம், பேதம், பா துகாப்பாரின்மை, இருள், ஒப்பு, கூட் டம், தனிமை, தேவராலயம், முடிவு, தீமை.
அந்தராயம் - தீமை.
அந்தராளம் - இடைவெளி, திக்குக ளின், நடு, உள்வீடு.
அந்தராளன் - அநுலோமன் பிரதிலோ மப்பெண்ணைக்கூடிப் பெற்றபிள்ளை.
அந்தரான்மா - உள்ளிருக்குங்கடவுள்.
அந்தரி - துர்க்கை, பார்வதி.
அந்தரிட்சம்(அந்தரிக்ஷம்) - ஆகாயம்.
அந்தரிதம் - கழிந்தசேடம்.

அந்தர் - குருடர், உள்ளே.
அந்தர்க்கதம் - உட்பட்டது, மறைந்தது,
அந்தர்த்தானம் - மறைவு.
அந்தர்ப்பவித்தல்-உட்படுதல், மறைதல்.
அந்தர்யாகம் - உட்பூசை,
அந்தர்யாமி - உள்நின்று நடத்துவோன். (கடவுள்)
அந்தர்வேதி - ஆற்றிடைக்குறை.
அந்தளம் - கவசம்.
அந்தா - அங்கே.
அந்தாதி- முந்தியசெய்யுளினீற்றிலுள்ள சீர் அசைஎழுத்துஎன்பவற்றுளொன்று பிந்திய செய்யுளின்முதலாய்வரப் பாடியநூல். (இதுபெரும்பாலும்கலித்துறையிற் பத்து அல்லது நூறு செய்யுட்களாற் பாடப்படும்).
அந்தாதிமடக்கு - ஓரடியினிறுதிச்சொல்லைப் பிந்திய அடியின் முதலில் வேறு பொருள்படவைத்துச் செய்யுளியற்றல்.
அந்தி-மாலைக்காலம், செவ்வானம் ,இரா, முச்சந்தி, பாலையாழிசை.
அந்திகம் - சமீபம்.
அந்தித்தல் - முடிவுசெய்தல். [ருவன்.
அந்திமான் - இடைவள்ளலெழுவரிலொ
அந்தியசைவர் - பிரதிலோமர் முதலாயினோருட்சைவதீக்கை பெற்றோர்.
அந்தியம் - முடிவு, மரணம், ஓரெண். (சமுத்திரம்பத்துக்கொண்டது).
அந்தியர் - தாழ்ந்தசாதியார்.
அந்தியேட்டி - இறந்தபின்செய்யப்படுஞ் சைவக்கிரியை.
அந்தில்-அவ்விடத்து, அசைநிலை,*வெண்கடுகு.
அந்திவண்ணன் - சிவன்.
அந்து - கிணறு, கொலை, (அந்தமென்பதன்றிரிபு),நெற்குவையுட்புகுந்து உள்ளீட்டையுண்டு பதராக்கும்பிராணி.
அந்துகம்-சங்கிலி,பாதகிங்கிணி, யானைச் சங்கிலி.
அந்தேவாசி - சீடன், மாணாக்கன்.
அந்தோ (இடைச்சொல்) - அதிசயத்துடன் கூடிய இரக்கக் குறிப்பு.
அந்நுவயம்-செய்யுளிலுள்ள சொற்களைப் பொருளுக்கியையக் கொண்டு கூட்டுதல்.
அப (உபசர்க்கம்) - மாறுபாடாக, வேற்றுமையாக.
அபகடம் -திருட்டு முதலியவற்றிற் செய்யும் வலாற்காரம்.
அபகமம் - பிரிவு, மரணம்.
அபகரித்தல்-திருடுதல்.கொள்ளையிடுதல்.
அபகாரம் - தீமை.
அபகீர்த்தி - நிந்தை.
அபக்கியாதி - நிந்தை
அபக்கிரமம் - தோல்வி.
அபக்குரோசம் - நிந்தைப்பேச்சு.
அபக்குவன் - தீக்கை முதலியவற்றைப் பெறுதற்குத் தகுதியில்லாதவன்.
அபசகுனம் - துர்ச்சகுனம்.
அபசயம் - தோல்வி.
அபசவ்வியம் - இடச்சுற்று.
அபசாரம் - மரியாதையீனம்செய்தல்.
அபதேசம் -கெடத்தக்க துர்ப்போதனைகளைச்செய்தல்.
அபத்தம் - தவறு.
அபநயம் - நீக்கம், பிரிவு.
அபநுதி - உள்ளகுண முதலியவற்றை மறுத்துப் பிறிதொன்றைக் கூறுதல், ஓரலங்காரம்.
அபநோதனம் - அகற்றுதல்.
அபமம் - கிராந்தி.
அபமிருத்து (அவமிருத்து) - நோய்முதலிய இயற்கைக்காரணங்களின்றி ஆயுதமுதலியவற்றாலிறத்தல்.
அபயம் - அடைக்கலம், ஆபத்துற்றோர் தீர்க்கத்தக்கவரிடஞ்சென்று செய்யும் முறையீடு, அஞ்சாதீரென்று கைக்குறிகாட்டி அருள்செய்தல்.
அபயன் - சோழன், கடவுள்.
அபரஞ்சி - மாற்றுயர்ந்தபொன், புடமிட்ட பொன்.
அபரபக்கம் - பூரணைகழித்த பிரதமை முதல் அமாவாசையீறாகிய பதினைந்து திதிகள்.
அபரம்-பின், பின்பக்கம், முதுகு, மேக்கு, பொய், கவசம், நரகம், *பிணக்கு, யானைப்பின்கால்.
அபராதம் - குற்றம், குற்றஞ் செய்தோரிறுக்கும்படிநீதிபதியால்விதிக்கப்பட்ட தண்டப்பணம்.
அபரான்னம் - பகலை இரண்டு அல்லது மூன்றாக்கியவழிவரும் பிற்கூறு, ஐந்தாக்கியவழிவரும் நான்காங்கூறு.

அபரீதம் - கணக்குக்கடங்காதது.
அபவர்க்கம் (அபவருக்கம்) - முத்தி.
அபவர்த்தனம்-பலஎண்களைச் சேடமில்லாமற்பிரிக்கத்தகுந்த எண்.
அபவாகம் - நீக்கிவிடுதல்.
அபவாதம்-நிந்தை, விசேடவிதி, வேதாந்தத்தில் மாறுபாட்டுணர்ச்சியை நீக்கி உண்மையைத்தெளிதல்.
அபவாரணம் - மறைவு.
*அபனம் - சத்திசெய்தல்.
அபாங்கம் - கடைக்கண்.
அபாதானம் - நீக்கம்.
அபாமார்க்கம், நாயுருவி.
அபாம்பதி - வருணன்.
அபாயம் - தீமை.
அபாரம் - எல்லையின்மை.
அபாவம் - இல்லாமை. (எண்வகையளவைகளுளொன்று).
அபானம் - மலங்கழிக்கும் வாயில்.
அபி (உபசர்க்கம்) - எதிராக, முன்னாக, மேலாக, முற்றாக.
அபிசமனம், நெருங்கல், புணர்தல்.
அபிகிதகருத்தா - வினைமுதலையெழுவாயாக்கித்தொடுக்கும் வாக்கியம்.
அபிகிதகருமம் - செயப்படு பொருளையெழுவாயாக்கித்தொடுக்கும்வாக்கியம்.
அபிகிதம் - சொல்லப்பட்டது.
அபிசாரம் - பகைவரையழித்தற்காகச் செய்யப்படும் யாகம்.
அபிசித்து - ஓர்நட்சத்திரம். (உத்தராடத்திறுதியில் கஙு நாடியும் திருவோணத்துமுதலில் ச - நாடியும்கூடியது.)
அபிதானம் - பெயர்.
அபிநயம்(அவிநயம்)-கூத்து, உவகைவெகுளி முகவியவற்றையுடையராகத்தமைக்காண்பித்தல்.
அபிநவம்-முன்னொருபொழுதுங்காணப்படாதபுதுமை.
அபிபவம் - அவமானம்.
அபிப்பிராயம் - யாதேனுமொரு கருமத்தைக்குறித்துத்தோன்றும் மனக்கருத்து. [ஷசம்பவம்.
அபிமதம்-எண்ணியபடிநிகழ்ந்த சந்தோ
அபிமந்திரித்தல்-யாதேனுமொரு பொருளைவைத்துச்செபித்தல்.
அபிமன் - அருச்சுனனுக்குச் சுபத்திரை வயிற்றிற்பிறந்தபுதல்வன்.
அபிமானம் - தம்பால் வந்த தோல்வி நிந்தை முதலியவற்றை நீக்கமுயலுதல், சிறந்ததல்லாதபொருளைச்சிறந்ததென்றுநினைத்தல், செருக்கு.
அபிமுகம் - முன்னிலை.
அபியோகம் - போர்க்கறைகூவுதல், தனக்குப்பிறன்செய்த தீங்கைத் தீர்க்கத்தக்கவனுக்கு முறையிடுதல், முயலுதல், சபதமிடல்.
அபிராமம் - அழகு.
அபிவந்தனம் - முன்சென்று நின்று வணங்குதல்.
அபிவாதனம் - முன்னின்று விதிப்படி தன்வரலாற்றைக்கூறிவணங்குதல்.
அபிவியத்தி - வெளிப்படுத்துதல். [தல்.
அபிவிருத்தி - மேன்மேலும் விருத்திபா
அபின் - கசகசாவிலிருந்துண்டாக்கப்படும் ஓர்மருந்து.
அபீஷ்டம் - எண்ணியிருந்தவிருப்பம்.
அபூதம் - நிகழாதது.
அபூபம் - அப்பவர்க்கத்துளொன்று.
அபேட்சை - விருப்பம்.
அப்தம் (அத்தம்) - வருடம்.
அப்பம் - ஓர்வகைச்சிற்றுண்டி.
அப்பர் - திருநாவுக்கரசர். [கள்.
அப்பவர்க்கம் - பலவகைச்சிற்றுண்டி
அப்பன் - பிதா.
அப்பால் - கண்ணுக்கெட்டாதவிடத்தில், தூரத்தில், பின்.
அப்பிபங்கம் - எண்ணெய்தேய்த்துமுழு
அப்பியந்தரம் - உள்ளிடம். [குதல்.
அப்பியாகதன் - யாதேனுமோர்காரணங்கருதியேனும் கருதாமலேனும் வந்த விருந்தாளி.
அப்பியாசம்-பலகாற்படித்தல், பயிற்சி.
அப்பியுக்கணம் - எங்கும் படும்படி நீர் முதலியவற்றைத்தெளித்தல்.
அப்பியுதயம் - நாந்திசிராத்தம்.
அப்பியுத்தானம் - மேலோங்குதல்.
அப்பிரகம் - ஓர்வகை லோகக்கல்.
அப்பிரதக்கிணம் - இடமாய்ச்சுற்றுதல்.
அப்பிரம் - மேகம்.
அப்பு - நீர், பஞ்சபூதங்களுளொன்று.
அப்புதல் - குழைவான (சந்தனக்குழம்பு முதலிய) பொருள்களை மேனிமுதலியவற்றில் அப்புதல்.
அமங்கலை - கைம்பெண்.

அமடு - வஞ்சகம்.
அமட்டுதல் - புரட்டுதல்.
அமணர் - சமணர்.
அமரசிங்கன் - வடமொழிப்புலவருளொருவர்.
அமரம் - வடமொழி நிகண்டுகளுளொன்று. (அமரசிங்கர் சொல்லியது).
அமரர் - தேவர்.
அமரார் - பகைவர்.
அமராவதி - இந்திரனுடைய நகரம்.
அமரி - துர்க்கை, ⁎அமிர்தம், ⁎சிறுநீர்.
அமர் - போர்.
அமர்தல் - இருத்தல், அமைதல், விரும்புதல்.
அமர்த்தல் - இருத்துதல், அமைத்தல்.
அமர்த்தியர் - தேவர்.
அமலம் - அழுக்கற்றது, வெண்மை, அறிவு, அழகு.
அமலல்-பொருந்தல், நெருங்கல், பொலிதல்.
அமலன் - கடவுள்.
அமலை - இலக்குமி, பார்ப்பதி, ஒலி, சோறு, மிகுதி, தொகுதி, கட்டி.
அமளி - படுக்கை, மெத்தை.
அமாத்தியர் - மந்திரிகள்.
அமாவாசி (அமாவாசை) - அமாவாசைத்திதி.
அமிதம் - அளவற்றது.
அமிர்தகிரணன் - சந்திரன்.
அமிர்தசர்க்கரை - சீந்திற்சர்க்கரை.
அமிர்தம் (அமுதம் அமிழ்தம் அமுது அமிழ்து)-தேவருணவு, நீர், பசுப்பால், சோறு, போசனம், மூர்ச்சைதீர்த்துக் குற்றுயிர்தருமருந்து, இனியபொருள், முத்தி.
அமிர்தவெழுத்து - காப்பியத்தின் முதற்செய்யுளின் முதலில்வருதற்குரிய மங்கலவெழுத்து.
அமிர்தை - நெல்லிக்கனி.
அமிழ்ந்தல் - ஆழ்தல்.
அமுங்கல் - அமர்தல், அமிழ்ந்துதல்.
அமுதர் - தேவர், முல்லைநிலத்தார்.
அமுதவல்லி-சீந்திற்கொடி, திருமாலின் புதல்வியருளொருத்தி.
அமுதுசெய்தல் - புசித்தல்.
அமேத்தியம் - அசுத்தம், மலம்.
அமை - அழகு, அமாவாசை, மூங்கில்.
அமைச்சன் - மந்திரி, வியாழன்.
அமைச்சியல் - மந்திராலோசனை.
அமைதல் - அடங்குதல், நெருங்குதல், இன்றாதல், (அணியமைதோற்றத்து; மணிமேகலை), பொருந்துதல்,மௌனமாயிருத்தல்.
அமைதி-நிகழ்ச்சி, காலம், அமைவு, மாட்சிமை.
அமைத்தல், செய்தல், நியமித்தல், அடக்குதல், பேசாதிருக்கச்செய்தல்.
அமைப்பு - விதி.
அமையம் - காலம்.
அமைவு - அடக்கம், இருக்கவேண்டியமுறைப்படியிருத்தல்.
அம் - அழகு, நீர்.
அம்சம்(அஞ்சம்)-அன்னப்பறவை, பங்கு, பின்னத்தின்மேலெண், பாகை(விருத்தத்தின் ௩௬0 ல் ஒருபங்கு.
அம்சு - கிரணம்.
அம்பகம் - கண்.
அம்பட்டன்-நாவிதன், பிராமணன் அல்லது அரசன் வைசியப் பெண்ணைக் கூடிப் பெற்றபிள்ளை.
அம்பணத்தி - துர்க்கை.
அம்பணம் - தோணி, ஆமை, ஓர்வகையாழ், அளக்கும்பறை, நீர்ப்பத்தர்.
⁎அம்பணவர் - பாணர்.
அம்பரம் - ஆகாயம், கடல், வஸ்திரம், திக்கு, சயனம்.
அம்பரீடன்-சூரியவம்சத்தரசருளொருவன்.
அம்பர் - அவ்விடத்து.
அம்பலம் - சபை, கூத்தாடுமிடம், கனகசபை.
அம்பலி - ஓர்வாத்தியம்.
அம்பல் - சிலரறிந்து தூற்றும் பழிச்சொல்.
அம்பாலிகை - உமை, பாண்டுவின்றாய்.
அம்பி - இறைகூடை, ஓடம், மரக்கலம், தெப்பம், காளான், சலயந்திரம்.
அம்பிகை - உமை, காளி, திருதராட்டிரன்றாய்.
அம்பிகைதனயன் - விநாயகக்கடவுள், முருகக்கடவுள், திருதராட்டிரன்.
அம்பு-பாணம், நீர், மேகம், மூங்கில்.
அம்புக்கூடு - தூணி.
அம்புதம் - மேகம்.
அம்புதி, அம்புநிதி - கடல்.

அம்புயம் - தாமரை, நீரிற்பிறப்பன.
அம்புயன் - பிரமா.
அம்புராசி - கடல்.
அம்புலி - சந்திரன்.
அம்புவாகினி - இறைகூடை.
அம்பை - உமை, தாய், காசிராசன்புதல்வியருளொருத்தி.
அம்போதரங்கம் - கலிப்பாவுக்குரிய உறுப்புக்களுளொன்று.
அம்போதி (அம்போநிதி) - கடல்.
அம்போருகம் - தாமரை.
அம்ம (அம்மா) - அதிசயக்குறிப்பு, இரக்கக் குறிப்பு, கேட்பாய் என்னுங் குறிப்பு, அசைநிலை.
அம்மம் - முலை, முலைப்பால்.
அம்மனை - தாய், மகளிரெறிந்து விளையாடுங்காய், மகளிர் விளையாட்டு ளொன்று (காயெறிந்துவிளையாடுதல்)
அம்மானை - அம்மனைக்காய், அம்மனையென்னும் மகளிர்விளையாட்டு, ஓர்வகைப்பாடல்.
அம்மான் - மாமன், பெரியோன், பிதா.
அம்மி - அரைகல்.
அம்மியம் - கள்.
அம்மிலம் - புளி.
அம்மை - தவப்பெண் தருமதேவதை, (இவ்விருபொருளும்அருகமதவழக்கு) அழகு, அமைதி, செய்யுள்வனப்பு ளொன்று, தாய், மசூரிகைநோய், வருபிறப்பு, முற்பிறப்பு.
அம்ஹஸ்பதிமாதம் - சங்கிராந்தியில்லாத இரண்டு சாந்திரமாதங்கள் ஒருவருடத்தில்வரின் அவற்றிற்கிடைப்பட்டிருக்கும் இரண்டு சங்கிராந்தியுள்ளசாந்திரமாதம். (இதனை அசங்கற்பமாதமெனவுங்கூறுவர்).
அயக்கல் - அசைத்தல்.
அயக்கிரீவன் - திருமால், ஓரசுரன்.
*அயமரம் - அலரி.
அயம் - இரும்பு, குதிரை, நீர், குளம்.
அயர்ச்சி - மறதி ,வருத்தம். தளர்வு.
அயர்தல் - செய்தல், தளர்தல்.
அயர்த்தல் - மறத்தல்.
அயர்ப்பு - மறதி.
அயர்வு - வருத்தம், தளர்ச்சி.
அயலவன் - அடுத்த வீட்டிலிருப்பவன், அந்நியன்.
அயல்-அருகு,பிறவிடம், புறம்பு, *இடம்
*அயவணம் - ஒட்டகம்.
அயவாகனன் - அக்கினி.
அயறு - புண்வழலை.
அயனசலனம்-கிராந்திவிருத்தத்தின் சலனம்.
அயனம் - தைமுதல் அல்லது ஆடிமுதல் ஆறு மாதம், (தைமுதலாறுமாதம் உத்தராயணம்; ஆடிமுதலாறுமாதம் தக்ஷிணாயனம்), தக்ஷிணஉத்தரஅயனவிருத்தங்களுள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கிடையில் சூரியக்கிராந்தியமையுங்காலம், அயனப்பிறப்பு, (தை ஆடி மாதங்களின்பிறப்பு), ஓரிராசிக்குரிய அயனத்திலிருந்து பிந்தியராசிக்குரிய அயனத்திற்சூரியன்கிராந்தியாகுங்காலம், வழி, இடம்.
அயன் (அசன்)-தசரதனுடையபிதா, பிரமன்.
அயன்மனைவி - சரசுவதி.
அயா - தளர்ச்சி, வருத்தம்.
அயாவுயிர்த்தல் - இளைப்பாறுதல், பெருமூச்சுவிடுதல்.
அயிங்கிதை - கொல்லாமை.
அயிணம்(அசினம்) - மான்றோல்.
அயிராணி - இந்திராணி, பார்ப்பதி.
அயிராவதம் (ஐராவதம் ஐராவணம்) - கீழ்த்திசையானை.
அயிரி - மீன்முள்ளரியுஞ்சிறுகத்தி.
அயிரை-ஒருசிறுமீன், நுண்மணல், ஓர்யாறு.
அயிர்-நுண்மணல், நுண்மை, கண்டசர்க்கரை.
அயிர்த்தல் - ஐயுறல்.
அயிர்ப்பு-சந்தேகம், குறிஞ்சியாழ்த்திறங்களுளொன்று.
அயிலல் - உண்ணுதல்.
*அயிலி - சதுரக்கள்ளி.
அயில் - அழகு, இரும்பு, ஆயுதங்களின் கூர்மை, வேல்.
அயினி - உணவு, சோறு.
அயுதம் - பதினாயிரம்.
அயோத்தி - ஓர்நகரம் (சூரியவம்சத்தரசருடையராசதானி).
அரக்கர் - இராக்கதர்.
அரக்கல் - அழித்தல், தேய்த்தல், நடவாமல் இருந்துகொண்டே புடைபெயர்தல்.
அரக்கு-மெழுகு, சாதிலிங்கம், சிவப்பு, கள்ளின் விகற்பம்.

அரக்குநீர்- இரத்தம்.
அரங்கம்-சூதாடுமிடம், சூதாடுமறை,நடனசாலை, கல்விச்சாலை, ஆயுதம்பயிலுமிடம், சபை, ஸ்ரீரங்கமென்னும் விஷ்ணுஸ்தலம், ஆற்றிடைக்குறை.
அரங்கல் - அழிதல், அழுந்துதல்.
அரங்கு - போர்க்களம், சூதாடுமிடம், மனையின்விகற்பம், அரங்கம்.
அரங்கேற்றல்-புதிதாகச்செய்த நூன்முதலியவற்றைக் சற்றவர்கூட்டத்தில் ஒப்புக்கொள்ளுவித்தல்.
அரசகேசரி - யாழ்ப்பாணத்தி லிருந்த இராசவம்சத்துப் புலவருளொருவர், (இரகுவம்சத்தைத்தமிழிற்பாடியவர்).
அரசாங்கம் சு-படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்பன.
அரசரெண்பேராயம்- கருமாதிகாரர் கடைகாப்போர் நகரிமாக்கள் படைத்தலைவர் சுற்றத்தார் யானைவீரர் குதிரைவீரர் காவிதியர் என்பவர்கள்.
அரசர்குழு டு- மந்திரி புரோகிதன் தூதன் ஒற்றன் சேனைத்தலைவன் என்பவர்கள்,
அரசர்க்குரிய குதிரை- மகளிர் மனம் போன்ற மனமும் வாழைப்பூமடல் போன்ற செவியும் நான்குகால்களின் முன்னும் முதுகிலும் பிடர்த்தலையிலும் முகத்திலும் வெண்ணிறமும் எண்பத்திரண்டங்குல உயரமும் அமைந்த குதிரை.
அரசர்க்குரியயானை - எழுமுழஉயரமும் ஒன்பதுமுழநீளமும் பத்துமுழச்சுற்றளவும் சுளகுபோன்ற செவியும் நீண்ட கால்களும் உடையதாய், முற்பாக முயர்ந்து, கோசமும் துதிக்கையும் வாலும் நிலத்திலே தோயப்பெற்று, மும்மதங்களைப்பிலிற்றி, வால் கால் துதிக்கை கொம்பு என்னுமிவைகளாற்பகைவரைக்கொலைசெய்கின்ற யானை.
அரசர்சின்னம் உக - முடி குடை கவரி தோட்டி முரசு சக்கரம் யானை கொடி மதில் தோரணம் பூரணகும்பம் மாலை சங்கு கடல் மகரம் ஆமை இணைக்கயல் சிங்கம் தீபம் இடபம் ஆசனம் என்பன.
அரசர்தானை சு-வில் வேல் வாள் யானை குதிரை தேர் என்பன.
அரசர்தொழில் சு-ஓதல் வேட்டல் ஈதல் உலகோம்பல் படைபயிறல் பொருதல் என்பன.
அரசர்படை சு-மூலம் கான் கூலி துணை பகை நாடு என்பவற்றாலமைவன.
அரசர்பா - அகவற்பா.
அரசர்பேறு எ- அறம் பொருள் இன்பம் அன்பு புகழ் மதிப்புமறலமைஎன்பன.
அரசர்மன்னன் - துரியோதனன்; பலஅரசர்களுக்குத் தலைவனாயிருப்பவன்.
அரசர் மூவர்- சேரன் சோழன் பாண்டியன் என்பவர்கள்.
அரசன் (அரையன் அரயன்) - வியாழன், இராசா. [வி.
அரசி-அரசனுடையமுதன்மனைவி, தலை
அரசியல் சு - அறநிலையறம் மறநிலையறம் அறநிலைப்பொருள் மறநிலைப்பொருள் அறநிலையின்பம்மறநிலையின்பம் என்பன.
அரசிருக்கை-அத்தாணியண்டபம். [ன.
அரசு-அரசமரம், இராச்சியம், அரசன்.
அரசுநீழலிலிருந்தோன் - புத்தன்.
அரட்டர் - குறுநிலமன்னர், துட்டர்.
அரணம்-கவசம், காடு, மதில், வேலி, காவல், பிரித்தற்கணக்கு, *வேல்.
அரணி - தீக்கடைகோல்.
அரணியம் - காடு.
அரணை - ஓர்பிராணி.
அரண்-கோட்டை, காவல், காவற்காடு, கற்படை, மதில்.
அரண் ச- காடு மலை நீர் மதில் என்பன. (திருக்குறளில் மதிலைநீக்கி வெளிநிலத்தைச்சேர்த்துக் கூறப்பட்டது).
அரதனம் - இரத்தினம், அகன்மணி.
அரத்தகம் (அலத்தகம்) - செம்பஞ்சு.
அரத்தம்-இரத்தம், சிவப்புநிறம்,பவளம், அரக்கு, செங்குவளை, கடப்பமரம்.
அரத்தவுற்பலம் - செங்கழுநீர்.
அரத்தன் - செவ்வாய்.
அரத்தினி-சிறுவிரலைநீட்டி மற்றைவிரல்களை முடக்கியளக்கும்முழம்.
அரத்தை - சிற்றரத்தை.
அரந்தை-குறிஞ்சியாழிசை,மனக்கவலை.
அரமங்கை, அரமகள் - தெய்வப்பெண்.
அரமனை (அரண்மனை) - அரசன்மனை, அரசன்றேவியில்லம்.

அரமியம் - நிலாமுற்றம். (செல்வர்களுக்காக அமைக்கப்படும் ஓர்வகைமாளிகை).
[அரமுறி - ஓர்செடி].
அரம் - இரும்புமுதலிய வற்றையராவுங் கருவி, பாதலம்.
அரம்பு - குறும்பு.
அரம்பை-தெய்வப்பெண்,தேவதாசியருளொருத்தி, வாழை.
அராம் (அரரி) - கதவு.
அரலை-கழலை, குற்றம், கொடும்பு, தூர்க்கை, விதை, கடல், மரற்செடி.
அரவக்கொடியோன் - துரியோதனன்.
அரவணிந்தமூர்த்தி - சிவன்.
அரவணைச்செல்வன் - திருமால்.
அரவம்-ஒலி, பேரொலி, பாம்பு, மனக்கலக்கம், காற்சிலம்பு.
அரவான் (அராவான்)- அருச்சுனனுக்கு நாககன்னிவயிற்றிற்பிறந்தபுதல்வன்.
அரவிந்தம் - தாமரை.
அரவிஞர்-ஆயிலியம்.
அரவு - பாம்பு, வைக்கோற்பழுதை (திருவி மண்சுமந்த டு).
அரவுயர்த்தவன் - துரியோதனன்.
அரற்று-குறிஞ்சியாழ்த்திறங்களுளொன்று, புலம்பல், அழுகை; யாழ்நரம்போசை.
அரற்றுதல் - புலம்பல், அழுதல், ஒழித்தல்.
அரன் - சிவன்.
அரன்மகன்-விநாயகக்கடவுள், முருகக்கடவுள், வீரபத்திரக்கடவுள், வைரவக்கடவுள்.
அரன்றோழன் - குபேரன்.
அரா - அரவு.
அராகம்-பற்று, இசை,சிவப்பு,கலிப்பாவுறுப்புளொன்றாகிய முடுகியல், பாலையாழ்த்திறங்களுளொன்று, செம்பராகம், பொன்.
அராதி - சத்துரு.
அராபதம் (ஆர்ப்தம்) - வண்டு.
அராமுனி - பதஞ்சலி.
அராவுதல் - அரத்தால் இரும்புமுதலிய லோகங்களையரித்தல்.
அரி - விட்டுணு, சிவன், அக்கினி, சூரியன், இந்திரன், யமன், சந்திரன், பகைவன், புகை, பகை, அரிசி, நெல், நெற்கதிர், அழகு, ஆயுதம், நவகண்டங்களுளொன்று, கண்வரி, கிளி, கருங்கிளி, கள்ளு, ஒளி, குதிரை, குரங்கு, சிங்கம், சிங்கராசி, குற்றம், கூர்மை, மென்மை, (அரிமயிர்த்திரண் முன்கை; புறநா கக), செம்மறிக்கடா, தவளை, சித்திரை, நிறம், நீர், கடல், ஒருகட்பறை, மருதப்பறை, பன்றி, பாம்பு, பொன், செந்நிறம், மயில், மரகதம், மரவயிரம், யாழினரம்பு, வண்டு, வலிமை, காற்று, உட்டுளைப்பொருள், தகட்டுவடிவு, சிலம்பு, சிலம்பினுள்ளிடும் பருக்கைக்கல், மலை, சோலை, தேர், மூங்கில், பூமாலை, பச்சைநிறம், அரிவாள், சயனம், சக்கராயுதம், விசிப்பலகை, (ஓடமோட்டுங்கோல்; கட்டிலின் விசியெனப்பிங்கலவுரையில்), *தெருக்களின்சந்தி.
அரிகரதுமரன் - ஐயனார்.
அரிகுரல் - அரிவொலிபோன்ற (கரகரப்பான) ஓசை.
அரிகூடம் - கோபுரவாயில்.
அரிசந்தனம் - ஐந்தருக்களுளொன்று.
அரிசனம் - மஞ்சள்.
அரிசி - தண்டுலம்.
அரிசில்-ஓர்நதி, (சுந்தரமூர்த்திதேவாரத்தில்; அரிசொல் எனப்பெரியபுராணத்தில்).
அரிச்சந்திரன் - சூரியகுலத்தரசருளொருவன்.
அரிச்சுவடி - நெடுங்கணக்கு.
அரிட்டம்-சன்மதோஷம், பிரசவமனை, காகம், முட்டை, கள்.
அரிணம் - மான்.
அரிணி - பெண்மான்.
அரிதகி - கடுமரம்.
அரிதம்-பச்சைநிறம், திக்கு, பசும்புற்றரை, பொன்னிறம்.
அரிதல் - ஈர்தல்.
அரிதாரம் - ஓர் மருந்துச்சரக்கு.
அரித்தல் - கழித்தல், பிரித்தல்.
அரித்திரம் - மஞ்சள்.
அரித்துவாரம் - மாயாபுரி.
அரிந்தமன் - பகைவனையடக்குவோன்.
அரிபுரம் - ஓர்நகரம்.
அரிப்பர்-பொற்றுகள் முதலியவற்றையரித்தெடுப்பவர்.
அரிப்பிரியை - இலக்குமி.

அரிப்பு - குற்றம்,கோபம்.
அரிமர்த்தனன் - ஓர்பாண்டியன்.
அரிமானோக்கம் - சிங்கநோக்கு, முன்னும் பின்னுமியைக்து நடுவேநிற்குஞ் சூத்திரநிலை.
அரியகம்-காற்சரி. (பாதசரமெனச் சிலப் அரும்பதவுரையில்).
அரியணை - சிங்காசனம்.
அரியணைச்செல்வன்-அருகன், திருமால்.
அரியமன் - சூரியன், பன்னிருசூரியருளொருவன்.
அரியல் - கள்ளு.
அரில் - குற்றம், சிறுதூறு, பிணக்கு.
அரிவரி - அரிச்சுவடி.
அரிவாள்-காய்முதலியவற்றையரியும்படி மணையிற்செறிக்கப்பட்ட ஓர்கருவி, விளைந்தநெல் முதலிய பயிர்களையரியுங்கூனிரும்பு, மரமரியும்வாள்.
அரிவை - கக வயதின்மேல்உடுவயதுக்குட்பட்டபிராயமுடையபெண்,பெண்
அரு - உருவற்றது.
அருசம் - தக்கது.
அருகனுக்கு விலக்கப்பட்டஎண்குற்றங்கள்-ஞானவரணீயம் தரிசனவரணீயம் வேதனீயம் மோகனீயம் ஆயு நாமம் கோத்திரம் அந்தராயம் என்பன.
அருகனெண்குணம் - கடையிலாவறிவு கடையிலாக்காட்சி கடையிலாவீரியம் கடையிலாவின்பம் நாமமின்மை கோத்திரமின்மை ஆயுவின்மை அந்தராயங்களின்மை என்பன.
அருகன் - சமணசமயக்கடவுள்.
அருகன்குடை ங-சகலபாசனம் சந்திராதித்தியம் நித்தியவினோதம் என்பன; இவைமுறையே, பொன் முத்து இரத்தினம் என்பவற்றாலாயவை.
அருகன்கொடி ங-காட்சி ஞானம் சீலம் என்பன.
அருகி - கள்ளு.
அருகு - சமீபம்,பக்கம். ⁎இடம்.
அருகுதல்-குறைதல்,கெடுதல்,கிட்டுதல்.
அருக்கம் - எருக்கஞ்செடி, சுருக்கம்.
அருக்கன் - சூரியன்.
அருக்குதல் - சுடுதல், அருமைகாட்டல்.
அருச்சனை - பூசை.
அருச்சுனம்-களங்கமின்மை,மருதமரம், வெண்மை.
அருச்சுனவட்டம் - திருவிடைமருதூர்.
அருச்சுனன் - பாண்டவருளொருவன்.
அருடணம்-உள யோகங்களுளொன்று.
அருடம் - மகிழ்ச்சி.
அருட்கொடிவேந்தன் - அருகன்.
அருட்டுதல் - கிளர்ச்சிசெய்தல்.
அருணகிரி(அருணை)-திருவண்ணாமலை.
அருணகிரிநாதர் - சுப்பிரமணியக்கடவுளின் தொண்டருளொருவர்.
அருணம்-சிவப்புநிறம், எலுமிச்சைமரம், மந்தரமலைச்சாரலிலுள்ளஒருநீர்நிலை, செம்மறியாடு.
அருணன்-சூரியன், புதன்,சூரியனுடைய தேர்ச்சாரதி.
அருணோதம் - ஓர் நீர்நிலை. [தியகாலம்.
அருணோதயம் - சூரியோதயத்திற்குமுந்
அருத்தம்(அர்த்தம்) - திரவியம், பொன், பாதி,சொற்பொருள், பிரயோசனம்,
அருத்தி - விருப்பம், அநுபவம்.
அருநெறி - ஒடுக்கமானவழி, போதற்கரியவழி.
அருந்ததி-வசிட்டன்மனைவி, அருந்ததி நட்சத்திரம்.
அருந்தல் - அருமை, புசித்தல், பருகல், அநுபவித்தல்.
அருந்துதன் - வேதனைசெய்வோன்.
அருப்பம் - அருமை, அற்பம், ஊர், காடு, கள், அரண், மலைமேற்றுருக்கம், துக்கம், நோய், மோர்,வழுக்குநிலம், மா.
அருப்பலம் - அனிச்சமரம்.
அருப்பு - நஞ்சு, துக்கம்.
அருமை - அரியது.
அரும்பு - பூவரும்பு.
அரும்புதல் - முகிழ்த்தல், தோன்றுதல், கிளைத்தல். (திருக் சுற்றந்தழால் ௨).
அருவருத்தல் - வெறுத்தல்.
அருவா-கொடுந்தமிழ் நாடுகளுளொன்று.
அருவி - மலைச்சாரலாறு, தினைத்தாள்.
அருவுதல் - குறைதல், சற்றுச்சற்றூறி நீர் முதலியனபாய்தல், குறுக்கிடுதல்.
அருளல் - கொடுத்தல், படைப்பு, சிவசத்தி, ⁎கொடை.
அருளிச்செய்தல் - திருவாய்மலர்தல்.
அருளிப்பாடு - பெரியோரால் அல்லது அரசராற் செய்யப்படுங்கட்டளை.
அருள் - பெரியோர் சிறியோர்பாற் காட்டுந்தயை.

அரை - வயிற்றுக்குக்கீழும் காலுக்குமே லுமான அவயவம், மரத்தினடி, பாதி.
அரைக்கால் - எட்டிலொருபாகம்.
அரைசிலை - அம்மி.
அரைஞாண் - அரையிற் பொன்வெள்ளி முதலியவற்றாற்செய்துகட்டுங்கயிறு
அரைதல் - தேய்தல்.
அரைப்பு - எண்ணெய்தேய்த்து முழு கும்போது அழுக்கை நீக்குவதற்குப யோகிக்கும் இலுப்பைப்பிண்ணாக்கு முதலியன.
அரையாப்பு- அரையிலுண்டாகும் ஓர்வ கைக்கட்டு.
அரோ - அசைச்சொல்.
அரோசகம் - நோய்முதலியகாரணங் களால் நாக்கின்சுவைமாறுதல்.
அர்க்கம் - விலைப்பொருள், விலை, நீர்க்கா கம், எருக்கலை.
அர்க்கலம்- கதவடைக்குந்தாழ், தடை.
அர்க்கியம்(அருக்கியம்) - பூசையிற்கொ டுக்கும் ஓர்வகைத்தீர்த்தம்
அர்ச்சனம் - பொருள்சம்பாதித்தல்.
அர்ச்சி - ஒளி.
அர்ச்சை - விக்கிரகம்.
அர்ணவம் (அன்னவம்) - கடல்.
அர்த்தநாரீசுரன் - பாதி பெண்வடிவா யிருக்குஞ்சிவன்.
அர்த்தப்பிரகரன் - ஒவ்வொருநாளிலும் வருவதோர்தீக்காலம். (இதைஒருபக் கிரகமென்பர்.)
அர்த்தராத்திரி - இரவின்நடு.
அர்த்தவாதம் - குணம்குற்றம் முதலிய வற்றை உள்ளவாறு கூறுதல்.
அர்த்தவேதம்-பொருளீட்டல் முதலிய வற்றைக்கூறும் நூல் (இது உபவே தம் நான்கில் ஒன்று).
அர்த்தாதுரம் - பொருளாசை.
அர்த்தாந்தரநியாசம் - வேற்றுப்பொருள் வைப்பென்னும் அணி.
அர்த்தாபத்தி - எண்வகைஅளவைகளு ளொன்று. (இது பொருளளவையெ னவும்படும்; சொல்லப்பட்டஒருபொ ருளாற் சொல்லப்படாத வேறொரு பொருளுமுண்டென்றுபெறப்படுதல் கொடுப்பாருளரென்புழிக் கொடாதா ருமுளரென்பதுபெறப்படுதல்போல)
அர்த்தி - இரப்போன்.
அர்த்தித்தல் - பாதியாக்கல்.
அர்த்தோதயம் - ஓர் புண்ணிய காலம் (தைமாசிமாதங்களுளொன்றில் ஞா யிற்றுக்கிழமை உதயத்தில் அமாவா சைத்திதியும் திருவோண நட்சத்திர மும்வியதீபாதயோகமும்கூடிவருவது
அர்ப்பணம் - ஒப்பித்தல்.
அர்ப்புதம் (அற்புதம்) - பத்துக்கோடி.
அர்வாசீனம் - பிற்காலத்தது.
அலகிடல்-கணக்கிடல், துடைப்பத்தால் நிலத்தைவிளக்குதல்.
அலகு-எண், ஆயுதம், கூர்மை,கொது, நுளம்பு, சோதிடம், நெல், பறவை, மூக்கு, துடைப்பம்,கணிதத்தில்இலக் கத்திற்காக நிரைக்கும் பலகறைமுத லியன.
அலகை - பேய்.
அலகைத்தேர் - பேய்த்தேர்
அலகைமுலையோடாவியருந்தினோன் - திருமால்.
அலக்கண் - துன்பம்.
அலக்கு - மரத்தின்கிளை.
அலங்கடை - அல்லாதவிடத்து.
அலங்கம் - அரண், பூமாலை, தளிர்.
அலங்கல் - இரக்கம், தளிர், பூமாலை, அசைதல், விளங்குதல்.
அலங்காரபஞ்சகம் - வெண்பா கலித்து றை அகவல் ஆசிரியவிருத்தம் வண் ணம் ஆகியஐந்தும் முறையேயமைந்த பாடல்.
அலங்காரம் - கட்டழகு, பஞ்சலக்கணங் களுளொன்று. (செய்யுளினணியைக் கூறுவது [தல்.
அலசுதல் - சோம்புதல், தளர்தல், கழுவு
அலட்சியம் - பொருட்படுத்தாமை.
அலட்டு - சொன்னதையே பலகாற் சொல்லிப்பிதற்றுதல்.
அலத்தல்-வறுமைப்படல், ஆசைப்படல், துன்பப்படல், அலைதல்.
அலந்தலை - துன்பம், மயக்கம்.
அலந்தை - குளம்.
அலப்படை கொண்டோன்-பலபத்திரன்
அலப்புதல்(அளப்புதல்) -உழறுதல், தருக் கநெறிகடந்துபேசுதல்.
அலமரல் - அலைதல், துன்பப்படல், சுழ லுதல்.
அலம் - கலப்பை, சஞ்சலம், தேள், அமை

யுமென்னும் பொருளைத்தரும்இடைச்சொல்.
அலம்பல் - பலகிளைகளையுடைய மரக்கொப்பு, ஆரவாரித்தல், கழுவுதல், அதிர்தல், ஒழித்தல்.
அலம்புடை-ஓர் தேவப்பெண், தசநாடிகளுளொன்று.
அலரி - ஓர் பூமரம், சூரியன், கண்வரி, அழகு, பூ.
அலர் - பூ, நீர் (மழையலர்), பலரறிந்து தூற்றும்பழிச்சொல், மகிழ்ச்சி.
அலர்தல்-பூக்கள்மலர்தல், விரிதல், பரத்தல்.
அலர்மகள் - இலக்குமி.
அலவலை-ஆராயாதுசெய்தல், புலம்பல், பேச்சுக்காரன்.
அலவன்-சந்திரன், நண்டு, ஆண்நண்டு, கர்க்கடகராசி, பூனை.
அலவைப்பெண் - வியபிசாரி.
அலறுதல் (அளறுதல்)-கதறுதல், சிதறுதல்.
அலாதம் - கடைக்கொள்ளி.
அலாபு - சுரைக்கொடி.
அலாயுதன்-பலராமன்.
அலி - ஆணும்பெண்ணுமல்லாதது, நறுவிலிமரம், பலராமன்.
அலிமரம்-உள் புறம் இரண்டிலும் வைரமில்லாதமரம். (முருக்குமுதலியன).
அலுத்தல் - இளைத்தல்.
அலை - கடல், திரை, கொலை, மிகுதி.
அலைசல் - சோம்பல்.
அலைதல் அசைதல், உலைதல்.
அலைத்தல் - அலையச்செய்தல், வருத்துதல்.
அலைவாய் - கடல், திருச்செந்தூர்.
அல் - இரா, இருள், அஞ்ஞானம், மெய்யெழுத்து, அல்லவெனல்.
அல்கல்-நாள், இரவு, தரித்திரம், குறைதல், தங்குதல்.
அல்குல் - நிதம்பம்.
அல்லகண்டம் - துன்பம்.
அல்லகம் - உற்பலச்செடி.
அல்லம் - இஞ்சி.
அல்லல் - துன்பம்.
அல்லாத்தல்-துன்பப்படல், மகிழ்தல்.
அல்லி - அகவிதழ், காயாமரம், ஆம்பல், (அது செவ்வாம்பலும் வெள்ளாம்பலுமென இருதிறப்படும்).
அல்லியம்-கிருட்டிணமூர்த்தி கஞ்சனுலைப்பட்டயானையின் கொம்பை முரித்தபோதாடிய கூத்து.
அல்லோன் - சந்திரன்.
அல்வழி-வேற்றுமையல்லாதசந்தி.
அவ (உபசர்க்கம்)-அங்குமிங்கும், மாறாக, கீழாக. (இவ்வுபசர்க்கத்தைஅவாஎன வைத்து இறங்குதலெனச் சூடாமணி நிகண்டிற்பொருள் கூறப்பட்டது)
அவகதம் - அறியப்பட்டது, ஆழத்திற்சென்றது.
அவகாசம் - ஆறுதலுக்கேற்றகாலம் அல்லது இடம்.
அவகாதம் - கொல்லுதல், நெல்முதலியவற்றைக் குத்துதல்.
அவகேசி - பூக்களிலிருந்து காயுண்டாகாதமரம்.
அவகேளனம் - அவமதிப்பு.
அவக்கிரகம் - மழையின்மை.
அவசம் - தன்வயமிழத்தல்.
அவசரம் - காலம்.
அவசானம் - முடிவு.
அவசியம் - நிச்சயமாக, விரைவாக.
அவச்சாயை - சூரியனுச்சமாயிருக்கும்போது அளந்துகாணப்படும்அடி. (காலடியால்நிழலையளந்து நாழிகைகணிக்கும்போது அளந்து கண்டஅடியில் இது கழிக்கப்படவேண்டியதாகும்).
அவச்சின்னம் - பிரித்தறியப்பட்டது.
அவச்சேதம் - பிரிவு.
அவணன் - திண்ணியன்.
அவண் - அவ்விடத்து.
அவதஞ்சம் - காதணிகளு ளொன்று. (செவிமலர்ப்பூ).
அவதாதம் - வெண்மை.
அவதாரம்-தெய்வப்பிறப்பு, இறங்குதல்.
அவதாரிகை-செய்யுள் நுதலியபொருள்.
அவதானம் - நினைவூட்டுதல்.
அவதி - எல்லை, அளவு, முடிவு.
அவதூதம் - துறவு.
அவத்தைநி - சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம்துரியாதீதம்என்பன.
அவந்தன் - பாக்கியமில்லாதவன்.
அவந்தி - உச்சயினிப்பட்டணம், கிளி.
அவந்திகை - கிளி.
அவபாசம் - வெளிப்படத்தோன்றுதல்.
அவபிருதம் - யாகமுடிவிற்செய்யும் ஸ்நானம்.

அவப்பிரசவம் - ஆறுமாதங்களின்மேற் கருப்பமழிதல்.
அவமா-சூரியஉதயத்தின்மேற்றொடங்கி மறுநாட் சூரியஉதயத்தின்முன் முடியுந்திதி, அத்திதியையுடையதினம்.
அவமானம் - நிந்தை.
அவம் - கேடு, தீமை, வீண்.
அவயகம் - உறுப்பு.
அவரை - ஓர்கொடி.
அவரோகணம் - இறங்குதல்.
அவரோதம் - அந்தப்புரம், தடை.
அவலம் - துக்கம், கேடு, கவலை, குற்றம், நோய், மிடி.
அவலம்பனம் - வேறொன்றைப் பற்றுக்கோடாய்க்கொள்ளுதல்.
அவலேசனம் - நக்குதல்.
அவலை - காடு, பாழ்நிலம், கடுப்பு.
அவலோகனம் - பார்வை.
அவல் - ஒருசிற்றுண்டி, (ஊறியநெல்லை யுலர்த்தியிடித்தஉணவு), பள்ளம், விளைநிலம், குளம்.
அவளிகை - இடுதிரை.
அவனி - பூமி.
அவா - ஆசைப்பெருக்கம்.
அவாசி - தெற்குத்திசை.
அவாய்நிலை - வாக்கியத்தில் அல்லது செய்யுளில் ஒரு பதம் வேறொருபதத்தை வேண்டிநிற்றல்.
அவி - வேள்வித்தீயில் தேவர்க்கோமஞ் செய்யுமுணவு, நெய், சோறு.
அவிசு - சத்தான்னம்.
அவிடி - இடுதிரை.
அவிட்டம் - ஓர்நட்சத்திரம்.
அவிதல் - தணிதல், வேகுதல், கெடுதல், இறத்தல்.
அவிதாவிடல் - ஆபத்துக்காலத்தில்துணைசெய்யக்கூடியவரையழைத்துஓலமிடுதல்.
அவித்துவையல் - பச்சடி.
அவித்தை - அஞ்ஞானம்.
அவிநயர் - கூத்தர்.
அவிநாசி - ஓர்சிவதலம்.
அவிநாபாவம் - விட்டுப்பிரியாது உடனிகழுந்தன்மை.
அவிமுத்தம் - காசி.
அவியல் - அவிந்தபொருள்.
அவிர்தல் - பிரகாசித்தல், பீறல்.
அவிழ் - சோறு.
அவிழ்தல் - பூக்களலர்தல், உதிர்தல், கட்டுநீங்கல்.
அவுணர் - அசுரர்.
அவுத்திரி - ஒமமுதலியகிரியைகளுடன் செய்யுந்தீக்கை.
அவை - கற்றவர்கூட்டம், சபாமண்டபம்.
அவைத்தல் - நெரித்தல், நெல்முதலியவற்றைக்குத்தல், அவித்தல்.
அவையம் - திரள்.
அவையல் - குத்தியஅரிசி.
அவ்வித்தல் - பொறாமைகொள்ளுதல்.
அவ்வியத்தம் - வெளிப்படாதது, வீசகணிதம், பிரகிருதி, பிரமம்.
அவ்வியம் - அழுக்காறு, ஓமத்திரவியம்.
அவ்வியயம் - இடைச்சொல், அழிவற்றது
அவ்வியாத்தி சொல்லுங் குணமுதலியன சொல்லப்படும்பொருள்களிலமையாமை, (தருக்கநூலிற் சொல்லியமுக்குற்றங்களிலொன்று).
அவ்வை - ஔவையார், (ஆத்திசூடி முதலிய நீதிநூல்களைச் செய்தவர்). பெற்றதாய்.
அழகு - கண்ணால் அல்லது மனத்தால் விரும்பப்படுந்தன்மை.
அழலாடி - சிவன்.
அழலுதல் - சுடுதல், எரிதல், கோபித்தல்
அழலோன் - செவ்வாய். அக்கினி.
அழல் - அக்கினி, வெப்பம், கார்த்திகை நட்சத்திரம், நஞ்சு.
அழற்கண்வந்தோன் - வீரபத்திரன்.
அழனம் - பிணம், (அழம் எனவும்), நெருப்பு, வெப்பம்.
அழி - வைக்கோல், இரக்கம்.
அழிஞ்சில் - ஓர்மரம். (அணிஞ்சில்லெனவழங்குவர்).
அழிதகன் - இழிஞன்.
* அழிதலை - தலைமாலை.
அழிதல் - கெடுதல், சிதைதல், நிலைகெடல், இறத்தல்.
அழிதூஉ - அலி.
அழிவு - கேடு, சிதைவு, நிலைகேடு, சாவு, கழிமுகம்.
அழுகுதல் - பதனழிதல்.
அழுக்காறு - பொறாமை.
அழுக்கு - அசுத்தம், மலினம்.
அழுங்கு - ஓர்விலங்கு, வருத்தம், பாலையாழ்த்திறங்களுளொன்று, கேடு.

அழுங்குதல்- இரங்கல், அழித்தல், ஒலித்தல்,சோம்புதல்,தவிர்தல், வருந்துதல், யாழ்கரம்போசை, ஒளிமழுங்கல்.

அழுதல் - வாய்விட்டுக்கத்துதல்.

அழுத்தம் - மேடுபள்ளமின்றி ஒப்பமாயிருத்தல், திருத்தம்.

அழுந்து - ஆழம்.

அழுந்துதல் - அமிழ்ந்துதல், பதிதல்.

அழுவம்-கடல், ஆழம், குழி, பரப்பு, தேசம், போர்க்களம்.

அழைத்தல் - விளித்தல்.

அளகம் - நீர், கூந்தல், மயிர்க்குழற்சி.

அளகு-கார்த்திகைநட்சத்திரம், அன்னம் கோழி கூகை மயில் என்னும் பறவைகளின் பெண்.

அளகை - குபேரனகரம்.

அளக்கர்-கடல்,உப்பளம்,சேறு,நீள்வழி, பூமி, கார்த்திகைநட்சத்திரம்.

அளத்தல்-முகத்தல் நீட்டல் முதலியஅளவைகளாற் கணக்கிடுதல்.

அளத்தி - நெய்தனிலப்பெண்.

அளபு-அளபெடை,மாத்திரைக்கணக்கு.

அளபெடை-எழுத்துக்கள் தத்தம்மாத்திரையினீண்டிசைத்தல்.

அளம் - உப்பளம், நெய்தனிலம்.

அளவடி - நாற்சீரடி.

அளவர் - உப்பமைப்போர்

அளவளாவுதல் - நெஞ்சொடுகலத்தல்.

அளவு, அளவை } காட்சிமுதலியபிரமாணம், தாளமாத்திரைகளுளொன்று, காலம், (அன்னதோரளவையில்). தன்மை.

அளவை ௪-எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் என்பன.

அளவை ௮-காட்சி அனுமானம் உபமானம் ஆகமம் அருத்தாபத்தி சம்பவம் அபாவம் ஐதிகம் என்பன.

அளறு - சேறு, நரகம்.

அளாவுதல்-கலத்தல்,பொருந்துதல்,துழாவல்.

அளி-அருள், அன்பு, கொடை, வண்டு, கள், குளிர்.

அளிகம் - நெற்றி.

அளித்தல்-படைத்தல், காத்தல், கொடுத்தல், *செறித்தல்.

அளிந்தம் - கோபுரவாயிற்றிண்ணை.

அளியன் - எளியவன்.

அளுக்கல் - அச்சக்குறிப்பு, குலைதல்.

அளை-எலிமுதலியவற்றின் வளை, புற்று, தயிர், மோர், மலைக்குகை, ஏழாம்வேற்றுமையுருபு.

அளைதல் - கலத்தல்.

அள் - கூர்மை, நெருக்கம், பற்றிரும்பு, காது, வலிமை *கதவுத்திறப்பு.

அள்வழுப்பு - காதுக்குறும்பி.

அள்ளல் - சேறு, நரகம், அள்ளியெடுத்தல், செறிதல், *எற்றுதல்.

அள்ளு - பற்றிரும்பு.

அள்ளூறல் - வாயூறுதல்.

அள்ளை - பேய்.

அறச்செல்வி- பார்வதி.

அறத்தின்சேய் - தருமபுத்திரர்.

அறத்தின்மூர்த்தி - தருமதேவதை.

அறத்தைக்காப்போன் - ஐயனார்.

அறத்தொடுநிற்றல் - பொருணூலில் களவொழுக்கம் வெளிப்படுதற்குகேற்றவாறு தலைவிமுதலாயினோர் வசனங்கூறிநிற்றல்.

அறநிலைப்பொருள்-நெறிதவறாது தத்தம்நிலையினால்முயன்றுபெறும்பொருள்.

அறநிலையறம் - நான்குவருணத்தாரும் வருணாச்சிரம தர்மங்களிற்பிறழாவண்ணம்அவர்கொடுக்கும்பொருள்கொண்டு அரசன் பாதுகாத்தல்.

அறநிலையின்பம் - ஒத்தகுலமும் ஒழுக்கமும் குணமும்பருவமுமுடையகன்னிகையை அக்கினிமுன்விவாகஞ்செய்தநுபவிக்குமின்பம்.

அறப்புறம் - தருமசாலை, ஓதும்பள்ளி, [தருமநிலம்.

அறம் - தருமம்.

அறம் ௨- இல்லறம் துறவறம்.

அறம் ௩௨-ஆதுலர்க்குச்சாலை ஓதுவார்க்குணவு அறுசமயத்தோர்க்குண்டி பசுவிற்குவாயுறை சிறைச்சோறு பிச்சையிடுதல் தின்பண்டம்நல்கல் அறவைச்சோறு மகப்பெறுவித்தல்மகவுவளர்த்தல் மகப்பால்வார்த்தல் அறவைப்பிணஞ்சுடுதல்அறவைத்தூரியம் சுண்ணம் நோய்மருந்து வண்ணார் நாவிதர் கண்ணாடி காதோலை கண்மருந்து தலைக்கெண்ணெய் பெண்போகம் பிறர்துயர்காத்தல் தண்ணீர்ப்பந்தல் மடம் தடாகம் பூஞ்சோலை ஆவுரிஞ்சுதறிநாட்டல் விலங்குகளுக்குணவு

கொடுத்தல் ஏறுவிடுத்தல்விலைகொடுத் துயிர்விடுத்தல் கன்னிகாதானம் என் பன.
அறல்-அரித்தொழுகுதல்,கருமணல், நீர், நீர்த்திரை, சிறுதூறு.
அறவர் - பெரியோர், முனிவர்.
அறவாழிவேந்தன் - அருகன்.
அறவைச்சோறு-அநாதருக்குக்கொடுக்கு முணவு.
அறவோர் - அறவர்.
அறன்கடை - பாவம்.
அறிகுறி - அடையாளம்.
அறிகை - அறிதல்.
அறிக்கை - அறிவிப்பு.
அறிஞன் - அறிவுடையோன், புலவன், முனிவன், புதன்.
அறிதல் - அறிந்துகொள்ளுதல்.
அறிதுயில்-யோகநித்திரை. (திருமாலின் துயில்). [தல்.
அறிமடம்-அறிந்துமறியாதவர்போலிருத்
அறிவரன் - அருகன்.
அறிவழி - கள், பிசாசம்.
அறிவன்- உத்தரட்டாதி நட்சத்திரம், செவ்வாய், புதன், அறிஞன்.
அறிவு-உணர்வு, கல்விகேள்விகளாலான உணர்ச்சி.
அறிவுறுத்தல் - அறிவித்தல்.
அறுகரிசி - அறுகுடன்கலந்த அரிசி.
அறுகால்(அறுபதம்)-வண்டு.
அறுகு - ஆண்புலி, அறுகம்புல், சிங்கம், யாளி.
அறுதல்-வெட்டுப்படுதல், தொடர்ச்சிநீங் குதல்.
அறுதி-முடிவு, விற்பனவு, நிச்சயம்,வரை யறை, விக்கிரயபத்திரம்.
அறுதொழிலாளர் - பிராமணர்.
அறுத்தல் - வெறுத்தல், அரிதல்.
அறுபதம் - வண்டு, கையாந்தகரை.
அறுவாய்-கார்த்திகைநட்சத்திரம், முடி வு. [ம்.
அறுவை-சித்திரைநட்சத்திரம், வஸ்திர
அறை-மோதுகை, சொல், சிற்றில், மலை முழை, விடை, பாத்தி, ஒலி, மாளி கை, வஞ்சகம், பெட்டிகளினறை, கற்பாறை, திரை, முத்துமுதலியவற் றுற்செய்த தூக்கம். குழி.
அறைகூவல்-போர்க்கழைத்தல், வலிந்த ழைத்தல்.
அறைக்கீரை - ஓர்வகைக்கீரை.
அறைதல் - மோதுதல், சொல்லுதல், ஒலித்தல், பறையறைதல், ஆணிமுத லியவற்றைக் கடாவுதல்.
அறைபோதல் - செல்வமுதலியவைகளை யிழத்தல், படையறல். [தல்.
அற்குதல்-அடைதல், தங்குதல், நிலைபெறு
அற்பம் - சுருக்கம், சிறுமை.
அற்புதம் - அதிசயம், பத்துக்கோடி.
அற்புதர் - கம்மாளர்.
அற்றம்.சமயம், சோர்வு, மறைவு, அழிவு, குறைவு, துன்பம்.
அனகன்-அருகன், கடவுள், மேலோன்.
அனங்கம் - இருவாட்சி, மல்லிகை.
அனங்கன் - மன்மதன்.
அனசனம் - உபவாசம்.
அனசூயை - அத்திரிமுனிவன்மனைவி.
அனத்தியாயம்-வேதமோதுதற்கு விலக் கியநாட்கள்.
அனந்தசயனன் - விட்டுணு.
அனந்தஞானி - அருகன்.
அனந்தம்-ஆகாயம், பொன், அளவற்றது.
அனந்தரம் - பின், *மயிற்சிகை.
அனந்தல்(அனந்தர்)-நித்திரை, மயக்கம். கட்குடித்தலால் வருங்களிப்பு.
அனந்தன் - அட்டநாகங்களுளொன்று, ஆதிசேடன், திருமால், பதஞ்சலி, சிவன், பலபத்திரன், பிரமா, அருகன்.
அனந்தை - பூமி, பார்வதி.
அனபாயன் - ஓர்சோழன்.
அனபிகிதகருத்தா-வினைமுதலைமூன்றும் வேற்றுமையாக அல்லது வடமொ ழிச் சட்டியின் பொருளதாகிய நான் கனுருபாக வைத்துத்தொடுக்கப்பெற் றவாக்கியம். (மகன்றந்தையாலடிக்கப் பட்டான், அவர்க்குச் செய்யத்தகுமக் காரியம் என்பனபோல).
அனபிகிதகருமம் - செயப்படுபொருளை வேறுவேற்றுமையாகவைத்துத் தொ டுக்கப்படும்வாக்கியம். (ஆலத்தினுல மிர்தாக்கிய கோன், அவட்குக்கொள் ளுமிவ்வணிகலம் என்பனபோல).
அனர்த்தம் - தீமை.
அனலம் - அக்கினி.
அனலி - சூரியன், நெருப்பு.
அனலேறு - இடி.

அனவத்தை-எல்லையின்றிமுடிதல்.(இது தருக்கநூலின்படி ஓர்குற்றமாம்).
அனவரதம் - எப்போதும்.
அனன்னியம் - ஒற்றுமை.
அனாகதம் - ஆறுதாரங்களுளொன்று.
அனாகரம் - விருப்பின்மை.
அனாதி - சிவன், தொடக்கமற்றது.
அனாமயன் - அருகன், கடவுள்.
அனாரியர் - மிலேச்சர்.
அனாவிருட்டி - மழையின்மை.
அனிகம் - சேனை, *சிவிகை.
அனிச்சம் - ஓர்மரம்.
அனிட்டம் - இடையூறு, தீமை.
அனிர்தம் - பொய்.
அனிலம் - காற்று.
அனிலன் - வாயுதேவன், அட்டவசுக்களி லொருவன்.
அனீகினி - அக்குரோணியின்பத்திலொரு பங்காகிய சேனை.
அனு (ஹனு) - கதுப்பு.
அனுங்குதல் - வருந்துதல், கெடுதல், வாடுதல்.
அனுப்புதல் - ஏவுதல்.
அனுமான் - அஞ்சனையின்புத்திரன்,(இராமசுவாமியின் படைத்துணைவன்).
அனுவழி - புதன்.
அனூரு - சூரியனுடையதேர்ச்சாரதி.
அனேகம் - பல.
அனைத்தும் - எல்லாம்.
அனைய (அ என்னுஞ் சுட்டடியாகப் பிறந்த இடைச்சொல்) - போன்ற.
அன்பன் - நாயகன், அடியான், அன்புள்ளோன்.
அன்பு - தயை.
அன்மை - அல்லாமை, தீமை.
அன்மொழித்தொகை - சொற்களின்சேர்க்கையாற்றலால் இடையினன்றிசுற்றிலுஞ்சிலமொழிகள் தொக்குநிற்பது.
அன்றி - அல்லாமல்.
அன்றில் - ஓர்பறவை, மூலநட்சத்திரம்.
அன்று - அசைநிலை, அந்நாளில், எதிர்மறைவினைமுற்று.
அன்ன (அ என்னுஞ் சுட்டடியாகப் பிறந்த இடைச்சொல்) - போன்ற.
அன்னசத்தி - நெய்.
அன்னமயகோசம் - தூலதேகம். (பிதா மாதாக்களுண்ட அன்னத்தாற் சுக்கிலசுரோணிதங்களும் அவற்றின்கலப்பாற் குழந்தைகளுடைய உடலும் உண்டாதலால்)
அன்னம் - ஓர்பறவை, சோறு.
அன்னவூர்தி - பிரமா.
அன்னியதா - வேறொருவிதமாய்.
அன்னியம் - வேறு.
அன்னியோன்னியம் - ஒன்றுக்கொன்று.
அன்னை - தாய், முன்பிறந்தாள், தோழி.
அன்னோ - அதிசயத்துடன்கூடியஇரக்கக் குறிப்பு.
அக்ஷய - ஓர்வருடம்.
அஸ்மி - ஆகிறேன்.

## ஆ

ஆ - பசு, எருமை பெற்றம் மரை இவற்றின்பெண், ஆச்சாமரம் இடைச்சொல்லாயின்: இசைக்குறிப்பு, அதிசயத்துடன்கூடியஇரக்கக்குறிப்பு,வினா, வடமொழியுபசர்க்கமாயின:வரையும். (ஆகன்னம்என்பதிற்போல).
ஆகண்டலன் - இந்திரன்.
ஆகதம் - தாக்கப்பட்டது, வந்தது.
ஆகந்துகம் - இடையிட்டுவருவது.
ஆகமம் - இறைவனூல். (வேதம் சைவாகமம் தருமநூல்முதலியன). தோன்றல் விகாரம், எண்வகையளவைகளு ளொன்று. (நூற்பிரமாணத்தாலறிவது).
ஆகமம் உஅ - காமிகம் யோகசம் சிந்தியம் காரணம் அசிதம் தீப்தம் சூக்குமம் சகஸ்ரம் அம்சுமான் சுப்பிரபேதம் விசயம் நிச்சுவாசம் சுவாயம்புவம் அனலம் வீரம் ரௌரவம் மகுடம் விமலம் சந்திரஞானம் விம்பம் புரோற்கீதம் லளிதம் சித்தம் சந்தானம் சர்வோத்தம் பாரமேச்சுரம் கிரணம் வாதுளம் என்னுஞ்சைவாகமங்கள்.
ஆகமனம் - வருதல்.
ஆகம் - உடல், மார்பு.
ஆகரணம் - பிறவிடத்திலிருந்துகொண்டு வந்துசேர்த்தல்.
ஆகாரம் - உறைவிடம்.
ஆகருடணம் - அழைத்தல், இழுத்தல்,தூரத்திலிருக்கும் பொருளைத் தன்முன் வாச் செய்தல். (இது வசியமுதலிய அறுவகைக்கருமங்களுளொன்று).
ஆகவம் - போர்.

ஆகவனீயம் - வேதாக்கினி மூன்றனு ளொன்று.
ஆகா - வியப்புக்குறிப்பு.
ஆகாமியம்-வரும் பிறவிக்குரியதாக இப் பிறவியிற்செய்யும் நல்வினை தீவினை [கள்.
ஆகாயம்-வானம், வெளி.
ஆகாயவாணி - அசரீரி.
ஆகாரம்-உணவு, நெய், உள்ளக்கருத்தை வெளிப்படுத்தும்முகக்குறி, உடம்பு.
ஆகிருதி - உருவம், சாதி.
ஆகு - எலி, பெருச்சாளி.
ஆகுதி(ஆவுதி)-அக்கினியிற்செய்யப்படும் ஓமம்.
ஆகுபெயர் - இயைபுபற்றிப் பிறிதொரு பொருளையுணர்த்தும்பெயர்.
ஆகுலம்-வருத்தம், ஒலி, ஒன்றல்லாப்பே ரொலி.
ஆகுவாகனன் - விநாயகக்கடவுள்.
ஆகுளி - சிறுபறை.
ஆகூதி - அழைப்பு.
ஆக்கம்-செல்வம், இலக்குமி, பெருக்கம், பொன், ஆகுந்தன்மை, இலாபம்.
ஆக்கல் - அமைத்தல், படைத்தல்.
ஆக்கவினை. ஆக்கச்சொல் விரிந்தாயினுந் தொக்காயினும்நிற்கும்வினை. (பெரிய னாயினான்; பெரியன்).
ஆக்கியோன் - நூல்செய்தோன்.
ஆக்கிராணம் - மூக்கு, மணத்தல்.
ஆக்கிராந்தம் (கிராந்தம்)-கிரகங்கள் பிர வேசித்துநிற்கும்நட்சத்திரம்.
ஆக்கிரீடம்-அரசரின்விளையாட்டிடமாக அமைக்கப்பட்ட பூந்தோட்டம்.
ஆக்கினேயம்-தென்கிழக்குத்திசை, பதி னெண்புராணங்களுளொன்று.
ஆக்கினை - கட்டளை, ஆறுதாரங்களு ளொன்று.
ஆக்கேபம்(ஆக்ஷேபம்)-மறுத்துக்கூறல்.
ஆக்கை (யாக்கையென்பதன் விகாரம்)- உடல்.
ஆங்க-அசைநிலை. (ஆங்கக்குயிலுமயிலுங் காட்டி).
ஆங்காரம் - அகங்காரம்.
ஆங்கிரச - ஓர்வருடம்.
ஆங்கு(இடைச்சொல்) அசைநிலை, அவ் விடத்து, போல, (ஞாயிறுசுடர்கண் டாங்கு), அப்படி, அப்பொழுது. (ஆங்க தனுக்காகாரமானுற்போல்; வாக் கச).
ஆங்ஙனம் - அப்படி, அப்பொழுது, அவ் விடத்து.
ஆசங்கம் - சேர்க்கை.
ஆசங்கை - ஐயம். [நிலை.
ஆசத்தி (ஆசக்தி) - விருப்பம், அவாய்
ஆசந்தி-பாடை. (பிரேதத்தைவைத்துக் கொண்டுசெல்லற்குரியது).
ஆசமனம்-கிரியைகளில் விதிப்படிநீரை உட்கொள்ளுதல்.
ஆசம் - சிரிப்பு.
ஆசயம்-தங்குமிடம். (கர்ப்பாசயம்; சலா சயம்).
ஆசரித்தல் - அநுட்டித்தல்.
ஆசவம் - கள்.
ஆசனம் - இருத்தற்குரிய பலகை மான் றோல் புலித்தோல் முதலியன, யோ காங்கமான இருக்கைகள், குதம்.
ஆசனம் கூ-பத்திரம் கோமுகம் பதுமம் கேசரி சுவத்திகம் சுகம் என்பன.
ஆசனம்கூ-சுவத்திகம் கோமுகம் பதுமம் வீரம் கேசரி பத்திரம் முத்தம் மயூரம் சுகம் என்பன.
ஆசாரம்-ஒழுக்கம், சுத்தம், வஸ்திரம், வழக்கம், பெருமழை, அரசிருக்குமண் டபம்.
[ஆசாரி-சிற்பநூலிலுந்தொழிலிலும்வல் லானுக்குரியபட்டப்பெயர்].
ஆசாரியன் - வேதமோதுவிப்போன், குரு, உபாத்தியாயன்.
ஆசாள் - குருவின்மனைவி, தலைவி.
ஆசான்-உபாத்தியாயன், குரு, தலைவன், வியாழன், சுக்கிரன், அருகன், முரு கவேள், பாலையாழ்த் திறங்களுளொ ன்று.
ஆசி(ஆசிடை)-ஆசீர்வசனம். (வாழ்த்து)
ஆசித்தல் - ஆசைப்படல்.
ஆசியம் - முகம், வாய், சிரிப்பு.
ஆசிரயம் - புகலிடம், இருப்பிடம்.
ஆசிரியத்தளை-மா நாள் என்னும்வாய்பா டுகளின்பின் நேரசையும், விள மலர் என்னும் வாய்பாடுகளின்பின் நிரைய சையும்வருவது.
ஆசிரியப்பா - அகவற்பா; இது நேரிசை யாசிரியப்பா இணைக்குறளாசிரியப்பா நிலைமண்டில வாசிரியப்பா அடிமறி மண்டிலவாசிரியப்பா எனப்பலவகை ப்படும்.

ஆசிரியவசனம்- மேற்கோள்.
ஆசிரியவிருத்தம்- அகவற்பாவினங்களு ளொன்று. (அளவொத்தகழிநெடிலடி நான்குடைய விருத்தம்).
ஆசிரியன்-உபாத்தியாயன், குரு, புலவன்
ஆசினி-ஈரப்பலா, ஆகாயம், மரவுரி, மர வயிரம்.
ஆசீர்வசனம் } வாழ்த்து.
ஆசீர்வாதம் }
ஆசீவகர்- சமணமுனிவர்.
ஆசு-சிறுமை, குற்றம், நால்வகைக்கவிக ளுளொன்று, (பொருள் அடி பா முத லியவற்றுளொன்றைக் குறித்து ஒரு வன்கேட்கக் கேட்டவுடன் கேட்ட வாறே பாடுங்கவி, கவசம், விரைவு, யாப்பிலக்கணத்தில் பொது விதிக்க மையாது செய்யுளில் வரும் அசை அல்லது எழுத்து, விருப்பம்.
ஆசுகம்- அம்பு, காற்று.
ஆசுகவி-நால்வகைக் கவிகளுளொன்று, ஆசுகவிபாடவல்ல புலவன்.
ஆசுகி- பறவை.
ஆசுசுக்கணி-அக்கினி.
ஆசுரம்-எண்வகைமணங்களுளொன்று (சுற்றத்தார்க்கு வேண்டுவன கொடுத் துக் கன்னிகையை வேட்டல்.
ஆசுரவைத்தியம்- சத்திரவைத்தியம்.
ஆசுவலாயனம்- வடமொழியிலுள்ள ஓர் சூத்திரநூல். இருக்கு வேதத்தைச் சார்ந்தது.)
ஆசுவிஜம்—ஐப்பசிமாதம்.
ஆசை- திக்கு, விருப்பம், பொன்.
ஆசை ரு - மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்பன.
ஆசௌசம்- சனன மரண முதலியவற் றால் வருமசுத்தம்.
ஆச்சரியம்-அதிசயம்.
ஆச்சா- ஓர் மரம், பெருமரம்.
ஆச்சாதனம் - வஸ்திரம், உறை.
ஆச்சியம்- நெய்.
ஆச்சிரமம்-நால்வகையறம், பன்னசாலை (முனிவர்வாசம்.)
ஆச்சிரமம் ச. பிரமசரியம் கிருகத்தம் வானப்பிரத்தம் சந்நியாசம் என்பன.
ஆச்சிரயம் - வேறொருவனை யடுத்துச் சீவித்தல்.
ஆஞ்சனேயன்-அனுமான்.
ஆஞ்சி- வலச்செடி, சோம்பல், அலைவு.

ஆஞ்ஞை- ஆக்கினை. (கட்டளை,)
ஆடகம்- பொன், நால்வகைப் பொன்க ளுளொன்று, நான்கு படிகொண்ட அளவு, துவரை, *உலோகக்கட்டி.
ஆடகேசன் - உருத்திர கணத் தலைவரு ளொருவர்.
ஆடம்பரம்- சந்தோஷம், தொடக்கம், முரசுமுதலியவற்றினொலி, மேகமுழக் கம், டம்பம்.
ஆடல்- அசைதல், அளைதல், கூத்தாடல் நீராடல், பொருதல், விளையாடுதல், சம்பாஷித்தல், செய்தல், பெண்ணொடு கூடுதல், வெற்றிபெறல், அநுபவித் தல்.
ஆடல் கக- அல்லியம் கொட்டி குடை குடம் பாண்டரங்கம் மல் துடி கட யம் பேடு மரக்கால் பாவை என்பன.
ஆடவர்- ஆண்மக்கள், இளைஞர்.
ஆடவர்குணம் ச- அறிவு நிறை ஓர்ப்பு, கடைப்பிடி என்பன.
ஆடவள்- பெண்மகள்.
ஆடாதோடை-ஓர்மரம்
ஆடி- கண்ணாடி, ஆடிமாதம், உத்தராட நட்சத்திரம்.
ஆடு- ஓர் விலங்கு, மேடராசி, வெற்றி.
[ஆடுகால்- துலாநிற்குமரம்.]
ஆடூஉ-ஆடவன்.
ஆடூஉவறிசொல்- ஆண்பாலென வறிய நிற்குஞ்சொல்.
ஆடை- வஸ்திரம், சித்திரைநாள், காய்ச் சிய பால்முதலியவற்றின் மேற்போர் வை.
ஆட்சி- உடைமை, உரிமை, அதிகாரம்,
ஆட்டல்- அசைத்தல்.
ஆட்டி-தலைவி, மனைவி, பெண்.
[ஆட்டுக்கல்- ஊறியஅரிசி முதலியவற் றை ஆட்டியரைக்குங் கல்.]
ஆட்படுதல்- அடியவனாதல்.
ஆணம்- சிறுமை, (கந்.வீரவாகுகந். ௩௯ அன்பு, (நாலடி. பொருமச), குழம்பு
ஆணவம்- சைவசமயத்திற் கூறிய மும் மலங்களுளொன்று. அகங்காரம்.
ஆணி- உரையாணி, பொன்னின் மாற் றறிதற்குரியது, எழுத்தாணி, ஒரு மரத்துடன் வேறொரு மரமுதலிய வற்றைச் சேர்த்துத்தைக்கும் ஆணி, உலையாணிக்கோல்.

ஆணிப்பொன் - மாற்றுயர்ந்தபொன்
ஆணு - அன்பு, இனிமை, நன்மை.
ஆணை-(ஆஞ்ஞையென்னும்வடமொழி யின்றிரிபு)- கட்டளை, அடையாளம், சபதம்,மெய், வெற்றி,ஏவல்,தடுத்தல்.
ஆண்-ஆண்மகன், தலைவன், ஆண்பால், ஓர்மரம், (தணிகை வீரா சுஅ), விலங்கிலாண்.
ஆண்கை கூ - முட்டி சிகரம் பதுமம் சந்தஞ்சம் சிலந்தி சூசி சதுரம் பதாகம் திரிபதாகம் என்பன. [தோன்.
ஆண்டகை- வீரன்,ஆண்மக்களுட்சிறந்
ஆண்டலைக்கொடியோன்- முருகவேள்.
ஆண்டலைப்புள் - கோழி.
ஆண்டவன் - கடவுள், யசமானன்.
ஆண்டளப்போன் - வியாழன்.
ஆண்டி -யாசகி. [நிலை
ஆண்டு - வருடம், அவ்விடத்து, அசை
ஆண்மரம் - உள்வைரமுள்ளமரம், ஆணென்னும்மரம்.
ஆண்மை - ஆண்டன்மை, வீரம், வலிமை, உண்மை.
ஆதங்கம்- நோய், உபத்திரவம், பயம், ஆபத்து, பறையொலி.
ஆதஞ்சனம்- உபத்திரவம், பால்முதலியவற்றிற்கிடும் உறை.
ஆதண்டை- ஓர் செடி.
ஆததாயிகள் - ஆயுத பாணிகளாய்ச் சென்று பகைவருரைக் கொள்ளையிடல் தீமூட்டி யெரித்தல் முதலிய கொடுந்தொழிலைச் செய்வோர்.
ஆதபத்திரம் - குடை.
ஆதபம் (ஆதவம்) - வெய்யில். ஒளி.
ஆதபன் (ஆதவன்)-சூரியன்.
ஆதம்- விருப்பம், அன்பு.
ஆதரம்- ஆசை, அன்பு.
ஆதரிசம்- கண்ணாடி.
ஆதல்-அமைதல்,நிகழ்தல். [முதலியன.
ஆதனம்- ஆசனம், சொந்தமாயுள்ளநில
ஆதன்- அருகன், அறிவிலான், குருடன். அநாதன், உயிர்.
ஆதாயம்-இலாபம்.
ஆதாரம்- பற்றுக்கோடு. இடம், உடல், உடலிற்பிரதானமாயுள்ளஆறுதாரங்கள்,(அவை மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்கினை என்பன. இவற்றிற் கிடம் முறையே குதம் குய்யம் நாபி இதயம் கண்டம் புருவநடு என்பன).
ஆதாளி - அகத்தன்பின்றிப் புறத்தன்புடையவனாய் நடித்துப் பிறரை வமாற்றுவோன்.
ஆதானம்-அக்கினியை மந்திரமூலமாய்த் தாபித்தல், கருப்பந் தரிப்பித்தல், வாங்குதல்.
ஆதி- முதல், முதல்வன், எப்பொருட்குமிறைவன்,அருகன், சிவன்,திருமால், கடவுள்,ஆதிதாளம்,பழமை,பிரதானம்,மாமுதலியவற்றின்மூலம்,நேரோட்டம்,(குதிரைக்கதிகளுளொன்று),
ஆதிக்கம்-மேன்மை, அதிகமாந்தன்மை
ஆதிசேடன்- தெய்வநாகங்களின் தலைவன். (இவன்பூகோளத்தினுட்பிலமாகிய பாதலத்திலிருந்தலாற் பூமியைத் தாங்குபவனென்பர்பௌராணிகர்).
ஆதிசைவர் - பிராமணருக்குள்ளே தொன்றுதொட்டுச் சைவ மார்க்சத்தையநுசரிப்போர்.
ஆதிதேயர் - தேவர், *விருந்தாளிகள்.
ஆதிதேவன்- புத்தன், கடவுள்.
ஆதிதைவிகம்- மூவகைத் தாபங்களுளொன்று, (தெய்வத்தால் வருந்துன்பம்; பிறப்பு இறப்பு நரை திரை நோய் முதலியன).
ஆதித்தர்(ஆதித்தியர்) - தேவர்.
ஆதித்தன்(ஆதித்தியன்)- சூரியன்.
ஆதிநூல்-வேதம்.
ஆதிபத்தியம்-அதிகாரம்.
ஆதிபன்- அரசன், தலைவன், எப்பொருட்குமிறைவன்.
ஆதிபௌதிகம்- மூவகைத் தாபங்களுளொன்று. (ஐம்பூதங்களால் விளையுந் துன்பம்; பனி இடி பெருங் காற்று முதலியன.)
ஆதிமலை-இமயம்.
ஆதிரம்-நெய்.
ஆதிரை (ஆர்த்திரை) - திருவாதிரை நட்சத்திரம்.
ஆதிவராகன்- திருமால்.
ஆதிவருணர் - பிராமணர்.
ஆதீண்டுகுற்றி- பசுக்கள் தினவைமாற்றுதற்கு நாட்டப்பட்டிருக்கும் கட்டை.
ஆதீனம்- சுதந்தரம்.

ஆதுரம் - பேரவா, நோய்.
ஆதலன் - நரித்திரன்.
ஆதுனிகர் - நற்காலத்தார். (முன்னோரல்லாதவர்கள்; பிரயோ. உரைச்).
ஆதேசம் - கட்டளை, திரிபு.
ஆதேயம் - வேறொன்றை ஆதாரமாகக் கொண்டபொருள்.
ஆதோரணர் - யானைப்பாகர்.
ஆத்தல்-(யாத்தலின்விகாரம்) - ஒரு கருமத்திற்கு ஆதியந்தமாக வேண்டிய ஒழுங்குகளையுண்டாக்கல், கட்டுதல்.
ஆத்தன்-கடவுள், அருகன், பெரியோன், உள்ளதுகூறுவோன்.
ஆத்தாள் - தாய்.
ஆத்தானம் - சபை, இளைப்பாறு மண்டபம், கோபுரவாயில்.
ஆத்தி-மரவகையுளொன்று. (இது திருவாத்தி காட்டாத்தி என இருவகைப்படும். [பாடு.
ஆத்திகம் - கடவுளுண்டென்னுங்கோட்
ஆத்திசூடி - ஒளவையாராற்செய்யப்பட்ட ஓர்நீதிநூல்.
ஆத்தியான்மிகம்-மூவகைத்தாபங்களுள் ஆன்மாக்களால் வரும்துன்பம். (தன்னாலும் பிறமனிதராலும் விலங்குமுதலியவற்றாலும்வருவது).
ஆத்திரம் - கோபவிரைவு.
ஆத்துமசன் - புத்திரன்.
ஆநகதுந்துபி - வசுதேவன்.
ஆநயனம் - கொண்டுவருதல்.
ஆநாயம் - வலை, காற்றுலாவத்தக்க கண்ணறை.
ஆந்திரம்- தெலுங்கதேசம், தெலுங்கபாஷை.
ஆந்தை - ஓர் பறவை.
ஆந்தோளி - சிவிகை.
ஆந்நிகம்-நித்தியகருமம்.
ஆபகை - நதி.
ஆபத்தம்பம் - அபத்தம்பரிஷியால்வடமொழியிற் செய்யப்பட்ட சூத்திரம். (யசுர்வேதத்தைச்சார்ந்தது).
ஆபத்தி - அடைதல், தோன்றுதல்.
ஆபத்து - இடுக்கண்.
ஆபரணம் - அணிகலன்.
ஆபாசம் - ஒளி, போலிநியாயம், அலங்காரமான வடிவம், பொய்த்தோற்றம்.
ஆபீரம் - இடையர்சேரி. (ஆவிரமென்பர் பிங்கலர்; ஆபீனமென்பர் மண்டலவர்)
அபீனம் - பசுவின்மடி.
ஆபோசனம் - போசனத்தின் முன்னும் பின்னும் மந்திரத்தோடு நீருட்கொள்ளுதல்.
ஆப்திகம் - வருடாந்தத்தில் இறந்தபிதர் முதலியோரைக்குறித்துச் செய்யுஞ்சிராத்தம்.
ஆப்பி - கோமயம்.
ஆப்பு - மரம்பிளக்கும் கருவி.
ஆமணக்கு - ஓர்மரம்
ஆமந்திரணம் - அழைத்தல்.
ஆமந்திரிகை-டக்கையென்னும் வாத்தியம். (சிலப். அரங். கசக).
ஆமம் - சமைக்கப்படாத (அரிசி காய் முதலிய) போசனப்பொருள்கள்.
ஆமயம் - கோமயம், நோய்.
ஆமலகம் - நெல்லிமரம்.
ஆமா - காட்டுப்பசு.
ஆமிடம் (ஆமிஷம்) - மாமிசவுணவு.
ஆமிநாயம் - வேதம்.
அமிரம் (ஆம்பிரம்) - மாமரம், புளிமா.
ஆமிலம் - புளியமரம், புளிப்பு.
ஆமை - ஊர்வனவற்றுளொன்று.
ஆமோதம் - உவகை, மணம்.
ஆம் - நீர், உடன்பாட்டுக்குறிப்பு, அன்றெனற்குறிப்பு, (அவன் வீரனும்; இங்கே வீரனன்றென்பதுகுறிப்பு), அசைநிலை, உவமைச்சொல். (அல்லாங்குழலால்).
ஆம்பல் - இசைக்குழல், யானை, ஊதுகொம்பு, மூங்கில், ஓர்பண், கள், குமுதம் (வெண்குமுதம் செங்குமுதம் என இருவகையின), துன்பம், *அடைதல்.
ஆம்பி - நீரிறைக்கும்கருவியுளொன்று, காளான், ஒலி.
ஆயசம் - இரும்பாற்செய்யப்பட்டது.
ஆயதம் - நீளம்.
ஆயதனம் -கோயில், பிரதானஸ்தானம்.
ஆயத்தம்- முயற்சி.
ஆயம் - திரள், பெண்கள்கூட்டம், பசுத்திரள், ஆதாயம், சேனைமுதலியவற்றின்கூட்டம், அரசினர்க்குக் குடிகள் கொடுக்குஞ்சுங்கம், கவற்றிற்றாயம்.
ஆயர் - இடையர். (பெண்பாலில் ஆய்ச்சியர்).

ஆயனம்- வருடம்.
ஆயாசம்- இளைப்பு.
ஆயாமம்- நீளம், பிராணுயாமம்.
ஆயாள்- வளர்க்குந்தாய்.
ஆயி- தாய்.
ஆயிரங்கண்ணன்-இந்திரன்.
ஆயிரங்கிரணன் - சூரியன். (இங்கே ஆயிரம் எண்ணை வரையறுக்காது பன்மைகுறித்துநின்றது)
ஆயிரநாமன் - திருமால்.
ஆயிரம்- பத்துநூறு.
ஆயிலியம்- ஓர் நட்சத்திரம்.
ஆயில்- ஓர் மரம், ஆயிலியநட்சத்திரம்.
ஆயுண்மான் (ஆயுஷ்மான்)-ஓர்யோகம்.
ஆயுதம்- படைக்கலம்.
ஆயுதவகை உ- அத்திரம் சத்திரம். (அத்திரம்- கைவிடுபடை, சத்திரம்- கைவிடாப்ப்படை.
ஆயுர்வேதம்-வைத்தியம்.
ஆயுள் (ஆயு ஆயுசு)- வாழ்நாள்.
ஆயோதனம் - யுத்தம்.
ஆய்- கடைவள்ளலெழுவரிலொருவன், தாய்.
ஆய்ச்சி- முல்லைநிலப்பெண்.
ஆய்தல்- ஆராய்தல், மரமுதலியவற்றிலிருந்து இலை காய் முதலியவற்றையாய்தல், நுண்மையாதல்.
ஆய்ந்தோர்- அறிவுடையோர், *பிராமணர்.
ஆய்ப்பு- வருத்தம்.
ஆய்வு- ஆராய்வு, அகலம், வருத்தம்.
ஆய்வை - சயனம்.
ஆரகம் - பிரிக்குமெண், பின்னத்தின் கீழெண்.
ஆரகூடம்- பித்தளை.
ஆரக்குவதம் - கொன்றைமரம்.
ஆரணங்கு - தெய்வப்பெண். [கை
ஆரணம்-வேதம், வேதத்தின் ஞானபா
ஆரணன் - பிரமா, (சிலவிடங்களிற் சிவன் முதலியோர்க்கும்)
ஆரணி- காளி, பார்ப்பதி.
ஆரணியம் - காடு.
ஆரம் -முத்து, கழுத்தணிமாலை, பூமாலை, பதக்கம், மணிவடம், சந்தனம், பிரிக்குமெண்,பின்னத்தின்கீழெண், ஆத்திமரம், ஆபரணம், சக்கரமுதலியவற்றின் ஆர்.
ஆரம்பம்- தொடக்கம், முயற்சி.

ஆரல்- கார்த்திகைநட்சத்திரம், செவ்வாய், மீனினங்களுளொன்று, (ஆரால்மீன், நெருப்பு, மதில்.
ஆரவம் - ஒலி.
ஆரவாரம்-பேரொலி.
ஆராதனம் - பூசை.
ஆராத்திரிகம்- ஆலாத்தி.
ஆராமம்- சோலை,பூந்தோட்டம், *மலையோடுசேர்ந்த சோலை.
ஆராய்ச்சி- அறியாதபொருளை அறிய முயலுதல்.
ஆராய்ச்சிமணி- அரசர்வாயிலில் ஆபத்தை முறையிடுவோரடிப்பதற்காகக் கட்டியிருக்கும் மணி.
ஆராய்தல்-தேடல், விசாரணைசெய்தல்.
ஆரால்- ஆரல்மீன்.
ஆராவம்- ஒலி.
ஆரி- சோழன், அழகு, மேன்மை.
ஆரிடம் - இருடிகள்சொன்னநூல், (மிருதி, வேதம்; இருடிகளால்நினைக்கப்படுதலின் வேதமும் ஆரிடமெனவழங்குகின்றது), எண்வகைவிவாகங்களுளொன்று. (பசு எருது என்பவற்றுளிரண்டையேனும்ஒன்றையேனும் வாங்கிக் கொண்டு கன்னிகையைக் கொடுத்தல்).
ஆரிடர் - முனிவர்.
ஆரியம் - இமயமலைக்கும் விந்தமலைக்குமிடையிலுள்ளதேசம், அத்தேசத்தாருடைய பாஷை.
ஆரியர் - ஆரியதேசத்தார், அறிஞர்,நல்லொழுக்கமுடையவர், காரியதரிசிகள். (அமைச்சரின்கீழ் அரசருடையகருமங்களைச் செய்தல் செய்வித்தற்குரியார்; திருவா. மண்சுமந். கஉ), மிலேச்சர். [ழன்.
ஆரியன்-ஐயனுர், தலைவன், குரு, வியா
ஆரியை - காளி, துர்க்கை, பார்வதி.
ஆரின்மாலையன் - சோழன்.
ஆரீதம் - கரிக்குருவி.
ஆரீதன் - ஓர்முனிவர்.
ஆருகதம் - அருகசமயம், *நாவல்மரம்.
ஆருடம் - கேட்போனின்ற நிலைமுதலியவற்றுற் சொல்லும்சோதிடம்.
ஆரூர் - திருவாரூர்.
ஆரை - மதில், கொத்தளிப்பாய்,(ஓர்வகைப்புற்பாய்), ஓர்பூடு.

ஆரோகணம் - கற்படி, ஏணி, ஏறுதல், *வீட்டின் தாழ்வாரம்.
ஆரோக்கியம் - சுகம்.
ஆரோபணம்-ஒருபொருளில் வேறொரு பொருளாந்தன்மையை நினைத்தல்.
ஆர் - ஆத்திமரம், அச்சுருவாணி, (தேரினகத்திற் செறிகதிர்). கூர்மை, யாரென்னும் வினைக்குறிப்புவினைமுற்று, அசைநிலை. (பெரியனாகியதொகையுமாருளவே).
ஆர்கலி - கடல், வெள்ளம், பேரொலி.
ஆர்ச்சவம் - நேர்மை.
ஆர்தல் - அடங்குதல், புசித்தல், அநுபவித்தல், பொருந்துதல், ஒத்தல், தங்குதல், நிறைதல்.
ஆர்த்தல்-ஒலித்தல், கட்டல், நிறைத்தல்.
ஆர்த்தி - துன்பம்.
ஆர்ப்பு - ஒலி, ஒன்றல்லாட்பேரொலி, கட்டு, சிரிப்பு, சிறுதுகள், இசைநூலில் மாத்திரையாலோங்கவிசைத்தல், யுத்தம்.
ஆர்மை - கூர்மை, நுண்மை.
ஆர்வம்-அன்பு, ஆசை, ஒருநரகம், *ஒலி.
ஆர்வலர் - அன்புடையோர், நாயகர், பரிசில்பெறுவோர்.
ஆலகாலம் (ஆலாகலம் ஆலாலம்) - நஞ்சு.
ஆலங்கட்டி - மழைக்கட்டி.
ஆலங்காடு - ஓர்சிவதலம்.
ஆலசியம் - சோம்பல்.
ஆலமர்கடவுள் - சிவன்.
ஆலம் - நஞ்சு, நீர், மழு, *பூ, கலப்பை, ஆலமரம்.
ஆலம்பம் - வேறொன்றைப் பற்றுக்கோடாகக் கொண்டுநிற்றல்.
ஆலயம் - தேவர்கோயில், கற்குமிடம், வீடு, நகரம், யானைக்கூடம்.
ஆலல் - அகலுதல், (ஆன்றவறிவு), நிறைதல், சிறத்தல், ஒலித்தல், (சிலர் ஆன்றல் என்பதே இப்பொருள்களைத்தருமென்பர்), மிகுதல், வாவிச்செல்லல் (ஆலும் பரி), மயில்சத்தமிடல், கூத்தாடல்.
ஆலவட்டம் - அசைத்தலினாற் காற்றையுண்டாக்குவதோர்கருவி.
ஆலவன் - விட்டுணு, சந்திரன்.
ஆலவாய் - மதுரை, பாம்பு.
ஆலவாலம் - பாத்தி, வயல்.
ஆலாத்தி (ஆலத்தி) - ஆராத்திரிகம்.
ஆலாபம் - சம்பாஷணை.
ஆலாலசுந்தரர் - ஓர் சிவனடியார்.
ஆலாலம் - தருஞ்சிற்பறவை, விடம், வலவைற்பறவை. [ங்கயிறு.
ஆலானம்-யானைகட்டுந்தறி, யானைகட்டு
ஆலி-ஆலங்கட்டி, மழை, நீர்த்துளி, கள்.
ஆலிங்கனம் - அன்பு ஆசை முதலியவற்றால் ஒருவரையொருவர் தழுவுதல்.
ஆலித்தல் - ஒலித்தல்.
ஆலீடம் - வில்வீரர்நிற்கும் நிலைகளுளொன்று. (வலக்காலைமண்டலித்து இடக்காலை முன்வைத்து நிற்றல்).
ஆலை-கருப்பந்தடிகளிலிருந்து சாற்றைப் பிழிந்தெடுத்தற்குரியயந்திரம், கரும்பு, *யானைக்கூட்டம், கள்.
ஆலோசனை - தொழில் முதலியவற்றில் வரத்தக்க நன்மைதீமை முதலியவைகளை உய்த்துணர்தல்.
ஆலோடனம் - கலக்குதல்.
ஆலோலம்-தினைக்கொல்லை முதலியவற்றில்வரும் பறவைகளைத் துரத்துங் குறிப்புமொழி.
ஆலோன் - சந்திரன்.
ஆல்-ஆலமரம், நஞ்சு, ஆம், அசைநிலை, மூன்றும் வேற்றுமையுருபு.
ஆவகன் - ஏழுவாயுக்களுள் பூகோளத்தைச்சேர்ந்திருக்கிறவாயு. (இதனால் மழை வெய்யில் மின்னல் முதலியன உண்டாகும்).
ஆவசியகம்-அவசியஞ்செய்ய வேண்டிய கருமம்.
ஆவடுதுறை - திருவாவடுதுறையென்னுஞ் சிவதலம்.
ஆவணம் - உரிமை, கடைவீதி, தெரு, (இப்பொருள்களில் ஆபணம் எனவும்), புநர்பூசநட்சத்திரம்.
ஆவணி-அவிட்டநட்சத்திரம், ஓர்மாதம்.
ஆவநாழி - அம்புக்கூடு.
ஆவம் - வில்நாண், அம்புக்கூடு.
ஆவரணம்-பரிசை, மறைப்பு, மதில், சுற்று, சட்டை, தடை, வஸ்திரம், வேலி.
ஆவர்த்தம் - ஏழு மேகங்களுளொன்று, தானேசுழன்றுகொண்டிருக்குஞ் சலயந்திரம், (ஆற்றுநீர்பாயுங் கால்வாய்களில் உயரமான வேறோரிடத்துக்கு அந்நீரை யெடுத்தூற்றிப் பாய்விப்ப

தற்காக அமைக்கப்படுவது), ஆவர்த்தனகாலம்.
ஆவர்த்தனம் - தயிர் முதலியவற்றைக்கடைதல், பொன்முதலியவற்றையுருக்குதல், பொழுதுஉச்சிதிரும்புங்காலம்
ஆவலங்கொட்டல் - கையால் வாயிற்கொட்டல்.
ஆவலி - ஒழுங்கு, நிரை, தொடர்ச்சி.
ஆவலித்தல் - துன்பப்படுதல், புலம்பல், ஆசைப்படல்.
ஆவல் - பேராசை.
ஆவா (இடைச்சொல்) - அதிசயக்குறிப்பு, இரக்கக்குறிப்பு.
ஆவாகனம் - அழைத்திருத்துதல்.
ஆவாசம் - வீடு, நகரம்.
ஆவாலம்-மரத்தடிசுளிற்கோலியபாத்தி.
ஆவி - ஆன்மா, உயிரெழுத்து, புகை, வெப்பம், குளம், வாசனை, உயிர்ப்பு, [பிட்டு.
ஆவிகை- பற்றுக்கோடு.
*ஆவிதம் - மதை.
ஆவித்தல் - கொட்டாவி கொள்ளல், புகைத்தல், பெருமூச்செறிதல்.
ஆவிருத்தி - சுற்று, மாறிமாறிப்பிறத்தல், பரிவிருத்தி.
ஆவிரை - ஓர்மரம். (ஆவரையெனவும் வழங்குவர்). [தல்
ஆவிர்ப்பவம் - தோன்றுதல், வெளிப்படு
ஆவிலம் - கலங்கனீர்.
ஆவினன்குடி - ஓர்சுப்பிரமணியத்தலம், (பழனி).
ஆவுரிஞ்சுதறி - ஆதீண்டுகுற்றி.
ஆவேசம் - பேய்க்கோள், வெறியாட்டு, பெருங்கோபங்கொள்ளல்.
ஆவேசனம் - கம்மாலை, சிற்பர்வீதி.
ஆவேட்டம் - சூழ்ந்துவளைதல்.
ஆழம் - தாழ்வு.
ஆழல் - கறையான், அமிழ்ந்துதல்.
ஆழாக்கு - அரைக்காற்படி.
ஆழி - கடல், கடற்கரை, சக்கராயுதம், ஆஞ்ஞாசக்கரம், தேர்முதலியவற்றினுருள், மோதிரம், வட்டம்.
ஆழிமுரசோன் - மன்மதன்.
ஆழிவிரல் - அநாமிகைவிரல்.
ஆழ்தல் - அழுந்துதல், நீர்முதலியவற்றிலமிழ்ந்துதல்; எளிதிலுணரக்கூடாதபொருளுடைத்தாதல்.
ஆழ்வார் - விட்டுணுவின் அடியார்.
ஆளத்தி - மூலாதாரந்தொடங்கிவரும் எழுத்தின்நாதம். (ஆலப்தியென்னும் வடசொல்லின்விகாரமெனவும்ஆலாபனம் பொருளெனவும் சிலப்,விசேடக்குறிப்பில்).
ஆளல் - அரசுசெய்தல், அடிமைகொள்ளுதல்.
ஆளி - சிங்கம், யாளி, சிங்கராசி.
ஆளிவித்து - ஆளியென்னும் மரத்தின் வித்து. (இதன்தைலத்திலிருந்துஅச்சிடற்குரிய மை உண்டாக்கலாம்.)
ஆள் - அடிமை, ஆடவன், தலைவன், வீரன்.
ஆள்வினை - உற்சாகம், முயற்சி.
ஆறலைத்தல்-வழியில்நின்றுதடுத்துப்பிரயாணிகளுடையபொருளைப்பறித்தல்.
ஆறறிவுயிர் - மக்கள். (ஐம்பொறிகளாலுணருமுணர்வைந்துடன் கல்வியறிவுமுடைமையால்).
ஆறு - ஓரெண், நதி, வழி, ஒழுக்கம், தன்மை, (சுற்பழிபாவாற்றால்; நல் கக).
ஆறுகாட்டி - வழிகாட்டுவோன்.
ஆறுதல் - தணிதல்.
ஆறுமுகன் - முருகவேள்.
ஆறை - ஆற்றூர்.
ஆற்றல் - பொறுமை, முயற்சி, மிகுதி, ஞானம், ஆண்மை, வலி, வெற்றி, பெருமை, தணித்தல், செய்தல், சுமத்தல்.
ஆற்றறுத்தல்-கைவிடுதல், வலியழித்தல்.
ஆற்றிடைக்குறை - ஆற்றினடுவேநீரில்லாதுயர்ந்த இடம்.
ஆற்றுக்காலாட்டி - மருதநிலப்பெண்.
ஆற்றுணா - பொதிசோறு.
ஆற்றுநீர்ப்பொருள்கோள் - கொண்டுகூட்டாது இருந்தபடியே பொருள் கொள்ளுதல்.
ஆற்றுப்படுத்தல்-அகற்றுதல், வழிப்படுத்துதல், நன்னெறிப்படுத்துதல்.
ஆற்றுப்படை - ஓர்பிரபந்தம், (பரிசில்பெற்றுவரும் பாணர்முதலாயினோர் பரிசில்பெறப்போவாரையாற்றிற்கண்டு தலைவனுடையகீர்த்திகொடைமுதலியவற்றைச் சொல்லி நன்னெறிப்படுத்தியதாகப் பாடிய அகவற்பா).
ஆற்றொழுக்கு - இலக்கணத்தில் சூத்திரங்கள் இடையறாது தொடர்ந்துநிற்கும் நிலை.

ஆனகம் - படகம், மிருதங்கம்.
ஆனந்த - ஓர் வருடம்.
ஆனந்தபைரவி - ஓரிராகம்.
ஆனந்தம் - பேரின்பம்.
ஆனந்தன் - சிவன், அருகன். [மை.
ஆனந்தியம் - முடிவின்மை, அழிவின்
ஆனல் - குறைதல், நீங்குதல், (அருவி யான்ற வணியின்மாமலை), அடங்குதல், (ஆன்றவைம்புலன்).
ஆனனம் - முகம்.
ஆனுமை - நிலைநீங்காமை, குறையாமை.
ஆனி - ஆனிமாதம், உத்தராடநட்சத்திரம், மூலநட்சத்திரம், கேடு.
ஆனியம் - நாள், பகல், இருது, காலம்.
ஆனிலை - பசுத்தொழுவம்.
ஆனை - யானை.
ஆனையூர்தி - இந்திரன், ஐயனார்.
ஆன் - பசுவினம் எருமையினம் மரையினம் இவற்றின் பொதுப்பெயர், (பசுவினத்துக்கே பெரும்பால் வழக்கு), மூன்றும் வேற்றுமையுருபு, *அவ்விடத்து.
ஆன்காவலர் - இடையர், வைசியர்.
ஆன்மா - உயிர்.
ஆன்மா உ - சீவான்மா, பரமான்மா.
ஆன்வல்லவர் - பசுக்காக்கும் இடையர்.
ஆன்றோர் - அறிவிற்சிறந்தோர்.

## இ

இ - இந்த (முன்னுள்ளபொருளைச்சுட்டும். உ-ம்: இக்கொற்றன்; அகரச்சுட்டுப்போல இச்சுட்டினடியாகவும் பலவகைச்சொற்கள்பிறக்கும். இவன் இவள் முதலியனபெயர்; இற்று முதலியன குறிப்புவினைமுற்று; இந்த இங்கு இம்பர் முதலியன இடைச்சொற்கள்).
இக - முன்னிலையசை, இங்கே எனப் பொருள்படும்வடமொழி அவ்வியயம்.
இகத்தல் - கடத்தல், நடத்தல், பொறுத்தல்.
இகமலர் - விரிமலர்.
இகம் - இப்பிறப்பு.
இகலல் - எதிர்த்தல், பகைத்தல், ஒத்தல், பொருதல்.
இகலன் - நரி, முதுநரி.
இகல் - பகை, வலி, போர், ஒப்பு.
இகழல் - சிந்தித்தல், குறைவு, வெறுப்பு, மறத்தல்.
இகழ்ச்சி - நிந்தை, மறதி. (திருக்குறள் பொச்சாவாமை அ; ௬).
இகுதல் - இறுதல்.
இகுத்தல் - சின்னப்படுதல், சொல்லுதல், வீழுத்துதல், சொரிதல், சாய்த்தல், அழைத்தல், கொடுத்தல், ஒலித்தல், விரித்தல், அறைதல்.
இகுப்பம் - திரட்சி (மலைபடு. ௩௬௭).
இகும் - அசைநிலை.
இகுளை - தோழி, சுற்றம், நட்பு.
இகுள் - இடி.
இகைத்தல் - கொடுத்தல், நடத்தல்.
இக்கிரி - ஓர் முட்செடி.
இக்கு - கரும்பு, கள், தடை, மூங்கில்.
இக்கென - விரைவாக.
இங்கிதம் - மனக்கருத்தை வெளிப்படுத்துங் கைக்குறி கண்குறி முதலியன.
இங்கு (இங்குளி) - பெருங்காயம்.
இங்குலிகம் - சாதிலிங்கம்.
இங்ஙனம் - இங்கே, இப்படி.
இசக்கு (இயங்கு) - ஓர்முட்செடி.
இசித்தல் - கயிறுமுதலியவற்றையீர்த்துப் பிடுங்குதல்.
இசின் - அசைநிலை.
இசும்பு - வழுக்கு.
இசை - இசைத்தமிழ், பண், சொல், புகழ், ஒலி, யாழ்நரம்போசை.
இசை ௩ - மந்தம் மத்திமம் தாரம்.
இசை எ - குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்பன.
இசைக்கரணம் அ - பண்ணல் பரிவட்டணை ஆராய்தல் தைவரல் செலவு விளையாட்டு கையூழ் குறும்போக்கு என்பன.
இசைக்கருவி ரு - தோற்கருவி துளைக்கருவி நரம்புக்கருவி கஞ்சக்கருவி மிடற்றுக்கருவி என்பன.
இசைக்குரியகிரியை அ - எடுத்தல் படுத்தல் நலிதல் கம்பிதம் குடிலம் ஒலி உருட்டு தாக்கு என்பன.
இசைக்குரியதானங்கள் அ - நெஞ்சு மிடறு நாக்கு மூக்கு அண்ணுக்கு உதடு பல் தலை என்பன.
இசைதல் - உடன்படல், இணங்குதல், பொருந்துதல்.
இசைத்தல் - இணக்குதல், பொருத்துதல், ஒலித்தல், சொல்லுதல், கட்டுதல், பாடுதல், *கொடுத்தல்.

இசைநிறை - பொருள்பயத்தலின்றிச் செய்யுளினிசைநலய நிறைத்தற்பொருட்டு நிற்குஞ்சொல். (சார்த்தப்படுவது அசைநிலை; சார்த்தப்படாது நிற்பது இசைநிறை. அசைநிலைக்குமி தற்கும்வேற்றுமையிதுவே.)
இசைநுணுக்கம்-இசைத்தமிழ்நூல்களுளொன்று. (சிகண்டியென்பவாற் செய்யப்பட்டது).
இசைநூல்- சங்கீதசாத்திரம்.
இசைப்பாடு-மிகுபுகழ்.
இசைப்பு- பொருத்து, இசை.
இசைமடந்தை- சரசுவதி.
இசையெச்சம் - செய்யுளிற் பொருண் முடிபுக்கு வேண்டிய சொற்களெஞ்சி நிற்றல்.
இசைவு- சம்மதம், தொடர்பு.
இச்சாசத்தி- ஓர்சத்தி.
இச்சாபத்தியம் - நோய் நீங்கும் வரையும் பெண்களைச் சேராதிருத்தல்.
இச்சித்தல் - ஆசைப்படல்.
இச்சில் - ஓர்மரம்.
இச்சை - ஆசை.
இஞ்சி - இஞ்சிக்கிழங்கு, மதில்.
இடக்கயம் - கொடி.
இடக்கர்-தூர்த்தர், சபையிற் சொல்லத்தகாதவார்த்தை, குடம்.
இடக்கியம் - தேர்க்கொடிஞ்சி.
இடக்கு - அசப்பியம், தடை, குறும்பு.
இடக்கை - தோற்கருவியுளொருவாத்தியம்.
இடங்கணி - சங்கிலி.
இடங்கம் - கல்வேலைசெய்தற்குரியஉளி.
இடங்கர் - இடம், சிறுவழி, குடம், நீர்ச்சால், முதலை, தூர்த்தர்.
இடங்கழிதல் - வரம்புகடத்தல். (மீறுதல்)
இடங்கழியர் - தூர்த்தர்.
இடசாரி - இடச்சுற்று.
இடத்தல்-கிழித்தல், தோண்டுதல், பிரித்தல், அகலச்செய்தல், பெயர்த்தல்.
இடந்தலைப்பாடு- களவொழுக்கம்பூண்ட தலைவனுந் தலைவியும் தனியிடத்திற் சந்தித்துப் புணர்தல்.
இடபக்கொடியோன் - சிவன்.
இடபம் - எருது, ஓரிராசி.
இடம் - இடம், இடப்பக்கம், விசாலம், மூவிடங்கள், செல்வம், வீடு, வலி, படுக்கை, ஏழனுருபு.
இடம் ௩ - தன்மை முன்னிலை படர்க்கை என்பன.
இடம்பம்- தன்னைப்பிறர் மதிக்கவும் புகழவும் வேண்டுமென்று அதற்கேற்ற கருமங்களைச் செய்தல். [சங்கு.
இடம்புரி-இடப்பக்கப் புரியையுடைய
இடர் - ஆபத்து, துன்பம், மிடி.
இடலை - துக்கம், துன்பம்.
இடவழு-தன்மைமுதலியமூவிடச்சொற்களுளொன்று வேறிடச் சொல்லோடு முடிதலாகிய வழு.
இடவன்-இணைமாடு,இடத்தலாலெழுந்த மண்கட்டி.
இடவை - வழி.
இடவோட்டு - அபசவ்வியம்.
இடறல் - தடக்குதல், காலாலெற்றுதல், காலைத் தவறிவைத்தல், இடறிச் சிதைத்தல்.
இடறு - ஆபத்து, தடை.
இடாகினி - பெண்பாலான ஒரு தீர்த் தெய்வம்.
இடாடிமம் - மாதுளை.
இடாம்பிகன் - டம்பமாய் நடப்பவன்.
இடார் (அடார்) - இறைகூடை, எலிமுதலியவற்றை யகப் படுத்துதற் கேற்றி வைக்கும் பொறி.
இடி - மேகத்தினின்று தோற்றும் இடி, ஒலி, தாக்கம், அரிசிமுதலிறவற்றின் மா, பிட்டு, உறுதிச்சொல்.
இடிக்கொடியோன் - இந்திரன்.
இடிஞ்சில் - விளக்குத்தகழி, அகல்.
இடிதல் - பிதிர்தல், நொறுங்குதல்.
இடித்தல் - ஒலித்தல், இதுவேயுறுதியென்று வலியுறுத்திப் போதித்தல், தகர்த்தல், மோதுதல், பொடியாக்கல்.
இடியேறு - இடி.
இடுகாடு - சுடுகாடு.
இடுகுதல் - ஒடுங்குதல்.
இடுகுறிப்பெயர் - காரணங்கருதாதிடப்பட்டு வழங்கும் பெயர்.
இடுகை - கொடை.
இடுக்கண் - துன்பம், வறுமை.
இடுக்கம் - துன்பம், ஒடுக்கம்.
இடுக்கி - கவ்விப்பற்றும் (சாவணம் முதலிய கருவி).
இடுக்கு-துன்பம், வறுமை, இரண்டுறுப்

புக்களினிடை, உடலோபம்.
இடுக்குதல் - கொடிறு முதலியவற்றால் நெரித்துப்பிடித்தல்.
*இடுங்கலம் - பாத்திரம்.
இடுதல் - பிச்சையிடுதல், ஒருபொருளை யோரிடத்திலிருந்து மற்றோரிடத் திற்சாரும்படி செய்தல்.
இடுப்பு - இடை, பக்கம்.
இடும்பன் (இடிம்பன்) - ஓரரக்கன்.
இடும்பை - துன்பம், உபத்திரவம், தரித் திரம், நோய், ஓரரக்கி. (இவளை இடிம் பையென்பர் சிலர்).
இடும்பைகொழுநன் - வீமன்.
இடுவந்தி - குற்றமில்லாதார்மேற் குற்ற மேற்றி நட்டங்கேட்டல்.
இடை - நடு, இடம், காலம், பெண்களி னிடை, இடப்பக்கம், இடமூக்காற்சு வாசம்விடுதல், (இடைகலையெனவுங் கூறுவர்), இடைச்சொல், இடையின வெழுத்து, இடையீடு.
இடைகழி - வாயில், வாயிற்றிண்ணை.
இடைக்காடன்-ஓர்புலவன், ஓர்சித்தன்.
இடைக்குறை- இடையிற் சிலஎழுத்துக் குறைதலாகிய செய்யுள்விகாரம்.
இடைசுருங்குபறை - துடி.
இடைச்சி - முல்லைநிலப்பெண்.
இடைச்சொல்-பெயர்வினைகளுக்கிடை யே வருஞ்சொல். (மிகுதிபற்றிய வழக்கு).
இடைதல் - பின்னிடல், தோற்றல், நெ கிழ்தல், வருந்துதல்.
இடைநிலை - பகுபதங்களுடைய பகுதி விகுதிகளுக்கிடையேநிற்பது. (ஆநின் று கின்று கிறு முதலிய சொற்களும் ச் ஞ் முதலிய எழுத்துக்களுமாம்).
இடைநிலைமயக்கு - மொழிக்கிடையே ஓரெழுத்துடன் மற்றோரெழுத்துச் சேர்ந்துவருதல்.
இடைப்படல் - இடையிலுண்டாதல்.
இடைப்பிறவரல்-ஒன்றையொன் றவாவி நிற்கும் இருசொற்களுக்கிடையே இ யைபானபிறசொற்கள் பொருந்திவரு தல்.
இடைமருது-திருவிடைமருதூர்.
இடையர் - முல்லைநிலமாக்கள்.
இடையல் - துகில். (உடைவிசேடம்).
இடையினம் - இடையெழுத்துக்கள்.
இடையீடு - தடை, ஓய்வு.
இடையூறு - விக்கினம், ஊறுபாடு.
இடையெழுஞ்சனி - பூரம்.
இடைவள்ளல்-இரப்போர்க்குக்கொடுப் போன்.
இடைவள்ளல் எழுவர் - அக்குரன் சந்தி மான் அந்திமான் சிசுபாலன் வக்கிரன் கன்னன் சந்தன் என்பவர்கள்.
இட்டடை - மாமுதலியவற்றைக் கடை யும்பொருட்டு உபயோகிக்கும் மரம்.
இட்டம் - விருப்பம், சுதந்தரம், கணிதத் தைச் செய்து முடித்தற் பொருட்டு வைக்குந் தொகை.
இட்டளம் - துன்பம், தளர்வு.
இட்டி - யாகம், ஈட்டி.
இட்டிகை - செங்கல்.
இட்டிடை - அற்பம், சிறுமை.
இட்டு- அற்பம், நுண்மை, அசைச்சொல்.
இணக்கம் - உடன்பாடு.
*இணங்கி - தோழி.
இணங்குதல் - உடன்படுதல்.
இணர்- பூ, பூங்கொத்து, பூந்தாது, குலை, தளிர், நெருப்பின்சோதி. (திருக் வெகுளாமை அ).
இணுங்குதல் - ஒடித்தல்.
இணை - சகாயம், இரட்டை, ஒப்புமை.
இணைக்குறளாசிரியப்பா-ஈற்றடியு முதல டியுமொழிந்து இடையடிகள்குறளடி யானுஞ் சிந்தடியானும் வரும் ஆசிரி யப்பா.
இணைதல்-ஒத்தல், இசைதல், புணர்தல்.
இணைத்தல்-இரண்டைப் பொருத்துதல், கட்டுதல்.
இணைமணிமாலை - வெண்பாவுமகவலும் அல்லது வெண்பாவுங் கலித்துறையு மாக இவ்விரண்டிணைத்து அந்தாதித் தொடையாகப்பாடும் நூறுசெய்யுள்.
இண்டு - இண்டைக்கொடி.
இண்டை-ஈகைக்கொடி, தாமரை, சிரசில் வட்டமாய்ச்சாத்தும்மாலை
இதணம் (இதண்)-பரண். (அட்டாலை).
இதம் - நன்மை, மங்கலம்.
இதரம் - வேற்றுமையானது.
இதரன் - கீழ்மகன், நீசன், பிறன்.
இதரேதரம் - ஒன்றுக்கொன்று.
இதலை - கொப்பூழ்.
இதல் - சிவப்புறவை.
இதழி - கொன்றைமரம்.

இதழ் - பூவிதழ், ஓலையினிதழ், உதடு, கண்ணிமை.
*இதா - இங்கே.
இதி - என்று, இப்படி.
இதிகாசம் - முன்னிகழ்ந்தசரித்திரத்தைக்கூறும் நூல், (பாரதம் இராமாயணம் முதலியன), மேற்கோள்.
இதை-காராமணிப்பயறு, மரக்கலப்பாய்.
இதைப்புனம் - புதக்கொல்லை.
*இதோளி - இவ்விடத்து.
இத்தனை - இவ்வளவு.
இத்தி - ஓர்மரம்.
இத்தை - முன்னிலையசை.
இந்தளம் - ஓர்பண், தூபமுட்டி.
இந்தனம் - விறகு, அக்கினியைச்சேரவிப்பித்தல்.
இந்தா - இங்கே.
இந்திரகோபம் - தம்பலப்பூச்சி.
இந்திரசாலம் - கண்கட்டுவித்தை, (மந்திரம் மூலி முதலியவற்றாற் பார்ப்போருடையகண்ணையும் புலனையும் மாற்றி ஒன்றைமற்றொன்றாகக் காண்பிக்சப்படும் வித்தை).
இந்திரசித்து - இராவணனுடையபுதல்வன்.
இந்திரஞாலம் - சிவனிடம் சூரபன்மன் பெற்றுக்கொண்ட தேர்.
இந்திரதனு - வானவில்.
இந்திரநீலம் - பாலினுள்ளிட்டால் அந்தப்பால் முழுவதையும் நீலநிறமாகக் காட்டுகின்ற நீலரத்தினம்.
இந்திரம் - மேன்மை, தலைமை.
இந்திரர் பதினால்வர் - அரி விபச்சித்து சசாந்தி சிவி விபு மனோசவன் புரந்தரன் மாவலி அற்புதன் சாந்தி விருடன் இருததாமன் திவஸ்பதி சுசி என்பவர்கள்; இவருள் விபுவை வசு இரவி எனவும் புரந்தரனை ஓஜஸ்வி எனவுஞ் சிலர் கூறுவர்.
இந்திரவிகூட்டம் - அமாவாசை.
இந்திரனாள்-கேட்டை.
இந்திரன் - தேவராசன், (மழைபெய்விக்குந்தெய்வம்), தலைவன்.
இந்திரன்மைந்தன் - சயந்தன்.
இந்திராணி - இந்திரன்மனைவி.
இந்திராயுதம் - இடி, வச்சிராயுதம்.
இந்திராரிகள் - அசுரர்.
இந்திரியம் - அறிதற்கும் கருமங்களைச் செய்தற்குமாகச் சரீரத்திற்கடவுளாற் படைக்கப்பட்டகருவிகள், (அவை கன்மேந்திரியம் ஞானேந்திரியம் என இருதிறப்படும்), சுக்கிலம்.
இந்திரை - இலக்குமி, இந்திராணி.
இந்திரைக்குமூத்தாள் - மூதேவி.
இந்திவரம் - கருங்குவளை.
இந்து - சந்திரன், இந்துஎன்னும்பாஷை, இந்துதேசம். (பரதகண்டம்)
இந்துமதி- சூரியவம்சத்தரசருளொருவனாகிய அசனென்பவனுடைய மனைவி.
இந்துளம் - கடப்பமரம்.
இபக்கம் - புளிமா.
இபம் - யானை, மரக்கொம்பு.
இப்பர் - வைசியர்.
இப்பால் - இனி.
இப்பி - சிப்பி.
இமகரன் } சந்திரன்.
இமகிரணன் }
இமம் - பனி.
இமயம் - இமயமலை.
இமவான் - இமயமலையரசன்.
இமிர்தல் - மொய்த்தல்.
இமில் - எருத்தின்முரிப்பு.
இமிழ்தல் - ஒலித்தல்.
இமிழ்த்தல் - கட்டல்.
இமை - கண்ணிமை, கண்ணிமைப்பொழுது.
இமைத்தல்- கண்ணிதழ்களைக்குவித்தல், ஒளிசெய்தல்.
இமையவர் - தேவர்.
இம்பர் - இவ்விடத்தில், இவ்வுலகத்தில், இப்பால. (பின்; நெட்டெழுத்திம்பர் தொல்).
இம்மி - மத்தங்காய்ப்புல்லரிசி, அற்பம், க௦௭௫௨௦௦ ல் ஒருபாகம்.
இம்மெனல் - ஒலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு.
இம்மை - இப்பிறப்பு.
இயக்கம் - இடக்குதல், வழி.
இயக்கர்-தேவகணத்துளொருபகுதியார்.
இயக்கர்கோமான் - குபேரன்.
இயக்கல் - இயங்கச்செய்தல், ஒலிப்பித்தல்.
இயக்கன் - நாய், இயக்கர்கணத்தான்.
இயங்கல் - தொழில்செய்தல், செல்லுதல், விளங்குதல், உலாவுதல்.
இயந்திரம் - மதிலுறுப்பு, சகடுமுதலியவற்றில் விதிப்படியெறிப் பூசித்த சக்கி

ரம், தொழில்களை இலகுவாய்முடித் தற்கு அமைக்கப் பட்டிருக்கும் பொறி, தேர்.
இயமகம் - ஓரெழுத்துமுதற் பத்தெழுத் தீறாய் ஓரடிபோல நான்கடியும்வரத் தொடுக்குஞ்செய்யுள்.
இயமம் - யோகாங்கங்களுள் ஒன்று, (மெய்ம்மைகூறல் கள்ளாமை பிறர் பொருட்காதலின்மை இந்திரியமடக் கல் கொல்லாமை என்னுமிவற்றையு டைமை).
இயமானன் (யசமானனென்பதன்றிரிபு) - உயிர், யாகஞ்செய்விப்போன், தலைவன்.
இயம் - ஒலி, வாத்தியப்பொது, சொல்.
இயம்புதல் - சொல்லுதல், வாத்தியங்களையொலிப்பித்தல்.
இயலல் - பொருந்துதல், ஒத்தல், உலாவல், செய்தல், எதிர்த்தல்.
இயல் - இயற்றமிழ், தன்மை, சாயல், ஒழுக்கம், இலக்கணத்தில் எழுத்து பதம் முதலியவற்றைக்கூறும் இயல்.
இயல்பு - தன்மை, ஒழுக்கம், தகுதி, குணம், முறை, வரலாறு.
இயவர் - தோற்கருவியாளர்.
இயவு (இயவை) - வழி.
இயவுள் - தலைவன், தெய்வம், மிகுபுகழாளன், எப்பொருட்குமிறைவன்.
இயவை - தோரைநெல்.
இயற்கை - இயல்பு. (செயற்கையல்லாதது).
இயற்கைப்புணர்ச்சி - தெய்வத்தானிகழும் புணர்ச்சி.
இயற்சீர் - அகவலுரிச்சீர்.
இயற்சீர்வெண்டளை - அகவலுரிச் சீரிறுதி நேரசையாயின் நிரையசையும் நிரையசையாயின் நேரசையுமொன்றுந் தொடர்.
இயற்சொல் - செந்தமிழ்ச்சொல்.
இயற்பெயர் - தொன்றுதொட்டுவழங்கி வரும்பெயர்.
இயற்றமிழ் - செந்தமிழ்.
இயற்றளை - ஆசிரியத்தளை.
இயற்றி - முயற்சி.
இயற்றுதல் - செய்தல், முயலல்.
இயற்றுதற்கருத்தா - செய்பவளையெழுவாயாகவைத்துத்தொடுத்தவசனம்.
இயாதம் - யானைப்பிடர்.
இயைதல் - இசைதல், ஒத்தல்.
இயைபு - தொடர்பு, பொருத்துதல், செய்யுளில் அடியின் அல்லது சீரின் இறுதிக்கணின்ற எழுத்தேனும் சொல்லேனுமொன்றிவரத்தொடுப்பது. (அது அடியியைபு முதலாக எண்வகைப் படும்).
இரகசியம்-பிறரறியாவண்ணம் மறைக்கத்தக்க சம்பவம், பெண்குறி.
இரங்கிதம் - விடப்பட்டது.
இரகு - சூரியவம்சத்தரசருளொருவன்.
இரகுநாதன் - இராமசுவாமி.
இரகுவம்சம்-ஓர்காப்பியம். (வடமொழியிற் காளிதாசராலும் தமிழில் அரசகேசரியென்னும் புலவராலுமியற்றப் பட்டது.)
இரக்கம் - தயை, துன்பம், மரணம்முதலியவற்றில்நிகழும்அழுகையோசை.
இரக்கை (ரக்ஷை)- காவல், விபூதி.
இரங்கல்-தயவுவைத்தல், அழுதல், ஒலித்தல், பொருளினது கழிவுபற்றிவருங் கவலை, யாழ்நரம்போசை.
இரசகன் - வண்ணான்.
இரசதம் - வெள்ளி, அரைப்பட்டிகை.
இரசம் - அறுசுவை, நீர், நீர்த்தன்மையானசாறுமுதலியன, மதுரப்பொருள்கள், எண்வகைச்சுவைகள்.
இரசவாதம் - இரசத்தினுதவியால் இரும்பு முதலிய இழிந்தலோகங்களைப் பொன்னாக்குதல்.
இரசனி - இராத்திரி, மஞ்சள்.
இரசனை - சுவைத்தல், எழுதுதல்.
இரசாயனம் - இரசவாதநூல், காயசித்திமருந்து.
இரச்சு - கயிறு, மங்கல்யம்.
இரஞ்சனம் - பிரியப்படுத்துதல், சாயமுதலியவற்றினால் வேறுநிறமாக்கல்.
இரட்சணம் - இரட்சிப்பு, (பாதுகாப்பு).
இரட்சாபந்தனம் - சுபகருமங்களிற்செய்யப்படும் ஓர்கிரியை.
இரட்டர் - ஓர்சாதியார்.
இரட்டல் - இருபுறமுந்திரும்பும்படியசைத்தல், ஒலியுண்டாக்கல், ஒலித்தல், யாழ்நரம்போசை.
இரட்டித்தல் - இரண்டாற்பெருக்குதல்.
இரட்டு - ஒலி, இரட்டைநூலாற்செய்யப்பட்டவஸ்திரம்.

இரட்டுறமொழிதல் - இரண்டு பொருள் விளையும்படி சொல்லுதல்.
இரட்டை - இணை, மிதுனராசி, ஆணும் பெண்ணும், ஓர்வகைச்சந்தம், இரண்டாற்பிரிபடுமெண்.
இரட்டைத்தொடை-அடிமுழுதும் ஒரு சொல்லேவரத் தொடுப்பது. (நாற்சீரின்மிக்கு இத்தொடைவரப்பெறாது; யாப்பருங் உறுப்பியல் கஎ).
இரட்டைமணிமாலை-வெண்பாவுங்கலித்துறையுமாயினும் வெண்பாவும் ஆசிரியவிருத்தமுமாயினும்அந்தாதித்தொடையாயிருபதமையப்பாடும் நூல்.
இரட்டையர் - இரட்டைப் பிள்ளைகளாய்ப்பிறந்த இரண்டு புலவர்.
இரணம் - கடன், போர், புண், பொன், மாணிக்கம், (கடனில் இருணமென்பதின் திரிபு).
இரணவைத்தியம் - சத்திரவைத்தியம்.
இரணியகருப்பன் - பிரமா.
இரணியம் - பொன்.
இரணியாக்கன்-இரணியனுடையதம்பி.
இரண்டு - ஒரெண்.
இரதம் - தேர், அரைஞாண், (இப்பொருளில் இரதனம்எனவும்), புணர்ச்சி, இனிமை, வேட்கைப் பெருக்கம், சூது, அன்பு.
இரதி-தேர்வீரன், இனிமை, மன்மதன்றேவி, பெண்யானை, புணர்ச்சி, பித்தளை.
இரதிகேள்வன் - மன்மதன்.
இரத்தம்-உதிரம், சிவப்பு, செவ்வீரல்.
இரத்தல் - யாதேனுமொரு பொருளைத் தரும்படி அல்லது உதவிசெய்யும்படி வேண்டுதல்.
இரத்தாட்சி (ரத்தாக்ஷி) - ஓர்வருடம்.
இரத்தி - இலந்தை, இத்திமரம்.
இரத்திரி - இத்திமரம்.
இரத்தினசானு - மேருமலை.
இரத்தினம் - ஒன்பதுவகையான இரத்தினங்கள்.
இரத்தினம் ௯- வைரம் முத்து மாணிக்கம் பவளம் மரகதம் கோமேதகம் வயிடூரியம் நீலம் புருடராகம் என்பன.
இரத்தினாகரம் - கடல்.
இரத்தினி-பிடிமுழம். (ஐந்துவிரல்களையுமுடக்கியளக்குமுழம்).
இரத்தோற்பலம்-செங்குவளை, செந்தாமரை.
இரந்திரம் - துவாரம்.
இரமணன் - இன்பமநுபவிப்போன்.
இரமம் - இன்பம்.
இரமை - இலக்குமி.
இரலை - அச்சுவினி, ஊதுகொம்பு, கலைமான்.
*இரவணம் - ஒட்டகம்.
இரவம் - ஒலி.
இரவலன் / இரவலாளன் } ஏற்போன்.
இரவல்-பின்தருவேனென்றிரந்து வாங்கும் பொருள்.
இரவி - சூரியன், மலை.
இரவிநாள் - இரேவதி.
இரவு - இரா, இரப்பு.
இரவுக்குறி-களவொழுக்கத்தையுடைய தலைவனுந்தலைவியும் இரவிற்புணர்தற்குக்குறித்த தனியிடம்.
இரவெரி - சோதிவிருட்சம்.
இரவை - அணு, அற்பம்.
இரற்றுதல் - ஒலித்தல்.
இராகம்-ஆசை, சிவப்புநிறம், சைவசித்தாந்தத்தில் வித்தியாதத்துவமேழனுளொன்று, கீதம்.
இராகம் ௩௨-பைரவி தேவக்கிரியை மேகரஞ்சி குறிஞ்சி பூபாளம் வேளாவளி மலகரி பௌளி சீராகம் இந்தோளம் பல்லதி சாவேரி படமஞ்சரி தேசி லலிதை தோடி வசந்தம் இராமக்கிரியை வராளி கைசிகம் மாளவி நாராயணி குண்டக்கிரியை கூர்ச்சரி பங்காளம் தன்னியாசி காம்போதி கௌளி நாட்டை தசாக்ஷரி காந்தாரி சாரங்கம் என்பன.
இராகவன் - இராமசுவாமி.
இராகி-கேழ்வரகு, பற்றுசு (பிரயோ).
இராகு - சந்திரனை இருக்கவேண்டிய இடத்தினின்று வடக்காக அல்லது தெற்காக விலகச்செய்யுந் தேவதை. (சூரியசந்திரர்களின் கிரகணங்களுக்கு இது காரணமாயிருத்தலின், இது அவற்றை மறைப்பதாகக் கூறுவர்; இராகுவின் எதிர்த்தானமே கேது எனப்படுதலின் சூரியனைக் கேது மறைப்பதென்பர் சிலர்.)
இராகுகாலம் - ஒவ்வொரு வாரங்களிலும் சுபகருமங்களுக்கு விலக்கப்பட்டதாய் வருங்காலம்.

இராக்கத(ராக்ஷத)-ஓர்வருடம்.
இராக்கதம்- சுற்றத்தாருடன்படாதிருக்க ஒருகன்னிகையை வலிதிற் கவர்ந்துசென்று செய்யும் விவாகம்.
இராக்கதர்- அரக்கர்.
இராக்கதிர்- சந்திரன்.
இராசசூயம்-அரசர்செய்யும்வேள்வி.
இராசதம்- முக்குணங்களுளொன்று, (தானம் தவம் மெய்ம்மை தருமம்பேணல் ஞானம் கல்வி கேள்வி இவற்றையுடைமை), இராசதகுணகாலம்.
இராசதானி- அரசனிருக்குந்தலைநகரம்.
இராசமாநாகம்- கருவழலைப் பாம்பு.
இராசவள்ளி-ஓர்கிழங்குக்கொடி.
இராசவாகனம்- கஞ்சிகை, கோவேறுகழுதை (குதிரையிலோர்சாதி).
இராசன்- அரசன், (பிறசொற்களோடு சேர்ந்து சிலவிடத்தில் தலைவன்எனவும் பொருள்படும்).
இராசாளி-ஓர்பறவை.
இராசி-மேடமுதலியராசிகள், குவியல், கூட்டம், வட்டத்தின் கஉ ல்ஒன்று, எண்ணின்றொகை, இணக்கம்.
இராசி கஉ - மேடம் இடபம் மிதுனம் கர்க்கடகம் சிங்கம் கன்னி துலாம் விருச்சிகம் தனு மகரம் கும்பம் மீனம் என்பன.
இராசிகம்- அரசனால்வருநன்மைதீமைகள்
இராசிலம் - சாரைப்பாம்பு.
இராசீவம் - தாமரைப்பூ.
இராச்சியம் - அரசியல், அரசனுக்குக்கீழ்ப்பட்டதேசம்.
இராட்டினம் - நூல்நூற்கும்யந்திரம்.
இராணி - இராசஸ்திரீ.
[இராணுவம் - போர்ப்படை].
இராதம் - சடைக்கொள்ளி.
இராதை - விசாகம், கிருட்டினன்மனைவியருளொருத்தி.
இராத்திரி - இரவு.
இராத்திரிசரர் - அரக்கர், அசுரர்.
இராமம் - அழகு, ஆசைப்படத்தக்கது.
இராமன் - தசரதரின்புதல்வராகியஇராமசுவாமி. (பரசுராமனையும் பலராமனையும் சிலவிடங்களிற்சுட்டும்).
இராமா- சுபகருமங்களுக்கு இரவு விலக்கப்படுந்தினம்.
இராமாநுசன் - விட்டுணுசமய ஆசாரியர்களிலொருவர்.
இராமேச்சரம் - ஓர்சிவதலம்.
இராயன் - அரசன்.
இராவணம் - அழுகை.
இராவணன் - இலங்கையையாண்ட ஓரரக்கன்.
இராவணி- இராவணன்மகன், (இந்திரசித்து).
இராவுத்தன் - குதிரைவீரன்.
இரிணம்- உவர்த்தரை.
இரிதல் - விலகிப்போதல், குலைந்தோடல்.
இரித்தை(இருத்தை) - சதுர்த்தி நவமி சதுர்த்தசி என்னுந்திதிகள்.
இரீதி - ஒழுங்கு.
இருக்காழி - இரண்டுவிதையுள்ள பனம்பழம்.
இருக்கு - முதலாம்வேதம், வேதமந்திரம்.
இருக்கை - ஆசனம், இருப்பிடம், வீடு, ஊர்.
இருசு - நேர்மை, செவ்வை, பண்டியுள்ளிரும்பு, அச்சிரும்பு.
இருடி(ரிஷி) - முனிவன், ஆந்தை.
இருடிகேசன் - திருமால்.
இருணம் (இரணம்) - கடன், கழிக்கவேண்டியதொகை.
இருதம் - உஞ்சவிருத்தி.
இருதயம் (இதயம்)- மனம், நெஞ்சு, ஓர்மந்திரம்.
இருதலைக்கொள்ளி - இரண்டு நுனிகளிலுந் தீமூளப்பெற்றகொள்ளி.
இருது - மகளிர்பூப்பு, இவ்விரண்டுமாதங்களமைந்தஓர்வகைக் காலம்.
இருது சு - வசந்தருது கிரீஷ்மருது வர்ஷருது சரத்ருது ஹேமந்தருது சிசிரருது என்பன. (இவற்றை முறையே இளவேனில் முதுவேனில் கார் கூதிர் முன்பனி பின்பனி எனவும் வழங்குவர்).
இருதுசாந்தி - பெண்கள் முதலிலிருதுவான வாரம் திதி முதலியவற்றிலுள்ளகுற்றங்கள்நீங்குதற்குச்செய்யுஞ்சாந்தி.
இருத்தல் - இருத்தல், இருக்கச்செய்தல், அழுத்தல், தங்குதல், தங்கச்செய்தல். (இதன்வினைச் சொற்கள் சில- இரீஇயினன் - இருத்தினன்; இரீஇ:

இருந்து இருத்தி எனவரும்).
இருத்தி - சித்தி.
இருத்துவிக்கு - யாகபுரோகிதன்.
இருநிதிக்கிழவன் - குபேரன்.
இருந்து - அசைச்சொல். இரு என்னு முதனிலைபாற்பிறந்த வினையெச்சம்.
இருந்தை - கரி.
இருபது - ஓரெண்.
இருபாவிருபது-வெண்பாவும் அகவலும் அந்தாதியாயிணைந்து இருபதுசெய்யுளான்முடிவது. (சைவசித்தாந்தநூல்களுளொன்று இதற்கிலக்கியமாயுள்ளது).
இருபிறப்பாளர் - பிராமணர். (தாயுடையகருப்பத்திலிருந்து பிறத்தலும் உபநயனஞ்செய்யும்போது ஸவிதா என்னுந் தேவதையிலிருந்து பிறத்தலுமாகிய இருவகைப்பிறப்புமுடையவர்).
இருபிறப்பு - பறவை, சந்திரன், பல்.
இருப்பு - ஆசனம், இருப்பிடம், செலவு நீக்கி மிகுந்திருக்குந்தொகை.
இருப்புமுள் - யானையை அல்லது குதிரையைச் செலுத்தும்போது குத்துங்கோல்.
இருப்பை (இலுப்பை) - இலுப்பைமரம்.
இருமல் - நெஞ்சிலுள்ளசளியினால் இருமுதல்.
இருமை - இம்மை மறுமை ஆகிய இருபிறப்புகள், இருதன்மை, கருமை, பெருமை.
இரும்பன்-எலி, அகழெலி.
இரும்பு - கரும்பொன்.
இரும்புளி - ஓர்மரம்.
*இரும்பை - குடம்.
இரும்பொறை - சேரன். (பதிற்று).
இருவாட்சி - ஓர் பூச்செடி.
இருவி - தினைத்தாள்.
இருவேலி - வெட்டிவேர்.
இருளல் - ஒளிமழுங்குதல், கறுத்தல்.
இருளி - பன்றி.
இருளை - நாணம்.
இருள் - இருள், கருமை, அறியாமை, ஓர்வகைநரகம்.
இருள்வலி - சூரியன்.
இரேகை - கீறு, எல்லை, எழுத்து.
இரேசகம்-உள்ளிருந்த வாயுவை மூக்கினால் வெளியேவிடுதல்.
இரேசகி - கடுக்காய், சேந்தில்.
இரேணு - அணு, பூந்தாது.
இரேணுகை - பரசுராமரின்தாய்.
இரேயம் - கள்.
இரேவதி -ஓர்நட்சத்திரம், பலதேவன் மனைவி.
இரேவதிகொண்கன்- பலதேவன்.
இரேவை-நருமதைநதி.
இரை- உணவு, இருப்பு, பறவைகளினதும் ஒருசார் விலங்குகளினதும் உணவு.
இரைதல் - ஒலித்தல், (இரைத்தலெனவும்), கீறுதல், பெருத்தல்.
இரைமீட்டல் - அசைவெட்டல்.
இரௌத்திரம் - பயங்கரமானகோபம்.
இரௌத்திரி - ஓர்வருடம்.
இரௌரவம்-ஓர்நரகம், சைவாகமங்களுளொன்று.
இலகடம் - யானைமேற்றவிசு.
இலகரி - பெருக்கு, வெறி.
இலகிமா - தன்னைப் பஞ்சுபோல் நொய்தாக்கல். (அட்டசித்திகளுளொன்று).
இலகு - கனமின்மை.
இலகுதல் - ஒளிசெய்தல்.
இலக்கணப்போலி - இலக்கணவிதிக்கமைபாததாயினும் அமைந்ததுபோன்றுவழங்குஞ்சொல். (இல்முன் எனற்பாலது முன்றில்என நிலைமொழிவருமொழிகள் மாறிவழங்குதல்போல).
இலக்கணை-தன்னைச்சுட்டாது சம்பந்தமுதலிய காரணங்களால் வேறொருபொருளையுணர்த்துஞ் சொல். (கங்கையின்கணிடைச்சேரி என்பதிற் கங்கை கரையையுணர்த்தல்போல).
இலக்கம் - நூறாயிரம், (இப்பொருளில் இலட்சமெனவும்), எண்ணுக்காகவழங்குங்குறி, இலக்கு.
இலக்காரம் - வஸ்திரம்.
இலக்கியம் - காப்பிய முதலிய செய்யுணூல்கள், மேற்கோள்.
இலக்கினம் - இராசிகளினுதயம்.
இலக்கு-அம்பெய்வோரும் துவக்கு முதலியவற்றை உபயோகிப்போரும்பார்க்குங்குறி, மன எண்ணம்.
இலக்குமணன்-இராமசுவாமியின் தம்பி.
இலக்குமி-திருமகள், செல்வம்.
இலங்கனம்-பசியாயிருத்தல்,தாண்டுதல்.
இலங்குதல் - ஒளிர்தல்.
இலங்கை-ஈழதேசம், ஆற்றிடைக்குறை.

இலசுனம் - உள்ளிப்பூடு.
இலச்சினை - முத்திரை, மோதிரம்.
இலச்சை - வெட்கம்.
இலஞ்சம் - கைக்கூலி.
இலஞ்சி - குளம், சீர்கிலை, மகிழமரம், மதில், குணம், கொப்பூழ், மாமரம்.
இலட்சியம் - இலக்கு.
இலட்டுகம் - லட்டுஎன்னுஞ்சிற்றுண்டி, மோதகம்.
இலண்டம் - யானையிலத்தி.
இலதை - கொடி, *வள்ளிக்கொடி.
இலத்தி - குதிரை யானை கழுதை இவற்றின்மலம்.
இலந்தை - இலந்தைமரம், *சீர்கிலை.
இலம் - இல்லாமை.
இலம்பகம் -நூற்பகுதி, நுதலணிமாலை.
இலம்பம் - முக்கோணத்தில் புயமும் கன்னமுமாகிய இரண்டுக்குமிடையே தூக்குநேராகக்கொள்ளப்படும்ரேகை.
இலம்பனம்- கொப்பூழளவுந்தூங்க அணியுங்கழுத்தணி, சூரியகிரகணகணிதத்தில் பூமத்தியகணிதத்தைப்பூப்பிருஷ்டகணிதமாக்குதற்காய்ச் செய்யப்படும் ஓர்வகைச்சம்ஸ்காரம்.
இலம்பாடு } வறுமை.
இலம்பை }
இலம்போதரன்- விநாயகக்கடவுள்.
இலயம்-ஒடுக்கம், நிருத்தம் கீதம் வாத்தியமென்னுமூன்று மொருவழிப்பட்டு நடத்துதல்.
இலலாமம் - அடையாளம்.
இலலிதம் - (லளிதம்)- வாய்க்கினிமையாயிருத்தல், அழகு, காமலீலை.
இலலிதை (லளிதை)- உமை.
இலவங்கம் - ஓர் வாசனைமரம்.
இலவணம் - உப்பு.
இலவந்திகை - (வேண்டும்போது நீரை நிறைத்தற்கும் வேண்டாத போது போக்குதற்குமுரிய யந்திரங்களையுடையவாவி. (மணிமே).
இலவம் - காலநுட்பம்.
இலவன் - இராமசுவாமியின் புதல்வன்.
இலவு - இலவமரம்.
இலாகவம் - இலகுத்தன்மை. (நொய்மை).
இலாங்கலம் - கலப்பை.
இலாங்கலி- கலப்பை, தென்னைமரம்.
செங்காந்தள்.
இலாங்கூலம் - விலங்கின்வால்.
இலாச்சம் - ஓர்கிலவளவை, ஓர்தானியவளவை.
இலாஞ்சனம் - அடையாளம், புள்ளி, முத்திரை, சித்திரிக்கவேண்டிய உருவத்தைப்படமுதலியவற்றிற் குறிப்பிடுதல்.
இலாடம் (லலாடம்)- நெற்றி.
இலாட்சை - சிவந்தஅரக்கு.
இலாபம் - ஆதாயம், சோதிடத்தில் இலக்கினத்திலிருந்து ௧௧-மிடம்.
இலாமிச்சை - ஓர்வாசனைச்செடி.
இலாலனம் - சிறுவர்களை அன்புபாராட்டிவிளையாடுதல்.
இலாலி - ஓர்வகை மங்கலப்பாடல்.
இலாவண்ணியம் - இளமையினழகு.
இலிகிதம் - எழுத்து.
இலிகுசம் - எலுமிச்சைமரம்.
இலிங்கம் - அடையாளம், ஆண்குறி, ஆண்பெண் அலி என வடமொழியில் வழங்கும் பால், சிவலிங்கம், ௧௮ புராணங்களுளொன்று.
இலிபி - எழுத்து.
இலிர்த்தல் - சிலிர்த்தல், தளிர்த்தல்.
இலிற்றுதல் - சுரத்தல், துளித்தல்.
இலீக்கை - ஈர்
இலீலை - பரிகாசம், விளையாட்டு, காமச்சேட்டை.
இலுதை - அணில்.
இலேகர் - தேவர்.
இலேகனம் - எழுதுதல், சித்திரித்தல்.
இலேகியம் - நக்கித்தின்னும்உணவு, மருந்துப்பாகு.
இலேகினி-எழுத்தாணி, எழுதுகோல்.
இலேகை - எழுத்து.
இலேசம் - காலவிரைவு, மிகை, செய்யுளணிகளுளொன்று, (கருதியது வெளிப்படுக்குஞ் சத்துவ முதலிய வற்றைப் பிறிதோன்று நிகழ்வனவாக மறைத்துச்சொல்லுதல்.)
இலேசு - கனமில்லாதது.
இலேபனம் - பூச்சு, பூசத்தகுந்த வாசனைக்கலவை மருந்து முதலியன.
இலை - மரங்களின் இலை, ஆயுதங்களினலகு, தகட்டுவடிவு, யந்திரச்சக்கரத்து ஆர், (பாரத திரௌபதி ௬௧).
இலைக்கறி - கீரைவகை.

இலைக்கொடி - வெற்றிலைக்கொடி.
இலையடை - அப்பவர்க்கம்.
இலௌகிகம் - உலகசம்பந்தமானது.
இல் - வீடு இராசி, மனைவி, இடம், இல்லையெனல், ஐந்தாம்வேற்றுமையுருபு.
இல்லடை - அடைக்கலம்.
இல்லம் - தேற்றமரம் (தேற்று), வீடு.
இல்லல் - நடத்தல்.
இல்லவள் (இல்லாள்) - மனைவி.
இல்லறம் - மனைவியுடன் வாழும்போது செய்யவேண்டிய தருமம்.
இல்லாண்மை - தன் குடியிலுள்ளாரை உயரச்செய்து நடத்தல்.
இல்லி - பொள்ளல்.
இல்லுவமை - நிகழாததொன்றையுவமையாக்கிக்கூறல்.
இல்லை - எதிர்மறைக்குறிப்புவினைமுற்று (ஐம்பான் மூவிடங்களுக்கும்பொது).
இல்லோன் - வறியவன்.
இல்வாழ்க்கை - மனைவியுடன் கூடி வாழும் வாழ்வு.
இவக்காண் (திசைச்சொல்) - இங்கே.
இவண் - இவ்விடத்தில்.
இவர்தல் - கிளர்தல், ஆசைப்படுதல், ஏறுதல், பரத்தல், செல்லுதல், சேர்தல்.
இவறல் - பொருள்தேடுதலிற் பேராசைகொள்ளல், மறத்தல், செல்லுதல்.
இவறன்மை - லோபத்தன்மை.
இவுளி - குதிரை.
இவ் - இவை.
இழத்தல் - உள்ளபொருள் இல்லாதுபோதல்.
இழிகண் - எப்போதும் பீளைநீரொழுகுங்கண்.
இழிசொல் ச - குறளை பொய் கடுஞ்சொல் பயனில்வார்த்தை என்பன.
இழிஞர் - சண்டாளர்.
இழிதகவு - எளிமை.
இழிதல் - தாழ்தல்.
இழிந்தோர் - தாழ்ந்தோர்.
இழிவு - இகழ்ச்சி, கீழ்மை, பள்ளம்.
இழுக்கல் - ஒழுக்கந்தவறுதல், வழுக்குதல்.
இழுக்கு - தவறு, கேடு, வழுக்குநிலம்.
இழுது - நெய், குழம்பு, குழைசேறு.
இழுதை - அறிவிலான்.
இழுத்தல் - ஈர்த்தல்.
இழுப்பாணி - கலப்பையினேர்க்காலில் நுகம்பூட்டுதற்கிடும் ஊற்றாணி.
இழுமெனல் - ஒலிக்குறிப்பு, இன்னிசை.
இழும் - மதுரம்.
இழை - ஆபரணம், நூல், பூண்வடிவாகக்கட்டிய மாலை. (கலித்).
இழைதல் - கயிறுமுதலியன முறுக்குநெங்குதல்.
இழைத்தல் - செய்தல், இரத்தினமுதலிய வற்றைப்பதித்தல், பாய்முதலிவற்றை யிழைத்தல், எழுதுதல்.
இழைபு - வல்லொற்றின்றிச் செய்யுள் தொடுப்பது.
இளகுதல் - குழைவாதல், நரைதல், நெகிழ்தல், அசைதல்.
[இளங்கலையன் - ஓர்சாதி நெல்].
இளங்கோக்கள் - வைசியர்.
இளநீர் - தெங்கினிளங்காய், அக்காயினுள்ளிருக்கும் நீர்.
இளந்தலை - கீழ்மை (பாரதமுதற்ருக).
இளந்தென்றல் - மெல்லெனவீசுந் தென்றல்.
இளமரக்கா - வயல்சூழ்சோலை.
இளமை (இளந்தை) - இளமைப்பருவம், வயதிற்குறைதல்.
* இளம்பிடி - பெண்.
இளவரசு - இராச்சியத்தொழில் பயிலும் இராசகுமாரன்.
இளவல் - பின்பிறந்தோன், இளையோன்.
இளவேனில் - ஓரிருது. (சித்திரை வைகாசி மாதங்கள்).
இளாவிருதம் - ஓர் கண்டம்.
இளி - எழிசைகளுளொன்று, இசை, இழிவு, சிரிப்பு, இணக்கம்.
இளித்தல் - அவமதித்தல், அருவருத்தல், சிரித்தல், உரித்தல். (நிகண் கக ளகர வெதுகை ரு).
இளை - காவற்காடு, இளமை, தலைக்காவல், கோழை, பூமி, வேலி, புதன் மனைவி, மேகம்.
இளைஞன் - இளம்பிராயமுடையோன்.
இளைத்தல் - தளர்தல், இரங்கல்.
இளையாள் - பின்பிறந்தாள், இலக்குமி.
இளையெள் - எள்ளினோர்சாதி.
இறகு - சிறகு.
இறக்கம் - பொறிவு.
இறங்கர் - குடம்.
இறங்குதல் - கீழ்நோக்கிச் செல்லுதல்,

தாழ்வடைதல்.
இறடி - கருந்தினை.
இறத்தல் - சாதல், அழிதல், கடத்தல், மிகுதல், கழிதல்.
இறப்பு - சாவு, அழிவு, கடத்தல், மிகை, வீட்டிறப்பு.
இறலி - இத்திமரம்.
இறல் - சிறுதூறு.
இறவு - இறால்மீன், தேன்கூடு.
இறவுளர் - குறிஞ்சிநிலமாக்கள்.
இறவுள் - குறிஞ்சிநிலம்.
இறவை - ஏணி, விரற்புட்டில்.
இறால் - தேன்கூடு, இறால்மீன், கார்த்திகை நட்சத்திரம், எருது.
இறுகுதல் - செறிதல், கடினப்படுதல், முடிச்சு முதலியன நெகிழ்வின்றியிருத்தல்.
இறுக்கர் - பாலைநிலமாக்கள்.
இறுங்கு - சோளம்.
இறுதல் - அழிதல், அறுதல், முரிதல், முடிதல், கெடுதல்.
இறுதி - சாவு, உலகமுடிவு, அந்தம், எண்ணின் முடிவு.
இறுத்தல் - முடித்தல், அழித்தல், அறுத்தல், கடன்தீர்த்தல், தங்குதல், விடை சொல்லுதல், ஒடித்தல்.
இறுப்பு - குடியிறை.
இறுமாத்தல் - அகங்கரித்தல், நிமிர்தல்.
இறும்பு - இளமரக்காடு, குறுங்காடு, தாமரைப்பூ, சிறுமலை, அதிசயம்.
இறும்பூது - அதிசயம், சிறுதூறு, தளிர், பெருமை, மலை.
இறுவரை - ஆயுண்முடிவு, முடிவிடம்.
இறுவாய் - முடிவு.
இறை - அரசன், பிரமன், உயர்ந்தோன், எப்பொருட்கு மிறைவன், சிவன், கடவுள், மூத்தோன், குரு, அற்பம், பறவையினிறகு, அழிவு, கடன், குடிகள் அரசனுக்குக்கொடுக்கும் ஆறிலொன்று, காலவிரைவு, கையிறை, கைவிரல், தலைமை, தங்கல், மறுமொழி, வீட்டிறப்பு, வருத்தம், நடுநிலைமை, பெருமை, (உயர்திணைப் பொருள்களில் இறைவன் எனவும்).
இறைகூடை - நீரிறைக்குங்கூடை.
இறைச்சி - மாமிசம், நேயம்.
இறைச்சிப்பொருள் - அவ்வந்நிலக்கருப்பொருளாற்போந்தகுறிப்புப்பொருள்.
இறைஞ்சி - மரவுரி.
இறைஞ்சுதல் - வணங்குதல், தாழ்தல், குனிதல்.
இறைத்தல் - நீர்முதலியவற்றைப்புறத்தே சொரிதல்.
இறைமை - தலைமை, தெய்வத்தன்மை.
இறையனார் - சங்கப்புலவரு ளொருவர். (அகப்பொருணூல்செய்தவர்)
இறையிலி - தருமநிலம். (அரசிறைகொடுக்கப்படாத நிலம்.)
இறைவி - தலைவி.
இறைவை - இறைகூடை, ஏணி.
இற்செறிப்பு - கன்னிகையைவீட்டினின்று வெளியேபோகாவண்ணம் இருத்துதல்.
இற்புலி - பூனை.
* இற்றி - இறைச்சி.
இனம் - சுற்றம், ஓரினம்.
இனன் - சூரியன்.
இனி - மேல், பின்.
இனிமை - இனிதாதல்.
இனைதல் - இரங்குதல், வருந்துதல்.
இனைய - இவைபோன்ற.
இன்கண் - இன்பம், தயவு.
இன்பம் - மனமகிழ்ச்சி, இனிமை, சுகாநுபவம், செய்யுளுக்குரிய குணவலங்காரம் பத்தனுளொன்று (சொல்லினும் பொருளினுஞ் சுவையுடைத்தாதல்).
இன்மை - இல்லாமை. (வறுமை).
இன்றி (குறிப்புவினையெச்சம்) - இல்லாமல்.
இன்று - இத்தினத்தில், இப்பொழுது, வினையாயின்: இல்லை, இல்லாமல்.
இன்ன - இவைபோல்வன.
இன்னணம் - இப்படி.
இன்னம் - இன்னும்.
இன்னல் - துன்பம்.
இன்னாமை (இன்னாங்கு) - இனியதல்லாமை (துன்பம்).
இன்னார் - பகைவர்.
இன்னிசைவெண்பா - இரண்டாமடியிறுதியிற் றனிச்சொற்பெறுது நாலடியான்வரும் வெண்பா.
இன்னினி - இனி.
இன்னும் - மேலும்.
இன்னே - இப்பொழுது, இவ்விடத்தில்.

ஈ

ஈ - ஓர்சிறுசெந்து, (இலையான்), தேன் வண்டு, முன்னிலையசை, (சென்றீ பெரும), இறகு.
ஈகம் - சந்தனமரம்.
ஈகை - கொடை, பொன், *இண்டங் கொடி.
ஈங்கண் - இவ்விடத்து.
ஈங்கு - இண்டங்கொடி, இவ்விடத்து.
ஈங்கை - இண்டங்கொடி. (மண்டலவர் ஈகை எனப்பொருள் கூறினர்).
ஈசத்துவம்-எல்லோர்க்குமீசனாயிருத்தல் (அட்டசித்திகளுளொன்று).
ஈசல் - இறகுமுளைத்த கறையான்.
ஈசன் - கடவுள், எப்பொருட்குமிறைவன் ஆளுகிறவன், சிவன், ஈசானதிக் கினதிபதி, மூத்தோன், குரு.
ஈசன்றினம் - ஆதிரை.
ஈசானம் - வடகிழக்குத்திக்கு, சிவனு டைய ஐந்துமுகங்களுளொன்று, ஓர் மந்திரம்.
ஈசானன்-சிவன், வடகிழக்குத்திசையின் தேவதை.
ஈசுர (ஈசுவர) - ஓர்வருடம்.
ஈசுரபேதம் ரு - பிரமா விட்டுணுஉருத் திரன் மகேசுரன் சதாசிவன்விந்து நா தம் சத்தி சிவம் என்பன. (இவை சைவசித்தாந்தங்களிற்கூறப்பட்டன)
ஈசுரமூலி - பெருமருந்துக்கொடி.
ஈசுரம்- சைவசித்தாந்த தத்துவங்களு ளொன்று.
ஈசுரன் (ஈசுவரன்) - கடவுள், சிவன்.
ஈஞ்சு - ஈச்சமரம்.
ஈடணை - பேரவா, (இது அர்த்தேடணை புத்திரேடணைலோகேடணை எனமூன் றும்; அர்த்தேடணையாவது பெருந் தொகையான பொருளையீட்டமுயலு தல். புத்திரேடணை:புத்திரரைப்பெற முயலுதல்; இதனைச்சிலர் களத்தி ரேடணையென்பர். லோகேடணை: பலதேசங்களை அல்லதுபலபூமிகளைத் தனதாக்கமுயலுதல்).
ஈடாட்டம் - தளர்வு.
ஈடாதண்டம் (ஏழதண்டம்) - ஏர்க்கால்.
ஈடு-உவமை, கடனுக்குக்கொடுக்கப்படும் ஈடு, பெருமை, குழைவு, வலி, துன்பம்.
ஈடேறுதல் - உய்தல்.
ஈட்சணம் - பார்வை.
ஈட்டம் - சம்பாத்தியம், கூட்டம், வலி மை.
ஈட்டி - ஓராயுதம்.
ஈண்டு - இவ்விடத்து, இவ்வாறு, விரை வாக.
ஈண்டுதல் - நெருங்குதல்.
ஈதல் - கொடுத்தல், படிப்பித்தல்.
ஈதி - நாட்டில் கிருஷிகத்துக்குவரும் அறுவகைக்கேடுகள், (அவை: அதிக மழை மழையின்மை விட்டில் எலி கிளி அரசர் நெருங்கியிருத்தல் என் பன) வேதனைபண்ணும் நோய்.
ஈந்து - ஈஞ்சு.
ஈமம் - சுடுகாடு, (கடைக்குறையாய் ஈம் எனவும்)பிணஞ்சுடுதற்கடுக்கியவிறகு.
ஈயம் - பஞ்சலோகங்களுளொன்று.
ஈயல் - ஈசல், இந்திரகோபம்.
ஈரங்கோலியர் - வண்ணார்.
ஈரப்பலா - ஓர்மரம்.
ஈரம் - அன்பி, குளிர்ச்சி, நனைவு.
ஈரலிப்பு - ஈரம்.
ஈரல் - ஈருள்.
ஈரறிவுயிர் - அட்டை நந்து முதலியன. (இவைபரிசத்தையும் சுவையையும் அறியும்).
ஈராடி - காற்றுவீசியோய்ந்து மழைக் குறியாயிருக்கும் நிலை.
ஈருள் - ஈரல்.
ஈரொட்டு - தன்னிற்பெரிய வர்த்தகனி டத்தேவிற்றபொருளின் விலையையும் விற்காத பொருளையுந்தருவதாகப் பொருந்திப் பொருள்களை வாங்கிச் செய்யும் வர்த்தகம்.
ஈர் - சிறுபேன், இறகு.
ஈர்க்கு (ஈர்க்கில்) - அம்பிறகு, ஓலையி னரம்பு.
ஈர்தல் - அரிதல்.
ஈர்த்தல் - இழுத்தல், உரித்தல் (புலியி னீருரி).
ஈவு - கொடை, பிரித்துக்கண்டபேறு.
ஈவோன் - நூல்கற்பிப்போன், கொடை யாளி.
ஈழம் - பொன், கள். சிங்களதேசம்.
ஈளை - ஈழை, (தொய்வுநோய்).

ஈறு - மரணம், முடிவு.
ஈற்று - ஈன்ற பசு.
ஈற்று - ஈனுகை.
ஈற்றுளைதல்-ஈனுதற்றுவேதனைப்படல்.
ஈனம் - இழிவு, குறைவு (வேறுசொல்லின்பின் வரின் கீனம் எனவும்).
ஈனல் - கருவுயிர்த்தல்.
ஈனன்-இழிஞன்.
ஈண் - இவ்விடத்து, இவ்வுலகத்து.
ஈன்றூர் - தாய்தந்தையர்கள்.

## உ

உ - உந்த, முன் பின் மேல் என்னுமிவற்றுளொன்றை யுணர்த்துஞ் சுட்டு உ-ம்: உக்கொற்றன், உம்மையதனிலுலகமுண்டோன்றன்மகனீ; இது காலத்தின் முன்னைச்சுட்டியது. ஊழையுமுப்பக்கங்காண்பர்; இது பின்னைச் சுட்டியது. உம்பர்; மேலிடத்தைச்சுட்டியது. அறத்திறுஉங்காக்கமுமில்லை என்புழி உயர்வைச் சுட்டியது. இச்சுட்டு அ இ என்பன போலச் சொல்லினகத்தும்வரும். உவன் உங்கு; ஊங்கு என நீண்டும் வரும்), பெயராயின், சிவன். (ஆலுக்கணிகலம்; இங்கே உக்கு சிவனுக்கு)
உகத்தல்-மகிழ்தல்.விரும்புதல்,உயர்தல்.
உகப்பு- உயர்ச்சி, மகிழ்ச்சி.
உகமுடிவு- ஊழி.
உகம்- (யுகம்)- கிருத முதலிய நான்கு யுகங்கள். இரட்டை,நுகம்,பூமி(இரகு நாட்டு சஉ).
உகளம் - இரண்டு.
உகளல் - துள்ளிப்பாய்தல், இரட்டித்தல், (உகளி பிறழ்ந்து எனச் சிந்.)
*உகா-ஓமைமரம்.
உகிர்- நகம்.
உகுதல்- அழிதல், உதிர்தல், கழலல், சிந்தல், சொரிதல்.
உகுத்தல்- உதிர்த்தல், ஊற்றுதல், தூவுதல்.
உகைதல்-எழுதல், செல்லுதல்.
உகைத்தல்-செலுத்துதல்.
உக்கணம்- தெளித்தல்.
உக்கம்- இடபம், ஆலவட்டம், பொன், உடம்பினடுக்கூறாகியமருங்கு, (திருமுரு க0அ.)
உங்காரி - அஃகுல்லியென்னுஞ் சிற்றுண்டி.
உக்கிரம்-கொடுமை, கோபம், *தலைக்காவல்.
உக்கிரன் - வீரபத்திரன், கோபமுள்ளவன்.
உங்காரம் - உம்மெனல். (அதட்டு)
உங்கு- உவ்விடத்தே.
உங்கை- உன்றங்கை, உன்தாய்.
உசனன்- சுக்கிரன்.
உசனம்-கருமநூல்பதினெட்டுள்ஒன்று.
உசாவுதல்- பிறருடன் ஆலோசித்தல்.
உசிதம் -தக்கது.
*உசிலை - சீக்கிரிமரம்.
உசீரம் - இலாமிச்சை.
உசு - உளு.
உச்சம்-உயரம், கிரகங்களின்உச்சராசி, தலைக்குநேரேயுள்ளஇடம், மத்தியானகாலம், எடுத்தலோசை.
உச்சயினி- அவந்திநகரம்.
உச்சரித்தல் - எழுத்து முதலியவற்றை வாயாற் சொல்லுதல்.
உச்சாடனம்- பேய் முதலியவற்றையகற்றுதல்.
உச்சாரம் - மலம்.
உச்சி - உச்சந்தலை, தலைக்குநேரான இடம், மத்தியானம், மேலிடம், நாய்.
உச்சிட்டம்- உண்டெஞ்சிய உணவு.
உச்சிதம் - மேன்மை, கொடை (திருப்புகழ்).
உச்சுவாசம் - சுவாசத்தையுள்ளேயிழுத்தல், நூலின்பகுதி.
உச்சேதம்- களைதல், அகற்றல்.
உச்சைச்சிரவம்- இந்திரனது குதிரை.
உஞற்று- ஊக்கம், முயற்சி.
உஞற்றுதல்- செய்தல், முயலுதல், தவறுதல்.
உஞ்சல்- ஊஞ்சல்.
உஞ்சவிருத்தி- சிந்திய தானியங்களைப் பொறுக்குதலாற் சீவித்தல்.
உஞ்சை - அவந்திநகரம்.
உடக்கு - திருகாணிநின்று சுழலுதற்கேற்ற உட்புரியுடையதாய்ச் செய்யப்பட்ட கருவி.
உடங்கு - உடன்.
உடசம் - பன்னசாலை, வெட்பாலை.
உடந்தை-கூட்டுறவு.
உடம்படுமெய்-நிலைமொழியீற்றுயிரோடு

வருமொழி முதலிலுள்ள உயிர் சந்திக்கும்போது தோன்றும் மெய்யெழுத்து.
உடம்பிடி - வேல்.
உடம்பு - உடல், மெய்யெழுத்து.
உடம்பொடு புணர்த்தல் - வேறுமொரு பொருளைப் பயக்கத்தக்க சொல்லை இயைத்துக் கூறுதல்.
உடலல் - கோபித்தல், பொருதல்.
உடலிலுள்ள துவாரம் கூ - கண் உ காது உ மூக்கு உ வாய் குதம் குய்யம் என்பன.
உடல் - சரீரம், மெய்யெழுத்து, பொன்.
உடற்குறை - தலைபற்றவுடல், எண்வகை யுடற் குறைகள்.
உடற்குறை அ - குறள் செவிடு ஊமை கூன் மருள் குருடு மா உறுப்பிலாப் பிண்டம் என்பன. (மருள் - உறுப்பு மயக்கம், மா - விலங்குருவம்).
உடற்றல் - பெருங் கோபங் கொள்ளல், உபத்திரவஞ் செய்தல்.
உடனிகழ்ச்சி - ஒருங்கு தொழில்நிகழ்தல்.
உடனிலை - கூடிநிற்றல்.
உடன் - அந்நேரமே, ஒருங்கு.
உடன்கட்டையேறல் - நாயகனைத் தகனஞ் செய்யுமக்கினியில் துக்கத்தை யாற்றாத மனைவி விழுந்து எரிதல்.
உடன்படுதல் - இசைதல்.
உடன்பிறந்தோர் - சகோதரர்.
உடன்பிறப்பு - ஒருவயிற்றிற் பிறத்தல்.
உடன்போக்கு - அகப்பொருளில் தலைவனுடன் தலைவி செல்லுதல்.
உடு - விண்மீன், அம்புச்சிறகு, அம்பு, மரக்கலமோட்டுங் கோல், அகழி, *ஆடு.
உடுக்கு(உடுக்கை) - இடைசுருங்குபறை, ஒருகட்பறை.
உடுக்கை - வஸ்திரம்
உடுத்தல் - ஆடைதரித்தல்.
உடுபதி - சந்திரன்.
உடுபம் - தெப்பம்.
உடுப்பு - உடை.
*உடுப்பை - ஓடுமரம்.
உடும்பு - ஓர்பிராணி.
உடுவின் வேந்தன் - சந்திரன்.
உடுவை - நீர்நிலை.
உடை - புடவை, குடைவேலமரம், செல்வம்.
உடைகுளம் - பூராடநாள்.
உடைஞாண் - அரைஞாண்.
உடைதல் - தகருதல், மனந்தளர்தல், நிலைகுலைதல்.
உடைத்தல் - தகர்த்தல்.
உடைப்பு - நீர்முசிப்பு, தகர்ப்பு.
உடைமை - உடையனாயிருக்குந் தன்மை.
உடையல் - உடைந்தபொருள்.
உடையவன் - உரிமைக்காரன், கடவுள்.
உடைவாள் - அரையிற் கட்டியிருக்கும் வாள்.
உடைவேல் - குடைவேலமரம்.
உட்கருவி - அந்தக்கரணங்கள்.
உட்கார்தல் - இருத்தல்.
உட்குதல் - அஞ்சுதல், உள்வாங்குதல், நாணுதல்.
உட்கொள்ளுதல் - விழுங்குதல், சிந்தித்தல்.
உட்கோள் - கருத்து.
உட்சமயம் சு - சைவம் பாசுபதம் மாவிரதம் காளாமுகம் வாமம் வைரவம்என்பன. (பிறவாறுங்கூறுப)
உட்டணசிகை - செவ்வாய் சூரியன் சனி இவர்களுடைய ராசிகளில் அவாவருடைய நவாம்சமாய் வரும் பாதம்.
உட்டணம் (உஷ்ணம்) - வெப்பம்.
உட்டிணீடம் (உஷ்ணீஷம்) - தலைப்பாகை.
உட்பகை சு - காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம் என்பன.
உட்படுதல் - அகப்படுதல்.
உட்பொருள் - தாற்பரியம்; மறைந்து நிற்கும் பொருள்.
உணங்கல் - உலர்ந்தபூ, வற்றல், வாடுதல், உலர்தல்.
உணராமை - மயக்கம்.
உணர்ச்சி - நினைவு, அறிவு.
உணர்தல் - அறிதல், துயில்முதலியவற்றினின்று நீங்குதல், *பிரிதல்.
உணர்த்தல் - ஊடறீர்த்தல், அறிவித்தல்.
உணர்ந்தோர் - அறிவிற்சிறந்தோர்.
உணர்வு - அறிவு, தெளிவு, நீங்கல், ஊடலொழிதல்.
உணவு - போசனம், சோறு, பறவைகளினதும் சிலமிருகங்களினதும் உணவு.
உண்கலம் - போசனபாத்திரம்.
உண்டாட்டு - மகளிர்மதுவுண்டு செய்யும்

வெறியாட்டு.
உண்டாதல் - உளதாதல்.
உண்டி - உணவு, சோறு.
உண்டிச - உண்பன தின்பன நக்குவன பருகுவன.
உண்டு - உண்மையென்னும் பண்படியாகப்பிறந்த (ஐம்பான் மூவிடங்களுக்கும் பொதுவான) குறிப்புவினை முற்று, புசித்து எனப் பொருள்படும் வினையெச்சம்.
உண்டை - திரளை, படைவகுப்பு.
உண்ணம் - மென்மை. (திருவிளை உக்கிர வேல்வளை சஉ).
உண்ணல் - புசித்தல், அகப்படுத்துதல்.
உண்ணி - ஓர்பிராணி. (இரத்தத்தையுண்பது).
உண்மை - உளதாந்தன்மை, மெய், ஊழ்.
உதகக்கிரியை - இறந்தாரைக் குறித்துச் செய்யுந் தர்ப்பணம்.
உதகம் (உதம்) - நீர்.
உதகும்பம் - நீர்க்குடம்.
உதக்கு - வடக்கு.
உதடு - அதரம்.
உதணம் (உதண்) - மொட்டம்பு.
உததி - கடல்.
உதபானம் - கிணறு.
உதயகிரி - சூரியனுதிக்கும் மலை.
உதயம் - கிரகங்களும் இராசிகளுமுதித்தல், கிரகங்கள் சூரியனாலுண்டான அத்தமனம் நீங்கிக்காணப்படுதல், விடியற்காலம், உதயலக்கினம்.
உதயன் - சூரியன்.
உதரபந்தனம் - ஓராபரணம், யோகபட்டிகை.
உதரம் - வயிறு.
உதரம்பரி - தன்வயிற்றை நிறைத்தலையே பொருளாகக் கொள்வோன்.
உதராக்கினி - பசி.
உதவகன் - அக்கினி.
உதவல் - கொடுத்தல், உபயோகப்படுத்தல், துணைசெய்தல்.
உதவி - துணை.
உதள் - ஆட்டுக்கடா, ஆடு, செம்மறியாடு.
உதறுதல் - அதிரவீசுதல்.
உதாகரணம் (உதாரணம்) - எடுத்துக்காட்டு.
உதாசனன் - அக்கினி.
உதாசீனன் - தருக்கம் வழக்கு முதலியவற்றில் நடுநிலை தவறாதிருக்கும் பொதுவன்.
உதாத்தம் - எடுத்தலோசை, செய்யுளணிகளுளொன்று. (வியக்கத்தக்க செல்வமுதலியவற்றின் உயர்ச்சியை மிகுத்துச் சொல்வது).
உதாரம் - கொடை, சிறப்பு, உற்சாகம், அணியிலக்கணத்திற் குறிப்பினொரு பொருளுணரப்படத்தோன்றல் (இது குணவலங்காரம் பத்தனுளொன்று).
உதாரன் - கொடையாளி, பெரியோன், உற்சாகமுடையோன், சிறந்தவன்.
உதானம் - கண்டத்திலிருக்கும் வாயு.
உதி - உலைத்துருத்தி, வேதமுதலிய நூல்கள். (சிவராத் கன்மாட சகு).
உதிட்டிரன் - தருமபுத்திரர்.
உதித்தல் - பிறத்தல், உதயஞ்செய்தல், தோற்றுதல்.
உதியன் - சேரன்.
உதிரம் - இரத்தம்.
உதிரன் - செவ்வாய்.
உதிரி - உதிர்ந்து கிடக்கும் பொருள்.
உதிர்தல் - சிதறல்.
உதிர்த்தல் - சிதறச்செய்தல்.
உதீசி - வடக்கு.
உதும்பரம் - அத்திமரம், வாயிற்படி, செம்பு.
உதைதல் (உதைத்தல்) - காலினால் தாக்குதல்.
உத் (உபசர்க்கம்) - மேல்.
உத்தமம் - சிறந்தது, நன்மை.
உத்தமாகாணி - ஓர்கொடி.
உத்தமாங்கம் - தலை.
உத்தரகோசமங்கை - ஓர்சிவதலம்.
உத்தரட்டாதி - ஓர்நட்சத்திரம்.
உத்தாணி - நீரையள்ளுங் கரண்டி.
உத்தரமீமாஞ்சை - வியாசசூத்திரம்.
உத்தரம் - வடக்கு, மறுமொழி, ஓர்நட்சத்திரம், கட்டுக்கோப்பின் மேல்விட்டம், (உத்திரம் என பாரத இராசசு), மேலானது, ஊழித்தீ, பின்.
உத்தரவு - கட்டளை, விடை.
உத்தராசங்கம் - உத்தரீயவஸ்திரம்.
உத்தராடம் - ஓர்நட்சத்திரம்.
உத்தராரணி - அரணியில்ஊன்றிக் கடைதற்குரிய மரத்துண்டு.

உத்தரி - குதிரை. (இரகு திக் கூரு).
உத்தரிப்பு - தனது கோட்பாட்டைத் தாபித்து எதிரியின் கோட்பாட்டை நிராகரித்தல்.
உத்தரீயம் - தோளிலணியும்வஸ்திரம்.
உத்தரோத்தரம் - மேலும்மேலும்.
உத்தாபனம் - எழுப்புதல், துயிலெழுப்புதல்.
உத்தானம் - அடுப்பு, எழுப்புதல், துயிலெழுதல்.
உத்தி - சொல்லுதல், ௩உ உத்திகள். பாம்பின்படத்திலுள்ளபொறி, சீதேவியென்னுந் தலைக்கோலம், தேமல், ஆபரணத்தொங்கல்.
உத்தி ௩உ - நுதலிப்புகுதல் ஒத்துமுறைவைப்பு தொகுத்துச்சுட்டல் வகுத்துக்காட்டல் முடித்துக்காட்டல் முடிவிடங்கூறல் தானெடுத்துமொழிதல் பிறன்கோட்கூறல் சொற்பொருள் விரித்தல் தொடர்ச்சொற்புணர்த்தல் இரட்டுறமொழிதல் ஏதுவின் முடித்தல் ஒப்பின்முடித்தல் மாட்டெறிந்தொழுகல் இறந்ததுவிலக்கல் எதிரதுபோற்றல் முன்மொழிந்துகோடல் பின்னதுநிறுத்தல் விகற்பத்தின் முடித்தல் முடிந்தது முடித்தல் உரைத்துமென்றல் உரைத்தாமென்றல் ஒருதலைதுணிதல் எடுத்துக்காட்டல் எடுத்தமொழியினெய்தவைத்தல் இன்னதல்லதிதுவெனமொழிதல் எஞ்சியசொல்லினெய்தக்கூறல் பிறநூல் முடிந்தது தானுடன்படுதல் தன்குறி வழக்கமிகவெடுத்துரைத்தல் சொல்லின் முடிவினப்பொருள் முடித்தல் ஒன்றினமுடித்த றன்னின முடித்தல் (ஓரிலக்கணமுடையனவற்றை முடிக்குமிடத்து எடுத்துக்கொண்டதையேயன்றி அதனினத்தையும் கூறிமுடித்தல்) உய்த்துணரவைப்பு என்பன.
உத்தியம் - ஓர்யாகம்.
உத்தியாபனம் - விரதாநுட்டானத்தை முடித்தல்.
உத்தியானம் (உய்யானம்) பூந்தோட்டம்.
உத்தியோகம் - முயற்சி, உற்சாகம்.
உத்தீபனம் - அக்கினியைச் சொலிப்பித்தல்.
உத்துங்கம் - உயர்ச்சி, மகத்துவம்.
உத்தூளனம் - விபூதியைக் குழையாமற்பூசுதல்.
உத்தேசம் - நோக்கம், மதிப்பு.
உந்தி - வயிறு, கொப்பூழ், நீர், யாறு, கடல், நீர்ச்சுழி, தேர்ச்சில், தேர்த்தட்டு யாழிறுப்பினொன்று, மகளிர்விளையாட்டிலொன்று, யாற்றிடைக்குறை, (மதுரைக் உசடு).
உந்திக்கமலம் - திருமாலின் கொப்பூழ். (இது தாமரைவடிவானது).
உந்திபூத்தோன் - விட்டுணு.
உந்துதல் - தள்ளுதல், எறிதல், யாழிசைக்கும்வகையுளொன்று, செலுத்துதல், உயர்தல்.
உந்துரு - எலி, பெருச்சாளி.
உந்தை - உன்பிதா.
உப (உபசர்க்கம்) - அடுத்து, சமீபமாக, துணையாக.
உபகண்டம் - கழுத்துக்குச் சமீபமானவிடம், சமீபம்.
உபகமனம் - சமீபத்திற்போதல்.
உகரணம் - யாதேனுமொரு கருமத்தில் அங்கமாயிருக்கும்பொருள், இராசசின்னம், உதவி, துணைக்காரணம்.
உபகற்பம் - முக்கியமாகச் சொல்லபட்டபொருள்கிடையாதவிடத்து இரண்டாவதாகக் கற்பிக்கப்படும் பொருள்.
உபகாரம் - உதவி, கொடை.
உபகாரி - கொடையாளி, உதவிசெய்வோன்.
உபக்கிரகம் - குளிகன் முதலிய பாவக்கிரகங்கள்.
உபக்கிரமணிகை - பாயிரம்.
உபக்கிரமம் - தொடக்கம்.
உபக்குரோசம் - நிந்தை.
உபசங்காரம் - முடிவுரை.
உபசமம் - மனமடங்குதல்.
உபசயம் - மேலோங்குதல், விருத்தி, சோதிடத்தில் இலக்கினத்திலிருந்து ௩ ௬ ௰ ௧௧ம் இடங்கள்.
உபசருக்கம் - தாதுக்களுடன் கூடிவரும் பிர முதலிய சொற்கள்.
உபசல்லியம் - கிராமாந்தம். (பஞ்சமர்சேரி).
உபசாந்தி - அடக்கம், தணிவு.
உபசாரம் - மரியாதைசெய்தல். முகமன் கூறல், சேவித்தல்.

உபசிலேடம் - ஏகதேசமான சம்பந்தம்.
உபசுந்தன் - ஓரரக்கன். (சுந்தனுடைய [தம்பி).
உபதானம் - தலையணை.
உபதேசம் - போதனை, தீட்சை.
உபதை - ஈற்றயலெழுத்து, அறம் பொருள் இன்பம் உயிரச்சம் என்பவற்றை விரித்துக்கூறுவித்து அரசர் மந்திரி முதலாயினோரைச் சோதித்தல்.
உபத்தம் - ஆண் பெண்களுடைய குறி.
உபத்தானம் - வணங்கிநிற்றல், அந்தணர்கள் சந்தியாவந்தனத்தினீற்றிலெழுந்துநின்று சொல்லும் மந்திரங்கள்.
உபத்திரவம் - பெருந்துன்பம்.
உபநயனம் - பூணூல் தரிப்பித்தல். (வருணாச்சிரம தருமங்களையநுட்டித்தற்கேற்றநிலையில் மாணவகனை வருவித்தலென்பது சொற்பொருள்).
உபநிடதம் - வேதங்களினுட் பொருளையடக்கியனவாய் வடமொழியிலுள்ள வேதாந்த நூல்கள்.
உபநிடதம் ௧0அ - ஈசாவாஸ்யம் கேநம் கடம் பிரஸ்னம் முண்டகம் மாண்டூக்கியம் தைத்திரீயம் ஐதரேயம் சாந்தோக்கியம் பிருந்தாரணியம் பிரமம் கைவல்லியம் சாபாலம் சுவேதாசுவதரம் ஹம்ஸம் ஆருணிகம் சர்ப்பம் நாராயணம் பரமஹம்ஸம் அமிர்தபிந்து அமிர்தநாதம் அதர்வசிரம் அதர்வசிகை மைத்திராயணி கௌஷீதகம் பிரஹஜ்ஜாபாலம் நிர்ஸிம்ஹதாபினி காலாக்கினிருத்திரம் மைத்திரேயி சுபாலம் க்ஷுரிகை மந்திரிகம் ஸர்வஸாரம் நிராலம்பம் சுகரகஸ்யம் வஜ்ரஸூசி தேஜோபிந்து நாதபிந்து தியானபிந்து பிரமவித்தை யோகதத்துவம் ஆன்மபோதம் நாரதபரிவிராஜகம் திரிசிகிப்பிராமணம் சீதா யோகசூடாமணி நிர்வாணம் மண்டலப்பிராமணம் தக்ஷிணாமூர்த்தி சரபம் ஸ்கந்தம் திரிபாத் விபூதிமகாநாராயணம் அத்வயதாரகம் ராமரகசியம் ராமதாபினி வாஸுதேவம் முற்கலம் சாண்டிலியம் பைங்கலம் பிக்ஷுகம் மகத் சாரீரகம் யோகசிகை துரீயாதீதாவதூதம் சந்நியாசம் பரமகம்ஸபரிவிராஜகம் அக்ஷமாலிகை அவ்வியக்தம் ஏகாக்ஷரம் அன்னபூர்ணா சூரியம் அக்ஷி அத்தியான்மம் குண்டிகா சாவித்திரி ஆத்துமம் பாசுபதப்பிரமம் பரப்பிரமம் அவதூதம் திரிபுரதாபினி தேவி திரிபுரம் கரம் பாவனம் ருத்ர ஹ்ருதயம் யோககுண்டலினி பஸ்மஜாபாலம் ருத்திராக்ஷஜாபாலம் கணபதி தர்சனம் தாரஸாரம் மகாவாக்கியம் பஞ்சப்பிரமம் பிராணாக்கினிகோத்திரம் கோபாலதபனம் கிருஷ்ணம் யாஞ்ஞவல்க்கியம் வராகம் சாட்டியாயனி அயக்கிரீவம் தத்தாத்திரேயம் காருடம் கலிசந்தரணம் சாபாலி சௌபாக்கியலக்ஷ்மி சரஸ்வதி பஹ்விருசம் முக்திகம் என்பன.
உபநிட்கிரமணம் - குழந்தையை வீட்டினின்று புறத்தேகொண்டுசெல்லுதல்.
உபந்யாசம் - முகவுரை, பிரசங்கம்.
உபபத்தி - நிகழ்ச்சி.
உபபுராணம் - பதினெண் புராணங்களைச் சார்ந்தனவாகிய புராணங்கள். (அவை நாரசிங்கம் சனற்குமாரம் நாரதீயம் சிவதன்மம் துருவாசம் நந்திகேச்சுரம் உசனம் காளிகம் வாருணம் சாம்பவம் பராசரம் பார்க்கவம் காபிலம் மானவம் வாசிட்டலைங்கம் சௌரம் மாரீசம் ஆங்கிரம் என்பன).
உபமலம் - உள்ளழுக்கு.
உபமானம் (உ வ மா ன ம்) - ஒப்புப்பொருள், எண் வகையளவைகளுளொன்று, (காணாத பொருளைக் கண்டபொருளால் நிச்சயித்தல்.)
உபமேயம் (உவமேயம்) - ஒப்பிக்கப்பட்ட பொருள்.
உபயகோமுகி - கன்றையீனத்தொடங்கியபசு.
உபயம் - இரண்டு, இரண்டுதன்மைகளையுடையபொருள்.
உபயராசி - மிதுனம் கன்னி தனு மீனம் என்பன.
உபயவோசை - படபட கலகல என்பன போன்ற அடுக்கொலி.
உபயாநுகம் - நிருத்தம் கீதம் ஆகிய இரண்டுக்கு மிசைய வாசிக்கப்படும் வாத்தியம் (சிவப் அரங் அரும்பத கச).
உபயோகம் - யாதேனுமொன்றுக்குப் பிரயோசனப்படுதல்.

உபரதி - மனைவி மக்கள் முதலியவர்களோடு கூடியிருப்பினும் பற்றின்றியொழுகுதல்.
உபராகம் - கிரகணம்.
உபரி - மேல்.
உபரிகை (உப்பரிகை) - மேன்மாடம்.
உபரிசரதம் - நாயகிமேலாகப் புணர்தல்.
உபரோதம் - தடை.
உபலக்கணம் - ஒருசொல்லுக்குக் கூறிய விதி அதற்கினமான பிறசொற்களுக்கும் பொருந்துமெனக் கொள்ளுதல்.
உபலப்தி - அடைதல்.
உபலம் - சிறுகல், பளிங்கு.
உபலாலனம் - சிறுவர் முதலாயினோரிடத்து அதிகநேசம்பாராட்டி விளையாடுதல்.
உபலாளனம்-தாய்மைசெய்தல்.
உபவனம் - பூஞ்சோலை. (உண்டாக்கப்பட்ட சோலை).
உபவாசம் - ஒருநாள்முழுதும் உணவின்றியிருத்தல்.
உபவீதம்-பூணூல்,வலம்வளையப்பூணூல் தரித்தல்.
உபவேசம் - அடுத்திருத்தல்.
உபவேதம் ச- ஆயுர்வேதம் தனுர்வேதம் காந்தர்வவேதம் அர்த்தவேதம் என்பன.
உபாகமம்-ஆகமத்தின்வழிநூல்.
உபாகருமம்-வேதமோதத்தொடங்குதல்.
உபாக்கியானம் - ஒருசரித்திரத்தை ஆதியந்தமாய்ச் சொல்லுதல்.
உபாங்கம் - பிரதானமில்லாத அங்கம்.
உபாசனம் - வழிபாடு.
உபாதானம் - முதற்காரணம்.
உபாதி - இடையூறு. தருமசிந்தை, ஒருபொருளினிறமுதலியவைகள் கண்ணாடி முதலியவற்றில் வேறுபாடாய்த் தோன்றல்.
உபாத்தியாயன் - கல்விகற்பிப்போன்.
உபாந்தியம் - ஈற்றயல்.
உபாம்சு - இரகசியம்.
உபாயம் - சூழ்ச்சி.
உபாயம் ச- சாமம் பேதம் தானம் தண்டம் என்பன.
உபாலம்பனம்-நிந்தித்து வைதல்.
உபானம் - கோயில் முதலியவற்றினடியிலுள்ளகல் வரி.
உபேட்சை - விரும்பாமை.
உபேந்திரன் - விட்டுணு.
உபோற்காதம் - ஆரம்பம், உதாரணங்காட்டிப் பேசல்.
[உப்பட்டி - அருவித்தொகுதி]. [பவர்.
உப்பமைப்போர் (உப்பர்)-உப்புவிளைவிப்
உப்பளம் (உம்பளம்)-உப்புவிளையுமிடம்.
உப்பு - லவணம், உவர்ப்பு. இனிமை, மகளிர் விளையாட்டு, கடல்.
உமணர் - உப்பமைப்போர், உப்புவாணிகர், (பெண்பாலில் உமட்டியர்.)
உமல் - பனையோலை புல் முதலியவற்றால்
உமாபதி - சிவன். [லிழைத்த பை.
உமி- தானியங்களை மூடியிருக்குந்தோல்.
உமிதல் - உமிழ்தல்.
உமித்தல்-பதராதல், பதனழிதல்.
உமிழ்தல் - சொரிதல், கொப்பளித்தல், சத்திசெய்தல்.
உமை - பார்ப்பதி, துர்க்கை.
உமைமகன் - முருகவேள், விநாயகக்கடவுள், வீரபத்திரர்.
உம் - எதிர்மறை சிறப்பு ஐயம் எச்சம் முற்று எண் தெரிநிலை ஆக்கம் என்னும் பொருள்களுளொன்றைக்குறித்து வழங்கும் இடைச்சொல். (உ-ம்: மறப்பினு மோத்துக் கொளலாகும் என்பதில் மறத்தலாகாது என்னும் பொருளைத் தருதலின் எதிர்மறை; சிறப்பு உயர்வுசிறப்பும் இழிவுசிறப்பும் என இருவகைப்படும். குறவருமருளுங்குன்று என்பதில் குன்றத்தில் மயங்கா தியங்குதற்கட் சிறந்தமையைக்குறித்தலால் உயர்வுசிறப்பு; புலையனும் விரும்பாப் புன்புலால் யாக்கை என்பதில் புலையனதிழிவைச்சிறப்பித்தலால் இழிவுசிறப்பு; வெல்லினும் வெல்வானென்பதில் வெல்லுதல் துணிபன்றென்பதையுணர்த்திநிற்றலால் ஐயம்; சாத்தனும் வந்தானென்பதில் கொற்றனும்வந்தானென்பதையுணர்த்திநிற்றலின் எச்சம், பதின்மரும் வந்தார் என்பதில் இனி வரற்பாலாரிலரென்பதை யுணர்த்துதலின் முற்று; சாத்தனும் கொற்றனும் என்பதில் எண்ணுப்பொருள் தருதலின் எண்; சாத்தனுமல்லன் கொற்றனுமல்லன் என்பதில் இருவரையும் நன்குதெரிந்துள்ளே னென்பதை யுணர்த்தலின் தெரிநிலை; பாலுமாயிற்று என்பதில்

மருந்தமாயிற்று என வேறோராக்கத்தையுமுணர்த்தலின் ஆக்கம்].
உம்பர் - தேவர், சுவர்க்கலோகம், மேல், ஆகாயம்.
உம்பல் - யானை, எழுச்சி, மகன், வலி, ஆண்யானை, ஆறு,கோத்திரம் அல்லது குலம், வழித்தோன்றினோன்.
உம்பி - உன்றம்பி.
உம்மெனல் - ஒலிக்குறிப்பு.
உம்மை - உம்மென்னு மிடைச்சொல். முற்றிறப்பு, வருபிறப்பு.
உம்மைத்தொகை - உம்மென்னுஞ்சொற்றொக்க தொடர்மொழி.
உயங்குதல் - வாடுதல், மனந் தளர்தல், ஓய்ந்திருத்தல்.
உயரம் - மேலிடம்.
உயர்ச்சி - உயர்வு, மேன்மை.
உயர்தல் - கிளர்தல் - மேம்படுதல், வளர்தல்.
உயர்திணை - மக்கள் தேவர் நரகர் என்னும் முப்பாலாரைக்குறிக்குந் திணை.
உயர்த்தல் - உயரச்செய்தல், மகிமைப் படுத்துதல்.
உயர்நிலை - (உயர்நிலம்) சுவர்க்கலோகம்.
உயர்ந்தோர் - பிராமணர், பெரியோர்.
உயல் - செய்யாதொழிதல். (உயற்பாலதோரும்பழி; திருக்.)
உயவல் - ஆலோசனை, வருத்தம்.
உயவை - காடு, காட்டாறு. காக்கணங்கொடி, முல்லைக்கொடி, *வெண்காவிளை.
உயா - உயங்கல், (தொல் உரி. எ௬.)
உயிரளபு - அளபெடுத்துவரும்உயிரெழுத்து.
உயிரெழுத்து - அகாமுதலிய பன்னிரண்டெழுத்து.
உயிர் - ஆன்மா, உயிரெழுத்து; காற்று, *ஓசை, (புற.)
உயிர்த்தல் - உயிர்பெறுதல், ஈனுதல், மூச்சுவிடல், மோத்தல், கமழ்தல், ஒழித்தல். (அயர்வுயிர்த்தான்).
உயிர்த்தீ ௩ - உதராக்கினி விந்துவக்கினி கோபாக்கினி என்பன.
உயிர்த்துணை - நாயகன், உற்றதோழன்.
உயிர்த்தோற்றம் ௪ - அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பன.
உயிர்நிலை - உடல், உடலில் உயிர்நிற்றற்காரணமான உறுப்பு.
உயிர்ப்பு - காற்று, மூச்சு, இளைப்பாறுகை, சுகந்தம்.
உயிர்மெய் - உயிருமெய்யுங் கூடிய எழுத்து.
உய்தல் - வாழ்வுபெறுதல், சீவித்தல்.
உய்தி - உய்வு.
உய்த்தலில் பொருண்மை - அணியிலக்கணத்திற்கூறிய குணவலங்காரம் பத்துளொன்று, (கருதியபொருளை விளக்க விரிக்குஞ்சொல்லுடையது.)
உய்த்தல் - அடைவித்தல், செலுத்துதல்
உய்த்துணர்தல் - ஊன்றி ஆலோசித்தறிதல்.
உரகம் - பாம்பு.
உரத்தல் - கடினப்படுதல்.
உரப்புதல் - பெருந்தொனியாகச் சத்தமிடல்.
உரம் - மார்பு, உள்ளக்கிளர்ச்சி, வலி, ஞானம், திடம், *மதில், [வயல்தோட்ட முதலியவைகளுக்கிடும்] எரு முதலியன.
உரல் - நெல்முதலியவற்றைக் குத்துதற்குரிய உரல்.
உரவு - திண்ணிய அறிவு, வலிமை, மிகுதி.
உரவோன் - வலியுள்ளவன், அறிஞன், மூத்தோன்.
உரற்றல்(உறல்) - உரப்புதல்,ஒலித்தல், கோபங்கொள்ளல்.
உரன் - அறிவு.
உரி - தோல், அரைப்பட்டி.
உரிச்சொல் - இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப் பெயர்வினைகளுளொன்றற்கேனும் இரண்டிற்கு மேனுமுரிமைபூண்டு நிற்குஞ்சொல்.
உரிஞுதல் - (உரிஞ்சுதல்) - உரைத்தல். (உரிஞுகன் னடுவோர்; தணிகை, அகத். ௪௬௯).
உரிதல் - தோல் முதலியன கழலுதல், உடுத்த வஸ்திரத்தையுரிதல்.
உரித்தல் - தோல் முதலியவற்றை யுரித்தல்
உரித்து - உரிமை.
உரிப்பொருள் - புணர்தலும் புணர்தனிமித்தமுமுதலாகப் பொருளிலக்கணத்தில் குறிஞ்சிமுதலிய ஐந்திணைகளுக்குந் தனித்தனி சொல்லப்படும் பொருள்கள்.
உரிமை - இனம், மனைவி;உரியதன்மை.

உரியோன் - கணவன், நண்பன், சுற்றத்தவன்.
உரிவை - தோல், மரவுரி.
உரு - உடல், அழகு, கண்ணுக்குப்புலப்படும் வடிவு, நிறம், மரக்கலம், அச்சம், அட்டை, (மந்திரசெபத்தின்றொகை)
உருகுதல் - இளகுதல்.
உருக்கம் - மனஇரக்கம், அன்பு.
உருக்கு - எஃகு.
உருக்குமணி - கிருட்டிணன்றேவி.
உருசி - சுவை, மதுரம்.
உருடை - பண்டி.
உருட்சி - திரட்சி.
உருட்டல் - யாழ்நரம்பிசைக்கும் வகையுளொன்று, தேர்முதலியவற்றையுருளச்செய்தல்.
உருண்டை - திரட்சி.
உருத்தல் - பெருங்கோபங் கொள்ளல், மிகுதல், தோற்றுதல், முளைத்தல்.
உருத்திர கணிகை - தேவதாசி.
உருத்திர சன்மன் - ஊமையாயவதரித்த ஓர் தெய்வப் புலவர்.
உருத்திரம் - பரமசிவனைத்துதிக்கின்ற ஓர் வேத மந்திர பாகம், எண்சுவைகளுளொன்று.
உருத்திரர் பதினொருவர் - மகாதேவன் அரன் உருத்திரன் சங்கரன் நீலலோகிதன் ஈசானன் விசயன் வீமன் தேவதேவன் பவோற்பவன் கபாலீசன் என்பவர்கள்.
உருத்திரவீணை - ஓர்வகை வீணை. (சிவரக. உருத்திரவீணை வரலாற்றுச்.)
உருத்திரன் - சிவன், அக்கினி, உருத்திரமூர்த்தி.
உருத்திராக்கம் - சிவசின்னங்களுளொன்று.
உருத்திராணி - பார்வதி.
உருபு - பெயர்ச்சொற்களுக்குப்பலவகையான வடிவங்களை உண்டாக்குதற்குரிய வேற்றுமையுருபுகள்.
உருப்பசி (ஊர்வசி) - ஓர் தெய்வப்பெண். (நடனமாது.)
உருப்பம் - உருமம், வெப்பம், மிகுதி.
உருமம் - வெப்பம்.
உரும் - இடி, அச்சம்.
உருவகம் - உபமேயம் உபமானம் என்னுமிரண்டுக்கும் பேதமின்மை தோன்றச் சொல்லுதலாகிய அணி.
உருவம் - ரூபம், அழகு, *சிவந்தநிறம், (திருமுரு.)
உருவரை - அனைத்துமுண்டாகு நிலம்.
உருவல் - ஊடறுத்தல், மரக்கொம்புகளின் இலை முதலியவற்றையுருவுதல், உறைகழித்தல்.
உருவாரம் - வெள்ளரிக்கொடி.
உருவிலி - மன்மதன்.
உருவெளித்தோற்றம்-மனத்தில் நினைத்தபொருள் முன் இல்லாத போதும் பிராந்தியினலிருப்பதுபோலத்தோற்றுதல்.
உருளரிசி - கொத்துமல்லி.
உருளி - தேருருள்.
உருளுதல் - சுழலுதல், புரளுதல்.
உருளை - உருண்டை, வட்டவடிவமான பொருள், தேர்ச்சில்லு.
உருள் - உருண்டை, தேருருள், ரோகிணிநட்சத்திரம், சகடம்.
உரூடி - இருநூறி.
உரூபித்தல் - மெய்ப்படுத்தல், உருவகஞ்செய்தல்
உரை - எழுத்தொலி, சொல், சொற்பொருள், புகழ், பேச்சு, பொன், பொன்னுரை.
உரைகல் - கட்டளைக்கல், (பொன் வெள்ளிகளையுரைத்து மாற்றறியுங் கல்.
உரைகாரன் - உரையாசிரியன்.
உரைதல் - தேய்தல், உலாவுதல், (உராய் உரைஇ என்பன இதன் வினையெச்சங்கள்.
உரைத்தல் - தேய்த்தல், சொல்லுதல், உரைசெய்தல், ஒலித்தல்.
உரையசை - ஒருவரோடொருவர் உரையாடற்கண் வருமசை.
உரையாடல் - பேசுதல்.
உரையாணி - (மாற்றையறிதற்கு வேறுரையின் பக்கத்திலுரைக்கும் மாற்றுயர்ந்த) பொன்னலாகிய ஆணி.
உரோகம் - நோய்.
உரோகிணி - ஓர் நட்சத்திரம், ஒன்பதாண்டுக்கன்னிகை, பலராமன்றாய்.
உரோகிதாசுவன் - அரிச்சந்திரன் மகன் (கூர்ம. சூரியன் மரபு.)
*உரோங்கல் - உலக்கை.
உரோசம் - கோபம்.
உரோசல் - உரோஞ்சுதல்.
உரோசனை - கோரோசனை.

உரோஞ்சுதல் - உரைத்தல்.
உரோணி - ரோகிணிநட்சத்திரம், ஓர் நோய், (திருமக். அறஞ)
உரோதம் - தடை, சீர்க்கரை.
உரோதனம் - அழுகை.
உரோமகருடணம் - மயிர்ப்புளகம்.
உரோமசன் - ஓர் முனிவர், (பாரத. தீர்த்த கசுO)
உரோமம் - மயிர், செறிமயிர்.
உரோமாஞ்சம் - மயிர்ப்புளகம்.
உலகநடை - உயர்ந்தோரொழுகுமொழுக்கம்.
உலகமாதா - இலக்குமி, பார்ப்பதி, சரசுவதி.
உலகமுண்டோன் - விட்டுணு.
உலகம் - (உலகு) மூவுலகம், சீவான்மாக்கள், பூமி, தேசம், நன்மக்கள், பிரபஞ்சம், ஒழுக்கம், திக்கு, ஆகாயம், உயர்குணம், சனம்.
உலகம் ந - சுவர்க்கம், மத்தியம், பாதலம் என்பன.
உலகளக்தோன் - விட்டுணு
உலகாயதம் - உலகவின்பமேசிறந்ததென்றுகூறும் மதம்.
உலகியல் - உலகநடை.
உலகியல் விளக்கம் - ஓர்நீதிநூல். (நவநீதகிருஷ்ணபாரதியார் இயற்றியது.)
உலக்கை - நெல் முதலியவற்றைக் குத்துங்கருவி, திருவோணநட்சத்திரம்.
உலக்கைப்பாட்டு - வள்ளைப்பாட்டு.
உலங்கு - கொதுகு, திரண்டகல்.
உலண்டு - பட்டுநூலையுண்டாக்குங்கோற்புழு.
உலத்தல் - குறைதல், அழிதல், இறத்தல்
உலமரல் - சுழலுதல், துன்பம்.
உலம் - திரண்ட கல்.
உலம்வருதல் - சுழலுதல். (புற. உOஎ.)
உலர்தல் - காய்தல்.
உலவாக்கிழி - எடுக்குந்தோறுங் குறையாத திரவியப் பொதி.
உலவை - காற்று, தழை, மரக்கொம்பு, விலங்கின்கொம்பு, ஓடைமரம், மரச்செறிவு.
உலறல் - பெருங்கோபங்கொள்ளல், காய்தல், பொலிவழிதல்.
உலா - பவனிவருதல், இளமைப்பருவமுற்ற தலைவன் பவனிவருதலைக் குறித்து நேரிசைக் கலிவெண்பாவாற் பாடுநூல்.
உலாமடல் - கனவிலொரு பெண்ணைக் கூடிக் கலவியின்பநுகர்ந்தோன் விழித்தபின் அவள்பொருட்டுமடலூர்வேனென்பதைக் கலிவெண்பாவாற் கூறும் பிரபந்தம்.
உலாவுதல் - சஞ்சரித்தல், அசைதல், ஒத்தல்.
உலுத்தம் - லோபம்.
உலுப்பை - அடைந்தோர்க்களிக்குமூண்பண்டம்.
உலூகம் - கூகை.
உலூகலம் - உரல்.
உலூகை - சிலந்திப்பூச்சி.
உலை - கம்மாளனுலை, அடுப்பிற்சமையற்பாத்திரத்தில் வைக்கும் நீர்.
உலைதல் - அலைதல், மனம் நிலைப்படாமை.
உலைத்துருத்தி - ஊதுந்துருத்தி.
உலையாணிக்கோல் - சூட்டுக்கோல்.
உலோகபாலர் - திக்குப்பாலகர் எண்மரும் பிரமவிட்டுணுக்களும்.
உலோகம் ரு - பொன் வெள்ளி செம்பு இரும்பு ஈயம் என்பன.
உலோகம் எ - முன்குறித்த ஐந்துலோகங்களும் கஞ்சமும் தராவும்.
உலோகம் கூ - ஐந்துலோகங்களும் பித்தளை தரா துத்தநாகம் வெண்கலம் என்பனவும்.
உலோகாலோகம் - சக்கரவாளமலை.
உலோகிதம் - சிவப்பு.
உலோட்டம் - ஓடு, மண்கட்டி.
உலோபம் - பேராசை, கெடுதல்விகாரம்
உலோலம் - அசைவு.
உலோலன் - மனநிலையில்லாதவன்.
உல்குபொருள் - சுங்கப்பொருள், தீர்வை
உல்லாகன் - நோய்வந்து தீரப்பெற்றோன்
உல்லாசம் - உள்ளக்களிப்பு, மேற்பார்வை.
உல்லாபம் - நிரம்பாமென்சொல்.
உல்லியர் - கூவநூலோர்.
உல்லேகனம் - இரோகையைக்கீறுதல்.
உல்லோலம் - பெருந்திரை.
உவகை - மகிழ்ச்சி, பிரியம்.
*உவக்காண் - உங்கே.
உவச்சர் - சோனகர்.
உவட்டல் - பெருகல், வாந்திபண்ணுதல்.
உவட்டு - வாந்தி, அரோசகம், பெருக்கு.

உவணம் - கருடன், உயர்ச்சி. கழுகு.
உவணர் - கருடரென்னுந் தேவசாதியார்.
உவணி (உவணி) - வாட்படை.
உவணை - சுவர்க்கலோகம்.
உவதை - மலையினின்றிழியும் பேரருவி.
உவத்தல் - மகிழ்தல்.
உவநாயம் - துவைத்துக் கட்டும் மருந்து.
உவப்பு - மகிழ்ச்சி, உயரம், பிரியம், பொலிவு.
உவமை - ஒப்பு. பண்பு தொழில் பயன் என்பவற்றால் ஒன்றை மற்றொன்றோடொப்பித்துக் கூறுதல். (இது செய்யுளணிகளுளொன்று; உவமம் உவமை உபமம் எனவும்).
உவமைத்தொகை - உவமவுருபு தொக்கு நிற்குந் தொடர்மொழி.
உவமையுருபு - ஒப்பிப்பதைக் குறிக்குமிடைச்சொல்.
உவரி - கடல், *மூத்திரம்.
உவர் - உப்பு, உவர்மண்.
உவர்த்தல் - வெறுத்தல், அருவருத்தல், கைப்புச்சுவையாயிருத்தல்.
உவர்நீர் - உப்புச்சலம்.
உவர்ப்பு - வெறுப்பு, இகழ்ச்சி.
உவர்மண் - வஸ்திரங்களினழுக்கைப் போக்குதற்குரிய (உவர்த்தன்மையுள்ள) மண்.
உவலை - ஓட்டை, (பதிற்று), தழை, [பொய்.
உவல் - தழை.
உவவு - தவம்.
உவளகம் - உப்பளம், சிறைச்சாலை, இடைச்சேரி, ஒருபக்கம், பள்ளம், குளம், பிரித்தல், மதில் மதிலுறுப்பு, விசாலம், அந்தப்புரம், *வாயில்.
உவளல் - துவளல்.
உவளித்தல் - தூய்மைசெய்தல்.
உவறுதல் - ஊறுதல், நீரூறுதல். (கலித். கூகூ).
உவனித்தல் - வில்லினின்றும் அம்பெய்யத் தொடங்கல். (சிந்தா.).
உவா - அமாவாசை, பூரணை, யானை, இளமை, இளையோன், *கடல்.
உவிதல் - அவிதல்.
உவ் - உவை.
உவ்வி - தலைவி, தலை.
உவ்வு - தவம்.
உவ்வை - ஔவையின் சகோதரி. (இவளை உப்பையெனவுங் கூறுவர்).
உழக்கல் - கலக்கல், காலினால் துவைத்தல், வெல்லல்.
உழக்கு - காற்படி.
உழத்தல் - அநுபவித்தல், செய்தல், பழகல், பிரயாசப்படல், வருந்துதல், வெல்லுதல்.
உழத்தி - மருதநிலப்பெண்.
உழத்திப்பாட்டு - மருதநிலவளம் முதலியவற்றையும் உழத்தியர் செயல்களையும் அமைத்துப்பாடும் ஓர் பிரபந்தம்.
உழப்பு - முயற்சி, துன்பமநுபவித்தல், பழக்கம். பிரயாசம், வலிமை, உற்சாகம்.
உழலல் - சுழலுதல், அலைதல்.
உழலை - மாட்டின்கழுத்திற்கட்டும் உழன்றி, போக்கு வரவு செய்பவர்களைப் போகவும் வரவும் விட்டு உழன்று கொண்டிருக்கும்உழலைமரம், (பெரிய. கண் உ௫.)
உழவர் - வேளாளர், மருதநில மாக்கள், வைசியர்.
உழவாரம் - புற்செருக்குங் கருவி.
உழவு - உழவுதொழில்.
உழறுதல் - பேரொலியமையச் சத்தமிடல், உழக்குதல், (ஊசற்கரமெதிர் சுற்றிடவுரறிப்பரியுழறு; பெரிய திருநாவு. கசக).
உழற்றல் - உழலச்செய்தல்.
உழன்றி - உழலைமரம்.
உழி - இடம், ஏழாம்வேற்றுமையுருபு.
உழிஞை - சிறுபூளை, பகைவருடைய அரணை வளைத்தல்.
உழிஞைமாலை - உழிஞைப் பூ மாலைசூடிப் பகைவருடைய அரணை வளைப்பதைக் குறித்துப் பாடும் பிரபந்தம்.
உழிஞ்சில் - வாகைமரம். (சிலப்,)
உழிதால் - சுழலல்.
உழுதல் - நிலத்தைக் கலப்பையாற்கிளைத்தல், உழக்குதல்
உழுதூண் - நிலத்திற் பயிர்செய்து சீவி [த்தல்
உழுநர் - உழவர்.
உழுந்து - ஓர் தானியம்.
உழுபடை - கலப்பை.
உழுவல் - எழுபிறப்புகளினுந் தொடர்ந்த அன்பு.
உழுவை - புலி.

உழை - இடம், பக்கம், ஏழிசையினொன்று, சூரியனுடைய தேவியாகிய உஷை, பூவிதழ், மான், ஏழாம் வேற்றுமையுருபு, [தல்.
உழைத்தல்-சம்பாதித்தல், பிரயாசப்படு
உழையர் - அமைச்சர், ஏவல்செய்வோர்.
உளகு- யாழினோருறுப்பு.
உளப்படுதல் - இணங்குதல்.
உளப்பாடு - இணக்கம்.
உளம் (உள்வம்) - மனம்.
உளம்புதல் - அலைத்தல், (கலித். உரு,) உளறுதல்.
உளர்தல் - யாழ்வாசித்தல், அசைதல், சடவல், மயிர்கோதல், சிந்தல்.
உளவு - உட்கிடை, உட்கருமம்.
உளறுதல் - பிதற்றுதல், நன்றல்லாப் பேரொலி.
உளி - இடம், ஓராயுதம், ஏழாம் வேற்றுமையுருபு.
உளித்தலைக்கோல் - இருப்புப்பாரை.
உளியம் - கரடி, இடம். (இரகு. தேனு உச.)
உளு- உசு, (மர முதலியவற்றையரிக்கும் புழு.)
உளுக்கு - நரம்பு முதலியன சுளுக்குதல் (சுருக்கடைதல்), நெளிதல்.
உளுத்தல் (உழுத்தல்) - மரமுதலியன புழுவினாலரிக்கப்பட்டுக்கெடுதல்.
உளுவை - ஓர்மீன்.
உளை - ஆண்மயிர், உரோமம், குதிரை முதலியவற்றின் பிடர்மயிர், சேறு, தலையாட்டம் (புற. உ,), தலை, (புற உஉ) பேசலாலெழுமொலி, எடுத்தலோசையான சத்தம்.
உளைதல் - கால் முதலியன வலித்தல், மனம் வருந்துதல், வேதனைப்படுதல், வெறுத்தல்.
உளைத்தல்- அழைத்தல்,ஒலித்தல்,ஊளையிடுதல்,வருத்தல்,(இரகு.மீட்சி.௬௬),
உள் - மனம். உள்ளிடம்,ஏழாம்வேற்றுமையுருபு.
உள்குதல் - நினைத்தல், நாணுதல். (இரகு. அயனு. உ௦).
உள்பொருள் - உள்ளபொருள்.
உள்ளது - மெய்.
உள்ளமுடையான்- ஓர்சோதிடநூல்,
உள்ளம் - முயற்சி, மனம்.
உள்ளல் - நினைத்தல், உள்ளான்குருவி.
உள்ளார் - பகைவர்.
உள்ளாளம்-ஓர்வகைக்கீதம்.(திருவிளை. இசை. ௬அ.)
உள்ளாளனம்-கூத்தின் விகற்பம்.
உள்ளான் - உள்ளற்குருவி.
உள்ளி - வெள்ளைப்பூண்டு.
உள்ளியர் - அறிவுடையோர்.
உள்ளீடு- உட்பட்டிருக்கும் சிறந்தபொருள் (நெல்லினுள் அரிசிபோல),
உள்ளுறை- மறைபொருள்.
உள்ளொற்றல் - நிகழ்ந்ததைத் தன்னுள் உய்த்துணர்தல்.
உள்ளோசை - மெல்லோசை.
உறக்கம் - நித்திரை.
உறங்குதல் - நித்திரை செய்தல்.
உறத்தல் - கறத்தல்.
உறந்தை - உறையூர்.
உறப்பு - செறிவு. (தொல் உரி ருச).
உறவி-உயிர், உறவு, உலைக்களம், ஊறுபுனல், எறும்பு, கிணறு.
உறவு- சுற்றம், சினேகம், சம்பந்தம்.
உறழ்தல் - பெருக்கல், விகற்பித்தல், பகைத்தல், மாறுபடுதல்,(புறநா உஉ). ஒத்தல், இடையீடு, யாழ்வாசிக்கும் வகையுளொன்று.
உறுவரை-பிறருள்ளேவரக்கூடாத எல்லையையுடைய நிலம்.
உறி-பொருள்களை வைத்தற்காக அமைத்திருக்குந்தூக்கு.
உறிஞ்சுதல் - நீர்முதலியவற்றை உள்ளிழுத்தல். [நோய்.
உறுகண்-அச்சம், தரித்திரம், துன்பம்,
உறுகோள் - சம்பவம்.
உறுக்கல் - வாயதட்டினலச்சப்படுத்தல், உறுத்துதல், தாண்டுதல், பாய்தல்.
உறுதல் - பொருந்தல், மிகுதல்.
உறுதி - உற்சாகம், பொருத்தமானது, சாதனம், நிச்சயம், சம்பவம், கல்வி, நல்லுபதேசம், நன்மை.
உறுத்தல் - அழுத்துதல், (அறிவுறுத்தினான்), மிகுத்தல்.
உறுப்படக்கி - ஆமை.
உறுப்பு - அவயவம், உடல், நெருக்கம், ஒற்றெழுத்து, பாலையாழ்த்திறங்களுளொன்று.
உறுவல் - துன்பம்.

உறுவன் - அருகன், முனிவன்.
உறுவை - ஔவையின் சகோதரிகளி லொருத்தி.
உறூஉ - உறுத்துதல்.
உறை - துளி, பாலுக்கிடும்பிரை, மழை, ஆயுதமுதலியவற்றினுறை, இருப்பிடம். மருந்து, வாழ்நாள், வெண்கலம், உவர்நீர் இலக்கக்குறி (ஐந்துகலத்தானியமளந்தவுடன் அவற்றை ஒன்றென்றெண்ணித்தானியத்திலிருந்தெடுத்துவைக்கும் ஒருபிடியெனச் சிந். விசேடக் குறிப்பில்; உறையிடத்தேய்ந்திடுமிவ் வந்தி வானத் துடுக்குலமே எனத் திருவேங்கடத்தந்தாதி; எண்குறித்திறுதியெய்தலென நிகண். கக. ற. க0), உணவு, உறைப்பு, பொருள், நகரம், நீளம், உயர்ச்சி, உவமவிடைச்சொல்.
உறைகாரர் - உறைசெய்வோர்.
உறைதல் - இருத்தல், பரிணமித்தல். (பால்தயிராதல்போல.)
உறைத்தரல் - உதிர்தல். (கலித். உக.)
உறைத்தல் - உறுத்துதல், உரத்துச்சத்தமிடல், உறைப்புச்சுவை.
உறைப்பு - கொடுமை, கார்ப்பு.
உறையுள் - வீடு, ஊர், நகரம், மனிதர் துயிலிடம்.
உறையூர் - ஓரூர், மருதநிலத்தூர்.
உற்கமனம் - கிரகம் இராசி முதலியன உதயஞ்செய்தல்.
உற்கம் - கடைக்கொள்ளி, அனற்றிரள்.
உற்கருடம் - அதிசயம்.
உற்காரம் - வாந்தி.
உற்கிருட்டம் - மேன்மை.
உற்கீதம் - உச்சத்தொனியுடன் பாடுதல்.
உற்குரோசம் - நீர்வாழ்பறவையுளொன்று. [விண்வீழ்கொள்ளி
உற்கை - கடைக்கொள்ளி, விண்மீன்,
உற்சர்க்கம் - விடுதல்.
உற்சவம் - திருவிழா.
உற்சாகம் - ஊக்கம்.
உற்பத்தி - தோற்றம். பிறப்பு.
உற்பலம் - குவளை (இது கருங்குவளை செங்குவளை என இருவகை).
உற்பவமாலை - திருமாலின் அவதாரபேதமான பதின்மர் (தனித்தனி) தாக்கவென ஆசிரியவிருத்தத்தாற் கூறும் பாடல். (இது தசப்பிராதுர்ப்பவமெனவும்படும்.)
உற்பவம் - பிறப்பு.
உற்பாடனம் - மரத்திலேற்றியஆப்புமுதலியவற்றைஇழுத்தெடுத்தல்.
உற்பாதம் - துர்நிமித்தம்.
உற்பிச்சம் - வித்து வேர்முதலியவற்றை மேற்பிளந்து முளைக்கும் மரம் செடி முதலியன.
உற்பிரேட்சை - தற்குறிப்பேற்றம்.
உற்றார் - உறவினர், சிநேகிதர்.
உன்மத்தம் - பைத்தியம், ஊமத்தஞ்செடி.
உன்மனை - ஓர்சத்தி.
உன்மாதம் - சித்தப்பிரமை (மயக்கம்).
உன்மீலனம் - விழித்தல், பூரணகிரகணத்திலிருந்து சூரிய சந்திர பிம்பங்கள் வெளிப்படத் தொடங்கல்.
உன்னதம் - உயர்ச்சி.
உன்னம் - இலவமரம், உழிஞ்சில்மரம், நீர்வாழ்பறவைகளுளொன்று. மனம்.
உன்னயனம் - ஒருபொருளைக் கீழிருந்து மேலடைவித்தல்.
உன்னலர் - பகைவர்.
உன்னல் - சிந்தித்தல்.
உன்னி - குதிரை.

## ஊ

ஊ - உணவு, ஊன்.
ஊகம் - படைவகுப்பு, ஊகம்புல், கருங்குரங்கு, குரங்கு, ஒருகருமத்தைத்தன்னுள் ஆராய்தல்.
ஊக்கம் - முயற்சி, மனக்கிளர்ச்சி, உயர்ச்சி, வலிமை.
ஊக்குதல் - இலக்கிற்குத் தப்புதல், மேற்கொள்ளல், தள்ளுதல்.
ஊங்கு - உவ்விடத்தில், மேலாக. (நல்வினைத்தினூங்கு துணையில்லை; திருக்.)
ஊசல் - ஊஞ்சல், ஊஞ்சலாடுதலைக்குறித்துப் பாடுங்கவி. [ஆசிரிய விருத்தத்தானுதல் கலித் தாழிசையானுதல் ஆடுகூசல் ஆடாமோஊச லென்று முடிவது.
ஊசி - இழைவாங்கி, எழுத்தாணி, அடி பெரிதும் நுனி சிறிதும் நீளவடிவுமாகச்செய்யப்பட்டபொருள், வடக்கு (புற உஉக; உதீசி என்பதன் றிரிபு.
ஊசிமல்லிகை - ஓர்வகைமல்லிகை.
ஊசுதல் - சீவுதல், பதனழிதல்.

ஊஞ்சல் - ஊசல்.
ஊடறுத்தல் - ஊடுருவிச்செல்லுதல்.
ஊடாடுதல் - பழகுதல், சிநேகஞ் செய்தல்.
ஊடு - மேல், இடை, உள், ஏழனுருபாயின் இடப்பொருள்.
ஊடுதல்- கலவியிற் பிணங்குதல், (நனுகாராகியுரைமறுத்திருக்கல்.)
ஊடுபோக்கல்- வாதி பிரதிவாதிஎன்னுமிருவரதுங் கோட்பாடுகளுக்கிடையாக வழக்கைத்தீர்த்தல்.
ஊடுருவுதல்-உள்ளே நுழைந்துசென்று புறத்தே பீறுதல்.
ஊடை - புடவையின் குறுக்குநூல்.
ஊட்டி - விழுங்குங் கருவியாகிய மிடறு, பறவைகளினதும் ஒருசார் விலங்குகளினதும் உணவு.
ஊட்டு - உணவு
ஊட்டுதல் - உண்பித்தல், கன்று தாய்ப்பசுவின் பாலைப் பருகச்செய்தல், புகைமுதலியவற்றை யாதேனுமோர் பொருளிற் செறியச்செய்தல்.
ஊணர்-மிலேச்சரிலொருசாரார். (ஊணதேசத்தார்.
ஊண் - உணவு, சோறு.
ஊதகாதன் - யானைக்கூட்டத்தின் தலையானை.
ஊதம்- யானைக்கூட்டம்.
[ஊதாரி-வீண்செலவுசெய்வோன்]
ஊதியம்- இலாபம், கல்வி, பயன்.
ஊதுதல்- வாயினலூதுதல்.
ஊதை- காற்று, பனிக்காற்று, [கு.
ஊத்தை- முடை, சரீரத்திற்பற்றிய அழுக்
ஊமத்தை- ஓர்செடி.
ஊமல் - கிழங்கின்ற பனைவித்தின் புறவோடு.
ஊமன்- ஓர்வாத்தியம், நாவில்லாதவன், இவற்றில் ஊமை எனவும்) கூகை.
ஊரல்- ஊர்ந்துசெல்லுதல், வாகனத்திலேறிச்செல்லுதல், ஓர்பறவை, கிளிஞ்சில்.
ஊரன் - மருதநிலத்தலைவன்.
ஊராண்மை-சிறந்தனவற்றைச் செய்தல், பகைவர்மேற் செல்லல்,
ஊரி - நீர்க்கரையிலூரும் ஓர்வகைப் பிராணி, மரத்தில்முளைத்து வளரும் ஓர் பூடு.
ஊரின்னிசை- பாட்டுடைத் தலைவனூரினைவைத்து இன்னிசை வெண்பாவால் ௯௦ ௭௦ அல்லது ௫௦ பாடுவது.
ஊரு - தொடை.
ஊருணி. ஊர்ப்பொதுவானநீர்நிலை.
ஊரேறு - ஊர்ப்பன்றி.
ஊர் - பரிவேடம், கிராமம்.
ஊர்கோள் - பரிவேடம்.
ஊர்க்குருவி - அடைக்கலங்குருவி.
ஊர்ச்சம் - கார்த்திகைமாதம்.
ஊர்தல் - பரத்தல், ஏறுதல், ஊர்ந்து செல்லுதல்.
ஊர்தி - வாகனம்.
ஊர்த்துவம் - மேல்.
ஊர்நேரிசை - பாட்டுடைத் தலைவனூரினை ௯௦ அல்லது ௭௦ அல்லது ௫௦ செய்யுளாற்பாடிய பிரபந்தம்.
ஊர்மி - திரை.
ஊர்மிளை - இலக்குமணரின்மனைவி.
ஊர்வெண்பா - ஊரடுத்து நேரிசை வெண்பாப்பத்துவருவது.
ஊழல்- பதனழிந்த பொருள், நரகம்.
ஊழி-உலகமுடிவு, பிரமன்வாழ்நாள், வாழ்நாள்.
ஊழித்தீ- வடவாமுகாக்கினி.
ஊழில்-அருவருத்தசேறு.
ஊழ்-பழமை, முற்பிறப்பிற் செய்தவினையின்பயன் இப்பிறப்பிலடைதலாகிய நியதி, (விதி)முறை, வெய்யில், பகை
ஊழ்த்தல் - பதனழிதல், நினைத்தல், இறைச்சி, முடைநாற்றம், நரகம். மலர்தல், (திருக். சொல்வன்மை ௧௦.)
ஊளன்- நரி, ஆண்நரி.
ஊளையிடல்- நரிமுதலியனசத்தமிடல்.
ஊறல் - நீர்முதலிய சுரத்தல், நீர்முதலியவற்றில் நெடுநேரம்நனைதல்.
ஊறு - தீமை, கொலை, நிகழ்ச்சி, பரிசம், புண். [கை.
ஊறுகாய்- உப்பிலூறவைத்த காய்வ
ஊறுபாடு - உடலில் ஊனமுதலியவற்றையடைதல்.
ஊறுபாடு ௪ - குத்தல் வெட்டல் எய்தல் எறிதல் என்பன.
ஊற்றம் - ஊன்றுகோல், அசைவின்றி நிற்றல், இடையூறு, நீருறுதல். பற்றுக்கோடு, முயற்சி, வலி, மேம்பாடு.
ஊற்றாணி - கலப்பையின் இழுப்பாணி.

ஊற்றல் - உரோகிணி.
ஊற்று-ஊன்றுகோல், ஊறுபுனல். [ல்.
ஊற்றுதல் - நீர்முதலியவற்றைச் சிந்துத
ஊனம் - மாமிசம், குறைவு.
ஊன் - தசை, *உவ்விடத்து.
ஊன்றுதல் - பதித்தல், தள்ளுதல்.

எ

எ - எந்த என்னும்வினா, உ-ம்: எக்கொற்றன். (இந்தவினாவைப் பகுதியாகக் கொண்டு எவன் எவள் எவர் எது எவை முதலிய பெயர்ச்சொற்களும், எற்று என் என்னை முதலிய குறிப்பு வினைச்சொற்களும், எந்த என்று எங்கு முதலிய இடைச்சொற்களும் பிறக்கும்).
எஃகம் (எஃகு) - உருக்கு, கூர்மை, ஆயுதம், வேற்படை, வாள், கத்தரிக்கை, சக்கராயுதம், பிண்டிபாலம்.
எஃகுதல் - விசைத்தல், பஞ்சுபறித்தல்.
எகினம் - அன்னப்பறவை, புளிமா, ஆண்மரம், கவரிமா, நாய், நீர்நாய், புளியமரம்.
எகின் - கவரிமா, புளியமரம், புளிமா, ஆண்மரம்.
எக்கர் - குவிவு, இறுமாப்பு, இறுமாப்புடையோர், நுண்மணல், மணற்குன்று.
எக்கல் - குவித்தல், சொரிதல், எறுதல்.
எங்கை - என்றங்கை.
எங்ஙனம் - எவ்விடத்தில், எப்படி.
எச்சம் - உறுப்புக்குறை, யாகம், புத்திரன், (மகன் மகள் இருவர்க்கும்பொதுவுமாம்), உண்டெஞ்சிய உணவு, சேடம், பட்சிகளின்மலம், செய்யுளிடத்துக்கூற்றினாலாதல் குறிப்பினாலாதல் சிலசொற்களெஞ்சிநிற்றல், பெயரெச்சம், வினையெச்சம்.
எச்சரிக்கை - அமைதியாயிருக்கச் செய்தல், ஓர்பா.
எச்சில் - உண்டெஞ்சியசேடம், உடம்பினின்றுமலம் மூத்திரம் முதலியவற்றைக்கழித்தபோதுள்ள அசுத்தம்.
எஞ்சுதல்-குறைதல், சுருங்கல், மிஞ்சுத
எஞ்ஞும் (எச்சம்யஞ்ஞும்)-யாகம். [ல்.
எடுத்தலளவு - நிறை.
எடுத்தலோசை - உயர்த்தியுச்சரித்தல்.
எடுத்தல் - கைக்கொள்ளுதல், எழுப்புதல், சுமத்தல்.
எடுத்துக்காட்டு - உதாரணம்.
எடுத்துதல் - சுமத்துதல். (எடுத்தலின் பிறவினை).
எடை - நிறை, எடுப்பு.
எட்சி - உதயம்.
எட்டர் - மங்கலபாடகர்.
எட்டி - காஞ்சிரைமரம், வைசியரின் பட்டப் பெயர்.
எட்டிகுடி - ஓர்சுப்பிரமணியதலம்.
எட்டியர் - வைசியர்.
எட்டு - ஓரெண்.
எட்டுதல் - உயர்ந்துதொடுதல், தேடிக் காணுதல்.
எண் - தொகை, கணக்கு, ஆலோசனை, மதிப்பு, மனம், எள்ளு, வலி, எளிமை, சோதிடநூல்.
எண்கணன் - பிரமா.
எண்காற்புள் - சரபம்.
எண்கு - கரடி.
எண்குணன் - அருகக்கடவுள், சிவன்.
எண்சிறப்புள்ளோன் - அருகன்.
எண்செய்யுள்-பாட்டுடைத் தலைவனது ஊரையும் பேரையும் பத்து முதலாயிரமீறான செய்யுட்களாற்பாடி எண்ணாற்பெயர் கொடுத்தபிரபந்தம்.
எண்டொகைநூல்-நற்றிணை குறுந்தொகை ஐங்குறுநூறு பதிற்றுப்பத்து பரிபாடல் கலித்தொகை அகநானூறு புறநானூறு என்பன.
எண்டோளன் - சிவன்.
எண்டோளி - துர்க்கை, காளி. [ச்சி.
எண்ணம்-மனக்குறிப்பு, கணிதம், சூழ்
எண்ணர் - கணிதர், தார்க்கிகர், மந்திரிமார்.
எண்ணலர் (எண்ணார்)-பகைவர். [வு
எண்ணலளவு - எண்களாலெண்ணுமள
எண்ணல் - ஆலோசித்தல், நினைத்தல், கணக்கிடுதல், குறித்தல், மதித்தல்.
எண்ணாமை - மதியாமை.
எண்ணில் கண்ணுடையோன் - புத்தன், கடவுள்.
எண்ணெய்-எள்ளிலிருந்தெடுக்கப்படும் நெய்.
எண்ணெய்க்காப்பு-எண்ணெயினால்விக்கிரகங்களுக்கபிடேகித்தல்.

எண்பது - ஒரெண்.
எண்மை - எளிமை.
எதிரி - பகைவன், பிரதிவாதி. [றல்.
எதிரூன்றல். பின்னிடாது எதிர்த்துநிற்
எதிர் - மாறு, போர், ஒப்பு.
எதிர்காலம் - வருங்காலம்.
எதிர்கொள்ளல் - ஒருவர் வரும்போது எதிரே சென்றுபசரித்தல்.
எதிர்தல்-முற்படுதல், பகைத்தல், அலர்தல். (நி கூ. சுஉ).
எதிர்த்தல்- எதிர்ப்படல், பகைமுகமாய் நெருங்குதல்.
எதிர்ப்பு-பேச்சு, முற்படுகை, பகைமை.
எதிர்மறை - இடைநிலை முதலியவற்றினுற்றலாற் சொல்லின்பொருண்மறுக்கப்படுவது, விரோதம்.
எதிர்மொழி - மறுப்புரை, விடை.
எதிர்வு - எதிர்காலம்.
எதுகை - இரண்டா மெழுத்தொன்றி வரச்செய்யுள்தொடுத்தல். (அது அடியெதுகை இணையெதுகை பொழிப்பெதுகை ஒரூஉவெதுகை கூழையெதுகை மேற்கதுவாயெதுகைகீழ்க்கதுவாயெதுகை முற்றெதுகை என எண்வகைப்படும்.
எத்து - இதஞ்சொல்லி வஞ்சித்தல்.
எந்திரம் (யந்திரம்) - தேர்ச்சில், ஆலை, மந்திரச்சக்கரம், கருமங்களை எளிதின் முடித்தற்காகச் செய்யப்படுஞ் சூத்திரங்கள், மதிலுறுப்பு.
எந்தை-என்றந்தை, என்குரு, என்தலைவன்.
எந்தோ - எப்படி.
எப்படி - எவ்வாறு.
எமன்-எம்மவன், (சுற்றத்தவன்), யமன்.
எம்பி - என்றம்பி.
எம்மான் - எமதுகடவுள், எமதுபிதா.
எம்மை - எப்பிறப்பு. (உம்மைசேரின் எல்லாப்பிறப்பினும் என்னும் பொருளைத் தரும்).
எயில் - மதில், புரம், ஊர்.
எயிறு-பல், பல்லினீறு, யானைமுதலியவற்றின் கொம்பு.
எயினர் - பாலைநிலமாக்கள், வேடர், (பெண்பாலில் எயிற்றியர்).
எய் - முட்பன்றி, அம்பு.
எய்தல் - அம்பெய்தல், அடைதல், பொருந்துதல்.
எய்த்தல் - இளைத்தல், வருந்துதல்.
எய்ப்பு - இளைப்பு, ஒடுக்க நிலை.
எய்யாமை - அறியாமை. [ஒளி.
எரி-அக்கினி, கேட்டைநட்சத்திரம்,
எரிகாசு - காசுக்கட்டி.
எரிதல் - நெருப்பெரிதல், பிரகாசித்தல், அழலுதல்.
எரித்தல் (எரிதலின் பிறவினை) - தகித்தல்.
எரிநாள் - கார்த்திகை நட்சத்திரம்.
எரிவண்டு-கண்முதலியவற்றிற்பட்டால் எரிவையுண்டாக்கும் வண்டு.
எரிவு - அழற்சி.
எரு - வயல்தோட்டம் முதலியவற்றிற் கிடும் உரம், மலம்.
எருக்கு - எருக்கஞ்செடி.
எருக்குதல் - அடித்தல், கொல்லுதல்.
எருது - இடபம், இடபராசி.
எருத்தம் - பிடர், கலிப்பாவினோருறுப்பாகியதரவு.
எருந்து - உரல், கிளிஞ்சில்.
*எருமணம் - செங்குவளை.
எருமை - ஓர்விலங்கு.
எருமையூர்தி - யமன்.
எருவை-இரத்தம், கழுகு, செம்பு, நிரள் கோரை, கொறுக்கைமரம்.
எலி - பூரநட்சத்திரம், எலி, *கள்.
எலு - கரடி, தோழமை, மரப்பிஞ்சு.
எலுமிச்சை - ஓர்மரம்.
எலும்பு - சரீரத்தில் தசையினுள்ளிருக்கும் எலும்பு.
எலும்புருக்கி - ஓர்மரம், ஓர்பூடு.
எலுவன் - தோழன்.
எல்-இரவு, சூரியன், பகல், ஒளி இடைச்சொல்லாயின் இகழ்ச்சி.
எல்லரி-கைம்மணி, (இரகு. திக்கு. சு௫), சல்லியென்னும் வாத்தியம்.
எல்லா (எலா) - தோழியை விளிக்கும் விளி.
எல்லாம் - முழுதும். (பொதுப்பெயர்).
எல்லி - இராத்திரி.
எல்லை - அளவு, சூரியன், நாள், பகல், முடிவு, கூப்பிடுதூரம்.
எவண் - எங்கே, எப்படி.
எவன்-யாவன், (இப்பொருளில்வினவடியாகப்பிறந்த பெயர்), யாது யாவை

எப்படிஎன்னும்பொருள்களில்வினவடியாகப்பிறந்த குறிப்பு வினைமுற்று; என் என்ன என்னை எனவும் வரும்.
எவ் - எவை.
எவ்வம் (எவம்) - குற்றம், துன்பம், இழிவரவு.
எழால்-யாழிலெழும் இன்னிசை, யாழ், ஓர்பறவை.
எழிலி - மேகம், கடைவள்ளலெழுவரிலொருவன்.
எழில் - அழகு, இளமை, எழுச்சி, வலி.
எழினி - இடுதிரை.
எழு - ஓர்படை, (வளைதடி), *கணையமரம். (புற.)
எழுகூற்றிருக்கை - குறுமக்களது எழுறைத்தட்டுவிளையாட்டின் சிறப்பை ஒன்றுமுதலேழீறுன செய்யுட்களாற் கூறுவது.
எழுதகம் - சித்திரக்கம்பி.
எழுதல் - இருக்கை விட்டெழும்புதல், உயிர்பெற்றெழும்புதல்,கிளர்தல்,கிரகமுதலியன உதயஞ்செய்தல், எழுத்துமுதலியவற்றையெழுதுதல்.
எழுதாக்கேள்வி - வேதம்.
எழுதுகோல் - தூலிகை.
எழுத்தாணி - ஓலையிலெழுதுங்கருவி.
எழுத்து - அட்சரம், இலக்கணநூல், கல்வி, கணக்கு,
எழுத்து ௪-வடிவெழுத்து பெயரெழுத்து தன்மையெழுத்து முடிவெழுத்து என்பன. (பிங். ௬௨௧).
எழுநா - அக்கினிதேவன்.
எழுப்பம் - கிளர்ச்சி.
எழுமை - எழுபிறப்பு. [கம்.
எழுவாய்-முதலாம்வேற்றுமை, தொடக்
எளிமை - தாழ்மை.
எள் - எள்ளு.
எள்ளல் - இகழ்தல், நகைத்தல்.
எறிதல் - வீசுதல், வெட்டுதல், மோதுதல்.
எறித்தல் - ஒளிவீசுதல், சுடுதல்.
எறிமணி - சேகண்டி.
எறும்பி - யானை.
எறும்பு - ஊர்வனவல்றின் வகையுளொன்று.
எறுழி - பன்றி.
எறுழ் - வலி, தண்டாயுதம்.
எற்பாடு - சாயங்காலம்.
எற்றல்-எழுப்புதல், துணித்தல், அடித்தல், எறிதல், கொலைசெய்தல்.
*எற்றித்தல் - இரங்குதல்.
எற்று - இரக்கக்குறிப்பு, எத்தன்மைத்தென்னும் பொருளில்வரும் குறிப்பு வினைமுற்று.
என - என்று, (வினை பெயர் குறிப்பு இசை எண் பண்பு என்னும்ஆறுபொருள்களையுங் குறித்துவரும், (உ-ம்: மலைவான் கொள்கெனவுயர்பலிதூஉய் என்பதில் வினைப்பொருண்மை குறித்துவந்தது. அழுக்காறெனவொருபாவி என்பதில் பெயர்ப்பொருண்மைகுறித்துவந்தது. துண்ணெனத்துடித்ததுமனம் என்பதில் குறிப்புப்பொருளில்வந்தது. ஒல்லெனவொலித்தது என்பதில்இசைப்பொருளில் வந்தது. நிலனெனநீரெனத் தீயெனவளியென என்பதில்எண்ணுப்பொருளில் வந்தது. வெள்ளெனவிளர்த்தது என்பதில் பண்புப்பொருளில் வந்தது), உவமவிடைச்சொல்.
என் - எவனென்னும் வினக்குறிப்புமுற்றின்றிரிபு, இகழ்ச்சிக்குறிப்பு. (என்னே, என்னை எனவும்).
என்பு - எலும்பு, உடம்பு.
என்று-என்றும். (எண்ணில்வருமிடைச்சொல்)
என்று - சூரியன், இடைச்சொல்லாயின் என என்பதுபோல வினைமுதலிய ஆறுபொருள்களையுங் குறித்துவரும். (உ-ம்: நரைவருமென்றெண்ணி என்பதில் வினைப்பொருள். பாரியென்றொருவனுளன் என்பதில் பெயர்ப்பொருள். விண்ணென்று விசைத்ததுஎன்பதில் குறிப்புப்பொருள். ஒல்லென்றொலிக்கும் என்பதில் இசைப்பொருள். நிலனென்றுநீரென்று தீயென்று என்பதில் எண்ணுப்பொருள். பச்சென்றுபசந்தது என்பதில் பண்புப் பொருள்.
என்றூழ்-சூரியன், வெய்யில், கோடை.
என்னே (என்னோ) - அதிசயத்துடன் கூடிய இரக்கம்.
என்னை - என் எவன் என்பன போன்ற குறிப்புவினைமுற்று, என்தலைவன்.

## ஏ

ஏ - அம்பு, ஏவுதல், உயர்வு, இறுமாப்பு, இடைச்சொல்லாயின் ஹே எனனும் வடசொல்லின் விகாரமானவிளி, இகழ்ச்சிக்குறிப்பு, பிரிநிலை, வினு, எதிர்மறை, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை. (இவனேகள்வன், பிரிநிலை. நீயேகொண்டாய், இங்கே நீயா எனப்பொருள் கூறின் வினு; நீயன்றென அகலங் கூறின் எதிர்மறை. வினுவேகாரத்தைப் பகுதியாகக் கொண்டு ஏது எவர் முதலியசொற்களும் பிறக்கும். நிலமேநீரே வளியே தீயே, எண். தொழுவோமியாமே, ஈற்றசை. செய்யுளினீற்றிலன்றி இடையில்வரின் அசைநிலையென்க. உண்டேமறுமை, தேற்றம்; ஐயமின்றென்பதைக்குறித்து நிற்றலின். ஏயே யிவளொருத்தி, இது வேறோர்சொல்லைச்சார்ந்துவராமையின்இசைநிறை).
ஏகதந்தன் - விநாயகக்கடவுள்.
ஏகதாளம் - ஒரொற்றுடையதாளம்.
ஏகதேசம்-குறிக்கப்பட்ட இடம் காலம் முதலியவற்றினோர் பகுதி.
ஏகத்துவம்-முதன்மை, ஒப்பின்மை,ஒன்றுந்தன்மை.
ஏகபிங்கலன் - குபேரன்.
ஏகம் - தனிமை, ஒன்று.
ஏகம்பம் - காஞ்சீபுரம்.
ஏகல் - நடத்தல், போதல்.
ஏகவசனம் - ஒருமை.
ஏகவேணி - மூதேவி.
ஏகன் - சிவன், கடவுள்.
ஏகாகி - தனித்திருப்பவன்.
ஏகாசம் - உத்தரீயம்.
ஏகாதசம் - பதினென்று.
ஏகாதசி - பதினேராந்திதி.
ஏகாதிபத்தியம் - தனியரசாட்சி, சோதிடத்தில் விவாகப்பொருத்தத்தில்மணமகன் மணமகள் இருவரதும் இராசியதிபதி ஒருவராயமைதல்.
ஏகாந்தம் - பிறர்புகக்கூடாத தனியிடம்.
ஏகாம்பரன் - சிவன்.
ஏகாலி - வண்ணுன்.
ஏகீபாவம் - ஒன்றுதல்.
ஏகுதல் - போதல்.
ஏகோதிட்டம் - முதன்மாசிகம்.
ஏக்கம் - எங்குதல்.
ஏக்கழுத்தம் - இறுமாப்பு.
ஏக்கறவு - இறுமாப்புநீங்கல், (அடங்கிநிற்றல்), இத்தன்மை பெற்றிலோமேயென் றிரங்குதல்.
ஏங்கல் - அழுதல், ஒலித்தல், மயில்சத்தமிடல், திகைத்தல்,யாழ்நரம்போசை.
ஏசல் - வைதல், பழிமொழி.
ஏசறவு - அன்பு, துக்கம்.
ஏசு - குற்றம்.
ஏச்சு - பிறரைப்பழித்து இகழ்தல்.
ஏட (ஏடா)-தன்னினிழிந்தானை விளிக்கும் விளி.
ஏடகம் - ஆட்டுக்கடா, துகில்.
ஏடணை - ஈடணை. (௪௬ம் பக்).
*ஏடல் - மனக்குறிப்பு.
ஏடி-தன்னினிழிந்தாளைவிளிக்கும்விளி.
ஏடு - பனையோலைப்புத்தகம், பூவிதழ்.
ஏட்டை (ஏடை) - ஆசை, தளர்வு, (சிக்கோவிந் ௬அ). எருமை பூனை இவற்றினுண்.
ஏணம் - கருமான், மான்.
ஏணி - ஏணி, எல்லை, உலகம், நாடு.
ஏண் - திண்மை, வலி, நிலையுடைமை.
ஏதம் - குற்றம், துன்பம்.
ஏதி - ஆயுதம், வாள், துண்டு.
ஏதிலான் - பிறன், ஏழை.
ஏதின்மை - பகை, பிறனுந்தன்மை.
ஏது - காரணம், துணைக்காரணம், செய்யுளணிகளுளொன்று. (இதனினிது விளைந்ததெனக் காரணம் விதந்து சொல்வது.
ஏத்து - துதி, புகழ்.
ஏத்துதல் - துதித்தல், புகழ்தல்.
ஏந்தல் - அரசன், பெருமை, பெருமையிற்சிறந்தோன், மேடு, உயர்ச்சி.
ஏந்திசை - செய்யுளோசைவகைகளுளொன்று.
ஏந்திழை - பெண்.
ஏந்துதல் - கையிற்றாங்குதல்.
ஏப்பம் - தேக்கெறிவு.
ஏமகூடம் - ஓர்மலை.
ஏமந்தம் - முன்பனிக்காலம், (மார்கழி தைமாதங்கள்), பனி.
ஏமம்-பொன், புதையல், காவல், சேமம், இன்பம், செருக்கு, இரவு, மயக்கம், விபூதி. (கடைகுறைந்து ஏம் என

வும் வரும்).
ஏமாத்தல் - அவாவுறல், செருக்கடைதல் களித்தல், மயங்கல், வருந்துதல், துணிதல்.
ஏமாப்பு - களிப்பு, செருக்கு, காவல் (திருக் இரவச்சம் அ).
ஏமாற்றுதல் (ஏமாற்றம்) - அனுப்புதல்.
ஏமுறுதல் - ஏமாத்தல்.
ஏம்பல் - ஆரவாரித்தல், ஏமுறுதல்.
ஏயெனல்-விரைவுக்குறிப்பு.
ஏய்தல் - இயைதல், ஒத்தல்; பொருந்துதல்.
ஏய்த்தல் - அனுப்புதல்.
ஏய்வு - ஒப்பு.
ஏரகம்-சுப்பிரமணியரது தலங்களுளொன்று.
ஏரணம் - தருக்கம்.
ஏரண்டம் - ஆமணக்கு.
ஏரம்பன் - விநாயகக்கடவுள்.
ஏரல் - கிளிஞ்சில்.
ஏரா - மரக்கலத்தினடிமரம்.
ஏரி - எருத்தின்முரிப்பு, நீர்நிலை.
ஏரின்வாழ்நர் - சூத்திரர்.
ஏரெழுபது - ஓர்நூல். (ஏர்முதலியவற்றைச்சிறப்பித்துக் கம்பராற்பாடப்பட்டது).
ஏர் - அழகு, உழுமெருது, உழவு, கலப்பை, எழுச்சி, (சிங்சுரமஞ்சரி ௧௦௬; ஏர்பு என்பதற்கு எழுந்து எனத்திருமுருகாற்றுப்படைஉரை), தோற்றம், பொலிவு, ஒப்பு.
ஏர்க்கால் - கலப்பையில் நீண்டிருக்குந் தடி.
ஏலபிலன் - குபேரன்.
ஏலம் - ஏலச்செடி, மயிர்ச்சாந்து, [விலை கூறுகை].
ஏவல் - செய்யக்கூடியதாதல், அங்கீகரித்தல், எதிர்த்தல், ஒத்தல்.
ஏலா - தோழியைவிளிக்கும் விளி.
ஏலாதி - ஓர்மருந்து.
ஏலாமை - இயலாமை.
ஏல்வை - காலம், குளம், நாள்.
ஏவல் - ஏவிச்செய்விக்கும்வேலை, தரித்திரம்.
ஏவிளம்பி - ஓர்வருடம்.
ஏவுதல் - தூண்டுதல், அனுப்புதல்.
ஏழகம் - ஆடு, செம்மறியாட்டாண்.
ஏழு - ஓரெண்.
ஏழை-அறிவீனன், தரித்திரன், பெண்.
ஏழைமை - அறியாமை, வறுமை.
ஏழ்பரியோன் - சூரியன்.
ஏளனம் - இகழ்ச்சிச்சொல்.
ஏறுளர் - சேனைத்தலைவர்.
ஏறு-பொலியெருது, எருது, இடபராசி. விலங்கினாண், இடி, அச்சுவினிநட்சத்திரம், உயர்ச்சி.
ஏறுகோட்பறை - முல்லைநிலப்பறை.
ஏறுதல் - மேலாகவேனும் எதிராகவேனுஞ்செல்லுதல், அதிகப்படல்.
ஏறூர்ந்தோன் - சிவன்.
ஏற்படுதல் - உடன்படுதல்.
ஏற்பாடு - கட்டளை.
ஏற்றம் - உயர்ச்சி, பெருக்கம், மேன்மை, புகழ், துலாமரம்.
ஏற்றல் - இரத்தல், கொள்ளல், அங்கீகரித்தல், எதிர்த்தல், *அடுக்குதல்.
ஏனம் - பன்றி, பாவம், ஓலைக்குடை, [பாத்திரம்], நிலைபேறு.
ஏனல் - தினை, தினைப்புனம், கதிர்.
ஏனாதி - நாவிதன், படைத்தலைவன், (படைத்தலைவர்க்கு அரசர்கொடுக்கும் பட்டப் பெயரென்பர் மணிமேகலையுரைகாரர்), மந்திரி.
ஏனும் - விகற்பப்பொருளைத்தருமிடைச்சொல்.
ஏனை - எஞ்சியபொருளைக் குறிக்குமிடைச்சொல், மலங்குமீன்.
ஏன் - எதன்பொருட்டு.

## ஐ

ஐ-அழகு, வியப்பு, (ஐதேகாமம்யானே), சிலேட்டுமம், இருமல், நுண்மை, அற்பம், அரசன், பிதா, தலைவன், இரண்டாம் வேற்றுமையுருபு.
ஐக்கியம் - ஒற்றுமை.
ஐங்கணை - தாமரைப்பூ அசோகம்பூ மாம்பூ முல்லைப்பூ நீலோற்பலப்பூ என்பன. (இவை மன்மதனுடைய ஐவகைப் பாணங்கள்).
ஐங்கணைகள்செய்யும்அவத்தைகள்-சுப்பிரயோகம் விப்பிரயோகம் சோகம் மோகம் மரணம் என்பன. (இவை தாமரைப்பூமுதல் முறையே).
ஐங்கணைக்கிழவன் - மன்மதன்.
ஐங்கரன் - விநாயகக்கடவுள்.

ஐசுவரியம் -பெருஞ்செல்வம்,இறைமை
ஐசுவரியம் அ - இராசாங்கம் மக்கள் சுற்றம் பொன் மணி நெல் வாகனம் அடிமை என்பன.
ஐதிகம்-தொன்றுதொட்டு வழங்கிவருங் கேள்வி. (இம்மரத்திலலகையுண்டு, இப்புற்றிற்பாம்புண்டு என்பனபோன்றன).
ஐது - அடர்த்தியற்றது, அழகையுடையது, மென்மை, வியக்கத்தக்கது, விரைவு.
ஐந்தானம் - மிருகசீரிடம்.
ஐந்திணை - புணர்தல் முதலிய ஐந்துரிப்பொருளும்விளங்கக் குறிஞ்சிமுதலிய ஐந்திணையினையுங்கூறும் நூல்.
ஐந்திரம் - வடநூல் வியாகரணங்களுளொன்று, கிழக்குத்திக்கு.
ஐந்து - ஒரெண். [போல
ஐந்தொகை - ஓர்கணக்கு. [முத்தொகை
ஐப்பசி - அச்சுவினி நட்சத்திரம், ஓர் மாதம்.
ஐமை - தகட்டுவடிவு, மென்மை.
ஐம்படைத்தாலி - பஞ்சாயுதம். (சிறுவர்க்குக் கழுத்திலணிவது.)
ஐம்பது - ஒரெண்.
ஐம்பால் - பெண்களின்கூந்தல்.
ஐம்புலனுகர்ச்சியாலுயிரிழப்பன - சுவையினுல் மீனும் நாற்றத்தினுல் வண்டும் பரிசத்தினுல் தும்பியும் இசையினுல் அசுணமாவும் ஒளியினுல் விட்டிலும் ஆம்.
ஐம்மீன் - அத்தநட்சத்திரம்.
ஐம்முகன் - சிவன்.
ஐய- அசைநிலை, இரக்கக்குறிப்பு, வியப்புக்குறிப்பு.
ஐயங்கவீனம் - வெண்ணெய்.
ஐயங்கார் - வைஷ்ணவப்பிராமணர்களுளொருபகுதியார்.
ஐயம் - சந்தேகம். பிச்சை, பிச்சையேற்குங்கலம்.
ஐயர் - தேவர், பிராமணர், முனிவர்.
ஐயவி - வெண்சிறுகடுகு.
ஐயறிவுயிர் - மனிதரும் விலங்குகளும் பறவைகளும். (கல்வியறிவுமுடைமையால் மனிதரை ஆறறிவுயிரென்பர்.)
ஐயன் - அரிகரபுத்திரன், கடவுள், பிதா மூத்தோன், குரு.
ஐயாறு - ஓர் சிவதலம்.
ஐயுறவு - சந்தேகம்.
ஐயெனல் - விரைவுக்குறிப்பு, வியத்தல், (சிலப். அரும். ருசு.)
ஐயை - காளி, தலைவி, தவப்பெண், தாய், துர்க்கை, பார்ப்பதி, மகள், குருபத்தினி.
ஐயோ - அதிசயத்துடன்கூடிய இரக்கச்சொல்.
ஐரிணம் - ஓர்வகை உப்பு.
ஐவர் - பாண்டவர்கள்.
ஐவனம் - மலைநெல்.
ஐவிரலி (ஐவேலி) - ஐவிரற்கொடி.
ஐவிரல் - அத்தநட்சத்திரம்.

## ஒ

ஒஃகல் - ஒதுங்கல்.
ஒகரம் - மயில்.
ஒக்கம் - ஊர்.
ஒக்கலை - மருங்கின் பக்கம்.
ஒக்கல் - சுற்றம். ஓர்க்கோலை, (அம்பர்).
ஒசிதல் - துவளல், முரிதல்.
ஒசிவு - துவள்வு, முரிவு.
ஒடி - காட்டுப்புதல், கவண்.
ஒடிசில் - கவண்.
ஒடிதல் - முரிதல்.
ஒடியல் - பனங்கிழங்காலாகிய ஒடியல்.
ஒடு - உடனிகழ்ச்சியைக்குறிக்குமிடைச்சொல், எண்ணிடைச்சொல், இசைநிறை, வேறோரிடத்திலுந் தொடர்ந்திருக்கிற புண், ஒடுமரம்.
ஒடுக்கம் - இடுக்கான இடம், அந்தம், அடக்கம், பதுக்கம்.
ஒடுங்குதல்-அடங்குதல், விசிவுநீங்குதல்.
ஒடை (ஒடுவை) - ஒடுமரம்.
ஒட்டகம் - ஓர்மிருகம்,
ஒட்டடை - புகையுறை.
ஒட்டம் - சூதாடல் முதலியவற்றில் வென்றோர் பெற்றுக்கொள்ளும்படி வைக்கும்பொருள், ஓர்தேசம்.
ஒட்டர் - சுவர்வைத்தல் முதலிய மண்வேலைசெய்வோர். (தனிப். ௬௬௧.)
ஒட்டலன் - பகைவன்.
ஒட்டல் - உடன்படுதல்.
ஒட்டியம் - ஒர்பாஷை, ஓர்தேசம்.
ஒட்டியாணம் - உதரபந்தனம்

ஒட்டு - இணைப்பு, படைவகுப்பு, கதிர் கொய்த தாள், ஒட்டம் வைக்கும் பொருள், ஓரலங்காரம்,(சவி தன்னாற் கருதப்பட்ட ஒரு பொருளைப் பிறி தொன்றிலொட்டிச் சொல்வது), புட் படுக்குங் கருவி, *அற்பம்.
ஒட்டுதல் - பொருத்துதல், ஒளித்தல், ஒன்றைச் சார்ந்திருத்தல், உடன்படு [தல்.
ஒட்டுநர் - மித்திரர்.
ஒட்டை - ஒட்டகம்,
ஒட்பம் - அழகு, அறிவுடைமை.
ஒண்டன் - நரி.
ஒண்டி - ஊற்றாணி.
ஒண்ணுதல் - இயலுதல், பொருந்துதல்.
ஒண்மை - மிகுதி, அறிவுடைமை, அழகு, ஒளி, ஒழுங்கு, நன்மை.
ஒதி - ஓர் மரம்.
ஒதுக்குதல் - மறைத்தல், ஒடுக்குதல்.
ஒதுங்குதல் - மறைதல், நடத்தல், ஒடுங் குதல்.
ஒத்தல் - போலுதல், இயைதல், நடு.
ஒத்துதல் (ஒற்றுதல்)- ஒன்றோடொன்று பட்டு மெல்லெனத் தாக்கல், தாளம் போடுதல்,
ஒப்படைத்தல் - ஒப்புக்கொடுத்தல்.
ஒப்பந்தம் - உடன்படிக்கை,
ஒப்பம் - சம்மதம், சமநிலம், கைச்சாத்து.
ஒப்பனை - அலங்காரம்.
[ஒப்பாரி-ஒப்புச்சொல்லிப் புலம்புதல்.]
ஒப்பில்போலி - ஒப்புமையுணர்த்தாது வரும் போல் என்னுஞ்சொல்.
ஒப்பு - உவமை, அழகு, இசைவு.
ஒப்புமைக் கூட்டம் - செய்யுளணிகளு ளொன்று, ஒரு பொருளின் சிறப்பு இழிவுமுதலியவற்றைக் கூறமிடத்து அவ் வியல்பினவாகிய பிற பொருள் களையுமுடன்வைத்துரைப்பது.
ஒப்புரவு - உலகநடை, கொடை, ஒற்று மை.
ஒயில் - ஒய்யாரம்.
*ஒய்தல் (ஓய்தல்) - செலுத்துதல்.
ஒய்யாரம் - அலங்காரமான தோற்றம்.
ஒய்யெனல் - விரைவுக்குறிப்பு.
ஒருக்கணித்தல் - ஒருபக்கஞ்சாய்தல்.
ஒருங்கு - ஒன்றாக, முழுதாக.
ஒருங்குதல் - ஒருவழிப்படுதல், ஒன்று தல், கெடுதல், அடங்குதல்.
ஒருதலை - துணிவு, நிச்சயம்.
ஒருத்தல் - ஆண்யானை, கரடி புல்வாய் மான் கவரி எருமை பன்றி புலி மரை என்னும் விலங்குகளினாண்.
ஒருபாவொருபது - அகவல் வெண்பா கலித்துறை இவற்றுளொன்றால் அந் தாதியாகப் பாடிய பத்துச்செய்யுள்.
ஒருப்படல் (ஒருமித்தல்) - ஒன்றுபடுதல்.
ஒருமை - தனிமை, ஒற்றுமை, ஒப்பின் மை, ஒருபிறப்பு.
ஒருவந்தம் - தனிமையான இடம், மன நிலை, நிச்சயம்.
ஒருவு - செம்மறியாடு.
ஒருவுதல்-நீங்குதல், (திருக், பொறையு டைமை ரு; ஒரீஇ ஒராய் எனபன இதன் வினையெச்சங்கள்).
ஒரூஉ - இரண்டு சீர்களை இடையிட்டு மோனைமுதலாயின வரத்தொடுப்பது.
ஒரோவழி - சிலவிடத்து.
ஒலி - இடி, காற்று, ஓசை.
ஒலித்தல் - ஆர்த்தல், ஆடைகளினழுக் கைநீக்குதல், தழைத்தல்.
ஒலியலந்தாதி - பதினாறுகலை ஒவ்வோ ரடியாகநாலடிவைத்துப் பலசந்தமாக வண்ணமுங் கலைவைப்புந் தவறாமல் முப்பதுசெய்யுள் அந்தாதித்துப் பாடு வது.
ஒலியல் - புடைவை, தோல், பீலிக்குஞ் சம், பூமாலை, யாறு, தெரு.
ஒல்குதல் - குறைதல், சுருங்குதல், மெலி தல், தளர்தல், ஒடுங்குதல், நெகிழ்தல், சாய்தல்.
ஒல்லல் - பொருந்துதல், செய்தற்கியலு தல், ஊடறீர்தல், உடன்படுதல்.
ஒல்லாமை - பொருந்தாமை, இயலாமை, வெறுப்பு, இகழ்ச்சி.
ஒல்லார் - பகைவர்.
ஒல்லுநர் - மித்திரர்.
ஒல்லெனல் - ஒலிக்குறிப்பு, விரைவுக் குறிப்பு.
ஒல்லை - காலவிரைவு, பழமை, வேகம், சிறுபொழுது.
ஒவ்வுதல் - ஒத்தல், இயைதல்.
ஒழிதல் - தவிர்தல், சாதல், நீங்கல், முடிதல்.
ஒழித்தல் - தவிர்த்தல், நீக்கல், அழித் [தல்.
ஒழிபு - பாரிசேடப்பிரமாணம்.

ஒழிப்பு - அபநுதியலங்காரம்.
ஒழியிசை - ஒழிந்தபொருளைக்குறித்து நிற்பது.
ஒழுகல் - தொல்லோர் முறைப்படி நடத்தல், நேராதல், நீளுதல், நீர்பாய்தல்.
ஒழுகிசை- வெறுத்திசையின்மை.(குணவலங்காரங்களுளொன்று.)
ஒழுகை- பண்டி, பண்டிகளினொழுங்கு.
ஒழுக்கம் - வழி, வருணாச்சிரம தருமம், குலம், உயர்ச்சி.
ஒழுங்கு - முறைமை, நிரை.
ஒழுங்கை (ஒழுக்கம்) - வழி.
ஒளி - பிரபை, சூரியன், சந்திரன், நெருப்பு, ஒளிப்பிடம், விளக்கு, புகழ், புகழ்ச்சொல்.
ஒளித்தல் - மறைதல், மறைத்தல்.
ஒளிர்தல் (ஒளிறுதல்) - ஒளிவீசுதல்.
ஒளிவட்டம் - கண்ணாடி, சக்கராயுதம்.
ஒறுத்தல் - கடிதல், தண்டித்தல், செலவைச்சுருக்குதல், *வெறுத்தல். [ரம்.
ஒறுவாய் - ஒடிந்தவாயையுடைய பாத்தி
ஒற்கம் - ஒடுக்கம், தளர்ச்சி (திருக். கேள்வி ௪), வறுமை (தொல். உரி. ௬௪)
ஒற்றர் - தூதர்.
ஒற்றறுத்தல் - தாளம்போடல்.
ஒற்றி - நிலத்தின் பிரயோசனத்தை ஒப்படைத்துப் பொருள்வாங்குதல்.
ஒற்று - மெய்யெழுத்து, ஒன்றேடொன்று பொருந்துகை, தூது.
ஒற்றுதல்- ஒன்று மற்றொன்றுடன்மெல்லெனப்பட்டுத் தாக்குதல், சாய்த்தல், ஈரந்துவட்டல், காலாலொற்றி நடத்தல், பிறருடைய உட்கிடக்கை முதலியவற்றைப் பலவிதமான சூழ்ச்சிகளால் மறைவிலறிதல்.
ஒற்றுமை - ஒன்றிப்பு.
ஒற்றை- ஒருவாத்தியம், ஒன்று மூன்று முதலிய ஒருமையான எண்.
ஒற்றைமருப்பினன் - பிள்ளையார்.
ஒன்பான் - ஒன்பது.
ஒன்றி - தனித்தவன்.
ஒன்று - ஓரெண்.
ஒன்றுதல் - ஒன்றாதல். ஒருவழிப்படல், பொருந்துதல்.
ஒன்றுநர் - மித்திரர்.
ஒன்னலர், ஒன்னார் } பகைவர்.

## ஓ

ஓ - மதகுகளினின்று நீரைப் பாயாமல் தடுக்கும் பலகை, இடைச்சொல்லாயின்: விளி, ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, இரக்கம், அசைநிலை, பிரிநிலை, (மைந்தவோஎன்பதில் விளி, இது பெரும்பாலும் புலம்பற்கண் வரும். படிக்கவோ வந்தாய் என்புழி விளையாடுதற்கென ஒழிந்த பொருளைத்தருதலின் ஒழியிசை. குற்றியோ மகனோ என்புழி வினா. ஓஒ பெரியன், ஓஒகொடியன் என்பன முறையே உயர்வையுமிழிவையுஞ் சிறப்பித்தலாற் சிறப்பு; இவற்றைஅதிசயமென்பர் பிங்கலர். சாத்தனோ கொண்டானென்பதில்அவன்கொண்டிலனென்பதையுணர்த்தி நிற்றலின் எதிர்மறை. ஆணோவதுவுமன்று பெண்ணோவதுவுமன்று என்பதில். தெரிதற்கண் வருதலால் தெரிநிலை. ஓஒ தமக்கோருறுதியுணராரோ என்பதில் இரக்கம். வம்மினோஎன்பதில் வேறுபொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை- இவனோகொண்டான் என்பதில் பலருள் ஒருவனைப் பிரித்துக் காட்டிநிற்றலாற் பிரிநிலை.)
ஓகம் - பெருக்கு, வெள்ளம்.
ஓகை - உவகை.
ஓகோ - அதிசயக்குறிப்பு.
ஓக்கம் - உயர்ச்சி, வளர்ச்சி
ஓங்கல் - மலை, யானை, மூங்கில், தலைவன், உயர்ச்சி, மேடு, வலியோன், பெருமையிற்சிறந்தோன், *மருமகன்.
ஓங்காரம் - பிரணவம்.
ஓங்குதல் - உயர்தல், வளர்தல், சத்திசெய்தல்.
ஓசம் - ஒற்றை, பிரபை.
ஓசனித்தல் - பறவைகள் சிறகடித்துச் சத்தமிடல்.
ஓசன் - உபாத்தியாயன்.
ஓசை - ஒலி, *வாழை.
ஓச்சர் - பதினெண் குடிமக்களுளொரு வகையினர்.
ஓச்சுதல் - எறிதல், செலுத்துதல், உயரச்செய்தல்.

ஓச்சை - வற்றற்கறி.
ஓடதி-பலித்தவுடனழியும்நெல்முதலிய பயிர்கள், மருந்துமூலிகைகள்.
ஓடம் - மரக்கலம்.
ஓடாணி - ஆபரணக்கடைப்பூட்டு.
ஓடாவி - மரக்கலஞ்செய்வோன்.
ஓடு - இரப்போர்கலம், ஆமை முதலிய வற்றினதும் சிலவித்துக்களினதும் ஓடு, வீடுவேயுமோடு, உடனிகழ்ச்சி யிடைச்சொல்.
ஓடுதல் - ஓடிப்போதல், குலைதல், நீளல், கெடுதல், நீர்பாய்தல்.
ஓடை - நீர்நிலை, அகழி, உலவைமரம், யானைநெற்றியிற்பட்டம், மலைவழி.
ஓட்டம் - உதடு, மேலுதடு, ஓடுகை,
ஓட்டுதல் (ஓடுதலின் பிறவினை) - ஓடச் செய்தல், துரத்துதல், ஒன்றினு ளொன்றைச் செலுத்துதல்.
ஓட்டை - துவாரம்.
ஓணம் - திருவோண நட்சத்திரம், ஆறு.
ஓணான் - ஓந்தி.
ஓதம் - கடல், கடற்றிரை, பெருக்கு, வெள்ளம், அண்டவாதநோய், ஈரம்.
ஓதல் - செயலொழிதல், ( ஓ பகுதி ), வேத முதலிய நூல்களைக்கற்றல், சொல்லுதல். ( இப்பொருள்களில் ஓது பகுதி).
ஓதனம் - அன்னம், உணவு.
ஓதி - ஞானம், கல்வி, பூனை, ஓந்தி, பச்சோந்தி, பெண்மயிர், மலை, கற்றோன், *செறிவு.
ஓதிமக்கொடியினன் - பிரமா.
ஓதிமம் - அன்னம், மலை.
ஓது - பூனை.
ஓதுவான் - மாணாக்கன், தோத்திரம் பாடுவோன்.
ஓதை - ஒலி, பேரொலி, காற்று, மதில், மதிலுண்மேடை.
ஓத்தி - ஓந்தி. (ஓணான்).
ஓத்து - இயல், ( இது நூலுறுப்புக்களு ளொன்று; ஓரினப்பொருளையொரு வழிவைப்பது), வேதம்.
ஓத்துரைப்போர் - கணக்காயர். (உபாத்தியாயர்).
ஓநாய் - ஓர்விதநாய்.
ஓப்புதல் - துரத்துதல்.
ஓமகுண்டம் -வேள்வித்தீயிருக்குங்குழி.

ஓமம் - ஆகுதி, அசமோதகம்.
ஓமல் - ஊர்ப்பேச்சு, பேச்சுப்பரவுதல்.
ஓமாலிகை ௩௨-இலவங்கம் பச்சிலை கச்சோலம் ஏலம் நாகணம் கோட்டம் நாகம் மதாவரிசி தக்கோலம் நன்னாரி வெண்கோட்டம் கத்தூரி வேரி இலாமிச்சை கண்டில்வெண்ணெய் கடுக்காய் நெல்லி தான்றி துத்தம் கச்சோலம் மரேணுகம் மாஞ்சி சைலேகம் புனுகு புன்னைத்தாது புலிநகம் பூஞ்சரளம் தமாலம் வகுளம் பதுமுகம் நுண்ணேலம் கொடுவேரி என்பன. இவை மேனியிற்பூசி அழுக்கைப்போக்குதற்குரியன.
ஓமான் - ஓந்தி. (பிங், உடுஉக.)
ஓமை - ஓமைமரம்.
ஓம் - பிரணவம், சம்மதங்காட்டுஞ்சொல்.
ஓம்படை - பாதுகாவல், கையடை, சம்மதம்.
ஓம்புதல் - பேணுதல், ( குறிக்கொண்டு காத்தல்).
ஓய்தல் - தளர்தல், செயலொழிதல், செலுத்துதல், (உப்போயொழுகை; புற)
ஓவுதல் - செயலொழிதல்.
ஓரகத்தி - கணவனுடைய சகோதரன் மனைவி.
ஓரம் - பக்கம், ஒருபக்கஞ்சார்தல், விளிம்பு.
ஓரறிவுயிர் - புல், மரம் முதலியன (பரிசத்தைமாத்திரமறிவன).
ஓரி - நரி, கிழநரி, ஆண் நரி, முசு, ஆண்முசு, மயிர், ஆண்மயிர், குதிரையின் பிடர்மயிர், கடைவள்ளலெழுவரிலொருவன், விலங்கின்படுக்கை.
ஓரிதழ்த்தாமரை - ஒருபூடு,
ஓரும் - அசைச்சொல்,
ஓரை - இராசி, இலக்கினம், இரண்டரை நாழிகையளவினதாகியகாலம், பெண்கள் கூட்டம், பெண்கள் விளையாட்டு, பெண்கள் விளையாடுமிடம், குரவை.
ஓர்குடியிற்கொண்டோன் - சகலன்.
ஓர்குண்டலன் - பலதேவன், (குண்டலனெனப்பிங்கலம்).
ஓர்க்கோலை - கடல்படு திரவியங்களு ளொன்று. (பிங்கலத்தில் ஒக்கோலை)
ஓர்தல் - ஆராய்ந்துதெளிதல், செவி சாய்த்துக் கேட்டல்.

ஓர்ப்பு - நிலைப்பட்டமனமுனடைமை.
ஓலக்கம் - சபாமண்டபம், சமுகம்.
ஓலம் - அபயம், ஒலி, * பாம்பு.
ஓலை - தெங்கு பனை முதலியவற்றினிலை, முடங்கல், (ஓலைச்சீட்டு), பெண்களின் காதணிகளுளொன்று.
ஓல் - ஒலி.
ஓவம் - சித்திரம்.
ஓவர் - சித்திரக்காரர், பாணர், பாடற்கீழ் மாக்கள், (திருவிளை விறகுவி ௫௦), எத்துவோர்.
ஓவியம் - சித்திரம்.
ஓவியர் - சித்திரகாரர், சிற்பர், கம்மாளர்.
ஓவு - சித்திரம்.
ஓளி - ஒழுங்கு, யானைக்கூட்டம்.

## ஔ

ஔடதம் - மருந்து.
ஔதாரியம் - கொடை.
ஔத்தானபாதன் - துருவன்.
ஔத்திரி - சைவதீக்கைவகைகளுளொன்று, (ஆகுதியுடன்செய்யப்படுவது).
ஔபாசனம் - நித்தியாக்கினிவளர்த்தல்.
ஔரசன் - தன்சாதிக்கன்னியை முறைப்படிவிவாகஞ்செய்துபெற்றபிள்ளை.
ஔவித்தல் - பொறாமைகொள்ளுதல்.
ஔவியம் - பொறாமை.
ஔவை - அவ்வையார், தாய், தவப்பெண்.

## க

கஃசு - கார்பலம்.
ககம் - கிரகம், பறவை, பாணம்.
ககனம் - ஆகாயம், காடு, சேனை.
ககுஞ்சலம் - சாதகப்புள்.
ககுத்தன் - சூரியவம்சத்தாருளொருவன்.
ககுத்து - எருத்தின்திமில்.
ககுடம் - திக்கு.
ககேசன் - சூரியன், கருடன்.
ககோளம் - வானவட்டம்,
கக்கம் - அக்குள். (கமுக்கட்டு)
கக்கரி - கக்கரிக்கொடி.
கக்குதல் - இருமுதல், வாந்திசெய்தல்.
கங்கணம் - கையணிகளுளொன்று.
கங்கதம் - சீப்பு (மயிர்வாருங்கருவி)
கங்கபத்திரம் - பருந்திறகு, அம்பு,
கங்கம் - பருந்து. கமுகு, வரம்பு, சீப்பு. யாகங்களிற் பருந்துவடிவாகச்செய்யப்பட்டிருக்குமோர் வேதிகை, (கங்-யாகசங் எ௨, யாகத்தம்பமென்பர் சிலர்).
கங்காதரன் - சிவன்.
கங்காளம் - எலும்புக்கோவை.
கங்காளன் - சிவன்.
கங்காளி - பார்வதி, காளி.
கங்கு - கருந்தினை, பருந்து, பனைமட்டையின்கவை, வரம்பின்பக்கம், எல்லை.
கங்குல் - இரா.
கங்கை - கங்கைநதி.
கங்கைமைந்தன் - விநாயகக்கடவுள், முருகக்கடவுள், வீட்டுமன்.
கங்கைவேணியன் - சிவன்.
கசகசா - மருந்துச்சரக்குகளுளொன்று.
கசங்கல் (கயங்கல்) - மெலிதல், அழுக்கடைதல்.
கசடர் - கீழ்மக்கள்.
கசடு - கீழ்மை, ஐயம், அழுக்கு, குற்றம், தழும்பு.
கசத்தல்(கயத்தல்) - கைத்தல், வெறுத்தல்.
கசபுடம் - ஆயிரம் எருக்கட்டிவைத்தெரிக்கும்புடம். (ஒருமுழ ஆழமுள்ள குழியில்வைத்தெரிக்கப்படுவதென்பர்).
கசம் - மயிர், யானை, யாரொன்னும் இங்கிலீஷ் அளவை. (கஜம்).
கசாக்கிரம் - மயிர்நுனி,
கசாயம் (கஷாயம் கடாயம்) - குடிநீர். நூல்முதலியவற்றிற்குவேறுநிறமுண்டாக்குதற்காக மரப்பட்டை முதலியவற்றையூறவைத்தநீர்.
கசிதம் - இரத்தினமுதலியஅழுத்தப்பட்டது, துடுப்பு. (பிங் க௨௫ள).
கசிதல் - இரங்குதல், உருகுதல், நெகிழ்தல், நீருறுதல்.
கசிவு - அன்பு, நீர்க்கசிவு, அழுகை, வெயர்வை, மனவருத்தம்.
கசை - சம்மட்டி, (சாட்டை) குதிரைச்சம்மட்டி, *கவசம்.
கச்சபம் - ஆமை, குபேரனுடைய நவநிதிகளுள் ஆமைவடிவான ஒன்று.
கச்சபி - சரசுவதியுடைய வீணை.
கச்சம் - குதிரையங்கவடி. கயிறு, முலைக்கச்சு, யானைக்கழுத்திடுகயிறு, வார், மரக்காலென்னும் அளவு, அளவு, இறகு, கொடுக்கு, கிரகங்கள் பூமியைச்சுற்றியோடும்பாதை. (கட்சம் கக்ஷம் எனவும்).

க்ச்சவம் (கச்சளம்). மேகம், இருள்.
கச்சான் - மேல்காற்று.
கச்சி - காஞ்சிபுரம்.
கச்சு- அரைக்கச்சு, முலைக்கச்சு.
கச்சை - கயிறு, அரைக்கச்சு, யானைக் கழுத்திடுகயிறு, உடற்றழும்பு, வார், சட்டை.
கச்சைக்கொடியோன் . கன்னன், இங்கே கச்சை யானையின் கீழ்வயிற்றிற் கயிறு.)
கச்சோதம் - மின்மினி.
கச்சோலம்- ஓர் வாசனைத்திரவியம்.
கஞலல்- பொலிதல், செறிதல், சினக் குறிப்புறல்.
கஞ்சகம்- கச்சின்றலைப்பு,(பிங். கஉகூக) கருவேப்பிலை.
கஞ்சகாரர்- கன்னார்.
கஞ்சம்- தாமரை, வெண்கலம், கச்சின் றலைப்பு, அப்பவர்க்கத்துளொன்று. வஞ்சகம், கைத்தாளம், நீர், கஞ்சா.
கஞ்சரீடம்-வலியான்குருவி.
கஞ்சனம் - கரிக்குருவி, கண்ணாடி.
கஞ்சனை - கலசப்பானை, கண்ணாடி.
கஞ்சன் -கிருஷ்ணமூர்த்தியின் மாமன், பிரமா, குறியவன்.
கஞ்சா - ஓர்செடி, அச்செடியிலிருந்தெடுக்கப்படுஞ்சரக்கு.
கஞ்சாங்கோரை - துளசிபோன்ற மணமுள்ள ஒருசெடி. [கஞ்சி.
கஞ்சி - வெந்த அன்னத்துடனிருக்கும்
கஞ்சிகை - இடுதிரை, பரிபூண்டதேர், சிவிகை, வஸ்திரம்.
கஞ்சுகம்-சட்டை,பாம்பினின்றுங்கழிந்த தோல், உறை.
கஞ்சுகர் - மெய்காப்பாளர்.
கஞ்சுகன் - வைரவக்கடவுள்.
கஞ்சுளி - சட்டை.
கடகம்-கங்கணம்,( இப்பொருளில் கடசமெனவும்), கர்க்கடகராசி, ஓர்யாழுரூர், கூத்தின் விகற்பம்,பரிசை, சேனை, மதில், மலைப்பக்கம், வட்டம், யானைத்திரள், [பனையோலைமுதலியவற்றாலிழைக்குங்கடகம்].
கடத்தல்- தாண்டுதல், பாய்தல், வெல்லுதல்,காலந்தவறச்செய்தல், (இப்பொருளில் கடத்துதல்எனவும்). [தலம்.
கடந்தை- திருப்பெண்ணாகடமென்னும்
கடப்பாடு- கடமை, கொடை, பிரதியுபகாரம். (திருக் ஒப்புரவறிதல் க).
கடப்பு- கடவை.
கடமா- காட்டுப்பசு.
கடமுனி - அகத்தியன்.
கடமை - இறை, கடன், காட்டுப்பசு.
கடம் - அண்டஓடு, யானை, யானைமதம், யானைக்கூட்டம், யானைக்கதுப்பு, யானையின் மதம்பாய்சுவடு, அருநெறி, மலைச்சாரல், காடு, சுடுகாடு, உடல், கடமை, கயிறு, நீதி, குடம், குடமுழா, கும்பராசி.
கடம்பர் - குறும்பர்.(ஓர் சாதியார்).
கடம்பல்- குமிழமரம்.
கடம்பவனம்- மதுரை.
கடம்பன் - முருகவேள்.
கடம்பு-கடப்பமரம், தீங்கு.
கடம்பூர் (கடம்பை)- ஒரூர்.
கடலர்- நெய்தனிலமாக்கள்.
கடலை-ஓர்தானியம்.
கடல்- சமுத்திரம், சதயம்.
கடல் எ-உப்புக்கடல் கருப்பஞ்சாற்றுக் கடல் மதுக்கடல் நெய்க்கடல் தயிர்க் கடல் பாற்கடல் நன்னீர்க்கடல் என்பன.
கடல்படுதிரவியம் ரு- உப்பு பவளம் முத்து, சங்கு, ஓர்க்கோலை என்பன.
கடல்வண்ணன்-ஐயனார், விட்டுணு.
கடல்விராஞ்சி (கடல்விருஞ்சி)-ஓர்மரம்.
கடவுதல் -செலுத்துதல்,(கடைஇ இதன் வினையெச்சம்.)
கடவுளர்-தேவர் [*குரு.
கடவுள் -தெய்வம், முனிவன், நன்மை,
கடவூர்-திருக்கடவூரென்னுஞ்சிவதலம்.
கடவை- கடப்பு, (கடந்து செல்லும்படி. தோட்ட முதலியவற்றிலமைத்திருப்பது), வழி, குற்றம், பகைமேற்சென்றோருறைவிடம், ஏணி.
கடறு- காடு.
கடற்சேர்ப்பன் (சேர்ப்பன்) - நெய்தனிலத்தலைவன், வருணன், பாண்டியன்.
கடற்பிணா - நெய்தநிலப்பெண்.
கடற்பிறந்தாள்- இலக்குமி.
கடனம்- இணைத்தல், பொருத்துதல்.
கடன் - இருணம், அளவு, (கி. அ. கஎ.) தந்தை தாய்முதலாயினோர்க்குச் செய்யவேண்டிய தீக்கடன் நீர்க்கடன்,

முதலியன, குடியிறை, செய்யற்பால தாகிய கருமம், முறை.
கடன் ௩ - தேவர்கடன் பிதிரர்கடன் முனிவர்கடன் என்பன.
கடன்முரசோன்-மன்மதன்.
கடா- ஆணுடு, செம்மறியாட்டாண், ஆணெருமை, வினு.
கடாகம்- அண்டச்சுவர், கர்ப்பரை.
கடாட்சம்- கடைக்கண்வைத்தல், தயவு.
கடாம் (கடம்) - யானைமதம். (மதம்பிலிற்றுந்துளையென்று கலித்).
கடாரம்- ஓரூர், பொன்னிறம், கர்ப்பரை.
கடாவுதல்- செலுத்துதல்; வினவுதல்.
கடி- அரை, பேய், குறுந்தடி, நிதம்பம், இன்பம், காலம், உரிச்சொல்லாயின் காவல், கூர்மை, வாசனை. ஒளி, அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஒலி, நீக்கம், விவாகம், கரிப்பு. (உரிச்சொற்குதாரணங்கள் முறையே கடிநகர் கடிநுனைப்பகழி கடிமலர் கண்ணொடியன்ன கடிமார்பன் கடிவேல் கடிச்சந்தயாழ் அம்புகடிவிடுதும் கடியுண்கடவுள் கடிமணச்சாலை கடிமுரசு கடிமது கடிவினை கடிமிளகு என்பன. தொல் உரியியலில் முன்றேற்று ஐயம் என்னும் பொருள்களும். அவற்றிற்குதாரணங்கள். முறையே கடுஞ்சூடருகுவனினக்கே கடுத்தனளல்லளோவன்னை என்பன).
கடிகாரம்- நாழிகைவட்டம்.
கடிகை- நாழிகை, (விநாடி ௬0 கொண்டது), கதவிடுதாழ், துண்டம், எழுத்தாணி.
கடிகைமாக்கள்- மங்கலபாடகர்.
கடிகைவெண்பா- நாழிகையளவைக்குறித்துத் தேவர்க்ரு அல்லது அரசர்க்கு முப்பத்திரண்டாகப் பாடும் நேரிசை வெண்பா.
கடிகோல்- முரசுமுதலியவற்றில் ஒலிபிறக்கும்படி தாக்குங் குறுந்தடி, கிளிகடிகோல்.
கடிஞை-ஏற்குமட்கலம்.
கடிதடம்- அரை, நிதம்பம்.
கடிதம் - சீட்டுமுதலியன.
கடிதல் - விலக்குதல். துரத்துதல், தண்டித்தல், தாக்குதல், கோபித்தல், அழித்தல், *அறுத்தல்.

கடித்தல்- வாயினுற் கடித்தல், குறமுதலியவற்றாலதுக்குதல்.
கடிந்தோர்-காமமுதலிய குற்றங்களை நீக்கினோர், (முனிவர்),
கடிப்பகை- வெண்கடுகு, வேம்பு.
கடிப்பம்- கடிப்பிணையென்னுங்காதணி, ஆபரணச்செப்பு. கெண்டி.
கடிப்பிணை - ஓர்வகைக் காதணி. (சிங்.)
கடிப்பு- முரசடிக்குங் குறுந்தடி.
கடியன்- கடிக்கும் பிராணி.
கடிவாளம்-குதிரையின் வாய்வடம்.
*கடிவை- யானை. (பிங் உ௬௧உ).
கடிலம்-கடுமை, உரம், கொடுமை.
கடு- கடினவார்த்தை, கசப்பு. உறைப்பு, நஞ்சு, முள், வேகம், கடுமரம்,
கடுகம்- திரிகடுகம். கார்ப்பு.
கடுகு- சரக்குவகைகளுளொன்று, [எண்ணெயின் கீழுறையுமழுக்கு].
கடுகுதல்- விரைந்துசெல்லுதல்.
[கடுக்கன்- ஆடவர்காதணி].
கடுக்காய்- கடுமரத்தின்காய்.
கடுக்கை- கொன்றைமரம்.
கடுக்கையங்கண்ணிசூடி- சிவன்.
கடுங்கண்- தறுகண்மை.
கடுத்தலை - வாள்.
கடுத்தல் - ஒத்தல், சந்தேகித்தல், அழலுதல், விரைதல்.
கடுப்பு - விரைவு, அழற்சி, ஒப்பு.
கடுமை - கடினம், கொடுமை, சினம், விரைவு.
கடும்பு - சுற்றத்தார், ஈன்றணிமையதினங்களிற்கறந்த பசுவின்பால்.
கடுரோகிணி - ஓர்மருந்துப்பூடு.
கடுவல் - கடுநிலம், கடுந்தன்மை.
கடுவன் - குரங்கு பூனை இவற்றினாண்.
கடுவாய் - ஓர்நதி, புலியினங்களுளொன்
கடுவை - பறைவிகற்பம். [று.
கடூரம் - கொடுமை.
கடை - அதமம், கீழ், அங்காடி, வாயில், அற்பம், இழுக்கு, முடிவு, ஆபரணக்கடைப்புணர்வு, இடம், ஏழனுருபு.
கடைகோல் - தீக்கடைகோல்.
கடைக்கணித்தல் - புறக்கணித்தல்.
கடைக்காப்பு - பதிகங்களினீற்றுச் செய்யுள். கதவடைத்தல்.
கடைக்குளம்- உத்தராடநட்சத்திரம்.
கடைக்குறை - ஈறுகுறைந்து நிற்குஞ்சொல்.

கடைக்கூடல்- செய்தவினைப்பயன் அநுபவத்திற்குவருதல், (சிலப்).
கடைக்கூட்டல் - கணக்கைமுடித்தல். ஒருப்படுத்துதல்.
கடைச்சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர்- கபிலர் பரணர் நக்கீரர் மாமூலனார் கல்லாடர் சீத்தலைச்சாத்தனார் மருத்துவன்றாமோதரனார் நாகன்றேவனார் அரிசிற்கிழார் பொன்முடியார் கோதமனார் நத்தத்தனார் முகையலூர்ச்சிறுகருந்தும்பியார் ஆசிரியர்நல்லந்துவனார் கீரந்தையார் சிறுமேதாவியார் நல்கூர்வேள்வியார் தொடித்தலைவிழுத்தண்டினார் வெள்ளிவீதியார் மாங்குடிமருதனார் எரிச்சலூர்மலாடனார் போக்கியார் மோசிகீரனார் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் மதுரைத்தமிழ்நாயகனார் பாரதம்பாடியபெருந்தேவனார் உருத்திரசன்மகண்ணர் பெருஞ்சாத்தனார் நரிவெருத்தலையார் மதுரைத்தமிழாசிரியர்செங்குன்றூர்க்கிழார் மதுரையறுவைவாணிகர் இளவேட்டனார் கவிசாகரப்பெருந்தேவனார் மதுரைப்பெருமருதனார் கோவூர்க்கிழார் உறையூர்முதுகூற்றனார் இழிகட்பெருங்கண்ணனார் செயிர்க்காவிரியார்மகனார் சாத்தனார் செயலூர்க்கொடுஞ்செங்கண்ணனார் வண்ணக்கஞ்சாத்தனார் களத்தூர்க்கிழார் நச்சுமனார் அக்காரக்கனிநச்சுமனார் நப்பாலத்தனார் குலபதிநாயனார் தேனீர்குடிக்கீரனார் கொடிஞாழன்மாணிபூதனார் கவுணியனார் மதுரைப்பாலாசிரியனார் ஆலங்குடிவங்கனார் என்பவர்கள்.
கடைஞர்- மருதநிலமாக்கள், இழிஞர். (பெண்பாலில் கடைச்சி, கடைசி).
கடைத்தலை - வாயில், முதல்வாயில்.
கடைத்தேறல் - ஈடேறுதல்.
கடைநாள் - இரேவதிநட்சத்திரம்.
கடைநிலை - கடைக்கணின்றோன் என்வரவினைத்தலைவற்கிசையென வாயில் காப்போனுக்குக்கூறும்பாடல்.
கடைபோதல் - நிறைவேறல்.
கடைப்பிடி - தேற்றம், மறவாமை.
கடைப்புணர்வு [கடைப்பூட்டு]- ஆபரணக் கடைப்பூட்டு.
கடையம் - அயிராணியாடல், பதினொருருத்திராடலுளொன்று.
கடையனல் - ஊழித்தீ.
கடையெழுஞ்சனி-உத்தரநட்சத்திரம்.
கடைவள்ளலெழுவர் - பாரி ஆய் எழினி நள்ளி மலயன் பேகன் ஓரி என்பவர்கள்.
கடைவள்ளல்- புகழ்வோர்க்குக் கொடுப்பவன்.
கடைவாயில்- தலைவாயில்.
கடோற்கசன் - வீமன்மகன்.
கட்கம் - வாள்.
கட்சி- காடு. சேக்கை, புகலிடம், முனையிடம், பறவைக்கூடு, [பக்கம்]
கட்செவி - பாம்பு.
கட்டங்கம்- (கட்டுவாங்கமென்னும் வடசொல்லின்விகாரம்), ஆயுதவிகற்பம், மழுப்படை.
கட்டணம் - தடுப்பு.
கட்டம் - மலம், துன்பம், (இப்பொருள்களில் கஷ்டம் எனவும்), மோவாய்.
கட்டளை - நிபந்தனை, உருவங்களையுண்டாக்குமச்சு, நிறை, உவமை, தராசுக்கோல், துலாராசி, செங்கலியற்றுங்கருவி.
கட்டளைக்கலித்துறை - கலித்துறைவகையுளொன்று, முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாதுநிற்பக் கடையொருசீரும்விளங்காயாகிவருவது.
கட்டளைக்கலிப்பா - கலிப்பாவகையுளொன்று, முதற்கண் மாச்சீர்பெற்று நாற்சீரான்வருவதரையடியாக அதனிரட்டிகொண்ட நான்கடிகளையுடையபாடல்.
கட்டளைக்கல் - உரைகல்.
கட்டாடி- வண்ணான்,குறிசொல்வோன்.
கட்டாரி - சூலம், குற்றுவாள்.
கட்டி - திரளை, சர்க்கரை, கற்கண்டு.
கட்டியகாரர் - புகழ்வோர்.
கட்டியம் - புகழ்ந்துபேசுதல்.
கட்டில் - மஞ்சம்.
கட்டு - கட்டுப்பாடு, வரம்பு, தேவதையையுபாசித்துச்சொல்லுங்குறி, கட்டுக்கதை, காவல்.
கட்டுதல் - பந்தித்தல், தடுத்தல், நிகழாததோர்சம்பவத்தை நிகழ்ந்ததாகக்கதை பரப்பல். [மிதவை.
கட்டுமரம் - மரங்களையிணைத்துக்கட்டிய

கட்டுவாங்கம் (கட்டங்கம்)-மழு, யோகிகள்வைத்திருக்குந் தண்டு.
கட்டுரை - உறுதிச்சொல்.
கட்டுவை- கட்டில்.
[கட்டெறும்பு - எறும்பினங்களுளொன்று.
கட்டை-குறிலானது, தறித்துத் துண்டுபடுத்தியமரம், (விறகு).
கட்பு- களைபறித்தல், களவுசெய்தல்.
கணகன்-கணிதன்.
கணக்கன்-புதன், கணக்கெழுதுவோன்.
கணக்காயர் - உபாத்தியாயர்.
கணக்கு - எண், கணிதம், எழுத்து.
கணதரர் - அருகக்கடவுள், அருகமதத்துப் புலவருளொருவர்.
கணபதி - விநாயகக்கடவுள்.
கணப்பொருத்தம் - செய்யுள்பாடும் போது முதற்செய்யுளின் முதற்சீராற்பார்க்கப்படும் எண்வகைக்கணங்களாலமையும்பொருத்தம், (எண்கணங்களாவன; நீர் தீ ஆகாயம் சுவர்க்கம் சந்திரன் சூரியன் வாயு நிலம் என்பன; முறையே கூவிளங்கனி புளிமாங்கனி கருவிளங்காய் தேமாங்காய் புளிமாங்காய் கூவிளங்காய் தேமாங்கனி கருவிளங்கனிஎன்னும் வாய்பாட்டையுடைய சீர்கள்;இவற்றுள் நீர்க்கணமும் சந்திரகணமும் சுவர்க்க கணமும் நிலக்கணமும் உத்தமம்; ஒழிந்தன ஆகா. ஆகாயகணம் அந்தரகணமென முன் குறிக்கப்பட்டது),விவாகத்தில்ஆண்பெண்களுடைய நட்சத்திரங்களாற்பார்க்கப்படும் மூவகைக் கணங்களாலமையும் பொருத்தம்.
கணம் - கூட்டம், வருக்கம், காலநுட்பம், (௬০ கலையளவினது;பாஸ்கராசாரியர் ௬০ கலைஒருநாழிகையெனவும் இரண்டு நாழிகையைக் கணமெனவும் கூறுவர்; அமரசிங்கர் ௪০ விநாடியைக் கணமென்பர்), தீப்பொறி, சிவகணம், சபை, பேய், தானியங்களினொறுங்கல், திப்பலி, விண்மீன், வட்டம், கணம்புல், ஓர்நோய், விலங்கின் கூட்டம், அற்பம்.
கணம் கஅ - சாரணர் சித்தர் விஞ்சையர் பைசாசர் பூதர் கருடர் கின்னரர் இயக்கர் காந்தருவர் சுரர் தைத்தியர் உரகர் ஆகாயவாசிகள் போகபூமியர் முனிவர் நிருதர் கிம்புருடர் விண்மீன் என்பன.
கணவம் - அரசமரம்.
கணவன் - நாயகன்.
கணவாய் - ஒருமீன்வகை, மலைமேற்பாதை.
கணவிரி - அலரி. (மணிமே).
கணவீரம் - அலரி. (செவ்வலரியென்று திருமுரு உரையில்).
கணனம் - கணக்கிடுதல்.
கணுதன் - ஒருமுனிவர்.
கணி - வேங்கைமரம், சோதிடன், பலநூல்களில்தேர்ச்சியடைந்தவன், மருதநிலம்.
கணிகை - தாசி.
கணிச்சி - கோடரி, மழு, உளி, தோட்டி, *இலைமூக்கரிகத்தி.
கணிதம் - கணக்கு.
கணிதர் - சோதிடர்.
கணிதவகை அ - கூட்டல் கழித்தல் பெருக்கல் பிரித்தல் வர்க்கம் வர்க்கமூலம் கனம் கனமூலம் என்பன.
கணித்தல் - கணக்கிடுதல்.
கணு -மூங்கில்,கருப்பந்தடி முதலியவற்றினுள்ள கணு.
கணுவை - கணப்பறை. (கணையம் எனவும் வழங்கும்.)
கணேசன் - விநாயகக்கடவுள்.
கணை - அம்பு, கணைநோய், திரட்சி, பூரநட்சத்திரம்.
கணைக்கால் (திரண்டகால்) - முழங்காலுக்கும் பரட்டிற்குமிடையிலுள்ளகால்.
கணையம் - எழு, யானைகளுக்கிடையே ஒன்றோடொன்று போராடாமலிட்டிருக்கும்மரம், காவற்காடு, *போர்.
கண் - விழி, இடம், மரக்கணு,மூங்கில், துவாரம், அறிவு, கண்ணோட்டம், வாத்தியங்களின்முகம், ஏழனுருபு.
கண்கட்டு - இந்திரசாலவித்தை.
கண்காணி - மேல்விசாரணை செய்வோன்.
கண்குத்திப்பாம்பு - ஓர்பாம்பு.
கண்கூடு - பிரத்தியட்சம், நெருக்கம், பொருந்து).
கண்டகம் - முள், காடு, உடைவாள், வாள், கீழ்மை.
கண்டகர் - கீழ்மக்கள், துட்டர்.
கண்டகி - ஓர்நதி, தாழை.
[கண்டகோடரி-ஓர்வகைக்கோடரி].

கண்டங்கத்தரி - ஓர்செடி.

கண்டசர்க்கரை - ஓர்வகைச்சர்க்கரை.

கண்டமாலை - கழுத்தில்வரும் ஓர்நோய்.

கண்டம் - கழுத்து, துண்டம், அவமிருத்து, கேந்திரம், ஓர்யோகம், வாள், கவசம், வெல்லம், இடுதிரை, யானைக்கச்சை, எழுத்தாணி, கண்டசர்க்கரை, தேசம்.

கண்டம் ௯ - வடபால்விதேசம் தென்பால்விதேகம் கீழ்பால்விதேகம் மேல்பால்விதேகம் வடபாலிரேவதம் தென்பாலிரேவதம் வடபாற்பாதம் தென்பாற்பாதம் மத்திமகண்டம் என்பன; இவ்வாறன்றி, பரதகண்டம் குருகண்டம் கிம்புருகண்டம் இளாவிருதகண்டம் அரிகண்டம் கேதுமாலகண்டம் இரமியகண்டம் பத்திராசுவகண்டம் இரணியகண்டம்எனவுங்கூறுவர்

கண்டல் - தாழை, முள்ளிச்செடி, கண்டல்மரம்.

கண்டனம் - துண்டாக்கல், பிளத்தல், நிராகரித்கல்.

கண்டன் - நாயகன், ஓர்சோழன் (பாரதசிறப்புப்பா ௨௦)

கண்டாந்தம் - குற்றமானசிலநட்சத்திரங்களின்சந்தி.

கண்டாயம் - துவாரம்.

கண்டாய் - முன்னிலையசை.

கண்டி - இலங்கையின் மத்தியபாகத்திலுள்ள ஓர்நகரம், ஓர்சிவதலம், [௨அ துலாங்கொண்ட நிறை, ௨௦ பறை கொண்ட அளவு.]

கண்டிகை - உருத்திராக்கம் (கண்டி எனவும்), கழுத்தணிவடம், தோளணி, ஆபரணச்செப்பு, பதக்கம், ஓர்வாத்தியம்.

கண்டித்தல் - வெட்டுதல், நிராகரித்தல்.

கண்டில்வெண்ணெய் - ஓர்பூடு (இராமா [ஆற் க௫)

கண்டீரவம் - சிங்கம்.

கண்டீர்வம் - சதுரக்கள்ளி.

கண்டு - கற்கண்டு, கட்டி, கணைக்காலின் கீழுள்ளபொருத்து. (தணிகைப் அகத் ௪அஅ).

கண்டுஞ்சல் - நித்திரைசெய்தல்.

கண்டூதி - காஞ்சொறி, தினவு.

கண்டூயம் - தினவு.

கண்டை - எறிமணி, பெருமணி, சிறு
துகில், பானைமுதலியவற்றிற்குக் கட்டும்மணி. [வி

கண்ணகி (கண்ணகை)-கோவலன் மனை

கண்ணடி - கண்ணாடி.

கண்ணப்பன் - ஓர் சிவனடியார்.

கண்ணமங்கை - ஓர்விஷ்ணுஸ்தலம்.

கண்ணல் - கருதல்.

கண்ணழித்தல் - பதம்பிரித்துப் பொருள் கூறல்.

கண்ணறை - அகலம், பலதுவாரமுள்ள பாத்திரமுதலியன.

கண்ணன் - திருமால்.

கண்ணாடி - கண்ணால் தன்னுருவமுதலியவற்றைப்பார்த்தற்குரியகருவி.

கண்ணாளர் . கம்மியர்.

கண்ணி - விலங்கு முதலியவற்றையகப்படுத்துங்கயிற்றுத்தடம், ஓர்வகைப்பா, (பராபரக்கண்ணி), பூ, பூவரும்பு, மாலை, தலைமேற்சூடுமாலை.

*கண்ணுகம் - குதிரை.

கண்ணுதல் - சிவன், கருதுதல்.

கண்ணுவன் - ஓர்முனிவர்.

கண்ணுளாளர் (கண்ணுளர்) - நாடகர்.

கண்ணுள் - கூத்து.

கண்ணுள்வினைஞர் (கண்ணுளர்)-கம்மாளர், சித்திரகாரர்.

கண்ணுறல் - பார்த்தல்.

கண்ணூறு - பிறருடைய கண்பார்வையினால் வருங்குற்றம்.

கண்ணோட்டம் - தாட்சிணியம். (தன்னோடு பயின்றார் கூறியவற்றை மறுக்க மாட்டாமை).

கண்படை - நித்திரை, படுக்கை.

கண்படைநிலை - அரசரும் அரசரைப் போல்வாரும் அவைக்கண்ணெடிது தங்கியவழி மருத்துவர் அமைச்சர்முதலாயினோர் அவர்க்குக் கண்டுயில்கோடலைக்கருதிக்கூறும் பாடல்.

கண்மணி - கண்ணுளிருக்குங்கருவிழி.

கண்மை - கண்ணோட்டம்.

கண்வளர்தல் - நித்திரைசெய்தல்,

கதம் - உக்கிரம், கோபம், சென்றது.

கதம்பம் - கடப்பமரம். பரிமளப்பொடி, மேகம், தொகுதி, பிந்திய பொருளிற் கதம்பை எனவும், (உ-ம்: கதம்பைக் கயிறு).

கதலி - வாழை, வாழையினோர் சாதி,

தேற்றுமரம், காற்றுடி, விருதுக்கொடி, (கதலிகை எனவும்).
கதலிவனம் - திருக்கழுக்குன்றம்.
கதவு - கதவு, காவல்.
கதழ்தல் - சினத்தல், உக்கிரமாதல், விரைதல், கலங்கிச்சத்தமிடல் (பெரும்பா உகூ).
கதழ்வு - உக்கிரம், கோபம், பெருமை, மிகுதி, விரைவு.
கதறுதல் - அச்சமுதலியவற்றாற்கத்துதல்
கதனம் - காமவேகம், வேகம், கலக்கம்
கதாயுதன் - வீமன்.
கதி - நடை, பதவி, மோட்சம், வழி, வேகம், நால்வகைக்கதிகள்.
கதி ச - தேவகதி மக்கட்கதி விலங்கின் கதி, நரககதி என்பன.
கதிதம் - சொல்லப்பட்டது.
கதித்தல் - சொல்லல், ஒலித்தல், பருத்தல், மிகுத்தல், கிளர்தல்.
கதிரம் - கருங்காலிமரம், அம்பு.
கதிரெழுதுகள் - சூரியகிரணஞ் சிறுதுவாரத்தினூடேவிழும்போது விளம்பிக்காணப்படுஞ் சிறதுகள்.
கதிரை - ஓர்வகையாசனம், (பறங்கிச்சொல்), கதிர்காமம்.
கதிரோன் - சூரியன்.
கதிர் - கிரணம், ஒளி, சூரியன், வெய்யில், பயிர்க்கதிர், அடிபருத்துநுனிசிறுத்து, நீண்டவடிவாயிருக்கும் இருப்புமுள்.
கதிர்காமம் - ஈழதேசத்திலுள்ள ஓர் சுப்பிரமணியதலம்.
கதிர்ப்பகை - கேது.
கதிர்மகன் - சனி, கன்னன், சுக்கிரீவன்.
கது - வடு.
கதுப்பு - ஆண்மயிர், பெண்மயிர், கபோலம், பசக்கூட்டம், யானைக்கவுள்.
கதுமெனல் - விரைவுக்குறிப்பு.
கதுவாய் - யாப்பிலக்கணத்தில் முதலயற்சீரை அல்லது ஈற்றயற்சீரையொழித்த செய்யுளடி. (மேற்கதுவாய் கீழ்க்கதுவாய் என்பன).
கதுவுதல் - பற்றுதல், மூளுதல், *கலங்குதல்.
கதை - சரித்திரம், சொல், (காரணச்சொல்என கஂ௦ கஂ௦), தண்டாயுதம்
கதைத்தல் - பேசுதல்.
*கத்தணம் - சட்டை.
கத்தரி - வழுதுணை, கத்தரிக்கோல்.
கத்தரிகை (கர்த்தரிகை) - கத்தரிக்கோல்.
கத்தரித்தல் - மயிர்முதலியவற்றைக்கொய்தல்.
கத்தி - வாள், வெட்டுங்கருவி.
கத்திகை - குருக்கத்திமரம், மாலைவிகற்பம், சிறுகொடி.
கத்தியம் - உரைப்பாட்டு, (செய்யுள் போன்றநடையினையுடையது) சிறுதுகில்.
கத்தியோதம் - மின்மினி.
*கத்திரி - தலைவிரிபறை.
கத்து - கத்துகை, பிதற்றுரை.
கத்துதல் - கதறுதல், பிதற்றுதல், பேரொலிசெய்தல். (கடலொலிபோன்றன).
கத்துரு - நாகர்களின்றாய். (காசிபன்மனைவியரிலொருத்தி).
கத்தூரி - மான்மதம். (கத்தூரிமானின் மதம்).
கந்தகம் - பாஷாணங்களுளொன்று.
கந்தசாரம் - பனிநீர். (இரகு இரகு உச).
கந்தமாதனம் - இராமேச்சுரத்திலுள்ள ஓர் மலை, குலகிரி எட்டனுள் ஒன்று.
கந்தம் - கழுத்தடி, கிழங்கு, கருணைக்கிழங்கு, வாசனை, சந்தனக்குழம்பு, நூலின்பகுப்பு, (கணிதஸ்கந்தம் என்பதுபோல), பௌத்தமதத்திற்கூறப்பட்ட ஐந்துகந்தம், அணுக்கூட்டம், ஐம்பொறிகள்.
கந்தம் உ - நற்கந்தம்துர்க்கந்தம்என்பன.
கந்தம் ரு - உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானம்என்பன (இவைபுத்தமதவழக்கு).
கந்தரம் - கழுத்து, மேகம், மலைமுழை.
கந்தருவம் - இசை, குதிரை.
கந்தருவர் - இசைபாடுந்தேவசாதியார்.
கந்தர்ப்பன் . மன்மதன்.
கந்தல் - கெடுதல், பழுதுள்ளபொருள்.
கந்தவகன் - (கந்தவாகன்) - காற்று.
ககதவாரம் - அந்தப்புரம்.
கந்தளம் - சட்டை.
கந்தன் - முருகக்கடவுள், அருகன்.
கந்தாயம் - வருடத்தின் அல்லது சிலியகாலத்தின் மூன்றிலொன்று, அவ்வளவுகாலத்திற்குரிய நன்மை தீமைகளையறிதற்காகச் சோதிடவிதிப்படி யறியப்படும் அட்டவர்க்களண்.
கந்தாரம் - காந்தாரப்பண், கள், (புறநா உகூ).

கந்தி - கமுகு, தவப்பெண்.
கந்து - தூண், எருதுகளைப்பிணைக்குங் கயிறு, பற்றுக்கோடு, ஆதீண்டுகுற்றி, யானைமுதலியகட்டுந்தறி, யாக்கையின் பொருத்து, பண்டியுள்ளிரும்பு, வைக்கோற்பழுதை.
கந்துகம் - குதிரை, பந்து, குறுகிலமன்னரின்குதிரை.
கந்துதல்- கெடுதல்.
கந்துள்- கரி.
கந்தூரி- செங்கிடை.
கந்தை- பீறற்புடவை, சிறுதுகில்.
கபடம்- வஞ்சகம்.
கபம்- சிலேட்டுமம்.
கபர்த்தம்- சிவனுடையசடை.
கபர்த்தி- சிவன்.
கபாடம் (கவாடம்) - கதவு.
கபாலபாணி- (கபாலி)- சிவன்,வயிரவக்கடவுள்.
கபாலம்- இரப்போர்கலம்,தலையோடு.
கபி- குரங்கு.
கபிஞ்சலம்- சாதகப்புள், காடை.
கபித்தம்- விளாமரம்.
கபிலம்- தளிர்நிறம்,கரிக்குருவி.
கபிலன்-திருவள்ளுவரின் சகோதரரான ஒரு சங்கப்புலவர், கபிலமுனிவர். (சாங்கியநூலாக்கியோன்). [நதி.
கபிலை - கபிலநிறப்பசு, காமதேனு, ஒரு
கபோதம் - புறா, கரும்புறா, சுவர்த்தலங்களின் சித்திரவரி.
கபோலம் - கதுப்பு.
கப்பணம் - இரும்பாற்செய்த நெரிஞ்சின் முள்வடிவான ஆயுதம், கைவேல்.
கப்பம் - சிற்றரசர் தம்மிற்பெரியஅரசர்க்குக்கொடுக்குந்திறை.
கப்பல் - மரக்கலம்.
ப்பி - நோய். [பாரமானபொருள்களை மேலேயேற்றும்போதும் இறக்கும் போதும் அவைமாட்டப்பட்ட கயிற்றையுருட்டுங்கருவி].
கப்பித்தல் - கவர்படுதல், கிளைவிடுதல், பெருத்தல் (திருப்.)
கப்பு - மரக்கிளை, தூண்.
கப்புதல் - உண்ணுதல் (திருப்.)
கமகன் - அரும்பொருளைச் செம்பொருளுடையால் விவகரிப்போன்.
கமக்காரன் - வயற்றலைவன்.
கமடம் - ஆமை.
கமண்டலம் - துறவிகள் வைத்திருக்கும் ஓர்வகைச்சலபாத்திரம்.
கமத்தல் - நிறைதல்.
கமம் - விளைநிலம், நிறைவு, (கமஞ்சூன் மாமழை).
கமர் - நிலப்பிளப்பு.
கமலம் - தாமரை, நீர்.
கமலயோனி - பிரமா.
கமலவூர்தி - அருகன்.
கமலாக்கினி - வைத்தியநூலிற் கூறியஏழுவகை அக்கினிகளுளொன்று. (தாமரைமொட்டுப்போலெரிவது.).
கமலாசனன் - பிரமா.
கமலாசனி - இலக்குமி.
கமலாலயம் - திருவாரூர்.
கமலினி - உமாதேவியாரின் சேடியர்களுளொருத்தி.
கமலை - இலக்குமி.
கமழ்தல் - வாசனைபரத்தல்.
கமனகுளிகை - உண்டாரை நினைத்த விடத்துக்கு நினைத்தவுடன் போகச்செய்யுமருந்து.
கமனம் - போதல்.
கமனீயம் - விரும்பத்தக்கது.
கமித்தல் (க்ஷமித்தல்) - பிறர்செய்தகுற்றங்களுக்காக வெறுப்பு சினம்முதலியவற்றைக்கொள்ளாமை.
கமுகு - ஓர்மரம்.
கமுக்கட்டு - அக்குள்.
கமை (க்ஷமை) பொறுமை, சரணக்கலைபடக்கல்.
கம் - ஆகாயம், மேகம், கம்மியர்தொழில், தலை, நீர், காற்று, வெண்மை, பிரமா.
கம்பக்கூத்து - கழைக்கூத்து.
கம்பம் - நடுக்கம், தூண், விளக்குத்தண்டு.
கம்பலம் - கம்பளி, மேற்கட்டி.
கம்பலி - ஓர்வாத்தியம்.
கம்பலை - பேசலாலெழும் ஒலி, அச்சம், துன்பம்,நடுக்கம், *யாழ்நரம்போசை.
கம்பளம் - கம்பளிவிரிப்பு, கம்பளிப்புடவை, செம்மறிக்கடா, கம்பளதேசம்.
கம்பளர் - மருதநிலமாக்கள்.
கம்பளி - ஆட்டுரோமத்தாலானபுடவை.
கம்பனம் - அசைவு, நடுக்கம்.

கம்பன் - ஓர்புலவர். (இராமாயணஆக்கி யோன்).
கம்பி - இரும்புமுதலிய வற்றாலானகம்பி, காதணிகளுளொன்று.
கம்பித்தல் - அசைதல், நடுங்குதல்.
கம்பீரம் - ஆழம்.
கம்பு - செந்தினை, சங்கு, தூண், சிறு கோல்.
கம்புகட்டி - நீர்பாய்ச்சுவோன்.
கம்புள் - சங்கு, சம்பங்கோழி, வானம் பாடி.
கம்பை - கம்பைநதி, (காஞ்சீபுரத்திலுள்ளது), கதவுமுதலியவற்றில் தைக்கப் படுங்கம்பை.
கம்மம் - கம்மியத்தொழில்.
கம்மாலை - கம்மியத்தொழில்செய்யுஞ் சாலை.
கம்மாளர் (கம்மியர்) - பஞ்சகம்மாளர், (தட்டார் கன்னார் கொல்லர் தச்சர் சிற்பர் என்பவர்கள்), பிறருக்காகத் தொழில்களைச்செய்பவர்கள்.
கம்மியர் - தொழில்செய்வோர், கம்மாளர், கொல்லர்.
கம்முதல் - இருமுதல், குரலடைத்தல்.
கய (உரிச்சொல்) - பெருமை, கயவாய்ப் பெருங்கையானை), மென்மை, (கயந் தலை மடப்பிடி.)
கயங்குதல் (கசங்குதல்) - சோர்தல்.
கயந்தலை - யானைக்கன்று.
கயமுகன் - விநாயகக் கடவுள், கயமுகாசுரன்.
கயமுனி - யானைக்கன்று.
கயம் - தேய்வு, கேடு, கயரோகம், (இப் பொருள்களில் க்ஷயம் எனவும்), ஆழம், குளம், நீர், யானை, யானைக் கன்று, மென்மை, கீழ்மை, இளமை, கருமை, பெருமை, மேன்மை. (பண்புப்பொருள்களிற் கயவுஎனவும்.)
கயர். துவர்ப்பு.
கயல் - கெண்டைமீன்.
கயவர் - கீழ்மக்கள்.
கயவாய் - கரிக்குருவி, கழிமுகம், *எருமை.
கயிடவன் - ஓரசுரன்.
கயிரவம் - (கைரவம்) - ஆம்பல், (நீர்ப்பூக் கொடிகளுளொன்று.)
கயிரிகம் - (கைரிகம்,) காவிக்கல்.

கயிலாயம் - (கயிலாசம், கைலாசம்) - கயிலைமலை. (பரமசிவனிருக்கும்மலை.)
கயிலையாளி - சிவன்.
கயில் - ஆபரணக் சடைப்புணர்வு, பிடர்.
கயிறு - நூல்முதலியவற்றால் முறுக்கப் பட்ட கயிறு.
கயினி (கைனி) - அத்தநாள், கைம்பெண்.
கயை - ஓர் புண்ணியதலம் (காசிக்குச் சமீபத்திலுள்ளது; சிராத்தஞ் செய்தற்கு உத்தமமான இடம்.
கர - ஓர் வருடம்.
கரகம் - ஆலங்கட்டி, கங்கை, நீர், நீர்த் துளி, கமண்டலம், சிரகம், (கெண்டி) வட்டில்.
கரசம் - ஓர் கரணம்.
காஞ்சகம் - புன்கமரம்.
கரடம் - வஞ்சகம், மதம்பாய்சுவடு, யானைமதம். காகம்.
கரடி - ஓர்மிருகம்.
கரடிகை - ஓர்பறை.
காடு - காற்பரடு, யானைமதம்பாய்சுவடு,
கரணம் - மனமுதலிய மூவகைக்கரணங்கள், நால்வகை அந்தக்கரணங்கள், பஞ்சாங்கங்களுட் பவமுதலிய கரணங்கள், ஐம்பொறி, கணிதம், காரணம், கூத்திஞோர் விகற்பம் (படிந்தவாடல்), காதலோர்கூட்டம். காமநூலிற்சொல்லப்பட்ட கூ௪ கரணங்கள், பரதநூலிற் சொல்லப்படுங் கரணங்கள், கைத்தொழில்.
கரணம் ௩ - மனம் வாக்கு காயம் என்பன.
கரணம் கக - பவம் பாலவம் கௌலவம் தைதிலம் கரசம் வணிசம் விட்டி சகுனம் சதுட்பாதம் நாகவம் கிந்துக்கினம் என்பன.
கரணம் கூ௪ - ஆலிங்கனம் ௹ அதரபானம் கக, அமிர்தநிலை கக, நகக்குறி அ, பற்குறி அ, குரல் அ, தாடனம் அ. ஆக கூ௪. இவற்றின்விரி மதனாகமத்திற் கூறப்பட்டது.
கரண்டகம் - செப்பு, பூங்கூடை.
கரண்டம் (காரண்டம்) - நீர்க்காக்கை, செப்பு, காண்டி.
கரண்டை - குண்டிகை, முனிவர்வாசம்,
கரதோயை - ஓர் நதி.
கரத்தல் - ஒளித்தல், கொடாமை.
கரந்துறைகோள் - சிலகாலங்களில் மாத்

திரந்தோற்றப்பட்டுப் பெரும்பாலுந் தோற்றப்படாமலிருக்குங்கிரகம்.
கரந்துறைகோள் அ - இராகு கேது பரிவேடமிரண்டு வால்வெள்ளி தூமம் வானவில்லிரண்டு என்பன.
கரந்தை - ஓர்செடி, பகைவர் கவர்ந்த பசுக்களை மீட்டல்.
கரந்தைமஞ்சரி- பகைவர் கவர்ந்த பசுக்களை அரசன் மீட்பதைக்குறித்துப் பாடிய பாடல்.
கரபத்திரம் - ஈர்வாள், கைவாள்.
கரபம் - யானை.
கரப்பு - ஒளிப்பு, களவு, மீன்கூடு.
கரமஞ்சரி - நாயுருவி.
கரம் - கழுதை, கை, முழம், குடியிறை, நஞ்சு, பரிதியின் கிரணம், ஒளி.
கரம்பு (கரம்பை)- பாழ்நிலம்.
கரவடம் - களவு.
கரவாளம்-கைவாள்.
கரவீரம் - அலரி.
கரவு - ஒளிப்பு, களவு, லோபம், வஞ்சகம்
கர்ளம் - நஞ்சு.
கரன் - ஓரரக்கன்.
கரா - ஆண்முதலை, முதலை.
கராம் - முதலை.
கராம்பு - ஓர் சரக்கு.
கராளம் - கொடுமை.
கரி - நெருப்பினுற் கருகிய விறகு முதலியவற்றின் கரி, கருமை, சாட்சி, யானை, மரவயிரம்.
கரிக்குருவி - ஓர் பறவை.
கரிசனம் - யானைக்கோடு.
கரிசு - குற்றம், பாவம், உ௦௦ பறை கொண்ட அளவு.
கரிணி- * யானை, பெண்யானை, மலை, மலைமுழை.
கரிதல் - கருகுதல்.
கரித்தல் - உறைத்தல்.
கரிநாள் - சோதிடப்படி சுபகருமங்களுக்கு விலக்கப்படுஞ் சிலதினங்கள்.
கரிமா - எண்வகைச்சித்திகளுளொன்று, தன்னைப்பெரும்பாரமாக்குதல்).
கரியவன் - சனி, திருமால், இந்திரன், (கருநிறமுடையோன், நடுச்சொல்வோன்.
கரில் - குற்றம், கொடுமை, உறைப்பு.
கரீரம் - அகத்திமரம், குடம், கும்பராசி, மிடா, யானை, யானைப்புல்லடி.

கரு - கருப்பம், முட்டை, குறிஞ்சிமுதலிய நிலங்களின் கருப்பொருள், நடு, கருநிறம், காரணம், கன்னூர்கட்டுங் கரு, குப்பைமேடு, நிறம்.
கருகுதல் - தீதல், மறைதல்.
கருகூலம் (கருவூலம்) - திரவியசாலை, பலவகைத்திரவியங்கள்.
கருக்காய் - இளங்காய்.
கருக்கு - அரிவாளின் பல், பனைமட்டையினிருபுறங்களிலுமுள்ள கருக்கு.
கருக்குவாய்ச்சி - ஓர் மரம்.
கருக்குழி - கர்ப்பாசயம்.
கருங்காலி - ஓர் மரம்.
கருங்குதிரையாளி - வைரவக்கடவுள்.
கருங்கை - கொன்றுவாழ்தொழிலால் அல்லது வன்பணித்தொழிலாற்கன்றிய கை.
கருங்கொல் - இரும்பு.
கருஞ்சீரகம்-சரக்குவகைகளுளொன்று
கருடக்கொடியோன் - திருமால்.
கருடணம் (கர்ஷணம்)- உழுதல்.
கருடப்பச்சை- ஒருமருந்துக்கல், மரகதவகையுளொன்று.
கருடர் - பதினெண்கணத்தவருளொரு சாரார்,
கருடவாகனன் - விட்டுணு.
கருடன் - கருடப்பட்சி.
கருணை - கிருபை, கருணைக்கிழங்கு.
கருதலர் - பகைவர்.
கருதல் - ஆலோசித்தல், நினைத்தல்.
கருத்தன் (கருத்தா) -முதல்வன், நூல் செய்தவன், எழுவாய்வேற்றுமை, அருகன், கடவுள்.
கருத்தாக்கள் ஐவர் - பிரமா, விட்டுணு உருத்திரன் மகேச்சுரன் சதாசிவன் என்பவர்கள்.
கருத்தாக்கள் மூவர் - பிரமா விட்டுணு உருத்திரன் என்பவர்கள்.
கருத்து- அபிப்பிராயம், செய்யுள்முதலியவற்றின்கருத்து.
கருநடம் (கன்னடம்) - கன்னடதேசம், கன்னடபாஷை, அறியாமை, (கருநடப் பேர்வெள்ளத்தில் விழாமல்; பாரத.)
கருநந்து - நத்தை.
கருநாடகம் - நாகரீகத்துக்கிணங்காத செயல்.
கருநாரை - ஓர்வகை நாரை.
கருநெய்தல் - நீலோற்பலம்.

கருநெறி - நெருப்பு.
கருநொச்சி - ஓர் செடி.
கருந்தாது - இரும்பு.
கருந்தினை - ஓர்வகைத்தினை. [றெழில்
கருந்தொழில் - 'கொலைத்தொழில்', வன்
கருப்பட்டி - பனங்கட்டி.
கருப்பநீர் - கருப்பஞ்சாறு, பனம்பாளை யினூறச்செய்த நீர். (கருப்பணி என வழங்குவர்).
கருப்பம் (கர்ப்பம்)- சினை, உள்ளிடம்.
கருப்பவாயு - இருதுவான காலங்களிற் பெண்களுக்குண்டாகும் வாயுநோய்.
கருப்பாசயம் - கருப்பை.
கருப்பாதானம் - விதிமுறையான சம்ஸ்காரத்துடன் மனையாளைக்கூடுதலாகிய முதற்புணர்ச்சி.
கருப்புக்கட்டி - வெல்லம்.
கருப்புவில்லி - மன்மதன்.
கருப்பூரம் - கர்ப்பூரம், பொன்.
கருப்பூரவல்லி - ஓர் பூடு.
கருப்பை - காரெலி, கருப்பாசயம்.
கருப்பொருள் - குறிஞ்சி முதலியநிலங்களுக்குரியதெய்வமுதலியபொருள்கள்
கருப்போட்டம் - சூரியன் பூராடநட்சத்திரத்தினிற்கும்போது பார்க்கும் மழைக்குறி.
கருமகாண்டம் - வேதமுதலியசிவநூல்களில் கிரியைகளைச் சொல்லும்பாகம்.
கருமணி - நீலரத்தினம், கண்ணின் கரு
கருமதாரயம் - பண்புத்தொகை. [விழி.
கருமநிட்டன் - கிரியையில் விருப்புடையோன்.
கருமபூமி - வரைவு தொழில் வித்தை வாணிகம் உழவு சிற்பம் என்னும் அறுவகைத்தொழிற் பாகுபாட்டினையுடைய தேசம்.
கருமம் (கன்மம்) - செயப்படுபொருள், செயல், நல்வினை தீவினை என்னும் இருவினைகள், மாந்திரிகர்செய்யும் எண்வகைக் கருமங்கள், கருமபூமியிற் குறிக்கப்பட்ட வரைவுமுதலியதொழில்கள், வெப்பம்.
கருமம் அ - வசியம் ஆகர்ஷணம் மோகனம் தம்பனம் உச்சாடனம் வித்துவேஷணம் பேதனம் மாரணம் என்பன.
கருமர் - கொல்லர்.
கருமா - கருமான், பன்றி.
கருமான் - வணமென்னும் மான்.
கருமி - பாவி, தொழிலை ஊக்கமாய்ச் செய்வோன்.
கருமுகை - சிறுசண்பகம்.
கருமேந்திரியம் - கன்மங்களைச் செய்தற்குரிய உறுப்புக்கள் (வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் என்பன).
கருமை - கறுப்பு, கொடுமை, பெருமை,
கரும்பாம்பு - இராகு. [வலிமை.
கரும்பிள்ளை - காகம்.
கரும்பு - கன்னல், புனர்பூசநட்சத்திரம்.
கரும்புள் - பெண்வண்டு, வண்டு.
கரும்புறம் - பனை. [புள்ளி.
கரும்பேன் - புடைவையிலுண்டாகுங்கரும்
கரும்பொன் - இரும்பு.
கருவடம் (கர்வடம், கர்ப்படம்) - மலையுமாறுஞ்சூழ்ந்தவூர், ஓர் தேசம்.
கருவரி - இருள்.
கருவழலை - ஓர் பாம்பு.
கருவறுத்தல் - அடியோடுதொலைத்தல்.
கருவி - ஆயுதம், உபகரணம், காரணம், கைத்தாளம், செயற்கைவாசப்பொருள், கவசம், மெய் வாய்முதலியஉறுப்புக்கள், குதிரைக்கலனை, குதிரைச்சம்மட்டி, தொகுதி, (கருவிவானம்; இங்கே தொகுதி மின்னுமுழக்குமுதலியன) தொடர்பு, சிநேகம், மேகம், வஸ்திரம், வாத்தியம், யாழ்.
கருவிகளின் வகை ரு - தோற்கருவி துளைக்கருவி நரம்புக்கருவி கஞ்சகக்கருவி மிடற்றுக்கருவி என்பன.
கருவிழி - கண்மணி.
கருவிளா - ஒரு மரம்.
கருவிளை - காக்கணங்கொடி.
கருவினை - பாவம்.
கருவுயிர்த்தல் - ஈனுதல்.
கருவுளமைப்பு சு - பேறு இழவு இன்பம் பிணி மூப்பு சாக்காடு என்பன.
கருவூர் - ஒரு நகரம்.
கருவேம்பு - கருவேப்பமரம்.
கருவேல் - கருவேலமரம். [டை.
கருள் - இருள், கறுப்பு, குற்றம், நல்லா
கருனை - பொரியல்.
கரேணு - பெண்யானை. யானை.
கரை - இடம், எல்லை, நீர்க்கரை, சேர்வு, வார்த்தை, புடைவைமுதலியவற்றின் கரை.

கரைதல்- அழுதல், அழைத்தல், மனமிளகுதல், இளகுதல், சொல்லல், பதனழிதல், ஒலித்தல், வருந்துதல், உருவழிதல்.
கரைத்தல்- நீரிற்சுவறச்செய்தல், அழைத்தல், அழித்தல்.
கரையல்- பதனழிந்த பழம், அளவின்மேற்படவெந்து குழைந்த அன்னம் முதலியன.
கரையார் - வலைஞர்.
கரையேறல்-நீரினின்றுங்கரையில்வந்து சேர்தல், நற்கதியடைதல். துன்பந்தீர்தல்.
கரோடி -முடிமாலை.
கர்க்கசம் - கடினம்.
கர்க்கடகம்- நண்டு, கர்க்கடகராசி.
கர்க்கடம்- வட்டம் வரையுங்கருவி. (Compasses).
கர்க்கரி - தயிர்கடைதாழி, கரகம்.
கர்க்கி -குதிரை, விட்டுணுவின் பத்தவதாரங்களுள் ஒன்று.
கர்க்கிச்சா - சோதிடகணிதத்தில் நான்குமுதல் ஒன்பதுக்குட்பட்ட தொகையான ராசிவருமிடத்துக் கொள்ளப்படுஞ்சாவாக்கியம்.
கர்ச்சிதம் - முழக்கம், யானைபிளிறொலி.
கர்ச்சூரம்- பேரீஞ்சு, கழற்கொடி.
கர்ணம் - (கன்னம்)- காது.
கர்த்தபம் (கருத்தபம்)- கழுதை.
கர்த்தமம் (கருத்தமம்) - சேறு.
கர்த்தவியம் - செய்யத்தக்கது.
கர்த்தனம் - கத்தரித்தல்.
கருப்பகிருகம்- மூலத்தானம்.
கர்ப்பரை (கொப்பரை) - கடாரம்.
கர்ப்பிணி (கருப்பிணி) - கருப்பமாயிருக்கும் பெண்.
கர்ப்பூரம் (கருப்பூரம்) - தீபமேற்றுதற்குரிய ஓர்வகைச்சரக்கு.
கர்வம்(கருவம்)-செருக்கு, ஓர்பேரெண். (ஆயிரங்கோடி கற்பமென்பர் மண்டலவர்), குறைமை.
கலகம்-ஒன்றல்லாப்பேரொலி, சண்டை.
கலகலம்- இரைச்சல், பட்சிகளினொலி.
கலக்கம்- மனத்துன்பம், அழுகை, அச்சம்.
கலங்கல் - நீர் அழுக்குடன்சேர்ந்து தெளிவில்லாமலிருத்தல், மனநிலைகெடுதல், அழுதல்.
கலங்கொம்பு - கலைமானின் கொம்பு.

கலசமுனி - அகத்தியமுனிவர்.
கலசம் - குடம்.
கலதி - மூதேவி.
கலத்தல்- அளவளாவுதல், புணர்தல், பலவினப்பொருள்கள்ஒன்றாய்ச்சேர்தல்.
கலந்தருநர்- பணித்தட்டார்.
கலப்பை- உழுபடை, உபகரணம், கூத்தர்கருவி, கலப்பைபோலச்செய்யப்பட்ட ஓர்படைக்கலம்.
கலம் - கலப்பை, ஆபரணம், பாத்திரம், மட்பாத்திரம், மங்கலியம், மரக்கலம், ரேவதிநட்சத்திரம், ஓரளவு, யாழ். (சிலபொருள்களிற்கலனெனவும்).
கலம்பகம் - கலப்பு, வாசனைகலந்த சந்தனக்குழம்பு. பலவகையான பாக்கள் விரவிய ஓர்வகைப் பிரபந்தம். (ஒருபோகும் வெண்பாவுங் கலித்துறையுமுறையே முதற்கவியுறுப்பாக முற்கூறப்பெற்று, புயவகுப்பு மதங்கம் அம்மானை காலம் சம்பிரதம் கார் தவம் குறம் மறம் பாண் களிசித்து இரங்கல் கைக்கிளை தூது வண்டு தழை ஊசல் என்னும் பதினெட்டுறுப்புக்களுமியைய, மடக்கு மருட்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா ஆசிரியவிருத்தம் கலிவிருத்தம் கலித்தாழிசை வஞ்சிவிருத்தம் வஞ்சித்துறை வெண்டுறை வெண்பா கலித்துறை என்னுமிவை விரவ, அந்தாதித்தொடையாகத்தேவர்க்கு க௦௦ அந்தணர்க்கு ௯௫ அரசர்க்கு ௯௦ வைசியர்க்கு ௫௦ சூத்திரர்க்கு ௩௦ அமையப் பாடும்நூல்.
கலாவம் - குயில்.
கலவம் - கபாலம்.
கலவர் - மரக்கலமோட்டுவோர்.
கலவல்- துழாவல், கலத்தல்.
கலவி - புணர்ச்சி.
கலவை- கலப்பு, சுகந்தங்கள் கூட்டியசந்தனக்குழம்பு.
கலனம்- கணச்சிந்தல், கழிந்துபோதல்.
கலனிருக்கை- பண்டகசாலை.
கலனை - கலப்பை.
கலன் - கீழ்மகன் (கலமென்னுஞ் சொல்லின் போலியாயின் அச்சொல்லிற் பார்த்தறிக).
கலன்கழிமடந்தை- அமங்கலை.
கலாநிதி-சந்திரன்.
கலாபம்-மேகலையென்னும் அணி, மணி

வடம், கசு கோவைமணி, மயிற்றோகை, சரிமணி.
கலாபி - மயில், சரிமணி.
கலாம் - கொடுமை, கோபம், யுத்தம்.
கலாவுதல் - கலத்தல், அளவளாவுதல்.
கலி - வறுமை, ஒலி, கடல், துன்பம். பெருக்கு, செருக்கு, கடையுகம், செழிப்பு, வஞ்சனை, வலிமை, வியூகம், [கலிப்பா.
கலிகை - பூமொட்டு.
கலிங்கம் - கண்ணிலிடுமருந்து, கசு தேசங்களுளொன்று, ஊர்க்குருவி, (இப்பொருளிற் குலிங்கமெனவும்), வஸ்திரம், வானம்பாடி.
கலிங்கு - மதகு.
கலிசம் - வன்னிமரம்.
கலித்தல்-தொனித்தல், எழுதல், சுக்கிலமுதலியன கழிதல், செருக்குறுதல், தழைத்தல், உதித்தல், மகிழ்தல், மிகுதல், பொலிதல், *யாழ்நரம்போசை.
கலித்தளை-கலிப்பாவுக்குரியதளை. (காய்முன்னிரைவருவது; பூ முன்னிரை வருவதுமது).
கலித் தாழிசை - கலிப்பாவினங்களுளொன்று, இரண்டுமுதலியவடிகளாலீற்றடிமிக்குஏனையடிகள்தம்முளொத்துநிற்பத் தனித்தேனும் ஒருபொருண்மேன் மூன்றடுக்கியேனும்வருவது.
கலித்துருமம்-தான்றிமரம்.
கலித்துறை- கலிப்பாவினங்களுளொன்று. (நெடிலடி நான்குகொண்டு முடிவது.
கலித்தொகை- கடைச்சங்கத்து நூல்களுளொன்று.(கலிப்பாவாற்றொகுக்கப்பட்டமையினிப்பெயர்த்தாயிற்று.
கலிந்தம் - ஓர்மலை.
கலிப்பா- ஓர்வகைப்பா, வெண்சீர் மிகப்பெற்று, மாச்சீரும் விளங்கனிச்சீரும் பெறாது பிறசீர்களுஞ் சிறுபான்மை கலந்துகலித்தளையுமயற்றளையுந்தழுவி தரவு தாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம்என்னுமாறுறுப்புளேற்பனவற்றுடன் வருவது). இது நேரிசையொத்தாழிசைக் கலிப்பா அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பாவண்ணகவொத்தாழிசைக்கலிப்பா கலிவெண்பா வெண்கலிப்பா தரவுகொச்சகக்கலிப்பா தரவிணைக்கொச்சகக்கலிப்பா சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பாபஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாமயங்கிசைக்கொச்சகக் கலிப்பா எனப்பலவகைப்படும்.
கலிப்பு-ஒலி.
கலியம்-குதிரைக்கடிவாளம்.
கலியன்-கலியுகதேவதை.
கலியாணம் (கல்யாணம்) - சுபம், விவாகம், பொன்.
கலியாணி- ஓர்ராகம்.
கலிவிருத்தம்-கலிப்பாவினங்களுளொன்று. (நாற்சீரடி நான்குகொண்டு வருவது).
கலிவெண்பா-கலிப்பாவகையுளொன்று (வெண்டளை தழுவி ஈற்றடி முச்சீரான் முடிவது.
கலினம்-குதிரைக்கடிவாளம்.
கலினி- திப்பலி.
கலினெனல்-ஒலிக்குறிப்பு.
கலினை- மிளகு.
கலுடம் (கலுஷம்)- பாவம்.
கலுவடம்- பூவின்மொட்டு.
[கலுவம்-குளியம்மி.]
கலுழன்-கருடன்.
கலுழி- பெருக்கு, கலங்கனீர். அழுகை; கான்யாறு. (முல்லைநிலமாகிய காட்டிவிருந்து பாயும் ஆறு).
கலுழ்தல்- கலங்குதல், அழுதல், நீர் முதலியன ஒழுகுதல்.
கலை- கல்வி, ஆண்மான், ஆண்முசு, உ௦ காட்டைகொண்டகாலநுட்பம், அம்சம், ஒரு பாகையின் அறுபதிலொன்று, சந்திரவிம்பத்தின் கசுல் ஒருபாகம், வண்ணங்களின்னோரடி, புடவை, மகரமீன், மகாராசி, மேகலாபரணம். மரவயிரம், மரக்கொம்பு, நூல்.
கலை ௫- சாந்தியதீதகலை சாந்திகலை வித்தியாகலை பிரதிட்டாகலை நிவிர்த்திகலை என்பன.
கலை சுச- அக்ஷரலக்ஷணம் எழுத்து கணிதம் வேதம் புராணம் வியாகரணம் நீதிநூல் சோதிடம் தருமசாஸ்திரம் யோகசாஸ்திரம் மந்திரசாஸ்திரம் சகுனசாஸ்திரம் சிற்பசாஸ்திரம் வைத்தியசாஸ்திரம் உருவசாஸ்திரம் இதிகாசம் காவியம் அலங்காரம் மதுரபாடணம் நாடகம் நிருத்தம் சத்தப்பிரமம் வீணை வேணு மிருதங்கம் தாளம் அத்

திரபரீக்ஷை கனகபரீக்ஷை ரதபரீக்ஷை கஜ பரீக்ஷை அசுவ பரீக்ஷை ரத்தின பரீக்ஷை பூமிபரீக்ஷை சங்கிராம லட்சணம் மல்யுத்தம் ஆகருடணம் உச்சாடணம் வித்துவேடணம் மதனசாத்திரம் மோகனம் வசீகரணம் ரசவாதம் காந்தர்வவாதம் பைபீலவாதம் கவுத்துகவாதம் தாதுவாதம் காருடம் நட்டம் முட்டி ஆகாயப்பிரவேசம் ஆகாயகமனம் பரகாயப்பிரவேசம் அதிருசியம் இந்திரசாலம் மகேந்திரசாலம் அக்கினித்தம்பம் சலத்தம்பம் வாயுத்தம்பம் திட்டித்தம்பம் வாக்குத்தம்பம் சுக்கிலத்தம்பம் கனனத்தம்பம் கட்கத்தம்பம் அவத்தைப்பிரயோகம் என்பன.

கலேகட்குநாதன் - புத்தன்.

கலேக்கோட்டுமுனி - ஒரு முனிவர். (இராமா திருவவ நள).

கலேஞர் - புலவர்.

கலேதல் - குலேதல்.

கலேத்தல் - குலேத்தல்.

கலேமகள் - சரசுவதி.

கலேயானத்தி - துர்க்கை.

கலேயினன் - சந்திரன். [விக்கல்.

கல் - கல், மலே, இரத்தினம், கல்வி, கா

கல்நார் - மருந்துச்சரக்குகளுளொன்று.

கல்லகம் - மலே.

கல்லக்காரம் - பனங்கற்கண்டு.

கல்லணே - யானே குதிரை முதலியவாகனங்களின் மேற்றவிசு.

கல்லல் - தோண்டுதல்.

கல்லாடம்- கடைச்சங்கப்புலவருளொருவராகிய கல்லாடரென்பவர் செய்த ஒரு நூல்.

கல்லாடை - காவிவஸ்திரம்.

கல்லாரம்- செங்குவளே, (கல்காரம் எனவும்), சீர்க்குளிரி.

கல்லி - ஊர்க்குருவி, ஆமை, கிழங்ககழ் கருவி.

கல்லியம் - உதயலக்கினம், சூரியனுதித்தற்குமுன் ஐந்துநாழிகை, கள்.

கல்லுண்டை - நெற்சாதிகளுளொன்று.

கல்லூரி - கல்விபயிலுமிடம்.

கல்லெனல் - அருவிவிழு மொலியின் குறிப்பு.

கல்லே- இலேகளினுல்தைக்கப்பட்டபோசனபாத்திரம், மிதியடியின் குமிழ்.

கல்லோலம் - பெருந்திரை.

கல்வி - கற்றற்குரியநூல்களேக் கற்றல்.

கல்வெட்டு - சிலாசாதனம்.

கவசகுண்டலன் - கன்னன்.

கவசம் - சட்டை, மேனி முழுவதையுங் காவல்செய்யும் மந்திரம்.

கவடி - பலகறை, (சோகி),

கவடு - அகலவைத்த காலடியிரண்டாலளக்கப்பட்ட நீளம், கவர், தொடைச்சந்து, மரக்கொப்பு, மலேச்சிகரம், யானேக்கழுத்திடுகயிறு.

கவணே } கல்லெறிதற்கேற்றவாறு கயிற்
கவண் } றினுற் செய்யப்பட்ட தடம்.

கவந்தம் - நீர், தலேயற்றவுடல், பிசாசம்.

கவந்தி - கோவணம்.

கவயமா - காட்டா.

கவயம் - காட்டுப்பசு, கவசம்.

கவரி - கவரிமான், சாமரம், எருமை, தேர்.

கவரிறுக்கி - கடப்பு.

கவர் - மாக்கிளே, வஞ்சகம், *வாழை, விருப்பு. (கவர்நடைப்புரவி).

கவர்தல்- பற்றுதல், கடைதல், பிளவுபடுதல், கைப்பற்றிக்கொள்ளுதல்.

கவலல்-மனந்துன்பப்படுதல்.

கவலே- கவர்வழி, (நாற்சந்தி), மனத்துன்பம், ஓர் கொடி, காமநோய், மரக்கொம்பு, செந்தினே, அச்சம்.

கவவு - உள்ளீடு. (கவவொடுபிடித்தவகையமைமோதகம் மதுரைக் சுஉசு) கவர், மரக்கொம்பு.

கவவுதல்- உட்படுதல், விரும்புதல், தின்னுதல்.

கவளம் - உருட்டிய உணவு, சோறு.

கவளி - கட்டு, (புத்தகக்கவளியேந்தி; (பெரியபு மெய்ப்பொ ள).

கவறு - சூதாடுகருவி, சூது.

கவனம் - வேகம், குதிரையின்வேகம், காடு, படை, போர், வெப்பம், கல க்கம்.

கவனன் - வேகமாய்நடப்பவன். [க்கம்.

கவாட்சம் - வட்டச்சாளரம், காற்றுலாவுதற்காய்ச் சுவர்களில்விடும் பல கணி.

கவான் - தொடை, மலேப்பக்கம்.

கவி - செய்யுள், ஆசுமுதலியநால்வகைக்

கவிகளையும் பாடவல்லபுலவன், சுக்கிரன், சுக்கிரன்றந்தை, குரங்கு, மங்கலபாடகன், கடிவாளம்.
கவிகை - குடை, கொடை.
கவிஞன் - புலவன், சுக்கிரன்.
கவிதல் - மூடுதல், உள்வளைதல்.
கவிதை - பாட்டு.
கவித்தல் - மூடுதல்.
கவித்துவம் - கவிபாடுந்திறமை.
கவிநாயகன் - பாட்டுடைத்தலைவன்.
கவிப்பு - குடை, ஆரூடலக்கினத்திற்குச் சூரியனிற்குநிலை.
கவிராயன் - புலவன்.
கவிர் - முண்முருக்கு.
கவிழ்தல்- மேல்கீழாதல் .(பிறவினையில் கவிழ்த்தல்.)
கவினல் - சிறப்புறுதல்.
கவின் - அழகு,
கவீரம் - அலரி.
கவசனை - மூடியலங்கரிக்கும் மறைப்பு, குதிரைக்கவசனை.
கவுசிகம் (கௌசிகம்)- விளக்குத்தண்டு, ஓர் பண், பட்டுச்சேலை, மருதயாழிசை, கூகை.
கவுஞ்சம்- (கிரவுஞ்சமென்பதன்றிரிபு), அன்றில்.
கவுணியர்கோன்-திருஞானசம்பந்தர்.
கவுதம் - கிச்சிலிப்பறவை.
கவுதாரி - ஓர் பறவை.
கவுத்துவம் (கௌத்துபம்)- திருமாலின் மார்பிலுள்ள மணி, அத்தநட்சத்திரம், பதுமராகம்.
கவுள் - கன்னம், யானைக்கதுப்பு.
கவை-மரக்கிளை, கவர், எள்ளிளங்காய், காடு, ஆயிலியம், கவர்வழி
கவைதல் - பிளவுபடல், மூடுதல்.
கவைத்தல் - கவர்படுதல்.
கவைத்தாள் - நண்டு.
கவைக்கோல் - குத்துக்கோல்.
கவ்வியம் - பஞ்சகவ்வியம், (பால் தயிர் நெய் கோசலம் கோமயம் என்பன) பிதிரர்க்குக்கொடுக்குமுணவு.
கவ்வுதல் - வாயாற்பற்றல்.
கவ்வை (கௌவை)- ஆயிலியநாள், எள்ளிளங்காய், மரக்கப்பு, காடு, துன்பம், பழிச்சொல், கள், ஒலி. காரியம்.
கழகம்- கல்விபயிலுமிடம், சூதாடுமிடம், விற்போர் மற்போர் முதலியனபயிலுமிடம்.
கழங்கு- கழற்காய், ஓர்விளையாட்டு. வெறியாட்டு. (வேலனாடல்), சூதுவிளையாட்டு.
கழஞ்சு-பன்னிரண்டு பணவெடை.
கழலல்-நெகிழ்தல், பிதுங்கல், (கழல்கட்கூகை திருமுருகு ௪௧),
கழலை - அரலை. (கழலைக்கட்டி).
கழல்- வீரருங் கொடையாளருமணியுங் காலணி, செருப்பு, கால், கழற்கொடி, பொன்வண்டு.
கழறுதல் - சொல்லுதல், இடித்துரைத்தல், அதட்டிப்பேசல்.
கழற்றுதல்- கழலச்செய்தல்.
கழனி-வயல் மருதநிலம், இடுதிரை.
கழாயர்-கம்பக்கூத்தர்.
கழாய்- மூங்கில்,
கழாரம்பர்-அகத்தியன்மாணாக்கர் பன்னிருவரிலொருவர்.
கழி-கழிநிலம், உப்பளம், ஊன், (சிலப். இந்திர ௯௯), மிகுதி, சிறுகயிறு, சிறுகம்பு, பாய்ச்சு. (கந். வரைபுனை ௬).
கழிச்சல்-மலங்கழிதல்.
கழிச்சியர்- நெய்தநிலப்பெண்கள்.
கழிதல்-கடத்தல், நடத்தல், சாதல், மிகுதல்.
கழித்தல் - நீக்குதல்.
கழிநிலம்- உவர்நிலம், உப்பளம்.
கழிநெடிலடி- ஐந்தின்மிக்க சீர்களையுடைய அடி,
கழிப்பு-கழித்தற்கணக்கு, தோஷந்தீர்த்தல், குற்றம்.
கழிமுகம்- ஆற்றுநீர்க்கழிவு, மலையருவி.
கழிமுள்ளி- ஓர்வகைச்செடி.
கழியர்- நெய்தநில மாக்கள்,
கழியுடல் - தசைகழிந்தவுடல், (எலும்புக்கோவை).
கழிவிரக்கம் - கழிந்ததைக்குறித்திரங்கல், மிகுந்த இரக்கம்.
கழிவு-கழிக்கப்படவேண்டியது, உள்ளது சிறத்தல். (மிகுதி).
கழு- நுனி கூராகவும் அடி பருமனாகவும்செய்து மரத்தில் நாட்டியிருக்கும் இருப்பு முளை (கொல்லப்படவேண்டியதுட்டர்களை யேற்றுதற்குரியது), கழுகு, சூலம்.
கழுகு- ஓர்பறவை.

கழுக்கடை - ஈட்டியின் விசற்பம், சூலம்.
கழுக்குன்றம்- ஒருமலை. (சிவபிரானைக் கழுகு பூசித்த தலம்.
கழுது- பேய், பரண், வண்டு.
கழுதை- மிருகவகைகளுளொன்று.
கழுதைவாகனி - மூதேவி.
கழுத்து - தலையையும்நெஞ்சையுமிணைக் [குமுறுப்பு.
கழுநீர்-ஆம்பல்.
கழுந்தர் - கீழோர்.
கழுந்து - தேய்ந்துமழுங்கியவடிவம், விற்குதை, பொருத்து.
கழுமணி- வேகடஞ்செய்தமணி.
கழுமலம்- சீகாழி.
கழுமுதல்- பற்றுதல், நிறைதல், திரளுதல், மிகுதல், துன்புறல், கலத்தல்.
கழுமுள்-ஆயுதம், சூலம்; மாதுளைமரம்.
கழுவாய்- பிராயச்சித்தம்.
கழுவுதல்- நீர்முதலியவற்றாலலம்புதல்.
கழை- கரும்பு, மூங்கில், புனர்பூசம்.
கழைக்கூத்து- கம்பங்கூத்து.
கழைநெல்- மூங்கிலரிசி.
களகண்டம்- குயில்.
களகளம்- பேரொலி. (பலஒலி)
களங்கம்-அடையாளம், கறுப்பு, குற்றம், அழுக்கு, சந்திர மண்டலத்திலுள்ள ஒளியற்றபாகம்.
களங்கன்- சந்திரன்.
களஞ்சியம்- திரவியசாலை.
களதம் - பெருச்சாளி.
களதௌதம் - வெள்ளி.
களத்திரம் - மனைவி. எழாமிடம்.
களபம் - யானை, யானைக்கன்று, வாசனைக்கலவை, சுண்ணச்சாந்து.
களப்பலி- யுத்தந்தொடங்கும்போது செலுத்தும்பலி.
களமர் - உழவர், சூத்திரர், வீரர், மருதநிலமாக்கள்.
களம் (களன்)- இடம், மனைவி, நெற்களம், போர்க்களம், யாகசாலை, கழுத்து, களாச்செடி, ஒலி, மதுரத்தொனி, கறுப்பு, நஞ்சு, வஞ்சகம், மயக்கம், களர்நிலம், காடு, தொழில்செய்யுமிடம்.
களரவம் - புறா.
களரி - காடு, பாழ்நிலம், தொழில்செய்யுமிடம், போர்க்களம், [கூத்துப்பயிலுமிடம்.)
களர்- கழுத்து, கூட்டம், கறுப்பு.
களர்நிலம்- பாழ்நிலம், உவர்நிலம், சேற்றுநிலம்.
களவழிநாற்பது- பதினெண்கீழ்க்கணக்கிலொன்றாகியநூல்.
களவன்- ஞெண்டு
களவு- திருட்டு, களாச்செடி.
களா - ஓர்செடி.
களாசம்-பிரம்பு.
களாசி- வெற்றிலை மென்றுமிழும் பாத்திரம், காளாஞ்சி.
களாவதி- தும்புருவின்வீணை.
களி - பெருமகிழ்ச்சி, செருக்கு, இன்பம், மயக்கம், வெறி, வண்டல், களியாடுவோன், கள், (உள்ளதுசிறத்தலெனப்பிங்கல).
களிம்பு- செம்புமுதலியவற்றிலுள்ளஊறல்.
களியாட்டு - வெறியாட்டு. [ல்.
களிறு - யானை, பன்றி, யானை சுறு பன்றி என்னுமிவற்றினாண், அத்தநட்சத்திரம்.
களுசி- சீந்தில். [சத்திரம்.
களேவரம்- உடல், பிணம், எலும்பு.
களை - ஆயாசம், நெற்பயிர்களுக்கிடையில்முளைத்திருக்கும் புல் முதலியன, குற்றம்.
களைதல் - களைபிடுங்குதல், கொல்லுதல், நீக்குதல், பறித்தல்.
களைத்தல்- அயர்வுகொள்ளல்.
களைகண்- ஆதாரம்.
களைஞர்- களைபிடுங்குவோர், சண்டாளர்.
கள்- பூந்தேன், கள்ளு, களவு.
கள்வன்- திருடன், நடுச்சொல்வோன், முசு, நண்டு, கர்க்கடகராசி.
கள்ளம்- களவு, கபடம்.
கள்ளல்- களவுசெய்தல்.
கள்ளி- கள்ளிமரம், களவுசெய்பவள்.
கறங்கு - காற்றாடி, ஒலி.
கறங்குதல் - சுழலுதல், தொனித்தல், யாழ்நரம்போசை.
கறத்தல்- பிதுக்குதல்.
கறல்- விறகு.
கறவை - பாற்பசு.
கறள் - கறை.
கறி - மிளகு, கறிவகை, கறிவகைக்குரியகாய் முதலியன.
கறித்தல்- கடித்தல்.
கறுத்தல்- கோபித்தல், கருநிறமாதல்.

கறுப்பன்- ஒரு அற்பதேவதை, செல்வி கற்பங்களுளொன்று.
கறுப்பு-கருநிறம்,கோபக்குறிப்பு,இராகு.
கறுவா - ஒருமரம்,
கறுவுதல்- கோபித்தல்.
கறுழ்- குதிரைக்கடிவாளம்.
கறை - இரத்தம், உரல், களங்கம், கருமை, குற்றம், நஞ்சு, இருள், அழுக்கு, அரசனுக்குக்குடிகள்கொடுக்குமிறை, நிறம்.
கறையடி- யானை.
கறையான்- செல்.
கற்கண்டு- கருப்பஞ்சாற்றிலிருந்து உண்டாக்குகின்றஒருவகைககட்டி.
கற்கம்- எண்ணெயிற் சாறுமுதலியவற்றையூற்றிக்காய்ச்சும்போது வருங்கசடு.
கற்கா- கொடுந்தமிழ்நாடுகளுளொன்று.
கற்பகம்- ஐந்தருக்களுளொன்று, தென்னை.
கற்படை- கற்படுத்தநிலம்.
கற்பம்- பிரமன்வாழ்நாள், கற்பகவிருட்சம், பிரமதினம் (சதுர்யுகம்இரண்டாயிரங்கொண்டது) உலகமுடிவு, ஆயுள்நீடித்தற்குஉட்கொள்ளும் மருந்து, நிர்ணயம், வேதாங்கங்களு ளொன்று, (ஆசுவலாயனம் போதாயனம் ஆபசதம்பம்முதலியசூத்திரங்களால் வைதிககருமத்தின்பிரயோகமுறையைக் கூறுவது) ,சுவர்க்கலோகம்.
கற்பனை- கட்டளை, சங்கற்பம், இல்லாததொன்றைக்கற்பித்தல்.
கற்பித்தல் -கட்டளையிடல், படிப்பித்தல், விதித்தல்.
கற்பு- கல்வி, பதிவிரதைத்தன்மை, முல்லைக்கொடி.
கற்பொறி - பற்றிரும்பு.
கற்போன்- மாணாக்கன்.
கற்றல்- படித்தல்
கற்று - இளங்கன்றுப்பசு.
கற்றுழை - ஒருசெடி.
கற்றை - மயிர் கிரணம் முதலியவற்றின்தொகுதி.
கற்றோர் - கடிகைமாக்கள், அறிஞர்.
கனகதம் - ஒட்டகம்.
கனகம் - பொன்.
கனகன்- இரணியன்.

கனசாரம் -கர்ப்பூரம்.
கனத்தல் - பாரமாதல்
கனமூலம்- கனஎண்ணின்மூலமானஎண்
கனம்- மேகம், சமமானமூவெண்களின் பெருக்கம், தடிப்பு, பாரம்
கனரசம் (கனவிரதம்)- நீர்.
கனருசி - மின்னல்.
கனலல் - கோபித்தல், எரிதல், சுடுதல்.
கனலி - சூரியன், நெருப்பு, பன்றி.
கனலொழுங்கு - சுவாலை.
கனல்- நெருப்பு, வெப்பம்.
கனவட்டம் - குதிரை, பாண்டியன் குதிரை
கனவு-நித்திரை, நித்திரைக்குரிய மயக்கம், கனா,
கனவுநூல் - கனவின்சுபாசுபங்களைக்கூறும்நூல்.
கனற்சி- வெப்பம், கோபம்
கனனம்- குழிவெட்டுதல், புதைத்தல்.
கனி- பழம், தித்திப்பு
கனிட்டன்- பின்பிறந்தோன், கீழ்மகன்.
கனிட்டிகை- சிறுவிரல்.
கனிட்டை- பின்பிறந்தாள்.
கனிசல்- நெகிழ்சல், காய்முதலியனமுற்றுதல், தணியாக்கோபம்
கனித்திரம்- மண்வெட்டி.
கனை- ஒலி, நெருக்கம்.
கனைதல் - செறிதல் நிறைதல், மிகுதல்.
கனைத்தல்- ஒலித்தல் (குதிரைமுதலியவற்றின்சத்தம்). இருளுதல், யாழ்நரம்போசை.
கனைவு- செறிவு.
கஞ்ஞபலம்- ஆலங்கட்டி.
கன்- சிறுதராசுத்தட்டு, கல்.
கன்மதாரயம்- பண்புத்தொகை.
கன்மம் (கருமம்) - இருவினைகள், தீவினை, செய்தொழில்.
கன்மேய்வு- மாடப்புறா
கன்று - எருமை ஒட்டை கழுதை கவரி காட்டா காரம் குதிரை பசு மரை மான் யானை என்னும் விலங்குகளின் பிள்ளை, மரக்கன்று, சிறுமை, பெண்கள் கைவளை (கன்று திகழ்கரமடவார், வகரா காரிகை).
கன்றுதல்-கோபக்குறிப்பு, இயற்கைமாறுபடுதல், கடினப்படுத்தல்.
கன்னகம் } சுவரகழ்கருவி.
கன்னக்கோல் }

கன்னப்பூ - காதணிகளுளொன்று
கன்னம்- கதுப்பு, காது, களவு, கன்னக்கோல், முக்கோணத்தில்புசைகோடிகளின் அந்தங்களைத்தொடும்படி நீண்டிருக்குமிரேகை, தராசுத் தட்டு, நோய் தணித்தற்குச் செய்துகொடுக்கும்படிமம்(ஐங்குறு), யானைச்செவி
கன்னல்- கரகம், கரும்பு, கற்கண்டு,சர்க்கரை, நாழிகை, நாழிகைவட்டில்.
கன்னவேதனம்- காதுகுத்தல்
கன்னன் (கர்ணன்)- சூரியனுக்குக்குந்தியிடம்பிறந்தபுத்திரன்
கன்னார் - கம்மாளருளொருபகுதியார். (வெண்கலம் பித்தளை செம்புமுதலியலோகங்களில் தொழில்செய்வோர்.
கன்னுவதஞ்சம் - செவிமலர்ப்பூ என்னுமணி.
கன்னி- விவாகமாகாதபெண், தவப்பெண், பெண், துர்க்கை, உமை, கட்டிளமை, புதுமை, கன்னிராசி, காக்கணங்கொடி, குமரிநதி, அழிவின்மை, கற்றாழை, அத்தநட்சத்திரம்.
கன்னிகாரம்- கோங்கமரம்
கன்னிகை (கர்ணிகை)-தாமரைப் பொகுட்டு, தாமரைக்கொட்டை.
கனனிக்கால் - விவாகத்துக்குமுன்னே நாட்டும் பந்தற்கால்.
கன்னியர்ஐவர்-அகலிகை திரௌபதி சீதை தாரை மண்டோதரிஎன்பவர்கள்
கன்னியாகுமரி- பாண்டிநாட்டின்தென்பாகமாயுள்ளஒருதேசம், அத்தேசத்திலுள்ள ஓராறு.
கன்னுவர் - கன்னார்.

கா

கா- சோலை, காவுதடி, காவுதடியிற்றாக்கிய சுமை, துலாக்கோல், அசைச்சொல், (வேளிவட் காண்டிகா).
காகதாலீயம்- ஓர்நியாயம் (காகமிருக்கப் பனம்பழம்வீழ்வதுபோல ஏதுவாகாதது ஏதுவாய்த்தோன்றல்).
காகதுண்டம்- அகில்.
காகத்துவசத்தாள் - மூதேவி.
காகபட்சம்- பக்கக்குடுமி.
காகம் - அவிட்டநட்சத்திரம், காக்கை.
காகளம் - காளமென்னும்வாத்தியம்.
காகிதம் - கடிதம் (திருமுகம்).
காகு - இசையெச்சம் (பிரயோகவுரை, சோகம் பயம் முதலியவற்றாற்பிறக்கும் விகாரமான ஒலி.
காகுத்தன் - இராமசுவாமி, விட்டுணு.
காகுளி - ஆசனம், மந்தவோசை, அபசப்தம், (பேய்ச்சத்தம்போலுஞ் சத்தமென்பர் சிலர்). இசை, மெத்தை.
காகோதரம் - பாம்பு.
காகோளி - அசோகமரம்.
காக்கணங்கொவ்வை - ஒருகொடி.
காக்கணம் - காக்கணங்கொடி.
காக்கை - காகம்.
காக்கைபாடினியார்- அகத்தியன்மாணாக்கர் பன்னிருவரிலொருவர். (இவாற் காக்கைபாடினியம் என்னும் யாப்பிலக்கணஞ்செய்யப்பட்டது).
காங்கி - அவாமிக்கோன்.
*காங்கிசை- (காம்க்ஷா என்னும்வடமொழியின்றிரிபு)- அவா.
காங்கேயம் - பொன்.
காங்கேயன் - முருகக்கடவுள், வீட்டுமன்.
[காங்கை - வெப்பம்].
காசம் - கோழை, காசநோய், ககூ தேசங்களுளொன்று, நாணற்புல்.
காசறை - மயிர்ச்சாந்து.
காசா(காசாரம்)- எருமை.
[காசாண்டி - ஓர்வகைச்செம்பு].
காசி - ஒரு சிவதலம். (கங்கைக்கும் யமுனைக்கும் இடையிலுள்ளது).
காசிகாண்டம்- ஒரு காப்பியம். (அதிவீரராமபாண்டியர்பாடியது).
காசிகாவிருத்தி - (வாமனரென்னும்பெயரையுடைய ஜயாதித்தரென்பவரால் பாணிநீயத்துக்குச் செய்யப்பட்ட உரை.
காசித்தும்பை - ஓர் செடி.
காசிபன் - ஓரிருடி.
காசினி - பூமி.
காசு- குற்றம், இரத்தினம், மாதருடைப்புறத்தணியுமேகலை, (சிங். கோவிங்), கோழை, பொற்காசு, பொன், காசுக்கட்டி, சூது.
காசுமீரம்(காஸ்மீரம்)-ஒருதேசம்.
காசை-காயாமரம். நாணற்புல், புற்பிடி.
காஞ்சனம்- பொன்.
காஞ்சினி - மஞ்சள், பொன்னிறம்.
காஞ்சி- ஒருநகரம், ஒருமரம், எண்கோ

வைமணி, ஒருபண், அகத்திணையேழனுட்பெருந்திணைக்குப் புறனாகிய திணை, வரும்பகைவர் முன்னெதிருன்றல்.
காஞ்சிமாலை - படைமுன்னெதிருன்றும் வீரரைப்புகழ்ந்துபாடும் பிரபந்தம்.
*காஞ்சியம் - வெண்கலம்.
காஞ்சிரை - எட்டிமரம்
காஞ்சொறி - ஒருசெடி.
காடம் - உறுதி, கடினம்.
காடாக்கினி - பெருந்தீ.
காடாற்று - அத்திசஞ்சயனம்.
காடி - புளித்தநீர், புளிங்கறி, ஊறுகாய், கஞ்சி.
காடிகம் - வஸ்திரம்.
காடு - வனம், இடம், ஊர், எல்லை, செத்தை
காடுகாள் - வடுகன்றாய்.
காடுபடுதிரவியம் - அரக்கு கருந்தினை தேன் நாவி மயிர்ப்பீலி என்பன.
காடேறி-பிசாசவகைகளுளொன்று.
காடை - பறவையினங்களுளொன்று.
காட்சி - அழகு, மெய்யறிவு, பிரத்தியட்சப்பிரமாணம், தோற்றம், அகப்பொருட்டுறைகளிலொன்று.
காட்சியின்வகை அ- அறத்தைஜயப்படாதுசெய்தல் அவாச்சிறிதுமில்லாமை உவர்ப்பில்லாதஅறிவுடைமை முடமறுத்தல் மிகவும்பழிமறுத்தல் அழிந்தோரைநிறுத்தல் அறத்தைவிலக்கல் அறுசமயத்தவர்க்கன்பு என்பன.
காட்டமிர்து- காடுபடுதிரவியம்.
காட்டம் - விறகு.
காட்டழல் - காட்டிலெரிந்து கொண்டிருக்கும் அக்கினி.
காட்டா - காட்டுப்பசு.
காட்டாமணக்கு-மரவகையுளொன்று.
காட்டு- உதாரணம்.
காட்டுதல்- காண்பித்தல்.
காட்டுமல்லிகை - ஒருசெடி.
காட்டை- கஅ நீமேடங்கொண்ட கால நுட்பம், (சிலநூல்களிற் கடு நிமேடம் எனவும்), திக்கு, எல்லை.
காணம் - ஒருகண்குருடு, கொள்ளு, பொன், பொற்காசு, செக்கு, காணலிங்கம், ஓரளவு.
காணல் - பார்த்தல், அறிதல், செய்தல், (முனைவன் கண்டது முதனூலாகும்), வணங்குதல்.
காணி - நிலம், உரிமை, எண்பதிலொன்று, பொன்னுங்காணி.
காணிக்கை - தட்சிணை.
காண் - அழகு, அசைநிலை, (பன்மையில் காண்டிர்-) காண்பாயென்னும் பொருளில் ஏவல்வினை.
காண்டகம் - கமண்டலம்.
காண்டம் - நீர், அம்பு, ஆயுதம், நூற்கூறுபாடு, குதிரை, மலை, ஆபரணங்கள்வைக்குஞ்செப்பு, கமண்டலம், காடு, கோல்,(தடி), இடுதிரை, முடிவு, வஸ்திரம்.
காண்டவம் - காடு, அருச்சுனனலெரிக்கப்பட்ட வனம்.
காண்டாமிருகம் - விலங்கினங்களுளொன்று.
காண்டிகை - உரைவகைகளுளொன்று.
காண்டீவம் - அருச்சுனனுடைய வில்.
காண்டை - ஒருசெடி, கற்பாழி, முனிவர்வாசம்.
காதகம்- கொலை. [*கள்.
காதம் - நான்குகூப்பிடுதூரம், கொலை,
காதம்பம்-கானங்கோழி.
காதம்பரி - வடமொழியிற் கத்தியரூபமாயுள்ள ஒருகாவியம், *கள்.
காதரம் - அச்சம், துன்பம், துன்பத்தால் வருமவசம்.
காதலன் - நாயகன், புதல்வன், தோழன், விரும்பப்பட்டோன்.
காதலி - மனைவி, தோழி, புதல்வி.
காதலித்தல் - அன்புவைத்தல், ஆசைப்படல்.
காதல் - அன்பு, ஆசை, ஆந்தைமுதலியவற்றினெலி.
காதற்பரத்தை - (பரத்தையர்குலத்திற் பிறந்து பிறரைநயவாதவளாய்க் காதலினுற்புணரப்பெறுவாள்)
காதன்மை - காதலுடைமை.
காதி- விசுவாமித்திரன்றந்தை.
காதிவென்றோன் - அருகன்.
காது - செவி, ஊசிமுதலியவற்றின்றுளைப்பக்கம்.
காதுதல் - கொல்லுதல்.
காதை- கதை, சொல்.
காதைகரப்பு- வேறோர்கவிதொடுத்தற்கு வேண்டிய எழுத்துக்களெல்லாமடங்

கியிருக்கப்பாடியமிறைக்கவி.
காதோலை-காதணிவகையுளொன்று.
காத்தல்- இரட்சித்தல், காவல்செய்தல்.
காத்தியாயனம்-ஓருபநிடதம், தருமநூல்
களுளொன்று.
காத்தியாயனி- உமை, துர்க்கை.
காத்திரம்- உடல், உறுப்பு, பருப்பம்,
கீரி, கோபம், யானையின்முன்கால்.
காத்திரவேயர்- கத்துருவின்புத்திரர். (நா
கர்)-
காத்திரி- கீரி.
காந்தம்- இரும்புக்காந்தம், சூரியகாந்தக்
கல், சந்திரகாந்தக்கல். குணவலங்கா
ரங்களுளொன்று, (உலகொழுங்கிற
வாமற்புகழ்வது), காந்தபுராணம்.
காந்தர்வம்- இசைப்பாட்டு, எண்வகைம
ணங்களுளொன்று, (தலைவனுந்தலை
வியுந்தனியிடத்தெதிர்ப்பட்டுத்தாமே
கூடுதல்)கந்தருவலோகம்,
காந்தள்- கார்த்திகைப்பூ, புறப்பொருளி
ல் உழிஞைத்திணையிலோர்துறை.
காந்தன்- கணவன், எப்பொருட்குமிறை
காந்தாரபஞ்சமம்-ஓர்பண். [வன்
காந்தாரம்- காடு, ஒருதேசம், குறிஞ்சி
யாழ்த்திறங்களுளொன்று.
காந்தாரி-திருதராட்டிரன்மனைவி.
காந்தாரிமைந்தன்- துரியோதனன்.
காந்தி-ஒளி, அழகு, வெப்பம்-
காந்துகம்-வெண்காந்தள்.
காந்துதல்-அழற்றுதல், பசித்தல்.
காந்தை-பெண். மனைவி.
காபாலம்-சிவனிருத்தம். (கவித்).
கபாலி- சிவன்.
காபி- ஓரிராசம்.
காப்பியம்- காவியம், (தெய்வவணக்கம்
வாழ்த்துமுதலியவற்றறொன்றை மு
ற்கொண்டு மலை கடல் நாடு முதலிய
வற்றின்வருணனையுடன் பாட்டுடைத்
தலைவனுடைய சரித்திரத்தைத் தொ
டர்புறக்கூறுவது. இது அறமுதலிய
நாற்பொருள்களையும் பயக்குமெனிற்
பெருங் காப்பியமெனவும் அவற்று
ளொன்றும் பலவுங்குறைந்தியல்வதெ
னிற் சிறுகாப்பியமெனவும்படும்).
காப்பியம்ரு- சிந்தாமணி சிலப்பதிகாரம்
மணிமேகலை குண்டலகேசி வளை
யாபதி யென்பன. (இவையும் கந்தபுரா
ணம்முதலியனவும் பெருங்காப்பியங்
காப்பியன்-(காவியன்)-சுக்கிரன். [கள்)
காப்பு- காவல், இரட்சாபந்தனம், கங்க
ணம், சிறை, திருநீறு, மதில், உள்ளுயர்
நிலம், கதவு, நூன்முதலிற் சொல்லப்
படும் மங்கலக் கவி, (இது ஒன்றே
யன்றி ௩ ௫ எ ஆகப்பாடப்படவும்பெ
றும்) தொடுதோல், (காப்பணிதாளன்;
திருவிளை.)
காப்புமாலை- ௩ ௫ முதலியஒற்றித்தசெய்
யுட்களால் தெய்வம்காத்தலாகப் பாடு
வது.
காமகாண்டம் - மன்மதனுடையபூவில்
(இருப்புவில்லென்பர்சிலர்).
காமக்கிழத்தி- காதற்பரத்தையின்மகளா
ய் ஒருவனுக்கேயுரிமைபூண்டிருப்பவ
காமக்கோட்டத்தி- பார்வதி. [ள்.
காமக்கோட்டம்- காஞ்சிபுரத்திலுள்ள
தேவியின்கோயில்.
காமதேனு- தெய்வப்பசு.
காமநீர்- காமத்தாற்சுரக்குநீர்.
காமநூல்- பெண்களுடன்கூடுதலைக்குறி
த்துக் கூறும்நூல்(கொக்கோகம்).
காமபாலன்- பலதேவன்.
காமபீடம்- காஞ்சீபுரம்.
காமம்- ஆசை, பெண்ணாசை, இன்பம்,
சோதிடத்தில் இலக்கினத்துக்கேழா
மிடம்.
காமரம்- சீகாமரமென்னும்பண், அடுப்
பு, அத்தாட்சத்திரம், இசைப்பொது.
காமரூபி- பச்சோந்தி, ஓந்தி.
காமர்- கட்டழகு, ஆசை.
காமவல்லி - கற்பகதருவிற்படர்கொடி.
காமன் - மன்மதன், திப்பலி, வண்டு, இந்
திரன்.
காமாட்சி- காஞ்சீபுரத்திலிருக்குந்தேவி.
காமாரி -சிவன்.
காமாலை- காமாளைநோய்.
காமி- காமமுற்றோன்.
காமிகம்- சைவாகமங்களுளொன்று.
காமித்தல்- இச்சித்தல்.
காமியம்- இம்மைப்பலனைவிரும்பியநுட்
டிக்கும் விரதமுதலியன.
காமினி- அதிககாமமுள்ளவன்.
காமுகர்-தூர்த்தர், நகரத்தில்வாழ்வோர்
காமுகன்- திருமால் தூர்த்தன்- மன்ம
தன்.

காமுறுதல்- காமித்தல்.
காம்பி - காராம்பி.
காம்பு - மூங்கில், பூவின்காம்பு, மரக்கொம்பு, பட்டுவிகற்பம்.
காம்போசம்- ஓர்தேசம், ஓர்பாஷை.
காம்போதி- ஓர்ராகம்.
காயகன்- பாடுவோன்.
காயத்திரி- ஓர்மந்திரம், பிரமன்மனைவியருளொருத்தி, (நாமகள் பெயராக நிகண்டில்), ஒவ்வோரடி ௬ எழுத்தாக இருபத்துநான்கெழுத்தாற் பாடப்படுஞ்செய்யுள்.
காயம்- ஆகாயம், உடல், தழும்பு, மிளகு, பெருங்காயம், வெண்காயம், கார்ப்பு என்னுஞ்சுவை.
காயல்- கழிமுகம், உப்பளம், கழிநிலம், [அந்நிலத்திற்பற்றியிருக்குங் கழி]
காயனம்- பாட்டு.
காயா- காயாமரம்.
காயிகம்- காயத்தாற்செய்யப்படும் வினைகள்.
காய்- மரங்களின்காய், கழலை.
காய்ச்சல்- சுரம், வேக்காடு.
காய்ச்சுதல்- உலரச்செய்தல், சுடச்செய்தல்.
காய்தல்- உலர்த்தல், சுடுதல், பெருங்கோபங்கொள்ளல், வருத்துதல், கொல்லுதல், வெறுத்தல்.
காய்த்தல் - மரங்கள்காய்த்தல், சரீரத்தினுறுப்புக்கன்றிஉரத்தல்.
[காய்ப்பிரும்பு - காய்ச்சியடிக்கும்போது வெடிக்குமிரும்பு].
காரகம்- வினைகொண்டுமுடியும்வேற்றுமை.
காரணதேகம்-மூவகைத்தேகங்களுளொன்று.
காரணப்பெயர்- யாதேனுமோர்காரணம் பற்றிவழங்கும் பெயர்.
காரணம்- கருவி, (முதற்காரணம் துணைக்காரணம் நிமித்தகாரணமென மூவகைப்படும்).
காரணன்- கடவுள், கருத்தா, எப்பொருட்குமிறைவன்.
காரண்டம்- நீர்க்காக்கை.
காரம்- உறைப்பு, புண்ணினழுக்கை நீக்குதற்குங்காய்ச்சுதற்குமாக இடுங்காரம், பொரிகாரம், பொன்.

காரவல்லி - பாகற்கொடி. பலா.
காரா (காரான்) - எருமை, கருநிறப்பசு.
காராகிருகம்- சிறைச்சாலை.
காராடு- வெள்ளாடு.
காராமணி - இதை. (கொம்புப்பயறு).
காராம்பி - அம்பி.
காராளர் - சூத்திரர்.
காரி - ஓர் வள்ளல், கரிக்குருவி, கருநிற எருது, சனி, ஐயனார், வயிரவர், கருமை, கரகம், நஞ்சு, தாணியென்னுமளவு, (௪௬ படி அல்லது நான்குமரக்கால் என்பர்).
காரிகை - அழகு, பெண், ஓர்யாப்பிலக்கணநூல், கலித்துறை.
காரிப்பிள்ளை - கரிக்குருவி.
காரியப்படல் - தொழிற்படல்.
காரியம் - கருமம், பயன்.
காரீயம் - நாகம். (துத்தநாகம்) [ன்.
காரு - தொழில்செய்வோன், வண்ணா
காருகபத்தியம் - வேதவிதிப்படிவளர்க்கும் அக்கினிகளுளொன்று.
காருகம் - கருங்குரங்கு, (காருகமெனப் பிங்கல உ௯0அ), நெசவுமுதலிய சில தொழில்கள். (சிலப்).
காருகர் - நெய்வார், கொலையாளர், வண்ணார்.
காருடம் - கருடபுராணம்.
காருண்ணியம் - அருள்.
காரெலி - எலிவகைகளுளொன்று.
காரெள்- வெள்ளைநிறமானஎள்.
காரை - ஓர் முட்செடி.
காரோடர் - உறைசெய்வோர்.
காரோணம் - ஓர்சிவதலம்.
கார் - மேகம், மழை, நீர், கார்காலம்,(ஆவணி புரட்டாதிமாதங்கள்), செழிப்பு, அழகு, இருள், கர்வம், கருங்குரங்கு, வெள்ளாடு, ஆண்மயிர், எலிமயிர், கருதியகருமமுடிக்குமளவுங் கொள்ளுங்கோபம்.
கார்கோள் - கடல்.
கார்க்கோடகன் - அட்டநாகங்களுளொன்று.
கார்த்தவீரியன் - சூரியவம்சத்தவனான ஓர்சக்கிரவர்த்தி.
கார்த்திகேயன் - முருகக்கடவுள்.
கார்த்திகை- கார்த்திகைமாதம், கார்த்திகைநட்சத்திரம், காந்தள், தூர்க்கை.

கார்நாற்பது—கார்காலத்தை வருணித்துப் பாடிய ஓர் நூல்.
கார்நெல்- நெல்லின் சாதிகளுளொன்று. (கறுப்புநெல்)
கார்புகாவரிசி-ஓர்மருந்துவிதை.
கார்ப்பண்ணியம்-உலோபம்.
கார்ப்பாசம்-பருத்தி.
கார்ப்பு-உறைப்பு.
கார்முகம்- வில்.
காலகண்டன் (காளகண்டன்)-சிவன்.
காலகாலன்-சிவன்.
காலகூடம் (காளகூடம்)- ஆலாகலவிடம்.
காலகேயர் - அருச்சுனனாற் கொல்லப்பட்ட அசுரருளொருபகுதியார்.
காலசக்கிரம் - சீவியகாலத்தையறிதற்குரியதாய்ச் சோதிடத்திற் சொல்லப்படுவதோர்வட்டம்.
காலசேயம் - மோர்.
காலதர் - பலகணி.
காலநுட்பம்- நுடி தற்பரைமுதலிய நுண்மையான காலங்கள்.
காலநேமி- ஓரசுரன்.
காலபாசம் - யமனேந்தியிருக்கும் பாசம்.
காலமயக்கம்- ஒருவாக்கியத்தில் ஒருகாலத்தையுணர்த்துஞ் சொற்கள் வேறொரு காலத்தையுணர்த்துஞ் சொற்களைக்கொண்டு முடிதலாகிய வழு.
காலம்- கிமேஷம் காட்டை கலை நாழிகை நாள் முதலியகாலவகைகள் விடியற்காலம்,வாழ்நாள்,காலக்கடவுள், தாளப்பிரமாணம்.
காலம் ௩-இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்பன.
காலயுத்தி- ஓர்வருடம்.
காலல்-கொப்பளித்தல், சிந்தல்.
காலவழு-காலமயக்கம்.
காலன் - யமன், யமன்மந்திரி,ஒவ்வொருவாரங்களிலும் வருந் தீய காலங்களுளொன்று, ஒரு பாவலோக்கிரகம்.
காலாக்கினி-ஊழித்தீ, காலாக்கினிருத்திரர்.
காலாயுதம்-கோழி.
*காலாழ்-சேறு.
காலாள்- கால்நடையாகச் செல்லும்போர்வீரர்.
காலி - இலங்கையின் தென்பாகத்திலுள்ள ஓர்நகரம்,கள்,பசுக்கூட்டம்.
காலிலி-அருணன், காற்று, பாம்பு.

காலேவண்ணம்-கலவைச்சாந்து.
காலேயம்-மோர்,பசுக்கூட்டம்.
காலை-விடியற்காலம்,காலம்.
காலோலம்-அண்டங்காக்கை.
கால்-இடம், பாதம், நடை, (கால் தூய்மையில்லாக் கலிமாவும் திரிகடு.) தூண், ஆதாரம், தேருருள், நுனி, பூமுதலியவற்றின் காம்பு, அடிப்பக்கம், நான்கிலொருகூறு, காலம், அளவு, (முக்காற்கேட்பின் முறையறிந்துரைக்கும்), மரக்காலென்னுமளவு, முக்காலி, மகன், வித்துக்களின்முளை, (கிலக்கிற்கிடந்தமை கால்காட்டும்), வாய்க்கால், வழி, காலன், குறுந்தடி, ஊன்றுகோல், காடு, காற்று, வாதரோகம், (காற்காய்கோய் காட்டி, நாலடி பொதுமகளிர் உ), வலிமை, மரக்கன்று, ஏழனுருபு.
கால்சீத்தல்-துடைத்தல்.
கால்செய்வட்டம்-ஆலவட்டம்.
கால்நடை-நாற்கால்விலங்குகள்.
கால்யாத்தல்-நெருங்குதல்.
கால்வாய் - வாய்க்கால்.
காவடி - காவுதடி.
காவணம் - பந்தல்.
காவதம் - காதம்.
காவலன் - அரசன், தலைவன், கணவன், காவற்காரன்.
காவல் - அரண், வேலி, காத்தல்.
காவற்கடவுள் - திருமால்.
காவற்காடு - ஊருக்குப்புறம்பே காவலாயமைந்திருக்குங்காடு.
காவற்பெண்டிர் - செவிலித்தாயர்.
*காவன் - சிலம்பி.
காவி - கருங்குவளை, காவிக்கல், கள்.
காவிதியர் - அரசனுடையகணக்கர், (அமைச்சரிலொருசாரார்).
காவியம் - காப்பியம்.
காவிரிப்பூம்பட்டினம் - ஓரூர்.
காவிளாய் - காவிளாச்செடி.
காவுதல் - தோளாற்சுமத்தல்.
காவேரி (காவிரி) - ஓர்நதி. (மைசூர் கோயம்புத்தூர் தஞ்சாவூர் முதலிய தேசங்களிற்பாய்வது).
(காவோலை-பழுத்துலர்ந்தபனையோலை).
காழகம் - )வஸ்திரம், (காடகம் காடிதம் எனவும், கடாரமென்னுமூர், கருமை, கைச்சாடு, பயங்கரம்.

காழி - சீகாழி.

காழியர் - உப்புவாணிகர், பிட்டுவாணிகர், வண்ணார்.

காழ் - மரவயிரம், கருமை, கழி, (சிறுபா ௧௩௩), மனவுறுதி, அழகு, இருப்பு நாராசம், (பொருநரா ௧௦௫): கைமரம், மணிவடம், தூண், காம்பு, பளிங்கு, மாலை, விதை, பருக்கைக்கல், கதவின் தாழ், கனித்தோல், விறகு, குத்துக் கோல், (தாழ்வுரைகில்லாக்கடுங்களிறன் ஞேன்; கலித்).

காழ்ப்பு - மரவயிரம், மனவுறுதி, உறைப்பு.

காழ்வை - அகில்.

காளத்தி - ஓர்சிவதலம்.

காளபதம் - மாடப்புறா.

*காளபம் - போர்.

காளமேகன் - சரசுவதியின் அருள்பெற்ற ஒருபுலவர், (கவிமழைபொழிதலாற் காளமேகமென்னும்பெயர் இவர்க்கு வழங்கியது).

காளம் - நஞ்சு, கருமை, மேகம், கழு, சூலம், எட்டிமரம், காகளம், சிறுசின்னம்.

காளவனம் - சுடுகாடு.

காளவாய் - கழுதை, நீற்றறச்சூளை.

காளாஞ்சி - தாம்பூலக்கமலம்.

காளராத்திரி (காளாத்திரி) - பாம்பின் நச்சுப்பற்களிலொன்று.

காளாமுகம் - சைவத்தின் உட்சமயங்களுளொன்று.

காளாம்பி - காளான். (சிறுபா. ௧௩௪).

காளான் - புற்றுமுதலியவற்றில் முளைக்கும் பூ.

காளி - ஓர்தேவி, பாம்பின் நச்சுப்பற்களிலொன்று.

காளிகம் - ஒருபுராணம்.

காளிங்கன் - ஓர்பாம்பு, (கிருஷ்ணமூர்த்தி இதன்மேல்மிதித்து நடனஞ்செய்தார்).

காளிதாசன் - வடமொழியிற் கவிபாடுதலாற் புகழ்பெற்றுப் பல நூல்களையியற்றிப் போசராசனது சம்ஸ்தானவித்துவான்களுள் முதல்வராய்விளங்கிய ஒரு புலவர்.

காளிந்தி - யமுனைநதி.

காளிமம் / காளிமை - கறுப்பு, மலினம்.

காளை - எருது, ஆடவன், இளம்பிராயமுடையோன், பாலைநிலத்தலைவன்.

காறுயல் - ஓர்சிவதலம்.

காறு - அளவு.

காறுதல் - கைத்தல், மிடற்றிலுள்ளசளி முதலியவற்றை வெளியில்வரச்செய்தல்.

காறை - ஓர்வகைக்கழுத்தணி.

காற்குளம் - பூசம்.

காற்சரி - காலணிகளுளொன்று.

காற்றுடி - கறங்கு.

காற்றினாள் - சோதிநட்சத்திரம், *விசாகநட்சத்திரம்.

காற்றின்சகாயன் - அக்கினி.

காற்று - வாயு, பேய். (காற்றின்மார்த்தன இராமா. கரன் ௩௨).

காற்றேட்டி - ஓர்முட்செடி.

கானகநாடன் — முல்லைநிலத்தலைவன். (குறிஞ்சிநிலத்தலைவனுமாம்).

கானகம் - காடு.

கானக்குதிரை - மரை.

கானங்கோழி - காட்டுக்கோழி; (வான்கோழி)

கானம் - காடு, தேர், அறிவிலி, வானம்பாடி, நந்தனவனம், மிருதி, சங்கீதம்.

கானல் - காடு, கடற்கரைச்சோலை, மலைச்சாரலிற்சோலை, உப்பளம், பேய்த்தேர், சூரியகிரணம், ஒளி.

கானவர் - முல்லைநிலமாக்கள், குறிஞ்சிநிலமாக்கள்.

கானனம் - காடு.

கானீனன் - கன்னிபெற்றபிள்ளை, கன்னன்.

கான் - காடு, மணம்.

கான்மரம் - ஆலமரம்.

கான்முளை - மகன்.

கான்யாறு - முல்லைநிலத்தியாறு.

கான்றல் - சத்திசெய்தல்.

கான்றை - ஓர்மரம்.

## கி

கிகிணி - காக்கணங்கொடி, வலியான்குருவி.

கிங்கரர் - ஏவல்செய்வோர்.

கிங்கிணி (கிண்கிணி) - சதங்கை, தண்டை.

கிசலயம் - தளிர்.

கிசில் - சாளரம், (தாழ்).

கிச்சடி - தடித்தகூழ்.
கிச்சு - நெருப்பு. (இராமா, பிணிவீட்டு கூ.)
கிஞ்சித்து (கிஞ்சில்)- அற்பம்.
கிஞ்சகம் - முண்முருக்கு, பலாசு, சிவப்புநிறம்,
கிடக்கை - பூமி, மக்கட்படுக்கை.
கிடங்கு - அகழி, வாவி, குழி.
கிடத்தல் - சயனித்தல், தங்குதல்.
கிடி - பன்றி.
கிடுகு - ஓர்பறை, பரிசை, (கிடுகொடுசுழலும் வயவர்: கூர்ம அந்தகா கூச), சட்டம், பலகை, தேரின் மரச்சுற்று, தென்னிலைப்பின்னலின்கீற்று.
கிடை - கிடைச்சி, பாவிக்கப்படாது கிடந்தது, படுக்கை, வேதபாடசாலை, * சடை.
கிடைத்தல் - அடையப்பெறுதல், எதிர்த்தல்.
கிட்கிந்தை- வாலியும் சுக்கிரீவனும் அரசாண்டிருந்தநகரம்.
[கிட்டங்கி- விலைச்சரக்குகள் வைக்கும் வீடு].
கிட்டம் - இரும்பின்கிட்டம்.
கிட்டலர் - பகைவர்.
கிட்டி- இறுக்குந்தடி, நுக்கக்கிட்டி, கைத்தாளம்.
கிட்டுதல் - அடுத்தல், எதிர்த்தல், *கட்டுதல்.
கிணகர் - அடிமைகள்.
கிணறு - தோண்டிக்கட்டப்பட்ட நீர்நிலை.
கிணி - கைத்தாளம்.
கிணை - மருதப்பறை, அல்லது தடாரிப்பறை, *உடுக்கை, போர்ப்பறை.
கிண்டல் - கிழித்தல், சோண்டல்.
கிண்ணம் - சிறுவட்டில், நாழிகைவட்டில்
கிண்ணி - கிண்ணம்.
கிதவம் - ஊமத்தஞ்செடி.
கிதவன் - வஞ்சகன்.
கித்தான்- ஒருசாதிநூல், அந்தநூலினால் நெய்யப்பட்டதுணி.
கிந்துக்கினம் - ஓர் கரணம்.
கிந்துதல் - அடிப்பாதத்தை யுயர்த்தி மிதித்து நடத்தல்.
கிம்புரி - முடியுறுப்புக்களுளொன்று, யானையின்கொம்புகளில் அணியப்படும் பூண்.
கிம்புருடம் - ஓர்கண்டம்.
கிம்புருடர்- பதினெண்கணத்தருளொரு பகுதியார்.
கியாதி - பிருகுவின் மனைவி, புகழ், மிகுபுகழ்.
கிரகசமித்து கூ- எருக்கலை பலாசு கருங்காலி நாயுருவி அரசு அத்தி வன்னி அறுகு தர்ப்பை என்பன. (இவை முறையே சூரியன் முதலிய ஒன்பதுகிரகங்களுக்கும் ஓமஞ்செய்தற்குரியன)
கிரகணம் - சூரியனுக்குச் சந்திரனாலும் சந்திரனுக்குப்பூச்சாயையினாலுமுண்டாகும் மறைப்பு, பற்றுதல்.
கிரகபதி - சூரியன்.
கிரகமாலிகை - கிரகங்கள் இராசிகளில் நிரைப்பட்டுநிற்றல்.
கிரகம் - சூரியன் முதலிய கிரகங்கள்.
கிரகங் கூ- சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் வியாழன் சுக்கிரன் சனி ராகு கேது என்பன, (இராகுகேதுக்களை நீக்கி எழெனவும் வழங்குவர்).
கிரகித்தல்- எடுத்துக்கொள்ளுதல், பற்றுதல்.
கிரணமாலி - சூரியன்.
கிரணம் - ஒளி.
கிரணன் - சூரியன்.
கிரது - யாகம்.
கிரத்தம் - கிரகிக்கப்பட்டது. (மறைக்கப்பட்டது).
கிரந்தம் - ஆரியபாஷை, ஆரியபாஷையிலுள்ள செய்யுள் வகையுளொன்று. (இது கூஉ எழுத்துள்ளது), நூல்.
கிரந்தி - முடிச்சு, ஓர்நோய்.
கிரந்திநாயகன் - ஓர்பூடு.
கிரமம் - முறை.
கிரமுகம் - கமுகு.
கிரயம் - விலை.
கிரவுஞ்சம் - அன்றில், தாரகாசுரனுக்கு அரணாயிருந்து முருகக்கடவுளாலழிக்கப்பட்ட ஓர்மலை, ஓர்தீவு. *கோழி பறக்குமளவுகொண்ட தூரம்.
கிராகம் - முதலை.
கிராசம் - கிரகிப்பு.
கிராணம் - மூக்கு, சிறுவட்டில்.
கிராணி - ஓர்நோய்.
கிராதர் - வேடர்.
கிராதி - மரம்முதலியவற்றாற் செய்யப்பட்ட வேலி.

கிராந்தி - பூமத்தியத்துக்கு வடக்கே அல்லது தெற்கே சூரியன்முதலிய கிரகங்கள் சாய்ந்துநிற்றல்.
கிராந்திமண்டலம் - சூரியன் பூமியைச் சுற்றியோடும்பாதை. (பூமிசூரியனைச் சுற்றுவதுண்மையாயினும் அது கட்புலப்படாமையால் சூரியன் பூமியைச் சுற்றுவதாக வழங்குகின்றனர்).
கிராமணி - கிராமாதிகாரி.
கிராமம் - ஊர், நீரும்வயலுஞ்சூழ்ந்தவூர், (இது சிறுகிராமமெனவும் பெருங்கிராமமெனவுமிருவகைப்படும். சிறுகிராமம் நூறுகுடிநிறைந்தது; பெருங்கிராமம் ஐஞ்ஞூறுகுடிநிறைந்தது).
கிராமியம் - தாழ்ந்தோர் பேசும்பேச்சு. (நாட்டுப்பேச்சு).
கிராமியன் - கிராமமுற்றோன்.
கிராவம் - கல்.
கிரி - மலை, பன்றி.
கிரிகன்னி - துர்க்கை, உமாதேவி.
கிரிசரம் - மலையில்வாழும் யானை.
கிரிசன் - சிவன்.
கிரிசை - பார்ப்பதி.
கிரிமல்லிகை - வெட்பாலைமரம். [ன்று.
கிரியாசத்தி - கடவுளின் சத்திகளுளொ
கிரியை - தொழில், சைவசமயத்திற்கூறிய நால்வகைப் பாதங்களுளொன்று.
கிரிவிரசம் - மகதேசத்திராசதானி.
கிரீசன் - சிவன்.
கிரீடம் - முடி.
கிரீடி - அரசன், அருச்சுனன்.
கிரீடை - விளையாட்டு, ஆடவர் மகளிருடன்செய்யும் விளையாட்டு, புணர்ச்சி.
கிரீவம் - கழுத்து.
கிரீஷ்மருது - முதுவேனிற்காலம்.
கிருகத்தம் - இல்லறம்.
கிருகம் - வீடு.
கிருகி - கிருகத்தன்.
கிருசம் - ஒடுக்கம், மெலிவு.
கிருசரம் - எள், எட்பொடி.
கிருசானு - அக்கினி.
கிருச்சிரம்-பிராயச்சித்தத்தின்பொருட்டு அநுட்டிக்கப்படும் விரதங்களுளொன்று.
கிருடிகம் (கிருஷிகம்)- உழவுத்தொழில்.
கிருட்டி (கிட்டி) - தலையீற்றுப்பசு, பன்றி.
கிருட்டிணம் - கறுப்பு, இருள்.
கிருட்டிணவேணி - கிருஷ்ணாநதி.
கிருட்டிணன் - கிருஷ்ணமூர்த்தி, அருச்சுனன்.
கிருட்டிணாசினம் - கருமான்றோல்.
கிருககிருத்தியன் - செய்தொழிலின் பலனைப்பெற்றவன்.
கிருதம் - நெய், முதல்யுகம். (கிரேதம் எனவும்).
கிருதாந்தன் - யமன்.
கிருதார்த்தம் - செய்ததொழிலினாற் கிடைக்கும் பலன்.
கிருதி - வடமொழிச் சந்தங்களுளொன்று, (ஒவ்வோரடி இருபதெழுத்தாய் வரும்நான்கடிகளையுடையசெய்யுள்), வர்க்கித்த எண்.
கிருத்தி - தோல்.
கிருத்திகை - கார்த்திகை நட்சத்திரம், கார்த்திகை மாதம்.
கிருத்திமம் - பூதம், வஞ்சனை, (கிருத்திரிமமென்னும் வடசொல்லின் விகாரம்), தோல், செய்கை, பொய்.
கிருத்தியம் - கருமம்.
கிருத்திரகூடம் - மகதேசத்துள்ள ஒரு மலை.
கிருத்திரம் - கழுகு.
கிருத்திவாசன் - சிவன்.
கிருபணம் - உலோபம்.
கிருபன் - வில்வித்தை கற்பிக்குமாசாரியரானவோரந்தணர்.
கிருபாணம் - வாள்.
கிருபாலு - இரக்கமுடையோன்.
கிருபீடயோனி - அக்கினி.
கிருபை - அருள்.
கிருமி - புழு. [றம்.
கிலம் - புராதனமாய்ப்பழுதடைந்தது. அ
கிலிபம் - அலி.
கிலுகிலுப்பை - ஓர்செடி, சிறுவர்க்குரிய ஓர்விளையாட்டுப்பொருள். (உள்ளே சிறு கற்களையுடையதாய்க் கிலுகிலு எனச்சத்தமிடுவது).
கிலுக்கம் - ஓர்பறவை.
கிலுத்தம் - மணிக்கட்டு, முன்கைச்சந்து), கிலுத்தமரம் (சிந்தா.)
கிலேசம் - மனக்கவலை.
கில்லம் - கழுத்து, தொண்டைக்குழி.
கிழக்கு - கிழக்குத்திசை, கீழ்.

கிழங்கு-நிலத்தில்விளையும்மூலப்பொருள்.
கிழத்தி - தலைவி, மனைவி, மருதநிலத்தலைவி,
கிழமை - உரிமை, குணம், மூப்பு, ஞாயிறுமுதலியவாரங்கள், எழுநாள்.
கிழம் - வயோதிகத்தன்மை.
கிழவன் - வயோதிகன், உரியோன், தலைவன், பரணிநாள், மருதநிலத்தலைவன்.
கிழார் - இறைகூடை, சலயந்திரம், தோட்டம். (திசைச்சொல்).
கிழி - துண்டுப்புடவை.நிதிப்பொதி,கீறு.
கிழிதல் - வஸ்திரம்முதலியன கிழிதல்.
கிழித்தல் - கிழியச்செய்தல்.
கிளத்தல் - சொல்லுதல்.
கிளம்புதல் - எழுதல், வளர்தல்.
கிளர் - ஒளி, பூந்தாது.
கிளர்தல் - மேலோங்கல், வளர்தல்,ஒளி
கிளவி - சொல். [வீசல்.
கிளறுதல் - கீழ்மேலாகும்படிகுழப்புதல்.
கிளி - ஓர்பறவை
கிளிகடிகருவி - தினைப்புனங்காப்போர் மூங்கிற்பிளவாலடித்துக் கிளிகளைத் துரத்துதற்குபயோகிக்குங் கருவி.
கிளிச்சிறை - நால்வகைப் பொன்களுளொன்று.
கிளிஞ்சில் - முத்துச்சிப்பி.
கிளுவை - ஓர்மரம்.
கிளை - சுற்றம், ஓர்பண், புள்ளாங்குழல், கூட்டம், மரக்கிளை, தளிர், மூங்கில், வீணையின்ஐந்தாம்நரம்பு, (மணிமே), யாழிசை.
கிளைஞர் - சுற்றத்தார், கூட்டத்தார்.
[கிளைதல் - அரிசி முதலியவற்றைக் கையாற்பேர்த்துக்கழுவுதல்].
கிளைத்தல்-கிண்டுதல், பெருகுதல், மரங்கள்கிளைவிடுதல், சுற்றம்பெருகுதல். நிறைதல்.
கிள்ளல்- நகம்முதலியவற்றாற்கிள்ளுதல், தோண்டுதல்.
கிள்ளி - சோழன்.
கிள்ளை-கிளி, கருங்கிளி, குதிரை.
கிள்ளைவிடுதூது- வரதபண்டிதர்பாடிய ஓர்பிரபந்தம்.
கிறி - வஞ்சகம், வழி.
கிறுகிறுத்தல் - தலைசுழல்வதுபோலிருத்தல்.
கிறுக்கு - எழுத்து, கீறு.
கிற்றல் - செய்தல். (கில்பகுதி).
கின்று - அசைநிலை, (மொழிக்கிடையில்வரின் நிகழ்காலத்தைக்காட்டுமிடைநிலையாம்).
கின்னம் - உபத்திரவம், துன்பம்.
கின்னரம் - வீணை, கின்னரப்பறவை, (இன்னிசைகேட்டுவப்பது; நீர்வாழ்பறவை), ஆந்தை.
கின்னரர் - பதினெண்கணத்தருளொருசாரார்.
கின்னரர்பிரான் - குபேரன்.

## கீ

கீகசம் - எலும்பு.
கீசகம் - மூங்கில், குரங்கு. தலைத்திராணம்.
கீசகன் - ஓர்சேனாதிபதி, (பாரத. கீசக ௧௯).
கீச்சுக்கிட்டம் - உலைமுகத்திலிரும்பைக் காய்ச்சும்போதுண்டாகும் ஓர்வகைக் கிட்டம்.
கீடம் - புழு, கோற்புழு, வண்டு.
கீதம் - இசைப்பாட்டு, வண்டு.
கீதை- சிவன் விஷ்ணுமுதலியதெய்வங்களுளொன்றின் மகத்துவத்தைத் கூறும்நூல். (சிவகீதை பகவற்கீதை முதலியன).
கீரம் - பால், கருங்கிளி, கிளி,நீர்.
கீரன் - நக்கீரரென்னுஞ்சங்கப்புலவர்.
கீரி - நகுலம்.
கீரை - இலைக்கறிவகைகள். [ப்பு.
கீர் - சொல், சங்கறக்குமொலியின்குறி
கீர்த்தனம் - புகழ்தல்.
கீர்த்தி - புகழ், மிகுபுகழ்.
கீர்வாணம்- தேவபாஷை. (வடமொழி).
கீலக - ஓர்வருடம்.
கீலம் - ஆப்பு, ஆணி, துண்டு, பிளவு.
கீலாலம் - நீர், இரத்தம், கஞ்சி.
கீல் - கதவின்கீல், உடலின்பொருத்து.
கீழறுதல் - படையறல்.
கீழுலகம் ௭ - அதலம் விதலம் சுதலம் தலாதலம் ரசாதலம் மகாதலம் பாதாளம் என்பன. (மகாதலத்தைநீக்கி நிதலத்தைச்சேர்த்துப் பிங்கலத்தில்).
கீழோர் - சண்டாளர்.
கீழ் - கீழ்மை, கிழக்கு, கீழிடம், இடம்.

கீழ்சாதி, பள்ளம், ஏழாம்வேற்றுமை யுருபு.
கீழ்காய்நெல்லி - ஓர்பூண்டு.
கீழ்காற்று - கொண்டற்காற்று.
கீழ்க்கணக்கு - கீழ்வாயெண். வெண்பா முதலிய அடிநிமிர்வில்லாச் செய்யுட்களாலறம்பொருளின்பங்களை யுரைக்கும்நூல். (அடிநிமிர்வில்லாச்செய்யுட்டொகுதி யறம்பொருளின்பமடுக்கிய வவ்வத் திறம்படவுரைப்பதுகீழ்க்கணக்காகும் என்பதுசூத்திரம்).
கீழ்க்கதி - நரகம்.
கீழ்தல் - கிழித்தல்.
கீழ்த்திசை - கிழக்கு.
கீழ்நிலை - நிலவறை, கீழானநிலைமை.
கீழ்மகன் - எளியவன்.
கீழ்மை - இழிவானசெயல்.
கீழ்வாய் - பின்னவெண்.
கீளல் - கிழித்தல், கீறுதல்.
கீள்- நூலால்நெய்யப்பட்ட கடிசூத்திரம் (பெரி திருநீலகண்டநா கக).
கீறல் - நிலம்முதலியவற்றிற்கீறுதல், கிழித்தல், எழுதுதல்.
கீறு - ரேகை, எழுத்து.
கீற்று- இரத்தினக்குற்றங்களுளொன்று.
கீன்றல்- கீறுதல். (கீல் பகுதி).

## கு

கு - பூமி, ஒருபசர்க்கம்; (இது நிந்தை பாபம் அற்பம் நீக்கம் என்னும்பொருள்களையுணர்த்தும்; நீக்கப்பொருளுக்கு தாரணம் குசீலன்), நான்காம்வேற்றுமையுருபு.
குகரம் - நிலவறை, மலைக்குகை.
குகன்- முருகவேள், கங்கைநதிக்கரையிலிருந்த இராமசுவாமியுடன் சிநேகமான ஓர்வேடன்.
குகு - சதுர்த்தசியுடன்கூடிய அமாவாசை, தசநாடிகளுளொன்று.
குகை- மலைமுழை, பொன்முதலியலோகங்களையுருக்கும்பாத்திரம்.
குக்கல் - இருமல், நாய் (இப்பொருளில் குக்கன் எனவும்).
குக்கி - வயிறு.
குக்கில் - செம்போத்து, குங்குலியம்.
குக்குடசர்ப்பம் - பறவைநாகம்.
குக்குடம் - கோழி.
குக்குடாசனம் - இரண்டுகால்களையும் நிலத்தில்மிதித்துக் குந்தியிருத்தல்.
குக்குரம் - நாய்.
குக்குலு - குங்குலியம்.
குங்குமப்பூ - ஓர் வாசனைத் திரவியம், (குங்கும மரத்தின் பூ)-
குங்குமம்- குங்கும மரம், செஞ்சாந்து.
குங்குலியம் (குங்குலு)- ஓர் சரக்கு.
குசம் - தருப்பை. முலை, நீர், மரம்,
குசலம்- சுபம், குணம், மாட்சிமை,
குசலவர்-இராமசுவாமியின் புத்திரர்கள்.
குசலவித்தை ரு- கண்ணல் எழுதல் இலைகிள்ளல் பூத்தொடுத்தல் யாழ்வாசித்தல் என்பன.
குசலன் - மிகவல்லவன்.
குசன்- செவ்வாய்.
குசீதம்-வட்டிக்குக்கொடுத்துவாங்குதல்
குசீலன்- துராசாரமுள்ளவன்.
குசுமம்- பூ.
குசும்பம்- ஓர்மரம்.
குசேசயம்- தாமரை.
குசை- ஓர் தீவு, குதிரைக் கடிவாளம், குதிரைகட்டுங்கயிறு, குதிரைப்பிடர் மயிர் தருப்பை.
குசோதகம்-தருப்பையூறவைத்தநீர்.[து
குச்சம்-பூ காய் முதலியவற்றின் கொத்
குச்சரம்-ஓர்தேசம்.
குச்சரி- ஓர் பண்.
குச்சு- பாவாற்றி, குச்சுப்புல்.
குச்சுப்புல்- அழுக்ககற்றக் கட்டி வைத்திருக்கும் ஈர்க்கு முதலியன.
குஞ்சம் - ஈயோட்டி, குன்றிக்கொடி, கோட் சொல், குறுணியி னெட்டிலொன்றாகிய அளவை, (நாழி), குறள், பூ முதலியவற்றின் கொத்து.
குஞ்சரம்- யானை.
குஞ்சராசனம்-அரசமரம்.
குஞ்சி- ஆண்மயிர், (குடுமி), குஞ்சம் (சிந்தா), கொடிநாட்டுங் குழி (சிந்தா), பறவைக்குஞ்சு, குன்றிக்கொடி.
குஞ்சிதம்-ஒருகால்தூக்கியாடும்நடனம்.
குஞ்சு-பறவைக்குஞ்சு, அணில்முதலியவற்றின் பிள்ளை.
குஞ்சுறை- பறவைக்கூடு.
குடகம் - தமிழ்வழங்கு நிலத்தின் மேற்கெல்லையாயுள்ள ஒருதேசம்.
குடகன்- சேரன்.
குடக்கு (குடதிசை.)-மேற்குத்திக்கு.

குடக்கோ - சேரன்.
குடங்கர் - குடம், கும்பராசி, *குடிசை. (திருக். உட்பகை ௧0).
குடங்கை - உள்ளங்கை.
குடசம் - வெட்பாலைமரம்.
குடதாடி - தூணுக்கும் உத்தரத்துக்குமி டையேவைக்கப்படுவது. (சிந் உரை)
குடத்தி - முல்லைநிலப்பெண்.
குடநாடன் (குடநாதன்) - சேரன்.
குடநாடு - மேனாடு.
குடந்தம் - கைகூப்பி மெய்கோட்டி நிற் றல், குடம். [ன்று.
குடமல்லிகை-மல்லிகையினங்களுளொ
குடமுழா-ஓர்வகைத்தோற்கருவி, சிலப்; இதையே பன்றிப்பறையென்பர் மண் டலவர்.
குடம் - கும்பம், கும்பராசி, பசு, நகரம், ஒருகூத்து, பதினோருருத்திராடலு ளொன்று, கண்ணபிரான் தன்மகனு கிய அநிருத்தனைச்சிறைமீட்டற்கு வா ணாசுரனுடைய நகரத்திற்சென்றாடிய கூத்து, (சிலப். கலரடு ௫௫), மெய் கோட்டிக் கைகுவித்துக் கொட்டல், வெல்லக்கட்டி, திரட்சி, கொடுந்தமிழ் நாடுகளுளொன்று.
குடம்பை - பறவைக்கூடு, முட்டை.
குடலை - பூ முதலியவைக்குங்கூடை.
குடல்(குடர்) - மலந்தங்குதற்காக உடலி னுள்ளமைக்கப்பட்டிருக்கும் பை.
குடவம் - பித்தளை.
குடவன் - இடையன், குடநாட்டிலுள் ளோன், [ஒருகொட்டையுள்ள பழம்]
குடவுதல்-வளைதல். (திருப்).
குடா - மூலை, கோணம், வளைவு, (திரு முரு உரை.
குடாக்கடல் - கோணவடிவான கடல்.
குடாது - மேற்கிலுள்ளது, மேற்கு.
குடாரம் - கோடாலி, தயிர்கடைதாழி. (பிங்கல).
குடாரி - யானைத்தோட்டி. [யது.
குடாவடி-கரடி, (வளைந்தஅடியையுடை
குடி - குலம், கோத்திரம், குடிமக்கள், ஊர், மருதநிலத்தூர், குடிசை, புரு வம்.
குடிகை - குண்டிகை, கோயில், சிற்றில், (பிந்தியபொருளிற் குடிசையெனவ ழங்குகின்றது.

குடிக்காடு - ஊர்.
குடிங்கு - பறவை. (இரகு நாட் ௪0).
குடிஞை-யாறு, பறவைப்பொது, கோட் டான், கூகை.
குடிச்சல் - பருகுதல்.
குடிநீர் - இலை பட்டை முதலிவற்றையூ றவைத்து அவித்த மருந்துக்கஷாயம்.
குடிபுகுதல் - ஓரிடத்திலிருந்து மற்றோரி டத்திற்குடியாகப்போதல், நிலைப்பட் டிருத்தல்.
குடிமக்கள்-உயர்குடிப்பிறந்தோர், தொ ழில்செய்யுஞ்சாதியார்.
குடிமக்கள் பதினெண்மர்- உயர்குடிப் பிறந்தோராயிருந்த செல்வவேளாண் டகையினர் சிலர் தமக்கு அமைந்து நடக்குந்தொழிலாளரைக் குடிமைக ளாக நடாத்தினர். அவரே நாவிதன் முதற் பதினெண் குடிமைகளாவர். அப்பெயர்கள்சிலவற்றை தவறாகவும் வழங்குவர் சிலர். அவற்றில் மாற்ற வேண்டியனவும் சிலஉள.
குடியன் - கட்குடிப்போன்.
குடியிருப்பு - குறிச்சி.
குடிலம் - ஆகாயம், சடை, வஞ்சகம், வளைவு, *குராமரம்.
குடிலை - பிரணவம்.
குடில் - ஆகாயம், சிற்றில். [று.
குடீசகம் - சன்னியாசவகைகளுளொன்
குடீரகம் - பன்னசாலை. [கை.
குடுகு - தேங்காய்முதலியவற்றின் குடுக்
குடுக்கை - கமண்டலம், ஓர்வாத்தியம், தேங்காய்முதலியவற்றின் குடுக்கை.
குடுமி - ஆடவர்களின்மயிர்முடி, உச்சி, மலையுச்சி, கதவிற்குடுமி, வில்நுனி, வெற்றி.
குடும்பம் - ஒருகுடியிலுள்ளார், மனைவி.
குடும்பினி - மனைவி.
குடும்பு - காய்முதலியவற்றின்கொத்து.
குடுவை - கமண்டலம், குண்டான்.
குடை - கவிகை, குடைக்கூத்து, (சிலப்), குமரவேள் அவுணருடன் பொரும் போதாடியகூத்து, பதினோருருத்திர ராடலுளொன்று, பனையோலையாற் செய்யப்படுமுண்கலம், மிதியடி முத லியவற்றின்குமிழி.
குடைதல்-உட்பக்கத்திலரித்தல், நீராடல் கடைதல், தோண்டுதல், கோப படுத்தல்

குடையாணி - தலையிற்குமிழுள்ள ஆணி.
குடைவேல் - உடைமரம்.
குடோரி - வஞ்சகம், சன்னி விஷத்தி னுலுண்டான மூர்ச்சை முதலியவற் றில் கீறி மருந்துவைத்தல்.
குட்டமிடுதல் - தோண்டுதல்.
குட்டம் - ஆழம், குளம், குட்டநோய், கொடுந்தமிழ்நாடுகளுளொன்று.
குட்டணம் - இடித்தல், தகர்த்தல், குட்டு தல்.
குட்டன் - மகன், ஆட்டுக்குட்டி.
குட்டி - புலி ஆடு முயல் பன்றி நரி நாய் கீரி பூனை முதலியவற்றினதும் கோட் டில்வாழுகின்ற குரங்கு அணில் முத லியவற்றினதும் பிள்ளை, வாழைக் கன்று, சிறியபொருள். (உ-ம்: குட்டிச் சுவர்).
குட்டிமம்-சற்படுத்தஇடம், சற்றிண்ணை.
குட்டியம் - சுவர்.
குட்டினி-பெண்களைப்பிறபுருஷனுடன் சேர்விப்பவள்.
குட்டுதல் - தலையிற்குட்டுதல், தகர்த்தல்.
குட்டுவன் - குட்டநாட்டிலுள்ளோன், சேரன்.
குட்டேறு - எருத்தின்முரிப்பு.
குட்டை - ஓர்வியாதி, சிறுகுளம், [கை யில்வைத்திருக்கும் வஸ்திரத்துண்டு]
குணகம் } பெருக்குந்தொகை.
குணகாரம் }
குணக்கு - கிழக்கு.
குணங்கு - பிசாசம்.
குணங்குதல் - வளைதல்.
குணசந்தி - அ ஆக்களின்முன் இ ஈ க்க ளும் உ ஊ க்களும் வரின் இரண்டெ ழுத்துக்களுங் கூடி முறையே ஏ யும் ஓ வும் ஆகுஞ்சந்தி.
குணதிசை - கிழக்கு.
குணத்தொகை - பண்புத்தொகை.
குணபம் - பிணம், பிசாசம்.
குணம்-தன்மை, கயிறு, வில்லின்ஞாண், குடம்,நிறம்,நூல், மூவகைக்குணங்கள்.
குணம் ௩-சாத்துவிகம் ராசதம் தாமதம் என்பன.
குணலை - ஓர்கூத்து, வீராவேசத்தாற் கொக்கரித்தல்.
குணவலங்காரம் ௧௦ - செறிவு தெளிவு சமநிலை இன்பம் ஒழுகிசை உதாரம் உய்த்தலில்பொருண்மை காந்தம் வலி சமாதி என்பன.
குணனம் - பெருக்கல்.
குணனீயம் - பெருக்கப்படுந்தொகை.
குணலம் - ஓர்பறவை, குணலைக்கூத்து.
குணி - குணமுள்ளபொருள், (பண்பி), மூடவன்.
குணிதம் - பெருக்கிவந்தபேறு, மடங்கு.
குணித்தல் - பெருக்கல்.மதித்தல், கணக் கிடல்.
குணில் - ஓர்பறை, குறுந்தடி. கவண்.
குணுக்கல் - நுணுக்கல், வளைத்தல்.
குணுக்கு - மாதர் காதணிகளுளொன்று, (கடிப்பிணை), வலைமை நீரிலமிழ்ந்தும் படி செய்யும் ஈயவுண்டை.
குணுங்கர் - நரம்புக்கருவியாளர், தோற் கருவியாளர், சண்டாளர்.
குண்டகன் - நாயகனிருக்க வேறொரு சோரநாயகனைக் கூடிப்பெற்றபிள்ளை.
குண்டம் - ஓமக்கிடங்கு, குழி, குளம், கமண்டலம், பானை, குண்டான்.
குண்டர் - கீழோர்.
குண்டலகேசி - ஓர்காப்பியம்.
குண்டலம் - காதணி,ஆகாயம்.
குண்டலி-நாபித்தானத்திலிருப்பதொரு நாடி, குண்டலிசத்தி, காளி, இசங் கஞ்செடி.
குண்டணம் - வளைதல்,
குண்டான் (குண்டா) - ஆழமான ஓர் வகைச்சட்டி.
குண்டி - ஆசனவுறுப்பு, ஈரற்குலை.
குண்டிகை - கமண்டலம்.
குண்டில் - சிறுசெய்.
குண்டு - ஆழம், தாழ்வு, ஆண்குதிரை, கீழானசெயல், உருண்டை, நிறைக் கல், திரண்டகல்.
குண்டை - இடபராசி, எருது.
குண்ணியம் - பெருக்கப்படுமெண்.
குதட்டுதல் - அதுக்குதல், (பெரிய கண் ௨௨), கறித்தல், (கூர்ம. தக்கன்.௨௭).
குதபகாலம்-பகலைப்பதினைந்தாய்ப்பகுத் தவழி எட்டாவதுபாகமானகாலம்.
குதப்பல்-குதட்டுதல்.
குதம் - இருக்கும்போதுநிலத்திற்படியு முறுப்பு. [மை.
குதம்புதல், அலைசுதல், இறுக்கமில்லா
குதம்பை-காதணிவகையுளொன்று, பெ

ரிய சிறந்தொண்ட உக).
குதர்க்கம்- முறையினமான தர்க்கம்.
குதர்தல்- கோதுதல். (திருக்கே கஙகூ).
குதலை - மழலைச்சொல். (கிரம்பாமென்மொழி)
குதி- பாதத்தினடிப்புறம்.
குதித்தல் - துள்ளுதல்.
குதிரை - ஓர்மிருகம்.
குதிரையின்ஐவகைக்கதி- மல்லகதி மயூரகதி வியாக்கிரகதி வானரகதி இடபகதி என்பன.
குதிரைவையாளிவீதி- குதிரையிலிவர்ந்து வேகமாயுலாவுதற்குரியவீதி.
குதிர் - செல்முதலியனவைக்குங்கூடு.
குதூகலம் - பெருமகிழ்ச்சி, ஆவல்.
குதை- விற்குதை, அம்பின்குதை.
குத்தகை- மதிப்பின்படி நிலமுதலியவற்றை ஏற்றல்.
குத்தி (சுப்தி)- அடக்கம், மண்.
குதிரம்- வஞ்சகம், மலை.
குத்து - நோய், கைமுதலியவற்றாற் குத்தல் குத்து.
குத்துக்கால்- தேர்முதலியவற்றில் நிறுத்தங்கால்.
குத்துதல் - பொத்திய கையால் அல்லது கூரானபொருள்முதலியவற்றாற் குத்துதல்.
குத்துவிளக்கு - நீளமான தண்டையுடைய விளக்கு.
குந்தம் - குருந்தமரம், கைவேல், சிறுசவளம், பெருஞ்சவளம், குதிரை, நோய்.
குந்தளம் - பெண்மயிர், மயிர்க்குழற்சி, குழற்கொத்து, ஓர்தேசம். நரி நாய் பன்றி புலி மான் முசு முயல் யாளி இவற்றின்குட்டி.
குந்தனை- சமையற்பாத்திரங்களையிறக்கி வைக்குந்திருகணை.
குந்தாலி - கணிச்சி, (புறப்), கிணறுதோண்டுங்கருவி.
குந்தி - பாண்டவர்களின்தாய், கள்.
[குந்து- ஒட்டுத்திண்ணை, திண்ணையின் கரை, தும்பு]
குந்துதல் - காலிரண்டையும் நிலத்தில்மிதித்துக்கொண்டு குந்தியிருத்தல், (குக்குடாசனம்).
குந்துருக்கம் - ஓர்வாசனைத்திரவியம்.
குபீர்-இரத்தமுதலியன கொப்பளிக்குங் குறிப்பு.

குபேரன் - வடதிசைப்பாலகன், சந்திரன்.
குப்பம் - ஊர், குவியல், திடர், காடு.
குப்பல் - குவியல், கூட்டம்.
குப்பாயம் - சட்டை.
குப்பி-ஓர்பாத்திரம்.
குப்புறுதல் - குதித்தல், (பாய்தல்).
குப்பை- குவியல், கூட்டம், சதகுப்பை, மேடு, திரட்சி.
குப்பைமேனி - ஓர்பூடு.
குமட்டல் - நிறைவு, ஓக்காளம்.
குமதி - துர்ப்புத்தி.
குமரகண்டம் - ஓர்வகைவலி, ஓர்பேய்.
குமரகோட்டம்-காஞ்சீபுரத்திலுள்ள சுப்பிரமணியக்கடவுளின்கோயில்.
குமரம்- கொம்பிலாவிலங்கு.
குமரகுருபரசுவாமி-பஞ்சவயதளவும் ஊமையாயிருந்து மேற் சுப்பிரமணியக் கடவுளினருளாற் பேசப்பெற்றுக் கவி பாடிய ஒருபுலவர்.
குமரன்- பதினாறுவயதின்மேல் கூஉ வயதுக்குட்பட்ட பிராயமுடையவன், மகன், முருகக்கடவுள், வயிரவக்கடவுள், இளையோன்.
குமரி - புதல்வி, கற்றாழை, குமரிகண்டம், கன்னியாகுமரியென்னுந்தேசம், காளி, துர்க்கை, உமாதேவி, குமரிநதி, அழியாத்தன்மை, (பெரும்பா உசஎ), கன்னியழியாதவள், சத்தமாதர்களுளொருத்தியான கௌமாரி.
குமரிச்சேர்ப்பன் - பாண்டியன்.
குமர் - கன்னியழியாமை, இளமை.
குமாரசம்பவம்- வடமொழியிலுள்ள ஓர் காவியம்.
குமாரதந்திரம்-முருகக்கடவுளின்வழிபாடுமுதலியவற்றைக்கூறும்நூல்.
குமாரன் - மகன். (பெண்பாலில்குமாரி, குமாரத்தி), முருகவேள்.
குமிகை - இளையெள், எள்.
குமிலம் - பேரொலி.
குமிழி - நீர்க்குமிழி, குமிழ்வடிவான பொருள்.
குமிழ் - குமிழமரம், குமிழ்த்தவடிவான பொருள், நீர்க்குமிழி, சேற்றிற்புள்ளி.
குமிழ்த்தல் - திரளுதல்.
குமிழ்ப்பு - புடைப்பு, புளகம்.
குமிறல் (குமுறல்) - பொங்கிக் கொப்ப

ளித்தல், ஒன்றல்லாப்பேரொலி.
குமுதகம் - ஓர்வகைச்சித்திரக்கம்பி.
குமுதநண்பன் - சந்திரன்.
குமுதம் - அடுப்பு, தென்மேற்றிசையானை, ஆம்பல், சேனைத்தொகையுளொன்று, பேரொலி, * தருப்பை.
குமுதன்-குரங்குப்படைத்தலைவருளொருவன், பூதத்தலைவருளொருவன்.
குமுதினி - ஆம்பலுள்ள தடாகம்.
குமைத்தல்- ஒன்றிலொன்றைப் புதைத்தல், அழித்தல்.
கும்பகம்-உள்ளேவாயுவைத்தடுத்து நிறுத்துதல்.
கும்பகர்ணன் - இராவணனுடையதம்பியாகியஅரக்கன்.
கும்பகாரன் - குயவன்.
கும்பகோணம் - ஓர்பட்டினம்.
கும்பசம்பவன் - அகத்தியமுனிவர், துரோணாசாரியர்.
கும்பம் - குடம், கும்பராசி, குவியல், நெற்றி, யானைமத்தகம்.
கும்பல் - குவியல், கூட்டம்.
கும்பன் - ஓராக்கன்.
கும்பா - பாத்திரவகையுளொன்று].
கும்பி - குவியல், நரகம், சேறு, யானை.
கும்பிகை ஓர்வாத்தியம். (இராமா பிரமாத் இ).
கும்பிடுதல் - கைகுவித்துத்தொழுதல்.
கும்பிபாகம் - ஓர்நரகம்.
கும்பீரம் - முதலை.
கும்பீனசம் - பாம்பு
கும்போதரன்- ஓர்பூதத்தலைவன். (இவனைக்குண்டோதரனென்பர்சிலர்; பரமசிவன் இடபவாகனத்திலேறும்போது இவனுடைய முதுகின்மேற் பாதங்களைமிதித்தேறுவர்).
கும்மட்டி - ஆற்றுத்தும்மட்டிக்கொடி.
கும்மாயம்- குழையச்சமைத்த பருப்புடன் சர்க்கரை முதலியனகூட்டிய சிற்றுண்டி. (காலவிரப்).
கும்மி- மகளிர்கைகொட்டிவிளையாடல், கும்மிப்பாட்டு.
கும்முதல் -அடிப்பற்றுதல். [தன்கத்தி.
குயம் - முலை, இளமை, அரிவாள், நாவி
குயவரி - புலி.
குயவன் - மண்ணினூற் குடம்முதலியவற்றை வனைவோன்.

குயவு - தேர்.
* குயா - கோங்கமரம்.
குயிலல் (குயிறல்)- செய்தல், சொல்லுதல், அழைத்தல், துளைத்தல், நெருங்கல், இரத்தினமுதலியவற்றைப்பதித்தல்.
குயிலுவம்-நரம்புக்கருவிகளையும் தோற்கருவிகளையுமிசைத்தல்.
குயிலுவர் - நரம்புக்கருவிகளையுந்தோற்கருவிகளையுமிசைப்பவர், தோல்வினைஞர்.
குயில்- ஓர்பறவை, சொல், துளை, துளையுடைப்பொருள், மேகம், (இப்பொருளில் குயின் எனவும்).
குயினர்- இரத்தினமுதலியவற்றைத் துளைப்பவர்.
குயுத்தி - புத்தியைத் தவறானவழிகளிலுபயோகித்தல்.
குய் - நறும்புகை. (தாளிப்பு).
குய்யகர்- குபேரனுடையபரிசனராகிய தேவசாதியார்.
குய்யம்- ஆண்பெண்களுடையகுறிகள், மறைவு, வஞ்சகம்.
குரகதம் - குதிரை.
குரக்கன் - கேழ்வரகு.
குரங்கம் - மான், விலங்கின்பொது.
குரங்கி - சந்திரன்.
குரங்கு - குரங்கு, விலங்கின்பொது.
குரங்குதல் - வளைதல்.
குரசு (குரச்சை) - குதிரைக்குளம்பு.
குரண்டகம்-குறிஞ்சி. (பெருங்குறிஞ்சி)
குரண்டம் - கொக்கு.
குரத்தி- குரவன்மனைவி, தலைவி.
குரம்- குதிரைக்குளம்பு, விலங்கின் குளம்பு.
குரம்பு - செய்கரை, வரம்பு.
குரம்பை-கூடு, பறவைக்கூடு,நெற்கூடு சிற்றில், உடல்
குரல் - பெண்மயிர், மிடறு,இசை, ஒலி யாழ்நரம்பேழனுள் முதற்றுனம், யாழ்நரம்பு, நெல்முதலியவற்றின் கதிர், பூமுதலியவற்றின்கொத்து, பற்று (கவித் இச), இறகு கிங்கிணிமாலை * தினை
குரவகம்- வாடாக்குறிஞ்சி.(மருதோன்றிமரம்).
குரவம்.குராமரம், கோட்டம், குதிரை

வின் மேலுதடு, நறுமணம்.
குரவர்- தாய்தந்தையர், ஐவகைத்தந்தையர், பெரியோர், மந்திரித்தலைவர்.
குரவன்- உபாத்தியாயன், குரு, பிதா, மூத்தோன், பிரமா, முருகவேள்.
குரவு- குராமரம், நறுமணம்.
குரவை- கைகோத்தாடல், வீரத்தாலும் வெகுளியாலும் அறைகூவுதற்கட் செய்யும் ஓர்வகைச்சத்தம், உருத்திரராடலுளொன்று, கடல்.
குரா- மரவகைகளுளொன்று.
குரால்- கோட்டான், பசு, புகர்நிறம்.
குரிசில் - அரசன், தலைவன், பெருமையிற்சிறந்தோன்.
குரீஇ - குருவி.
குரு- ஆசாரியன், உபாத்தியாயன், பிதா, தலைவன், வியாழன், சந்திரவம்சத்தரசருளொருவன், அங்கிதீரன் புதல்வருளொருவன், குருநாடு, குருவருடம், நிறம், பாரம், வேர்க்குரு, ஓர்நோய்.
குருகு - கொய்யடிநாரை, நாரை, அன்னம், கொக்கு, கோழி, பறவைகளின் ஆண், (பாரத திரௌ கO), பறவைப் பொது, இளமை, வெண்மை, யானையின்மூளை, தென்னை பனைமுதலியவற்றினுட்குருத்து, கொல்லுலைமூக்கு, மூலநட்சத்திரம், குருக்கத்தி மரம், கைவளை.
குருகுலம் - பாரதர் குலம்.
குருக்கண் - மூலைக்கண்.
குருக்கத்தி - ஓர்மரம்.
குருக்குத்தி - நெற்பயிரைச்சடைவிக்கும் ஓர்நோய்.
குருடன் - கண்பார்வையில்லாதவன்.
குருடு - கண்பார்வையின்மை. [ய்.
குருதி- இரத்தம், சிவப்புநிறம், செவ்வாய்.
குருத்து - இளமை, மரமுதலியவற்றின் குருத்து, மூளை, வெண்மை.
குருநாதன் - முருகவேள்.
குருநாள் - பூசநட்சத்திரம்.
குருந்து - குருந்தமரம், குருக்கத்திமரம், குழந்தை.
குருப்பு - சரீரத்தில்வரும்பரு.
குருமலை - சுவாமிமலை.
குருமித்தல்- எடுத்தலோசையாய்ச் சத்தமிடல்.
குரும்பை- தெங்கு பனை என்னும்மரங்களினிளங்காய்.
குருவி - சிறுபறவை.
குருவிச்சை (குருவிச்சு, குருவீச்சு)- புல்லுருவி.
குருவிந்தம்- குன்றிமணி, பதுமராகத்திலோர்சாதி.
குருளை- இளமை, மான் யாளி முசு புலி முயல் பன்றி நரி நாய் என்னும் விலங்குகளின்பிள்ளை, சிறுவன்.
குருள் - பெண்மயிர்.
குரூபி - அழகில்லாதவன்.
குரூரம் - கொடுமை.
குரை - ஆரவாரம், அசைநிலை, இசைநிறை. (திருக் நல்குரவு கூ).
குரைத்தல்- ஒலித்தல், நாய்சத்தமிடல்.
குரைமுகன் - நாய்.
குரோசம்- கூப்பிடுதூரம், (எண்ணூறுமுழத்தூரம், பதினாயிரமுழத்தூரமென்பர்சிலர்; ஒன்றரை நாழிகைவழியெனச் சிந்தாமணி விசேடக் குறிப்பில்).
குரோடம் - பன்றி.
குரோட்டம் நரி, பன்றி.
குரோதம் - கோபம், விரோதம்.
குரோதன - ஓர்வருடம்.
குரோதன்- வீரபத்திரன், கோபமுள்ளவன்.
குரோதி - ஓர்வருடம்.
குரோதித்தல்- கோபித்தல், பகைத்தல்.
குர்த்தனம் - கிரீடை.
குலகிரி - இமயமுதலிய எட்டு மலைகள். (மகேந்திரமுதலிய ஏழுமலைகளெனினுமாம்).
குலக்கு-குலை.
குலடை - குலவொழுக்கந்தவறியவள். (வியபிசாரி).
குலதெய்வம் - வழிபடுதெய்வம்.
குலத்தம் (குலுத்தம்) - கொள்.
குலமகன் - உயர்குலத்திற்பிறந்தோன்.
குலம் - கூட்டம், விலங்கின்கூட்டம், உயர்குலம், சாதி, குடி, வீடு, அரசர் வீடு, தேவர்கோயில், அழகு, இரேவதிநட்சத்திரம்.
குலவுதல்- பிரகாசித்தல், பொருந்துதல், உலாவுதல், வளைதல். [காசம்.
குலா-ஆடம்பரம், கொண்டாட்டம், பிரகாசம்.
குலாமர் - உலோபிகள். [செய்கூடு
குலாயனம் (குலாயம் - பறவைக்கூடு,

குலாலன் - குயவன்.
குலாவல் - வளைதல், கொண்டாடல்.
குலிகம்- சாதிலிங்கம், சிவப்பு, மட்டத் திருத்தி, இருப்பைமரம்.
குலிங்கம் (கலிங்கம்)-ஊர்க்குருவி, நிகூ தேசங்களுளொன்று.
குலிசம்- இடி, வச்சிராயுதம், வன்னிமரம்.
*குலிலி - வீராவேச ஒலி. (திருப்).
குலீனன் - உயர்குலத்திற்பிறந்தோன்.
குலுங்கல் - கலங்குதல், நடுங்குதல்.
குலை- பூ காய் முதலியவற்றின்கொத்து, ஈரற்குலை, செய்கரை, விற்குதை, அம்பின்குதை.
குலைதல்- நிலைகெடுதல், குலுங்குதல்.
குலோத்துங்கன்- ஓர்சோழன், ஓர்பாண்டியன்.
குல்மம் (குன்மம்)- குன்மநோய், தூறு பற்றை.
குல்லம் - முறம்.
*குல்லரி - இலந்தைமரம்.
[குல்லா - தலைத்தொப்பி].
குல்லை - வெட்சி, துளசி, கஞ்சாச்செடி.
குவடு - மலை, சிறுமலை, திரட்சி, மலையுச்சி, மரக்கொம்பு.
குவலயம் - பூமி, கருங்குவளை.
குவலயாபீடம் - கிருஷ்ணமூர்த்தியாற் கொல்லப்பட்ட ஓர்யானை.
குவலயானந்தம் - வடமொழியிலுள்ள ஓரலங்கார நூல்.
குவலி - இலந்தைமரம்.
குவவு- குவியல், திரட்சி, கூட்டம், பெருமை.
குவளை- ஓர்வகைநீர்ப்பூ, (இது கருங்குவளை செங்குவளை என இருவகைப்படும்; இவற்றுட்செங்குவளையைச் செங்கழுநீரெனவுங் கூறுவர்), குவளைக்கடுக்கன். (ஆணிப்பொற்குவளை; சிவாக.)
குவளைத்தாரான் - யுதிட்டிரன்.
குவால் - குவியல், கூட்டம் மேடு.
குவி-சுவர். (தனிப்பாடற்றிரட்டு ௲௯௧).
குவிதல் - ஒடுங்கல், சேர்தல் திரளுதல்.
குவித்தல் - குவியச்செய்தல்.
குவியல் - குவை.
குவிவு - திரட்சி.
குவேணி - மீன்புட்டில்.
குவை-குவியல், கூட்டம், குவிந்தமேடு.
குழகன்- முருகவேள், அழகன், இளைஞன்.
குழகு - அழகு. இளமை.
குழங்கல் - ஓர்வகைமாலை.
குழந்தை - சிறுபிள்ளை.
குழப்பம் - கலகம்.
குழப்புதல் - கலகஞ்செய்தல், கலத்தல்.
குழமகன் - மாதர் தாங்கண்டகுழமகனைப்புகழ்ந்துகூறுவதாகக்கலிவெண் பாவாற் பாடியகலி.
குழம்பு- ஆணம், சேறு, பாகு, சந்தனக் கலவை.
குழம்புதல்-தலைதடுமாறுதல்,கலங்குதல்.
குழல் - ஊதுகுழல், உட்டுளை, துளையுடைப்பொருள், குழலிசை, ஆண்மயிர் பெண்மயிர், சுருட்டிமுடிக்கும்மயிர் முடி, ஓர்மீன். (சிறுபா ௬௯௩).
குழவி - குழந்தை, எருமை காட்டா யானை யாளி முசு மான் மரை என் பனவும் மரக்கோட்டில் வாழ்வனவு மாகிய விலங்குகளின்பிள்ளை, பாம் பின்குட்டி, மரக்கன்று, இளமை, அம்மிக்குழவி.
குழ (குழவு) - இளமை.
குழறுதல் - கத்துதல்.
குழற்சி - மயிர்களின்கடைக்குழற்சி.
குழாம் - கூட்டம்.
குழாய் - துளை, துளையுடைப்பொருள்.
குழி - கிடங்கு, பள்ளநிலம், நீர்நிலை,ஒரு கோல்நீளமும் அகலமுமுள்ள நிலம்.
குழிசி - பானை, மிடா.
குழிதல்-குழியாதல்(பிறவினையில்குழித்தல்).
குழிநாவல் - ஓர்மரம்.
குழியம் - திரட்சி.
குழு- கூட்டம். (இச்சொல்லை முதனிலையாகக்கொண்டு குழீஇயது குழீஇ குழீஇய முதலிய வினைச்சொற்கள் பிறக்கும்).
குழுமுதல்-கூடுதல்,*முழங்குதல். (மதுரைக் ௬௧௭).
குழூஉ - கூட்டம்.
குழூஉக்குறி- ஒவ்வோர் கூட்டத்தாரால் வழங்கப்படுங்குறிப்புச்சொல்.
குழை-காது, குண்டலம்,சேறு, நெய் தனிலம், காடு, சங்கு, துளை, துளையுடைப்பொருள், தளிர், ஊதுகொம்பு, ஆகாயம்.
குழைச்சு - ஆயுதங்களின்கழுத்து, (மரத்துளையுட்செலுத்துங் காம்பினடி).
குழைதல் - நெகிழ்தல்,வளைதல்,வாடுதல்.

குழைத்தல்- தளிர்த்தல், நெகிழ்வித்தல், பல பொருள்களை ஒன்றாய்ச் சேர்த்துப் பிசைதல்.
குளகம்- பலசெய்யுள்ஒருவினைகொண்டு முடிதல், குற்றெழுத்துத் தொடர்ந்த செய்யுள், மரக்கால்.
குளகு- விலங்குகளுண்ணும்இலைவகை.
குளக்கோட்டன் - திரிகோணமலையிலிருந்த ஓரரசன்.
குளநெல்- ஓர்சாதிநெல்.
குளம்- தடாகம், நெற்றி, வெல்லம்.
குளம்பு- விலங்கின்காலிற்குளம்பு.
குளவஞ்சி- ஓர்மரம்.
குளவி- காட்டுமல்லிகை, மலைப்பச்சை.
குளவிந்தம்- ஓர்வகைமஞ்சள்.
குளறுதல்- உளறுதல்.
குளிகன்- ஓர்பாவனுக்கிரகம், வாரங்க டோறும் அந்தக் கிரகத்தினுடைய தாய்வருங் காலம், அட்ட நாகங்களு ளொன்று.
குளிகை- மாத்திரை.
குளித்தல்- நீராடுதல், மறைதல்
குளியம்- மருந்து.
குளிரி- நீர்க்குளிரி, பீலிக்குஞ்சக்குடை.
குளிர் - குளிர்ச்சி, பனிக்காற்று, குடை, அரிவாள், இலைமூக்கரிகத்தி, மழு, நண்டு, கர்க்கடகராசி, மீனெழுங்கு, கவண், கிளிகடி கருவி, (தழலுந் தட்டையுங் குளிரும் பிறவும்; குறிஞ்சிப். சஉ), முழவு, குடமுழா.
குளிர்தல்- குளிருதல், தங்குதல்(சிந்தா)
குளிறுதல்- ஒலித்தல், எடுத்தலோசையாய்ச்சத்தமிடல்.
குளீரம்- நண்டு, கர்க்கடகராசி.
குள்ளம்- வஞ்சகம், குறுமை.
குறங்கு- தொடை.
குறங்குசெறி - பெண்கள்தொடையிற் செறிக்கும் ஆபரணம்.
குறடு- அடைகல், திண்ணை, பலகை, மிதியடி, கம்மியரது கருவியுளொன்று. அச்சுக்கோக்குமிடம்( சிறுபா உ௫உ)
குறட்டாழிசை- குறள்வெண்பாவினங்களுளொன்று.
குறட்டை- நித்திரையிற் சிலருக்குண்டாகுங்குறுகுறுப்பு.
குறத்திப்பாட்டு- நாடகத்தமிழாற்குறத்தியைக்குறித்துப்பாடும் ஓர்வகை நூல்.
குறவஞ்சி- குறத்திப்பாட்டு.
குறவர் வேடுவர். (குறிஞ்சிநிலமாக்கள்)
குறளடி- இருசீரான்வரும்அடி.
குறளன்- குறியவன்.
குறளி- குட்டினி, குறியவள், காணுதவழிப்பிறரையிகழ்ந்து பேசுதல், ஓர் பிசாசு.
குறளை- கோள்வசனம், செல்வச்சுருக்கம். (திரிகடு).
குறள் - குறியவடிவம், குறியவன், திருவள்ளுவர்செய்தநீதிநூல், பூதம்.
குறள்வெண்செந்துறை- குறள்வெண்பாவினங்களுளொன்று.
குறள்வெண்பா- இரண்டடியுடையதாய் ஒருவிகற்பத்தாலேனும் இருவிகற்பத்தாலேனும் வரும்பா.
குறுவுதல்- ஒடுங்குதல்.
குறி - அடையாளம், ஆண்பெண்களின் குறி, அம்பெய்தல் முதலிய வற்றாற் பார்க்கும்இலக்கு, அறிவு, எண்ணம், விருப்பம், தலைவனுந்தலைவியும் புணர்தற்குக்குறித்துப்பேசிய தனியிடம், ஓர்வகைச்சோதிடம், சகுனம், ஓசை, முறை, (ஒருகுறிகேட்போனிருகாற்கேட்பின்; நன்னூல்).
குறிக்கொளல் - கிரகித்தல். அவதானித்தல், ஒரேசிந்தனைவாயிருத்தல்.
குறிக்கொள்வோர் - கற்றநூல்முதலியவற்றைப் பாராயணஞ்செய்வோர்.
குறிஞ்சி- ஊர், குறிஞ்சிநிலத்தூர்.
குறிஞ்சா- ஓர்கொடி.
குறிஞ்சி - ஓர்பண், மலைசார்ந்தநிலம், குறிஞ்சிமரம், செம்முள்ளி, மருதயாழ்த்திறம்.
குறிஞ்சித்திணை - மலையும் மலைசார்ந்தநிலமும்.
குறிஞ்சிவேந்தன் - முருகக்கடவுள்.
குறித்தல் - வரையறுத்தல். சுட்டுதல், விரும்புதல், நிந்தித்தல்.
குறிப்புவினை -குறிப்பால் வினையாய்நிற்குஞ்சொல்.
குறிப்பெச்சம்- செய்யுள்முதலியவற்றில் குறிப்பினுற் சிலசொல் எஞ்சிநிற்றல்
குறில் - குற்றெழுத்து, குறளானபொருள்.
குறுகலர்-பகைவர்.
குறுகுதல் - அணுகுதல், அடைதல், குறுமையாதல், சுருங்குதல்.

குறுகுழப்பு- குறட்டை.
குறுக்கம்- எழுத்துமுதலியவைகள் மாத்திரைமுதலியவற்றிலிருந்து குறுகுதல்.
குறுக்கு- ஊடு, விட்டஅளவு, பக்கத்திசை.
குறுக்கை- அட்டவீரட்டத்துள் ஒன்றாகியசிவதலம்.
குறுக்கையர்- வேளாளருளொரு பகுதியார். (பெரியபு திருநா கடு).
குறுங்கண்- சாளரம்.
குறுங்கலி - கலித்தொகை யென்னும் நூல், வேறு மகளிரைவிரும்பிய தலைவனுடைய காதல் கெடும்படி போதித்தல், பாலையாழ்த் திறங்களுளொன்று
குறுணி - ஓரளவு, நெருங்கியஅரிசி. (குறுணியென்பர் பிங்கலர்).
குறுதல் (குற்றல்)- குத்தல், வாங்குதல், கயிறுகுறுமுகவை· (பதிற்), மல்லர்முதலியவற்றைப்பறித்தல்.
குறுத்தல்- குறளாதல்.
குறுந்தடி - பறைமுதலியவற்றையடிக்குந்தடி.
குறுந்தறி- போதிகை.
குறுந்தொகை - ஓர் நூல், (குறளடிச்செய்யுளாற் றொகுக்கப்பட்டமையின் இப்பெயர்த்தாயிற்று).
குறுமகள்- மனைவி.
குறுமக்கள்- புத்திரர்.
குறுமல்- துகள்.
குறுமுனி- அகத்தியன்.
குறுமை- குறட்டன்மை, சிறுமை.
குறும்பர்- குறுநிலமன்னர், வேடர்.
குறும்பறை- பெடைப்பட்சி. (உயர்நிலை மாடத்துக்குறும்பறையசைஇ; புறநா. கூஎ).
குறும்பி (குரும்பி) - புற்றாஞ்சோறு.
குறும்பிடி- உடைவாள்.
குறும்பு - அரண், பகை, பொல்லாங்கு பாலைநிலத்தூர், குறும்பர்சாதி, வலி
குறும்பூழ்- காடை.
குறும்பொறி- உதரபந்தனம். (திருமுருஉகரு).
குறும்பொறை- காடு, சிறுமலை, குறிஞ்சிநிலத்தூர்.
குறும்பொறைநாடான்- முல்லைநிலத்தலைவன்
குறுவாழ்க்கை- தரித்திரம்.

குறை- குறைவு, குற்றம், ஆற்றிடைக்குறை, சேடம், தரித்திரம், துண்டு, ஆறும்வேற்றுமை.
குறைக்கோள்- குறையிரத்தல்.
குறைதல் - எஞ்சுதல், கெடுத்தல், எஞ்சுவித்தல்.
குறையுடல்- தலையற்றவுடல்.
குற்சை- இகழ்ச்சி, அருவருப்பு.
குற்பம்- பரடு. (காலின்கீழ்ப்பொருத்து).
குற்றங்களில்லான்- அருகன்
குற்றம்- தீங்கு, பிழை.
குற்றம் ௩ - காமம் வெகுளி மயக்கம் என்பன.
குற்றாலம்- ஓர்சிவதலம்.
குற்றி- தறி.
குற்றுதல்- குத்துதல், நெரித்தல்.
குற்றேவல்- அடித்தொண்டு.
குனிதல்- வளைதல்.
குனித்தல் - வளைத்தல், கூத்தாடல், கூத்தின்விகற்பம்.
குன்றம்- மலை.
குன்றல்- குறைதல், கெடுத்தல்.
குன்றவாணர்- வேடர்.
குன்றவில்லி- சிவன்.
குன்றி - குன்றிக்கொடி, குன்றிமணி, குன்றிமணியெடை.
குன்று- சிறுமலை, பக்கமலை, சதயநட்சத்திரம்.
குன்றெறிந்தோன்- முருகக்கடவுள்.

## கூ

கூகனம்- பெரியோர்முன் சொல்லத்தகாத சொல். (இடக்கர்).
கூகை- பெருங்கோட்டான்.
கூசனம்- அழைத்தல், இசைத்தல்.
[கூசா- ஓர்வகைச்சலபாத்திரம்].
கூசிதம்- ஒலி.
கூசுதல் - கண்கூசுதல், நாணுதல்· குலைதல்.
கூட (இடைச்சொல்)- ஒருங்கு.
கூடசதுக்கம்- ஓர்வகைச்சித்திரகவி.
கூடசன்- தந்தையின்னனென்றறியப்படாத சோரபுத்திரன்.
கூடசாலன்- ஓர் நரகம்.
கூடத்தன்- விகாரமற்றவன்.
கூடபாதம்- பாம்பு.

கூடம்- வீடு, மலையினுச்சி, *கோபுரம், கொல்லன்சம்மட்டி, மறைவு, பொய், இரகசியம், வஞ்சகம், கூட்டம், மழுங்கிசையென்னும்நரம்பிசைக்குற்றம்.

கூடல்- மதுராபுரி, மாமுதலியவற்றின் செறிவு, கழிமுகம்.

கூடற்கோமான்- பாண்டியன். [கூடு

கூடாரம்- பந்தர், படாமாளிகை. நெற்

கூடார்- பகைவர்.

*கூடிலி- தசைதின்போன்.

கூடு - உறை, பறவைமுதலிய வற்றின் கூடு, உடம்பு, நெற்கூடை,

கூடுதல்- அதிகமாதல், குழுமுதல், சந்தித்தல், இயலுதல், சேர்தல், புணர்தல்,

கூடை- பிரம்புமுதலியவற்றாற்பின்னியகூடை, கூத்தின்விகற்பம். (சிலப்).

கூட்டமை- கறிவர்க்கம்.

கூட்டம்- சங்கம், சினேகம், சினேகிதர், திரள், புணர்ச்சி, மலையினுச்சி.

கூட்டரவு- கூட்டம்.

கூட்டாளி- தோழன், பங்காளி.

கூட்டு- சினேகம், கலப்பு, அரையிற்கூட்டி, (கடிசூத்திரம் போல நூலால் செய்யப்பட்டது), மண்திரள், (சிந்தா. கொள்ளை.

கூட்டுணல்- கொள்ளைகொண்டுண்ணுத

கூண்டு- பறவைக்கூடு. [ல்.

கூதல்- குளிர்.

கூதளம்(கூதாளம், கூதுளம்) -கூதாளிச்செடி.

கூதிர்- குளிர், குளிர்காற்று, காற்று, கூதிர்க் காலம், (ஐப்பசி கார்த்திகை மாதங்கள்).

கூதை- காற்று. (திவா க. ௨0)

கூத்தன்- நாடகக்காரன், சிவன், உயிர்.

கூத்தி- நாடகக்கணிகை, பரத்தை.

கூத்து- நடனம்.

கூந்தலின்.ஐம்பான்முடி- முடி குழல் தொங்கல் பனிச்சை சுருள் என்பன.

கூந்தல்- பெண்மயிர், மயிர், மயிற்றோகை, *குதிரைப்பிடர்மயிர்.

கூந்தளம்பாவை- ஓர்பூ. (சிந்தா).

கூந்தற்பனை-ஓர்மரம்.

கூந்தற்பூகம்- ஓர்வகைக்கமுகு. (இராமா வரை ௪௨).

கூபம்(கூவம்)-கிணறு.

கூப்பிடுதல்- அழைத்தல், கிரட்டொலி.

கூப்புதல்- கைகுவித்தல்.

கூம்பல்- குமிழமரம்.

கூம்பு - தேர்சகொடிஞ்சி, பாய்மரம் முகை.

கூம்புதல்- குவிதல், ஒடுங்கல்.

கூரம்- கொடுமை, பொறாமை.

கூரல்- பறவைகளினிறகு, பெண்மயிர்.

கூரன்- நாய்.

கூரியன்- புதன், கூர்மையுள்ளோன்.

கூரை- சிற்றில், வீட்டிறப்பு, வீட்டின் மேற்பாகம்.

கூர்- காம்பு, கூர்மை, நுனி, நுண்மை, மதிநுட்பம், மிகுதி. [மி

கூர்ச்சம்- தருப்பை, தருப்பைமுடி, குடு

கூர்ச்சாரம்- ஓர்தேசம்.

கூர்தல்- கூர்மையாதல், நுணுகுதல், மிகுதல், வளைதல், (மெய்கூர்ந்தபனியொடு - கலித் ௫௧) விரும்புதல் (இப்பொருளெல்லாமடங்க உள்ளது சிறத்தலென்றார்மண்டலவர்).

கூர்த்தல்- கூர்மையாதல், கோபித்தல், மிகுதல்- செய்தல், சுவைவிகற்பம்.

கூர்ப்பரம் - முழங்கை. (முழங்கைக்கு முன்னெனச்சிந்தா).

கூர்ப்பு- மிகுதி, கூர்மை. (உள்ளது சிறத்தலென்பர் மண்டலவர்).

கூர்மம்- ஆமை, கூர்மபுராணம், திருமாலின் பத்தவதாரங்களுளொன்று.

கூர்மன்- தசவாயுக்களுளொன்று.

கூர்மாசனம்- ஆமைவடிவாக மரத்தினாற் செய்யப்பட்டபலகை.

கூர்மாண்டர்- ஓருருத்திரர். [லப்).

கூர்முள்- குதிரைசெலுத்துங்கருவி. (சி

கூலம- நீர்க்கரை, வரம்பு, குரங்கு, முசு, விலங்கின்வால், கடைவீதி, பல பண்டம், (நெல்முதலாக எண்வகையென்றும பதினறுவகையென்றும்பிறவாறுங்கூறுவர்), பணிகாரம், பாகற்கொடி, காரமணிப்பயறு.

கூலம் ௮- நெல்லு புல்லு வரகு தினை சாமை இறுங்கு தோரை மூங்கினெல் என்பன.

கூலம் ௧௬- நெல்லு புல்லு வரகு தினை சாமை இறுங்கு தோரை கேழ்வரகு எள்ளு கொள்ளு பயறு உழுந்து அவரை கடலை துவரை மொச்சை என்பன.

கூலி- வேலைக்காகக் கொடுக்கும்பொருள். (சம்பளம்).
கூவல்- கிணறு.
கூவணூல்- கீழ்நீர்க்குறியறிசாத்திரம்.
கூவியர்- சமையற்காரர், அப்பவாணிகர்.
கூவிரம்- கூவிரமாம்; (குறிஞ்சிப் சு சு), தேர்க்கொடிஞ்சி, தேர், தேரிற்கட்டுங்கொடி, வில்வமரம்.
கூவிளம்- வில்வமரம், யாப்பிலக்கணத்தில் நேர் நிரையென்னும் வாய்பாடு.
கூவிளி- அழைப்பு.
கூவிளை- வில்வமரம். [டல்.
கூவுதல்- அழைத்தல், கூ என்றுசத்தமி
கூவை - கூவைக்கிழங்கு, (மதுரை கசஉ),திரள், (கொடுவிற்கூளியர்கூவைகாணில்; மலைபடு சஉஉ).
கூழா- நறுவிலிமரம்.
கூழை - இறகு, பின்னணி, யாப்பிலக்கணத்தில் இறுதிச்சீரொழிந்தவனைச்சீர்கள், (கூழைமோனை கூழையெதுகை முதலியன) குறள், *நெல்லு, பெண்மயிர், பேரணி, மயிர்ரேகை, நடு.
கூழ்- நெல், அரிசி, உணவு, சோறு, மாவினுற்காய்ச்சியகூழ், பயிர், பொன், (பொருள்).
கூளம் - குப்பை.
கூளி - எருது, பொலியெருது, பேய், பூதம், வலிமை, படைத்தலைவன், குற்றம், கூட்டம், சுற்றம்.
கூளியர் - படைவீரர், ஆறலைகள்வர், சேவித்துநிற்போர், பூதகணவீரர், நாடுகாப்போர், (மலைபடு சஉஉ), குறவர், கொலையாளர், சினேகர்.
கூறு- பங்கு, பாதி, துண்டு,
கூறுசெய்தல் - பங்கிடுதல் பிரித்தல்.
கூறுதல் - சொல்லுதல், விற்றல்.
கூறுபாடு - வகை.
கூறை - வஸ்திரம், மணப்புடவை.
கூறைவிகற்பம் கஎ-கந்தை,விரிபம்,கண்டை, பிடியல், வேதகம், புங்கம், பங்கம், கத்தியம், தூரியம், சிற்றில், நாகம், பாரி, பாளிதம், காம்பு, நேத்திரம் மயிரகம் வயிரியம் என்பன.
கூற்றம் (கூற்று)- யமன், சொல், பகை, கொலைத்தொழில்.
கூற்றன் - யமன், காலன்.
கூனல்- வளைதல்.
கூனி - மந்தரை, மாதவியின்தோழி(மணிமே).
கூனிரும்பு - அரிவாள்.
கூனை - கருப்பஞ்சாற்றைக்காய்ச்சுங்கூன் (தனிப்).
கூன் - வளைவு, முதுகுவளைந்தோர், செய்யுளின் முதலில்வருந்தனிச்சொல், கருப்பஞ்சாற்றைக்காய்ச்சுங்கூன்
கூன்பாண்டியன் - ஓர்பாண்டியன்.
கூன்வாள் - அரிவாள்.

## கெ

கெச்சை - சிறுசதங்கை.
கெஞ்சுதல் - இரந்துகேட்டல்.
கெடலணங்கு - மூதேவி.
கெடவரல் - மகளிர்கூட்டம், மகளிர் விளையாட்டு.
கெடிலம் - ஓர்நதி.
கெடு - வறுமை, கேடு.
கெடுதல் - கெட்டுப்போதல், பழுதுறல், இழத்தல், நிலைகெடுதல்.
கெடுதி - இழந்தபொருளைக்குறித்து ஆராயுஞ்சோதிடம், கேடு.
கெடுத்தல் - கெடச்செய்தல்.
கெடும்பு - கேடு.
கெண்டிகை - கெண்டி. (கரகம்).
கெண்டுதல் - வெட்டுதல், கிண்டுதல்.
கெண்டை- கயல்மீன், சேல்மீன், முழங்காலின்கீழுள்ள உறுப்பு.
கெவுளி - பல்லி.
கெழுதகை - உரித்து.
கெழுதல் - பிரகாசித்தல், பொருந்தல்.
கெழுமல் - பொருந்தல்.
கெழுவுதல் - மயக்கம், பற்று, (நிகண். கக)
கெளிறு - ஓர்மீன்.

## கே

கேகயம் - மயில், அசுணமா, கிசு தேசங்களுளொன்று, ஓர்பண், மயிர்ரேகை.
கேகை- மயிற்குரல்,
கேசம்- மயிர், கூந்தல், குடுமி.
கேசரம் - பூந்தாது, மகிழமரம், வண்டு.
கேசரர் - வித்தியாதரர்.
கேசரி - சிங்கம், ஆசனவகைகளுளொன்று. (பீசத்தின் கீழ்சீவினி

யிடத்துப் பாட்டைவைத்து இட முழங்கையை முழங்காலில்வைத்து அங்குலிகளைவிரித்துநாசியைப்பார்த் திருத்தல்.

கேசரியோகம் - சோதிட நூல்களிற் சொல்லப்படும் ஓர்சுபயோகம். சந்திர னுக்குக் கேந்திரத்தில் வியாழனிற் பது).

கேசவம் - பெண்வண்டு.

கேசவற்குத்தோழன் - அருச்சுனன்.

கேசவன் - திருமால், *சோழன்.

கேசாதிபாதம் - முடிமுதலடிவரையாக உறுப்புக்களைக் கலிவெண்பாவால் வருணிக்கும் பிரபந்தம்.

கேடகம்- பரிசை, மரப்பலகை. சிற்றூர் அல்லது மலைசெறிந்தவூர், (இப்பொ ருளிற் கேடம்எனவும்), பகைமேற் சென்றோருறைவிடம். [சாவு.

கேடு - அழிவு, சிதைவு, தீங்கு, வறுமை,

கேட்டல் - காதாற்கேட்டல், வினவுதல் நூற்கருத்துக்களைக் கேட்டுணர்தல்.

கேட்டுமுட்டு - கேட்கத்தகாத தெய்வ நிந்தை முதலியவற்றைக் கேட்டலால் வரும் அசுத்தம்.

கேட்டை - ஓர்நட்சத்திரம், மூதேவி.

கேணி- அகழி. நீர்நிலைவகைகளுளொன் [று.

கேண்மை - அன்பு, நட்பு.

கேதகி (கேதகை) - தாழை.

கேதம் - குற்றம், துன்பம்.

கேதல் (கேதுதல்) - அழைத்தல்.

கேதனம் - கொடி.

கேதாரம்- வயல், உத்தரதேசத்திலுள்ள சிவதலங்களுளொன்று, மயில்.

கேது- ஓர் கிரகம், அடையாளம், துகிற் கொடி.

கேதுமாலம்- நவகண்டங்களுளொன்று.

கேதுரு - ஓர் வாசனைமரம்.

கேத்திரசன் - கணவனின்சகோதரன் முதலானோர்க்குப் பிறந்தபிள்ளை.

கேத்திரஞ்ஞன் - ஆன்மா.

கேத்திரபாலன் - வைரவக்கடவுள்.

கேத்திரபிண்டம் - புண்ணியதலத்திற்பி திரர்க்கிடும்பிண்டம்.

கேத்திரம்- பூமி, விளைநிலம், புண்ணிய தலம், உடல், மனைவி.

கேதிபாதம் - நாவாய்த்துடுப்பு.

கேந்திரம்- இலக்கினமும்நான்குமேழும் பத்தும் ஆகிய இடங்கள், வட்டத்தின் மையம்.

கேயம்- அகழி, இசைப்பாட்டு.

கேயூரம் - தோளணி.

கோளம்- ஓர்தேசம், கோளபாஷை, ஓர் சோதிடநூல்.

கோளன் - சேரன்,

கேலி (கேளி) - மகளிருடன் ஆடவர் செய்யுங்கிரீடை.

கேவணம்- ஆபரணங்களில் இரத்தினம் பதித்தற்கமைக்கப்பட்டிருக்குங்குழி.

கேவலம்- தனிமை, சிறுமை, மோட்சம்

கேழல் - பன்றி, குளநெல். (சிந்).

கேழ் - உவமை, ஒளி, நிறம். (கெழுஎன் னுமுரிச்சொல்லின்விகாரம்).

கேழ்வரகு - குரக்கன்,

கேளா - வாளா. (விருதா).

கேளார் - பகைவர், சொற்கேளாதவர், செவிடர்.

கேளிதம் - பெருங்கல்.

கேளிர் - சுற்றத்தவர், சிநேகர்.

கேள் - சுற்றம், சிநேகம்.

கேள்வன் - நாயகன்.

கேள்வி - காது, கல்வி, வினா.

## கை

கை - கையென்னும்உறுப்பு, இடம், கை கொள்ளத்தக்கஓரளவை, பக்கம், தொழில், படைவகுப்பு, முறை, அலங் காரம், ஒழுங்கு, ஒழுக்கம், சிறுமை, (உ-ம்: கைமரம், கைவாள், கைவிட் டம்), தங்கை, செயல், படைகளின் காப்பு (சிந்தா).

கைகடத்தல்-தன்னிடத்திருந்து தவறிப் பிறன்கையிற்போதல்.

கைகலத்தல் - இருபகுதியான சேனை முதலியனகலந்துசண்டைசெய்தல்.

கைகவித்தல் - அமையுமென்பதைக்காட் டுங்குறி.

கைகாணல் - அனுபவப்படுதல்.

கைகுவித்தல் - கும்பிடுதல்.

கைகூடுதல் - சித்தியாதல்.

கைகூப்பல் - கும்பிடுதல்.

கைகேயி (கைகேசி) - பரதனுடையதாய்.

கைகொடுத்தல் - உதவிசெய்தல்.

கைகோத்தாடல் - குரவை.

கைகோள் - ஒழுக்கம்.

[கைக்கடன் - நம்பிக்கையிற்கொடுக்குங்கடன்].
கைக்கட்டி - போர்க்குச்செல்வோர்கையில் ஆயுதம்முதலியன உறுத்தாவண்ணங்கட்டும் தோற்கட்டு.
கைக்காணி - காணிக்கை.
கைக்கிளை - எழிசைகளுளொன்று, அகப்பொருளின் ஒருதலைக்காமம், இதனை ஐந்துவிருத்தத்தாற்கூறும்பாடல், (இருபத்தைந்து விருத்தத்தாற்கூறுவதுமிப்பெயர்க்கு).
கைக்குறி - ரேகைசாத்திரம்.
கைக்கூலி - பரிதானம்.
கைக்கொள்ளுதல் - அங்கீகரித்தல், கவர்தல்.
கைக்கோல் - கொடிறு. (குறடு)
கைங்கரியம் - தொண்டு.
கைசெய்தல் - அலங்கரித்தல்.
கைச்சரி - பரியகமென்னுமணி.
கைச்சாத்து - கையொப்பம்.
கைச்சிறை - கைக்கவசம்.
கைடவன் (கயிடவன்) - ஓரசுரன்.
கைதரல் - உதவிசெய்தல்.
கைதவம் - துன்பம், வஞ்சகம்.
கைதவன் - பாண்டியன்.
கைதை - தாழை, விளைநிலம்.
கைதொடல் - உண்ணல்.
கைத்தலம் - உள்ளங்கை.
கைத்தல் - வெறுத்தல், கோபித்தல், கசத்தல், செலுத்தல் (சிங்).
கைத்தாய் - செவிலித்தாய்.
கைத்து - செல்வம், பொன், வெறுப்பு.
கைபடிதல் - திருந்துதல்.
கைபோதல் - தேர்ச்சியடைதல்.
கைப்பற்றல் - விவாகஞ்செய்தல், கவர்தல்.
கைப்பு - கசப்பு.
கைப்புடை - கைக்கட்டி.
கைமணி - தூபமணி, சிறுமணி.
கைமாறு - பிரதிஉபகாரம்.
கைமிகல் - அதிகப்படல்.
கைமீன் - அந்தநட்சத்திரம்.
கைமை (கைம்மை) - கைம்பெண், சிறுமை (மணிமே)
கைம்பெண் - அமங்கலி.
கைம்மா - யானை.
கையடம் - பாணினீயவியாகரணத்துக்குக்கையடராற்செய்யப்பட்ட வியாக்கியானம்.
கையடை - அடைக்கலம்,
கையரிகொள்ளல் - தேடல், கவர்த்தல்.
கையர் - அஞ்ஞானிகள், கீழ்மக்கள்.
கையறம் - கெடும்படிபாடும்பாட்டு. (இதனைக் கலிப்பாவாலும் வஞ்சிப்பாவாலும் பாடலாகா).
கையறல் - செயலறல், கைப்பொருளறல், ஒழுக்கந்தவறல், உதவியின்மை.
கையறவு - துன்பம், மிடிமை.
கையறுநிலை - பரிசில்பெறும் விறலியர் முதலாயினோர் தமது செயலறுநிலையைக்கூறும் பாடல்.
கையாருதல் - களவுசெய்தல்.
கையை - தங்கை.
கைரிகம் - காவிக்கல்
கைவருதல் - தேர்ச்சிஅடைதல்.
கைவல்லியம் - மோட்சம், ஒருபநிஷத்து.
கைவல்லோர் - கைப்பழக்கமுடையோர்.
கைவாங்குதல் - உறவாக்கல், (திரிகடு)
கைவாரம் - வாழ்த்து.
கைவினைஞர் - கம்மாளர்.
கைவேல் - கப்பணம்.

## கொ

கொக்கரித்தல் - பெருமகிழ்ச்சி வீரம்முதலியவற்றுற்கர்ச்சித்தல், கோழிமுதலியபறவைகள் சத்தமிடல், விளித்தல். (சிங்).
கொக்கரை - ஓர் வாத்தியம், வலம்புரிச்சங்கு.
கொக்கி - கொழுவுதடி, ஆபரணங்களினோருறுப்பு.
கொக்கு - ஓர்பறவை, செந்நாய், மாமரம், மூலநட்சத்திரம், குதிரை.
கொக்குவாய் - கொக்கி.
கொக்கை - கொழுவுதடி.
கொக்கோகம் - பெண்களுடன் கூடுதலைக்கூறும் நூல்.
கொங்கணம் - (கொங்கம், கொங்கு) - மலையாளக்கரையிலுள்ள ஓர்தேசம், (சிலப்), கொங்கபாஷை.
கொங்கணர் - ஓர்சித்தர், (காஞ்சி வீராட்டு). கொங்கதேசத்தார்.
கொங்கன் - சேரன்.
கொங்கு - வாசனை, தேன், கள். பூந்தாது, கொங்கதேசம்.
கொங்கை - முலை, மரக்கணு.

கொச்சகம் - கொச்சகக்கலிப்பா, திருந்தாதமொழி, இழிவு, *சீகாழியென்னுந்தலம், (திருஞா தேவார), வெள்ளாடு.
கொச்சி - ஓர் தேசம்.
கொச்சை - ஆடு, வெள்ளாடு, திருந்தாதமொழி, இழிவு, (கொச்சைமக்கள்; வெற்றிவே), சீகாழிப்பதி.
கொஞ்சுதல் - மழலையாய்ப்பேசுதல், முத்தமிடுதல், மெல்லெனஒற்றுதல், மெல்லெனஒலித்தல். (பாரத அருச்சுனன் றவநிலை கசஅ).
கொடி-காகம், படர்கொடி, துகிற்கொடி, நீளம், ( ஐங்குறு ), வாசனை (சூளா), காற்றில்விடும்பட்டம், கேது, ஒழுங்கு.
கொடிக்கவி-உமாபதிசிவாசாரியர் செய்த ஓர் சைவசித்தாந்தநூல்.
கொடிக்கொத்தான்- கொத்தான்கொடி.
கொடிச்சி - குறிஞ்சிநிலப்பெண்.
கொடிஞ்சி - தேர்க்கூம்பு, தேர்.
கொடிப்படை - முன்னணிச்சேனை.
கொடிப்பாலை - ஓரிசை. (பெரி ஆனாய உ௫).
கொடிப்புல் - அறுகம்புல்.
கொடிப்பூ - நால்வகைப்பூக்களுள் ஒன்று.
கொடிமல்லிகை - மல்லிகை
கொடியன் - தீயவன், கேது.
கொடியாள்கூந்தல் - அம்மையார்கூந்தலென்னுங்கொடி.
கொடிவேலி - ஒருகொடி.
கொடிறு - கதுப்பு, குறடு, பூசம், யானைமதம்பாய்சுவடு.
கொடுகுதல் - குளிரினுலொடுங்குதல்.
கொடுகொட்டி-சிவன்கூத்து. (முப்புரங்களைத்தீயூட்டி இரங்காதுநின்று கைகொட்டியாடுதலின் இப்பெயர் பெற்றது; கொட்டியெனவும் வழங்கும்).
கொடுக்கன் - ஒரு விஷசெந்து.
கொடுக்கு - வால், தேள்முதலியவற்றின் கொடுக்கு, வஸ்திரமணியும்போது பின்னேசெருகுங்கச்சம்.
கொடுங்கண் - கொடுமை.
கொடுங்கை - கொடுமை, தேர்க்கொடுங்கை, வீட்டின்கொடுங்கை.
கொடுங்கோல் - நீதியற்றஅரசியல் (சமனின்றிக்கோடிய துலாக்கோல்போலுதலின் இப்பெயர்பெற்றது).
கொடுத்தல் - ஈதல்.
கொடுநுகம் - மகநட்சத்திரம், கலப்பைமேழி.
கொடுந்தமிழ் - செம்மையற்றதமிழ்.
கொடுந்தமிழ்நாடு கஉ - தென்பாண்டி குட்டம் குடம் கற்கா பூழி பன்றி அருவா அருவாவடதலை சீதம் மலையமானாடு பொங்கர்நாடு ஒளிநாடு என்பன (மணிமே அரும்பத; நன்னூலுரையில் பிந்தியஇரண்டும் வேணாடும் புனனாடும்எனக் கூறப்பட்டன).
கொடுப்பு - கதுப்பு.
கொடுமரம் - வில், தனுராசி.
கொடுமுடி - மலையினுச்சி, கோயில்முதலியவற்றின் சிகரம்.
கொடுமை - பொல்லாங்கு, வளைவு.
கொடும்புலி - சிங்கம், சிங்கராசி.
கொடுவரி - புலி.
கொடுவாய் - புறங்கூறல்.
கொடுவாள் - அருவியறுக்கும்வாள்.
கொடூரம் - கொடுமை.
கொடை - ஈகை.
*கொடைக்கை - முகடு.
கொடைமடம் - வரையாதுகொடுத்தல்.
கொடையாளி - கொடுப்பவன்.
கொட்குதல்- சுழலுதல், உலாவுதல்,சூழ்துவருதல். (புறநா சங).
கொட்டகை - கொட்டில்.
கொட்டடி - செல்முதலியன கொட்டிவிற்குமிடம்.
கொட்டம் - பொல்லாங்கு, கொட்டை. (சிறுபா கஙங).
கொட்டாரம் - நெற்சேர்க்குமிடம் (சிவதரு).
கொட்டாவி - வாயினுல்வரும் ஓர்வகைச் சுவாசம்.
கொட்டி - ஓர்நீர்ப்பூடு, கொடுகொட்டியாடல், தாளம், (திரிகடுகம் ௬௭),முருகனுடல்.
கொட்டியம் - எருது.
கொட்டில்-கொட்டகை. (தணிகை நகர உச).
கொட்டு - உட்டுளையான மரத்துண்டு, தாளத்திலோர்வகை, (சிலப் உரை), பறை, முழக்கம், மண்வெட்டி (பெரி தண்டி கo).
கொட்டுதல்- அமுக்குதல், சொரிதல்.

அப்புதல், வாத்தியமுதலியவைகளில் தாளம்போடுதல், தேள் முதலியவை கள்குத்தல், அடித்தல்.
கொட்டுப்பிடி- கொட்டாப்பி.
கொட்டை - வித்து, அரைச்சதங்கை, (பெரி சிறுத் சுO), திரளமுடிந்தமுடி, (பொருநராற்றுப்படையில் கொட்டைக்கரைய பட்டுடைநல்கி என்பதற்குத் திரளமுடிந்த முடிகளைக் கரையிலே யுடையபட்டென்றார் நச்சினார்க்கினியர்), தலையணை, காதணிகளுளொன்று.
கொட்டை முந்திரிகை- ஓர்மரம்.
கொட்பு- சுழற்சி, மனத் திரிபு, (திருக் நட்பு க), வளைவு, சூழ்ந்துவருதல், கொள்கை (மணிமே), உலாவுகை.
கொணர்தல் - கொண்டுவருதல்.
கொண்கன்- கணவன், தலைவன், நெய்தனிலத்தலைவன்.
கொண்டல் - கீழ்காற்று, மேகம்.
கொண்டல்வண்ணன் - திருமால்.
கொண்டல்- மெச்சுதல், பாராட்டுதல்.
கொண்டான்- கணவன்.
கொண்டி - உணவு, (கொள்ளப்பட்டுவதென்பதுபொருள்; மதுரைக் காஞ்சி) கொள்ளுதல்(மணிமே), கொள்ளை.
கொண்டிமகளிர் - விலைமகளிர்.
கொண்டியம் - புறங்கூறல்.
கொண்டுகூட்டு - பொருள்களுக்கேற்றவாறு செய்யுளிலுள்ள சொற்களைமாற்றிச்சேர்த்தல்.
கொண்டை - மயிர்முடி, மகளிரதுமயிர்முடி களுளொன்று. (பத்தின்முடித்தல்).
கொண்டைக்கிரி- செவ்வழியாழ்த்திறத்துளொன்று.
கொண்மூ - ஆகாயம், மேகம்.
கொதி - சூடு, வெப்பம்.
கொதித்தல் - கோபக்குறிப்பு, நீர்முதலியவற்றைக்காய்ச்சியபோது பொங்குதல்.
கொதுகு — மசகம்.
கொத்தவரை - ஓர் வகைச் செடி.
கொத்தளம்- மதிலுறுப்பு, அரண்.
கொத்தளி- புற்பாயிலோர்வகை.
கொத்தளை- மீனினங்களுளொன்று. (பாரத சூதுபோ கச).
கொத்தா- கொடிவசயையுளொன்று.
கொத்து - நாழியெனுமளவு, பூங்கொத்து, மரக்குலை, வருக்கம்.
கொத்துதல்- நிலமுதலியவற்றைக்கொத்துதல், பறவைகள் அலகினுற்கொத்தல்.
கொத்துமல்லி - ஓர் சரக்கு.
கொத்தை- அஞ்ஞானம் (சங்கற்பநி), பழுது, (சிவதரு).
கொந்தளித்தல் - கிளர்தல்.
கொந்துதல்- ஊனப்படுதல், தணியாக்கோபமுறல்.
கொப்பரி (கர்ப்பரையென்பதன் விகாரம், கொப்பரைஎனவும்)- கடாரம் குடம், [தேங்காய்க்கொப்பரை].
கொப்பளம் (கொப்புளம்)- சரீரத்தில்வருங்குமிழ்ப்பு.
கொப்பளித்தல் - உமிழ்தல், குமிழ்த்தல்.
கொப்பு- மரக்கிளை, மாதர்காதணியுளொன்று, (கொப்படிபாயுங்கண்ணுய்; சிவரக), பெண்களின்மயிர்முடி.
கொப்புளிப்பான் - வசூரிபோன்ற ஓர் நோய்.
கொப்புள் - நீரில் அல்லதுசேற்றில் எழுங்குமிழி, கொப்புளம், கொப்பூழ்.
கொப்பூழ்- உந்தி.
கொம்பன் - ஆண்யானை.
கொம்பு - ஊதுகொம்பு, மரக்கொம்பு, விலங்கின்கொம்பு.
கொம்மட்டி - ஓர் கொடி.
கொம்மெனல்- விரைவுக்குறிப்பு.
கொம்மை - அழகு, திரட்சி, வட்டம், பெருமை, குவிந்ததிடர், அகங்கைகுவித்துக்கொட்டல், கொம்மட்டிக்கொடி, முலை, இளமை, வலி, மார்பு.
கொய்சகம்- நீவி. (உடுக்கும் வஸ்திரத்திற் கொய்துவிடுந்தலைப்பு).
கொய்தல்- அரிதல், கத்தரித்தல், ஆய்தல், வஸ்திரத்தைக்கொய்தல்.
கொய்யடிநாரை- ஓர் நாரை.
கொய்யா - கொய்யாமரம்.
கொய்யுளை -குதிரை. (கொய்யப்பட்டபிடர்மயிரையுடையதென்பது பொருள்.
கொலு - உல்லாசமானஇருப்பு.
கொலை -கொல்லுதல்.
கொலைஞர்- கொலைப்பாதகர், சண்டாளர், வேடர்.
கொல் - அசைநிலை, ஐயம், வருத்தம்,

*கதவுத்திறப்பு, கொற்றொழில்.
கொல்லம்- ருகூ தேசங்களுளொன்று.
கொல்லர் - கம்மாளர். இரும்பு வேலை செய்வோர்.
கொல்லல்- அழித்தல், கெடுத்தல், வருத்துதல்.
கொல்லாவேதன் - அருகன்.
கொல்லி - ஓர்பண், ஓர்மலை.
கொல்லியம்பாவை- கொல்லிமலையிலுள்ள ஓர்பாவை. (கண்டவுடன் மயக்கிக் கொல்லுவது; இரரு குச உரு).
கொல்லிவெற்பன் - சேரன்.
கொல்லை - தோட்டம், முல்லை நிலம், வீட்டின்பின்புறம்.
கொவ்வை - கொவ்வங்கொடி.
கொழிஞ்சி - கொழிஞ்சிமரம், பூவாது காய்க்குமரம்.
கொழித்தல் - தெரிந்தெடுத்தல், தெள்ளுதல், வார்த்தல், தொனித்தல்.
கொளிப்பு- குற்றம், சங்கிரகம்.
கொழு - கலப்பைக்கொழு, நுனிவளைவுள்ளகருவி.
கொழுகொம்பு- கொடிகள்படர்தற்காதாரமான கொம்பு.
கொழுதல் - உழுதல்.
கொழுத்தல் - செழித்தல்.
கொழுநன் - நாயகன், தலைவன், எப்பொருட்குமிறைவன்.
கொழுந்தன் - மணவாளனுடையசகோதரன்
கொழுந்தி- சகோதரன்மனைவி
கொழுந்து - இளங்கிளை, தீச்சுவாலை.
கொழுந்துதல் - சுவாலித்தல்.
கொழுப்பு - நிணம், கொழுமை.
கொழுமை - செழிப்பு, இளமை, அழகு, (பொருந உகூ), நிறம்
கொளுச்சொல் - கருத்து.
கொளுத்து- யாக்கையின்பொருத்து.
கொளுத்துதல் - தீமுதலியவற்றைப் பற்றச்செய்தல்.
கொளுவுதல் - பற்றச்செய்தல்.
கொளை - ஒற்றறுப்பு, இசைப்பாட்டு.
கொள் (கொள்ளு) - ஓர்தானியம்.
கொள்கலம் - பாத்திரம்.
கொள்கை - கோட்பாடு, ஏற்றல், குணம், விரதம்.
கொள்வோன் - மாணுக்கன், விலைக்கு வாங்குவோன்.
கொள்ளம்- குழைசேறு.
கொள்ளல் - ஏற்றுக்கொள்ளுதல், கைக்கொள்ளுதல்.
கொள்ளார் - பகைவர்.
கொள்ளி - நெருப்புறுவிறகு.
கொள்ளிடம் - ஓராறு.
கொள்ளிவாய்ப்பேய் - நெருப்புக்காலும் ஆவி.
கொள்ளை - கூட்டம், பெருங்களவு, விலை, (மதுரைக் உருகூ), நாகரவண்டு.
கொறி - ஆடு, செம்மறியாடு, மேடராசி.
கொறித்தல் - பற்களால் கொரித்தல்.
கொறுக்கச்சி - கொறுக்கைப்புல்.
கொறுக்கை - ஓர்தலம், குறட்டை, கொறுக்கைமரம், நாணற்புல்.
கொற்கை - ஓரூர். (மதுரைக்குத் தெற்கிலுள்ளது; சிறுபா கூ௨).
கொற்றம் - அரசியல், வெற்றி, வலி, எல்லை,
கொற்றவள்ளை- பகைவர் நாட்டையழித்தல்.
கொற்றவன் - அரசன், வெற்றியுடையோன்.
கொற்றவை - துர்க்கை, வீரலக்குமி, உமை.
கொற்றி - காடுகாள், துர்க்கை, பசுவிளங்கன்று.
கொன் (இடைச்சொல்) - அச்சம் பயனின்மை காலம் பெருமை என்னும் பொருள்களைக்குறிக்கும். (உ-ம்: கொன்முனையிரவூர் என்பதில் அச்சம்; கொன்னேகழிந்தன் றிளமை என்பதில் பயனின்மை; கொன்வரல்வாடை நினதெனக்கொட்கேனோ என்பதில் காதலர் நீங்கிய காலமறிந்து வந்தவாடையெனப்பொருள்படுதலின் காலம்; கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சிலமே என்பதில் பெருமை).
கொன்றை - கொன்றைமரம்.
கொன்றைவேந்தன் - ஓர் நீதிநூல்.

## கோ

கோ - அரசன், ஆகாயம், இரக்கக்குறிப்புணர்த்துமிடைச்சொல், திக்கு, பசு, எருது, இடபராசி, மேன்மை, பூமி, பெருமையிற்சிறந்தோன், அம்பு, இடி, வச்சிராயுதம், கண், சூரியகிரணம் சொல், நீர், தேவலோகம், மலை.

கோகணம் - கையார்த்தகரை.
கோகம் - சக்கரவாகப்புள்.
கோகர்ணம் - ஓர்சிவதலம்.
கோகனதம் - செந்தாமரை.
கோகிலம் - குயில், குரங்கு, பல்லி.
கோகு - கழுதை, புயம். (பாரத நிரை சுஅ).
கோகுடி - கோகுடிப்பூ. (குறிஞ்சிப் அக).
கோகுலம் - பசுத்தொழுவம், இடையர்.
கோங்கு - ஓர்மரம்.
கோசகாரம் - பட்டுநூற் பூச்சி.
கோசம் - ஆண்குறி, சிவலிங்கம், பலபண்டம், கருப்பை, (பாரத சம்பவ எஉ), சொற்பொருளையறிவிக்கும் புத்தகம், உறை, (உ-ம்: பஞ்சகோசம்), மதிலுறுப்பு, முட்டை, பொன்முதலிய பலதிரவியங்களையடக்கியிருக்குமிடம்
கோசம் ரு. அன்னமய கோசம் பிராணமயகோசம் ஆனந்தமயகோசம் மனோமயகோசம் விஞ்ஞானமய கோசம் என்பன.
கோசரம்- புலனுக்குவிடயமானது, ஊர், கிரகசார வசத்தாற் சன்மராசியைக்கொண்டு சொல்லுஞ் சுபாசுபம்.
கோசலம்- ருசு தேசங்களுளொன்று.
கோசாவித்திரி - ஓர் மந்திரம். (பசுக்களின் மகிமையைக்கூறுவது.)
கோசிகம்- சாமவேதம், பட்டுவஸ்திரம், வஸ்திரம்.
கோசு- மரக்கலத்தினோர்பக்கம், தெரு.
கோடகம் - குதிரை, நாற்சந்து, புதுமை, சிகரமாய்முடியப்படும்மயிர்முடி, (சிந். முத்தி, ககக, முடியுறுப்புகளுளொன்று.
கோடணை- ஒலி, கொடுமை, யாழ்வாசித்தல், வாத்தியப்பொது, ஒன்றல்லாப் பேரொலி, (இப்பொருளிற் கோசனை எனவும்), விழா.
கோடாம்- மரக்கொம்பு, குரங்கு, குதிரை, சோலை, தேர்மொட்டு, எட்டிமரம்.
கோடல்- வெண்காந்தள், வெண்கிடை, கொள்ளல், மாறுபடுதல், வளைதல், நீதிதவறுதல்.
கோடவதி-யாழ்.
கோடாய்-செவிலித்தாய்.
கோடாலி-(கோடரி)- ஓராயுதம்.
கோடி - நூறிலட்சம், தொகுதி, இளமை, புதுமை, முடிமாலை, முனை, முக்கோணத்திற் புசையினின்று நீளத்தாற் கூடியபக்கம், வீட்டின் பின்பக்கம், வஸ்திரம், இரத்தினத் தொகையில் உO, விற்குனத-
கோடிகம்- வஸ்திரம், செண்டி, பூந்தட்டு, தட்டம், ஆபரணச்செப்பு,
கோடித்தல்- அலங்கரித்தல், (தணிகை. வள்ளி. கக)
கோடியர்-நாடகர்.
கோடீரம்- சடை.
கோடு- ஊதுகோம்பு, யானைத்தந்தம் விலங்கின் கொம்பு, மரக்கொம்பு எழுத்தின் கொம்பு, வஸ்திரக்கரை, கொடுமை, (பதிற்). சங்கு, ரேகை, சூதாடுதற்கு வகுத்த தானம், தவறு, [நீதிமன்றம்], நீர்க்கரை, வரம்பு, பக்கம், பிறை, மலை, மலையினுச்சி, முனை. மேட்டுநிலம், (மதுரைக் உஅசு வஞ்சனை, வளைவு, வீணைத்தண்டு: (நெடுநல்) ⁕மரங்களிலுள்ள காய்முதலியவற்றின் குலை.
கோடை- மேல்காற்று, [கோடைக்கிழங்கு], முதுவேனிற்காலம், வெய்யில் குதிரை, வெண்காந்தள்.
கோட்டகம் - குளம், கோயில், பயிருடைத்தானநீர்நிலை. (சிந்)
கோட்டம் - வளைவு, அழுக்காறு, மாறுபாடு, அறை, பசுச்சாலை, பசுக்கூட்டம், இடம், பகைமேற்சென்றோருறைவிடம், நகரம், நாடு, நற்கந்த முள்ளசெடிவகையுளொன்று, தேவர் கோயில், கரை, குராயரம், சிறைக்கூடம், வீணை, தோட்டம், உண்பன.
கோட்டல்- வளைத்தல், எழுதுதல், செய்தல்
கோட்டாலை - துன்பம்.
கோட்டான்- ஓர்பறவை, கூகை.
கோட்டி - கூட்டம், சபை, கோபுரவாயில், வாயில், துன்பம், உலைவு.
கோட்டுப்பூ - நால்வகைப் பூக்களுள் ஒன்று.
கோட்டுமா - பன்றி, யானை, கொம்புள்ள மிருகம்.
கோட்டை - அரண், காட்டுத்துருக்கம், காடு, இருபத்தொரு மரக்கால்கொண்

ட அளவை.
கோட்பறை- செய்தற்பறை.
கோட்பாடு- கொள்கை.
கோணங்கி- உடலைவளைத்துஆடுவோன்.
கோணமலை- திரிகோணமலை
கோணம்- வளைவு, மூலை, குறுக்கெரு, யானைத்தோட்டி, குதிரை, கூன்வாள், மூக்கு.
கோணல்- வளைவு, மாறுபாடு.
கோணன்- முதுகுவளைந்தவன்.
கோணி- பன்றி, [ஓர்வகைச்சாக்கு].
கோணை- அழிவின்மை. (நைடத நகர கூ௪)
கோண்- கோணம், மாறுபாடு, வஞ்சனை, வளைவு.
கோண்டை (கொட்டை)- இலங்கைதக் [கனி.
கோதண்டம்- வில்
கோதமன்- கௌதமமுனிவரின்பிதா.
கோதா- உடும்பு.
கோதாட்டு - புகழத் தகாதவர்களைப் புகழ்ந்து பாராட்டுதல்.
கோதாரி- ஓர் நோய்.
கோதாவரி - ஓர் நதி.
கோதி- கோதுமை.
கோதிகை- உடும்பு.
கோது - குற்றம், வித்துக்களின் ஓடு, சாறுபிழிந்தசக்கை.
கோதுதல்- கொந்துதல், கொழித்தல், மயிர் வகிர்தல்.
கோதுமை - ஓர் தானியம்.
கோத்தை- ஒழுங்கு, மாலை, (மாலைவிசேடமெனப்புறநா), பெண், பெண்மயிர், காற்று, சேரன், முன்கைத் தோற்கட்டு, உடம்பு, மரக்காற்பறை, கௌதமியாறு.
கோத்தல்- ஒழுங்குபடுத்தல், மலர்முதலியவற்றைக் கோத்தல், சேர்த்தல்.
கோத்தனி - முந்திரிகை.
கோத்திரம்- குலம், பூமி, மலை.
கோத்திரவம்- வரகு.
கோத்திரை - பூமி.
கோநகர் - கோயில்.
கோபதி - இந்திரன்.
கோபம் - சினம், தம்பலப்பூச்சி.
கோபன் - இடையன்.
கோபாலன் - கிருஷ்ணமூர்த்தி, இடையன், அரசன்.
கோபி - கோபமுள்ளவன், இடைச்சி. மாத்துவர்களணியுஞ்சந்தனம்.
*கோபிதாரம் (கோவிதாரம்)-குராமரம்,
கோபித்தல் - சினத்தல்.
கோபுரம் - நகரவாயில்.
கோமகன் - தலைவன், அரசன்.
கோமதி - (கோமதை) - ஓர்நதி.
கோமயம் - பசுச்சாணம்.
கோமளம் - இளமை, *பசு, அழகு, மென்மை.
கோமாட்டி - தலைவி.
கோமாயு - நரி, முதுநரி.
கோமான் - அரசன், குரு, பெருமையிற்சிறந்தோன், மூத்தோன், பன்றி,
கோமுகம்-ஆசனவகையுளொன்று. (சகனப்பக்கத்திலிருகாற் பரட்டையுமாறவைத்து இருகாற் பெருவிரல்களையுங்கையாற்பிடித்திருத்தல்)
கோமுகை - சுவாமிக்கு அபிடேகஞ்செய்யும் நீர் வெளியேபோகும்படி கோயிற் கர்ப்பக்கிருத்தில் நீளவைத்துக் கட்டப்பட்ட கல்.
கோமூத்திரி - ஓர் மிறைக்கவி.
கோமேதகம் - நவமணிகளுளொன்று, ஏழுதீவுகளுளொன்று.
கோம்பி - பச்சோந்தி, ஓந்தி.
கோம்புதல் - தனியாக்கோபமுறல்.
கோம்பை- உள்ளிருக்கும் இளநீர் முதலியன எடுக்கப்பட்ட தெங்கிளங்காய்.
கோயில்- தேவாலயம், சிதம்பரம், ஸ்ரீரங்கம், அரசர்மனை. (சிலவிடங்களிற் கோவில் எனவும் வரும்).
கோயிற்றூக்கு- இசைத்தமிழ்நூலிற்கூறிய மூவகைத் தூக்குளொன்று. (மணிமே)
கோய்- பரணி. (குகைவடிவான கூடு).
கோரகம் - பூவரும்பு.
கோரகை- குயில், இளம்பூவரும்பு, அகப்பை.
கோரக்கர் - ஓர் சித்தர்.
கோரக்கர்மூலி - கஞ்சா.
கோரசம் - சிவப்பறவை.
கோரதரம் - ஓர் நரகம்.
கோரம்- ஓர்நரகம், குதிரை, சோழன் குதிரை, கொடுமை, பூவரும்பு, 'வட்டில், வெப்பம்.
கோரை - ஓர்புல்.
கோரோசனை - ஓர்மருந்து. (எருதுகளின்

ஏரியினுள் விளைவது).

கோலஞ்செய்வாள் - வண்ணமகள்.

கோலம்- அலங்கரிப்பு, வேடம், தொய்யில், இலந்தை, இலந்தைக்கனி, குரங்கு, தக்கோலம், திப்பலி, மிளகு, நிறம், பன்றி, பாக்கு, அழகு, மாமுதலியவற்றால் நிலத்திலிடுங்கோலம், நீரோட்டம், பீர்க்கு.

கோலல்- சூழ்தல், வளைதல், வளைத்தல், அமைத்தல்.

கோலாகலம் (கோலாலம்)- ஒன்றல்லாப் பேரொலி.

கோலாங்கூலம் - முசு.

கோலாட்டம் - ஓர் விளையாட்டு.

கோலி (கோலம், கோல்) இலந்தைமரம்.

கோல்- அம்பு, அளவுகோல், (நிலவளவையில் ௮ முழங்கொண்டது; சிற்பத்தில் ௨௪ அங்குலமுடையது), ஊன்றுகோல், அஞ்சனக்கோல், எழுதுகோல், குதிரைச்சம்மட்டி, (முட்கோல்), அரசனது செங்கோல், தடி, திரட்சி, (ஆய்கோலவிர்தொடி; மதுரைக் ௫௯௬), துலாக்கோல், துலாராசி, யாழின்நரம்பு. மரக்கொம்பு, விட்டேறு, (ஈட்டியென்பர் சிலர்,) *கொழு, இலந்தைமரம்.

கோவணம் - கௌபீனம்.

கோவம் - பொன். (பி).

கோவர்த்தனம்- ஒருமலை. (இம்மலையை, பசுநிரையின்மேற்கன்மழைபடாவண்ணம் கிருஷ்ணமூர்த்தி எடுத்துக் குடைபோலப்பிடித்தார்).

கோவலர் - இடையர்.

கோவலன்- கண்ணகையின் கணவனான ஒருவைசியன்.

கோவல்- சிவனுடைய அட்டவீரட்டத்துளொன்றாகிய தலம்.

கோவாங்கம் - ஓர்வகை மாணிக்கம்.

கோவிதன் - அறிஞன்.

கோவிந்தர் - இடையர்.

கோவிந்தன் - விட்டுணுமூர்த்தி.

கோவியர்- ஓர் சாதியர். (வேளாளர் முதலாயினோர்க்குத் தொண்டுசெய்வோர்; கூவியர்என்பதன் றிரிபுபோலும்)

கோவிலங்கு - சிங்கம்.

கோவேள் - குயவன்.

கோவேறுகழுதை- குதிரையுங்கழுதையுங்கூடிப்பிறந்த ஓர் விலங்குச்சாதி.

கோவை- ஒழுங்கு, அகப்பொருட்கிலக்கியமாகக் கட்டளைக்கலித்துறை நானூற்றாற்பாடப்பட்ட நூல், (வெண்பா முதலியவற்றானும் பாடப்படும்). கோத்தமாலை, தொடர்ச்சி, கழுத்தணிவடம்.

கோழி - ஓர் பறவை, உறையூர்.

கோழிக்கொடியோன்- முருகவேள்.

கோழிவேந்தன் - சோழன்.

கோழை- கபம், தவறு, அச்சம், நாணம்.

கோழ்-வழுவழுப்பு. (கோழரைச்செழுங்குங்குமமரம்; நைடத நாட். ௪).

கோளகம்- மண்டலிப்பாம்பு, மிளகு.

கோளகன்- அமங்கலைபெற்றபிள்ளை.

கோளகை- அண்டமுகடு, உருண்டைவடிவம், வட்டம், மண்டலிப்பாம்பு, யானையின்றந்தப்பூண், (சிந்), வாகுவலயம்.

கோளம்- உருண்டை, வட்டம்.

கோளரி - சிங்கம்.

கோளன் - கோள்சொல்வோன்.

கோளாங்கல் - பருக்கைக்கல்.

கோளி- அத்திமரம், ஆலமரம், கொழிஞ்சிமரம், பூவாது காய்க்குமரம், கொள்வோன்.

கோளிப்பொருள் - நான்காம்வேற்றுமைக்குரிய கோடற்பொருள்.

கோள்- சூரியன்முதலியகிரகள், குணம், இயல்பு, இடையூறு, உட்கொள்ளுதல், ஏற்றுக்கொள்ளுதல், குலை, (வண்கோட்பெண்ணை வளர்த்த நுங்கின்; சிறுபா ௨௭), கொலை, கொள்ளல், கோட்சொல், கோட்பாடு, தீமை, கொழு, நாள், (கொலைவல்பெருங்கூற்றங்கோட்பார்ப்ப: நாலடி), பரிவேடம், பாம்பு, பெருமை, வலிமை, பொய்.

கோறல் - கொல்லுதல்.

கோற்கொடி- இலந்தைமரம், கொடிவகையுளொன்று.

கோற்புழு - உலண்டு. (கந்தபுராணத்து மகாசாத்தாப்படலத்தில் வச்சிரதந்தி எனப்பட்டது இதுவே).

கோற்றேன்.- கொம்பான்தேன்.

கோனாடு- சோழதேசத்திலுள்ளநாடுகளுளொன்று.

கோன்- அரசன், இடையன், எப்பொருட்குமிறைவன்.

கோன்மை- இராசநீதியியல்பு.

## கௌ

கௌ - கவ்வுதல்.
கௌசலம் - கோசலதேசம், வல்லமை.
கௌசலை (கவுசலை) - இராமசுவாமியின் தாய்.
கௌசனை - ஏறுகுதிரைமுதலியவற்றின் மேலிடும்மெத்தை, யாதேனுமொரு பொருளை மூடியிடும்உறை. [ன்.
கௌசிகன் - இந்திரன், விசுவாமித்திர
கௌஞ்சம் (கவுஞ்சம்) - கிரவுஞ்சம்.
கௌடம் (கவுடம்) - கௌடதேசம், கௌடபாஷை, அணியிலக்கணத்திற் கூறப்பட்ட ஓர்வகைநெறி, செறிவு முதலாகிய பத்துக்குணவலங்காரங் களைப்பெறுமை), ஒருகொடி.
கௌடில்யம் - அவமதி, வளைவு.
கௌணம் - பிரதானமற்றது.
கௌதமன் - ஏழுமுனிவருளொருவர், கிருபாசாரியர், (கோதமமுனிவரது வம்சத்திற் பிறத்தலால் இவர்க்கிப் பெயர்), ஆதிபுத்தன்.
கௌதமி (கௌதமை - கோதாவரிநதி.
கௌதுகம் - ஆவல், ரட்சாபந்தனம்.
கௌதூகலம் - ஆவல், சந்தோஷம்.
கௌந்தி - அருந்தவப்பெண்.
கௌந்தேயர் - குந்திபுத்திரர்கள், (யுதிட்டிரன் வீமன் அருச்சுனன் என்பவர்க
கௌபீனம் - கோவணம். [ள்).
கௌமாரம் - கசு முதல் கூஉ வயதுககுட்பட்டபருவம். (பாலியப்பருவமுமாம்)
கௌமாரி - சத்தமாதர்களுளொருத்தி.
கௌமுதி - நிலவு. [தம்.
கௌமோதகி - விட்டுணுவின் தண்டாயு
கௌரம் - வெண்ணிறம்.
கௌரவம் - மேன்மை.
கௌரவர் - குருகுலவேந்தர்.
கௌரி - பார்வதி, துர்க்கை, காளி.
கௌரியன் - பரண்டியன்.
கௌரீசங்கரம் - இரட்டையுருத்திராக்க
கௌலவம் - ஓர்கரணம். [ம்.
கௌளி - பல்லி.

## ங

ஙனம் - (இடைச்சொல்). இது இடம் தன்மை என்னும்பொருள்களில் சுட்டு வினா என்னுமிவைகளு ளொன்றன் பின் ஒருசொன்னீர்மையாய்வரும்.

## ச

சக - கூட.
சககமனம் - கணவனுடன் மனைவியிறப் பது.
சககாரம் - தேமா.
சகசம் - இயற்கை.
சகசன் - சகோதரன்.
சகச்சிரம் - ஆயிரம்.
சகடம் - தேர், பண்டி, சக்கரம், உரோகிணி நட்சத்திரம், சகடயோகம், (குருநின்றராசியினின்று கூ அ கஉ ம் இடங்களிற் சந்திரனிற்பது), வட்டில், *துந்துபி.
சகடு (சகடை) - தேர், பண்டி, உரோகிணி நட்சத்திரம், ஓர்வாத்தியம்.
சகண்டை - துந்துபி.
சகதி - ஓர்சந்தம், சேறு, சேற்றுநிலம்.
சகத்து - உலகம்.
சகநாதம் - ஓர்தலம். [ன்.
சகபாடி - ஒருவகுப்பிற் கல்விபயின்றவ
சகமார்க்கம் - யோகமார்க்கம்.
சகம் - பூமி, உலகம். (இப்பொருள்களிற் செகம் எனவும்), சகவருடம், ருகூதேசங்களுளொன்று.
சகரர் - சகரராசனதுபுத்திரர். [ன்.
சகரன் - முதலெழுவள்ளல்களுளொருவ
சகராசசேகரம் - ஓர்சோதிட நூல்.
சகலபாசனம் - அருகனது முக்குடை களுளொன்று.
சகலம் - எல்லாம்.
சகலர் - மும்மலங்களையுமுடையவர்கள் (சைவசித்தாந்தவழக்கு).
சகலன் - ஓர் குடியிற்கொண்டோன் (மனைவியின்சகோதரிக்குக் கணவன்).
சகல் - கொதுகு.
சகவாசம் - உடனிருந்துபயிலுதல். [னி
சகளம் - கடவுளுடைய உருவத்திருமே
சகளீகரணம் - தன்னுருவத்தைக்கடவுளி னுருவமாகப்பாவித்தல்.
சகனம் - ஆசனம், கடிதடம், தொடைக ளினுட்பக்கம், பொறுமை.
சகன் - சாலீவாகனனென்னும் அரசன்.
சகன்மகம் - செயப்படுபொருளுள்ளவினை
சகா - தோழன்.
சகாதேவன் - பாண்டவர்களில் இளையோன்.
சகாப்தம் - சகவருடம்.
சகாயம் - துணை.

சகாயன் - தோழன்.
சகார்த்தம் - உடனிகழ்ச்சிப்பொருள்.
சகி - தோழி.
சகிதன் - அச்சமுள்ளோன், கூடியவன்.
சகித்தல் - பொறுத்தல்.
சகித்துவம் - தோழமை.
சகிப்பு - பொறுமை.
சகுடம் - சேம்பு.
சகுணம் - குணத்தோடுகூடியது.
சகுந்தம் - கழுகு, பறவைப்பொது.
சகுந்தலை - விசுவாமித்திரர்க்கு மேனகை வயிற்றிற்பிறந்தபெண்.
சகுலி (சஃகுல்லி)- மோதகம்.
சகுனம் - ஓர்கரணம், பிரயாணமுதலிய வற்றில் நன்மை தீமைகளையறிதற் குரிய நிமித்தம், கிழங்குவகை, பறவை.
சகுனி - துரியோதனனுடைய மாமன், நிமித்தம்பார்ப்போன், பறவை.
சகோடம் - சகோடயாழ்.
சகோதரம் - உடன்பிறப்பு.
சகோரம் - செம்போத்து, சக்கரவாகப் புள், நிலாமுகிப்புள், பேராந்தை.
சக்கரம் (சக்கிரம்)-சக்கரவாகப்புள், பெருமை, பூமி, சக்கராயுதம், பிறப்பு,வட்டம், தேருருள், கடலை,மலை, *மதில், அரசாணை.
சக்கரவர்த்திகள் அறுவர்-அரிச்சந்திரன் நளன் முசுகுந்தன் புரூரவா சகரன் கார்த்தவீரியன் என்பவர்கள்.(சகரனை நீக்கிப் புருகுற்சனைச்சேர்த்து நிகண்டில்). [கம்.
சக்கரவாகம்-சக்கரவாகப்பறவை, ஓரிரா
சக்கிரபாணி திருமால், தூர்க்கை.
சக்கிரவாளம் - திக்கினந்தங்களிற் பூமியைச்சூழ்ந்திருக்கும்மலை.
சக்கிரன் - இந்திரன்.
சக்கிரி- அரசன், குயவன், செக்கான், திருமால், பாம்பு.
சக்கு (சட்சு; சக்ஷு) - கண்.
சக்கை- சாறுமுதலியவற்றைப்பிழிந்த ச [ழிவு.
சங்கசம் - கட்பு.
சங்கதி - தொடர்பு, இயைபு, வரலாறு.
சங்கநிதி - சங்குவடிவமாயிருக்கிற(குபேரனுடைய) நிதி.
சங்கபாலன்- அட்டநாகங்களுளொன்று.
சங்கப்பலகை- மதுரையிலிருந்த தமிழ்ச் சங்கத்தில் புலவரிருக்கும்படியமைக் கப்பட்டபலகை. இது தமிழில் தேர்ச்சியடைந்தபுலவர்வந்திருக்குந்தோறும் ஒவ்வொருமுழம் வளர்ந்து இடங் கொடுப்பது.
சங்கமம் - இயங்குந்திணை, புணர்ச்சி, யாறு கடலிற்சங்கமிக்குமிடம்.
சங்கமேந்தி - திருமால்.
சங்கம்-கூட்டம், சபை, புலவர்கூட்டம், சமுத்திரம் மூன்றுகொண்டசேனை, (சேனைத்தொகையிற்பார்க்க), ஓர்பேரெண்,(பத்திலட்சகோடி; கற்பமென்பர் பிங்கலர்) கணைக்கால், நெற்றி, சங்கு, சங்கநிதி, *விருப்பம்.
சங்கரம் கலப்பு.
சங்கரன் - சிவன், பதினோருருத்திருளொருவர்.
சங்கராசாரியர் - வைதிகமதாசாரியருளொருவர், (கலியப்தம் ௩௰௫௱௬ல் சிவபிரானுடைய அவதாரமாகப் பிறந்து வேதாந்தசூத்திரத்திற்குச் சிறந்த ஓர்பாடியத்தைச் செய்துவடமொழியிற்பலதோத்திரநூல்களைப்பாடிப்பர சமயங்களைப்பாற்றிச் சகற்குரு எனப் புகழ்ப்பெற்றவர்).
சங்கராபரணம்- ஓரிராகம். (வெண்பாப் படித்தற்குரியது).
சங்கரித்தல் . அழித்தல்.
சங்கருடணம் - இழுத்தல், உழுதல்.
சங்கருடணன்- பலபத்திரன்.
சங்கலனம் - கூட்டல்.
சங்கலை-மண்கிணற்றில்வைத்துக்கட்டப் படும் மரமுதலியவற்றின்கூட்டு.
சங்கற்பநிராகரணம் - உமாபதிசிவாசாரியர்செய்த சைவசித்தாந்தநூல்களுளொன்று.
சங்கற்பமாதம் (சம்சர்ப்பமாதம்)- ஒருவருடத்தில் சங்கிராந்தியாலிடையிடப் படாத இரண்டு சாந்திரமாதங்கள்வரின் அவற்றுள் முந்தியமாசம்.
சங்கற்பம்- நியமம்.
சங்கனனம் - கொல்லுதல்.
சங்கன்னம் - நரம்பு.
சங்காதம் - ஓர்நரகம், அழித்தல்.
சங்காத்தம்-சினேகம், கூட்டம், இறுகத் தழுவல்.
சங்காரம் - அழிவு, ஒடுக்கம்.
சங்கிதை - பதினெருமந்திரங்கள். (ஈசா

னமுதலிய பிரமமந்திரங்கள் ஐந்தும் இருதயமுதலிய அங்கமந்திரங்களாறுமாம்).
சங்கியை - எண். (சிலவிடங்களிற் சங்கை எனவும்).
சங்கிரகம் - தொழிப்பு. (பலநூல்களினுமுள்ள விதிகளைத் தெரிந்தெடுத்துச் சேர்த்தல்).
சங்கிரமம் } சங்கிராந்தி } சூரியன் ஓரிராசியைக்கடந்து மற்றோரிராசியிற்போதல்; கடத்தல்.
சங்கிராமம் - போர்.
சங்கிருந்தனன் - இந்திரன்.
சங்கிலி - இரும்புமுதலியவற்றாலானசங்கிலி, வைரச்சங்கிலி. (அணிவகையுளொன்று).
சங்கினி - மதனநூலிற் சொல்லப்பட்ட நால்வகைப்பெண்களுளொருத்தி, தசநாடிகளுளொன்று.
சங்கீதம் - இசைப்பாட்டு. (பல்லியந்தழுவுபாடல்).
சங்கீரணம் - கலப்பு, பலவணிகள்கலந்து வருதலாகியஅலங்காரம்.
சங்கீர்த்தனம் - புகழ்தல்.
சங்கு - கடல்படுதிரவியத்துளொன்றாகிய சங்கு, வளைதடி, சங்கினாற்செய்த கைவளை, நிருத்தமுத்திரைகளுளொன்று, (பெருவிரனிமிர ஒழிந்த நான்குவிரல்களையும் வளைத்துநிற்பது), சோதிடகணிதத்தில் பன்னிரண்டங்குலவளவாய்ச்செய்யப்பட்டமுளை, வீடுகட்டத்தொடங்கும்போது தாபிக்கும்மரமுளை].
சங்குலம் - கூட்டம்.
சங்கேதம் - குழூஉக்குறி, சைகை.
சங்கை - ஐயம், பயம்.
சங்கோசம் - ஒடுக்கம், நாணம்.
சசம் - முயல்.
சசன் - முயற்சாதியாடவன், (மதனநூலிற் சொல்லப்பட்டமூவகை ஆடவர்களுளொருதிறத்தான்).
சசி - இந்திராணி, கர்ப்பூரம், சந்திரன்,
சசிமணாளன் - இந்திரன்.
சசிவன் - மந்திரி.
சச்சரி - ஓர்வாத்தியம்.
சச்சிதாநந்தம் - உண்மையாயும் அறிவாயும் ஆனந்தமாயுமிருக்கும்பொருள்.
சஞ்சத்தர்(சம்சத்தர்) - தாங்கள் சொல்லியசபதப்படி நின்று போர்செய்யும் வீரர். (பாரத கக சO).
சஞ்சயம் - கூட்டம், வியூகவிரியுளொன்று.
சஞ்சயனம் - காடாற்றுதல்.
சஞ்சயன் - பாண்டவர்களின் புரோகிதன்.
சஞ்சரிகம் - வண்டு.
சஞ்சரித்தல் - உலாவுதல்.
சஞ்சலம் - மனக்கவலை, நிலையின்மை.
சஞ்சலை - மின்னல்.
சஞ்சாளிகம் - வண்டு.
சஞ்சிதம் - சன்மாந்தரங்களிலீட்டித் தொகுத்திருக்கும் புண்ணிய பாவங்கள், சம்பாதிக்கப்பட்டது.
சஞ்சீவகாணி (சஞ்சீவினி) - மூர்ச்சை தீர்த்துக் குற்றுயிர்தரும்மருந்து.
சஞ்சு - பறவைமூக்கு.
சடகம் - வட்டில், ஊர்க்குருவி. (சகடமெனப் பிங்கல).
சடக்கெனல் - விரைவுக்குறிப்பு.
சடங்கு - கிரியை.
சடசீதி - மிதுனம் கன்னி தனு மீனம் என்னுமிராசிகளிற் சூரியன் சங்கிரமிக்கும் புண்ணியகாலம்.
சடம் - அறிவற்ற பொருள், உடல், பொய், வஞ்சகம், ⁎கொடுமை.
சடரம் - வயிறு.
சடலம் - சரீரம்.
சடன் - மூடன்.
சடாதரன் - சிவன்.
சடாயு - ஓர் கழுகரசன்.
சடாரி - கவசம்.
சடிதி(சடுதி) - சீக்கிரம்.
சடிலம் - குதிரை, சடை, நெருக்கம்.
சடுலம் - தீப்பற்றியெரியும்போதுமூங்கில் முதலிய சிலமரங்களிலெழுமொலி, பாரத காண்டவ ௬௬).
சடை - மயிர்ச்சடை, மரங்களின்வேர் நெட்டிமுதலியன, வேதமோதும்வகையுளொன்று, கிடைச்செடி.
சடைதல் - ஆணியைத்தறைதல், பயிர்கள் வளர்ச்சியிற்குறுகுதல்.
சடையோன் - வீரபத்திரன், சிவன்.
சட்கம் - ஆறு.
சட்சம் - யாழின்சுவரங்களுளொன்று.
சட்டகம் - உடல், வடிவம், சட்டம், நாவிச்சட்டம்.

சட்டி - ஓர்பாத்திரம், ஆருந்திதி.
சட்டு - அறிவு, சற்று. (சட்டோகினைக்க திருவாச).
சட்டுவம் - அகப்பை.
சட்டுவர்க்கம்-இலக்கினத்தின் ஆறுவர்க் கங்கள்.
சட்டெனல்- விரைவுக்குறிப்பு.
சட்டை - கவசம்.
சட்டைநாதன்- சிவன், வைரவமூர்த்தி.
சட்பம் - அறுகு, இளம்புல்.
சணகம் - கடலை.
சணத்தல் - விரிந்து அல்லது நெருங்கிச் செறிந்துண்டாதல்.
சணல் - ஓர்பயிர்.
சண்டம் - வேகம், கொடுமை, கோபம், அலித்தன்மை,
சண்டன் - அலி, யமன், சூரியன், கோபமுடையோன்.
சண்டாளன்- புலைஞன்.
சண்டி - காளி, ஓர்மரம்.
சண்டிகை - காளி, துர்க்கை.
சண்டேசன்- சண்டேசுரநாயனார். (பெரியபுராணத்திற் சொல்லப்பட்ட சிவனடியார்களுளொருவர்).
சண்டை - போர்.
சண்ணித்தல் - பூசுதல்.
சண்பகம் - மலர்மரங்களுளொன்று.
சண்பை- சீகாழிப்பதி.
சண்முகன்- முருகக்கடவுள்.
சதகம்- நூறுசெய்யுளடங்கியபிரபந்தம்.
சதகுப்பை - ஓர் மருந்துச்சரக்கு.
சதகோடி- இடி, வச்சிராயுதம்.
சதக்கிரது - இந்திரன்.
சதங்கை - சிறுமணி.
சததம் - எப்போதும்.
சதபத்திரி - தாமரை.
சதம் - நூறு, இலை, இறகு, நிலையான பொருள். (ஊருஞ்சதமல்ல; பட்டணத்.
சதயம் - ஓர் நட்சத்திரம்.
சதனம்- வீடு, இறகு, இலை.
சதா - மரக்கலம், எப்போதும்.
சதாகதி - காற்று.
சதாசிவன் - பரமசிவன்.
சதாபலம் - எலுமிச்சை.
சதாநந்தன் - பிரமா, ஓர்முனிவர். (இராமா மிதிலை அ).
சதி - வஞ்சனை, வஞ்சனையாற்கேடுசூழ் தல், தாளவொத்து, வட்டம், ரோகிணிநட்சத்திரம், பார்வதிதேவி, கற்புடையாள், சோறு.
சதுக்கம் - நாற்சந்தி, நாற்கோணம், திண்ணை.
சதுட்டயம் - நான்கு, கேந்திரம்.
சதுட்பாதம் - ஓர்காரணம்.
சதுப்புநிலம் - சேற்றுநிலம்.
சதுரக்கள்ளி - ஓர்வகைக்கள்ளி.
சதுரங்கம் - யானைமுதலிய நால்வகைச் சேனை,
சதுரந்தயானம் - சிவிகை. (பாரத குருகுல கூ௬).
சதுரம் - சாமர்த்தியம், நாற்கோணம்.
சதுரர் - சாமர்த்தியமுடையோர், நாகரீகர்.
சதுர் - சாமர்த்தியம், நான்கு.
சதுர்த்தர் - காலாம்வருணத்தார். (வேளாளர்).
சதுர்த்தல் - அப்புதல்.
சதுர்த்தி- நான்காந்திதி.
சதுர்முகன் - பிரமா, அருகன்.
சதேகமுத்தி - சீவன்முத்தி.
சதை - தசை.
சதைத்தல் - தசைவெளிப்படும்படிநசுக்குதல்
சத்தபர்ணி - ஏழிலைப்பாலை.
சத்தமி - ஏழாந்திதி.
சத்தம் - ஒலி, இலக்கணநூல், சொல், ஏழெண்ணுமெண்.
சத்தி - வல்லமை, உமை, சூலம், வேல், எஃகு, துகிற்கொடி, குடை, வாந்தி.
சத்தி௩ - இச்சாசத்திகிரியாசத்திஞானசத்தி என்பன,
சத்தி௫ -ஆதிசத்திபராசத்தி இச்சாசத்தி கிரியாசத்தி ஞானசத்தி என்பன.
சத்தித்தல். வாந்திசெய்தல், ஒலித்தல்.
சத்திநிபாதம் - சீவான்மாவினிடத்துச் சிவத்தினது சிற்சத்திபதிதல். (இது சைவநூல்களிற் பாசத்தை நீக்கி அருள்செய்தற்குவிதித்தபக்குவகாலம்; இதனை மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரமெனநான்குவகையாகக் கூறுவர்.)
சத்தியபாமை - கிருட்டிணமூர்த்தியின் மனைவியருளொருத்தி.
சத்தியம் - மெய், சபதம்.
சத்தியலோகம் - பிரமலோகம்.

சத்தியவதி - வேதவியாசருடையதாய்.
சத்தியாகிர்தம் - வாணிகத்தொழில்.
சத்திரம் - தருமத்துக்காக அன்னங்கொடுக்குஞ்சாலை, யாகம், குடை, கைவிடாப்படை, (வாள் முதலியன) வேல், *இரும்பு, அதிசயம், (ஆயுதங்களினுற் கீறுதல் அரிதல் முதலியவற்றுடன் செய்யும்) சத்திரவைத்தியம்.
சத்து - உள்பொருள், பிரமம்.
சத்துரு - பகைவன்.
சத்துருக்கன் - இலக்குமணரின் தம்பி.
சத்துவம் - சுபாவம், உவகைமுதலிய உண்ணிகழ்ச்சி வெளிப்படத் தோன்றுங் குறி, வலி, சாத்துவிககுணம்.
சத்துவரம் - விரைவு.
சந்தசு (சந்தம், சந்தோபிசிதம்) - இசைவிகற்பத்தையுணர்த்தும்நூல். (இது வேதாங்கம் ஆறனுள்ஒன்று).
சந்தசு எ - காயத்திரி உஷ்ணிக் அநுஷ்டுபு பிரகதி பங்தி திருஷ்டுபு சகதி என்பன.
சந்தம் - எப்பொழுதும்.
சந்ததி - மகன், வமிசபரம்பரை.
சந்தப்பாட்டு - ஒவ்வொருஅடியும் இருபத்தாறெழுத்துடையனவாகிய நான் கடிகளால்வருஞ்செய்யுள்.
சந்தம் - அழகு, கவியினிசை, செய்யுள், வேதம், சந்தனம், நிறம்.
சந்தர்ப்பணம் - திருப்திசெய்தல்.
சந்தனம் - சந்தனமரம், சந்தனக்குழம்பு.
சந்தனு - வீட்டுமனுடையபிதா.
சந்தன் - இடைவள்ளலெழுவருளொருவன்.
சந்தாபம் - சூடு.
சந்தானகரணி - துணிபட்டஉறுப்புக்களைப்பொருத்தும் மருந்து, *இலுப்பைமரம்.
சந்தானதீபிகை - ஓர் சோதிடநூல்.
சந்தானம் - சந்ததி, சம்பந்தம், தெய்வதருக்களுளொன்று.
சந்தி - பொருத்து, நாற்சந்தி, சந்தியாவந்தனம், பகலிரவுகளின் சந்தியான காலங்கள், மாலைக்காலம், பதங்கள் புணருதல், நாடகவிலக்கணத்தில் விதிக்கப்பட்ட ஒருறுப்பு, (சந்திரிற்றொடர்ந்து; தண்டி உரை), மூங்கில்.
சந்தி ௫ - முகம் பிரதிமுகம் கருப்பம் விளைவு துய்த்தல் என்பன.
சந்திக்தம் - சந்தேகிக்கப்பட்டது.
சந்தித்தல் - பொருந்துதல்.
சந்திமான் - இடைவள்ளலெழுவருளொருவன்.
சந்தியக்கரம் - இரண்டெழுத்துக்கள்சந்தித்தலாற் பிறக்குமெழுத்து, (வடநூலிலக்கணத்தின்படி ஏ ஐ ஓ ஔ என்னும் நான்கெழுத்துக்களும் இப்பெயரான. தமிழில் ஐகாரஔகாரங்களும் சந்தியக்கரங்களென்று சொல்லத்தக்கன). சிலர் போலியைச் சந்தியக்கரமென்று மயங்கிப் போலியையுணர்த்துஞ்சூத்திரங்கட்குப்பொருந்தாவுரை கூறினர்.
சந்திரகம் - மயிற்றோகை, வண்டு.
சந்திரகலை - இடமூக்கின்வழியாய்ச்சுவாசஞ்செல்லுதல், மாதர் தலையிலணியுமோரணி. (பிரமோத்).
சந்திரகாந்தம் - சந்திரகிரணம் தன்மேற்படும்போது நீரைக்காலுங்கல்.
சந்திரசேகரன் - சிவன்.
சந்திரசைலம் - ஓர்மலை. (இராமா வரைக்.
சந்திரதிலகம் - சந்தனமரம்.
சந்திரபாகை - ஓர்நதி.
*சந்திரம் - பொன், கருப்பூரம்.
சந்திரன் - சந்திரனென்னுங்கிரகம்.
சந்திராலோகம் - காளிதாசன் வடமொழியிலியற்றிய ஓர் அலங்காரநூல்.
சந்திரிகை - நிலவு.
சந்து - உறுப்புக்களின்பொருத்து, தெருக்களின்பொருத்து, சந்தனம், தூது.
சந்தேகம் - ஐயம்.
சந்தை - பலரும் பலபொருள்களைக்கொணர்ந்து விற்குமிடம், வேதமோதுமிடம், வேதமோதும்போது சொன்ன பதத்தைமீட்டுஞ்சொல்லுதல்.
சந்தோகன் - சாமவேதத்துக்குரிய அந்தணன்.
சந்தோஷம் - மகிழ்ச்சி.
சந்நத்தன் - ஆயத்தமானோன்.
சந்நிகர்ஷணம் - இந்திரியங்கள் விஷயத்துடன்சம்பந்தித்தல், சமீபித்தல்.
சந்நிதானம் - (சந்நிதி) - முன்னிலை.
சந்நிபாதம் - ஓர்நோய், (சந்நி).
சந்நியாசம் - துறவறம்.
சந்நிரோதனம் - தடுத்தல்.
சபதம் - தன்சொல்லைமெய்ப்படுத்தற்கும் தான் பின்முடிக்குங்கருமத்தைப்பிறர்நம்புதற்கும் தெய்வமுதலியவைகளை

ஆணையிட்டுக்கூறுஞ் சூளுரை.
சபம் (செபம்) - மந்திரங்களைச்செபித்தல், *மூங்கில்.
சபரம்- சேல்மீன்.
சபரியை - பூசை.
சபலம் - செய்ததொழில் முதலியன பலனுடையனவாதல், மனநிலையின்மை.
சபலை - மின்னல்.
சபாபுஷ்பம் - செவ்வரத்தமலர்.
சபிண்டர் - ஞாதியர்.
சபிண்டீகரணம்-இறந்தபிதாமுதலியவர்களைப் பிதாமகன்முதலிய பிதிர்வர்க்கத்தோடு சேர்க்குங்கிரியை.
சபித்தல் - சாபமிடல், மந்திரங்களைச்செபித்தல்.
சபை - அறிஞர்கூட்டம், சபாமண்டபம்.
சபை ு - திருவாலங்காட்டில் இரத்தினசபையும் சிதம்பரத்திற் கனகசபையும் மதுரையில் வெள்ளிச்சபையும் திருநெல்வேலியில் தாமிரசபையும் திருக்குற்றாலத்தில் சித்திரசபையுமாம். (இவை பரமசிவன் திருநிருத்தஞ்செய்து கொண்டிருக்குஞ்சபைகள்).
சப்பரம் (சப்பிரம்) - மஞ்சமுதலியவற்றின் மேன்மூடி, யானைமேற்றவிசு.
சப்பாணி - கைசேர்த்துக்கொட்டல்.
சப்பியம் - சபைக்கேற்றவார்த்தை.
சப்பியன் - சபைக்கேற்ற அறிஞன்.
[சப்புதல் - குதப்புதல்].
[சப்பை - தட்டை].
சமகம் - வேதமந்திரத்திலோர்பகுதி.
சமக்கிரம் - முழுதும்.
சமங்கை - வறட்சுண்டி.
சமசத்தமம் - கிரகநிலையில் இரண்டுகிரகங்கள் ஒன்றுக்கொன்றேழாமிடத்து நிற்றல்.
சமஞ்சசம் - தகுதி.
சமட்சம் - முன்னிலை.
சமட்டி - தொகை. (விரிக்கெதிரானது).
சமணம் (சமண்) - ஓர் சமயம்.
சமணர் - சமணசமயத்தவர்.
சமண்டலை (சவண்டிலை) - ஓர்மரம்.
சமதக்கினி - பரசுராமரதுபிதா.
சமதாளம் - நவதாளங்களுளொன்று.
சமதை - சமநிலை.
சமத்தம் - எல்லாம்.
சமப்பால் - முல்லையும்செய்தலுமாகிய நிலப்பகுதிகள்.
சமம் - இரட்டை, ஒன்றேடொன்றொப்புமையுடைமை, நடு, நடுநிலைமை, போர்.
சமயதீக்கை - சைவசமயத்தார் செய்யும் முதலாந்தீக்கை.
சமயம் - காலம், தங்களீடேற்றத்துக்காக ஒவ்வொருசாராருங்கடைப்பிடித்தொழுகும் மார்க்கம்.

சமயம் பலதிறப்படும். அவற்றை உட்சமயமும் புறச்சமயமுமெனவகைப்படுத்துவர். ஒவ்வோர் சமயத்தினரும் தத்தம் சமயத்துடன் பெரும்பான்மை ஒத்த கோட்பாடுடையனவற்றை உட்சமயமெனவும் ஒவ்வாதனவற்றைப் புறச்சமயமெனவுங் கூறுவர். நிகண்டிற்கூறியபடி உட்சமயமாறும் புறச்சமயமாறும் அங்கங்கே குறிக்கப்பட்டிருக்கின்றன. வைதிகர், சைவம் வைஷ்ணவம் சாத்தம் சௌரம் காணபத்தியம் கௌமாரம் என்னுமாறையும் உட்சமயமெனவும், பௌத்தம் சைனம் பைரவம் காளாமுகம் உலோகாயதம் மாயாவாதம் என்னுமாறையும் புறச்சமயமெனவுங் கூறுவர்.

சமரசம் - அபேதவுணர்ச்சி.
சமரதம் - தேர்வகைநான்குளொன்று.
சமரம் (சமர்) - போர்.
சமரி - தூர்க்கை.
சமர்த்தன் - சாமர்த்தியமுடையோன்.
சமர்த்து - சாமர்த்தியம்.
சமர்ப்பணை - ஒப்படைத்தல்.
சமவர்த்தி - யமன்.
சமவாயம் - கூட்டம், சம்பந்தம், நீக்கமின்றிநிற்றல்.
சமவேதம்- சமவாயத் தன்மையையுடையபொருள்.
சமழ்த்தல் - நாணுதல், வருந்துதல், தாழ்த்தல்).
சமழ்த்தல் - தாழ்வு. (நாலடி).
சமனியகாணி - விரணந்தீர்க்குமருந்து.
சமனிலை - எடுத்தல் படுத்தல் இரண்டுமல்லாதஇசை, (ஒத்தஇசை). அணியிலக்கணத்தில் குணவலங்காரங்களுளொன்று, (மூவினங்களும் விரவச்செய்யுள் தொடுத்தல்).
சமனிலைவஞ்சி - நேர்நிலைவஞ்சி. (இது இருசீராய்வருதலின் இப்பெயர்த்தாயிற்று; தொல் பொரு).
சமன் - யமன், நடு.
சமாகாரம் - தொகை.
சமாகிதம்-முயலப்பட்டதொழிலின்பயன்

அத்தொழிலானன்றிப் பிறிதொரு தொழிலானிகழ்ந்ததாகக்கூறல்.
சமாசம் - சொற்களினிடையே வேற்றுமையுருபுமுதலியவை தொக்குநிற்றல், [சபை.
சமாசாரம் - நிகழ்ச்சி.
சமாதானம் - மனஅமைவு.
சமாதி - யோகாங்கங்களு ளொன்று, (கடவுளுடன் தன்னை அபேதமாகநெடுநேரஞ்சிந்தித்துக் கொண்டிருத்தல், குணவலங்காரம் பத்தனுளொன்று. (முக்கியப்பொருளின் வினையை ஒப்புண்டப்பொருண் மேற்றந்து புணர்ப்பது).
சமாப்தம் - முற்றுப்பெற்றது.
சமாலம் - பீலிக்குஞ்சக்குடை.
சமாலேபனம் - மேடுபள்ளமறநிலத்தைத் தீர்றுதல், மெழுகுதல்.
சமாவர்த்தனம் - பிரமசரியவிரதத்தை முடித்தலாகியகிரியை.
சமானம் - ஒப்பு.
சமானவாயு - தசவாயுக்களு ளொன்று. (நாபித்தானத்தினின்று உண்டஅன்னாதிகளின் ரசத்தைச்சரீரமுழுவதும் வியாபிக்கச்செய்வது).
சமானோதகர் - முன் எட்டாந்தலைமுறைமுதற் பதினன்காந் தலைமுறைக்குட்பட்ட ஞாதியர்.
சமி - அருகன், வன்னிமரம்.
சமிக்கை - குறி, குறிப்புப்பெயர், போர்.
சமிதி - கூட்டம்.
சமிதை - சமித்து. (ஓமவிறகு.)
சமித்தம் - ஓமமண்டபம்.
சமித்தல் - பொறுத்தல், சீரணித்தல், வெப்பமுதலியவற்றைத் தணித்தல்.
சமீபம் - தூரமின்மை.
சமீரணன் - காற்று.
சமுகம் - (சமூகம்)- கூட்டம்.
சமுச்சயம் - பலபொருள்களை ஒரு வினையால் முடித்தல்.
சமுதாயம் - சங்கம்.
சமுத்திரகலசம் - ஓர்நியாயம். (சமுத்திரத்து நீர் மிகுதியாயிருப்பினும் அள்ளும்போது கலசங் கொண்டஅளவே அகப்படுமென்பது போல்வது. ஒருவனுக்கு அதிகமாகக் கல்விகற்பிக்கப்படினும் அவனுடைய அறிவு அமைக்கத்தக்க அளவையே அமைத்துக்கொள்ளும். இவ்வாறே பொருந்துவன பிறவும் இந்நியாயத்திலமைக்கத்தக்கன).
சமுத்திரம் - கடல், எண்களுக்குரியபதினெண்டானங்களுள்ஒன்று, (சங்கம் பத்துக்கொண்டது), சேனைத்தொகைகளுளொன்று.
சமுத்திரராசன் - வருணன்.
சமூ - சேனை. [ன்று.
சமூமுகம் - சேனாவியூக வகைகளுளொ
சமூலம் - வேருடன் கூடியமருந்துப்பூடு முதலியன.
சமேதன் - கூடியிருப்பவன்.
சமை - வருடம்.
சமைதல் - பாகமாதல், ஆயத்தமாதல்.
சமைத்தல் - பாகம்பண்ணல், உண்டாக் [கல்.
சமைவு - முடிவு.
சம்(உபசர்க்கரம்) - நன்றாக.
சம்சயம் - சந்தேகம்.
சம்பகம் - சண்பகமரம்.
சம்பங்கோழி - ஓர்வகைக்கோழி.
சம்பத்து - செல்வம்.
சம்பந்தம் - தொடர்பு.
சம்பந்தர் - திருஞானசம்பந்தர்.
சம்பம் - வச்சிராயுதம்.
சம்பரம் - எண்காற்புள், நீர்.
சம்பரன் - ஒருஅசுரன்.
சம்பராரி - மன்மதன்.
சம்பர்க்கம் - கலப்பு.
சம்பவம் - பிறப்பு, நிகழ்ச்சி, எண்வகை அளவைகளுளொன்று, (நூற்றிற்பத்துண்டென்பது போல் ஒன்றில்மற்றொன்றுள்ளதெனவறிதல்).
சம்பலம் - எலுமிச்சைமரம், [கூலி].
சம்பா - ஓர்வகைநெல்.
சம்பாதி - சடாயுவின்தமையனாகிய ஒரு பறவையரசன்.
சம்பாத்தியம் - தேட்டம்.
சம்பாரம் - பலவகைப் பொருள்களின் திரள்.
சம்பாவனை - குரு முதலாயினோர்க்குவழிபாட்டுடன் கொடுக்கும் வெகுமான [ம்.
சம்பான் - படகு.
சம்பாஷணம் - அளவளாவிப்பேசுதல்.
சம்பிரதம் - சித்துவித்தைபோன்ற (பிறரதிசயிக்கத்தக்க) செயல்.
சம்பிரதாயம் - வழக்கம்.

சம்பீரம் - எலுமிச்சை.
சம்பு - சிவன், அருகன், சூரியன், பிரமா, விட்டுணு, நரி, நாவல்மரம், ஓர்வகைக்கோரை, (சம்மறுத்தார்யாக்கைக்கு; நல்வழி ௬ அ), சம்புத்தீவு, கத்தியமும் பத்தியமும் விரவ வடமொழியிலமைக்கப்பட்ட நூல்.
சம்புகம் - நரி.
சம்புகேசுவரம் - திருவானைக்கா.
சம்புடம் - ஓர்இருக்கை, (சிலப் வேனி உ௬ உரை), விபூதி முதலியன வைக்குஞ்செப்பு, வஸ்திரம்.
சம்புத்தி - வடமொழியிலொருமைவிளி.
சம்புரோட்சணம் - பரிசுத்தமான சலமுதலியவற்றைச் சுத்தியின்பொருட்டுத் தெளித்தல், ஆலயங்களிற் குற்றம்நேர்ந்தமைக்காகச்செய்யும் அபிடேகம்.
சம்பூரணம் - நிறைவு.
சம்பை - மின்னல்.
சம்போதனை - விளி.
சம்மட்டி - குதிரையைச்செலுத்துங்கருவிகளுளொன்று, கூடம். (கொல்லன் சம்மட்டி).
சம்மதம் - உடன்பாடு, சிநேகம்.
*சம்மதன் - மைத்துனன்.
சம்மதித்தல் - உடன்படல்
சம்மார்ச்சனம் - துடைத்தல்.
சம்மார்ச்சனி - துடைப்பம்.
சம்மேளனம் - கலப்பு.
சம்யோகம் (சையோகம்) சேர்க்கை.
சம்ரட்சணை-பாதுகாத்தல். [தேவதை.
சம்ராட் - பிரமாண்டத்தின் சூக்குமசரீர
சம்வர்த்தம் - ஓர்மேகம், தரும நூல்பதினெட்டுளொன்று.
சம்வற்சரம் - வருடம்.
சம்வாகம் - நெல்லும் புல்லும் நிறைந்த ஆர், ஊர்.
சம்வாதம் - வினவும் விடையுமான பொ
சம்ஸ்கிருதம் - ஆரியபாஷை. [ருள்.
சய - வெற்றிபெறுக என்னும்வாழ்த்து, ஓர்வருடம்.
சயதாளம் - நவதாளங்களுளொன்று.
சயத்திரதன் - ஓர் அரசன்.
சயந்தமாலை - ஓர் சோதிடநூல்.
சயந்தம் - ஓர்நாடகத்தமிழ்நூல்.
சயந்தனம் - தேர்.
சயந்தன் - இந்திரனுடையமகன்.
சயந்தி (செயந்தி)- திருச்செந்தூர், விட்டுணுவின் தசாவதாரதினங்கள்.
சயமகள் - துர்க்கை.
சயம் - அழிவு, கயரோகம், சர்க்கரை, வெற்றி, கூட்டம்.
சயம்பு - அருகன், சிவன், பிரமா, சுயம்புலிங்கம்.
சயனம் - படுக்கை.
சயனம் ரு- மயிற்றூவி இலவம்பஞ்சுமெத்தை வெண்படாம் அன்னத்தூவி மலர்ப்பாயல் என்பன.
சயித்தல் - வெல்லுதல்.
சயிந்தவம் - குதிரை, தலை, இந்துப்பு.
சயை - பார்வதி, துர்க்கை, திருதியை அட்டமி திரயோதசி என்னுந்திதிகள்.
சரகம் - வண்டு,தேனீ.
சரக்கு - பொருள். கறிச்சரக்கு,வியாபாரப்பொருள், (திருப்புகழ்).
சரசம் - பரிகாசம்.
சரசிருகம் - தாமரை.
சரசுவதி - கல்வித்தெய்வம்,ஓர் நதி.
சரடம் - ஓந்தி, பச்சோந்தி.
சரடு - நூற்கயிறு, மங்கலியசூத்திரம்.
சரணம் - அடைக்கலம்புகுதல், நகரம், பாதம், செய்யுளடி, மயிற்ரேகை, *தோட்டி.
சரணாகதி- அடைக்கலம்புகுதல்.
சரணி- வழி.
சரண் - அடைக்கலம், கால்.
சரதம் - உண்மை.
சரநூல் - சரசாத்திரம்-
சரபம் - எண்காற்புள், வரையாடு.
சரப்பணி - வைரச்சங்கிலி.
சரமம் - முடிவு, இறப்பு.
சரம் - சலனம், இயங்கியற்பொருள், அம்பு, சரநூல், நாணற்புல், பூமாலை, மணிவடம், *தனிமை, *யுத்தம்,சராசி, பகல்மானத்தில் முப்பதுநாடிக்குக் கூடிய அல்லதுகுறைந்தநாடி விநாடிகள்.
சரம்விடுநிலை ௬ - வைசாகம் ஆலீடம் பிரத்தியாலீடம் மண்டலம் என்பன.
சரயு - அயோத்தியிலுள்ள ஒருநதி.
சரராசிகள் - மேடம், கடகம், துலாம், மகரம் என்பன.
சரலம் (சரளம்)- ஓர்வகைத்தேவதாரு
சரவணபவன் - முருகவேள். [நேர்மை.

சரவணம் - இமயமலைச்சாரலிற் கங்கை நதிபாயப்பெறும் ஒருதடாகம், நாணற் புல்வனம்.
சரளி - கோழை, சத்தசுரப்பயிற்சி.
சரற்காலம் (சரம்) - கூதிர்க்காலம். ஐப்பசி கார்த்திகை மாதங்கள்).
சராசந்தன் - மகததேசத்திலிருந்த ஓராசன்.
சராசரம் - இயங்குந்திணையும் இயங்காத்திணையுமாகிய பிரபஞ்சம்.
சராசனம் - வில்.
சராயு - கருப்பாசயம்.
சராயுசம் - கருப்பையிற்றோன்றும் சீவான்மாக்கள்.
சராரோபம் - வில்.
சராவம் - மண்சட்டி.
சரி - ஒப்பு, சம்மதக்குறிப்பு, காற்சரி, கைச்சரி, மலைச்சாரல், வழி, தவறற்றது, *கூட்டம்.
சரிகை - சரித்தல், பொன்முதலிய நூல்களால் வஸ்திரத்திற் செய்யப்பட்ட சரிகை.
சரிதம் (சரிதை) - சரித்திரம், ஒழுக்கம், *பிச்சை.
சரிதல் - சாய்தல், நழுவுதல்.
சரித்தல் - அநுட்டித்தல், சஞ்சரித்தல், சரியச்செய்தல், சீரணித்தல்.
சரித்திரம் - கதை.
சரியை - ஒழுக்கம், சைவமதத்திற்கூறும் நான்கு பாதங்களுளொன்று, பிச்சை.
சரீரம் - உடல்.
சரு - உப்பின்றிச்சமைத்த அன்னம். (தேவருணவு என நிகண்டில்).
சருகு - உலர்ந்தஇலை.
சருமகாரன் (சர்மகாரன்) - செம்மான்.
சருமம் (சர்மம்) - தோல், மான் புலி முதலியவற்றின்தோலாகிய ஆசனம்.
சருமன் (சர்மன்) - பிராமணனுக்குப்பெயருடன்சேர்த்து வழங்குஞ் சாதிப்பெயர்.
சருவந்து - தலைச்சீரா. (இராகு திக்கு உகூஉ).
சருவம் - எல்லாம், (இப்பொருளிற் சர்வம் எனவும்), பித்தளை முதலியவற்றாற்செய்த ஓர் வகைப்பாத்திரம்.
சருவரி - இருள்.
சருவாணி (சர்வாணி) - பார்வதி.
சருவுதல் - கிட்டுதல்.
சரை - ஓர் அரக்கி, நரைமயிர்.
சரோசம் - தாமரை.
சரோசினி - இலக்குமி, தாமரையோடை.
சரோருகம் - தாமரை.
சரோருகன் - பிரமா.
சர்க்கம் (சருக்கம்) - நூலின்பகுதி.
சர்க்கரை (சருக்கரை) - கருப்பஞ்சாற்றைக்காய்ச்சுதலாலுண்டாகும் ஓர்வகைச்சுவைப்பொருள்.
சர்ச்சரை (சருச்சரை) - ஒப்பமின்மை.
சர்ச்சை (சருச்சை) - ஆராச்சி.
சர்த்தி (சத்தி) - வாந்தி.
சர்ப்பம் (சருப்பம்)- பாம்பு.
சர்ப்பனை (சற்பனை) - வஞ்சகம்.
சர்ப்பாகாரம் - அலகினால் இலக்கங்களை நிரைக்கும்வகைகளுளொன்று. (ஒரு வாக்கியத்தாற் சொல்லப்பட்டன பல வினவெண்களாயின் கீழும் மேலுமாக நிரைப்பது.
சர்வசித்து - ஓர் வருடம்.
சர்வஞ்ஞதை - முற்றறிவுடைமை.
சர்வதாரி - ஓர்வருடம்.
சர்வதோபத்திரம்- நான்குதிக்குகளிலும் வாயிலையுடைய ஓர்வகைவீடு, எப்பக்கத்திலிருந்து படித்துச்சென்றாலும் அச்செய்யுளேயாம்படிபாடுஞ் சித்திரக்கவி, ஓர்வகைப்பாத்திரம், (விவேகசிந்) வியூகவகை முப்பதுள் ஒன்று.
சர்வம் - எல்லாம்.
சலகுந்தலம் - பாசித்திரள்.
சலசம்- தாமரை.
சலசரம் - மீன், மீனராசி.
சலசல - நீரிலுண்டாகும் ஒலியின் குறிப்பு.
சலசலோசனன் - திருமால்.
சலசை - இலக்குமி.
சலஞ்சலம் - வலம்புரிகளுட்சிறந்தசங்கு.
சலதம் - முகில்.
சலதரம் - மேகம், *நீர்நிலை.
சலதளம் - அரசமரம்.
சலதாரை - நீர்க்கால், மதகு.
சலதி - சமுத்திரம், பொய்சொல்பவன், (சிலப் அரும்பத).
சலநிதி - சமுத்திரம்.
சலந்தரன் - ஓர் அசுரன்.
சலபதி - வருணன்.
சலபம் - விட்டிற்பறவை.
சலம் - அசைவு, இயங்குதிணை, கபடம், நெடுங் காலமாய் நிகழுங் கோபம்,

பொய், (நாலடி), நீர், மாறுபாடு,(மதுரைக்), துன்பம், (சளமெனவும்).
சலலம் - பன்றிமுள் (சலமென்பர் பிங்
சலலி- -முட்பன்றி. [கலர்)
சலவர்-நெய்தனிலமாக்கள்.
சலனம்- அசைவு, சஞ்சலம், கால்.
சலனன்- காற்று.
சலாகை - ஈட்டி, அம்பு, தெய்வவகன் மணி, நாராசம், பாய்ச்சு, சவளம்.
சலாங்கு - பொய்யாப்புள், ஓர்வகைக் கொதுகு, (மசகம்).
சலாசயம்- நீர்நிலை
சலித்தல்- அசைதல், இளைத்தல், சஞ்சலப்படுதல்.
சலிப்பு- சலனம்.
சலிலம்- நீர்.
சலீகம்- போர்.
சலூகை- அட்டை.
சல்லகம்- முட்பன்றி.
சல்லகி- ஆத்திமரம், முட்பன்றி.
சல்லடம்- குறுங்காற்சட்டை.
சல்லரி- திமிலைப்பறை.
சல்லாபம்- அளவளாவிப்பேசுதல்.
சல்லி- குடைகளிலும் பந்தர் முதலியவற்றிலும்முத்துமுதலியவற்றாற்செய்யப்படுந் தூக்கம், கள், பறைவிசேடம், (சல்லிகை), கல்முதலியன உடைந்த துண்டு, செப்புக் காசின் வகைகளுளொன்று, அதிமதுரம்.
சல்லியவாணி- அத்திரம் சத்திரம் முதலியவைகளாலுண்டான விரணங்களைத்தீர்க்கும் மருந்து, *எருக்கு.
சல்லியம்-முட்பன்றி,ஆணி, (இரகு திக்கு கூ), எலும்பு, விக்கினம், அம்பு.
சல்லியன்-நகுலனதும் சகாதேவனதும் மாமனாகிய ஓரசுரன், சுக்கிரன்,
சவடி- ஓர் ஆபரணம் (திருப்).
சவடு - செறிவு, கபடம் (அடைசிய சவடனை; திருப்).
சவட்டல்- கொல்லுதல், துவளச்செய்தல், வாயினால்மெல்லல்.
சவம்- பிணம், பிசாசம், மூங்கில், விரைவு.
சவரம்- சாமரம், மயிர்வினை,க்ஷௌரம்)
சவரர்-வேடர்.
சவரி - சாமரம்.
சவர்- உவர், விளையாநிலம்.
சவலை - குழந்தை, மெலிவு, இசைப்பா வகையுளொன்று (சிலப்).
சவலைவெண்பா-இரண்டாமடியும் நான்காமடியும் முச்சீராய்த் தனிச் சொல்லின்றி ஒரு விகற்பத்தான் வருவது. (உ-ம்: அட்டாலும் பால்சுவையில்; வாக்).
சவளம்-குந்தாயுதம், (இதுபெருஞ்சவளமும்சிறுசவளமும்என இருவகைத்து)
சவளுதல்-துவளுதல், வளைதல்.
சவள்- வள்ளமோட்டுங்கோல்.
சவனம்- பிறப்பித்தல், வேகம்.
சவனன்- வேகமுடையோன்.
சவி - ஒளி, அழகு, செவ்வை, மணிக்கோவை, சுவை, திருவிழா.
சவிதா-சூரியன், கடவுள்.
[சவுக்கு- குதிரைச்சவுக்கு.]
சவுத்தல்- விலைகுறைதல்.
சவை- சபை.
சவைமகள்-மிதுனராசி.
சவ்வரிசி- ஓர்வகைச்செய்கையரிசி.
சவ்வாது- சவ்வாதுப்பூனையினின்று எடுக்கப்படும் வாசனைத் திரவியம்.
சவ்வியசாசி- அருச்சுனன்.
சவ்வியம்- வலப்பக்கம்.
சவ்வீரம்- ஐம்பத்தாறுதேசங்களுளொன்று, பாஷாணவகைகளுளொன்று.
சழக்கு- பொய், நீதிக்குவிரோதமானது
சழங்குதல்- நழுவுதல், (பெரி தடுத் நக) பிதுங்குதல்.
சளி- குளிர், (சிர்), கோழை.
சளித்தல்- புளித்தல், பதனழிதல்.
சளுக்குவேந்தர்- சாளுவவேந்தர். (வேள்புலவரசரெனப்பிங்கல).
சறுக்குதல்- தவறுதல்.
சற்சலம்- தெளிந்தநீர்.
சற்சூத்திரன்- கல்வியறிவொழுக்கங்களையுடையவனாய் உழுவித்துச் சீவிக்குஞ் சூத்திரன். (இவன் வைசியனுக்குச்சமமாவான்).
சற்பாத்திரன்- கல்வி அறிவு ஒழுக்கம்முதலியவற்றால் தானமேற்றற்குத் தகுதியுடையோன்.
சற்று- அற்பம், எளிது.
சனகன் - பிதா, சீதாதேவியின்பிதா, பிரமாவின் புத்திரரான நான்குமுனிவருளொருவர்.

சனந்தனன் - பிரமாவின்புத்திரர்களான நான்குமுனிவர்களுளொருவர்.
சனபதம் - சிற்றூர், தேசம், வழி. (பாரத அருச்சுனன்றவநிலை உஎ).
சனமேசெயன் - பரீக்ஷித்து ராசனின்மகன்.
சனம் - மனிதர்கூட்டம், (சிறுபான்மை விலங்கு முதலியவற்றின் கூட்டமும்).
சனலோகம்- மேலேழுலகங்களுளொன்று.
சனற்குமாரன் - பிரமாவின்புத்திரர்களான நான்குமுனிவர்களுளொருவர்.
சனனம் - பிறப்பு.
சனனி - தாய்.
சனுதனம் -என்றுமுள்ளது.
சனுதனன் - பிரமபுத்திரர்களான நான்குமுனிவர்களுளொருவர்.
சனுர்த்தனம் - விஷ்ணுஸ்தலங்களுளொன்று.
சனுர்த்தனன் - திருமால்
சனி - ஓர்கிரகம், எழுவாரங்களுளொன்று.
சனு - பிறப்பு.
சன்மத்திரயம் - பிறந்தநட்சத்திரமும் அதன்கோண நட்சத்திரங்களிரண்டுமாகியமூன்றுநட்சத்திரங்கள்.
சன்மம் - பிறப்பு.
சன்மானம் - மரியாதைசெய்தல்.
சன்மித்தல் - பிறத்தல்.
சன்மினி - காளிக்கு ஏவல்செய்யும் ஒரு பெண்.
சன்னதம் - ஆவேசம்.
சன்னத்தம் - போர் முதலியவற்றிற்குச் செய்யும் ஆயத்தம்.
சன்னம் - மறைக்கப்பட்டது, துகள்.
சன்னவீரம் - ஓர்வகைவெற்றிமாலை. பெரிய கண் இக).
சன்னகம் - கவசம்.
சஸ்யம் - பயிர்.

## சா

சா-மரணம்-வில்லினுண், விருத்தத்தின் அல்லது விருத்தத்திஞோர் பகுதியின் குறுக்களவு.
சாகசம் (சாகதம்) - ஆலோசியாது (விரைத்து) யாதேனுமொரு கருமத்தைச் செய்தல். (பாரத திரௌ இஉ).
சாகம் - சிறுகீரை, இலைக்கறி, வெள்ளாடு, தேக்கமரம், (மணிமே புத்த சரிதம்), ஏழுதீவுகளுளொன்று.
சாகரம் - கடல், துயிலொழிதல்.
சாகாடு - பண்டி, (திருக். வலியறி ஒ) உருள். (புநா உஙசு).
சாகாமிருகம் - குரங்கு.
சாகி - மரம்.
சாகித்தியதர்ப்பணம் - (வடமொழியிலுள்ள ஓலங்காரநூல்).
சாகித்தியம் - கூட்டம், தொழில்முதலியனஇயைக்துநிகழ்தல். (மிடற்றிசையுடன் யாழிசை இயைந்துநடத்தல் போல்).
சாகினி-சிறுகீரை, சேம்பு, பாலாரிஷ்டதேவதைகளுளொன்று.
சாகேதம் - அயோத்திநகர்.
சாகை - சாதல், வட்டில், வேதம், வேதநூற்பிரிவு, மரத்தின்கிளை, தங்குமிடம்.
சாக்கடை - சலதாரை, சேறு.
சாக்காடு - மரணம், மூர்ச்சை.
சாக்கியன் - புத்தன், பெரியபுராணத்திற் சொல்லப்பட்ட திருத்தொண்டர்களுளொருவர்.
சாக்கிரம் - விழிப்பு.
சாக்கு - பை, பொன், சணல்நூலினுல் நெல் முதலியவைகளை யிடுதற்கு அமைக்கப்பட்டபை.
சாக்கை - அரசனுடையகருமத்தலைவன்.
சாங்கம் - அங்கத்தோடுகூடியது.
சாங்கியம்-கபிலமுனிவராற் செய்யப்பட்ட ஒருயோகநூல்.
சாசனம் - ஆளுகை, கட்டளை, சொல்லுதல்.
சாசுவதம் - என்றுமுள்ளது.
சாடல் - கொல்லுதல், சாய்த்தல், தண்டு முதலியவற்றால் தாக்குதல்.
சாடி-தாழி, கும்பராசி, வஸ்திரம், கோட்சொல்
*சாடிலி - தசைதின்போன்.
சாடு - புலவர்கூட்டம், இன்சொல், பண்டி.
சாட்சாத்காரம் - பிரத்தியட்சப்படுதல்.
சாட்சி - பிரத்தியட்சம், கண்டதுசொல்வோன்.
சாட்டியம் - வஞ்சகம், புத்தியின்மை.
சாட்டுதல் - தன்னுடைய உரிமைமுதலியவற்றைப் பிறரிற்சார்த்துதல்.
சாட்டுவலம் - பசும்புற்றரை.
சாணம் - பசுவின்சாணம், சாணைக்கல்,

தழும்பு, (மதுரைக் டுகஈ), சந்தன மரைக்குங்கல்.
சாணர் - வல்லவர்.
சாணி - பசுவின் சாணம்.
சாணை- சாணைக்கல், (இரத்தினங்களை வேகடஞ்செய்தற்கும் ஆயுதங்களைக் கூர்ப்படுத்தற்குமுரியது.
சாண்- அரைமுழம்.
சாண்டிலியன்- ஓர் முனிவர்.
சாதகம்- சனனகாலத்திலுள்ள கிரகநிலைமுதலியவற்றாலுணரும் பலாபலம், அந்தப் பலாபலன்களைக் கூறும்நூல். சனனபத்திரிகை,காரியசித்தி,பயிற்சி பூதம்,வானம்பாடியென்னும் பறவை.
சாதகருமம்- குழந்தைபிறந்தவுடன்செய்யுங் கிரியை.
சாதகர்- சைவாகமங்களிற் சொல்லப்படுஞ்சமயிமுதலியநால்வருள்மூன்றாம் பகுப்பார். (கூர்மபுராணத்தில் இல்வாழ்வார் சாதகன் உதாசீனனென இருவகையினரென்றும் அவருள் சாதகன் வாழ்நாள்வரையும் இல்லறத்தினிற்போனென்றும் கூறப்பட்டது.)
சாதம்- உண்மை, பிறப்பு, சோறு.
சாதரூபம் - நால்வகைப் பொன்களுளொன்று, பொன்.
சாதரூபி- அருகன்.
சாதல் -இறத்தல்,
சாதவேதா- நெருப்பு.
சாதனசதுட்டயம்- நித்தியாநித்திய வஸ்துவிவேகம் இகாமுத்திரார்த்த பலபோகவிராகம் சமாதிசட்க சம்பத்து முமுட்சுத்துவம் என்பன.
சாதனம்-உறுதி. பயிற்சிசெய்தல், ஏது, அடையாளம், கொலை.
சாதனை-சாதித்தல், பொய்.
சாதாக்கியம்-சிவத்தினது சத்திவிகற்பத்தோடுகூடிய வடிவங்கள். (சைவசித்தாந்தங்களிற் கூறப்பட்டன).
சாதாக்கியம் டு- கன்மசாதாக்கியம் கர்த்திரு சாதாக்கியம் மூர்த்தி சாதாக்கியம் அமூர்த்தி சாதாக்கியம் சிவ சாதாக்கியம் என்பன.
சாதாரண-ஓர்வருடம்.
சாதாரணம்- பொது.
சாதாரி- செவ்வழி யாழ்த்திறங்களுளொன்று.(முல்லைநிலத்திராகம்.)
[சாதாழை - கடலிலுண்டாகும் ஓர்வகைப்பயிர்].
சாதி- இனம்,கூட்டம்,குலம்,உயர்குலம்) சிறந்தது,சாதிக்காய், சாதிமரம்,தேக்கமரம்,பிரம்பு,மரப்பொது, சிறுசண்பகமரம், தாளப்பிரமாணங்களுளொன்று. கள்.
சாதிக்காய்-ஓர் சரக்கு.
சாதித்தல்- உறுதிப்படுத்துதல், பயிலுதல், வெல்லுதல், கொல்லுதல், செய்துமுடித்தல்.
சாதிபத்திரி- சாதிமரத்தின் இலையாகிய மருந்துச் சரக்கு.
சாதுருசியம்- ஒப்புமை.
சாதிலிங்கம்-ஓர்சரக்கு.
சாது-அருகன், சற்குணமுடையோன்.
சாதுரங்கம் - ஓர்வகைமாணிக்கம்.
சாதுரியம்-சாமர்த்தியம்.
சாதுர்மாஸ்யம்- ஓர்யாகம்,ஓர்விரதம்.
சாதேவம்- குழிநாவல்மரம்.
சாத்தகி- கிருட்டிணன்றம்பி.
சாத்தல்- ஆடை அணிமுதலியவற்றைச் சாத்துதல், அப்புதல்.
சாத்தவர் (சாத்தினர்) - குதிரைவீரர் (திருவாத (குதிரையி சஈ )
சாத்தனூர் - மணிமேகலை நூலாக்கியோன், (சீத்தலைச் சாத்தனூரென்பவருமிவரே).
சாத்தன்-அருகன், ஐயன், (சாத்தா எனவும்), சத்திமதத்தவன்.
சாத்தியம்- அநுகூலம், ஓர் யோகம், வைத்தியத்தினால் மாற்றப்படக்கூடிய நோய்
சாத்தியர்-தேவகணத்தருளொருபகுதியார்
சாத்திரம்-நூல்-
சாத்திரீயம்-சாத்திரவிதிக்கிணங்கியது.
சாத்து-திரள்.
சாத்துவிகம் - முக்குணங்களுளொன்று (ஞானம் தவம் மெய்ம்மை மேன்மை அருளுடைமை ஐம்புலனடக்கல் என்னுங்குணங்களையுடைமை).
சாத்துறி-பரணிக்கூடு. (சிந்தா கஅ0௬).
சாந்தபனம் - கிருச்சிரவகைகளுளொன்று. (கோமூத்திரம் கோமயம் பால் தயிர் நெய் தர்ப்பசலமென்னுமாறையும் ஒவ்வொருநாட்களுக்கொவ்வொன்றாகவுட்கொண்டு ஏழாநாளுபவாசமாயிருப்பது; முதநாளிற்பால்முதலி

யவற்றுளியைக்கதொன்றை யுட்கொண்டு மற்றைநாட்களிலுபவாசமாயிருத்தலென்பர் சிலர்).
சாந்தம் - அமைதி, பொறுமை, சந்தனக்கலவை, குளிர், சந்தனமரம்.
சாந்தன் - அருகன், காமமுதலிய முக்குற்றங்களையு மொழித்தவன், சந்திரன், புதன்.
சாந்தாற்றி - விசிறியின் விகற்பம்.
சாந்தானிகம்- பரம்பரையாயநுபவிக்கும்படிகொடுக்கப்பட்டநிலம் முதலியன.
சாந்தி - பஞ்சேந்திரியங்களையடக்குதல், குற்றங்களைத் தீர்த்தல். [று.
சாந்திக்கூத்து - கூத்தின்வகையுளொன்
சாந்திரம் - சந்திரனலறியப்படும் மாதம் வருடம் தினம் என்பன. (சந்திரன் சூரியனைப்பிரிந்து கூடுங்காலத்தை ஒவ்வொருமாதமாகவுடையது).
சாந்திராயணம் - ஓர்விரதம். (பூரணைமுதல் அமாவாசைவரை ஒவ்வொருபிடியன்னங்குறைத்தும் அமாவாசைமுதற் பூரணைவரை ஒவ்வொருபிடியன்னங்கூட்டியும்புசித்து அநுட்டிக்கப்படுவது).
சாந்தின்வகை ௪ - பீதம் கலவை வட்டிகை புலி என்பன.
சாந்து - சந்தனம், கலவைச்சாந்து.
சாந்துவம் - இன்சொல்.
சாந்தை - பூமி.
சாந்தோக்கியம் - ஓருபநிடதம்.
சாபம் - வில், தனுராசி, விலங்கின்குட்டி (சாபவெங்கோளரி); பாரத சம்பவ ௪0), சபிப்பு.
*சாபலன் - ஆட்டுவாணிகன்.
சாபல்லியம் - (சபலத்தன்மை), மனநிலையின்மை, செய்தொழிலின்பலனைப்பெறுதல்.
சாபறை - நெய்தற்பறை.
சாபாலம் - ஓருபநிடதம்.
சாபாலி - ஓர் முனிவர்.
சாப்பை - புற்பாய்.
சாமக்கிரி - உபகரணம்.
சாமந்தர் - சிற்றரசர், (சிலப் இந்திரன் விழ ௬௬ உரை), சேனைத் தலைவர். (திருவிளை மெய்க்கா ஙி).
சாமம் - மூன்றாம்வேதம், நால்வகை உபாயங்களுளொன்று, எழுநாழிகைகொண்டகாலம், இரா, அர்த்தராத்திரி, கருமை, பச்சை.
சாமரம் - கவரி, கழு.
சாமர்த்தியம் - வல்லமை.
சாமளம் - பச்சைநிறம்.
சாமளை - உமாதேவி.
சாமன் - மன்மதனுடையதம்பி, (சிங்),புதன்.
சாமானியம் - பொது. [தன்.
சாமி - அருகன், கடவுள், முருகவேள், தலைவன், குரு, பொன்.
சாமிமலை - கும்பகோணத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு சுப்பிரமணியத்தலம். (திருவேரகம்).
சாமியம் - ஒப்புமை.
சாமீகரம் - பொன்.
சாமீப்பியம் - சமீபித்திருத்தல்.
சாமுண்டி - துர்க்கை, காளி.
சாமுத்திரிகம் - ஆடவர்களதும் பெண்களதும் அங்கவிலக்கணங்களைக்கூறும் நூல்.
சாமை - புன்செய்த் தானியங்களுளொன்று.
சாம்பசிவன் (சாம்பன்) - தேவியுடன்கூடியிருக்குஞ் சிவன்.
சாம்பல்- சாம்பர், திருநீறு, பழம்பூ, நாவல்மரம், ஒடுங்குதல், சோர்தல், கெடுதல்.
சாம்பவம் (சாம்பேசம்)- உபபுராணங்களுளொன்று.
சாம்பவன் - இராமசுவாமியின் படைத்தலைவருளொருவன்.
சாம்பவி- பார்வதி.
சாம்பான்- புலையன். [டம்.
சாம்பிராணி- ஓர்மரம்,ஓர்வாசனைப் பண்
சாம்பு-சேக்கை, பறை, பொன்.
சாம்பூநதம்-மேருமலைக்குத்தெற்கிலுள்ள (நாவற்பழரசத்தாலாய)ஆறு, பொன்.
சாம்ராச்சியம்-ஏகசக்கிராதிபத்தியம்.
சாயகம்- அம்பு.
சாயம்- நிறம்.
சாயம்பு- சுவாயம்புமனு.
சாயரி- ஓர் பண்.
சாயல் - அழகு, தோற்றத்தினியல்பு, மென்மை, மேம்பாடு, நிறம், (உ-ம்: பசிய சாயன்மாது, மக்கட்படுக்கை.
சாயவேளாகொல்லி - கொல்லிப் பண்ணின்றிறங்களுளொன்று.

சாயனம் - கள்.
சாயாக்கிரகங்கள் - இராகுகேதுக்கள்.
சாயாநீர் - கானல்நீர்.
சாயாபுத்திரன் - சனி.
சாயானதம் - ஒந்தி, பச்சோந்தி.
சாயான்னம் - பகலின் ஐந்தாம்பாகம்.
சாயுச்சியம் - அத்துவிதமாகியமுத்தி.
சாயை - நிழல், சாயாதேவி, (சூரியன் மனைவியருளொருத்தி).
சாய் - திரள்கோரை, பனையின்செறும்பு. (திருமுரு உரை).
சாய்தல் - குலைந்தோடல், தோற்றல், நமுவிவீழ்தல், சரிதல், மெலிதல், (கவித்), திரும்புதல்.
சாய்த்தல் - அழித்தல், சரித்தல், திருப்புதல், அசைத்தல்.
சாய்ப்பு - தாழ்வு. (தாள்வாரம்).
சாரங்கதேவர் - வீரசைவரின்முதற்குரு.
சாரங்கம் - சாதகப்புள், மான், வண்டு.
சாரசம் - வெண்ணுரை.
சாரணர் - ஒற்றர், பதினெண்கணத்தருளொருசாரார், சமணமுனிவர்.
சாரதர் - பூதர்.
சாரதா - சரசுவதி.
சாரதி - தேர்ப்பாகன், பண்டிதன்.
சாரத்தியம் - தேர்முதலியவற்றைச் செலுத்துந்தொழில்.
சாரமேயன் - நாய்.
சாரம் - இரசம், செய்யுள் முதலியவற்றின்கருத்து, சிறந்தபொருள், (பாரதசூது களடு), இனிமை, பரவுமரம், மரவைரம், சலனம், நிலாமுகிப்புள், வியபிசாரம், ஆமருந்து.
சாரர் - ஒற்றர்.
சாரல் - மலைப்பக்கம், மலை, மருதயாழ்த்திறத்திலோரிசை.
[சாராயம் - வெறியைத்தரும் ஓர்வகைப்பானம்].
சாரி - போரில் இடமாய் அல்லது வலமாய்ச்சுற்றியோடல், சூறைக்காற்று, சூதாடுகருவியுளொன்று.
சாரிகை - சுங்கவிறை, சுழல்காற்று, வட்டமாய்ச்சுற்றியோடல், நாகணவாய்ப்புள்.
சாரித்திரம் - ஒழுக்கம்.
சாரிபை - நன்னாரி.
சாரியை - பகுதி விகுதிகளுக்கிடையிலும் இரண்டு பதங்களினிடையிலும் சார்ந்து இயைந்துநிற்கும் அன் ஆன் இன் முதலியன. எழுத்துக்களின் பின் சேர்ந்துநிற்கும் கரம் காரம் கான் முதலியனவுமாம்.
சாரீரம் - இன்னிசை.
சாரு - அழகு, கிளி.
சாருகன் - கொலையாளி.
சாருப்பியம் - ஒப்புமையானஉருவத்தை (கடவுளுடைய உருவத்தைப்) பெறுதல்.
சாரை - ஓர்வகைப்பாம்பு.
சார் - அணைகரை, அழகு, இடம், திண்ணை, பக்கம், எழனுருபு.
சார்ங்கபாணி - விட்டுணு.
சார்ங்கம் - விட்டுணுவின்வில், வில்.
சார்தல் - அடைதல், பொருந்துதல், கலத்தல், கிட்டுதல், ஒருபக்கஞ்சார்தல்.
சார்த்தல் - அடைவித்தல்.
சார்த்தூலம் - புலி
சார்ந்தோர் - சுற்றத்தார், சினேகிதர்.
சார்பறுத்தல் - துறவியாதல்.
சார்பிலார் - பகைவர், துறவிகள்.
சார்பு - உதவி, உரிமை, பற்று, சார்புநூல், பற்றுக்கோடு, கிட்டுகை, பிறப்பு, (சிக் பதுமை நிக), குருத்தைச் சார்ந்திருக்கும் பனையோலை, இடம்.
சார்புநூல் - முதனூல் வழிநூல்களுடன் பொருண் முடிபிற்பெரும்பாலுமொத்துக்காலத்துக்கேற்ற திரிபுகளையுணர்த்தும் நூல்.
சார்பெழுத்து - உயிருமெய்யு மாகிய எழுத்துக்களின் சார்பாகப்பிறக்குமெழுத்து.
சார்வபௌமம் - வடதிசையானை.
சார்வபௌமன் - ஏகசக்கிராதிபதி, சிவன்.
சார்வரி - ஓர் வருடம்
சார்வாகம் - உலோகாயதமதம்.
சார்வாரம் - கச்சின்றலைப்பு.
சார்வு - இடம், பற்றுக்கோடு, திண்ணை முதலியவற்றைச் சார்ந்திருக்குமிடம். (குங்குமமெழுதிச் சார்வுந்திண்ணையுங்குயிற்றி; சிந்), உதவி, உரிமை, பற்று.
சால (உரிச்சொல்) - மிக.
சாலகடங்கடர் - இராக்கதர்.
சாலகம் - பூவரும்பு, பலகணி.
சாலம் - கூட்டம், விலங்கின்கூட்டம்.

மதில், சாலமரம், கல்வி, குறளைமொழி, சாலவித்தை, வலை, பலகணி.
சாலர் - நெய்தனிலமாக்கள்.
சாலல் - அமைதல், மிகுதல், மேம்படல்.
சாலி - அருந்ததி, நெல், செந்நெல், கள்.
சாலிகை - கவசம்.
சாலிகோத்திரம் - குதிரை.
சாலிகோத்திரன் - ஒருமுனிவர்.
சாலியர் - ஓர் சாதியார். (நெய்வார்).
சாலினி - அருந்ததி, தேவராட்டி.
சாலிவாகனன் - ஓரரசன்.

இவன் இரண்டரைவயதுள்ள ஓர் கன்னிகையின்வயிற்றில் தெய்வசங்கற்பத்தாற் கருப்பமாகிக் குயவர் சேரியிற்பிறந்து வளர்ந்து அச்சேரியிலுள்ள சிறுவர்களுடன் விளையாடி வந்தான். அவன் விளையாடுங் காலங்களில் தான் அரசனாகவும் மற்றைச்சிறுவர்கள் மந்திரிமுதலிய அங்கத்தவராகவும் பாவித்து மண்ணினாற் செய்யப்பட்ட சிங்காசனத்தையும் யானை குதிரை முதலிய சேனைகளையும் உடையவனாய், இராச்சிய பரிபாலனஞ்செய்தலையேதினந்தோறும் விளையாட்டாகக்கொண்டான். சிலவருடங்கழிந்தபின் அவன் அந்த விளையாட்டினால் இராச்சியதந்திரங்களிலும் நீதிவிசாரணைகளிலும் தேர்ச்சியடைந்து தன்னிடத்தில்வரும் வழக்குமுதலியவற்றை எவரும் அதிசயிக்கத்தக்கவாறு உண்மைப்படி தீர்ப்புச்செய்துவந்தான். விக்கிரமாதித்தராசன் இவனால் தனக்கழிவுண்டாமென்பதையறிந்துஇவனைக்கொல்லும்படி படையெடுத்துவந்தான். அப்பொழுது சாலிவாகனனுடைய னவாகமண்ணினாற் செய்யப்பட்டிருந்த யானை குதிரை முதலியனவெல்லாமுயிர்பெற்றுப்பொருது விக்கிரமாதித்தனுடைய சேனையை அழித்தன. சாலிவாகனன் விக்கிரமாதித்தனைக்கொன்று அரசனானான். இவனுடைய அரசியல் தொடங்கியகாலமே சாலிவாகன சகாப்தத்தினாரம்பம்.

சாலுவம் (சாளுவம்) ருசு தேசங்களுளொன்று.
சாலுவன் - சிசுபாலனதுதம்பி.
சாலூரம் - மேன்மை, தவளை.
சாலேகம் - பூவரும்பு, பலகணி.
சாலேயம் - நெல்விளைநிலம்.
சாலை - அரசன்மனை, அறச்சாலை, கோயில், குதிரைப்பந்தி, *யானைதுயிலிடம்.
சாலோக்கியம் - கடவுளினுலகத்தையடைந்திருத்தல்.
சால் - தண்ணீர்முதலியவற்றை நிறைத்துவைத்தற்குரியஓர்வகைப்பாத்திரம் கும்பராசி, உழவுசால்.
சால்பு - குணம், மாட்சிமை, சான்றாண்மை, அமைதி.
சாவகம் - பதினெண்பாஷைகளுளொன்று, ஓர்தேசம்.
சாவகர் - சைனவிரதத்தோர் (மதுரைக்.)
சாவகாசம் - அவகாசமுடைமை.
சாவணம் - கைக்கு அகப்படக்கூடாத சிறுபொருள்களை இடுக்கியெடுக்குங்கருவி.
சாவதானம் - அவதானத்தோடு கூடியிருத்தல்.
சாவம் - மரணசௌசம்,
சாவனம் - சாவனமானம். (சூரியோதய முதல் மறுநாட்சூரியோதயம்வரை ஒருசாவனதினம். அப்படிமுப்பதுதினம் ஒருசாவனமாதம். அப்படிப்பன்னிரண்டுமாதம் ஒருசாவனவருடம்).
[சாவி - திறவுகோல், பதர்].
சாவித்திரி - பிரமாவின்மனைவியருளொருத்தி, தான்வரித்த கணவன் ஒருவருடத்துளிறப்பானென்பதை யறிந்தும் அவனையேமணந்து அருந்தவத்தால் அவனுடைய மரணத்தைத் தவிர்த்த ஒரு பதிவிரதை.
சாவு - பிசாசம், மரணம்.
சாவேரி - ஓரிராகம்.
சாழல் - (சாழை) மகளிர் கைகொட்டுதலாகிய விளையாட்டு. (வாதவூ புத் அகூ), மகளிர் விளையாட்டுக்கிளையைப் பாடும் ஓர்வகைப்பாட்டு.
சாளக்கிராமம் - ஓர்வகைச்சிலை, (இதில் விஷ்ணுவைப்பூசிப்பர்).
சாளரம் - பலகணி.
சாளிகை - பை. (கந்தரல எஅ).
சாறடை - சாறணையென்னும்பூடு.
சாறு - இலை முதலியவற்றிற்பிழிந்த சாறு, கள், திருவிழா, விவாகம், புளிக்கறி. (சாற்றுருசி; தனிப்பா), மரக்குலை.

சாறுதல் - வடிதல், களங்கூட்டுதல், நிறைதல், நிலத்தைச்சாறுதல்.
சாற்றுதல்- சொல்லுதல், பறையடித்தல் நிறைத்தல்.
சானகி - சனகராசனுடையபுதல்வி, (சீதை), மூங்கில்.
சானவி - கங்கைநதி.
சானு - மலைப்பக்கம், மலை, முழந்தாள்.
சான்மலி - இலவமரம், ஏழுதீவுகளுளொன்று.
சான்றவர் - அறிஞர், பலகுணங்களானிறைந்தவர்.
சான்றாண்மை- பல குணங்களானிறைந்து அவைகளை ஆளுந்தன்மை, (சால்புடைமை), பொறுமை. (உ-ம்: கதநன்றுசான்றாண்மை தீது.
சாண்றார் - சான்றோர், கள்விற்குஞ்சாதியார்
சான்று - சாட்சி.
சான்றோன் - சூரியன், அறிஞன், மிருகசீரிடநட்சத்திரம்.

## சி

சிகண்டம் - மயிற்றோகை.
சிகண்டி- மயில், மயிலிறண், அலி, (துருபதன் மகவாய்ப்பிறந்தசிகண்டி (இசை நுணுக்கமென்னும்நூல்செய்தமுனிவர், பாலையாழ்த்திறத்தோரிசை. (ஆசானென்னும்பண்ணின் புறச்சாதியென சிலப் புறஞ்சேரி ககஉ உரை).
சிகண்டிசன் - வியாழன்.
சிகதம் - வெண்மணல், மணற்குன்று,
சிகரம் - மலை, மலைமுடி, வட்டில், தலை, தலைச்சீரா, திரை, நீர்த்துளி, உயர்ச்சி, கோபுரம்.
சிகரி - கோபுரம், மலை, எலி, சிற்றெலி, கருநாரை.
சிகழி - குடுமி, உச்சி.
சிகழிகை - மயிர்முடி, கோத்தமாலை, தொடுத்தமாலை, சிகைமாலை.
சிகாவளம் - மயில்.
சிகி - மயில், நெருப்பு, கேது.
சிகிற்சை - வைத்தியம்.
சிகுவை - நாக்கு, கண்ணில்நிற்கும் நரம்பு. (தசநாடிகளுளொன்று).
சிகை - குடுமி, கொண்டை, (சிந் பதுமை கசுஅ), அக்கினிச்சுவாலை, தலை, கக மந்திரங்களுளொன்று, மலைச்சிகரம், சேடம், (வாதவூ மந்திரி க), பதார்த்தம், (மறசிகைநீக்கியுண்பாரும்; நாலடி அறத்துப்).
சிக்கடி - அவரை.
சிக்கம் - உறி, செம்பு, காரீயம், குடுமி, சீப்பு, வார்.
சிக்கல் - ஓர் தலம், சிக்குப்படுதல்.
சிக்கு- மயிர்முதலியவற்றின்சிக்கு, எண்ணெய் முதலியவற்றின்பற்று, மாசு.
சிக்குதல் - மாட்டப்படுதல், இறுகுதல், கடினமாதல். (சிக்கவொறுத்தலல்லதை; திருவிளை).
சிக்குரு - முருங்கைமரம்.
சிக்கெனவு-இறுக்கம், கட்டுப்பாடு, வன்மையுற்றிருத்தல்.
சிங்கநகம் - நடனத்துக்குரிய சரணங்களுளொன்று.
சிங்கநாதம் - கொம்பினாற்செய்யப்பட்ட ஒருவகைவாத்தியம்.
சிங்கநோக்கு - இலக்கணச்சூத்திரநிலை நான்குளொன்று. (முன்னும்பின்னும் பார்த்துநிற்றல். [தம்பி).
சிங்கமுகன் - ஓரசுரன். (சூரமன்மனது
சிங்கம் - ஓர்மிருகம், சிங்கராசி.
சிங்கல்-குறைதல், கெடுதல், இளைத்தல்.
சிங்கவர்மன் - ஓரரசன்.
சிங்கவாகனி- துர்க்கை, பார்வதி.
சிங்களம் - ஈழதேசம், அத்தேசத்தில் வழங்கும்பாஷை, ஓர் கூத்து. (திருவிளை கான்மாறி கo)
சிங்கன் - குறவன்,
சிங்காசனம்- சிங்கங்கள் சுமப்பதுபோற்செய்யப்பட்டஆசனம். (அரசர்க்குரியது).
சிங்காரம் - அலங்காரம், சிருங்காரரசம்.
சிங்கி - நஞ்சு, சுக்கு, (சிந்தா)
சிங்கிகைபுதல்வன் - கேது.
சிசிரம் - பின்பனிக்காலம். (மாசி பங்குனிமாதங்கள்).
சிசு - குழந்தை.
சிசுபாலன் - இடைவள்ளலெழுவருளொருவனான அரசன்.
சிசுருஷை - குரு முதலியவர்களுக்குச் செய்யுங் குற்றேவல்.
சிச்சிலி- சிரற்புள்.
சிஞ்சம்- புளிமா.
சிஞ்சிதம் - ஆபரணங்களசைதலாலெழு மொலி

சிஞ்சினி- வில்நாண்.
சிஞ்சுபம்-அசோகமரம்.
சிஞ்சுமாரம்- முதலை.
சிஞ்சை-நாஞெலி, புளிப்பு,புளியமரம்.
சிட்சகன்-தண்டஞ்செய்பவன்,பயிற்றுப வன்.
சிட்சித்தல்- பயிற்றுதல், தண்டித்தல்.
சிட்சை-வேதாங்கங்களுளொன்று. வேதமோதுமுறையைக்கூறுவது. பயற்சி, தண்டனை.
சிட்டம்- சேடமானது, சிறந்தது.
சிட்டன்- பெரியோன்.
சிட்டி- படைப்பு.
சிட்டுக்குருவி-ஓர்வகைக்குருவி.
சிட்டுணு- மது கைடபர்என்னும் அசுரரைக்கொல்லும்பொருட்டுத்திருமாலினுலுண்டாக்கப்பட்ட இருவருளொருவர்.
[சிணி- கெட்டநாற்றம்.].
சிணுங்குதல்- மூக்கினலழுதல் (தனிப்).
சிதகம்- தூக்கணங்குருவி.
*சிதகல்-உருவுதல்.
சிதடன்- குருடன், மூடன்.
சிதடி- சிள்வீடு, அறிவிலான்.
சிதடு-குருடு. (புறநா உஅ).
சிதம்- வெண்மை,ஞானம், *விண்மீன், (பிங்), வெளிப்பட்டது, *வாயில்.
சிதம்பரம்-ஓர் சிவதலம்.
சிதம்புதல்- பதனழிதல்.
சிதர்- துளி, சிச்சிலிக்குருவி, உறி, சேலைத்துணி, பூந்தாது, துகள், வண்டு, [சிதரம் எனவும்.
சிந்தல்-சிதறுதல்.
சிதலை-சேலைத்துண்டு,நோய்,கறையான்,
சிதல்-புண்ணின்சீழ், கறையான், ஈயல்.
சிதவல்- சேலைத்துணி, சிதறுதல், புரையோடுபுண்.
சிதறுதல்- சிந்துதல்.
சிதன்- சுக்கிரன், *அச்சமுள்ளோன்.
சிதாகாசம், ஞானுகாசம், சிதம்பரம்.
சிதார்(சிதர்)- வஸ்திரத்துண்டு.
சிதிலம்- நெகிழ்வு.
சிதை-ஈமவிறகினடுக்கு, மரக்கலத்தின் பாய்மரம், (தெய்வநீறு மைந்தெமுத்துமேசிதைக்கலனுக; திருவிளை நகர அஅ),
சிதைதல்- கெடுதல், தேய்தல்.
சிதைவு-கேடு.
சித்தசன்-மன்மதன்.
சித்தசுத்தி- மனத்தூய்மை.
சித்தம்- மனம், அந்தக்கரணம் நான்கிலொன்று, (உண்மையுணர்தல்,) நிச்சயம், சித்தியைத்தருவது. (உ-ம்:சித்தயோகம்.
சித்தர்- பதினெண் கணத்தருளொருசாரார், அட்டமா சித்திகளைப் பயின்றோர், ஞானிகள்.
சித்தன்-அருகன்,அகத்தியரின் புதல்வர், (கந் அகத் உஅ), வைரவக்கடவுள்.
சித்தாந்தசாராவலி- வடமொழியிலுள்ள ஓர் சைவசித்தாந்தநூல்.
சித்தாந்தசிரோமணி- வடமொழியிலுள்ள சோதிடகணித சித்தாந்தங்களுட்சிறந்தது. (பாஸ்கராசாரியாராற் செய்யப்பட்டது).
சித்தாந்தம்-துணிபொருள், சோதிடசித்தாந்தம் சைவசித்தாந்தம் முதலிய நூல்வகைகள்.
சித்தார்த்தம்-வெண்கடுகு.
சித்தார்த்தி-ஓர்வருடம்.
சித்தி- அணிமைமுதலிய எண்வகைச் சித்தி, மோட்சம், உஎ யோகங்களுளொன்று.
சித்தி அ - அணிமை மகிமை கரிமை லகிமை பிராப்தி பிராகாமியம் ஈசத்துவம் வசித்துவம்என்பன.
சித்தித்தல்-சித்தியாதல்.
சித்திரகம்- ஆமணக்கு, கொடிவேலி.
சித்திரகவி- கோமுத்திரி கூடசதுக்கம் மாலைமாற்று முதலிய சித்திரப்பாக்கள், சித்திரங்களைப் பாடும் புலவன்.
சித்திரகாயம்-புலி.
சித்திரகாரர்- சித்திரஞ்செய்வோர்.
சித்திரகுத்தன்-யமனுடைய கணக்கன். இவன் சீவான்மாக்கள் செய்யும் நல்வினை தீவினைகளையெழுதிக்கணக்கிடுவோன்.(இருவராகக்கூறுவர் சிலர்.
சித்திரகூடம்- ஓர்மலை, மாளிகையினோர் பேதம், திருவி எல்லாம்வல்லசித் எ.
சித்திரசேனன்- ஓர்கந்தருவன், (இவன் சூரியன்முன் பாடுவோன்), கன்னன் மகன், துரியோதனனது தம்பிமாருளொருவன். (வேறும் இப்பெயருள்ளார்பலர் காணப்படுகின்றனர்).
சித்திரபானு-சூரியன், அக்கினி, ஓர்வருடம்.

சித்திரபாலாவி-ஓர்பூடு.(சிற்றிலைப் பாலாவியெனவும் வழங்குகின்றனர்).
சித்திரமூலம்- கொடிவேலி.
சித்திரம் - அதிசயம், பேரழகு, சித்திரவேலை, ஆமணக்கு, (சித்திரகம் எனவும்), கொடிவேலி, சிற்ப நூல்களுளொன்று, சித்திரித்தவடிவம், சித்திரகவி, மெய் போலத் தோன்றும் பொய்மொழி.
சித்திரரதன்- சூரியன், ஒரு கந்தருவன்.
சித்திரரேகை - குபேரன்மனைவி.
சித்திரர் - சித்திரகாரர், தச்சர்.
சித்திரவதை- விரைவில்உயிர்போகாமற் செய்யும்பலவகையான ஊறுபாடு. (சிறிதுசிறிதாய் வெட்டிக்கொல்லலென்பர் சிலர்).
சித்திராங்கதன் - குருகுலத்தரசருளொருவன்,விஞ்சையர்வேந்தரிலொருவன்
சித்திராசனம்-கம்பளம்.
சித்திரிகை - வீணையின்பேதங்களுளொன்று.
சித்திரித்தல்- உருவமுதலியவற்றைப்பட முதலியவற்றுளெழுதல், அலங்கரித்தல்.
சித்திரை - சித்திரைநட்சத்திரம், சித்திரைமாதம்.
சித்தினி - நால்வகைப் பெண்களுளொருத்தி.
சித்து - ஞானம், அட்டமாசித்திகளின் பயிற்சி, பிரமம், வெற்றி, அறிவுடைப் பொருள், ஆன்மா, யாகம்.
சிந்தகம் (சிந்தம்) - புளியமரம்.
சிந்தடி - முச்சீரால்வருமடி.
சிந்தனை-எண்ணம்,நினைத்ததுசொல்லல்
சிந்தன் -குறளன், தூக்கணங்குருவி.
சிந்தாமணி - தேவமணிகளுளொன்று. (இந்திரனணியுமணி), சீவக சிந்தாமணியென்னுங்காப்பியம், (திருத்தக்கதேவரென்னும் சைனமுனிவர் செய்தது, நோய்களைத் தீர்க்கும் ஓர் மருந்து, (தனிப்பா).
சிந்தித்தல்-நினைத்தல், ஆராய்தல்.
சிந்தியல்வெண்பா- மூன்றடிகளையுடையவெண்பா. (இதுநேரிசைவெண்பாவைப்போல்வரின்நேரிசைச்சிந்தியல் வெண்பாஎனவும் இன்னிசைவெண்பாவைப் போல் வரின் இன்னிசைச் சிந்தியல்வெண்பா எனவும் படும்.
சிந்து - கடல், இசைப்பாவகையுளொன்று, (சிலப் கடலாடு கூஉ உரை), முச்சீரடி, சிந்துநதி, நதி, குறளினின்று சிறிதுநெடிதானவடிவம். (மணிமே). ருகூ தேசங்களுளொன்று, ஈர். பதினெண்பாஷைகளுளொன்று.
சிந்துதல் - சிதறுதல், ஒழுகுதல், சொரிதல், கெடுதல்.
சிந்துபுரம்-செயந்திபுரம்.
சிந்துரம்-யானை, யானைமுகம், செவ்வியமென்னும் மருந்துமூலம்.
சிந்துவாரம்-கருநொச்சி, (குறிஞ் அசு), வெண்ணொச்சி, வில்.
சிந்தூரம்- சிவப்பு, சிந்தூரமென்னும் மருந்து, சிவப்புக்குடை, சிவப்புத்திலகம், புளியமரம், வெட்சிச்செடி, சில பொருள்களிற் சிந்தூரம்எனவும்.
சிந்தை-மனம்,ஆலோசனை,மனக்குறிப்பு
சிந்தைகூரியன் - புதன்
சிபி- ஓர் சக்கிரவர்த்தி. (அடைக்கலம்புகுந்த புறவைக்காக்கும்படி அதனைக் கொல்லவந்தபருந்துக்குத் தன்சரீரத்திலுள்ளதசையையரிந்து கொடுத்துப் பெருமைபெற்றவன்).
[சிப்பம் - சிறுகட்டு].
சிப்பி - இப்பி, கிளிஞ்சில்.
சிமயம் - மலை, மலையுச்சி, உச்சி, (நெடுநல்), பொதியமலை, இமையமலை.
சிமி - குடுமி.
சிமிலம் - மலை.
சிமிலி - உறி, (மணிமே மலர்வன அசு), குடுமி, (உபதேச), சிள்வண்டு.
சிமிழ் - செப்பு
சிமிழ்த்தல் - கட்டல், அகப்படுத்தல்,இமைத்தல். (சேதபு).
சிமுக்கிடுதல் - அசைத்தல், சிற்றொலிக் குறிப்பு.
சிமை - மலையினுச்சி. (புறநா கஉ0).
சிம்பு - இரும்புத்துகள், இளம்வளார், சிராய், தும்பு. (சிந்தா).
சிம்புதல் - ஒலித்தல், துள்ளல், கயிறு முதலியவற்றையிளகவிட்டபின் விசைத்திழுத்தல்.
சிம்புளாஞேன் - வீரபத்திரக்கடவுள்.
சிம்புளி - செம்படாம்.
சிம்புளித்தல் - கண்மூடியிருத்தல்.(சிம்

மாந்து சிம்புளித்து; சந் தேவார).
சிம்புள் - சாபப்பறவை.
சிம்பை - அவரை.
சியாலசாரமேயநியாயம் - ஒன்றை மற்றொன்றாய்விளக்கிச் செய்தலைக்குறிக்கும் ஓர்நியாயம். (நாயகன் நாயைவிலக்கி விடும்படிசொல்ல, மனைவி தன் சகோதரனுக்கும் தான்வளர்க்கும் நாய்க்கும் பெயரொன்றாயிருத்தலால் தன்சகோதரனை விலக்கும்படி கூறினனெனநினைத்து, அச்சகோதரனை விலக்கி விடுதல்போன்றது).
சியாலன் - மைத்துனன்.
சியாவத்சம் - சேனைவியூகங்களுள் ஒன்று.
சியேனம் (சேனம்) - பருந்து, சேனைவியூகங்களுள் ஒன்று.
சிரகம் - கரகம், தலை, தலைத்திராணம்.
[சிரங்கு - ஓர் வகைப்புண்]
சிரசு - தலை.
சிரஞ்சீவி - நெடுங்காலம் வாழ்வோன்.
சிரஞ்சீவிகள் எழுவர் - அச்சுவத்தாமன் மாவலி, வியாசன், அனுமான், விபீஷணன், கிருபாசாரியன், பரசுராமன் என்பவர்கள்.
சிரத்தல் - தேய்த்தல்.
சிரத்தன் - பிரதானி.
சிரத்தை - விருப்பம், அன்பு, நம்பிக்கை.
சிரபுரம் - சீகாழி.
சிரமம் - யுத்தப்பயிற்சி, ஆயாசம்.
சிரம் - தலை, உயர்ச்சி, நெடுங்காலம்.
சிரல் - சிச்சிலிக்குருவி, (சிரலையெனச் சிவராத்)
சிரவணம் - காது, கேட்டல், திருவோணநட்சத்திரம்.
சிரவம் - கவுதாரி.
சிரறல் - சிதறுதல், கோபித்தல், (பொருந கஉச).
சிரற்றல் - ஒலித்தல், எடுத்தலோசையாய்ச் சத்தமிடல்.
சிராத்தம் - இறந்தோரைக் குறித்துச் செய்யுங்கிரியையின்வகைகள் (அவை பிரேதசிராத்தமெனவும், பிதிர்சிராத்தமெனவு மிருதிறப்படும். பிரேதசிராத்தம்ஏகோதிட்ட முதலியன. பிதிர் சிராத்தம் சபிண்டீகரணத்தின் மேற் செய்யும் பிரத்தியாப்திகமுதலியன.
சிராத்தம் கூசு - சங்கிராந்தி பன்னிரண்டும் அமாவாசை பன்னிரண்டும் மன்வாதி பதினான்கும் யுகாதி நான்கும் வைதிருதிபன்னிரண்டும் வியதீபாதம் பன்னிரண்டும் மகாளயம் பதினாறும் அட்டகை ஒன்றும் அன்வட்டகை ஒன்றும் திஸ்ரோஷ்டகைபன்னிரண்டும் ஆகிய சிராத்தவகைகள். (இவை ஷண்ணவதிஎன்றுஞ்சொல்லப்படும்).
சிராந்தி - இளைப்பு.
சிராய் - செறும்பு.
சிராவணம் - கல். சிராவணமாதம். பெரும்பாலும் சிரவணநக்ஷத்திரத்திற் செய்யப்படுதலால் உபாகர்மத்துக்கும் பெயராக வழங்குகின்றது.
சிராவணி - திருவோண நக்ஷத்திரத்துடன் சம்பந்தித்த பூரணை.
சிராவம் - நான்கு மாதங்களுட் கருவழிதல்.
சிரிதம் - தளிர்பட்டைமுதலியவைகளை நீரிலிட்டு காய்ச்சிய கஷாயம்.
சிரித்தல் - நகைத்தல்.
சிரீடம் - வாகைமரம்.
சிருகாலம் - நரி.
சிருங்கம் - மலைமுடி, விலங்கின்கொம்பு.
சிருங்கலை (சிருங்கலம்) - விலங்கு.
சிருங்கவேரம் - இஞ்சி.
சிருங்காடகம் - நான்கு தெருக்கள் சந்திக்குமிடம். சேனை வியூகங்களுள் ஒன்று. (சிருங்காடம் எனவும்)
சிருங்காரம் (சிங்காரம்) - காமவின்பத்தால் விளையுமுவகை, அழகு.
சிருங்கி - சுக்கு, மான்வயிற்றிற் பிறந்த ஒரு முனிவர். (மணிமே)
சிருட்டி - படைப்பு.
சிருட்டித்தல் - படைத்தல்.
சிரும்பணம் - கொட்டாவி விடுதல்.
சிரேட்டம் - சிறந்தது.
சிரேட்டியர் - வைசியர்.
சிரேணி - நிரை, சேரி, இடையர்சேரி, தெரு.
சிரை - நரம்பு.
*சிரைத்தல் - மயிர்கழித்தல்.
*சிரையன் - நாவிதன்.
சிரோந்தம் - செறிமயிர்.
சிரோமுட்டி - கீழ்நோக்கியெய்தல்.
சிரோருகம் - தலைமயிர்.
சிரோவேட்டனம் - தலைச்சீரா.
சிரௌதம் - வேதவிதிப்படி செய்யும் (யாகமுதலிய) கிரியைகள்.

சில - குறித்த தொகையானவைகளுள் ஒரு பகுதி.
சிலகம் - சட்டுவம்.
சிலதர் - மருதநிலமாக்கள், ஏவல் செய்வோர்.
சிலதியர் - ஏவல் மகளிர்.
சிலந்தி - நூல்கட்டும்பூச்சி, ஓர்மரம். (இதன் காயைக் குரங்குண்பதென இராமா சுந்தர பஞ்சசேனு க).
சிலந்திக்கொடி - தலைச்சுருள் வள்ளி.
சிலப்பதிகாரம் - பஞ்ச காவியங்களுள் ஒன்று. (இளங்கோவடிகளென்னுஞ் சேரமுனிவரியற்றியது).
சிலம் - சிலம்பு, (சிங் நாமக ௧௫௫).
சிலம்பல் - யாழ்நரம்போசை.
சிலம்பன் - முருகக்கடவுள், குறிஞ்சி நிலத்தலைவன்.
சிலம்பி - சிலந்திப்பூச்சி. [ஒலி.
சிலம்பு - காற்சிலம்பு, மலை, பக்கமலை,
சிலம்புகழித்தல் - ஓர் சடங்கு, (ஐங்குறு ௩௧௧).
சிலம்புதல்-ஒலித்தல், சிலம்பு சத்தித்தல்.
சிலாக்கியம் - புகழ்பெற்றது.
சிலாதரன் - சிலாதன். (நந்திதேவரது பிதா).
சிலாவட்டம் - சாணைக்கல். சந்தனம் அரைக்குங் கல்.
சிலிட்டம் - கலப்பு, ஒன்றையொன்று இறுகத்தழுவி நிற்றல். பத்துவகையான வைதர்ப்பநெறிகளுள் ஒன்று.
சிலிர்த்தல் - *தளிர்த்தல். (பிங்), புளகித்தல்.
சிலீமுகம் - அம்பு, முலைக்கண், வண்டு.
சிலுகு - சண்டை. (வாஞ்சையுறத்தழுவிச் சிலுகிட்டவர்; சிலுகிடுமசுரரை; திருப்), துன்பம்.
சிலுசிலுத்தல் - அலட்டுதல்.
சிலுப்பல் - ஒலிபிறக்க அசைத்தல், கலக்கல், மோர்கடைதல்,
சிலும்பல் - ஒலித்தல், ஒலியுடன் நீர்முதலியன கிளம்புதல்.
சிலுவை - கொல்லப்படுபவர்களை யறையும் மரம்.
சிலேடம் - கலந்துநிற்றல்.
சிலேடை - பலபொருள்விளைவச் சொற்களை தொடுத்திசைத்துப் பாவியற்றல். (இது செய்யுளணிகளுள் ஒன்று)

சிலேட்டுமம் - சேடம்.
சிலை - கல், மலை, இந்திரவில், வில், விஞ்ஞலாகிய தழும்பு, (சிங்). தனுராசி, ஒருமரம், (பிங் ௩௫௨௮), ஒலி, மனோசிலை, மூலநட்சத்திரம்.
சிலைத்தல் - தொனித்தல், (பெரிய கண்ணப் ௭௭) கோபித்தல், யாழ் நரம்போசை.
சிலோச்சயம் - மலை.
சில் - வட்டப்பொருள், பொன்வட்டத் தகட்டணி, (அஞ்சிலோதியின் மேனகை கந்)
சில்காற்று - தென்றற்காற்று, (மதுரை ௩௫௮)
சில்சொல் - மென்சொல் (திரிகடு).
சில்பதவுணவு - உப்பு (பெரும்பா ௬௪);
சில்லம்-சிறுதண்டு. (சேதுகந்தமா ௮௦). தேற்றுமரம். (தேற்ரு).
(சில்லறை - அற்பமானதொகை).
சில்லி-கண்ணறை, வட்டம், சிறுகீரை, தேருருள், சிள்வீடு. நீர்ப்பறவைவிசேடம். (மணிமே; சில்லையெனவும்.
சில்லிகை - சிள்வீடு, வஸ்திரத்துண்டு.
சில்லெனல் - குளிர்தல்.
சில்லை - இழிவு, கிலுகிலுப்பை, பிரண்டை, பகண்டை யென்னும் பறவை, (திக ௩ ௬௦; சிவற்பறவை யென்பர்). சிள்வண்டு, வேசை, (நாலடி பொதும ௭).
சில்வாய் - கடைவாய்.
(சில்வானம் - சேடம்).
சிவகங்கை - ஓரூர், சிதம்பரத்திலுள்ள ஒரு தீர்த்தம்.
சிவகணம் - சிவனைச் சேவிக்கும் பரிவாரங்கள்.
சிவகதி - மோட்சம்.
சிவகதிக்கிறை - அருகன்.
சிவகரந்தை - ஓர் பூடு.
சிவகாமசுந்தரி - சிதம்பரத்திலிருக்கும் தேவி.
சிவசின்னம் - சிவபத்த னென்பதற்கு அடையாளங்களாகிய விபூதி உருத்திராக்கம் என்பன.
சிவஞானசித்தியார்-சைவசித்தாந்த நூல்களுளொன்று. (அருணந்திசிவாசாரியர் செய்தது).
சிவஞானபோதம் - சைவசித்தாந்தநூல்

களுளொன்று. (மெய்கண்டார் செய்தது).
சிவணல் - அளவளாவுதல், இட்டல், நட்பாடல், ஒத்தல்.
சிவதருமோத்தரம் - ஓர் நூல். (மறைஞானசம்பந்தர் வடநூலிலிருந்து மொழிபெயர்த்தது).
சிவதை - ஓர் கொடி. [பிதா.
சிவபாதவிருதயர் - திருஞானசம்பந்தரின்
சிவபுராணம் - சிவனைப் பரமாகக்கூறும் (சைவமுதலியபத்துப்) புராணங்கள்.
சிவபூசையியல்பு ச - சரியை கிரியை யோகம் ஞானம் என்பன.
சிவப்பிரகாசம் - சைவசித்தாந்தங்களுள் ஒன்று (உமாபதிசிவாசாரியர் செய்தது.)
சிவப்பிரகாசர் - பிரபு லிங்கலீலை நன்னெறிமுதலிய நூல்களைச்செய்த ஓர் வீர சைவர்.
சிவப்பு - சிவப்பு நிறம், கோபக்குறிப்பு, கோபம்.
சிவம் - சைவசமயத் தத்துவங்களுள் ஈற்றிலுள்ள தத்துவம், பிரமம், நன்மை, முத்தி, குறுணி.
சிவராத்திரி - சிவ விரத தினங்களுள் ஒன்று. (மாசிமாதத்தில் அபரபக்கச் சதுர்த்தசி அர்த்தராத்திரியில் அமையுந்தினம்.)
சிவரூபம் உ௫ - சந்திரசேகரர் உமாமகேசர் இடபாரூடர் சபாபதி கல்யாணசுந்தரர் பிக்ஷாடனர் காமாரி காலாரி திரிபுராரி சலந்தராரி மாதங்காரி வீரபத்திரர் ஹரியர்த்தர் அர்த்தநாரீசுபர் கிராதர் கங்காதரர் சண்டேசாநுக்கிரகர் நீலகண்டர் சக்கரப்பிரதர் கஜமுகாநுக்கிரகர் சோமாஸ்கந்தர் ஏகபாதர் சுகாசீனர் தக்ஷிணாமூர்த்தி லிங்கோற்பவர் என்பவர்களின் வடிவங்கள்.
சிவலிங்கம் - சிவனைப் பூசித்தற்குத்தக்க ஓர் வகைச்சிலை. (இது சுயம்பு தைவிகம் ஆரிடம் மாநுடம் என நால்வகைப்படும். சுயம்பு: தானே தோன்றியது. தைவிகம்: விஷ்ணு முதலிய தேவர்களாற்பூசிக்கப்பட்டது. ஆரிடம்: இருடிகளாற் பூசிக்கப் பட்டது. மாநுடம்: மாநுடரால் பூசிக்கப்பட்டது. கணத்தவர்களாற் பூசிக்கப் பட்டது காணலிங்கமென்பர் சிலர். பாணாசுரனாற் பூசிக்கப்பட்டது பாணலிங்கம் எனப்படும். வேறும் பேதங்களைக் கூறுவர் சிலர்).
சிவல் - ஓர்பறவை. (பெரிய திருக்குறிப் சச).
சிவவாக்கியம் - சிவவாக்கியராற் செய்யப்பட்ட ஒரு நூல்.
சிவவிந்து - இரதம்.
சிவளிகை - பெருஞ்சூட்டு.
சிவனருளும் முத்தி ச - சாலோக்கியம் சாமீப்பியம் சாரூப்பியம் சாயுச்சியம் என்பன. (இவற்றுள் முன்னைய மூன்றையும் பதமுத்தியெனவும் பின்னையதைப் பரமுத்தியெனவும் கூறுவர்.)
சிவனார்வேம்பு - ஓர் செடி.
சிவனெண் குணம் - தன்வயத்தனாதல் தூயவுடம்பினனாதல் இயற்கை யுணர்வினனாதல் முற்றுமுணர்தல் இயல்பாகவே பாசங்களினீங்கி நிற்றல் பேரருளுடைமை முடிவிலாற்றலுடைமை வரம்பிலின்பமுடைமை என்பன. (பிங்கலத்தில் வேறுகூறப்பட்டன).
சிவன் - சிவபெருமான்.
சிவன்முகம் ரு - ஈசானம் தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்பன.
சிவிகை - தண்டிகை. [மீன்.
சிவிங்கி - ஒருபறவை, ஒருமிருகம், ஒரு
சிவிடு - ருகூ௦ நெற்கொண்டஒருஅளவை.
சிவியார் - அரசர் முதலாயினோரேறுஞ் சிவிகையைச் சுமந்து செல்வோர்.
சிவிறி - நீர்வீசுந் துருத்தி. (நெடுங் துருத்தியெனச் சிந்), விசிறி.
சிவுகம் - தாடி.
சிவேதை - சிவதைக் கொடி, சிந்திற்கொடி, தெற்குத்திக்கு, *நாணற்புல்.
சிவை - பார்வதி, காளி, துர்க்கை, நரி, மரவேர், கொல்லனுலைமூக்கு, உலைத் துருத்தி.
சிள்வீடு - சிள்வண்டு.
சிறகு - பக்கம், பறவைகளினிறகு, *தெரு.
சிறக்கணித்தல் (சிறைக்கணித்தல்) - புறக்கணித்தல், பார்க்காதவர் போலப் பார்த்தல்.
சிறங்கணித்தல் - சுருக்குதல்.

[சிறங்கை-கைசிறைந்த அளவு. (முட்டி நான்கு கொண்டது.)]
சிறத்தல்- மகிமைப்படல், அழகுபெறல், பொதுவாகாதுஒன்றற்குச் சிறப்பாய் நிற்றல், மிகுதல்.
சிறந்தோர்- சுற்றத்தவர்.
சிறப்பிலாதாள்-மூதேவி.
சிறப்பு- உபசாரம், வரிசை, விழா, மிகுதி, செல்வம், தலைமை.
சிறப்புப்பாயிரம்-நூலின் பெயர்முதலியவற்றைச்சிறப்பித்துக்கூறும்'பாயிரம்
சிறப்புவிதி- ஒன்றற்கு அல்லது சிலவற்றிற்குச் சிறப்பாய்ச்சொற்றுய் விதி.
சிறவு- சிறப்பு.
சிறார்-சிறுவர்கள்.
சிறிது- அற்பம்.
சிறியசிந்தையர்-கீழோர்.
சிறியர்- அற்பர், கீழ்மக்கள்.
சிறீ (ஸ்ரீ)-உயர்குணமுதலியவற்றை உடையானது பெயரின் முன்னும் சிறந்த பொருளின்முன்னுஞ்சேர்க்கப்படும் அடை, இலக்குமி, மங்கலம்
சிறீகண்டன்(ஸ்ரீகண்டன்)- பரமசிவன்.
சிறீஜயந்தி(ஸ்ரீஜயந்தி)- கிருஷ்ணமூர்த்தி அவதரித்த திருநாள்.
சிறீபதி- விட்டுணு.
சிறீபர்வதம்- திருப்பருப்பதம்.
சிறிமுக- ஓர்வருடம்.
சிறீமுகம்- திருமுகம்.(கடிதம்.)
சிறீராகம்-ஓரிராகம்.
சிறீவற்சம்- திருமாலினுடைய மார்பிலுள்ள மறு, அட்டமங்கலங்களுளொன்று, மார்பில் ஐந்து சுளியுள்ள குதிரை, திருவிளை· நரிபரி ககஉ.
சிறீவிருட்சம்- வில்வமரம்-
சிறுகடுகு- ஓர்வகைக் கடுகு.
சிறுகால்- தென்றற்காற்று, (மெல்லென வீசுங்காற்றென்பது சொற்பொருள்)
சிறுகீரை-ஓர்வகைக்கீரை.
சிறுகுடி-சிற்றூர். (குறிஞ்சிநிலத்தூர்).
சிறுகுடில்-சிற்றில்.
சிறுகுதல். சிறுமையடைதல், குன்றதல்.
சிறுசண்பகம்- ஓர்மரம்.
சிறுசவளம்-குந்தம்.
சிறுசின்னம்-பீலி, இது ஓர் குழற்கருவி.
சிறுசெய்-பாத்தி.
சிறுசொல்- பழிச்சொல்.
சிறுசோறு-விளையாடுஞ்சிறுவர்கள்மண்முதலியவற்றாற் சமைக்குஞ்சோறு.
சிறுதேர்- சிறுவரின்விளையாட்டுக்காகச் செய்யப்பட்டதேர்.
சிறுதேவபாணி- இசைப்பாவகையுளொன்று. (சிலப்)
சிறுதேன் - கொதுகந்தேன்.
சிறுத்தை - சிறுபுலி.
சிறுத்தொண்டர்- சுங் சிவனடியார்களுளொருவர்.
சிறுநனி - சிறுபொழுது. (கலித் கஉ).
சிறுநாகப்பூ - ஓர் சரக்கு.
சிறுநீர் - மூத்திரம்.
சிறுபஞ்சமூலம் - ஓர் நூல், கண்டங்கத்தரி சிறுநெரிஞ்சி வட்டுக்கத்தரி சிறுமல்லி பெருமல்லி என்பவற்றின் மூலங்கள்.
*சிறுபதம் - தண்ணீர். (புறநா எச).
சிறுபறை - ஓர் விளையாட்டுப்பறை.
சிறுபாணாற்றுப்படை - ஓர் நூல்.
சிறுபாண்டரங்கனார் - இடைச்சங்கப்புலவருளொருவர்.
சிறுபான்மை - அருகியவழக்கு.
சிறுபுறம் - பிடர், உயர்ந்தபக்கம். (சிந்குண உ).
சிறுபூளை - உழிஞையென்னும் பூடு.
சிறுமணி - சதங்கை,
சிறுமாரோடம் - செங்கருங்காலி.
சிறுமி - புத்திரி, இளம்பிராயமுடையவள்.
சிறுமீன் - அயிரைமீன்.
சிறுமூலகம் - திப்பலி.
சிறுமை- எளிமை, குற்றம், குறைவு, தரித்திரம், அற்பம், துன்பம், துக்கம், நோய்
சிறுவரை - அற்பகாலம், அற்பம்.
சிறுவன் - மகன், இளமையுடையோன்
சிறுவிதி - தக்கன்.
சிறுவிதிமகஞ்சிதைத்தோன் - வீரபத்திரர்.
சிறுவிரல்-கனிட்டவிரல்.
சிறை - அடிமை, காவல், வேறிடம், பறவையினிறகு, பக்கம், நீர்நிலை, தடை, (நாலடி), வரம்பு, மதில், கட்டுப்பாடு, யாழ்நரம்புக்குற்றங்களுளொன்று, (பதிற்று), *இடம்.
சிறைப்புறம் - ஒதுக்கிடம், வேலிப்புறம், (உ - ம்: சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல்).

சிற்சத்தி - ஞானசத்தி.
சிற்பத்தொழில் ௧௦-கற்றொழில் உலோ கத்தொழில் மண்டொழில் செங்கற்றொழில் கண்ட சர்க்கரைத் தொழில் மெழுகுத்தொழில் மரத்தொழில் தந்தத்தொழில் சுதைத்தொழில் வண்ணத்தொழில் என்பன.
சிற்பநூல்- ௩௨ - விச்சுவதருமம் விச்சுவேசம் விச்சுவசாரம் விருத்தம் தாவட்டம் நளம் மயம் அனுமான் பானுகற்பாரியம் சிருட்டம் மானசாரம் வத்துவித்தியாபதி பாராசரியம் அரிடிகம் சயித்தகம் வாத்துபோதம் வித்தாரம் இந்திரம் வச்சிரம் சவுமம் விச்சுவகாசிபம் மகதந்திரம் விசாலம் சித்திரம் காபிலகாலயூபம் நாமசங்கிதை சாத்திகம் விச்சுவபோதம் ஆதிசாரம் வெகுசுருதம் மானபோதம் என்பன.
சிற்பம்-அற்பம், நுண்டொழில், சிற்பநூல்.
சிற்பரன் - கடவுள்.
சிற்பர் - கல்வினைஞர், சித்திரகாரர்.
சிற்றகத்தி - ஓர் மரம்.
சிற்றம்பலம்-சிதம்பரமென்னுந் தலம்.
சிற்றரத்தை - ஓர்செடி, ஓர்சரக்கு.
சிற்றாலவட்டம் - விசிறி.
சிற்றாள் - வேலாள்.
சிற்றில் - சிறுவர்கட்டி விளையாடும்வீடு. சிறுகுடிசை, சிறுதகில்.
சிற்றின்பம் - லௌகிகவின்பம்.
சிற்றுண்டி - அப்பம், பிட்டு முதலிய ஊண்பண்டங்கள்
சிற்றூர் - குறிஞ்சிநிலத்தூர்.
சினகரம் - சைனகிருகம், (சிந்தா), தேவர்கோயில்.
சினத்தல் - கோபித்தல்.
சினந்தவிர்ந்தோன் - புத்தன்.
சினம் - கோபம், (கோபத்தின்பின் சிறிதுபோழ்து நிற்பதெனத் திருமுரு).
சினவுதல் - பகைத்தல், பொருதல்.
சினன் - அருகன், புத்தன்.
சினீவாலி - சதுர்த்தசிடன்கூடிய அமாவாசை,
சினேகம் - நட்பு, எண்ணெய்.
சினேந்திரன் - அருகன்.
சினை - உறுப்பு, கருப்பம், மரக்கொம்பு, முட்டை.
சினைத்தல் - இளர்தல், கொழுத்தல்.
சின் - அசைநிலை. (உ-ம்: காப்பும்பூண்டிசிற்கடையும்போகல்).
சின்மை - சிறுமை, (மணிமே) சிலவாந்தன்மை.
சின்மொழி-இழிமொழி, சிலமொழி.
சின்னஞ்சிறிது - மிகச்சிறிது,
சின்னப்பூ - விடுபூ, (இராமா கோலங்கா கஎ), அரசனது சின்னமாகிய தசாங்கங்களைச் சிறப்பித்து ௧௦௦ ௯௦ ௭௦ ௫௦ ௩௦ என்னுமெண்பெற நேரிசை வெண்பாவாற் பாடும் நூல்.
சின்னம் - முறம், துகள், ஊறுபாடு, அடையாளம், பெண்குறி, ஊதுகருவியுளொன்று,(நாகசின்னம்),சிதைவு, சிறுமை.
சின்னன் - சிறியவன்.
சின்னீர் - மூத்திரம், அற்பநீர்.
சின்னை - ஒருமீன்.

## சீ

சீ (ஸ்ரீ) - இலக்குமி, சிதல், (உ-ம்: சீத்தலைச்சாத்தனார்), இகழ்ச்சிக்குறிப்பு. அடுக்கிற் சிச்சீ எனவும் வரும்).
சீகரம் - சாமரம். மழை, துளி, கரகம், சீர்த்திரை, இலட்சமீகரம்.
சீகாழி - ஓர் சிவதலம்.
சீக்கிரம் - விரைவு.
சீக்கிரி - ஓர் மரம்.
சீசம் - ஈயம்.
(சீசா - ஓர்வகைக் குப்பி).
சீடன் - குருவினிடம் கல்விமுதலியவற்றைப்பயில்வோன்.
சீடு-குஞ்சமெட்டுக்கொண்ட நூற்சீடு.
சீட்டு - பத்திரிகை.
சீண்டு - ஓர்வகைத் துர்நாற்றம்.
சீதபானு - சந்திரன்.
சீதம் - குளிர்ச்சி, கொடுந்தமிழ்நாடுகளுளொன்று. நீர், மேகம்.
சீதரன் - விட்டுணு.
சீதளம் - குளிர்ச்சி.
சீதனம் - மகளுக்குக் கொடுக்கும் பொருள்.
சீதாளம் - சீதாளிப்பனை.
சீதாளி-ஓர்வகைப்பண். (சிவதருஉரை).
சீது - கள். (இரகு தேனுவந் எ).
சீதேவி - இலக்குமி.
சீதேவியார் செங்கழுநீர்-ஓர்பூடு.

சீதை - இராமசுவாமியின் தேவி, உழுபடைச்சால், பொன்னாங்காணி.
சீத்தலைச்சாத்தனார் - கடைச்சங்கப் புலவருளொருவர். (நூல்களிற் குற்றங் காணுந்தோறும் தமதுதலையிற் குட்டுதலாற் புண்ணுண்டாயிருந்தமைபற்றி இவ்வாறு வழங்கப்பெற்றனர்).
சீத்தல் - கூட்டுதல், ஒதுக்குதல், துய்தாக்கல்.
சீத்தை - கீழ்மகன், குணமின்மை, (சூத்தை என வழங்குவர்).
சீந்தில் - சீந்திற்கொடி.
சீந்துதல் - சீறுதல். (சிந்தா).
சீபதி - அருகன், விட்டுணு.
சீப்பு-மயிர்சீவுஞ்சீப்பு, கதவுக்காக உள்வாயிற்படியிலிடுந்தாழ்(சிலப் அடைக்கல உஉகு) வாழைக்குலைச் சீப்பு, தோளெலும்பு, விலாவெலும்பு.
சீமங்கலி (மங்கலி) - நாவிதன்.
சீமந்தபுத்திரன் - தலைமகன்.
சீமந்தம்- முதற்கர்ப்பமாயிருக்கும்போது செய்யுங்கிரியை.
சீமந்தினி - இல்லறத்துக்குரிய பத்தினி.
சீமா (சீமை) - எல்லை. (சிம் என்பர் பிங்கலர்).
சீமாட்டி - செல்வி, தலைவி.
சீமான் - அருகன், செல்வமுள்ளவன், தலைவன்.
சீமூதம் - மேகம்.
சீயங்கன் - நன்னூல் பாடுவித்த ஓர் அரசன்.
சீயம் - சிங்கம், சிங்கராசி.
சீரகம் - ஓர்சரக்கு, ஓர்பயிர்.
சீரங்கம் - ஓர் விட்டுணுத்தலம்.
சீரணம் - சமித்தல், பழமைப்படல்.
சீரத்துவசன் - சந்திரவம்சத்தரசருளொருவன், சனகன்.
சீரபாணி - பலபத்திரன்.
சீரம் - இளாமிச்சை, கலப்பை.
சீரா - தலைத்திராணம்.
சீராட்டுதல் - கொண்டாடல், சிறப்புச்செய்தல்.
சீராளன் - சிறுத்தொண்டரின்புத்திரன்
சீரித்தல் - பழகுதல்.
சீருணம் - செம்பு. (கச் வில்வல கூ).
சீருள் - காரியம், ஈயம், செம்பு, செல்வம்.

சீரை - மரவுரி, துலாக்கோற்றட்டு (புறநா சகூ), வஸ்திரம், (சீலை எனவும்), பழம்புடவை.
சீர் - அழகு, தாளவறுதி, செய்யுளுறுப்புக்களுளொன்று, புகழ், நன்மை (கோயிற்), துலாக்கோல், துலாக்கோற்றட்டு, காவுதடி,(மலைபடு கஙச), செல்வம். தண்டாயுதம், தலைமை, (திருமுரு. உஉ0), தன்மை, (சிவதருமத்தின்சீர் எனச் சிவரக.), துலாராசி, பாரம்.
சீர்கேடி - மூதேவி.
சீர்தூக்கல் - ஒப்பிட்டுப்பார்த்தல்.
சீர்த்தல்-கோபித்தல். (கந்தெய்வ கூச), சிறப்புக்கொள்ளல்.
சீர்த்தி - மிகுபுகழ்
சீர்மை - ஒப்பம், கீர்த்தி, சிறப்பு.
சீலம் - நல்லுணர்வு, சீலை, (சிந்தா), குணம், நல்லொழுக்கம், சரித்திரம்.
சீலம் ரு - கொல்லாமை பொய்சொல்லாமை களவின்மை காமமின்மை இரவாமை என்பன. (பௌத்தமத வழக்கு).
சீலம் க0-முன்குறித்த ஐந்துசீலங்களுடன் உயர்ந்தஆசனத்திருத்தல்கிடத்தலின்மை சந்தனம்மாலைமுதலியன தரியாமை பொன்வெள்ளிகளைத்தீண்டாமை பாடலாடல்விரும்பாமை உதயத்தின்முன்புசிபாமை என்பனவுஞ் சேர்த்துப்பத்தாம்.
சீலைப்பேன் -ஆடையொட்டி. (வஸ்திரத்திலுண்டாகுங் கரும்பேன்).
சீவகன்-புத்தன், அருகமதத்தவன், அருகமதத்தவனான சீவகனென்னுமரசன்.
சீவதம் - முகில்.
சீவந்தி - கடுக்காய், சீந்திற்கொடி. பாலைக் கொடி.
சீவரம் - புத்தகுருமாரணியும் துவராடை
சீவரர் - புத்தர்.
சீவனம் - நீர், சீவித்திருத்தல்.
சீவனி - மூர்ச்சைதீர்த்துக் குற்றுயிர்தரு மருந்து, செவ்வழியாழ்த்திறங்களுளொன்று, பாலைக்கொடி.
சீவனீயம் - நீர்.
சீவன் - வியாழன், உயிர்.
சீவன்முத்தி - சீவித்திருக்கும்போதே முத்திநிலையைப் பெறுதல்.

சீவான்மா - உடலுடன் கூடியிருக்கும் உயிர்.
சிவிதம்- விருத்தி, (சீவனோபாயம்).
சீவித்தல்- உயிர்உடலுனிருந்துவாழ்தல்
சீவுதல்- மரம்முதலியவற்றைச் சீவுதல், மயிர்கோதுதல்.
சீழ்-சிதல், சீழ்க்கைவிடுதல்.
சீழ்க்கை - நாவினடியை மடித்தூதும் ஓர்வகையொலி. (சிந்தா)
சீழ்க்கைக்கூத்து - சீழ்க்கையொலியுடனுடுங் கூத்து.
சீறு - மகமதியர் நூல்களுளொன்று
சீறுதல் - பெருங்கோபங்கொள்ளல், இரைதல்.
சீறூர் - சிற்றூர், குறிஞ்சிநிலத்தூர்.
சீற்காரம்- அச்சத்தினுலுண்டாகுந்தொனி
சீற்றம்- கோபம்.
சீனக்காரம்- படிகாரம்.
சீனம்- ஓர்தேசம், ஓர்பாஷை.
சீனி- ஓர்வகைச்சர்க்கரை.

சு

சு (உபசர்க்கம்)- நன்ருக, சுகமாக, மிகவும்.
சுஃறு- ஓர்குறிப்பொலி, (பிரம்பு வீசும்போதும் பனையோலைமுதலியவற்றிற் காற்றுமோதும்போதும்எழுஞ்சத்தம்)
சுகசன்னி- ஓர்வகைச்சன்னி.
சுகதன்- புத்தன்.
சுகந்தம்- நன்மணம்.
சுகபலை- எருக்கு.
சுகம்- இன்பம், கிளி, முத்தி.
சுகர்மம்- இருபத்தேழு யோகங்களுளொன்று.
சுகன்- சுகப்பிரமரிஷி, (வியாசரின்புத்திரர்) சுகமுடையோன்.
சுகாசனம்- கால்களிரண்டையும் அட்டணையிட்டிருத்தல். (சூதசங்கிதையில் சுகத்துக்குந் திடத்துக்கு மிசைந்ததைச் சுகாசனமென்ருர்)
சுகி- சுகமுடையோன்.
சுகித்தல்- இன்பமனுபவித்தல்.
சுகிர்- உட்டுளை.
சுகிர்தம்- நல்வினை.
சுகிர்தல்-பஞ்செஃகுதல், மயிர்வகிர்தல். (கிழித்தலெனச் சிந்தாமணியில்,
சுகித்து-சிலேகம்.

சுகு-பலாச மரத்தினுல் அர்த்தசந்திர வடிவமாகச் செய்யப்பட்ட பாத்திரம், (யாகத்திற்குரியது.)
சுகுமாரதை- மென்மை, ஓரலங்காரம், (சொல்லொற்று நீக்கி யாக்கப்பட்டு மென்மை யுடைத்தா யிருப்பதென வீரசோழியத்தில்).
சுகுமாரம்-மிருது.
சுகுமாரன்- காமாதுரனுய்ச் சாதியாசாரத்தினின்றும் வழுவிய ஓரந்தணன், (இவன் சிவராத்திரி தினத்தில் அபுத்திபூருவமாகஉபவாசமாய்விழித்திருந்ததனுல் நற்கதிபெற்றுனெனச் சிவராத்திரி புராணங்கூறும்).
சுக்கல்-சிறுதுண்டு.
சுக்கானி- கப்பலோட்டி.
சுக்கான்- ஓர்வகைச் சிறுகற்கள், கப்பலை வேண்டியதிசைகளுக்குச் செலுத்துதற்குரிய கருவி.
சுக்கிரன் - ஒரு கிரகம்.
சுக்கிரீவன்- கிட்கிந்தைக்காசனுன ஒரு வானர வீரன். இவன் தன் மனைவியையும் அரசுரிமையையுங் கவர்ந்த தமையனுகிய வாலியை இராமசுவாமியாற் கொல்வித்து, அதற்காக, இராவண சங்காரத்தில் தன் சேனைகளுடன் சென்று பொருது அவர்க்குத் துணைபுரிந்தான்.)
சுக்கில- அறுபதுவருடங்களுளொன்று.
சுக்கிலபக்கம்- பூருவபக்கம்.
சுக்கிலம்- இந்திரியம், வெண்மை, கண்ணேயுளொன்று. (இதனைச் சுக்கிரனென்பர்.)
சுக்கு-வேர்க்கொம்பு.
சுக்கை- விண்மீன், *பூமாலை.
சுங்கம்- மரக்கலங்களிலும் வண்டியிலு மேற்றப்பட்டுப் பிறதேசங்களிலிருந்துவரும் பொருள்களுக்கு அரசினர் வாங்கும் இறை. [சல்க்கம் என்னும் வடமொழியின் றிரிபு).
சுங்கன்- சுக்கிரன்.
[சுங்கான்- புகைக்குடிக்குங்குழல்].
சுசி-சுத்தம், ஆடிமாதம், முதுவேனிற்காலம், அக்கினி.
சுசீலன்- நற்குணமுள்ளவன். [கல
சுசுந்தரி-மூஞ்சூறு. (சுந்தரியெனப் பிங்
சுச்சு- சுண்டி, பறவைமூக்கு.

சுடர் - விளக்கு, அக்கினி, அக்கினிச்சுவாலை, ஒளி, கிரணம்,சூரியன், சந்திரன். (கலித்).
சுடர் உ - சூரியன் சந்திரன் என்பன.
சுடர் ௩ - சூரியன் சந்திரன் அக்கினி என்பன.
சுடர்தல் - ஒளிசெய்தல். [ண்டு.
சுடர்நிலை - விளக்கின்தகழி,விளக்குத்த
சுடலை - சுடுகாடு.
சுடலையாடி - சிவன்.
சுடிகை - உச்சி, தலை, நெற்றிச்சுட்டி, முடி, திலகம், ஆண்பான்மயிர்முடி.
சுடுகாடு - பிரேதங்களைத் தகனஞ்செய்யுமிடம்.
சுடுகோல் - சூட்டுக்கோல்.
சுடுதல் - எரித்தல், சூடுண்டாக்கல்.
சுடுநிலம் - சுடுகாடு.
சுடுமண் - ஓடு. (சிலப்), செங்கல். (மணிமே).
சுடுவன் (சுடுவல்) - இரத்தம்.
சுடுவு - சுமையடை.
சுட்கம் - காய்ந்தபொருள்.
சுட்டி (சுட்டிகை) - ஓர் நுதலணி, மிருகங்களின் தலையிற் சுட்டிபோலிருக்கும்வெண்மை, திலகம்.
சுட்டு - குறிப்பு, *பசு, சுட்டிடைச்சொற்கள். (அ இ உ என்பன).
சுட்டுக்கோல் - உலையாணிக்கோல். (நாலடி).
சுட்டுதல்- மனத்தாற்குறித்தல், கையாற்சுட்டிக்காட்டல்.
சுட்டுவிரல் - தர்ச்சனிவிரல்.
சுணங்கன் - நாய்.
சுணங்கு - தேமல், காய், பூந்தாது (ஐங்குறு), மெலிவு.
சுணங்குதல்- தாமதப்படுதல், மெலிதல்.
சுணை - தினவு, கூர்மை, உரோசம்.
சுண்டகம் - மூங்கில்வில்.
சுண்டம் - கள், யானைத்துதிக்கை.
சுண்டல் - வரண்டகறி, செறித்தல்.
சுண்டன் - சதயம், மூஞ்சூறு.
*சுண்டாலி - யானை.
சுண்டி - தொட்டால்வாடி, (இதையே நிகண்டுகளிற் சுச்சு என்பர்), கீர்ச்சுண்டி, சுக்கு.
சுண்டுதல் - வரளுதல், தெறித்தல்.
சுண்டெலி - ஓர்வகைச்சிற்றெலி.
சுண்டை - கள், சுண்டைச்செடி, யானைத்துதிக்கை.
சுண்ணம்- துகள், பொன்முதலியவற்றாலாகியதுகள், வெற்றிலை முதலியவற்றுடன்சேர்க்குஞ்சுண்ணம், பச்சைக்கர்ப்பூரச்சுண்ணம், பராகம், சதயநட்சத்திரம்.
[சுண்ணும்பு - சிப்பி கீற்றுக்கல்முதலியவற்றின் சுண்ணம்].
சுதந்தரம் - தன்னிஷ்டமாய் நடத்தல்.
சுதம் - இறங்குதல், வழுவுதல், (அருகமதவழக்கில்) பரமாகமம். (திருநூற் சுதமொழிகேண்மின்).
சுதரிசனம் - விட்டுணுவின் சக்கரம்.
சுதலம் - கீழேழுலகங்களுளொன்று.
சுதனம் - ஆயுதம். (சுதன்மமெனப்படும்).
சுதன் - மகன், சாதியாசாரமுதலியவற்றினின்றுவழுவியவன். இப்பொருளில் ச்யுதன் என்னும் வடமொழியின்றிரிபு.
சுதன்மை-இந்திரனுடைய சபாமண்டபம்.
சுதாகரன் - சந்திரன். [ம்.
சுதி - அறிஞன், யாழினரம்பு, சுருதி.
சுதை - அமிர்தம், உதைகாற்பசு, சுண்ணச்சாந்து, மூளை, பால், வெண்மை, மகள்.
சுத்ததினம் - சோதிடகணிதத்தில் கலியுகாரம்பமுதல் இஷ்டகாலம் வரை சென்றதினம்.
சுத்தமாயை - சைவசித்தாந்திகள்கூறும் இருவகைமாயைகளுளொன்று. (சுத்தகாரியப்பிரபஞ்சத்திற்கு முதற்காரணமான மாயையென்பர்).
சுத்தம் - தூய்மை.
சுத்தாந்தம் - அந்தப்புரம்.
சுத்தி - கிளிஞ்சில், தூய்மை, சங்கு, ஓர்கருவி. (சுத்தியல்).
சுத்தி ௫ - ஆன்மசுத்தி தானசுத்தி திரவியசுத்தி மந்திரசுத்தி இலிங்கசுத்தி என்பன.
சுத்திகை - அகல். [என்பன.
சுத்தியல் - சிறுசம்மட்டி.
சுநாசீரன் - இந்திரன்.
சுந்தரபாண்டியன் - பரமசிவனது அம்சமாக மதுரையிலிருந்த ஓர் பாண்டியராசன்.
சுந்தரமூர்த்தி - தேவாரம்பாடிய சிவனடியார்மூவருளொருவர்.

இவர் கயிலைமலையில் ஆலாலசுந்தரரென்னும்பெயருடன் பரமசிவனுக்குத்தொண்டுசெய்துவருநாளில்,அநிந்திதையும் கமலினியுமாகிய உமாதேவியின்தோழியர்கள்மேற் காதல்கொண்டமையாற் பரமசிவனுடைய கட்டளைப்படிவந்து பூவுலகத்திற்பிறந்தார்.
சுந்தரம்- பேரழகு, நன்மை, (சிந்),சிறம், (சிலப்)
சுந்தரி- அழகுள்ளவள், இந்திராணி, (உபதே), துர்க்கை, பார்ப்பதி, பெண்.
சுந்தன்- நிகும்பனின் புத்திரனாகிய ஓரசுரன்.
சுந்தியு- அக்கினி.
சுந்தோபசுந்தநியாயம் - ஒருவரோடு மற்றொருவர் மாறுபட்டுழி இருவருங்கெடுதலைக் குறிக்கும் ஒருநியாயம். (சுந்தனும் உபசுந்தனுமாகியஅசுரர்கள் திலோத்தமையென்னும் தேவதாசியைக்காமித்து ஒருவரோடொருவர்போராடி இருவரும் மாண்டதுபோல).
சுபகாபிக்ஷாகநியாயம்-பாக்கியவதி பிச்சைக்காரனுக்குக் கூறியது போன்ற நியாயம்.
சுபகிருது- அறுபது வருடங்களுளொன்று.
*சுபதம்- அரசமரம்.
சுபத்திரை - அருச்சுனன் மனைவியருளொருத்தி.
சுபந்தம்-வடமொழியில் வேற்றுமையுருபேற்ற பெயர்ச் சொற்கள்.
சுபம்- நன்மை, நல்வினை, உள யோகங்களுளொன்று, மோட்சம், அழகு, *வெண்மை, (சுப்பிரமென்றதன் திரிபு).
சுபன்னன்- கருடன்.
சுபார்சுவம்- மேருவின்வடதிசையிலுள்ள ஒரு மலை.
சுபாவம் (சுவபாவம்)- இயல்பு.
சுபானு- அறுபது வருடங்களுள்ஒன்று.
சுபுகம்- மோவாய்.
சுப்தி- நித்திரை, வியூகவிரி முப்பதுள் ஒன்று.
சுப்பிரதீகம் - திக்குயானை எட்டினுள் வடகீழ்த்திசை யானை, (நல்ல அவயவங்களையுடையதென்ப துசொற்பொருள்).
சுப்பிரபேதம்- சைவாகமம்இருபத்தெட்டுள் ஒன்று.
சுப்பிரமணியத்தலம் சு- திருப்பரங்குன்றம் திருச்சீரலைவாய் திருவாவினன்குடி திருவேரகம் குன்றுதொறாடல் சோலைமலை என்பன.
சுப்பிரமணியன்-குமாரக்கடவுள்.
சுப்பிரம்- வெண்மை, ஒளி, (தனிப்).
சுப்பிரயோகம்- மன்மதனது ஐங்கணைகளால்விளையும் அவத்தைகளுள் தாமரையாலாகும்அவத்தை. (காமத்தைக் குறித்த பேச்சும் நினைவுமாயிருத்தல்; பேச்சொழிந்துநினைதலென்பர் சிலர்.
சுப்பிரலாபம்-சாதுரியமானபேச்சு.
சுமங்கலி-மங்கலியத்தையுடையபெண்.
சுமங்கை- வறட்சுண்டி.
சுமடர்- அறிவிலார், கீழ்மக்கள்.
சுமடு- அறிவின்மை, பாரத (கும்போர்க), சுமையடை, (பெரும்பா கஙக), சுமை, (ஞானவா).
சுமதி- அறிஞன், இரணியவன்மனென்னும் அரசனுடைய தம்பி, (கோயிற் இரணிய கO; வேறும் இப்பெயருள்ளார் பலர்).
சுமத்தல்- பாரத்தைத்தாங்குதல்,(பிறவினையாயின் தாங்குவித்தல்.
சுமம்
சுமனசம் } பூ.
[சுமார்-ஏறக்குறைய].
சுமாலி- ஓரிராக்கதன், கள்.
சுமித்திரை - தசரதராசனது மனைவியர்களுளொருத்தி.
சுமை- பாரம்.
சுமையடை- சும்மாடு.
சும்பகம்- இரும்பையிழுக்குங்காந்தம்
சும்பனம்- முத்தமிடுகை, சப்புகை.
சும்புள்-கடம்பு, (மலை).
சும்மா - வாளா, மௌனமாக. (செயலின்றி).
சும்மாடு- சுமையடை.
சுமை-நாடு, ஊர்ப்பொது,ஒலி, சுமை, நகர், (சேது), நெற்போர்,*யாழ்நரம்போசை.
சுயம் (சுவயம்)- இயல்பாக, தானாக, வேறொன்றன் கலப்பின்றி.
சுயம்பாகம்- தானேசமைத்துண்பது.
சுயம்பு-தானேதோன்றியது,நால்வகையிலிங்கங்களுளொன்று, கடவுள், பிரமா, வேதம், அருகக்கடவுள்.

சுயம்வரம்- கன்னிகை பல ஆடவர்கூடி ய சபையில் தனக்கியைந்த கணவ னைத்தெரிந்து மாலையிடுவது.
சுயோதனன் - துரியோதனனென்னும ரசன்.
சுரகுரு - வியாழன், *இந்திரன்.
சுரங்கம் - கீழறை.
சுரசம் - சிறுகிழங்கு.
சுரசை-நொச்சி, சிற்றரத்தை.
சுரதநூல் - மதனுகமம்.
சுரதம் - காமப்பற்று,
சுரதரு - தேவலோகத்திலுள்ள கற்பக முதலிய ஐந்தருக்கள்.
சுரத்தல்- இடைவிடாது சொரிதல் (சி லப்), ஊறுதல், நிறைதல்.
சுரநதி- ஆகாயகங்கை, கங்கைநதி.
சுரபதி- இந்திரன்.
சுரபி- காமதேனு, பசு, வாசனை.
சுரபுன்னை- ஓர்மரம்.
சுரம் - அருநெறி, வழி, பாலைவனம், காடு, வெப்புநோய், [கொம்பினுட் குருத்து] இசை.
சுரர்- தேவர்.
சுராட்- இந்திரன்.
சுராலயம் - மேருமலை.
சுராலை-சாம்பிராணி.
சுரி-நெற்றிச்சுட்டி,(சுடர்விரிந்தன்னசுரி நெற்றிக்காரி: கலித்), சங்குமுதலிய வற்றின் முறுக்காகிய சுழிப்பு, சேறு.
சுரிகுழல்- பெண்.
சுரிகை- உடைவாள், கத்தி, *கவசம்.
சுரிதகம் (சுவரிதகமென்னும்வடசொல் லின் விகாரம்)-கலிப்பாவுறுப்புகளு ளொன்று, (எடுத்தல் படுத்தலிரண் டுமின்றி நலிந்துச்சரிக்கப்படுவது).
சுரிதல்-சுருங்குதல், திரைதல், சுழலல், சுழித்தல்.
சுரித்தல்- முறுகுதல், மயிர் சுழலுதல், சேற்றிற் புதைதல், சுழித்தல்.
சுரிமுகம்- சங்கு, நத்தை.
சுரியல்- சுரித்தல், ஆண்மயிர், பெண் ம யிர், வளைவு, நீர்ச்சுழி.
சுருக்கல்- கட்டுதல், சுருங்கச்செய்தல்.
சுருக்கு- நெய்த்துடுப்புக்களுளொன்று. வஸ்திரம்கயிறுமுதலியவற்றின் சுருக் கு, உருவக்கூடிய தடம், சுருக்கம்.
சுருத்தை-மாலை.
சுருங்குதல் - அடங்குதல், ஒடுங்குதல், மலர்முதலியன குவிதல், குறைதல்.
சுருங்கை - கரந்த கற்படை (மதகு), நுழைவாயில்.
சுருட்டி - ஓரிராகம்.
சுருட்டு- சுருள், புகையிலைச்சுருள்.
சுருட்டுதல்- சுருளச்செய்தல்.
சுருட்டை - பாம்பினங்களு ளொன்று. (சுருண்டுகிடப்பது)-
சுருதகீர்த்தி- அருச்சுனனுக்குத்துரௌ பதியிடம் பிறந்த புதல்வன்,(வேறும் இப்பெயருள்ளார் பலர்).
சுருதி- வேதம், ஒலி, பண், காது.
சுரும்பு- ஆண்வண்டு, வண்டு, மலை.
சுருவம்- நெய்த்துடுப்புகளுளொன்று.
சுருளல்- சுருளுதல்.
சுருள்-தாமரைமுளையின்சுருள், (வெண் முளைப்பசுந்தாமரைவெண்சுருள்; சூ ளா, பெண்களுடைய கூந்தலை முடிக் கும் வகையுளொன்று. (பின்னேசெரு குதல்.)
சுரை- அமிர்தம், கள், தேன், சுரைக் கொடி, பசுவின்முலை, உட்டுளை.
சுரோதம்- அலை, பெருக்கு.
சுரோதா-கேட்பவன்.
சுரோத்தமன்- சூரியன்.
சுரோத்திரம்-காது.
சுரோத்திரியன்- வேதங்களை அத்தியய னஞ்செய்த அந்தணன்.
சுலட்சணை-உமாதேவியின் சேடியர்களு ளொருத்தி.
சுலபம்-இலேசு,
சுலவுதல்-(சுலாவுதல்)- சுழலுதல், சுழற் றுதல், (கூர்ம), சூழ்தல்.
சுலுப்பு - கப்பல்.
சுலோகம்-ஆரியச்செய்யுள், புகழ்மொழி.
சுலோகி- கள்.
சுல்லி- அடுப்பு.
சுல்லு- வெள்ளி.
சுவடி-புத்தகம்.
சுவடு- அடையாளம், உடற்றழும்பு, அ டிச்சுவடு, வச்சிராங்கி, (இரும்புக்க வசம், கெல்லிலக்கம்.
சுவட்டலர்- குறும்பூழாடிகள், (புறநா.)
சுவணம் (சுவர்ணம்)- பொன், உலோ கக்கட்டி.
சுவத்தி (சுவஸ்தி) ஓர்மங்கலமொழி

சுவத்திகம் - கிழக்கேவாயிலையும் காற்றிசைகளிலும் தொடர்புற அமைக்கப்பட்ட உலாவுமண்டபங்களையுமுடையவீடு, ஆசனவகைகளுளொன்று, (வலக்கணைக்கால் தொடை என்னுமிரண்டுக்குமிடையில் இடப்புறங்காலையும், இடக்கணைக்கால் தொடை என்னுமிரண்டுக்குமிடையில் வலப்புறங்காலையுஞ்சேர்த்துச் சமதேகமாயிருத்தல்), ஓர் மங்கலக்குறி.
சுவப்பிரம் - துளை, நரகம், பாதலம்.
சுவம்(ஸ்வம்) - சொந்தமானது, திரவியம்.
சுவரம் - உயிரெழுத்து, இசை.
சுவரிதம் - சுலிதலோசை.
சுவரூபம்(ஸ்வரூபம்), சொரூபம் - வடிவம்.
சுவர் - மதில், வீடுமுதலியவற்றின்சுவர்.
சுவர்க்கம் (சொர்க்கம்) - சுவர்க்கலோகம் மூலை.
சுவர்ணகாரன் - பொற்கொல்லன்.
சுவர்லோகம் - மேலேழுலகங்களு ளொன்று.
சுவலனன் (சுலனன்) - அக்கினி.
சுவலை - அரசமரம்.
சுவல் - குதிரையின்பிடர்மயிர், மயிர், தோண்மேல், முதுகு, (உபதேச), மேடு.
சுவவு - *சுவர்க்கம், பறவையின் மூக்கு, மூஞ்சூறு.
சுவறுதல் - நீர்முதலியன வற்றுதல்.
சுவா - நாய்.
சுவாகதம் - கிளி, (ஏகாதசிப்புராணத்தில் சுவாசகம் என்றார்), நல்வரவு.
சுவாகா - அக்கினியில் ஓமஞ்செய்யும்போது சொல்லப்படும் ஓர் மந்திரம்.
சுவாகாதேவி - அக்கினியின்தேவி.
சுவாசம் - உயிர்ப்பு.
சுவாசித்தல் - மூச்சுவிடல்.
சுவாதம் - ஓர் நோய்.
சுவாதிட்டானம் - ஆறாதாரங்களுளொன்று. (குய்யத்தானம்).
சுவாது - ருசி.
சுவாத்தியம் - சுகம்.
சுவாபதம் - துட்டமிருகம்.
சுவாமி - கடவுள், மூத்தோன், அதிகாரி, குருமுதலியபெரியோர்.
சுவாயம்பு - சுவாயம்புவமனு.
சுவாரோசிஷன் - சுவாரோசிஷமனு.
சுவார்ச்சிதம் - தன்சம்பாத்தியம்.
சுவாலித்தல் - சொலித்தல்.
சுவாலை - அக்கினிச் சுவாலை.
சுவானம் - நாய்.
சுவி - இத்திமரம்.
சுவிகை - கள்.
சுவீகரணம் - ஏற்றல்.
சுவீகரித்தல் - தனதாக்கல்.
சுவீகாரபுத்திரன் - தத்தபுத்திரன்.
சுவுகம் - மோவாய்.
சுவேதசம் - வேர்வையிற்றோன்றுவன.
சுவேதமூலம் - வெண்சாரணை.
சுவேதம் - வெண்மை, வேர்வை.
சுவேதவாரககற்பம் - பிரமாவின் இரண்டாம்பரார்த்தத்து முதலாம்வருஷத்து முதலாமாசத்தில்எட்டாவதாகநிகழுங் கற்பம். (பிரமதினம் ௩௬0 ஒரு பிரம வருடமாகக்கொள்க. ஏழாவதுகற்பத்திற் சலத்தால்மூடப்பட்ட பூமியை வெள்ளைப் பன்றி யுருவங் கொண்டு திருமாலெடுத்து நிறுத்தியதால்இக்கற்பம் இப்பெயர் பெற்றது).
சுவேதவனப் பெருமாள் - மெய்கண்டதேவர்.
சுவேதவனம் - திருவெண்காடென்னுந் தலம்.
சுவேதவாகனன் - அருச்சுனன்.
சுவை - ருசி, தித்திப்பு, ஐம்புலன்களுளொன்று, மெய்ப்பாடு, ஓரலங்காரம். (மெய்ப்பாட்டானடப்பது).
சுவை ௬ - தித்திப்பு புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு கார்ப்பு கைப்பு என்பன.
சுவை அ - வீரம் அச்சம் இழிப்பு வியப்பு காமம் அவலம் ரௌத்திரம் நகைப்பு என்பன.
சுவை கூ - சிருங்காரம் வீரம் கருணை அற்புதம் ஆசியம் பயம் ரௌத்திரம் குற்சை சாந்தம் என்பன.
சுவைத்தல் - ருசியானதென்று உட்கொள்ளுதல்.
சுழலல் - சுற்றுதல்.
சுழல் - காற்றாடி, கஞ்சனை, *பீலிக்குடை.
சுழல்காற்று - சூறைக்காற்று, காற்றாடி.
சுழல்படை - வளைதடி.
சுழி - நன்மை தீமைகளையறிதற்கேதுவாகச் சிலமனிதர்களிலும் விலங்குகளி

லும் சிலஉறுப்புக்களிற் காணப்படுஞ் சுழி, எழுத்துக்களின்சுழி, நீர்ச்சுழி.
சுழித்தல் - நீர்முதலியனசுழித்தல் [உ.
சுழியல்- ஓர் சிவதலம் (திருவிளை நகர
சுழியோடல் - நீரிலுருவித்தாழ்தல்.
சுழுத்தி - ஐந்தவத்தைகளு ளொன்று (கடும்நித்திரை).
சுழுமுனை - இடைமுதலிய மூவகைநாடிகளுள் நடுநாடி.(மூலாதாரத்திலிருந்து பிரமரந்திரம்வரைநிற்பது).
சுளகு - சூர்ப்பம், விசாகநட்சத்திரம்.
சுளித்தல் - கோபித்தல். (கந்துசுளியுங் கடாக்களிற்றின்; நளவெ).
சுளுகம் - சிறங்கை.
சுளுது - உபாயம். (செந்தூர் செயந்திபுர), அற்பம்.
சுளுகோதகம் - சிறங்கையளவானநீர். (சைவச பொது ௬௧௨ உரை).
சுளுக்குதல் - உளுக்குதல்.
சுளை - பலாப்பழம் முதலியவற்றின்சுளை.
சுள் - உலர்ந்தமீன். (கந் அசமுகி நகர் ௧அ).
சுள்ளி - ஆச்சாமரம், அனிச்சமரம். (தணிகை நாட் ௬௫), மரங்களின் சிறுகொப்பு, (சுள்ளியினிருந்துறை குரங்கின்; இராமா மந்திர உ௫).
சுள்ளெனல் - முள்முதலிய குத்துங்குறிப்பு.
சுள்ளை - மட்கலஞ்சுடுசூளை. [ல்.
சுறண்டுதல்-நகமுதலியவற்றால் வறுகுத
சுறவு } மகரமீன், மகரராசி.
சுறு }
சுறு-தசை மயிர் முதலியன அக்கினியிற் பட்டுக்கருகும் போதுண்டாகும் நாற்றம்.
சுறுக்கு } விரைவு.
சுறுசுறுப்பு }
*சுற்பம் - செம்பு.
சுற்றம் - இனம்.
சுற்று - சுழற்சி, வட்டமாயோடல், மரமுதலியவற்றின் சுற்றளவு, *மதில்.
சுற்றுதல்-வலமாகவேனும் இடமாகவேனும் வளைந்துவருதல், சுழலுதல், வஸ்திராந்தரித்தல்.
சுனகன் - நாய்.
சுனாசிரன் - இந்திரன்.
சுனை - சிறுகுளம்.
சுனைதல் - நீர்கசிதல், பச்செனல், குழைதல்.
சுன்-பூச்சியம், (எண்களைக்குறிக்கும் இலக்கங்களுள்ஒன்றாகியவட்டம்),சனி.

## சூ

சூகம் - தாமரை. (தோடுடைந்தன சூகமும்; குளா நாட்டு ௧௪).
சூகரம் - பன்றி.
சூக்குமம் - நுண்மை, உஅ ஆகமங்களிலொன்று.
சூக்தம் - புகழ்மொழி. (வேதத்தில் ஒவ்வொருதெய்வங்களினதும்மகத்துவத்தைக் கூறும்பாகம்).
சூசனம் - குறிப்பு.
சூசி - ஊசி, சேனைவியூகங்களுள் ஒன்று.
சூசியம் - சூட்டிறைச்சி.
சூசுகம் - முலைக்கண். (சுசுகமெனவும்).
சூடகம் - கைவளை.
சூடம் - உச்சிச்சடை, தலை, [கர்ப்பூரம்].
சூடாகருமம் - சௌளம்.
சூடாமணி - தெய்வமணிகளுளொன்று. (இந்திரனணியுமணி), சூடாமணி நிகண்டு.
சூடாலம் - சணப்புவிதை.
சூடி - புடவை.
சூடிகை - முடி.
சூடிக்கொடுத்தாள்- திருமாலுக்குத்தொண்டுசெய்திருந்தஓர்பெண்மணி. (பெரியாழ்வாரின் புத்திரி).
சூடு - நெல் முதலியவற்றினரிக்குவியல், (போர்), உச்சிக்குடுமி, சுடப்பட்டமாமிசமுதலியன. (கடலிறவின் சூடுதின்றும்; பட்டினப் ௬௩), வெப்பம்.
சூடுதல் - அணிதல்.
சூடை - தலை.
சூட்டு-உருளையின் விளிம்பில்வைத்த வளைந்தமரம்,(கொழுஞ்சூட்டருந்தியதிருந்துநிலையாரத்து; பெரும்பா ௪௬), நுதலணி, பாம்பின்சூட்டு, ஆயிரஞ் சூட்டராவினறிதுயிலமர்ந்து; கூர்ம), மயில் முதலியவற்றின் சூட்டு, முடியிலணியுமாலை.
சூதகம் - சனனசௌசம், மகளிர்பூப்பு, முலைக்கண்.
சூதம் - ரசம், மாமரம், புளிமா, வண்டு, (ரகு தசரத உக); பிறப்பு, சூது.

சூதனம் - அழித்தல்.
சூதன்-தேர்ப்பாகன், கின்றேந்துவோன், பாணன், சூதாடுவோன், நைமிசாரணியத்து முனிவர்களுக்குப் பதினெண் புராணங்களைச்சொன்ன முனிவர்.
சூதிகை - பிரசவித்தவள்.
சூது - சூதுவிளையாட்டு.
சூத்திரதாரன் - நாடகாசிரியன், சூத்திரப்பாவைகளை நூலிற்கட்டியாட்டுவோன்.
சூத்திரநிலை ச - ஆற்றொழுக்கு சிங்கநோக்கு தவளைப்பாய்த்து, பருந்தின் வீழ்வு என்பன.
சூத்திரம் - ஆபத்தம்பம் முதலிய பதினெண் சூத்திரங்கள், யந்திரம், நூல், நூற்பா, பஞ்சிநூல்.
சூத்திரம் கஅ - போதாயனம் ஆபஸ்தம்பம் சத்தியாஷாடம் திராஹியாயனம் சாகல்லியம் ஆசுவலாயனம் சாம்பவீயம் காத்தியாயனம் வைகானசம் சௌனகீயம் பாரத்துவாசம் அக்கினிவேசியம் ஜைமினீயம் வாதுலம் மாத்தியந்தினம் கௌண்டின்யம் கௌஷீதகம் ஹிரண்யகேசி என்பன.
சூத்திரர் - நான்காம் வருணத்தவர்.
சூத்திரர்தொழில் கூ - பசுக்காத்தல் பொருளீட்டல் பயிரிடல் புராணுதிகளையோதுதல் ஈதல் அந்தணர்முதலியோர்க்கு அநுகூலமாகிய நன்மைகளைச் செய்தல் என்பன.
சூபம் - பருப்பு.
[சூப்புதல்-சுவைத்தல்]
சூம்புதல் - மெலிதல்.
சூரசூதன் - அருணன்.
சூரசேனன் - ஐம்பத்தாறுதேசங்களுளொன்று.
சூரணம் - கருணைக்கிழங்கு, ஆள்.
சூரபன்மன் - ஓரசுரன்.
சூரம் - வீரம்.
சூரமகளிர் - தேவப்பெண்கள்.
சூரர் - படைவீரர்.
சூரல் - பிரம்பு, சூரைமரம்.
சூரன் - சூரபன்மன், சூரியன், வீரன், தீ, நாய், கிருஷ்ணமூர்த்தியின் பாட்டன், (வேறும்இப்பெயருள்ளாரர்பலர்), மூஞ்சூறு.

சூரி - காடுகாள், காளி, பண்டிதன்.
சூரியகலை - வலமூக்கின்வழியாய்ச் சுவாசஞ்செல்லுதல்.
சூரியகாந்தம் - சூரியனுடையகிரணம் படும்போது நெருப்பைக்காலுங் கல்.
சூரியகாந்தி - பொழுதுவணங்கியென்னுஞ்செடி. [ன்.
சூரியசாவர்ணி க ச-மனுக்களுளொருவ
சூரியசித்தாந்தம் - ஓர் சோதிடசித்தாந்தம், வைணவ நூல்களுளொன்று. (வகா காலினி க).
சூரியப்பிரபை - பெண்களின் தலையணிகளுள் ஒன்று.
சூரியர்பன்னிருவர்-வைகர்த்தனன் விவஸ்வான் மார்த்தாண்டன் பரஸ்கரன் ரவி லோகப்பிரகாசன் லோகசாட்சி திரிவிக்கிரமன் ஆதித்தியன் சூரியன் அம்சுமாலி திவாகரன் என்பவர்கள்.
சூரியன் - ஓர் கிரகம், சோழன்.
சூரியன்வீதி ஈ - மேடவீதி இடபவீதி மிதுனவீதி என்பன.
சூரை - ஓர் மரம்.
சூர் - அச்சம், துன்பம், நோய், கொடுந்தெய்வம், கொடுமை, (திருமுரு) தெய்வம், தெய்வப்பெண், அஞ்சாமை
சூர்ணிகை (சூரணை) - கருத்துரை.
சூர்த்தல் - அஞ்சச்செய்தல், சுழலல்.
சூர்ப்பகர்ணன் - விநாயகக்கடவுள்.
சூர்ப்பகைவன் - முருகக்கடவுள்.
சூர்ப்பநகை - இராவணன்றங்கை.
சூர்ப்பம் - சுளகு.
சூர்ப்பு - கொடுந்தொழில், வளைந்தகையணி.
சூர்மகள் - இடாகினி. (ஓர் பெண்தெய்வம்; யோகினியெனப் பிங்).
சூலபாணியன்-சிவன், வைரவக்கடவுள்.
சூலம்-இரேவதிநட்சத்திரம், ஓராயுதம், உள யோகங்களுளொன்று, யாத்திரைக்கு விலக்கப்படுவதோர்குற்றம்.
சூலம் (சூறல்) - தோண்டல், அரிதல்.
சூலி-காளி, துர்க்கை, சிவன், கர்ப்பவதி.
சூலினி - பார்வதி.
சூலுளைதல் - ஈற்றுளைதல்.
சூலை - ஓர் நோய்.
சூல் - கருப்பம், முட்டை.
சூழல் - கூட்டம், மாமுதலியசூழ்ந்தவிடம், மனக்குறிப்பு, இடம்.

சூழி - உச்சி, சுனை, நெற்றி, முகபடாம், குதிரைக்கல்லணை.
சூழியம் - பெண்குழந்தைகளினுச்சிக் கொண்டையுட்செருகுமோரணி.
சூழ்கழியிருக்கை - தோணுமுகம்.
சூழ்கொடை - சுழல்காற்று.
சூழ்ச்சி - ஆலோசனை, உபாயம்.
சூழ்தல்-ஆலோசனைசெய்தல், கவருதல், சுற்றுதல், வலம்வருதல்.
சூழ்வார் - அமைச்சர்.
சூளாமணி - ஓர்காப்பியம், (தோலாமொழித்தேவர்பாடியது). சூடாமணியென்னுந்தெய்வமணி.
சூளிகை - மாடம், யானைச்செவியடி.
சூளுறவு - சத்தியம்.
சூளை - சுடுசூளை. (புறநா உஉ). வேசி.
சூளைக்கல் - செங்கல். [அரிச்சந்.
சூள் - சபதம்.
சூறன் - மூஞ்சூறு.
சூறுவளி - சுழல்காற்று. ௬௦).
சூறுதல் - சுற்றுதல். (பாரத காண்டவ
சூறை - சுழல்காற்று, பனிச்சை, (சிந்), கொள்ளை.
சூறையாடல் - கொள்ளையிடல்.
சூனம் - இறைச்சிக்கடை, மான்.
சூனர் - ஊன்விற்போர்.
சூனியதிதி - அதிதி.
சூனியம்-வெறுமை, இல்லாமை,மாரணமுதலிவற்றைச் செய்யும்படி தேவதையை ஏவுதல்.
சூனு - மகன்.

## செ

செகில் - சோண்மேல். (புயம்).
செகுத்தல்-அழித்தல், வெல்லுதல்.(சிந்).
செக்கர் - சிவப்புநிறம்.
செக்கர்வானிறத்தன் - வீரபத்திரன்.
செக்கான் (செக்காட்டி) - எண்ணெய்வாணிகன்.
செக்கு - காணம், கரும்பாலை, (உ-ம்: செக்கிடுமிக்கினெரித்து), சதயநாள்.
செங்கணன் - விட்டுணு.
செங்கண்மாரி - ஓர்நோய்.
செங்கதிர் - சூரியன்.
செங்கதிர்நாள் - உத்தரநட்சத்திரம்.
செங்கருங்காலி - ஓர்மரம்.
செங்கல் - காவிக்கல். சுட்டமண்கல்.
செங்கழுநீர் - செங்குவளை.
செங்களம் - போர்க்களம்.
செங்கற்பட்டு - சென்னைக்குச்சமீபத்திலுள்ள ஓரூர். [ம்.
செங்காடு - திருச்செங்காடென்னுந்தல
செங்கீரை - சிறுவர் விளையாட்டுக்களுளொன்று. (இருகைகளையும் முழங்கால்களையும்நிலத்திலூன்றித்தலையை நிமிர்த்தியாடுதல்).
செங்குடை - குடைவகையுளொன்று.
செங்குட்டுவன் - இளங்கோவடிகளின் முன்பிறந்தோனான ஓரரசன்.
செங்குத்து - மலைகளில் ஏறவுமிறங்கவுமியலாததாயிருக்கும் பொறிவு.
செங்குந்தர் - கைக்கோளர்.
செங்கை - ஆதிரைநாள்.
செங்கொல் - பொன்.
செங்கோடு - திருச்செங்கோடென்னும் மலை, செருந்திமரம்.
செங்கோட்டியாழ் - ஏழுநரம்புகளையுடையயாழ்.(சிலப் அரங் உசு உரை).
செங்கோல் - நீதிவழுவாத அரசியல்.
செங்கோற்கடவுள் - யமன்.
செச்சை- வெட்சி, வெள்ளாட்டுக்கடா, மேடராசி,சட்டை,(சிந் குணமா)உ௬௦ இறகிலகுழம்பு, சிவப்பு.
செஞ்சாந்து- குங்குமம், குங்குமமுதலிய பரிமளப்பொருள்களின் கலவை.(பிரமோத), செஞ்சந்தனம்.
செஞ்சுருட்டி - ஓரிராகம்.
செஞ்சோறு - உபகாரச்சோறு, (துரியோதனன்கன்னனுக்குக்கொடுத்தது போன்றது).
செடி - குற்றம், (குணமின்மையெனப் பிங்), புதல், முடைநாற்றம், பாவம், பிரகாசம், தீமை.
செடிதல் - செடிபற்றல். நெருங்குதல்.
செடில்-தூண்டில்வடிவாக இரும்பினுற் செய்யப்பட்ட ஓர்கருவி.
செட்டி- வைசியன், சுப்பிரமணியக்கட
செட்டு - வர்த்தகம். [வுள்.
செட்டை - இறகு, துடிநூல்.
செண்டாயுதன் - ஐயனார்.
செண்டு-ஓராயுதம்,குதிரையைச்செலுத்துஞ்சவுக்கு, (செண்டிடைக்கோடல்; திருவா குதிரை ௬க). பூஞ்செண்டு. (தனிப்).

செண்டுவெளி - வையாளிவீதி. (குதிரையேற்றமுதலியன பயிலுதற்குரிய வெளியிடம்).
செண்ணம் - ஒளி. (ரகு திக்கு கசுஅ), நுண்ணியதொழில். (சிந் பது கசுஅ),
செதிள்-தோல், (இப்பொருளிற் செகிள் எனவும்), துளி. (சிந்).
செது-ஒளிமழுங்கல், (புறநா), களையப்படவேண்டியன.(தணிகை நாட் கக0).
செதுக்குதல் - சீவுதல், புல்முதலியன செதுக்குதல்.
செதுக்கை-உடற்றழும்பு.
செதுமகவு - சாபிள்ளை. (சிந் குணமா உளச.)
செதும்பு - சின்னீர், சேறு.
செத்தல்-செதுக்குதல்,ஒத்தல், பெரும்பாசளரு), அறிதல், (புறநா கஉஅ), (பதிற்று அசுல் செத்தனென்—அறிந்தேன்).
செந்தமிழ் - திசைச்சொன்முதலியன கலக்கப்பெறாததமிழ்.
செந்தாது - பொன்.
செந்தி (செந்தில்) - திருச்செந்தூர்.
[செந்திருக்கம் - ஓலைச்சுருள்]
செந்நிறம் - குறிஞ்சியாழ்த் திறங்களுளொன்று.
செந்தினை-கம்புஎன்னும்தானியம்,தினை
செந்தீவண்ணன் - செவ்வாய்.
செந்து - பிராணி, அணு, ஓசை, ஒருநரகம், நரி.
செந்துருதி - செந்நிறம்.
செந்தூக்கு - ஆடற்கேற்கும்பாட்டு.
செந்தொடை - மோனை எதுகைமுதலியன பொருந்தப்பெறாது தொடுக்குஞ்செய்யுள்.
செந்தொடைக்குரியகோமான்-வைரவக்கடவுள்.
செந்காய் - ஓர்வகைகாய்.
செந்நீர் - இரத்தம்.
செபமாலை - செபஞ்செய்வோர் உருவெண்ணுதற்காக உருத்திராக்கமணி முதலியவற்றால் விதிப்படிசெய்து வைத்திருக்கும் மாலை.
செபயாகம் - செபஞ்செய்தலாகியவழிபாடு.
செபித்தல் - மந்திரத்தைப் பலமுறை மெல்லெனஉச்சரித்தல்.

செப்படிவித்தை-செப்பும்பந்தும்வைத்து ஆடும்வித்தை.
செப்பம் - செவ்வை, செவ்வியவழி, சிவப்பு, நடுவுநிலைமை (திருக் நடுவுநிலைமை உ), கருத்தஞ் செயலுஞ் சொல்லும்தம்முள்மாறுகாமை(திருக் குடிமை க உரை), மார்பு, தெரு.
செப்பல் - சொல்லுதல், வெண்பாவுக்குரியஓசை. (ஒருவற்கொருவனியல்பினொரு பொருண்மை செப்புங்காலெழுமோசையென்பர் நச்சினார்க்கினியர்).
செப்பு - சொல், கரண்டகம்.
செம்பகை - யாழின் பகைநரம்பு நான்கனுளொன்று. (இன்பமின்றியிசைத்தலாகிய தாழ்ந்தவிசையென்பர் சிலப்பதிகாரவுரைகாரர்).
செம்பஞ்சு - சிவப்புநிறமான ஓர்சாதிப்பஞ்சு.
செம்படவர் - மீன்பிடிப்பவரிலொருசாரார்.
செம்படை - சிவந்தமயிர்.
செம்பாம்பு - கேது.
செம்பாலை - பாலையாழ்த்திறத்துளொன்று.
செம்பால் - இரத்தம்.
செம்பியன்-சோழன், முதல்வள்ளலெழுவருளொருவன்.
செம்பு-தாமிரம். (இது லோகவகைகளுளொன்று).
செம்புலம் - போர்க்களம், பாலைநிலம்.
செம்புளிச்சை-ஓர்மரம். (செம்மணத்தியென்பர்).
செம்புள் - கருடப்பறவை.
செம்புனல் - இரத்தம் புதுவெள்ளம் (ஐங் குறு).
செம்பூட்சேஎய் - அகத்தியர்மாணக்கர் பன்னிருவருளொருவர்.
செம்பொருள் - வெளிப்பொருள்.
செம்போத்து - ஓர்பறவை.
செம்மணி - மாணிக்கம்.
செம்மலர் - நெற்றிமாலை (சிந்).
செம்மலைப்பாலை - செம்பாலை.
செம்மல் - மகன், அரசன், சிவன், அருகன், எப்பொருட்குமிறைவன், சாதிப்பூ(சேடல்செம்மல்சிறுசெங்குரலி; குறிஞ் அஉ), தருக்கு, (திருக் பகைத்திறந்தெரிதல் க0), தலைமை, பழம்பூ,

வலி, பெருமை, பெருமையிற்சிறந் [தோன்.
செம்மறி - செம்மறியாடு.
செம்மாத்தல் - இறுமாப்புக்கொள்ளல்.
செம்மார் - தோலினாற் செருப்புமுதலியவற்றைத்தைப்போர்.
செம்முதல் - பொருமுதல், மூடுதல்.
செம்மை - சிவப்பு, செவ்வை, தலைமை, அழகு, ஒழுக்கம், நடுநிலைமை, தொழிற்றிருத்தமுதலியவைகளாற் சிறந்திருத்தல், பெருமை, கேது என்னுங்கிரகம்.
செம்மொழிச்சிலேடை - பதப்பிரிப்பில் வேற்றுமையின்றியே சிலேடையாகப் பொருள்படும்செய்யுள் முதலியன.
செயப்படுபொருள் - வினைமுதலின் தொழிற்பயனடையும் பொருள்.
செயப்பாட்டுவினை - படுமுதலியவிகுதிகள்புணர்ந்த முதனிலையையுடையதாய் மூன்றாம்வேற்றுமைக்கருத்தாவைக்கொண்டுமுடியும்வினை.
செயம் - வெற்றி.
செயலூர்க்கொடுஞ்செங்கண்ணனார் - கடைச்சங்கப்புலவருளொருவர்.
செயலை - அசோகமரம்.
செயல் - செய்தொழில், ஒழுக்கம்,* காவல்.
செயற்கை - செயல், இயற்கைக்குமாறானது, செய்ந்நன்றி. [வோர்.
செயிரியர் - வீணைமுதலியன இயக்கு
செயிர் - குற்றம், கோபம்.
செயிர்க்காவிரியார்மகனார்சாத்தனார் - கடைச்சங்கப்புலவருளொருவர்.
செயிர்த்தல் - கோபித்தல், வருத்தஞ்செய்தல்.
செயிற்றியம் - செயிற்றியனார்செய்த ஓர் நாடகத்தமிழ்நூல்.
செய் - விளைநிலம்.
செய்கடன் - நித்தியகருமம், முறை.
செய்கால் - சோலை.
*செய்கை - செயல்.
செய்தி - ஒழுக்கம், நிகழ்ச்சி. [று.
செய்திறம் - மருதயாழ்த்திறத்துளொன்
செய்யல் - ஒழுக்கம், காவல், சேறு, செய்தொழில்.
செய்யாள் - இலக்குமி.
செய்யுளணி - சொல்லினாலும் பொருளினாலும் செய்யுளிற்றோன்றும் அலங்காரம். (அது சொல்லணியும் பொருளணியுமென இருவகைத்து. அவற்றுள் சொல்லணி மடக்கும் சித்திரமுமென இருவகைப்படும்; பொருளணி தண்டியலங்காரத்தில் முப்பத்தைந்தாகவும் பாலபோதவிலக்கணத்தில் வடநூற்சந்திராலோகம்போல நூறாகவுங் கூறப்பட்டது).

பொருளணி கூறு - தன்மை உவமை உருவகம் தீவகம் பின்வருநிலை முன்னவிலக்கு வேற்றுப்பொருள்வைப்பு வேற்றுமை விபாவனை ஒட்டு அதிசயம் தற்குறிப்பேற்றம் ஏது நுட்பம் இலேசம் நிரனிறை ஆர்வமொழி சுவை தன்மேம்பாட்டுரை பரியாயம் சமாகிதம் உதாத்தம் அவநுதி சிலேடை விசேடம் ஒப்புமைக்கூட்டம் விரோதம் மாறுபடுபுகழ்நிலை புகழாப்புகழ்ச்சி நிதரிசனம் புணர்நிலை பரிவருத்தனம் வாழ்த்து சங்கீரணம் பாவிகம் என்பன.

பொருளணிநூறு - உவமை இயைபின்மை புகழ்பொருளுவமை எதிர்நிலை உருவகம் திரிபு பலபடப்புனைவு நினைப்பு மயக்கம் ஐயம் ஒழிப்பு தற்குறிப்பு உயர்வுநவிற்சி ஒப்புமைக்கூட்டம் விளக்கு பின்வருவிளக்கு தொடர்முழுதுவமை எடுத்துக்காட்டுவமை காட்சி வேற்றுமை உடனிகழ்ச்சி இன்மைநவிற்சி சுருங்கச்சொல்லல் கருத்துடையடை கருத்துடையடைகொளி பல்பொருட்சொற்றொடர் புனைவிலிபுகழ்ச்சி புனைவுளிவிளைவு பிறிதினவிற்சி வஞ்சப்புகழ்ச்சி வஞ்சப்பழிப்பு எதிர்மறைமுரண்விளைந்தழிவு பிறிதாராய்ச்சி காரணவாராய்ச்சி கூடாமை தொடர்பின்மை தகுதியின்மை தகுதிவியப்பு பெருமை சிறுமை ஒன்றற்கொன்றுதவி சிறப்புநிலை மற்றதற்காக்கல் காரணமாலை ஒற்றைமணிமாலை மாலைவிளக்கு மேன்மேலுயர்ச்சி நிரனிறை முறையிற்படர்ச்சி மாற்றுநிலை ஒழித்துக்காட்டு உறழ்ச்சி கூட்டுவினைமுதல்விளக்கு எளிதின்முடிபு விறல்கோள் தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறு தொடர்நிலைச்செய்யுட்குறி வேற்றுப்பொருள்வைப்பு மலர்ச்சி கற்றோர்நவிற்சி உய்த்துணர்வைப்பு பொய்த்தற்குறிப்பு வனப்புநிலை இன்பம் துன்பம் அகமலர்ச்சி இகழ்ச்சி வேண்டல் இலேசம் குறிநிலை அரதனமாலை பிறிதின்

குணம்பெறல் தொல்லுருப்பெறல் பிறிதின்குணம்பெருமை தன்குண மிகை மறைவு பொதுமை மறையாமை சிறப்பு இறை நுட்பம் கரவு வெளிப்படுப்பு வஞ்சநவிற்சி குறிப்புநவிற்சி வெளிப்படைநவிற்சி யுத்தி உலகவழக்குநவிற்சி வல்லோர் நவிற்சி மடங்குதனவிற்சி தன்மை நவிற்சி நிகழ்வினவிற்சி வீறுகோள் மிகுதிநவிற்சி பிரிநிலைநவிற்சி விலக்கு விதி ஏது என்பன.

செய்யுளுக்குரியஎண்வகைக்கணம்-நீர்க்கணம் நிலக்கணம் நீதயுக்கணம் வாயுக்கணம் ஆகாயக்கணம் சூரியகணம் சந்திரக்கணம் இயமானகணம் என்பன.

(முதற்செய்யுளின் முதலாஞ் சீரின் அசை வகையாற்கொள்ளப்படுவன)

செய்யுள்-பாட்டு.

செய்யுள்வனப்பு அ- அம்மை அழகு தொன்மை தோல் விருந்து இயைபு புலன் இழைபு என்பன.

செய்யோன்- அருகன்,செம்மையுள்ளவன்

செய்வினை- எழுவாயைக்கருத்தாவாகவுடைய வினை.

செரு-போர்.

செருகுதல்- அடைசுதல், நுழைத்தல்.

செருக்களவஞ்சி-போர்க்களத்தை வருணித்து வஞ்சிப்பாவாற்பாடும் பிரபந்தம்.

செருக்கு- இறுமாப்பு. களிப்பு,களிப்பு முதலியவற்றாலான மயக்கம், பெருவலி,மகிழ்ச்சி.

செருத்தணி- தணிகைமலை. (இது சுப்பிரமணிய தலங்களுள் ஒன்று.)

செருத்தல்- எருமை பசு இவற்றின் மடி.

செருநர்-படைவீரர், பகைவர்.

செருந்தி-செருந்திமரம், வாட்கோரை.

செருப்பு- (காலில்மாட்டுந்) தொடுதோல். ஓர்மலை. (பதிற்று)

செருமுதல்- அடைசுதல், நெருக்குதல், கண்டத்தினின்று ஓர் வகையான ஒலி பிறப்பித்தல்.

செருவிளை- வெண்காக்கணம் -(குறிஞ்சிப் சுஅ).

செலவு- பொருளைச் செலவுசெய்தல், இறந்தகாலம்,ஆளத்தியிலேநிரம்பப் பாடுதல், வேகம், நடை,பிரயாணம், வழி.

செனு- மீன்சிறை, நறுவிலிமரம்.

செலுத்துதல்-நடப்பித்தல், ஏவுதல்.

[செலுவல்- அற்பத்தன்மை.]

செல்- இடி, கறையான், மேகம்.

செல்லல்- கேடு, துன்பம், நடத்தல், வருதல், பரத்தல், கழிதல், சாதல், (பிந்திய ஐந்துபொருள்களிலும் சேறல் எனவும்).

செல்வம்- ஐசுவரியம், பெருக்கம்.

செல்வன்- மகன், கடவுள்,செல்வமுள்ளோன், புத்தன்.

செல்வி- மகள், தலைவி, செல்வமுள்ளாள், இலக்குமி.

செவி- காது, கேள்வி.

செவிடு- செவியுணர்வின்மை.

செவிட்டல்- கொல்லல்.

செவிமலர்ப்பூ-ஓர்காதணி.

செவியறிவுறுத்தல்- போதித்தல்.

செவியறை- செவியில்லாதவன், செவியில்லாதவள், செவியில்லாதது.

செவிரம்- நீர்ப்பாசி.

செவிலி-முன்பிறந்தாள், வளர்த்ததாய்.

செவ்வந்தி- ஓர்பூச்செடி.

செவ்வரக்கு - சாதிலிங்கம்.

செவ்வரத்தை (செம்பரத்தை) - ஓர் பூமரம்.

செவ்வரி- ஓர்வகைநாரை, (பதிற்).

செவ்வழி- ஓர்பண்.

செவ்வழிப்பாலை- பாலையாழ்த்திறத்துளொன்று.

செவ்வழியாழ்-நால்வகைப் பண்களுளொன்று.

செவ்வன்- செவ்வை.

செவ்வாய்-ஒருகிரகம், ஒருவாரம்.

செவ்வி- அழகு, காலம், பருவம், மலரும் பருவத் தரும்பு, செப்பமான சுவைமுதலியன.

செவ்வியம்- ஓர்மருந்து. நடுவுநிலைமை.

செவ்வெண்- பொருள்களை நிரைபடச் சொல்லி அவற்றி னெண்ணையும் பின் சொல்வது.

செவ்வே- செப்பமாக.

செவ்வேள்- முருகக்கடவுள்.

செவ்வை- திருத்தம்.

செழித்தல்-செழுமையாதல்.

செழிப்பு- செழுமை.

செழியன்- பாண்டியன்.

செழுகை (செளுகை)- அட்டை, (ஜலூகா என்னும் வடசொல்லின் றிரிபு).

செழுத்து (செழுந்து,- செழுமம் கோயிற்)

செழுமை- வளம், கொழுப்பு, அழகு, மாட்சிமை.
செறல்-கொலை, கோபம், (புறநா கரு), பகை, வெகுளியது காரியமென்பர் சேனாவரையர்).
செறிதல்- நெருங்குதல், அடைதல், மிகுதல்.
செறித்தல்- நெருக்குதல், அடக்கிவைத்தல், இறுக்குதல், கொல்லல்.
செறிவு - அடக்கம், கலப்பு, கூட்டம், பெருமை. (கலித்), நெருக்கம், அணிநூலிற் சொல்லப்பட்ட குணவலங்காரம் பத்தனுள் நெகிழிசையின்மை.
செறு- வயல், பாத்தி.
செறுதல்- அழித்தல், கெடுத்தல், நெருங்குதல், வெறுத்தல்.
செறுத்தல்- அடக்குதல். கொல்லுதல், கோபித்தல், தூர்த்தல், அல்லது அடைத்தல், (நாலடி நட்பிற்பிழை உ).
செறுநர்- பகைவர்.
செறும்பு- செற்றம், பனை முதலியவற்றின் செறும்பு. (சிறும்பு) சிராம்பு என வழங்குவர்)
செற்றம் - நெடுங்காலமாய் நிகழும் பகை.
செற்றலர் } - பகைவர்.
செற்றார் }
செற்றுதல்- நெருங்குதல், பின்னுதல், (சிந்தா).
செற்றை- (செத்தை) சிறுதூறு.
சென்னம் - தேன்கெண்டையென்னும் மீன்.
சென்னி- தலை, சோழன், மலையுச்சி, அச்சுவினிநட்சத்திரம்.
சென்னிமலை - கொங்கநாட்டிலுள்ள ஒரு சுப்பிரமணியதலம்.
சென்னியர்- பாணர், (பெரும்பா சஙரு)
சென்னை-சென்னபட்டினம்.

## சே

சே - அழிஞ்சின்மரம், இடபம், இடபராசி, குதிரை புல்வாய் இவற்றின் ஆண்.
சேகண்டி- காவலாளருறையுமிடம், சேமக்கலம்.
சேகரம் - அழகு, கூட்டம், சம்பாத்தியம், தலை, முடி, மாமரம்.
சேகரித்தல். சம்பாதித்தல்,
சேகிலி-வாழை.
சேகில்- சிவந்தநிறமானஇடபம்(கலித்
சேகு-தழும்பு, திடம், பகை. மரவயிரம், சிவப்பு, குற்றம், ஐயம்.
சேகுறல்- மாற்றுயர்தல், சிவந்தநிறமாதல், வயிரப்படுதல்.
சேக்கிழார் - பெரியபுராணம் பாடிய ஒரு சிவனடியார்.
சேக்கை-மக்கட்படுக்கை, விலங்கின்படுக்கை, *யானைதுயிலிடம், உடற்றழும்பு. கர்க்கடகராசி, தங்குமிடம் (சிந் கோவிந் சக), பறவைக்கூடு, முலை, வலை.
சேசனம்- நனைத்தல்.
சேடகம்- பரிசை.
சேடம்- அடிமை, எஞ்சியபொருள்,கடவுளுக்குநிவேதித்தசேடம், (கண்ணுதலார்பூசைபின்சேடம் சிவாக).கழித்தலும் பிரித்தலுமாகிய கணக்குகளில் எஞ்சிய எண்.
சேடர்-அடிமைக்காரர், நெய்வாரிலொருசாதியார்.
சேடல்-உச்சிச்செலுந்தில், (சிலப் புறஞ்சேரி கருசு), பவளக்கான் மல்லிகை. (குறிஞ் அஉ).
சேடன்- அடிமைக்காரன். இளையோன், அனந்தனென்னும்பாம்பு, நெய்தற்றொழில் செய்யுமோர் சாதியான், தோழன்.
சேடாத்திரி- திருவேங்கடமலை.
சேடி- இடையர்வீதி, தோழி. வலிற்சிறந்தாள்,வித்தியாதரருலகு, நிரை.
சேடித்தல்- எஞ்சிநிற்றல்.
சேடு- அழகு, சிவப்பு, நன்மை, பெருமை, திரட்சி.
சேடை- அட்சதையரிசி.
சேட்டம்- முதன்மை, ஆனிமாதம்.
சேட்டனம்-முயலுதல்.
சேட்டன்-தமையன்.
சேட்டித்தல்-தொழிற்படுத்தல்.
சேட்டை- உறுப்புக்களாற் செய்யப்படுந் தொழில், மூதேவி. முன்பிறந்தாள், கேட்டை நட்சத்திரம்,முறம், விசாகநட்சத்திரம், பெருவிரல்.
சேட்படல்- எதிர்த்தல், (சிந்தா). தூரப்படுதல்.
சேட்படை-தூரம்.
சேணம்-கல்லணை, மெத்தை-
சேணி - ஏணி, வித்தியாதரருலகம், நிரை.
சேணியர்- வித்தியாதரர்,(சேது), நெய்வாரிலோர்பகுதியார்,

சேண்- ஆகாயம்,தேவருலகம்,உயரம், மலைஉச்சி, தூரம், நெடுநேரம், அகலம், நீளம்.
சேதகம்- சிவப்பு, சேறு.
சேதம்- கேடு, நட்டம், பிரிவு.
சேதனம்- அறிவு, அறிவுள்ளபொருள், வெட்டுதல்.
சேதனன்- அறிவுடையோன்,ஆன்மா, உயிர்.
சேதனை- மனம்.
சேதாரம்- தேமாமரம், தேய்வுமுதலியவற்றால் வரும் நட்டம்.
சேதி- ஓர்நாடு, (பாரத திரௌ சஉ), ஓரரசன், அவனுடையவம்சம். (பாரத குருகுல கஂச.
சேதித்தல்- வெட்டுதல். அழித்தல்.
சேதிபன்- சிசுபாலன்.
சேதிமம், சேதியம் } தேவாலயம்.
சேது- செய்கரை, (கடல் முதலியவற்றைத் தூர்த்து ஆக்கிய கரை, இந்தியாவையு மிலங்கையையு மிணைத்து இராமர் கட்டுவித்த அணைபோன்றது), சேதுதீர்த்தம், சிவப்புநிறம்.
சேத்தல் - சிவத்தல் தங்குதல்.
சேத்து- ஒப்பு, சிவப்பு,உறுப்பு, ஐயம், ஓரசைச்சொல், மனக்கருத்து, நெருக்கம்.
சேந்தன் - முருகக்கடவுள், திவாகரங்கண்டு செய்வித்தவன், திருவிசைப்பாப் பாடினவருளொருவர்.
சேக்கை - மேலிடத்திலமைத்த படுக்கை.
சேபம்- ஆண்குறி.
சேப்பு- சிவப்புநிறம்.
சேமக்கலம்- சேகண்டி, எறிமணி.
சேமத்தேர்-வைப்புத்தேர்.
சேமம்- இன்பம், சிறை, காவல்.
சேமரம்- ஆண்மரம், அழிஞ்சில்மரம்.
சேமித்தல்- திரவியமுதலியவைகளைத் திருடர்முதலாயினோ ராலழிவுறுவண்ணம் மறைத்துவைத்தல்.
சேம்பு- ஓர்செடி.
சேயாறு- தொண்டைமண்டலத்திலுள்ள ஒரு நதி.
சேய் - கந்தசாமி, மகன், இளமை, செவ்வாய், தூரம், நீளம், சிவப்புநிறம்.
சேய்ஞலூர்- ஓர்சுப்பிரமணியத்தலம்.
சேய்மை- தூரம்.
சேர- ஒருங்கே.
சேரமண்டலம்- சேரநாடு. (திருச்செங்கோடு சமுத்திரம் கள்ளிக்கோட்டை பழனி என்னும் நான்கையும் நாற்றிசைகளினு முறையே எல்லையாகவுடையதேசம்.)
சேரமான்பெருமாள்- ஓரடியவர், இவருக்குக் கழறிற்றறிவார் எனவும் பெயர்.
சேரலன்- சேரன், பகைவன்.
சேரல்- கொழியலரிசி.
சேரன் - (சேரமான்) குடநாட்டரசன்,
சேரார்- பகைவர்.
சேரி- ஊர், தெரு. (ஐங்குறு).
சேரிப்பரத்தையர்- பொதுப்பெண்டிர்.
சேர்- ஓர் முகத்தலளவு, உவமவுருபு.
சேர்க்கை - ஒன்றிப்பு, புணர்ச்சி, சேர்த்தல்.
சேர்தல்- அடைதல், செறிதல், புணர்தல்.
சேர்ந்தார்- சினேகிதர்.
சேர்ந்தார்க்கொல்லி- நெருப்பு.
சேர்ப்பன்- நெய்தநிலத்தலைவன்.
சேர்ப்பு- அநுபந்தம், கடற்கரை, நூல் முதலியவற்றிலில்லாததாய் உள்ளதோவென் றையுறும்படி பின்னோராற் சேர்க்கப்பட்ட பாட்டு முதலியன.
சேர்விடம்- சயனம், வீடு.
சேர்வு- மருதநிலத்தூர், வீடு. திரட்சி,
[சேர்வை- துணிமுதலியவற்றிற்சேர்க்கும் மருந்து.] கலவை-
சேலம்- ஓரூர், புடைவை.
சேலேகம் - சிந்தூரம்.
சேலை- வஸ்திரம்.
சேல்- வயல்.
சேவகம்-சேவிக்குந்தொழில்,சித்திரை. யானை துயிலிடம், வீரம்.
சேவகன்- சேவிப்பவன், வீரன்.
சேவதி- குபேரனுடைய நவநிதிகள்.
சேவல்- காவல், சக்கரவாகப்புள்,(சிம்மிலை டு) சேறு, மயிலு மெழாலு மொழிந்த பறவைகளினாண், ஆண்கோழி,முருகக்கடவுளூர்தியாகிய மயில்.
சேவித்தல்- ஏவல்செய்தல், வழிபடல்,
சேவை- பிறனுடைய வேலையைச்செய்து பொருள் வாங்குதல், வழிபாடு.
சேறல்- செல்லுதல்.
சேறு- நீரிலுண்டாகுஞ்சேறு, தேன், சாரம், இனிமை, கள். திருவிழா, செறிவு, (புறநா) விவாகம்.
சேனம்- பருந்து.

சேனதிபன் (சேனபதி) - படைத்தலைவன்.

சேனமுகம் - சேனைத்தொகையுளொன்று.

சேனவரையர் - தொல்காப்பியச் சொல்லதிகாரஉரையாசிரியருளொருவர்.

சேனனி - முருகக்கடவுள்.

சேனை - போர்ப்படை, கடைத்தெரு, தெரு.

சேனைத்தொகை- ஒருயானையும் ஒருதேரும் மூன்றுகுதிரையும் ஐந்து காலாட்களும் கொண்டது பதாதி; பதாதி ௩ கொண்டது சேனமுகம்; சேனமுகம் ௩ கொண்டது குல்மம்; குல்மம் ௩ கொண்டது கணகம்; கணகம் ௩ கொண்டது வாகினி; வாகினி ௩ கொண்டது பிரளயம்; பிரளயம் ௩ கொண்டது சமூ; சமூ ௩ கொண்டது சங்கம்; சங்கம் ௩ கொண்டது அநீகம்; அநீகம் ௩ கொண்டது † அக்குரோணி; அக்குரோணி அ கொண்டது ஏகம்; ஏகம் அ கொண்டது கோடி; கோடி அ கொண்டது சங்கம்; சங்கம் அ கொண்டது விந்தம்: விந்தம் அ கொண்டது குமுதம்; குமுதம் அ கொண்டது பதுமம், பதுமம் அகொண்டது நாடு; நாடு அகொண்டது சமுத்திரம்; சமுத்திரம் அ கொண்டது வெள்ளம்.

† அக்குரோணிஎன்பது அக்ஷௌகிணி யென்னும் வடமொழியின்றிரிபு. உக அ௭ ௦ யானையும் அத்தொகைத் தேரும் ௬ ௫ ௬ ௧௦ குதிரையும் ௧௦ ௯ ௩ ௫ ௦ காலாட்களுங் கொண்டதென நல்லாபிள்ளை பாரதத்திற்சொல்லப்பட்டது. வடநூலகராதியிலும் அவ்வாறேகாணப்படுகின்றது.

சேனைவகை ச - யானை தேர் குதிரை காலாள் என்பன.

## சை

சை - இகழ்ச்சிக்குறிப்பு. (சையெனத்திரியேல்; ஆத்).

சைகை - கண்முதலியவற்றாற் காட்டுங் குறிப்பு.

சைசவம் - ௧௬ வயதுக்குள்பட்டபிராயம்.

சைதன்னியம்- அறிவு, ஆன்மா, கடவுள்.

சைத்தியம் - புத்தாலயம், குளிர்ச்சி.

சைத்திரம் - சித்திரைமாதம். (இது பெரும்பாலும் சாந்திரமாதத்தையே குறிக்கும்).

சைத்திராதம்- குபேரனுடைய நந்தனவனம்.

சைந்தவம்- குதிரை, இந்துப்பு, தலை, சிந்துநதிச் சார்பில்விளையும் உப்பு.

சைந்தவி - ஓரிராகம்.

சைமினி - யமனுடையபட்டணம், பூர்வமீமாஞ்சைநூலாசிரியரான ஒருமுனிவர்.

சையம் - மலை, கல், குலாசலங்களேழுள் ஒன்று, (குடகுமலையென்பதும் இதுவே).

சையோகம் - புணர்ச்சி.

சைரிபம் - எருமை.

சைலம் - மலை.

சைவசித்தாந்தம் ௧௪ - திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் சிவஞானபோதம் சிவஞானசித்தியார் இருபாவிருபது உண்மைவிளக்கம் சிவப்பிரகாசம் திருவருட்பயன் வினவெண்பா போற்றிப்பஃறொடை கொடிக்கவி நெஞ்சுவிடுதூது உண்மைநெறிவிளக்கம் சங்கற்பநிராகரணம் என்பன.

சைவம் - பதினெண்புராணங்களுளொன்று, சிவனை முதற்கடவுளாகக்கொள்ளுஞ் சமயம்.

சைவலம் - பாசி.

சைனம் - அருகசமயம்.

சைனன் - அருகன், புத்தன்.

சைனிகன் - சேனைத்தலைவன்.

சைனியம் - சேனை.

## சொ

[சொகுசா - தங்கங்கலந்தசெம்பு].

[சொகுசு - நாகரீகம், சேர்த்தி].

சொக்கட்டான் - ஓர் சூதாட்டம்.

சொக்கநாதன் - மதுரைச்சோமசுந்தரக் கடவுள்.

[சொக்கப்பானை - விளக்கீட்டிலன்று ஆலயம் முதலியவைகளினயலிற் கட்டியெரிக்கப்படும் ஓர் செய்கைவிருட்சம். (சுஷ்கபர்ணஎன்னும் வடமொழியின் திரிபு).

சொக்கம் - அழகு, பரதத்தில் சுத்தநிருத்தம் (சிந்தா).

சொக்கலிங்கன் } சொக்கநாதன்.
சொக்கன் }
சொக்கு - அழகு, பொன்.
சொக்குதல் - அழகுக்காட்சியினால் அல்லது சங்கீதக்கேள்வி முதலியவற்றால் மயங்குதல்.
சொச்சம் - மாசின்மை. (திருப்).
[சொட்டுதல் - குட்டுதல், அணுப்பல், நீர் சிந்தல்].
சொட்டை - வளைதடி, பரிகாசம்.
சொண்டு - ஆயுதங்களில்வளைந்திருக்கும் நுனி, உதடு, பறவைமூக்கு.
சொத்தம் - சுகம்.
சொத்தி - நொண்டி.
சொத்து - பொருள்.
[சொத்தை - கதுப்பு].
சொந்தம் - உரியது.
சொப்பனம் - கனவு.
சொம் (ஸ்வம்) - உடைமை.
சொரிதல் - உதிர்த்தல் - பொழிதல், சிந்துதல்.
சொருகுதல் - செருகுதல், ஃசுழலல்.
சொரூபம் - வடிவம்.
சொரூபலக்கணம் - சிறப்பிலக்கணம்.
சொர்க்கம் - தேவலோகம், மூலை.
சொலித்தல் - இடத்தல், (சிந் நாமக சுஉக), சுவாலித்தல், பிரகாசித்தல்.
சொலியல் - களைதல். (புறநா கூக).
சொல் - எழுத்தாலாகியசொல், புகழ், நெல்.
சொல்லணி - செய்யுளுக்குச் சொற்களின் றொடை முதலியவற்றாற் றோன்றும் (மடக்குமுதலிய) அணிகள்.
சொல்லல் - சொல்லுதல்.
சொல்வகை - பதச்சேதம்.
சொல்விளம்பி - கள்.
சொறி - தினவு.
சொறிதல் - தினவுண்டாதல்.
சொற்பம் - அற்பம்.
சொற்றொடையின்பாகுபாடு ச - சுன்னம் சுரிதகம் வண்ணம் வரிதகம் என்பன. (சுன்னம் நான்கடியான்வருவது. சுரிதகம்எட்டடியான்வருவது. வண்ணம் நானுன்கடியான் வருவது. வரிதகம் முப்பத்திரண்டுஅடியான்வருவது.
சொன்மாலை - புகழ்மொழி.
சொன்றி - சோறு.
சொன்னகாரர் - தட்டார்.
சொன்னம் - பொன்.
சொன்னல் - சோளம்.

## சோ

சோ - மதில், வாணாசுரனுடைய நகரம்.
சோகம் - துன்பம், சோம்பல், திரட்சி, ஐங்கணைவத்தைகளுள் அசோகம்பூவின்குணம். (வெதும்பி உணவு வெறுத்திருத்தல்).
சோகம்பாவனை - கடவுளுடன் தன்னை அபேதமாகப் பாவித்தல்.
சோகாத்தல் - துன்பமுறல்.
சோகி - பலகறை, சோகமுள்ளவன்.
சோகித்தல் - துக்கப்படுதல்.
சோகு - பிசாசம்.
சோகை - ஓர்வகைநோய்.
சோங்கு - ஓர்வகைமரக்கலம், (திருவிளை வீ கூச), துப்பாக்கிமுதலியவற்றினடி.
சோசனம் - துக்கம்.
சோடசஉபசாரம் - ஆசனம் ஸ்வாகதம் பாத்தியம் அர்க்கியம் ஆசமனம் மதுபர்க்கம் புனராசமனம் ஸ்நாநம் வஸ்திரம் ஆபரணம் கந்தம் புஷ்பம் தூபம் தீபம் நைவேத்தியம் தோத்திரம் என்பன. (தவிசளித்தல் கைகழுநீர்தரல் கால்கழுநீர்தரல் முக்குடிநீர்தரல் நீராட்டல் ஆடைசாத்தல் முப்புரிநூலுதவல் தேய்வைபூசல் மலர்சாத்தல் அக்ஷதைசாத்தல் தூபம் தீபம் கர்ப்பூரம் நைவேத்தியம் தாம்பூலம் மந்திரபுஷ்பஞ்சாத்தல் என்பன என்பர் சிலர்).
சோடசி - ஓர் யாகம்.
சோடித்தல் - அலங்கரித்தல்.
சோடு - இணையானவை.
சோடை - வாட்சி, காய்த்தோய்ந்தமரம்.
சோணகிரி - அருணாசலம்.
சோணநதி - கங்கையின்கிளையாகிய ஒருநதி, (சரசுவதிநதியெனப் பிங்கல).
சோணம் - இரத்தம், சிவப்புநிறம்.
சோணாடு - சோழநாடு.
சோணிதபுரம் - வாணாசுரனகரம்.
சோணம் - இரத்தம், சிவப்பு, மகளிர் சூதகம்.
சோணை - திருவோணநட்சத்திரம், சோணநதி, [காதினருகு]. [விடல்.
சோதகம் - கழிக்குந்தொகை, துளி, மழை

சோதகர் - ஏழாந்தலைமுறையின்மேற் பதினான்காந்தலைமுறையீறாகவுள்ளஞாதியர்கள், இவர்கள் சமானோதகரெனவும் படுவர்.

சோதகும்பம் - கும்பத்தில் நீர்நிறைத்துச் செய்யுந்தானம்.

சோதரன் - ஒருவயிற்றிற்பிறந்தோன்.

சோதனம் - சுத்திசெய்தல், பிழைதீர்த்தல், கழிக்கவேண்டியதைக்கழித்தல், நிமித்தம்பார்த்தல், கடன்றீர்த்தல், விரேசனஞ் செய்தல்.

சோதனி - துடைப்பம்.

சோதி - ஒளி. சோதிநட்சத்திரம், அருகன், சிவன், சூரியன், விஷ்ணு, தீபம்.

சோதிடசித்தாந்தம் கஅ - சூரியசித்தாந்தம் பிரமசித்தாந்தம் வியாசசித்தாந்தம் வசிஷ்டசித்தாந்தம் அத்திரிசித்தாந்தம் பராசரசித்தாந்தம் காசியபசித்தாந்தம் நாரதசித்தாந்தம் கர்க்கசித்தாந்தம் மரீசிசித்தாந்தம் மனுசித்தாந்தம் ஆங்கிரசசித்தாந்தம் லோமசித்தாந்தம் புலிசசித்தாந்தம் சியாவனசித்தாந்தம் யவனசித்தாந்தம் பிருகு சித்தாந்தம் சௌனகசித்தாந்தம் என்பன. (இவற்றுட் சௌனசித்தாந்தம் சோமசித்தாந்தமெனவும் பெயர்பெறும். ஆரியபட்டீயம் சித்தாந்தசிரோமணி என்பனவும் இவற்றுடன் சேர்க்கப்படின் இருபதாம்).

சோதிடம் - சூரியன் முதலிய சோதிகளின் சம்பந்தமான நூல். (கணிதம் சாதகபலன் முதலியவற்றைக் கூறும் நூல்).

சோதிட்கம் - மேருமலையின் ஈசான திக்கிலுள்ள ஒருநகரம். (ஈசானருடையது).

சோதிட்டோமம் - ஓர்யாகம்.

சோதிவிருட்சம் - இரவில் எரிவதுபோலத் தோன்றும் சோதிமரம்.

சோத்தம் - இழிந்தார்செய்யும் அஞ்சலி. (திருக்கோ கஎகூ உரை).

சோத்தியம் - கழிக்கப்படவேண்டியதொகை, சுத்தஞ் செய்யப்படவேண்டிய பொருள்.

சோபகிருது - அறுபது வர்ஷங்களுளொன்று.

சோபம் - சலனம், ஆயாசம், கள்.

சோபனம் - சுபம், சுபகருமம், நற்சகுனம், இருபத்தேழு யோகங்களுளொன்று, வாழ்த்து.

சோபானம் - தாழ்வாரம், கற்படி, ஏணி முதலியவற்றின் படி.

சோபித்தல் - பிரகாசித்தல்.

சோபை - ஒளி.

சோமகர் - துருபதராசனுடைய வம்சத்தவர். (பாரத வாரணா எஅ).

சோமக்கொடி - சிலயாகங்களுக்குபயோகமாகும் ஓர்வகைக்கொடி.

சோமசுந்தரன் - மதுரையிலெழுந்தருளியிருக்கும் சிவன்.

சோமசூத்திரப்பிரதக்ஷிணம் - கோமுகைநேரைக்கடவாது பிரதக்ஷிணஞ்செய்தல்.

சோமதயன் - சந்திரமதியின்றந்தை.

சோமயாகம் - யாகவகைகளுளொன்று.

சோமராகம் - பாலைப்பண்ணின் றிறங்களுளொன்று.

சோமலதை - சோமக்கொடி. (ஆட்டாங்கொடியெனச் சிவதரு).

சோமவாரம் - திங்கட்கிழமை.

சோமன் - அட்டவசுக்களுளொருவன், ஒருவள்ளல், குபேரன், சந்திரன். [ஓர்வகைவஸ்திரம்].

சோமாசி - சோமயாசி. (சோமயாகஞ் செய்வோன்).

சோமாசிமாறன் - ஓர்சிவனடியார்.

சோமாஸ்கந்தம் - உமையினோடும் குமாரனோடும் கூடியிருக்கும் சிவரூபம்.

சோமுகன் - ஓரசுரன். (பிரமாவினின்றும் வேதங்களைத் திருடிக்கொண்டு போய்க் கடலிலொளித்து மற்சாவதாரங் கொண்ட விஷ்ணுவினாற் கொல்லப்பட்டவன்.

சோமேசன் - சிவன்.

சோமேற்பவை - நருமதைநதி.

சோம்பல் - ஊக்கமின்மை.

சோரம் - திருட்டு.

சோரன் - திருடன், ஆட்டுக்குட்டி.

சோரி - இரத்தம்.

சோர்தல் - தளர்தல், கழலுதல், வடிதல்.

சோர்வு - *குற்றம், சோம்பல்.

சோலை - மரங்கள்செறிந்த இடம்.

சோலைமலை - சுப்பிரமணிய தலங்களுளொன்று, அழகர்மலையென்னும்விஷ்ணு ஸ்தலம்.

சோழகம் - தென்றல்.
சோழம் - சோழதேசம்.
சோழன் - தமிழ்நாட்டுமூவேந்தருளொருவன்.
சோழியன் - சோழதேசத்தான்.
சோளம் - ஓர் தானியம்.
சோழி - பிச்சைக்காரர் சந்நியாசிமுதலாயினோர்வைத்திருக்கும் பை.
சோறு - அன்னம், தாழம்பூவிலுள்ள சுண்ணம், (அஞ்சோற்றுமடற்கைதைகமழும் பாரத களஉ௰), பரணிநட்சத்திரம்.
சோற்றி - மரத்தினுட்குருகு.
சோனகம் - ஐம்பத்தாறுதேசங்களுளொன்று, பதினெண்பாஷைகளுளொன்று.
சோனகர் - யவனர்.
சோனை - விடாமழை.

## சௌ

சௌகதன் - புத்தமதத்தவன்.
சௌகந்திகம் - பதுமராகமணியினோர்வகை.
சௌகரியம் - எளிதிற்செய்யக்கூடியது.
சௌசம் - சுத்தம்
சௌண்டன் - வல்லவன், மதம்பிடித்தோன்.
சௌண்டிகர் - கள்விற்போர்.
சௌதம் - அரசர்களுடைய வீடு.
சௌதாமினி - மின்னல்.
சௌதாயிகம் - பிதாமாதாவழியாராலேனும் கணவன்வழியாராலேனும் சுமங்கலிபூசைமுதலியவற்றாலேனும் கிடைக்கப்பெற்றுப் பெண்கள்வைத்திருக்கும் பொருள்.
சௌத்திராந்திகர் - புத்தரிலொருபகுதியார்.
சௌத்திராமணி - ஓர்யாகம்.
சௌந்தரியம் - அழகு.
சௌந்தரியலகரி - சங்கராசாரியராலருளிச்செய்யப்பட்ட ஓர் வடமொழித்தோத்திரம்.
சௌபரி - ஓர்முனிவர்.
சௌபலன் - சகுனி.
சௌபலை - காந்தாரி.
சௌபாக்கியம் - உஎ யோகங்களுளொன்று, பெண்கள் கணவரால்விரும்பப்படுந்தன்மையராதல்.
சௌமிய - அறுபதுவருடங்களுளொன்று.
சௌமியர் - சமணமதத்துறவிகள், நல்லோர், சாந்தகுணமுடையோர்.
சௌமியன் - புதன், சாந்தமுடையோன், நற்குணமுடையோன்.
சௌரம் - சூரியனுடைய நிலையினாலறியப்படும் வருடம் மாதம் தினம் ஆகிய காலவகை, மயிர்களைதல்.
சௌராட்டிரம் - ஓர்தேசம்.
சௌரி - கருடன், காளிந்திநதி, சனி, கன்னன், கள்வன், யமன், திருமால், கிருஷ்ணமூர்த்தி.
சௌரியம் - களவு, வீரம்.
சௌளம் - சூடாகருமம்.
சௌனகன் - ஓரிருடி.

## ஞ

ஞமலி - நாய், மயில், கள்.
ஞரலல் - முழங்குதல்.
*ஞலவல் - நுளம்பு, மின்மினிப்பூச்சி.

## ஞா

ஞாங்கர் - வேல், இடம், பக்கம், முன், மேல்.
ஞாட்பு - போர், வலி, கூட்டம், பாரம், போர்க்களம்.
ஞாண் - கயிறு, வில்நாண், விருத்தத்தின் பாதியில்நேரே வரையப்பட்ட இரேகை.
ஞாதா - அறிகிறவன்.
ஞாதியர் - தாயத்தார்.
ஞாத்தல் - கட்டுதல்.
ஞாபகம் - அறிவு, அரும்பொருள், (நற்பொருளெனப்பிங்).
ஞாயில் - மதிலுறுப்பு, (சிலப்பதிகாரவுரையிற் குருவித்தலையெனவும், புறநானூற்றில் மதிற்சூட்டெனவும் கூறினர்).
ஞாயிறு - சூரியன், ஞாயிற்றுக்கிழமை.
ஞாலம் - உலகம், பூமி.
ஞாலுதல் - தூங்குதல்.
ஞாழல் - குங்குமமரம், திருவிளைவலைவீ); புலிநகக்கொன்றை. (சிந் விசேடக்குறிப்பு; புலினியென நிகண்.)
ஞாளி - நாய், கள்.
ஞாளியூர்தி - வைரவக்கடவுள்.
ஞாற்சி - தூங்குந்தன்மை.
ஞானசம்பந்தர் - ஆளுடையபிள்ளையார்.
ஞானப்பூங்கோதை - திருக்காளத்திமலையிலெழுந்தருளிய உமை.

ஞானமுத்திரை- சின்முத்திரை.
ஞானமூர்த்தி-கடவுள், சிவன், சரசுவதி.
ஞானம் - நல்லுணர்வு, வித்தை, ஞான நூல்.
ஞானவகை ச - கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டைகூடல் என்பன.
ஞானாத்துமா - கடவுள்.
ஞானி - ஞானமுடையோன், பிரமா.
ஞானேந்திரியம் - பரிசமுதலியவிஷயங்களைக்கிரகிக்கிற மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகள்.
ஞான்று - காலத்தில். (சுட்டுவினுக்களுடன் வழங்கும்).

ஞி

ஞிமிர்தல் - ஒலித்தல், நிமிர்தல்.
ஞிமிறு - வண்டு, தேனீ.

ஞெ

ஞெகிழம் - பொற்சிலம்பு.
ஞெகிழி - நெருப்புறுவிறகு, விறகு, தீக்கடைகோல், சிலம்பு.
ஞெண்டல் - கிளைத்தல்.
ஞெண்டு - நண்டு, கர்க்கடகராசி.
ஞெமர்தல் - (ஞமலல்)-பரத்தல்.
ஞெமன்கோல்-துலாக்கோல். (மதுரை சஙக).
ஞெமிதல்-நெரிதல். (திருக்கோ கசுஇ).
ஞெமிர்தல்-நெரிதல், பரத்தல், முரிதல்.
ஞெமுங்கல் - அழுந்தல்.
ஞெரேலெனல்-விரைவுக்குறிப்பு, ஒலிக்குறிப்பு.
ஞெலிகோல் - தீக்கடைகோல்.
ஞெலிதல் - கடைதல்.
ஞெளிர்தல் (நெளிர்தல்) - எடுத்தலோசை, உள்ளோசை.
ஞெள் - ஒலிக்குறிப்பு.
ஞெள்ளல் - வீதி, தவறு, விரைவு, பள்ளம், மேன்மை.

ஞே

ஞேயம்- அறியப்படும்பொருள்.

ஞொ

ஞொள்கல் - அலைதல், குலைதல், அச்சக்குறிப்பு, இளைத்தல், சோம்பல்.

த

தக - உவமைச்சொல். (திருவிளை மாபா தக கூஎ).

தகடு - இலை, தகட்டுவடிவு, இதழ், புறவிதழ். (புறநா).
தகணிதம் - துந்துபி.
தகணை - உலோகக்கட்டி.
தகண் - தடை, (சிங்; இக்காலத்தில் தவண் என விஷத்தை மேலேறுமற்செய்யுந்தடைக்கு வழங்குவர்).
தகப்பன் - பிதா.
தகமை - குணம்.
தகரம்-ஓர்வாசனைமரம், (சிந் விசேடக்), மயிர்ச்சாந்து, ஓர்வகைலோகம், அந்தராகாசம்.
தகரை - ஓர்செடி.
தகர் - துருவாடு யானையாளி சுறு இவற்றிணுண், மேடராசி, மேட்டுநிலம். (பெரும்பா அஎ).
தகர்தல் - உடைதல், நொருங்கல்.
தகர்த்தல் - உடைத்தல், குட்டல்.
தகவல் - தடைச்சொல்.
தகவு-தகுதி, சிறப்பு, கிருபை, தன்மை, குணம், நடுவுநிலைமை, (திருக் நடுவுநிலைமை ச), தடை,மேம்பாடு,தளர்வு.
தகழி (தகளி)-அகல். (தீபங்களில் எண்ணெய்நிறைத்தற்குரியது).
தகுணிச்சம் - ஓர்வகைத்தோற்கருவி, (சிலப் அரங் உஎ உரை), வாத்தியப்பொது.
தகுணிதம் - வாத்தியப்பொது.
தகுதல் - தகுதியுடைமை, தடுத்தல்.
தகுதி - நடுவுநிலைமை, தக்கசெய்கை.
தகுதியோர் - அறிஞர்.
தகுதிவழக்கு- இடக்கரடக்கல் மங்கலம் குழூஉக்குறி என்னுஞ்சொல்வகைகள். (உரியசொல்லால் வழங்காது தகுதியுடையவேறோர்சொல்லால் வழங்குதலின் இவை இப்பெயரின).
தகுவர் - அசுரர்.
தகுவியர் - அசுரப்பெண்கள்.
* தகுளம் - மகளிர்விளையாட்டு.
தகை - அழகு, தன்மை, அன்பு, பெருமை, தளர்வு, தகுதி.
தகைதல்-கட்டுதல், தடுத்தல், உள்ளடக்கல்.
தகைப்பு - மாளிகைக்கட்டிடம். (பதிற்று).
தகைமை- அழகு, ஒழுங்கு, தகுதி, தன்மை, பெருமை.

தக்கம் - ஒருவிளையாட்டு, தடை, தக்ஷஸ்மிருதி (இதுதருமநூல்பதினெட்டுள் ஒன்று).
தக்கன் (தக்ஷன்) - அட்டநாகங்களிலொன்று, (தக்ஷகன்எனவும்), தசப்பிரமாக்களுளொருவனாகிய தக்கன், வல்லவன், ஓர்முனிவர்.
தக்கார் - தகுதியுடையோர், நடுநிலையுடையோர்.
தக்காளி - ஓர்செடி.
தக்கிணம்-தெற்கு, வலப்பக்கம், ஆரியதேசத்துக்குத் தெற்குத்திக்கிலுள்ள தேசம்.
தக்கிணாமூர்த்தி - தக்ஷிணாமூர்த்தி, சனகர் முதலியமுனிவர்களுக்கு ஞானோபதேசஞ்செய்த சிவரூபம்.
தக்கிணை (தட்சிணை) - யாகமுதலியவற்றிற் குருமுதலியவர்களுக்குக் கொடுக்குந்தட்சிணை, (இது யாகதேவதைக்குத்தேவி எனவேதத்திற்சொல்லப்பட்டது).
தக்கிரம் - மோர்.
தக்கை - பம்பைவாத்தியம், வாத்தியப்பொது.
தக்கோர் - அறிஞர், நடுவுநிலையுடையோர்.
தக்கோலம் - பஞ்சவாசங்களுளொன்றாகிய செடி. (மரமெனச்சிந்தாமணியில்).
தங்கம் - மாற்றுயர்ந்தபொன்.
தங்கல் - தங்குமிடம்.
தங்குதல் - இருத்தல், நிலைப்படுதல்.
தங்கை - இளையாள்.
தசகாரியம் - தத்துவரூபம் தத்துவதரிசனம் தத்துவசுத்தி ஆன்மரூபம் ஆன்மதரிசனம் ஆன்மசுத்தி சிவரூபம் சிவதரிசனம் சிவயோகம் சிவபோகம் என்பன. (தசகாரிய).
தசக்கிரீவன் - இராவணன்.
தசப்பிரமாக்கள் - பிரமா மரீசி பிருகு அங்கிரா கிரது புலகன் புலத்தியன் தக்கன் வசிட்டன் அத்திரி என்பவர்கள்.
தசமி - பத்தாந்திதி.
தசமுகன் - இராவணன்.
தசமூலம் - சிறுபஞ்சமூலமும் பெரும்பஞ்சமூலமும் ஆகிய இரண்டுங்கூடிய பத்துமூலப்பொருள்கள்.
தசம் - பத்து.
தசரதன் - இராமருடைய பிதா.
தசனம் - பல், கவசம்.
தசாங்கதூபம்-தேன் முத்தக்காசு நெய் முரம் குங்குலியம் அகில் சந்தனம் தேவதாரு சாம்பிராணி வெண்கடுகு என்னும் பத்தையுஞ் சேர்த்திடித்த தூளினாலாகிய தூபம். (சிலநூல்களில் வேறுபடக்கூறப்பட்டன).
தசாங்கத்தயல் - அரசனுடைய தசாங்கங்களை முறையே பத்து ஆசிரிய விருத்தங்களாற் பாடுவது.
தசாங்கப்பத்து - அரசனுடைய பத்து அங்கங்களையும் பத்துநேரிசை வெண்பாவாற் கூறுவது.
தசாங்கம் - அரசர்க்குரிய பத்துஉறுப்புக்கள், (மலை யாறு நாடு ஊர் மாலை குதிரை யானை கொடி முரசு செங்கோல் என்பன), தூபத்துக்குரிய பத்துவகையான பொருள்கள்.
தசாயுதங்கள் - வச்சிரம் சத்தி தண்டம் கட்கம் பாசம் அங்குசம் கதை சூலம் பதுமம் சக்கரம் என்பன. (இவை திக்குப்பாலகர் பதின்மர்க்கும் முறையே ஆயுதங்கள்.
தசிரம்-உட்டுளை,அச்சுவினிநட்சத்திரம்.
தசும்பு - குடம், மிடா.
தசை - ஊன், புலால்நாற்றம், நிலைமை, சன்மநட்சத்திரத்தாலறியப்படும் மகாதசைகாலசக்கரதசைமுதலியன.
தசைத்தல் - கொழுத்தல்.
தச்சன் - மரவினையாளன், சித்திரை நட்சத்திரம்.
தச்சு - மரவேலை.
தஞ்சம் (இடைச்சொல்) - எளிமை. (உ-ம்: அரசே தஞ்சம்).
தஞ்சை - சோழதேசத்திலுள்ள ஓர் நகரம்.
தட (உரிச்சொல்) - பெருமையான, (உ-ம்: தடக்கை), வளைவான. (உ-ம் தடமருப்பெருமை).
தடக்கு - தடை.
தடக்குதல் - தடைப்படுதல்.
தடத்தலக்கணம் -உருவின்நிறிற்றலைக் குறித்துவருணிப்பது, பொதுவிலக்கணம்.
தடத்தன் - சொரூபமில்லாத நிலையில் நிற்கிறவன், ஞானி, பாரபட்சயற்றவன்.
தடம் - விசாலம், பெருமை, வளைவு, (இப்பொருள்களில் தடவு தடா தடாம் எனவும், தடாம்பிறைமருப்பு எனச் சிந்தா), குளம், நீர்க்கரை, வரம்பு, மலை, மலைப்பக்கம், வழி,

வாயில், மூங்கில், வளப்பம்.
தடல் - குலையீன்ற வாழையினுள்ளும் பலாப்பழ முதலியவற்றினுள்ளும் இருக்குந்தண்டு.
தடவு - ஓமகுண்டம், தூபமுட்டி, சுனை, பெருமை, வளைவு, பகுதி, விசாலம்.
தடவுதல் - வருடுதல், பூசுதல், யாழ்வாசித்தல், வளைதல், தேடுதல்.
தடறு - ஆயுதவுறை,
தடா - மிடா, பெருமை.
தடாகம் - குளம்.
தடாதகை - உமையினவதாரமாய்ப் பாண்டிநாட்டையாண்ட ஓரரசி.
தடாரம் - இரண்டொத்துடையதாளம். (சிலப்).
தடாரி-உடுக்கை, பம்பைப்பறை, வாத்தியப்பொது,
தடி - அளவுகோல், உடம்பு, உலக்கை, ஊன், தண்டாயுதம், வில், மிதுனராசி, வயல், மின்னல்.
தடிதல் - வெட்டுதல், குறைத்தல், கொல்லுதல்.
தடித்தல் - மின்னுதல், பருத்தல், கஞ்சி முதலியன வடிக்கப்படும்போது இறுகுதல், உரத்தல்.
தடித்து - மின்னல்.
தடிப்பு - கனம்.
தடினி - நதி.
தடுக்கு - சிறுபாய்.
தடுத்தல் - தடைசெய்தல்.
தடுமாறுதல் - முன்னோடு பின்முரணுதல், தள்ளாடல், நிலைதவறுதல்.
தடை - தடுப்பு, ஆட்சேபம், காவல்.
தட்குதல் - தடக்குதல், தங்குதல்.
தட்டம் - தட்டையானபாத்திர முதலியன, உண்கலம், *படுக்கை, தாடி, (கட்டமென நிக), பல், பாம்பின்நச்சுப்பல்.
தட்டல் - தடுத்தல், கிட்டுதல், தாளம்போடல்.
தட்டழிதல் - நிலைகெடுதல்.
தட்டார் - பொன்வினைமாக்கள்.
தட்டி- அரையிற்கட்டும் ஓர்உடைவிசேடம், ஓர்வாத்தியம், (பெரிய எறிபநக), காவல், பரிசை, படல் பலகை.
தட்டியம் - நெடும்பரிசை.
தட்டு - தராசுத்தட்டு, கிரிகை, தேர்நடு, பரிசை, நிலை, (காஞ்சி நகர உள), மூட்டுதல், முறம், பிரம்பு முதலியவற்றாற் செய்யப்பட்ட ஓர்வகைக் கூடை, வட்டம், வளைவு, *காவல், குற்றம், விக்கினம்.
தட்டுதல் - அடித்தல், மூட்டுதல், இட்டுதல், தாளம்போடுதல், மெய்ப்பரிசமெட்டுளொன்று, வீணைவாசித்தற்றொழிலுளொன்று.
தட்டை - கரடிகையென்னும் வாத்தியம், கிளிகடிகருவி, (மூங்கிற்பிளவால் ஓசையுண்டாகத் தட்டுதற்குரியது), மூங்கில், தட்டைவடிவானது, தினைத்தாள், மொட்டை.
தட்பம் - குளிர்ச்சி, அன்பு.
தணக்கு - நுணுமரம், வால். (சிந்தா).
தணத்தல் - நீங்கல், பிரிதல்.
தணிகை - தணிகைமலை. (சுப்பிரமணிய தலங்களுளொன்று.)
தணிதல் - ஆறுதல், குளிர்தல், குறைதல், தீர்தல்.
தணியல் - கள். (பிரமோத்).
தண்டகநாடு - தொண்டைமண்டலம்.
தண்டகமாலை-வெண்பா ௩௦௦கொண்ட ஓர்பிரபந்தம். (இது வெண்புணர்ச்சி மாலை யெனவும் படும்).
தண்டகன் - ஓரரசன்.
தண்டகாரணியம் - விந்தமலைக்குச் சமீபத்திலுள்ள ஓர்காடு.
தண்டகை - தண்டகவனம்.
தண்டசம் - கொல்லுலை.
தண்டதரன் - யமன்.
தண்டபங்கி - தண்டாகாரமாய்க் கடவுளின் வடிவைப்பாவித்தல்.
தண்டபாசிகன் - கொலைகாரன்.
தண்டம் - கோல், நால்வகைஉபாயங்களுளொன்று, (ஒழுக்கநெறியினும் வழக்கு நெறியினும் வழுவினோருடைய பொருளையபகரித்தலும் அவரை யொறுத்தலும்), தண்டாயுதம், குடைக்காம்பு, தனு இரண்டுகொண்ட நீட்டலளவை, யானைசெல்வழி, யானைதுயிலிடம், சேனை, வியூகவகை நான்குள்ஒன்று, பண்டாரம், வணக்கம். (தண்டாகாரமாய்க்கிடத்தலின் வணக்கத்துக்காயிற்று; தண்டன் எனவும்).
தண்டா - தண்டஞ் செய்வோர்.
தண்டலர் - பகைவர்.
தண்டலை - சோலை, பூந்தோட்டம், ஓரூர், சிவஸ்தலம். (உ-ம்: தண்டலையார் சதகம்).
தண்டனை - தண்டித்தல்.
தண்டாகாரம் - அலகுவைக்கு முறைகளுளொன்று. (ஓரின இலக்கங்களை

நேரேநிரைப்பது).
தண்டாமை - நிலைபெயராமை,
தண்டாயுதபாணி - பழனிமலையிலுள்ள சுப்பிரமணியக் கடவுளின் திருவுருவம்.
தண்டி - தண்டியடிகளென்னுஞ் சிவனடியார், தண்டியலங்கார நூலாசிரியர், யமன், வடமொழிக் காவியாதரிச நூலாக்கியோன், (இவரை ஆசாரிய தண்டி எனவும் கூறுவர்)
தண்டிகை - சிவிகை.
தண்டித்தல் - தண்டனைசெய்தல்.
தண்டிலம் - வேதிகை.
தண்டு - தடி, சிவிகை, சேனை, வில், மிதுனராசி. வீணை, துளையுடைப்பொருள், ஓக்தி, பச்சோந்தி, உலக்கை, பூவின்தாள்,
தண்டுதல் - குறைதல், தவறுதல், தடைசெய்தல், பிரிதல், விலகுதல், அமைதல்.
தண்டுலம் - அரிசி-
தண்டை - மாதர் காலணிகளுளொன்று, வால்.
தண்ணடை - மருதநிலத்தூர்.
தண்ணம் - குளிர், ஒருகட்பறை, பறைப்பொது, மழு.
தண்ணவன் - சந்திரன்.
தண்ணளி - கிருபை.
தண்ணுமை - உடுக்கை. நிசாளமென்னும் பறை, மத்தளம்,
தண்ணெனல் - குளிர்தல்,
தண்மை - குளிர்ச்சி, சாந்தம், தண்ணளி, எளிமை, மென்மை, வெளிப்படை.
ததம் - அகலம், வீணைமுதலிய நரம்புக் கருவிகள்.
ததர் ெ சறிவு, கொத்து, (சிறுபா உருரு)
ததா (வடசொல்) - அப்படி.
ததாகதன் - புத்தன்.
ததி - நிரை, (பாரத அருச்சுனன்றீ எசு) தயிர், நிலைபேறு.
ததீசி - ஓர்முனிவர்,
ததும்பல் - நிறைதல், தளம்புதல்,
ததைதல் - சிதறல், சிதைதல், நெருங்குதல், வெளிப்படாதிருத்தல்.
தத்தபுத்திரன் - பிதாமாதாக்களால் வேறொருவனுக்குப் புத்திரனாகக் கொடுக்கப்பட்டவன்.
[தத்தளித்தல் - முட்டுப்படுதல், தடுமாறுதல்]-
தத்தாத்திரேயன் - ஓரிருடி.

தத்திதம் - பெயரடியாகப் பிறந்த வேறோர் பெயரின் விகுதி, (அவ்விகுதி பெற்ற பெயருமாம்).
தத்தியம் - உண்மை.
தத்து - காலசக்கர தசையில்வருங் கதிபேதம்.
தத்துதல் - தாவுதல், வீசுதல். (சிந் நாமக சகரு)
தத்துவபோதினி - சித்தாந்த கௌமுதியென்னும் வடமொழி வியாகரணத்தின் வியாக்கியானங்களுளொன்று.
தத்துவமசி - வேதாந்த மகாவாக்கியம் (அது நீயாகிறாய் என்பதுபொருள். தத்-அது, பிரமம்; துவம்-நீ, சீவான்மா; அசி-ஆகிறாய்.
தத்துவம் - உண்மை, சுபாவம், சீவான்மாவினுளமைந்த கூறுபாடுகள் சொரூபம், கடவுள், அறிவு, உரு கசு என்னுமெண்களுளொன்றுக்குரிய குழூஉக்குறி.
தத்துவம் உரு - புருஷன் பிரகிருதி புத்தி அகங்காரம் பூதம் ரு தன்மாத்திரை ரு ஞானேந்திரியம் ரு கன்மேந்திரியம் ரு மனம் என்டன.
தத்துவம் கசு - ஆன்மதத்துவம் உச வித்தியாதத்துவம் எ சிவதத்துவம் ரு ஆக கசு இவை சைவசித்தாந்தங்களிற் கூறப்பட்டன.

ஆன்மதத்துவம் உச: பூதம் ரு தன்மாத்திரை ரு ஞானேந்திரியம் ரு கன்மேந்திரியம் ரு மனம் புத்தி அகங்காரம் என்பன. வித்தியாதத்துவம் எ: காலம் நியதி வித்தை கலை ராகம் புருடன் மாயை என்பன. சிவதத்துவம் ரு: சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்தி சிவம் என்பன, குணத்தையும் பிரகிருதியையும் வேறாகக்கூறுவோர் சிவத்தை முப்பத்தாறுக்கும் அதீதமென்பர்.

தத்துவம் கூசு - பூதம் ரு, ஞானேந்திரியம் ரு, கன்மேந்திரியம் ரு, புலன் ரு வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம் என்னும் கன்மவிஷயம் ரு, கரணம் ச, அறிவு க, ஆக முதற்றத்துவம் உO; நாடி கO, வாயு கO, அமர்வாசயம் பகிர்வாசயம் சலாசயம் மலாசயம் சுக்கிலாசயம் என்னும் ஆசயம் ரு, கோசம் ரு, ஆக இரண்டாந்தத்துவம் உO; ஆதாரம் சு, சூரியமண்டலம் சந்திரமண்டலம் அக்

னிமண்டலமெனன மண்டலம் ௩, ஆ
ணவம் கன்மம் மாயை என மலம் ௩,
வாதம் பித்தம் சேடம் எனத் தோ
ஷம் ௩. ஏடணை ௩, குணம் ௩, காமம்
குரோதம் லோபம் மோகம் மதம் மாற்
சரியம் இடும்பை அகங்காரம் எனவி
காரம் அ, நல்வினை தீவினை என வி
னை உ, அவத்தை ரு, ஆக மூன்றூற்
தத்துவம் ௬௯; ஆகக்கூடியவிரி ௯௬.
(சிலநூல்களிற்சிறிது பேதமாகவும்).
தத்துவாதீதன் - கடவுள்.
தத்தை- கிளி, தத்தஞ்செய்யப்பட்டவள்,
முன்பிறந்தாள்.
தந்தசூகம்- பாம்பு.
தந்தப்பூண்- கிம்புரி.
தந்தம்- பல், யானைக்கொம்பு.
தந்தாவளம்-யானை.
தந்தி- யானை, பாம்பு, யாழ், யாழ்நரம்பு,
சமாசாரங்களைப் பிறதேசங்களுக்கறி
விக்கும்படிசெய்து வைக்கப்பட்டிருக்
குங்கருவி. (பிந்திய மூன்று பொருள்
களிலும் தந்திரி என்பதன்றிரிபு.
தந்திமுகன்- விநாயகக்கடவுள்.
தந்தியுரியோன்- சிவன்.
தந்திரம்- ஆகமம், மிருதி முதலிய நூல்
கள், உபாயம், படை, காலாள்.
தந்திரம் ரு- மித்திரபேசம் மித்திரலா
பம் சந்திவிக்கிரகம் லப்தகானி அசம்
பிரேக்ஷ்யகாரித்துவம் என்பன.
தந்திரி- யாழ், யாழ்நரம்பு.
தந்திரை-சோம்பல்.
தந்து- பஞ்சிநூல், சாத்திரம்.
தந்துரை- பாயிரம்.
தந்துவாயன் - சிலம்பி, ஆடைநெய்வோ
தந்தை- பிதா. [ன்
தந்தையர் ஐவர்-அரசன் தலைவன், பெற்
றபிதா தமையன் குரு என்பவர்கள்;
பெற்றபிதாவும் உபநயனஞ்செய்தோ
னும் கல்விகற்பித்தோனும் அன்னங்
கொடுத்தோனும் பயத்தைநீக்கிக்காத்
தோனுமாமெனவுஞ் சிலர் கூறுவர்.
தபசியம்- பங்குனிமாதம்.
தபசு- தவம்.
தபசுவி- (தபஸ்வி, தபசி)-முனிவன்.
தபதி- தச்சன், கம்மாளன்.
தபலை- ஓர்வாத்தியம். (திருப்).
தபனம்-எண்வகைநரகங்களுளொன்று
சூரியகாந்தக்கல்.
தபனன்- சூரியன் நெருப்பு.
தபனியம்- (தமனியம்)- பொன்.
தபித்தல்- சுடுதல், வருத்துதல்.
தபுதல் - கெடுதல், சாதல்.
தபுதி - அழிவு.
தபோலோகம் (தவலோகம்) - மேலே
ழுலகங்களுளொன்று.
தபோவனம் - முனிவர்கள் தவஞ்செய்
துகொண்டிருக்கும் வனம்.
தப்பு - குற்றம், தவறு.
தப்புதல் - தவறுதல், பிழைபடுதல், வஸ்
திரந்தப்புதல், தலையில் எண்ணெமுத
லியவற்றைத் தப்புதல், வெட்டுதல்.
தமப்பிரமை - இருள்வட்டம். (ஏழு நர
கங்களுளொன்று).
தமம் - இராகு, இருள், அஞ்ஞானம்,
பொருள்களின்வழியே செல்லாவண்
ணம் மனத்தைத் தடுத்தல், (தமை எ
னவும்வழங்கும்), தாமதகுணம், வட
சொற்களின்பின்வரும் ஓர் விகுதி.
உ-ம் (தூலதமம், சூக்குமதமம்).
தமயந்தி-நளராசனுடையமனைவி.
தமரம் - ஒலி, ஒன்றல்லாப்பேரொலி.
தமருகம்-(டமருகம்)-உடுக்கு.
தமரூசி-பனையிதழ்களுக்குத் துளையிடும்
தமர்-உறவினர், துவாரம். [ஆயுதம்.
தமனகம்-மருக்கொழுந்து.
தமாலம்- பச்சிலை, பச்சிலைமரம்.
தமி - தனிமை, ஒப்பின்மை.
தமித்தல் - தனித்தல்.
தமிழ்-குணம், இனிமை, தமிழ்ப்பாஷை.
தமிழ்மலை- பொதியமலை.
தமிழ்முனி- அகத்தியமுனிவர்.
தமிழ்விரகன் - திருஞானசம்பந்தர்.
தமிழ்வேதம் - தேவாரம் முதலிய சில
தோத்திரங்கள்.
தமுக்கு - ஓர் பறை.
தமையன் - முன்பிறந்தோன்,
தமோகுணம்- தாமதகுணம்.
தம்பட்டம்- ஓர் பறை. (திருப்).
தம்பதி- கணவனும் மனைவியும்.
தம்பம்- தூண், விளக்குத்தண்டு, *நிலம்,
பற்றுக்கோடு, கவசம்.
தம்பலம்- இந்திரகோபம், வெற்றிலைத்
துப்பல்.
[தம்பல்-சேறு.].

தம்பனம்- தடுத்தல்,எண்வகைக்கருமங்களுளொன்று.
தம்பாக்கு - செம்பும் தங்கமுங்கலந்த உலோகம். (சொகுசா) ].
தம்பி - பின்பிறந்தோன். [செய்தல்.
தம்பித்தல்- தடுத்தல், அசையாமனிற்கச்
தம்பிரான்- தலைவன், கடவுள்
தம்பிரான்றோழர்- நம்பியாரூரர்.
தம்மனை- தாய்.
தம்மில்லம்- மயிர்முடி.
தம்முன்- முன்பிறந்தோன்
தயங்குதல் - பிரகாசித்தல், அசைதல், நடுங்குதல்,. வாடுதல்.
தயவு (தயை,பிறருடையதுயரைப் பெருடுயற்சிசெய்தாயினும் நீக்கவேண்டுமென்னும்விருப்பம்.
தயாலு- தயையுடையோண்.
தயிர்- பாலின்பரிணமமாகிய தயிர்.
தாகன் - கொள்வனவு விற்பனவுகளைப் பொருத்துவோன்.
தரக்கு- புலி.
தரங்கம்- நீர்த்திரை.
தரங்கிணி- நதி.
தரங்கு- வழி.
தாணம் - பத்துப்பலங்கொண்டஅளவு
கடத்தல்- சுமத்தல்.
தரணி- பூமி, மலை, சூரியன்.
தரம்- அச்சம், உரிமை, கூட்டம், முறை அல்லது தடவை- மலை. (மருது), மேன்மை, வலி, பூமி.
தரவு- கொடுத்தல், உண்டாக்கல், கொண்டுவருதல். (தா பகுதி).
தரவு - கலிப்பாக்களுக்கு முதலுறுப்பாக த்தந்துரைக்கப்படுவது.
தரவை - கரம்பு. (புல்முடியஉவர்நிலம்).
தாளம் - உருட்சி, முத்து.
தரன் - வசுக்கள்எண்மரிலொருவன், தரித்தவன்.
தரா- எழுலோகங்களுளொன்று ,(செம்புங்காரீயமுங்கலந்தலோகம்),* சங்கு.
தராசம்- இரத்தினக்குற்றங்களுளொன்று. (ஒளிசலித்தல்; திருவி மாணிக்சச).
தராசு - துலாக்கோல், துலாராசி, பரணிநட்சத்திரம்.
தராதரம் - மலை.
தராதலம்- பூமி.

சராபதி - அரசன்.
தராய் - மேட்டுநிலம் - (பலேபடு)
தரிசபூரணமாசம்- உக யாகங்களுள்ஒன் [று
தரிசம் - அமாவாசை.
தரிசனம் - காட்சி, கனவு, கண்ணுடி,அத்தியான்மநிலையையுணர்த்தும் ஞானநூல் அல்லது நியாயநூல்.
தரிசனவேதி - காட்சியினுலிரும்பைப் பொன்னுக்கும்வித்தை.
தரிசி - தரிசிப்பவன்.
தரிசித்தல் - காணுதல்.
தரிசு - பயிரிடப்படாதநிலம்.
தரித்தல்- அணிதல், சுமத்தல், மனத்திலமைத்தல் - தாமதித்தல்
தரித்திரம்- வறுமை.
தரித்திரி - பூமி.
தரிப்பு- நிச்சயம், மனஞ்சகித்திருத்தல்
தரியலர் - பகைவர்.
தரியாமை- தமக்குவந்த துக்கமுதலியவற்றைச் சகிக்கமாட்டாமை, ஆபரணமுதலியவற்றையணியாமை,
தரு- மரம், கற்பகதரு, [ஓர்சந்தம்],உவமவிடைச்சொல்.
தருக்கம்- தருக்கநூல், வாது.
தருக்கு - அகங்காரம், உள்ளக்களிப்பு.
தருக்குதல்- அகங்கரித்தல், களிப்புறல்.
தருணம் - இளமை.
தருணி- இளம்பெண் - (கசு ன் மேல் கூ0 க்குட்பட்ட வயதுடையவள்).
தருப்பகன்- மன்மதன்.
தருப்பசயனம் - சேதுவின்மூலமாகிய ஓர்தலம். (தருப்பைப்புல்லாலான சயனத்தில் இராமசுவாமி சயனித்தலால் இப்பெயர்த்தாயிற்று).
தருப்பணம் (தர்ப்பணம்)-கண்ணுடி, மந்திரத்துடன் தேவாதியோர்க்கு நீரையிறைத்தல், திருப்திசெய்தல்.
தருப்பம் (தர்ப்பம்)- அகங்காரம்.
தருப்பித்தல் (தர்ப்பித்தல்)- தர்ப்பணஞ்செய்தல், திருப்திசெய்தல்.
தருப்பை - தர்ப்பை. இது குசம் காசம் இலாமிச்சைஅறுகு விரீகி விசுவாமித்திரப்புல் முஞ்சிப்புல் என எழுவகைப்படும். (அறுவகையாகச்சிலர்கூறுவர்).
தருமசக்கரம் - அருகனுடைய தருமசாதன சக்கிரம். (அறவாழி).

தருமச்செல்வி - தருமதேவதை.
தருமதேவதை - தருமத்தெய்வம், யமன்.
தருமநூல் - தருமங்களைவிதிக்கும் மிருதிகள்.
தருமநூல் கஅ - மனுஸ்மிருதி பிரகஸ்பதிஸ்மிருதி தக்ஷஸ்மிருதி யமஸ்மிருதி கௌதமஸ்மிருதி அங்கிரஸ்மிருதி யாஞ்ஞவல்க்கியஸ்மிருதி பிரசேதஸ்மிருதி சாதாதபஸ்மிருதி பராசரஸ்மிருதி வசிட்டஸ்மிருதி ஸம்வர்த்தஸ்மிருதி உசனஸ்மிருதி சங்கலிகிதஸ்மிருதி அத்திரிஸ்மிருதி விஷ்ணுஸ்மிருதி ஆபஸ்தமபஸ்மிருதி ஹாரீதஸ்மிருதி என்பன. [ன்.
தருமபுத்திரன் - பாண்டவருள் மூத்தோ
தருமம் - சுருதி மிருதி முதலியநூல்களில் விதிக்கப்பட்டன, நீதி, குணம், வேதம், கொல்லாமை, தானாதிகள் செய்தல், ஒழுக்கம்.
தருமராசன் - அருகன், புத்தன், யமன், தருமபுத்திரர்.
தருமவித்து - தருமங்களையறிந்தவன்.
தருமனாள் - பரணிநட்சத்திரம்.
தருமன் - யமன், தருமபுத்திரர், தருமஞ் செய்பவன்.
தருமாங்கம் அ - அறமையப்படாமை விருப்பின்மை வெறுப்பின்மை மயக்கமின்மை பழியைநீக்கல் அழிந்தோரைநிலைநிறுத்துதல் அறுசமயத்தவர்க் கன்பு அறம்விளங்கல் என்பன.
தருமி - பாண்டியனிடத்துப் பொற்கிழி பெறும் பொருட்டுப் பரமசிவனைக் கொண்டுபாடுவித்த ஓர் அடியவர்.
தருவி (தவ்வி)-அகப்பை கரண்டிமுதலி [யன.
தரை - பூமி.
தரைமகன் - செவ்வாய்.
தர்க்கராகம்-பாலைப்பண்ணின்திறங்களுளொன்று. (சிலப் உரை).
தர்க்கேசி - ஓர்பண். (மருதயாழ்த்திறம்).
தர்ச்சனி - சுட்டுவிரல்.
தலசம் - நிலத்திற்றோன்றியமுத்து.
தலம்-இடம், புண்ணியக்ஷேத்திரம், பூமி, இலை, (இப்பொருளில் தளம் எனவும்) உள்ளிடம். (உ-ம்: கைத்தலம்).
தலாதலம் - கீழேழுலகங்களுளொன்று.
தலை - ஆதி, இடம், ஆகாயம், உச்சி, தலையென்னும் உறுப்பு, தலைமை, ஒப்பு, (புறப்), நுனி, பெருமை.
தலைக்கீடு - தலைச்சாத்து.
தலைக்குறை- கவந்தம், முதற்குறையான [சொல்.
தலைக்கூடுதல்-ஒன்றித்தல்.
தலைக்கொள்ளுதல் - மேலேறுதல், ஏற்றுக்கொள்ளல், தொடங்கல், பற்றுதல், (புறப்). [தலைமாலை.
தலைக்கோதை - நெற்றிக்கட்டு, (கலித்),
தலைக்கோலம் - தலையணி.
தலைசாய்த்தல்-காணுதல், ஏகாங்கவணக் [கம்.
தலைச்சாத்து - தலைப்பாகை.
தலைச்சிரா - தலைப்பாகை.
தலைச்சுருள்வள்ளி - சிலந்திக்கொடி.
தலைதல் - தலைப்படல், மழைபெய்து ஓய் [தல்.
தலைத்தாள் - தொடக்கம்.
தலைத்திராணம் - தலைச்சிரா.
தலைப்படுதல்-நேர்படுதல், தலைமையாதல் தொடங்கல், முயலுதல், வளர்தல்.
தலைப்பாளை-தலைப்பாவிஞேருறுப்பாகிய அணி.(நிகண்டார்தொய்யகமென்பர்).
தலைப்பிரிதல் - நீங்குதல். (பண்பிற்றலைப் பிரியாச்சொல்; திருக் இனியவை கூறல் எ).
தலைப்பெயல்- கார்காலத்தொடக்கத்திற் பெய்யுமழை.
தலைப்பெய்தல்-வெவ்வேறிடத்துள்ளவர் அல்லதுஉள்ளவை ஓரிடத்திற்சந்தித்திருத்தல்.
தலைப்போதல் - முடிவுபெறல்.
தலைமகன் - தலைவன், கணவன். (பெண்பாலில் தலைமகள்).
தலைமடை - நீர்பாயும் மதகுகளின் தலை.
தலைமயங்கல் - கைகலத்தல்.
தலைமை - அதிகாரம், முதன்மை, மேன்மை.
தலையணை - படுக்கையில் தலைக்குக்கீழ் வைத்தற்காகத்தைக்கப்பட்டிருக்கும் அணை.
தலையல் - தலைப்பெயல், மழைபெய்தல், சொரிதல், மழைபெய்து ஓய்தல்.
தலையாயார் - பெரியோர்.
தலையிடல் - கருமங்களில் முற்படுதல்.
தலையிலாக்குருவி - மழைக்குயில். (பிங்.)
தலையிழிபு - தாழ்வு.
தலையுவா - அமாவாசை.
தலையோடு - கபாலம்.
தலைவன்-அரசன், கணவன், பெருமையி

ற்சிறந்தோன். (பெண்பாலில் தலைவி)
தலைவிரிபறை - கத்திரிப்பறை. (பிங்
* தலை - புணர்ச்சி. [கடுஉஎ).
தவ (உரிச்சொல்) - மிக.
தவணை - கீந்துவோர்க்கிடும் மிதவை, கடன்கொடுத்தல் முதலிய வற்றிற்கு நியமிக்கும் எல்லை. (தகணை என்னுஞ் சொல்லை இவ்வாறுவழங்குகின்றனர் போலும்).
தவண் - விஷயத்தை மேலேறுமற்செய்யுந்தடை. (தகண் என்னுஞ்சொல்லை இவ்வாறுவழங்குகின்றனர் போலும்).
தவம் - காட்டக்கினி, தோத்திரம், நோன்பு.
தவர் - முனிவர், வில். [ன்பு.
தவல் - இறந்துபடுதல், குறைதல்.
தவழ்தல் - பரத்தல், நகருதல்.
தவளம் - வெண்மை.
தவளை - நீர்வாழ்செந்துக்களுளொன்று.
தவளைப்பாய்த்து - சூத்திரநிலை நான்குளொன்று.
தவறு - குற்றம்.
தவறுதல் - குற்றமுறுதல், இறத்தல், தாண்டுதல்.
தவனம் - ஆசை- தாகம், வெண்பா.
தவன் - நாயகன், முனிவன்.
தவிசு - ஆசனம், தடுக்கு, மெத்தை, யானைமேற்றவிசு.
தவிடு - அரிசியின்புறத்திலிருந்து நெற்குத்தும்போதுதிர்ந்த தூள்.
தவித்தல் - தாபமடைதல்.
தவிர்த்தல் - ஒழித்தல், பிரிதல்.
தவில் - தோற்கரு வியாகியவாத்தியங்களுளொன்று.
தவுதம் - வெண்மை, அழுக்கற்றது.
தவுதல் - கெடுதல், குறைதல்.
தவ்வல்- தன்னியல்பிழந்து சுருங்குதல், கெடுதல், இளமையாதல், தாவிநடத்தல்.
தவ்வு - துளை, சிதைவு.
தவ்வை (தௌவை) - அக்காள், தாய், செவிலித்தாய்க்கு மூத்தவள், (சிங்), மூதேவி.
தழங்கல் - ஒலித்தல், யாழ்நரம்போசை.
தழலல் - அழலுதல்.
தழல்- அக்கினி, கார்த்திகைநாள், கேட்டைநட்சத்திரம், கையாற்சுற்றியகாலத்துத் தன்னிடம் பிறக்குமோசையாற் கிளிமுதலியவற்றையோட்டுங்கருவி; கவணுமாம்.(குறிஞ்சிப் சரு).
தழிஞ்சி - தோற்றவர்மேல் ஆயுதஞ்செலுத்தாமை.
தழீமெனல் - பறைமுதலியவற்றிலடிக்கும்போதெழும் ஓசையின்குறிப்பு.
தழுதழுத்தல் - ஆனந்த முதலியவற்றாலுரைதடுமாறல்.
தழும்பு-கடினமானபொருள்கள் அண்டுதலாலுண்டான மறு.
தழுவுதல் - அன்பு ஆசை முதலியவற்றினால் ஒருவரையொருவர் ஆலிங்கனஞ்செய்தல், உள்ளடக்கல்.
தழூஉ - குரவைக்கூத்து. (கலித்).
தழை- மரங்களின் தழை, மயிற்றோகை, *பீலிக்குஞ்சக்குடை.
தழைத்தல்- தளித்தல், பூரித்தல், வளர்தல்.
தளதளத்தல்- இளகுதல், சோபித்தல்.
தளபாடம்- தொளில்களைச்செய்யும்போதுவேண்டப்படுகிற பலவகைக்கருவிகள்.
தளம் - அடித்தளம், சேனை, இலை, பூவிதள், உப்பரிகை, கூட்டம், தடிப்பு, வெளியிடம், சாடி, சாந்து. (செஞ்சாந்து வெண்சாந்துஎன்பன), பாதி.
தளம்பல் - அசைதல். ததும்பல்.
தளம்பு - சேறுகுத்தி. (புறநா கூக).
தளர்ச்சி - சோர்வு, நெகிழ்ச்சி, மனவருத்தம்.
தளர்தல் - நெகிழ்தல், சோர்தல்.
தளவம் (தளவு) - முல்லைக்கொடி.
தளி- குளிர், தேவர்கோயில், துளி, மேகம்.
தளிகை- உண்கலம், தவிசு. (திருவிளை திருமுகம் உச).
தளித்தல் - துளித்தல், பூசுதல்.
தளிமம் - அழகு, மெத்தை, படுக்கை.
தளிர் - மரங்களின்தழை. [ல்.
தளிர்த்தல்- மரங்கள்தழைத்தல், மகிழ்தல்.
தளுக்கு - மெருகு. (அழுத்தம்).
தளை - ஆண்மயிர், கட்டு, கயிறு, கால்விலங்கு, காற்சிலம்பு, செய்யுளுறுப்புக்களுளொன்று, தொடர்பு, முறுக்கு, (கலித்), வயல், (தணிகை நாட் அசு), வரம்பு.
தளைத்தல் - பிணித்தல்.

தளேயம் - விலங்கு.
தள்வல் - நீக்குதல், பொய்.
தள்ளாட்டம் - அசைவு.
தள்ளாமை - இயலாமை.
தள்ளுதல் - கை முதலியவற்றாற்றள்ளுதல், கழித்துவிடுதல், தள்ளாடுதல், பொய்.
தள்ளே - தாய். (குடநாட்டார்வழக்கு).
தறி- கட்டை, (கடைதறி கட்டுந்தறி முதலியன), தூண், செய்புந்தறி, பறையடிக்குங்குறுந்தடி. (சிவாக).
தறிகை - கணிச்சியென்னும் ஆயுதம்.
தறிக்கால் - கொடிக்காற்கால்வாய்.
தறித்தல் - கோடரி முதலியவற்றால் துண்டித்தல்.
தறியாணி - வெட்டிரும்பு.
தறிவலே- தறியைப்புகைத்து அதனோடு தொடுத்துநிலத்திலிட்டவலே.
தறுகண்- அஞ்சாமை,(கடுகக்கொல்லுத லெனச் சிறபா), குரூரம்.
தறுக்கணித்தல் - கன்றுதல்.
தறை - தறையப்படும் ஆணி.
தறைதல் - ஆணி முதலியவற்றையடித்துத்தட்டையாக்கல்.
தர்கரன் (தஸ்கரன்) - கள்வன்.
தற்காலம் - நிகழ்காலம். [தம்.
தற்கிழமை- தன்னோடேபேதமான சம்பந்தம்.
தற்குறிப்பேற்றம் - ஒரு அலங்காரம். (இயல்பாக நிகழுந்தன்மையொழியக் கவி கருதியவே றொன்றை ஏற்றிச் சொல்வது).
தற்சமம் - ஆரியம் தமிழ் என்னும் இரு பாஷைகளுக்குமுரிய பொதுவெழுத்தால் ஆன வடமொழி.
தற்பம் (தல்ப்பம்) - சயனம்.
தற்பரம் - ஆன்மாவுக்குமேலாகிய பொருள், (கடவுள்), உண்மை, மனம் யாதேனுமொன்றில் இடைவிடாது பற்றுதல்.
தற்பரன் - சிவன்.
தற்பரை- கண்ணிமைப்பொழுதின் முப்பதிலொருபங்காகியகாலநுட்பம். (விநாடியின் அறுபதிலொன்று).
தற்பவம் - ஆசிரியத்திற்கேயுரிய சிறப்பெழுத்துக்கள் தமிழில் ஏற்றவாறு திரிந்துவரும் வடமொழி.
தற்பாடி - வானம்பாடியென்னும்பறவை. (நிக ஊகாரவெதுகை கஉ).
தற்புருடம் - சிவனுடைய ஐந்துமுகங்களுளொன்று, இலக்கணத்தில் வேற்றுமைத்தொகை. (வடநூல்வழக்கு).
தற்போதம் - ஆன்மஞானம். (சைவசித்தாந்தவழக்கு).
தற்றுதல் - இறுகுதல், தடக்குதல்.
தனஞ்சயன் - தசவாயுக்களுளொன்று. (உயிர்போனபின்பும் போகாதுநின்று தலேயோடுவெடித்தபின் போகும் வாயு). அக்கினி, அருச்சுனன்.
தனதன் - குபேரன், பொருளேக்கொடுப்பவன்.
தனம்- சம்பத்து, இலக்கணத்துக்கிரண்டாமிடம், பொன், முலே, அடையாளம், சாந்து, பசுக்கன்று.
தனயன்- புத்திரன். (பெண்பாலில் தனையை).
தனுட்டியன் - செல்வன்.
தனி - தனிமை, ஒப்பின்மை.
தனிகன் - செல்வன்.
தனிசு - கடன், (சிங் உரை).
தனிட்டை - அவிட்டநாள்.
தனிதம் - முழக்கம்.
தனு - உடம்பு, தனுராசி, அற்பம், வில், நான்கு முழமடங்கிய நீட்டலளவை, காசிபரின்மனேவியருளொருத்தி. (அசுரர்களின் தாய்).
தனுக்கோடி - இராமேசுரத்திலுள்ள ஓர் தீர்த்தம், வில்நுனி.
தனுசர் - அசுரர்.
தனுருகம் - உரோமம்.
தனுர்வேதம் - வில்வித்தை. (உபசாரத்தால் வில்விற்றொடுத்தேவும் அம்புமுதலியவற்றையும் அவற்றிற்குரிய மந்திரப்பயிற்சிகளேயும் உணர்த்தும்; இது யசுர்வேதத்தின்உபவேதமாம்).
தனே- அளவு. (சுட்டுவினுக்களோடுகூடி வரும்;உ-ம்: அத்தனே -அவ்வளவு).
தன் - கொடுப்பவன். (தனதன் என்பதிற்போல).
தன்கு - உள்ளக்களிப்பு.
தன்மாத்திரை- ஐம்பூதங்களிலிருக்குமமாயமைந்திருக்குங்குணங்கள். (சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்பன; இவை முறையே ஆகாயம் காற்று அக்கினி நீர் நிலம் என்னும் ஐந்தையுந்தோற்றுவிப்பனவுமாம்).

தன்மை - அழகு, குணம், பெருமை, நன்மை, தன்மையிடம், செய்யுளுக்குரிய பொருளணிகளுளொன்று.

தன்வந்தரி - தேவவைத்தியருளொருவர், விக்கிரமாதித்தராசனது சபையிலிருந்த நவரத்தினப்புலவருளொருவர்.

தன்வினை - எழுவாய்க்கருத்தாவின்புடைபெயர்ச்சியால் நிகழுந்தொழில், அத்தொழிலையுணர்த்தும் வினைச்சொல்.

தன்னம் - சிறுமை, பசுமுதலியவற்றின்

தன்னியன் - செல்வன். [கன்று.

தன்னியாசி - ஓரிராகம்.

தன்னை - தாய்.

## தா

தா - கேடு, குற்றம், பகை, துன்பம், வலி,

தாகம் - நீர்த்தாகம், எரிவு. [பரப்பு.

தாக்கணங்கு - இலக்குமி.

தாக்குதல் - அடித்தல், பெருக்கல், முட்டுதல், பொருதல், எதிர்த்தல்.

தாங்கல் - நீர்நிலை, சுமத்தல், தரித்தல், சகித்தல்.

தாங்கி - தன்மேல் வைக்கப்பட்டவைகளைச் சுமந்துநிற்பது. [மசுவாமி).

தாசரதி - தசரதனுடையபுத்திரர். (இரா

தாசன் - அடிமைவேலைக்காரன், பரதவன், சூத்திரருடைய பெயரின்பின் சேர்த்துவழங்கும் சாதிப்பெயர்.

தாசி - அடியவள், கணிகை, பரணிநட்ச

தாசேரம் - ஒட்டகம். [த்திரம்.

தாடகை - ஓரரக்கி. (மாரீசனுடையதாய்; இராமராற்கொல்லப்பட்டவள்).

தாடங்கம் - பெண்களுடையகாதணிகளுளொன்று.

தாடனம் - அடித்தல், தட்டுதல்.

தாடி - மோவாய், மோவாய்மயிர்.

தாடிமஞ்சம் - சத்திக்கொடி.

தாடிமம் - தாதுமாதுளை.

தாட்சணியம் - கண்ணோட்டம், பிறருடைய எண்ணத்திற்கியையநடத்தல்).

தாட்சாயணி - உமாதேவி. (தக்கனுடையமகள்).

தாட்படை - கோழி. [சிவன்.

தாணு - மலை, குற்றி, தூண், நிலைபேறு,

தாண்டகம் - ஓர்வகைப்பா. இது அளவியற்றாண்டகமெனவும் அளவழிதாண்டகமெனவும்இருவகைப்படும். (இருபத்தாறின்மிக்க எழுத்துக்களை ஒவ்வோரடியினும் உடையதாய்க்குருவுமிலகுவும்ஒத்தது அளவியற்றாண்டகமெனவும் இம்முறை பிறழ்ந்துவருவது அளவழிதாண்டகமெனவும்படும்).

தாண்டவம் - கூத்து.

தாண்டவராயர் - நகலல்லியநவநீதமென்னும் வேதாந்தநூலையியற்றிய ஒருஅந்தணர். [த்தாடல்

தாண்டுதல் - கடத்தல், வெல்லுதல், *கூ

தாதகி - ஆத்திமரம்.

தாதன் - பிதா, அடியவன். (இப்பொருளில் தாசன் என்பதன்விகாரம்).

தாதா - கொடையாளி, பிரமா, விஷ்ணு, காப்பவன், தரிப்பவன்.

தாதான்மியம் - அபேதமாயிருத்தல்.

தாதி - அடியவள், (தாசியென்பதன் விகாரம்), செவிலித்தாய், பரணிநட்சத்திரம்.

தாது - பொன் வெள்ளிமுதலிய உலோகங்கள், தேன், கள், சரீரத்திலுள்ள எழுவகைத்தாதுக்கள், சுக்கிலம், ஐவகைப்பூதம், காவிக்கல், அரிதாரம் மனோசிலை அப்பிரகம் கந்தகம் முதலியதாதுக்கள், பூந்தாது, துகள்.

தாது உ - சுக்கிலசுரோணிதங்கள்.

தாது ங - பித்தம் வாதம் சேடம்என்பன.

தாது எ - ரசம் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை சுக்கிலம் என்பன. (ரசம் - உண்டஅன்னமுதலியற்றின்சாரம்; சிலர் ரசத்தைநீக்கித்தோலை ஒன்றாகக் கூறினர்).

தாதுமாதுளை - பூமாதுளை.

தாதை - பிதா, பிரமா.

தாத்திரி - பூமி, நெல்லிமரம்.

தாந்திரிகம் - தந்திரசம்பந்தமானது.

தாபகன் - நிலைநாட்டுவோன்.

தாபதநிலை - துறவறம், கைம்மைவிரதம்.

தாபதம் - துறவறம், முனிவர்வாசம்.

தாபதர் - முனிவர்.

தாபம் - கடுந்துன்பம், சூடு.

தாபம் ங - ஆதிதைவிகம் ஆதிபௌதிகம் ஆத்தியான்மிகம்என்பன. (இவற்றைத்தைவிகம் பௌதிகம் தைகிகம் எனவுங் கூறலாம்.

*தாபரம் - இடம், உடல்,

தாபனம் - தாபித்தல்.

தாபித்தல் - நிலைப்படஇருத்துதல்.
தாப்பிசை - நடுவிலுள்ளமொழியை முன்னும் பின்னுங் கூட்டிப்பொருளுரைப்பது.
தாமதம் (தாமசம்) - காலநீடிப்பு, தாமதகுணம், (பேருண்டி ஒடுங்கல் சோம்பல் மூரி காமம் நீதிகேடு நித்திரை மறதி தணியாக்கோபம் வஞ்சகம் என்பன), தினந்தோறும்வரும் குணகாலங்களுள் தாமதகுணகாலம்.
தாமதித்தல் (தாமசித்தல்)- கருமங்களைச் செய்தலிற் காலநீடித்தல்.
தாமசிதி - சூரியன்.
தாமம் - வீடு, நகரம், மாலை, கொன்றைமரம், சாந்து, ஒளி, கயிறு, பூ, போர்க்களம், முடியுறுப்புக்களுளொன்று, யானை, கழுத்தணிவடம்.
தாமரை - நீர்ப்பூக்கொடிகளுளொன்று.
தாமரைக்கண்ணன் - திருமால்.
தாமரைநாயகன் - சூரியன்.
தாமரையாசனன் - பிரமா.
தாமரையாசனி - இலக்குமி, சரசுவதி.
தாமனி - பசுக்கட்டுங்கயிறு, பசுக்களைப் பிணைக்குங்கயிறு. (கறக்குங்காலங்களிற்கால்களைப்பிணைக்குங்கயிறுமாம்).
தாமிரகர்ணி - மேற்றிசையானையின் பெண்யானை.
தாமிரபர்ணி - ஒருநதி.
தாமிரம் - செம்பு, சிவப்புநிறம்.
தாமோதரன் - விட்டுணு.
தாம் - தான்என்பதன்பன்மை, அசைநிலை
தாம்பு - கயிறு, பசுக்கட்டுங்கயிறு.
தாம்பூலவல்லி (தாம்பூலி) - வெற்றிலைக்கொடி.
தாயகன் - கொடுப்பவன்.
தாயத்தார் - ஞாதிகள்.
தாயபாகம்-பிதாமுதலியவர்களிறந்தபின் அவர்களுடையஉரிமையினுற்கிடைக்கவேண்டிய சொத்துக்களின் பங்கு.
தாயம்-சூதுவிளையாட்டுக்களுளொன்று, சூதுவிளையாட்டிலுருட்டிக் காணப்படுங்குறிகளுளொன்று, தாயபாகம்.
தாயர் ஐவர் - ஆட்டுவாள் ஊட்டுவாள் ஓலுறுத்துவாள் நொடிபயிற்றுவாள் கைத்தாய் என்பவர்கள். (சிந் நாகம ௬௬௪).
தாயாதன் - ஞாதி.
தாயுமானவர் - ஒருஞானி. (தாயுமானவர் பாடல் இவராற் செய்யப்பட்டது).
தாய் - மாதா.

தாரகம் - பிரணவம்.
தாரகற்செற்றாள் - காளி.
தாரகற்செற்றோன் - முருகவேள்.
தாரகன் - சூரபன்மனதுதம்பியாகிய ஒரு அசுரன். (வேறும் இப்பெயருள்ளாருளர்).
தாரகை - விண்மீன்.
தாரகைமாலை - கற்புடைமகளிர்க்குள்ள இலக்கணங்களை வகுப்பாற்கூறுவது. (தூசிப்படையைப்புகழ்ந்தவகுப்பென்பாருமுளர்).
தாரண - அறுபதுவருடங்களுளொன்று.
தாரணம்-தரித்தல், சுமத்தல், பிளத்தல்.
தாரணி - பூமி.
தாரணை - யோகாங்கம்எட்டனுள்ஒன்று. (மனத்தைப் பிரமத்தில்நிறுத்துதல்).
தாரணைகூ-நாமதாரணை மாயாதாரணை வச்சிரதாரணை சித்திரதாரணை சுத்ததாரணை வத்துதாரணை சதுரங்கதாரணை செய்யுட்டாரணை நிறைவுங்குறைவுமாகிய வெண்பொருட்டாரணை என்பன.
தாரதம்மியம் - இரண்டுமுதலியபலபொருள்களுள் ஒன்றுக்கொன்றுள்ள பெருமை சிறுமைமுதலிய வேற்றுமை.
தாரம் - மனைவி, உச்சத்தொனி, அரும்பண்டம், பலபண்டம்,பிரணவம், வெள்ளி, முத்து, அரிதாரம், நா, கண், தரா, ஏழிசைகளுளொன்று. (தலையிற்பிறப்பது).
தாரா - ஓர்பறவை.
தாராதாரம் - மேகம்.
தாராபதம் - ஆகாயம்.
தாராபதி - சந்திரன்.
தாரி - வழி, தரிப்பவன்.
தாரு - மரம், விறகு, மரக்கொப்பு.
தாருகவனம்-தபோவனங்களுளொன்று.
தாருணம் - அச்சம், பயங்கரம்.
தாருண்ணியம் - இளமை.
தாரை - வியாழன்மனைவி, வாலியின்மனைவி, நட்சத்திரம், நேரோடல், (இது குதிரையின் கதிகளுளொன்று), தொடர்பாகச்சிந்தும்நீர்த்தாரை, பெருமழை, வழி, ஆயுதங்களின்கூர்மை, (தோயல்நலம்), நாக்கு, கண், கண்மணி, விரைவு, சிறுசின்னம், சுவடு போசராசனுடைய ராசதானி.
தார் - மலர், மலர்மாலை, கிங்கிணிமாலை, கொடிப்படை, சேனை.
தார்க்கிகன் - தருக்கநூலில் வல்லவன்.

தார்க்கியன் - கருடன்.
தார்ட்டியம் - மனத்திடம், பலம்.
தார்த்தராட்டிரன் - துரியோதனன்.
தார்மிகன் - தருமஞ்செய்பவன்.
தாலத்துவசன் - பலதேவன்.
தாலம் - உண்கலம், பூமி, நாக்கு, கூந்தற்கமுகு, பனை, யானைச்செவி, அகங்கை, விரித்துநீட்டிய பெருவிரல் நடுவிரல் என்னுமிவைகளால் அளக்கும் [அளவு.
தாலவிருந்தம் - ஆலவட்டம்.
தாலாட்டு- குழந்தைகள் அழாவண்ணம் பாடும்பாட்டு.
தாலி - மங்கலியம், (கங் அசு திருக்குற்றால க), பாத்திரம்.
தாலீபாகம் - ஓமாக்கினியால் அன்னத்தைப்பாகஞ்செய்து ஓமஞ்செய்தலாகிய ஒருகிரியை.
தாலீபுலாகம் - ஒரேபாத்திரத்தில் அக்கினியிற்சமைக்கப்பட்ட அன்னத்தில் ஒரு சிறுபாகம் வெந்திருப்பின் முழுவதும் வெந்ததாமெனக் கொள்ளுதல் போன்றநியாயம்.
தாலு - நாக்கு.
தாவடம் - கழுத்தணிமாலை, உருத்திராக்கமாலை.
தாவடி - போர்.
தாவணி- பசுக்களைப் பிணைக்குங்கயிறு. சிறுமிகள் அரையிற்பாவாடையுடுத்தியகாலங்களில் தோளில்அணியும்வஸ்திரம்.
தாவம் - காட்டுத்தீ, காடு.
தாவரம் - மரமுதலிய நிலையியற்பொருள்கள், உடல், அசைவின்றிநிற்றல்.
தாவளம் - நகரம், இருப்பிடம், மருதநிலத்தூர், பொதி.
தாவனம்- ஓடுதல், சுத்திசெய்தல். (உ-ம்: தந்ததாவனம்).
தாவு - கதி.
தாவுதல்- தாண்டுதல், பாய்தல், பரத்தல்.
தாழக்கோல் - கதவடைக்குந்தாழ்.
தாழல் - ஆழ்தல், கீழ்மைப்படுதல், சாய்தல், தாமதித்தல், நீளுதல், தங்குதல், வணங்குதல்.
தாழி- குடம், சாடி, பரணிநட்சத்திரம்.
தாழிசை- பாவினங்களுளொன்று, கலிப்பாவுறுப்புக்களுளொன்று.
தாழை - தென்னைமரம், தாழைமரம்.
தாழ் - கதவுத்தாழ்.
தாழ்தல் - விரும்புதல், தாழுதல், தங்குதல்.
தாழ்வடம் - கழுத்தில் தூங்கும்படியணியும் (முத்துமுதலியவற்றாலான) மாலை.
தாழ்வாய் - மோவாய்.
தாழ்வாரம் - வீட்டின் புறத்தேநீண்டிருப்பதாகியபொறிவு.
தாழ்வு - பள்ளம், கீழ்மை, இகழ்ச்சி.
தாளகம் - அரிதாரம்.
தாளப்பகுதி ச- கொட்டு அசை தூக்கு அளவு என்பன. (சிலப்).
தாளம்- கீதமுதலியவற்றிற்கேற்ப இடுந்தாளம், தாளமென்னும் வாத்தியம்.
தாளம் ரு - சச்சபுடம் சாசபுடம் சட்பிதாபுத்திரிகம் சம்வேட்டிதம் உற்கட்டிதம் என்பன.
தாளம் எ - துருவம் மட்டியம் ரூபகம் சம்பை திரிபுடை அடதாளம் ஏகதாளம் என்பன.
தாளம் கூ- அரிதாளம் அருமதாளம் சமதாளம் சயதாளம் சித்திரதாளம் துருவதாளம் நிவிர்த்ததாளம் படிமதாளம் விடதாளம் என்பன.
தாளாண்மை - ஊக்கம், முயற்சி.
தாளி - பனை, கூந்தற்பனை, அனுடநட்சத்திரம், கொடிவகைகளுளொன்று.
தாளியபத்திரி (தாளீசபத்திரி) - மருந்துச்சரக்குகளுளொன்று.
தாளித்தல்- கறி முதலியவற்றை மசித்தல்.
தாள் - கால், முதல், கதவுத்தாள், (சிங்விசேடக்குறிப்பு), அரிதாள், காகிதம், விளக்குத்தண்டு, விற்குதை, உற்சாகம், முயற்சி.
தாறு - விற்குதை, அளவு, இருப்புமுள், (முட்கோல்), அங்குசம், (கங் அசுவரம்பெறு உச), வாழைமுதலியவற்றின்குலை.
தாற்பரியம் - செய்யுள்முதலியவற்றில் இன்னதற்காக இதுகூறப்பட்டதென ஆக்கியோனது உட்கிடையைவெளிப்படுத்திக்கூறுதல்.
தாற்றுதல் - சுளகுமுதலியவற்றாற் கொழித்தல்.
தானம்- இடம், வலி, மகரவாழை, கொடை, நீராடல், நால்வகையுபாயங்களுளொன்று, சுவர்க்கலோகம், யானையின்மதம், வேள்வி.
தானம் ௩ - உத்தமதானம் மத்திமதானம் அதமதானம்என்பன.
உத்தமதானமாவது: தருமவழியாற் சம்பாதித்தபொருளைச்சற்பாத்திரர்க்

குக் கொடுத்தல். மத்திமதானமாவது: அங்கக்குறைந்தார்க்கும் பெண்களுக்கும் செவிடர்க்கும் வறிஞர்க்குங் கொடுத்தல். அதமதானமாவது: அன்பு, புகழ், கண்ணோட்டம் அச்சம் கைமாறு முதலியகாரணங்களாற் கொடுத்தல்.
தானவர் - அசுரர்.
தானவன் - சந்திரன்.
தானி - தானத்திலுள்ளது, ஆதாரமாயிருப்பது (இராசதானிஎன்பதிற்போல).
தானியம் - நெல்முதலியதானியங்கள்.
தானியம் கூ - நெல்லு பயறு உழுந்து எள்ளு கொள்ளு கடலை சாமை தினை துவரை என்பன. [று
தானை - வஸ்திரம், சேனை, ஆயுதப்பொ
தானைமாலை - அகவலோசையிற் பிழழாது ஆசிரியப்பாவாற் சேனையை வருணிக்கும்பாடல்.
தான் - முன் சுட்டப்பட்ட பொருளைக் குறிக்கும்பெயர்ச்சொல், அசைநிலை.
தான்றி - தான்றிமரம்.
தான்றோன்றி - சுயம்புலிங்கம்.

## தி

திகம்பரர் - சமணமுனிவர், நிர்வாணிகள். [ணி.
திகம்பரன் - அருகன், சிவன், நிர்வா
திகழ்தல் - பிரகாசித்தல், உள்ளடக்கிக் கொண்டிருத்தல்.
திகிரி - சக்கரப்படை, தேர், தேருருள், மலை, மூங்கில், வட்டவடிவு, அரசருடைய ஆஞ்ஞாசக்கரம்.
திகிரிமன்னர் - சக்கரவர்த்திகள்.
திகில் - திடுக்காட்டம்.
திகை - திக்கு, தேமல்.
திகைத்தல் - விடைசொல்லஇயலாதுநி
திக்காரம் - நிந்தை, [ற்றல், மயங்கல்.
திக்கு - திசை.
திக்கு அ - கிழக்கு தென்கிழக்கு தெற்கு தென்மேற்கு மேற்கு வடமேற்கு வடக்கு வடகிழக்கு என்பன. (மேலுங் கீழுமாகிய இரண்டையுங் கூட்டிப் பத்தென்பர் சிலர்).
திக்குதல் - பேச்சுத்தடைப்படுதல்.
திக்குப்பாலகர் எண்மர் - இந்திரன் அக்கினி யமன் நிருதி வருணன் வாயு குபேரன் ஈசானன் என்பவர்கள், (இவர்கள் கிழக்குமுதலிய எண்டிசைகளையும் முறையே காவல்செய்வர். மேலுங்கீழுமாகிய இரண்டுக்கும் முறையே பிரமா விட்டுணு என்னுமிவரைச்சேர்த்துப் பதின்மரென்பர் சிலர்).
திக்குயானை அ - ஐராவதம் புண்டரீகம் வாமனம் குமுதம் அஞ்சனம் புஷ்பதந்தம் சார்வபௌமம் சுப்பிரதீகம் என்பன.
திக்குயானைகளின் பெண்யானை அ - அப்பிரமு கபிலை பிங்கலை அனுபமை தாமிரகர்ணி சுப்பிரதந்தி அங்கனை அஞ்சனவதி என்பன.
திக்குயோனி அ - கொடி புகை சிங்கம் நாய் இடபம் கழுதை யானை காகம் என்பன.
திங்கட்குடையோன் - மன்மதன்.
திங்களாள் - மிருகசீரிடநட்சத்திரம்.
திங்கள் - சந்திரன், திங்கட்கிழமை, மாசம்.
திசை - திக்கு, ஏழாம்வேற்றுமைச்சொல்லுருபுகளுளொன்று.
திசைச்சொல் - பிறதேசங்களிலிருந்து வந்து வழங்குஞ்சொல்.
திசைமயக்கு - கிழக்குமுதலிய திக்குகள் மாறித்தோற்றுதல்.
திசைமுகன் - பிரமா. [உண்மை.
திடம் (திருடம்) - மனத்தைரியம், வலி,
திடர் (திடல், திடறு) - மேடு.
திடுக்கு - அச்சத்தால்வரும் நடுக்கம்.
திட்கல் - திடுக்குறுதல்.
திட்டத்துய்மன் - துருபதராசனுடைய புத்திரன்.
திட்டம் - உறுதி, தொகையின்மதிப்பு, நியதி.
திட்டி - கண் பார்வை, மேடு.
திட்டுதல் - சபித்தல்.
திட்டை - திண்ணை, மலையின்சிறுதிடர், நிலத்தின்மேடு, உரல்.
திட்பம் - திண்மை.
திணறுதல் - புகைதூளிமுதலியவற்றின் செறிவால் மூச்சுவிடுதற்கியலாமை.
திணிதல் - நெருங்குதல்.
திணித்தல் - செறித்தல். (திணிதலின் பிறவினை).
திணுங்கல் - நெருங்கல்.

திணை - சாதி, குடி, ஒழுக்கம், நிலங்களின் ஒருபகுதி.
திணை உ-உயர்திணை அஃறிணை என்பன.
திணை ரு - குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என்பன.
திண்டாடுதல்- அலைதல், கலக்கமுறல்.
திண்டி (திண்டிமம்) - படகம், வாத்தியப்பொது.
திண்ணகம் - தட்டாருடைய கருவிகளுளொன்று, செம்மறியாட்டாண்.
திண்ணம்- உறுதி, உண்மை. [ஞர்.
திண்ணன்- வலியவன், கண்ணப்பநாய
திண்ணியன்- வலியுடையோன்.
திண்ணை- வேதிகை.
திண்மை- உறுதிப்பாடு, வலிமை.
திதலை- தேமல்,
திதி- நிலைபேறு, இருப்பு, காத்தற்றொழில், பிரதமைமுதலிய திதிகள், பிதாமுதலாயினோரிறந்த திதி வருந்தினம், காசிபமுனிவருடைய மனைவியர்களுளொருத்தி. (அசுரரின்தாய்).
திதி கசு- பிரதமை துதியை திருதியை சதுர்த்தி பஞ்சமி சட்டி சத்தமி அட்டமி நவமி தசமி ஏகாதசி துவாதசி திரயோதசி சதுர்த்தசி பூரணை அல்லது அமாவாசை என்பன.
திதிட்சை- பொறுமை.
திதியின்மைந்தர்- அசுரர்.
தித்தம்- கசப்பு,
தித்தி- ஊதுகுழல்களுளொன்று.
தித்தித்தல்- நாவுக்கினிமையாயிருத்தல்.
தித்திரி - சிச்சிலிக்குருவி.
திந்திடீகம்- புளியமரம்.
திந்திருணி- புளியமரம், புளி.
திப்பலி - ஓர் சரக்கு.
திப்பியம்- திவ்வியம்.
திமி- (திமிவம்)-பெருமீன், யானைமீன்.
திமிங்கிலகிலம்- திமிங்கிலத்தைவிழுங்குமீன்.
திமிங்கிலம்- யானைமீனைவிழுங்குமீன்.
திமிசு- வேங்கைமரம்.
திமிதம்-பேரொலி, அசைவற்றிருத்தல்.
திமிரம்- இருள், நரகம், இரா.
திமிர்- விறைப்புமுதலியவற்றால் வரும் முறுக்கு, பேரொலி. [தல்.
திமிர்தல்-பேரொலியுண்டாதல், முறுகு
திமிலம்-பேரொலி, பெருமீன்.
திமிலர்- நெய்தநிலமாக்கள்.
திமிலை- சல்லரியென்னும் வாத்தியம், ஒலி.
திமில்- எருத்தின் ஏரி, தோணி, (மீன்படகு); வேங்கைமரம்.
திமிறல்- கைகால்முதலியவற்றைப் பிறர் இறுகப் பிடித்திருக்கும்போது மீறிப் பறித்தல்.
தியக்கம்- சோர்வு, மயக்கம்,
தியங்குதல் - சோர்தல், மயங்குதல்.
தியாகம்- கொடை.
தியாகி- கொடையாளன்.
தியாச்சியம்-விலக்கப்படுவது, நட்சத்திரங்களின் விஷநாடி.
தியானம்- யோகாங்கம் எட்டுளொன்று. (கடவுளில் மனத்தைச்செலுத்தியிரு
தியதி- சூரியகிரணம், ஒளி. [த்தல்)
திரங்கல்- மிளகு, உலர்தல், திரைதல்.
திரட்சி- உருண்டைவடிவு, கூட்டம்.
திரட்டு - பலவற்றிலிருந்து எடுத்துத் தொகுக்கப்பட்டது.
திரட்டுதல்-உருண்டைவடிவாக்கல்,பலவற்றிலிருந்து எடுத்துத்தொகுத்தல்.
திரணை- திரட்சி, கம்பி.
திரபு- ஈயம்.
திரம்- நிலை, திரராசி (இடபம் சிங்கம் விருச்சிகம் கும்பம் என்பன).
திரயம் - மூன்று.
திரயீதனு- சூரியன்.
திரயீதருமம்-வேதங்களில்விதிக்கப்பட்ட தருமம். (சோதிட்டோமம் முதலிய யாகங்களைச் செய்தல்).
திரயோதசி- பதின்மூன்றாந்திதி.
திரவம் - இளகிப் பொசிதல், நீர்த்தன்மையான பொருள்கள்.
திரவியம்- பொன், பொருள்.
திரவியம் ஞ- மலைபடுதிரவியம், நாடுபடுதிரவியம் காடுபடுதிரவியம் நகர்படுதிரவியம் கடல்படுதிரவியம்என்பன.
திரளுதல்- உருட்சியாதல், பெண்கள் இருதுவாதல், பலவினப்பொருள்கள் ஒன்றாய்க் கூடுதல்.
திரளை- உருண்டை.
திரள்- கூட்டம்.
திராட்சம்-கொடிமுந்திரிகை.
திராணம்- இரட்சிப்பு.
திராணி-தகுதி- பலம்.

திராய்- கீரைவகைகளுளொன்று.
திராவகம்- ஆவிநீர்.
திராவிடம்-தமிழ், தமிழ்வழங்குந்தேசம்.
திரி- தீபத்துக்கிடும் வர்த்தி, திரிக்கப்பட்டது.
திரிகடுகம்- சுக்கு, திப்பலி, மிளகு என்பன, ஒரு நூல்.
*திரிகண்- மூங்கில்.
திரிகர்த்தம்-ஆரியாவர்த்தத்துக்கு வாயுதிக்கிலுள்ள ஒரு தேசம்.
திரிகூடம்- திரிகோணமலை.
திரிகை - குயவன் மட்பாண்டங்களை வனைதற்குபயோகிக்குஞ் சக்கரம்,தானியங்களை மாவாக்குந் திரிகை.
திரிசங்கு - அரிச்சந்திரனுடையபிதா.
திரிசடை-விபீஷணனுடையமகளாகிய [அரக்கி.
திரிசிரபுரம்-திருச்சிராப்பள்ளி.
திரிசிரன்-சனத்தானத்திலிருந்த அரக்கருளொருவன்,(வேறும் இப்பெயருள்ளாருளர்.)
திரிசொல்- விகாரப்பட்டுவழங்குஞ்சொ [ல்.
திரிதசர்- தேவர்.
திரிதசாலயம்- சுவர்க்கலோகம்.
திரிதண்டி- சன்னியாசி.
திரிதயம்-மூன்று.
திரிதல்- உலாவுதல், மாறுபடுதல், சுழலுதல், மீளுதல்.
திரிதிவம் - ஆகாயம், சுவர்க்கம்.
திரிதோஷம் - வாதம் பித்தம் சேடம் என்னும் மூன்றின் மாறுபாட்டினால் வரும் நோய்.
திரித்தல் - சுழற்றுதல், மாறுபடுத்தல், முறுக்குதல்.
திரிநேத்திரன்- சிவன்.
திரிபங்கி (திரிபாகி) - மிறைக் கவிகளுளொன்று, மூன்றுபடவளைந்த வடிவ [ம்.
திரிபதகை- கங்கைநதி.
திரிபதம்- முச்சந்தி.
திரிபதாகம் - மூன்றுவரிகளையுடைய நெற்றி,பரதத்தில்ஓர்முத்திரை.[கிலி
திரிபதி-யானையின் காலில்மாட்டுஞ் சங்
திரிபதை- இசைப்பாவகையுளொன்று.
திரிபலை- கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் என்பன.
திரிபு-வேறுபாடு.
திரிபுசம்-முக்கோணம். [பன.
திரிபுடி- ஞாதிரு ஞானம் ஞேயம் என்
திரிபுடை - தாளவகையுளொன்று.
திரிபுட்கரம் - மரணத்தில் விலக்கான வாரமும் பத்திரைத்திதியும் கால்பிரிந்த நட்சத்திரமுங்கூடிவருந்தினம்.
திரிபுண்டரம்- மூன்றுகுறிகளமைந்த விபூதிப்பூச்சு.
திரிபுரம் - அசுரர்வசித்த முப்புரங்கள். பொன் வெள்ளி இரும்பு என்பவற்றாலாயவை).
திரிபுரி - சாறனை. (சாரணை).
திரியக்கு - குறுக்கு.
திரியம்பகன் - சிவன்.
திரிவர்க்கம் - தருமம் அர்த்தம் காமம் என்பன, வர்த்தகத்தில் ஆயம் வியயம் விருத்தி என்பன.
திரிவிக்கிரமன் - விட்டுணு. [கம்.
திரிவிட்டபம்- ஆகாயம் , சுவர்க்கலோ
திரிவேணி - கங்கை யமுனை சரசுவதி என்னும் மூன்றுநதிகளின் சந்தி.
திரிஷ்டுபு - ஓர்சத்தம்.
திரு- அழகு, இலக்குமி, செல்வம், தெய்வீகம், மேன்மை, சிறப்புள்ளபெயர்களோடுசேர்த்துவழங்கும்அடைசொல்
திருகணை- குடமுதலிய சிலபாத்திரங்களை நிலத்திற்படாமல் வைத்தற்குரிய வளையம், அமைதி.
திருகுதல்-முறுகுதல்,முறுக்கிமுரித்தல்.
திருக்களிற்றுப்படியார் - சைவசித்தாந்த நூல்களுளொன்று.
திருக்கு - கண் , அறிவு, முறுக்கு, வஞ்சகம், விபரீதம் , குற்றம்.
திருக்குறிப்புத்தொண்டர் - ஏகாலியர்குலத்திற்பிறந்த ஒருசிவனடியார்.
திருக்கை - மீனினங்களுளொன்று.
திருசியம் - உருவமுள்ளபொருள் , அறியப்படும்பொருள்.
திருடம் - திடம்.
திருடன் - கள்வன்.
திருடுதல் - களவுசெய்தல்.
திருட்டாந்தம் - உதாரணம், பொருளணி நூற்றுள் எடுத்துக்காட்டுவமையென்னும் அணி.
திருட்டி - கண், பார்வை, அறிவு.
திருட்டு- களவு.
திருணபதி- வாழை, பனை.
*திருணம்- புல், துரும்பு. [பிதா.
திருதராட்டிரன் - துரியோதனனுடைய

திருதி - இருபத்தேழுயோகங்களுளொன்று, தாரணை, தைரியம்.
திருதியை - மூன்றாந்திதி.
திருத்தக்கதேவர் - சீவகசிந்தாமணியென்னுங் காப்பியத்தைச்செய்தசமணசமயப்புலவர்.
திருத்தம் - பிழையின்மை.
திருத்தொண்டர் - கடவுளுக்கு அடிமை பூண்டொழுகுவோர், தனியடியார் அறுபத்துமூவரும் தொகையடியார் ஒன்பதின்மருமாகப் பெரியபுராணத்திற் சொல்லப்பட்ட சிவனடியார்கள்.
தனியடியார் அறுபத்துமூவர்: சுந்தரமூர்த்தி திருநீலகண்டர் இயற்பகை இளையான்குடிமாறர் மெய்ப்பொருள் விறன்மிண்டர் அமர்நீதி எறிபத்தர் ஏனாதி கண்ணப்பர் குங்குலியக்கலயர் மானக்கஞ்சாறர் அரிவாட்டாயர் ஆனாயர் மூர்த்தி முருகர் உருத்திரபசுபதி திருநாளைப்போவார் திருக்குறிப்புத்தொண்டர் சண்டேசுரர் தண்டியடிகள் திருநாவுக்கரசு குலச்சிறை பெருமிழலைக்குறும்பர் காரைக்காலம்மை அப்பூதியடிகள் திருநீலநக்கர் நமிநந்தி திருஞானசம்பந்தர் ஏயர்கோன்கலிக்காமர் திருமூலர் மூர்க்கர் சோமாசிமாறர் சாக்கியர் சிறப்புலி சிறுத்தொண்டர் கழறிற்றறிவார் கணநாதர் கூற்றுவர் புகழ்ச்சோழர் நரசிங்கமுனையரையர் அதிபத்தர் கலிக்கம்பர் கலியர் சத்தி ஐயடிகள்காடவர்கோன் கணம்புல்லர் காரி நெடுமாறர் வாயிலார் முனையடுவார் கழற்சிங்கர் இடங்கழி செருத்துணை புகழ்த்துணை கோட்புலி பூசலார் மங்கையர்க்கரசியார் நேசர் கோச்செங்கட்சோழர் திருநீலகண்டயாழ்ப்பாணர் சடையர் இசைஞானியார் என்பவர்கள்.
தொகையடியார் ஒன்பதின்மர்: தில்லைவாழந்தணர் பத்தராய்ப்பணிவார் பரமனையேபாடுவார் சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார் பொய்யடிமையில்லாப்புலவர் திருவாரூர்ப்பிறந்தார் முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார் முழுநீறுபூசிய முனிவர் அப்பாலுமடிச்சார்ந்தார்என்பவர்கள்.
திருநாளைப்போவார் - முன்குறிக்கப்பெற்ற கூரு தொண்டர்களுளொருவர்.
திருநீலகண்டயாழ்ப்பாணர் - இவரும் கூரு தொண்டர்களுள் ஒருவர்.
திருநீலகண்டன் - கூரு தொண்டருள் ஒருவர், விஷசெந்துக்களுளொன்று.
திருநீலநக்கர் - கூரு தொண்டருள்ஒருவர்.
திருநீறு - விபூதி.
திருநீற்றுப்பச்சை - ஓர்வாசனைச்செடி.
திருநெல்வேலி - ஓர்சிவதலம்.
திருந்தலர் (திருந்தார்) - பகைவர், திருந்தமற்றவர்.
திருந்தல் - பிழைதீர்த்தல்.
திருப்தி - நிரம்பப்புசித்தலால் மேல்போசனப் பொருள்களொன்றையும் விரும்பாமை, நிறைவு.
திருப்பணி - கோயில்வேலை, தெய்வத்தொண்டு.
திருப்பதி - திருவேங்கடமென்னுந்தலம்.
திருப்பரங்குன்று - மதுரைக்குச் சமீபத்திலுள்ள ஒருசுப்பிரமணியதலம்.
திருப்பள்ளியெழுச்சி - கடவுள் நித்திரைவிட்டெழுதலைக்குறித்துப்பாடிய திருவாசகப் பாக்கள்.
திருப்பாணாழ்வார் - திருமாலின் அடியவர்களுளொருவர்.
திருப்பாதிரிப்புலியூர் - பெண்ணைநதிக்கரையிலுள்ள ஒருசிவதலம்.
திருப்புகலூர் - திருநாவுக்கரசர் முத்திபெற்ற சிவதலம்.
திருப்புகழ் - சுப்பிரமணியசுவாமியைக்குறித்து அருணகிரிநாதராற்பாடப்பட்ட தோத்திர நூல்களுளொன்று.
திருப்பூட்டு - மங்கலியந்தரித்தல்.
திருப்பெருந்துறை - சோழநாட்டிலுள்ள சிவதலங்களுளொன்று.
திருமகண்மைந்தன் - மன்மதன்.
திருமகள் - இலக்குமி.
திருமங்கையாழ்வார் - திருமாலின் அடியவர்களுளொருவர். (நாலாயிரப்பிரபந்தத்தில் இரண்டாவதான ஆயிரம் இவராற்பாடப்பட்டன).
திருமஞ்சனம் - அபிடேகத்திற்குரியதீர்த்தம்.
திருமந்திரம் - திருமூலராலருளிச்செய்யப்பட்ட ஒருநூல். (மூவாயிரம் பாடலுள்ளது).
திருமண் - வைணவர்களணியும் நாமம்.
*திருமரம் - அரசமரம்.
திருமலர் - தாமரைமலர்.
திருமழிசையாழ்வார் - திருமாலின் அடியவர்களுளொருவர்.
திருமறுமார்பன் - அருகன், திருமால்.
*திருமாலுந்தி - தாமரைமலர்.

திருமால் - விட்டுணு.
திருமாற்பேறு - காஞ்சிபுரத்துக்குவடக்கேயுள்ள ஒரு சிவதலம், (விட்டுணு பூசித்துச் சக்கரம்பெற்றதலம்),
திருமுருகாற்றுப்படை - நக்கீரர் பாடிய ஒரு நூல்.
திருமுறை - புத்தகம்.
திருமுற்றம் - குதிரைவையாளி வீதி, கோயில், கோயிற்சந்நிதானம்.
திருமூலநாயனுர் - ஒரு சிவயோகி. (இவர் யோகஞ் சாதிக்கும்போது வருடமொவ்வொருசெய்யுளாக மூவாயிரஞ் செய்யுளால் திருமந்திர மென்னும் நூலைப் பாடியவர்.)
திரும்புதல் - மாறுபடுதல், மீளுதல், ஒருபுறம்மற்ரோர்புறத்திலாகப்பெயர்தல்.
திருவஞ்சைக்களம் - மலைநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம்.
திருவருட்பயன் - சைவசித்தாந்த நூல்களுளொன்று.
திருவலஞ்சுழி - காவிரிநதியின் தென்கரையிலுள்ள ஒரு சிவதலம்.
திருவல்லிக்கேணி - சென்னபட்டினத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு விட்டுணுத்தலம்.
திருவள்ளுவர் - திருக்குறளென்னும் நீதி நூலையியற்றிய புலவர்.
திருவனந்தபுரம் - மலையாளக் கரையிலுள்ள ஒரு பட்டினம்.
திருவன் - விகடமான, விளையாட்டுகளைச்செய்வோன்.
திருவாசகம் - மாணிக்கவாசகர் பாடிய தோத்திர நூல்.
திருவாசி - ஓர்ஆபரணம்.
திருவாதிரை - உ௭ நட்சத்திரங்களுளொன்று.
திருவாத்தி - பூமரங்களுளொன்று.
திருவாய் மொழி - திருமாலைக்குறித்து அடியார்கள் பாடிய தோத்திரநூல்.
திருவாரூர் - ஓர் சிவதலம்.
திருவானைக்கா - திரிசிராப்பள்ளிக்குச் சமீபத்திலுள்ள ஓர் சிவதலம்.
திருவில் - இந்திரவில்.
திருவிளையாடல் - கடவுளுடையஅற்புதங்கள், மதுரைச்சோமசுந்தரக்கடவுள் செய்த ௬௪ திருவிளையாடலையமைத்துப் பரஞ்சோதி மாமுனிவர் பாடிய புராணம், (வேப்பத்தூர்க் கூட்டத்தாராற்பாடப்பட்டதும் இப்பெயர்த்து).
திருவிற்குடி - காவிரிநதியின் தென்கரையிலுள்ள ஒரு வீரட்டத்தலம்.
திருவின்னம்பர் - காவிரிநதியின் வடகரையிலுள்ள ஒரு சிவதலம்.
திருவீழிமிழலை - காவிரிநதியின் தென்கரையிலுள்ள ஒருசிவதலம்.
திருவுந்தியார் - சைவசித்தாந்தம் பதினன்குளொன்று, (உய்யவந்ததேவர் அருளிச்செய்தது), மாணிக்கவாசகர் பாடியதிருவாசகத்திலொருபகுதி.
திருவுளச்சீட்டு - தெய்வத்தின் சன்னிதியிலெழுதிவைத்தெடுக்கப்படுஞ்சீட்டு.
திருவேங்கடம் - திருப்பதி.
திருவொற்றியூர் - சென்னைக்குச் சமீபத்திலுள்ள ஒருசிவதலம்.
திருவோணம் - உ௭ நட்சத்திரங்களுளொன்று.
திரேக்காணம் - இராசியின் மூன்றிலொருகூறு.
திரேதம் - இரண்டாம்யுகம். (௧௨௯௬000 வருடமுடையது).
திரை - நீர்த்திரை, சரீரத்தில் வயோதிகத்தாலுண்டாகுஞ்சுருக்கு, மறைப்புக்காகஇடும் திரைப்புடவை, *வெற்றிலை. (சிந்).
திரைதல் (திரையல்) - சுருங்குதல், பால் முதலியனகண்விடுதல், சுருளுதல்.
திரையல் - வெற்றிலைச்சுருள், வெற்றிலை.
திரைராசிகம் - முத்தொகைவினு.
திரோகிதம் - மறைக்கப்பட்டது.
திரோதாயி - திரோதானசத்தி, (சைவநூல்களிற்கூறப்பட்டது.)
திரோதானம் - மறைப்பு.
திரோபவம் - சைவநூல்களிற் கூறப்பட்டபஞ்சகிருத்தியங்களுளொன்று.
திலகம் - நெற்றிப்பொட்டு, மஞ்சாடிமரம், மேன்மை.
திலகர் - இந்தியாவிற்சுயராச்சியக்கிளர்ச்சியையுண்டாக்கிய ஒரு மகாத்மா.
திலம் - எள்ளு, மஞ்சாடிமரம்.
திலீபன் - சூரியவம்சத்தரசருளொருவன், (இரகுராசனுடையபிதா).
திலோத்தமை - தேவதாசியர்களுளொருத்தி.
தில் (இடைச்சொல்) - விழைவு காலம் ஒழியிசை என்னும் பொருள்களுளொன்றைக் குறித்தும் அசைநிலையாயும்

வரும். (உ-ம்: வார்ந்திலங்கும் வைவெயிற்றுச் சின்மொழியரிவையைப் பெறுகதில்லம்மையானே என்பதில் விழைவு; இப்பொருள் தன்மையிலன்றி வாராது. பெற்றாங்கறிகதில்லம்மவிவ்வூரே என்பதில் பெற்றகாலந்திகழ்வெனக் காலங்குறித்து நின்றது. வருதில்லம்மவெஞ்சேரிசேர என்பதில் வந்தக்கால் இன்னது செய்வேனென்னும் ஒழியிசைப்பொருளில்வ [ந்தது,
தில்லம்-காடு.
தில்லியம்- புதுக்கொல்லை.
தில்லை- தில்லைமரம், சிதம்பரம். [ன்று.
தில்லைநாயகம் - நெல்விகற்பங்களுளொ
தில்லைவாழந்தணர்- சிதம்பரத்திற் கடவுளைப் பூசிக்கும்அடியார். (மூவாயிரவர்).
திவசம்- நாள், சிராத்ததினம்.
திவம்- ஆகாயம், சுவர்க்கம், மோட்சம், பகல்.
திவலை- துளி; மழை.
திவவு- படி, யாழின் வலிக்கட்டு.
திவளல்- துவளுதல், மெலிதல், பரிசித் [தல்.
திவா- பகல்.
திவாகரம்- நிகண்டு நூல்களுளொன்று.
திவாகரன்- சூரியன், திவாகர நிகண்டு செய்தவர்.
திவாகீர்த்தி- நாவிதன்.
திவோதாசன் - சந்திரவம்சத்திற்பிறந்த காசியரசன்.
திவ்வியம்- தெய்வீகமானது, இனிமையானது.
திளைத்தல்-அழுந்துதல்- அனுபவித்தல், நிறைதல், நெருங்கல், விளையாடுதல், (புறநா) துளைத்தல்.
திறத்தல் - மூடியிருக்கும் வஸ்திரமுதலியவற்றை அல்லது அடைத்திருக்குங்கதவுமுதலியவற்றைத் திறத்தல்.
திறப்பணம்- மரம்முதலியவைகளுக்குத் தமரிடும் ஆயுதம்.
திறப்பு- திறத்தல், காவலின்மை கதவு முதலியவற்றின் திறவுகோல்.
திறமை-சாமர்த்தியம், தகுதி, வலி.
திறம் (திறன்)-கூறுபாடு, வழி, சாமர்த்தியம், தன்மை, காரணம், வலி, நிலைபேறு, குறைநரம்புடைய யாழிசை.
திறம்புதல் - மாறுபடுதல்.
திறலோன்- வலியுடையோன்.
திறல்- வலி.
திறவுகோல்-திறப்பு.
திறனில்யாழ் - நெய்தல்யாழ்த்திறம்.
திறை - அரசிறை.
தின்றி- தின்னுதற்குரியபொருள்கள்.
தினகரன்- தினமணி- சூரியன்.
தினம் - நாள், பகல்.
தினவு- சொறி.
தினுதி- பிரதமைத்திதி.
தினிசு - வகை.
தினை - ஓர் தானியம் [தின்னுதல்.
தின்னல்- சிற்றுண்டி முதலியற்வறைத்

## தீ

தீ- நெருப்பு, கொடுமை, தீமை, நரகம், புத்தி, ஞானம், இனிமை, (உ-ம்: தீந்தமிழ்; தீவியகன்னல்; தீம் என்பதே இப் பொருளதென்பர் சிலர்.
தீக்கை (தீக்ஷை- தீட்சை)- ஞானோபதேசம், மந்திரோபதேசம், யாகம், விவாகமுதலிய சம்ஸ்காரம்.
தீக்கை ௩ -சமயதீக்கை விசேடதீக்கை நிர்வாண தீக்கை என்பன. இவை சைவமதத்தார்க்குச் செய்யப்படுவன.
இவற்றைச் சபீசதீக்கை நிர்ப்பீச தீக்கை என இருவகைப்படுத்திக்கூறுவர். சபீசதீக்கையாவது சமயாசார கன்மத்தை நிறுத்தி மற்றைக் கன்மங்களெல்லாவற்றையுஞ் சுத்தி செய்தொழிக்குந் தீக்கை. இது சாதிகாரதீக்கையெனவும்படும். நிர்ப்பீச தீக்கையாவது சமயாசாரசுத்தியோடு செய்யப்படுவது. இது நிரதிகார தீக்கை எனவும்படும். இவையெல்லாம் ஔத்திரிதீக்கையின்வகை; பரிசதீக்கை வாசிகதீக்கை முதலாக வேறு தீக்கைகள் சைவநூல்களிற் கூறப்பட்டன.
தீங்கு - தீமை, குற்றம், வெப்பம், உக்கிரம்.
தீட்சணம் (தீக்ஷணம்)-கூர்மை, விரைவு
தீட்சிதர்-தீக்கைபெற்றோர். [உக்கிரம்.
தீட்டு- மகளிர் சூதகம், ஆசௌசம்.
தீட்டுதல்-எழுதுதல், கூர்ப்படுத்தல், சித்திரித்தல்.
தீண்டியம்-பவளக்குறிஞ்சிமரம்.
தீண்டுதல்- தொடுதல்.

தீதல்- கருகுதல்.
தீது- தீமை, குற்றம்.
தீத்திரள் - வடவாக்கினி, அக்கினிப் பொறிகளின் தொகுதி.
தீபகம் (தீவகம்) - பொருளலங்காரங்களுளொன்று, (ஓரிடத்து நிற்கின்ற மொழி அச்செய்யுளிலுள்ள ஒவ்வொருவாக்கியங்களுக்குங்கூட்டப்பட்டுப் பொருள் தருவது).
தீபம்- விளக்கு, விளக்குத்தண்டு, சோதிநட்சத்திரம், தீவு.
தீபவதி- யாறு.
தீபனம்-பசித்தல், பிரகாசித்தல்.
தீபாக்கினி- விளக்குப்போல் ஒருசுடருடைத்தாயெரியும் நெருப்பு.
தீபாவலி- ஆசுவீஜமாத அபரசதுர்த்தசித்திதியிலன்றுவரும் ஒருவிசேடதினம்.
தீபிகை (தீவிகை)- விளக்கு, விளக்குத்தண்டு.
தீப்தி-பிரகாசம்.
தீமான்-சிறந்த புத்தியுடையோன், பண்டிதன்.
தீமை- பொல்லாங்கு.
தீம்- இனிமையான.
தீம்பர்- கீழோர்.
தீயார் (தீயோர்)-கொடியோர், கீழோர்.
தீரம்- கரை, வரம்பு, தைரியம், வலி, மனநிலையுடைமை.
தீராந்தி-மச்சுமரம்.
தீர்க்கசத்திரம் - யாகவகைகளுளொன்று, (நெடுங்காலமாகச்செய்யப்படவேண்டியதாதலின் இப்பெயர்த்தாயிற்று)
தீர்க்கசந்தி- நிலைமொழியீற்றிலும் வருமொழிமுதலிலும் வரும் ஓரினவுயிர்களிரண்டுங்கூடி நெடிலாகுஞ் சந்தி.
தீர்க்கசூத்திரம்- தொடங்கியகருமத்தை விரைவின்றி மந்தமாகச்செய்தல், நீளமான நூல்.
தீர்க்கதரிசனம் - எதிர்கால நிகழ்ச்சிகளை முந்தியே அறிந்து சொல்வது. (முற்பிறப்புமுதலியவற்றையாவது அதிகதூரத்தில் நிகழும் நிகழ்ச்சிகளையாவது அறிந்து சொல்வதுமாம்).
தீர்க்கம் - நெடில், நீளம், தூரம், நிச்சயம்.
தீர்தல்- கழிதல். (உ-ம்: துனையிற்றீர்ந்த கடுங்கண்யானை), முடிவாதல், நீளுதல்.
தீர்த்தங்கரர் - தந்திர நூல்களை யியற்றினோர், சமணமதாசாரியர்களுமாம்.
தீர்த்தம்- நீர், புண்ணியதீர்த்தம், சைன முதலியமதத்தவர்களின் ஆகமங்கள், சுத்தம்.
தீர்த்தர்- தேவர், சுத்தமுடையோர்.
தீர்த்தன் - அருகக்கடவுள், குரு, சுத்தமுடையோன்.
தீர்த்திகை- யாறு.
தீர்வு- பிராயச்சித்தம்.
தீர்வை- கிரி, சுங்கம், வழக்குத்தீர்ப்பு.
தீவரர்- பரதவர்.
தீவர்த்தி- எரியும் பந்தம்.
தீவளர்ப்பவர்- பிராமணர்கள்.
தீவி- புலி.
தீவிகை- விளக்கு.
தீவிரம்- வெய்யில் நெருப்புமுதலியவற்றின் கடுமை, பெருங்கோபம்.
தீவிரை- பெருநெருப்பு, (தீவறையென வழங்குவர்.
தீவிளி- பசுங்காய்.
தீவினை- பாவம், கொடுமை.
தீவு- நீர் சூழ்ந்தநிலம்.
தீவு எ- சம்புத்தீவு சாகத்தீவு குசைத்தீவு கிரவுஞ்சத்தீவு இலவந்தீவு கோமேதகத்தீவு புட்கரத்தீவு என்பன.
தீற்றுதல்- சுவர் முதலியவற்றை ஒப்பப்படும்படி மெழுகுதல், உண்பித்தல்.
தீனம்- எளிமை, வறுமை.
தீனன்- இரப்போன், வறியவன், துக்கமுற்றோன்.
தீன்- சிற்றுண்டிவகை.

## து

துகள்- குற்றம், தூளி.
துகிதை- மகள்.
துகிர்- பவளம்.
துகிலிகை- கொடி.
துகில்- வஸ்திரம், விலையுயர்ந்த வஸ்திரம், விருதுக்கொடி.
துகினம்- பனி, சந்திரகிரணம்.
துகூலம்-பட்டுப்புடவை. (இந்தவடமொழியே தமிழில் துகிலெனத்திரிந்தது.
துகைத்தல்-உழக்கல், நசுக்குதல், இடித்தல்.
துகையல்- துகைத்தபொருள்.
துக்கம்-கிலேசம், துன்பம்.

துக்காணி - இரண்டுதம்படி கொண்ட ஒரு செப்புநாணகம்.
துக்கித்தல் - துக்கப்படல்.
துங்கபத்திரை - ஒருநதி.
துங்கம் - உயர்ச்சி, நுனி, பெருமை அகலம், சோதிடகணிதத்தில் மங்தோச்சம், சூரியன் முத லியகிரகங்களுக்கு மேட முதலாகச் சொல்லப்பட்ட உச்சராசி.
துங்கன்- மங்தோச்சம். (தமிழிற் சந்திரனுடைய மங்தோச்சத்தையே துங்கனென்பர்).
துச்சம் - கீழ்மை, பொய், வெறுமை.
துச்சன் - கீழ்மகன்.
துச்சாதனன் - துரியோதனனுடைய தம்பிமாருள் ஒருவன்.
துச்சியவனன் - இந்திரன்.
துச்சில் - ஒதுக்கிடம்.
துஞ்சல் - இறத்தல், நித்திரைசெய்தல், சோம்புதல், தங்குதல்.
துஞ்சற - முற்றுக.
துடக்கு - ஆசௌசம், மகளிர்சூதகம், கட்டு, சிக்கு.
துடக்குதல் - கட்டுதல், பொருத்துதல்.
துடவை - தோட்டம்.
துடி - உடுக்கை, காலநுட்பம், தற்பரையின் நூற்றிலொருபங்கு, (நிமேஷம் இரண்டு கொண்ட தென்பர் சிலர்), ஏலச்செடி, இடைசுருங்குபறை, குறிஞ்சிப்பறை, பாலைப்பறை. குமரவேள் சூரபன்மனைச் சங்கரிக்கும்போதாடிய கூத்து, எழுவகைமாதராடல், கூதாளிச்செடி.
துடித்தல் - பதைத்தல், மின்னுதல்.
துடிநூல் - உறுப்புக்களின் துடிப்பினால் வருஞ்சுபாசுபங்களைக்கூறும் நூல்.
துடிப்பு - பதைப்பு.
துடியடி- யானைக்கன்று.
துடுக்கு - குறும்பு, விரைவு.
துடுக்கெனல் - அச்சக்குறிப்பு. [த்து
துடுப்பு- அகப்பை, வலிதண்டு, பூங்கொ
துடுவை - நெய்த்துடுப்பு
துடைத்தல் - அழித்தல், நிலத்தைத் துடைப்பத்தினாற் சீத்தல், தடவல்.
துடைப்பம் - விளக்குமாறு.
துட்கல்- அச்சக்குறிப்பு.
துட்டசதுர்த்தர் - மகாபாரதத்தில் துரியோதனன் துச்சாதனன் சகுனி கன்னன் என்னும் நான்குதுட்டர்கள்.
துட்டம் - தீச்செயல், தவறு.
துட்டன் - தீமைசெய்வோன், (பெண்பாலில் துட்டை), தேள்.
துட்டி (துஷ்டி)- சந்தோஷம்.
துட்டு - பணத்தின் நான்கிலொன்றான செப்புக்காசு.
துட்டை - அசதி, துர்க்குணமுடையவள்.
துணங்கல்- கூத்து. [கம்.
துணங்கறல் - இருள், உற்சவம், விவா
துணங்கை - திருவிழா, பேய், திருவாதிரைநட்சத்திரம், ஓர்கூத்து (முடக்கியவிருகை பழுப்புடையொற்றியாடல்.)
துணர்- பூங்கொத்து, பூந்தாது, பூ.
துணர்த்தல் - முகைத்தல்.
துணி - வஸ்திரத்துண்டு, ஒளி, துண்டம், தேரிடக்கியம், சோதிநட்சத்திரம், பந்தர் முதலியவற்றிலமைக்குந் தூக்கம்.
துணிதல் - மனத்தைரியங் கொள்ளல் வெட்டுப்படல், மனந்தெளிதல்.
துணித்தல் - வெட்டுதல்.
துணிபு (துணிவு) - தெளிபொருள், மனத்தைரியம்.
துணுக்கம் - அச்சம். உள்ளோசை.
துணுக்கிடுதல் - திடுக்கிடுதல், அஞ்சுதல்.
துணுக்கு - துண்டு, பயங்கரம்.
துணுக்கை - துண்டு
துணை - அளவு, உதவி, ஒப்பு, இணை.
துணைவன் - சகோதரன், உதவிசெய்வோன், தோழன், கணவன். (பெண்பாலில் துணைவி).
துண்டம் - துண்டு, முகம், மூக்கு, யானைத்துதிக்கை, சாரைப்பாம்பு, பறவை மூக்கு.
துண்டித்தல் - வெட்டுதல், தறித்தல்.
துண்டீரன் - காஞ்சிநகரிலிருந்த ஓரரசன்.
துண்டு - கண்டம், ஓலைத்துண்டு.
துண்ணெனல் - அச்சக்குறிப்பு, விரைவுக்குறிப்பு.
துதி - தோத்திரம்.
துதிக்கை - யானைத்துதிக்கை.
துதித்தல்-தோத்திரஞ்செய்தல், முகமன் சொல்லுதல்
துதியை - இரண்டாந்திதி.
துதைதல் - நெருங்குதல். [ன்று.
துத்தநாகம் - எழ்வகைலோகங்களுளொ

துத்தம் - ஏழிசைகளுளொன்று, பால், சமனிசை, வயிறு.
துத்தரி-கொம்பினாற்செய்யப்பட்ட ஊதுகுழல்.
துத்தி - பாம்பின்படப்பொறி, தேமல், ஓர்செடி.
துந்தி - வயிறு, கொப்பூழ்.
துந்து - ஒரு அசுரன். (இவனைக்கொன்றவன் துந்துமாரனெனப்பெயர்பெற்றான்; இராமா குலமுறை).
துந்துபி - பறைவிகற்பங்களுளொன்று, வாத்தியப்பொது, அறுபதுவருடங்களுளொன்று, ஒருஅசுரன், ஒருஇராக்கதன்.
துந்துமாரி - முதல்வள்ளலெழுவருளொருவன்.
துந்துளம் - பெருச்சாளி.
[துப்பட்டி - ஓர்வகைப்போர்வை].
துப்பல் - வாயால் நீர்முதலியவற்றையுமிழ்தல்.
[துப்பாக்கி - துவக்கு].
துப்பு - அரக்கு, அனுபவம், உற்சாகம், உணவு, நெய், ஆராய்ச்சி, சிவப்பு, சுத்தம், பவளம், வலி, பகை, துணை, துணைக்காரணம், ஆயுதம், பொலிவு, முயற்சி.
துப்புரவு - ஐம்பொறிகளால் நுகரப்படும் அனுபவம், சுத்தம்.
துமானம் - ஆபரணங்கள்வைக்கும் பாத்திரம்.
துமி - துளி.
துமிதம் - திவலை.
துமிதல் - துண்டாதல்.
துமித்தல் - வெட்டல், துளித்தல்.
துமுலம் - பேரொலி, கலகம்.
தும்பி - யானை, வண்டு, ஆண்வண்டு, வண்டின் விகற்பங்களுளொன்று, சுரை.
தும்பு - பனையோலை முதலியவற்றினிதழ், சிம்பு.
தும்புரு - கந்தருவர்களுளொருவன்.
தும்பை - தும்பைச்செடி, தும்பைக்கொடி, போர்.
தும்பைமாலை - போர்வீரரணியும் மாலை, தும்பைப்பூமாலை சூடி மாற்றாரோடு பொருதலைக்குறித்து வருணிக்கும்பிரபந்தம்.
தும்மல் - தும்முதல்.
துயக்கம் - சோர்வு, தளர்ச்சி.
துயங்குதல் - சோர்தல், தளர்தல்.
துயரம் (துயர்) - துன்பம்.
துயரி - யாழ்நரம்பு.
துயர்தல் - துன்பப்படல்.
துயல்வரல் - அசைதல்.
துயவு - அறிவுவேறுபடல்.
துயிலல் - நித்திரைசெய்தல், தங்குதல்.
துயிலுணர்தல் - விழித்தெழல்.
துயிலெடைநிலை - மனக்கவற்சியின்றிப் பாசறையிற்றுயின்ற அரசரைத்துயிலெழுப்புவதற்காகச் சூதர்புகழ்ந்துபாடும்பாட்டு.
துயில் - நித்திரை.
துய் - உணவு, பஞ்சிற்றொடர்நுனி, (நூற்கும்பஞ்சுநுனி), பஞ்சு. (குறிஞ்சுள).
துய்த்தல் - அனுபவித்தல், நால்நூற்றல்.
துய்ப்பு - அனுபவம், புசிப்பு. [புசித்தல்.
துய்யாள் - சரசுவதி, சுத்தமுடையவள்
துரகதம் (துரகம்) - குதிரை.
துரங்கமம் (துரங்கம்) - குதிரை.
துரங்கவதனர் - கந்தருவர்.
துரத்துதல் - ஓடச்செய்தல், செலுத்துதல், பின்றொடர்தல்.
துரந்தரன் - பாரந்தாங்குவோன், வல்லோன்.
துரபிமானம் - அபிமானிக்கக்கூடாதகருமத்தில் அபிமானித்தல்.
துரம் - சுமை, வேகம்.
துரவு - நீர்நிலையாகியகுண்டு, கிணறு.
துராலிங்கர் - அகத்தியர்மாணக்கர் பன்னிருவருளொருவர்.
துரால் - செத்தை, துன்பம்.
துரிசு - குற்றம், துன்பம்.
துரிஞ்சில் - சீக்கிரிமரம்.
துரிதம் - விரைவு, (த்வரிதம்என்னும் வடமொழியின்விகாரம்), பாவம், கலக்கம்.
துரியம் - நான்காமவத்தை, சுத்தநிலை, பரப்பிரமம், பொதியெருது, பண்டியையீர்த்துச்செல்லும் எருது குதிரைமுதலியன.
துரியாதீதம் - ஐந்தாமவத்தை.
துரியோதனன் - ஓரரசன்.
துரீணன் - பாரத்தைத்தாங்குவோன், சிறந்தோன்.
துரீயம் - நான்காவது.
துரு - களிம்பு, கறை.

துருக்கம் - மதில், கத்தூரி, குங்குமமரம், காடு, குறிஞ்சிநிலம், சுகந்தத்திரவியங்களுள் ஒன்று, மலைமேற்கோட்டை.
துருக்கன் - துர்க்காதேவியாற்கொல்லப்பட்ட ஒரு அசுரன்.
துருஞ்சில் - பறவையினங்களுளொன்று.
துருதம் - விரைவு.
துருதுருத்தல் - விரைதல்.
துருத்தி - ஆற்றிடைக்குறை, ஊதுந்துருத்தி, பெருந்துருத்தி, மட்டத்துருத்தி, தோல், தொழுத்தை.
துருபதன் - பாஞ்சாலதேசத்தரசன். (திரௌபதியின் பிதா).
துருமம் - மரம்.
துருமோற்பலம் - கோங்கமரம்.
[துரும்பர் - தாழ்ந்தசாதியார்ருக்குஆடையொலிப்போர்].
துரும்பு - மெல்லிய புல் முதலியவற்றிற் கிள்ளியெடுத்த துரும்பு, கீழ்மை.
துருவசக்கரம் - பூலோகத்தில் இரு துருவங்களையுஞ் சார்ந்தபூமி. (இருபத்து மூன்றரைப்பாகையை ஒவ்வொரு பக்கத்திலுமுடைய விருத்தம்). துருவநக்ஷத்திரத்தால் கதி முதலியவைகளைப் பரீக்ஷித்தற்குரிய கிரகங்களும் நக்ஷத்திரங்களுமடங்கிய பெரியவிருத்தம்.
துருவம் - அசையாநிலை, ஓர்வகைத்தாளம், யோகம் இருபத்தேழில் ஒன்று, நிச்சயம், மோட்சம், சோதிடகணிதத்தையேற்படுத்தியகாலத்தின் பின் கணிக்கப்படுங்கதியிற் கூட்ட அல்லது கழிக்கவேண்டியதாகச் செய்து வைத்திருக்குந்துருவம்.
துருவலகு - தேங்காய் துருவும் மணை.
துருவன் - துருவநட்சத்திரம், அட்டவசுக்களுளொருவன்.
துருவாசன் - அத்திரிமுனிவரின் புத்திரரான ஒரு இருடி.
துருவாடு - செம்மறியாடு.
துருவுதல் - கடைதல், தேடுதல், வறுகுதல்.
துருவை - செம்மறியாடு.
[துரை - அதிகாரி].
துரோகம் - தீமைசெய்யும் நினைவு.
துரோணம் - சரபப்பறவை, காகம், தும்பைச்செடி, ஏழுமுகில்களிலொன்று, வில், தனுராசி, பதக்கென்னும் அளவு.
துரோணன் - பாண்டவர்காலத்திலிருந்த வில்வித்தையாசிரியருளொருவர்.
துர் - கெட்டஎன்னும்பொருள்படும் உபசர்க்கம்.
துர்க்கதி - நரகம், தரித்திரம்.
துர்க்கம் - ஒடுக்கவழி, காடு, மலைமேற்கோட்டை.
துர்க்கை - வெற்றிக்குரியதேவி.
துர்ச்சனன் - துட்டன்.
துர்த்தரன் - ஓர் அசுரன்.
துர்த்தினம் - மேகங்களால் ஆகாயம் மூடப்பட்டிருக்கும் நாள்.
துர்ப்பலம் - பலவீனம்.
துர்ப்பாக்கியம் - அதிட்டமின்மை.
துர்ப்பிக்ஷம் - பஞ்சகாலம்.
துர்லபம் - கிடைத்தற்கரியது.
துர்வசு - யயாதியின் புத்திரருளொருவன்.
துலக்கம் - பிரகாசம்.
துலக்கல் - விளங்கச்செய்தல்.
துலங்கல் - ஒளிசெய்தல்.
துலங்கு - தொழுமரம்.
துலம் - கனம், நிறை, ஒப்பு.
துலா - நிறைகோல், (துலாப்படி), துலாராசி, கிணற்றிலிருந்து நீரையெடுத்தற்கேற்றிருக்குந்துலாமரம்.
துலாக்கோல் - தராசுக்கோல்.
துலாதானம் - தன்னிறையளவு பொன்னைத்தானஞ்செய்தல்.
துலாம் - ஐந்துவீசைகொண்டநிறை, துலாராசி, நிறைகோல், நூறுபலங்கொண்டநிறை.
துலுக்கர் (துருக்கர்) - மகமதியர்.
துலுக்கு - துலுக்கதேசம், துலுக்கபாஷை.
துலை - ஒப்பு, கனம், நிறை, நிறுக்குங்கோல், நூறுபலம், மடைமுகம்.
துல்லியம் - ஒப்பு.
துவக்கல் - கட்டல்.
துவக்கு - உடல், கட்டு, சங்கிலி, சம்பந்தம், தோல், பிணக்கு. [துப்பாக்கி].
துவசம் - கொடி, விருந்துக்கொடி.
துவசர் - கள்விற்போர்.
துவட்டல் - துடைத்தல்.
துவட்டா (தொட்டா) - விச்சுவகன்மா, கம்மியன்.
துவட்டாநாள் - சித்திரைநட்சத்திரம்.

துவந்துவம் - உம்மைத்தொகை, வாது, பகை, ஆணும் பெண்ணும்.
துவம் - அசையாதுநிற்றல்.
துவயம் - இரண்டு.
துவரம் - துவர்ப்பு.
துவரை - தானியவகையுளொன்று.
துவர் - சிவப்புநிறம், பவளம், *விறகு.
துவர் கo - நாவல் கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் ஆல் அரசு அத்தி இத்தி முத்தக்காசு மாந்தளிரென்பன (சிலப்பதிகாரத்தில் வேறு வகையாகக்கூறப்பட்டன.
துவர்க்காய் - பாக்கு.
துவர்தல் - மிகுதல், ஈரம்புலர்த்துதல்.
துவர்ப்பு - அறுசுவைகளுளொன்று.
துவளல் - அசைதல், ஒசிதல், தளர்தல், வாடல், பரிசித்தல்.
துவற்றல் - தூவுதல், (மலைபடு ௩௬௬).
துவனி - ஒலி.
துவன்றுதல் - நிறைதல், நெருங்குதல், சாதல்.
துவாதசம் - பன்னிரண்டு.
துவாதசாந்தம்- உச்சியிலிருந்து பன்னிரண்டங்குலம்.
துவாதசி - பன்னிரண்டாந்திதி.
துவாந்தம் - இருள், நரகம்.
துவாபரம்- மூன்றாம்யுகம். (அசுச000 வருடமுடையது).
துவாரகை - சத்தபுரிகளிலொன்று.
துவாரம் - துளை, வீடு முதலியவற்றின் [வாயில்.
[துவாளிப்பு - குடைவு].
துவிசன் - பிராமணன். (அரசர்க்கும் வணிகர்க்கும் அருகிவழங்கும்).
துவிதீயம் - இரண்டாவது.
துவிபம் - யானை.
துவிரேபம் - வண்டு.
துவிவசனம் - இருமை.
துவீபவதி - ஓர் நதி.
துவேஷம் - பகை.
துவை - ஒலி, பிண்ணாக்கு, தசை, பருகும்பொருள், துவையல், புளிங்கறி (சிங் விசேடக்குறிப்பு).
துவைதம் (துவிதம்) - கடவுளும் ஆன்மாவும் எப்போதும் வேறாந்தன்மையையுடையவென்று கூறும் மதம்.
துவைதல் - துவைக்கப்படுதல்.
துவைத்தல் (துவைதலின்பிறவினை) - ஒலித்தல், துவைத்தல், யாழ்நரம்போசை..
துவைபாயனன் - வியாச முனிவர். (கங்காத்துவீபத்திற் பிறந்தமையாலிப்பெயர்பெற்றனர்).
துவைமாதுரன் - விநாயகக்கடவுள்.
துவையல் - துவைக்கப்பட்ட உணவுப்பொருள்.
துவ்வல் - அநுபவித்தல், புசித்தல்.
துவ்வாமை - வறுமை, வெறுப்பு, அநுபவமின்மை.
துவ்வு - உணவு, ஐம்பொறிகளால் நுகரப்படுவன.
துழத்தல் - துழாவுதல்.
துழனி-ஒலி,பறவைக்கூட்டத்தினொலி.
துழாய் - துளசி.
துழாய்மௌலி - விட்டுணு.
துழாவல் - கலக்குதல், அளாவளாவல், வெட்டுதல்.
துளக்கம் - அசைவு, அச்சம், ஒளி.
துளக்கல் - (துளங்கலின்பிறவினை), அசைத்தல், ஒளிசெய்தல், நடுங்கச்செய்தல்.
துளக்கு - அசைவு.
துளங்கல் - அசைதல், அஞ்சுதல், ஒளிசெய்தல், நடுங்கல்.
துளசி - ஓர் செடி.
துளசிமணி - துளசியின் வயிரத்திற் கடைந்தெடுத்தமணி.
துளபம் (துளவம், துளவு) - துளசி.
துளி - திவலை, மழை, மழைத்துளி, பெண்ணாமை.
துளித்தல் - துளியாய்விழுதல், மழைபெய்தல்.
துளும்பல்- திமிறல், தள்ளல், இளகல், எழல், வருந்தல். [ளிலொன்று.
துளுவம் - ஒருதேசம், கஅ பாஷைக
துளை - துவாரம், மூங்கில், வாயில்.
துளைக்கருவி - சின்னம் வேங்குழல் முதலியவூதுங்கருவிகள்,
துள்ளல்- கலிப்பாவினோசை, ஆடு, கொக்கு, குதித்தல், கூத்தாடல்.
துறக்கம் - சுவர்க்கலோகம்.
துறடு (துறட்டி) - யானைத்தோட்டி.
துறட்டிச்செடி - ஓர் முட்செடி.
துறட்டுத்தடி - கொழுவுதடி.
துறத்தல் - வெறுத்துவிடல், நீக்குதல்,

துறந்தார்- நீத்தோர்.
துறவர்-முனிவர் (உலகப்பற்றை நீக்கிய வர்).
துறவு- துறவறம்.
துறுகல்-மதகடைக்குங்கல். பொற்றைக்கல்
துறுதல்- பலபொருள்கள் ஒன்றோடொன்று நெருங்குதல், உண்ணுதல்.
துறுமல்- நெருக்கம், திரட்சி.
துறை- யாறு, இடம், துறைமுகம், நீர்க்கரை, தங்குமிடம், வழி, பாவினங்களுள் ஒன்று.
துறை உ- செந்துறை வெண்டுறை என்பன.
துறைபோகல்- முடியவறிதல்.
துறைவன்- நெய்தநிலத்தலைவன்.
துற்றல்- உண்ணல், குற்றுதல், நெருங்கல்.
துற்றி-உண்பன.
துற்று - நெருக்கம், கூட்டம், சோறு, பெரும் பிணக்கு.
துனி- துன்பம், நோய், ஆடவர்நீங்கவுள்ளேயடைத்திருத்தல்; வெறுப்பு, நதி.
துனைவு- விரைவு.
துன்பம்-நோய், மனவருத்தம்.
துன்மதி- ஓர் வருடம், தீநெறியிற்செல்லும்புத்தி.
துன்முகன்- ஒருஅசுரன்.
துன்முகி - ஓர் வருடம்.
துன்றுதல் - நெருங்குதல்.
துன்னம்- கிழிந்ததுண்டு, தையல், ஊசித்துளை.
துன்னர்- தையற்காரர்.
துன்னலர் (துன்னார்)- பகைவர்.
துன்னல்- கிட்டுதல்,நெருங்குதல்,தைத்தல்.
துஷம்-உமி.
துஷாரம்- பனி, குளிர்.
துஷ்கரம்- பாவம்.
துஷ்யந்தன்- சந்திரவம்சத்திற் பிறந்திருந்த ஒரு அரசன்.

## தூ

தூ - சுத்தம், வெண்மை, தசை, பற்றுக்கோடு, *பகை.
தூக்கணங்குருவி - ஓர் குருவி.
தூக்கம்- நித்திரை, சோர்வு, தூங்சுக்கட்டியபொருள், ஆபரணத்தொங்கல்.
தூக்கு- உறி, ஆராய்வு, நிறை, தராசுக்கோல், துலாமென்னும்நிறை, கூத்து, துலாராசி, பந்தர் முதலியவற்றிவமைக்குந் தூக்கம், லம்பமறியுங் கருவி, செய்யுள், தாளங்களின்வழிவரும் எழ்வகைத் தூக்கு. (அவை: செந்தூக்கு மதலைத்தூக்கு துணிவுத்தூக்கு கோயிற்றூக்கு நிவப்புத்தூக்கு கழாற்றூக்கு நெடுந்தூக்கு என்பன. இவை முறையே ஒன்றுமுதல் எழீறுன சீர்களால் அமைவன.
தூக்குதல்- ஆராய்தல்,நிறுத்தல், தொங்கநாற்றுதல்.
தூங்கல்- யானை, தராசு, நித்திரை, நிரம்பாத நித்திரை, தூங்கலோசை. கூத்து, சோம்புதல், தாழ்தல், நாலுதல், அசைதல், செறிதல்.
தூசரம்- மங்கலான வெள்ளைநிறம்.
தூசர்- வண்ணார்.
தூசி- முன்னணிச்சேனை, குதிரை, துகள், படையுறுப்பு.
தூசு-புடவை, யானைகட்டுங்கயிறு, தூசிப்படை, சித்திரைநாள்.
தூடணம் (தூஷணம்)- பிறரை நிந்தித்தல்.
தூணி- அம்புக்கூடு, நாலு மரக்கால் கொண்ட அளவு.
தூணீரம்- அம்புக்கூடு.
தூண்- தம்பம்.
தூண்டல்- செலுத்துதல்.
தூண்டாவிளக்கு- தூண்டாமலெரியும் விளக்கு.
தூண்டில்- ஓர்வகை இருப்புமுள், (மீன்பிடிப்பவர்களாற் கயிற்றிற் கட்டியிடப்படுவது.)
தூண்டுகோல்- விளக்கைத் தூண்டுங் கோல்.
தூதம்- அசைவு.
தூதன்- தன்னையேவும் அரசர்முதலாயினோருடைய கருத்தைப் பிறர்க்குணர்த்தி அவர்கருத்தை யறிந்துவந்துசொல்வோன்.
தூதிகை (தூதி)-பெண்களைப் புருடருடன் சேர்ப்பிப்பவள்.
தூது- ஒருவனுடைய கருத்தையறிந்துவந்து சொல்லுதல், பிரபந்தவகையுளொன்று, காதல்மிக்க தலைவனுவது தலைவியாவது பாணன் முதலியவர்களையேனும் கிளிமுதலியவற்றையேனும் தூதனுப்புவதாகப்பாடும் நூல் (நெஞ்சுவிடு தூது கிள்ளைவிடுதூது முதலியன இதற்கிலக்கியங்கள்.

தூதுணம் - புறா.
தூதுவன் - புதன், தூதன்.
தூதுளை - தூதுவளை.
தூபம் - புகை, நீர்க்கடம்பு.
தூபி - கோயில் முதலியவற்றின்முடி.
தூமகேது - வால்நட்சத்திரம்.
தூமம் - புகை.
தூமிரம் - புகை, புகைநிறம்.
தூமை - மகளிர்சூதகம்.
தூமோர்ணை - யமன்மனைவி.
தூம்பு-இடுக்குவழி,உட்டுளைப்பொருள், மதகு, பாதை, மூங்கில், வாயில், மரக்கால், நீர்ப்பத்தர், வேய்ங்குழல்.
தூம்புவாய் - சலதாரை.
தூய்மை (துய்மை) - சுத்தம்.
தூரதிருட்டி - தூரத்திலிருக்கும் பொருளைப்பார்த்தல், அதற்குரியகண்ணாடி.
தூரம் - சேய்மை.
தூரி - ஊஞ்சல்.
தூரியம் - உவகைப்பறை, முரசு, வாத்தியப்பொது, வஸ்திரம், சிறுதுகில், எழுதுகோல்.
தூர் - மரங்களின்வேர்.
தூர்க்கை - பூரநட்சத்திரம்.
தூர்ச்சடி - சிவன்.
தூர்தல் - நிறைதல்.
தூர்த்தல் - குழிமுதலியவற்றை நிறைத்தல்.
தூர்த்தன் - காமுகன், வஞ்சகன்.
தூர்வகம் - பொதியெருது.
தூர்வை - அறுகு, கிணற்றடைதூர்.
தூலம் - பருமை, பஞ்சு, பருத்தி, ஆகாயம்.
தூலிகை - சித்திரமெழுதுங்கருவி. (எழுதுகோல்).
தூவத்தி - வாள்.
தூவல் - நீர்முதலியவற்றின்துளி, மழை.
தூவானம் - அருவிப்புனல்வீழுமிடம்.
தூவி - அன்னச்சிறகு, மயிற்பீலி, பறவைகளினிறகு.
தூவுதல் - தெளித்தல், சிந்துதல், ஒழிதல். (திருக் குடிசெயல்வகை ௧), அழிதல்.
தூளி - புழுதி, பூஞ்சுண்ணம்.
தூள் - சூரணம், கறித்தூள், துகள்.
தூறல் - மழை.
தூறு - சிறுமரங்களின்செறிவு, (பற்றை), பழிச்சொல்.
தூறுதல் - மழைபெய்தல்.
தூற்றுதல்-பழிசொல்லல், சிதறல், நெல்முதலியவற்றைத் தூற்றுதல்.
தூனம்-வருத்தம், இளைப்பு, அசைவு.
தூஷணன் - இராவணனுடையதாயின் சகோதரிபுதல்வனான ஓரரக்கன்.

## தெ

தெகிழ்தல் - வாய்விடல். (சிந்தா).
தெகுளல் - நிறைதல்.
தெங்கு - தென்னைமரம்.
தெட்பம் - தெளிவு.
தெண்டிரை - கடல்.
தெப்பம் - புணை. (கட்டுமரம்).
தெய்ய - இசைநிறையில்வருமிடைச்சொல்.
தெய்வதம் - தெய்வம்.
தெய்வதீர்த்தம் - விரல்நுனியாலிறைக்குந்தீர்த்தம்.
தெய்வநதி - கங்கை.
தெய்வமந்திரி - வியாழன்.
தெய்வம் (தைவம்) - ஊழ், எண்வகை மணங்களுளொன்று. (வேள்வியாற்றோன்றிய கன்னிகையைத் தீமுன் கொடுத்தல்).
தெய்வயானை (தேவயானை) - முருகக்கடவுளின்தேவி, சுக்கிரனுடையமகள், ஐராவதயானை.
தெய்வவிரதன் - வீட்டுமன்.
தெய்விகம் - தெய்வத்தன்மை.
தெரிகோல் - துலாக்கோல்.
தெரிதல் - அறிதல், ஆராய்தல், ஆலோசித்தல், காணுதல்.
தெரித்தல் - அறிவித்தல், எழுதுதல், சொல்லுதல்.
தெரிநிலை - தெரியநிற்பது.
தெரியல் - மாலை, ஆராய்தல்.
தெரிவை - ௨௫ வயதின்மேல் ௩௧ வயதுக்குட்பட்ட பிராயமுடைய பெண், பெண்.
தெரு - வீதி, வழி.
தெருட்சி - பெண்கள் இருதுவாதல், பொருளை உள்ளபடி அறிதல்.
தெருட்டுதல்- வற்புறுத்தல், தெளிவித்தல்.
தெருமரல் - சுழலுதல், நம்பிக்கையற்றிருத்தல், கலைதல்.
தெருளல் - இருதுவாதல், தெளிதல்.
தெருள் - தெளிந்தஅறிவு.
தெலுங்கம் - ஆந்திரதேசம், ஆந்திரபாஷை.

தெல்லு-பாத்தி, தடை, வழிப்போக்கில் வாகனங்களை மாற்றுதற்கும் சுமைகளை மாற்றுதற்கும் நியமித்த இடம்.
தெவிட்டல் - அடைத்தல், உமிழ்தல், அசையிடல், நிறைதல், ஒலித்தல், *தங்குதல்.
தெவுதல்-கொள்ளுதல், (நீர்தெவுநிரைத்தொழுவர்.
தெவ்வர்- பகைவர்.
தெவ்வர்முனைப்பதி- பாடிவீடு.
தெவ்வு- பகை, போர்.
தெழித்தல்-உரத்துச் சத்தமிடல், ஒன்றல்லாப்பேரொலி, கோபித்தல். (சிந்).
தெளிதல்- ஆராய்ந்தறிதல், நீர்முதலியவற்றிலுள்ள கலங்கல் நீங்குதல்.
தெளித்தல்- தூவுதல், புரோட்சித்தல், தெளியச்செய்தல்.
தெளிர்-உள்ளோசை.
தெளிவு-தெளித்தெடுக்குஞ் கஞ்சி, உள்ளபடியறிதல்,நிச்சயம், நனவு, அணிநூலிற்சொல்லப்பட்ட குணவலங்காரம் பத்தனுள் பொருள்புலப்படநிற்றல்.
தெளிவெண்ணெய் - நறுவேப்பெண்ணெய்.
தெளிதல்- எடுத்தலோசையாகச் சத்தமிடல்
தெள் (தெள்கு) - தெள்ளு.
தெள்விளி-மகிழ்ச்சியாலார்த்தல்,தெளிந்த சொற்கள்(குறிஞ்சி கூ௦), தெளிந்தவோசை, (குறிஞ்சி உ௨௨), இசைப்பாட்டு, (சிந்தா).
தெள்ளல்-கொழித்தல்,தெரிந்தெடுத்தல்.
தெள்ளியர்- அறிவுடையோர்.
தெள்ளேணம் - மகளிர் விளையாட்டுக்களிலொன்று.
தெறி- அங்கிமுதலியவற்றின் கடைப்பூட்டு.
தெறித்தல்- துள்ளிச் சிதறுதல், காய்முதலியன முற்றுதல்.
தெறுக்கால்- தேள், விருச்சிகராசி.
தெறுதல்- சுடுதல், அழித்தல்.
தெறுத்தல்-அழித்தல், நெரித்தல், மிகுத்தல், கோபித்தல், சுடுதல்.
தெறுநர்- கொலையாளர், பகைவர்.
தெறுள்- காட்டிலுள்ள ஓர்கொடி.
தெற்கு- தெற்குத்திக்கு.
தெற்றல்- இழைத்தல், பின்னல், பிணங்கல், (சிந்த), இறுக்கல், உடுத்தல், தடைப்படல். மாறுபடல்.
தெற்றி- திண்ணை, மாடம்.
தெற்றியம்பலம் - சித்திரகூடம்.(பிங்கலவுரைகாரர் தெற்றி அம்பலம் என இரண்டாகப் பிரிப்பர்).
தெற்று-அடைப்பு, இழைப்பு, பின்னல்.
தெற்றென - தெளிவாக, விரைவாக.
தெனாது - தெற்கிலுள்ளது.
தென்- அழகு, இசை, தெற்கு, தென்னைமரம், கற்பு, ஓர்பாடல்.
தென்கால் - தென்றற்காற்று.
தென்கிழக்கு- அக்கினிதிக்கு.
தென்பாண்டி - கொடுந்தமிழ்நாடுகளிலொன்று.
தென்புலத்தார் - பிதிரர்.
தென்புலம் - யமலோகம்.
தென்மலை - பொதியமலை.
தென்மேற்கு - நிருதித்திசை.
தென்றல்வருமலை - பொதியமலை.
தென்றற்றேரினன் - மன்மதன்.
தென்றி - தென்றற்காற்று.
தென்றிசைக்கோன் - யமன்.
தென்னவன் - பாண்டியன்.
தென்னை - தென்னைமரம்.

## தே

தே - தெய்வம், *கொளற்பாடு.
தேகம் - உடல், சோதிடத்தில் உதயலக்கினம்.
தேகம் ௩ - தூலதேகம் சூக்குமதேகம் காரணதேகம் என்பன.
தேகளி - வாயிலின் கீழ்ப்படி.
தேகான்மவாதி - உலோகாயதமதத்தவன்.
தேகி - சீவான்மா.
தேக்கம் - நிறைவு.
தேக்கல் - நிறைதல், நிறைத்தல்.
தேக்கு - தேக்கமரம், நிறைவு, தெவிட்டு.
தேக்குதல் - நிறைதல், தெவிட்டல்.
தேக்கெறிதல்-ஏப்பமிடல், நிறைந்துவழிதல்.
தேங்கல்-நிறைதல். குலைதல்.
தேங்காய் - தெங்கங்காய்.
தேசம் - நாடு, இடம்.
தேசம் ௫௬ - அங்கம் வங்கம் கலிங்கம் காசுமீரம் காம்போசம் காமரூபம் சவ்வீரம் சௌராஷ்டிரம் மகாராஷ்டிரம் வங்காளம் நேபாளம் மலையாளம் கோளம் சிங்களம் சோழம் பாஞ்சாலம் கோசலம் குந்தளம் சுவாலை சாலுவம் மகதம் மாகதம் மாளவம் மற்சம் வற்சம் மத்திரம் மைந்தம் சிந்து சைந்தவம் ஆந்திரம் காந்தாரம் லாடம்

வராடம் கன்னடம் திரமிடம் திராவிடம் பாண்டியம் புளிந்தம் பாரசீகம் பாகிலீகம் பர்ப்பரம் விதர்ப்பம் கேகயம் குரு கிராதம் தசார்ணம் ஊணம் டங்கணம் கொங்கணம் யவனம் சூரசேனம் கூர்ச்சரம் விதேகம் சேதி போசம் அவந்தி என்பன. (சிலஅகராதிகளில் இப்பெயர்கள் வேறுபாடாகக் காணப்படுகின்றன).

தேசாந்திரம்-பிறதேசம், சோதிடத்தில் சுயதேசத்தினின்று இஷ்டதேசத்துக்குள்ள தூரம், தூரத்துக்கியையக் கூட்ட அல்லது சழிக்கப்படவேண்டிய நாடி முதலியன.

[தேசி - எலுமிச்சை].

தேசிகம் - திசைச்சொல், ஓர்கூத்து, அழகு, ஒளி, பொன்.

தேசிகன் - குரு, தேசாந்தரி, செட்டி.

தேசு - ஒளி, மகத்துவம், முகம்முதலியவற்றின் காந்தி, பரப்பிரமம்.

தேடுதல் - சம்பாதித்தல், ஆராய்தல்.

தேட்கடை - மூலநாள், நட்சத்திரம்.

தேட்டம் - சம்பாத்தியம்.

[தேதி - திகதி].

தேமல் - சுணங்கு.

தேமா - இனியபழங்களைக்காய்க்கும் மா, நேரசையிரண்டுவந்த சீரின்வாய்பாடு.

தேமாங்கனி - நேர் நேர் நிரையின் வாய்பாடு.

தேமாங்காய்-நேர் நேர் நேரின்வாய்பாடு.

தேமாநறுநிழல் - நேர் நேர் நிரை நிரையின் வாய்பாடு.

தேமாநறும்பூ - நேர் நேர் நிரைநேரின் வாய்பாடு.

தேமாந்தண்பூ - நேர் நேர் நேர் நேரின் வாய்பாடு.

தேம் - தேசம், திசை, இடம், தித்திப்பு, தேன், வாசனை, கள், இனிமை, நெய், (குறிஞ்சுகக),ஏழாம்வேற்றுமையுருபு.

தேம்பல் - அழுகை, பழம்பூ, மெலிதல். இளைத்தல், வாடல், கெடுதல்.

தேம்பாவணி - ஓர் காப்பியம்.

தேயம் - நாடு, இடம், சரீரம், களவு, கொடைப்பொருள்.

தேயு - அக்கினி.

தேய்கடை - மிகத்தேய்ந்தது. [ல்.

தேய்தல் - உரைதல், குறைதல், மெலிதல்.

தேய்த்தல் - அழித்தல், உரைத்தல், குறைத்தல், கொல்லல், துலக்கல்.

தேய்வை - சந்தனக்குழம்பு.

தேரர் - புத்தர்.

தேரலர் - பகைவர்.

தேரை - தவளையினோர்பேதம். [ல்.

தேரைபாய்தல் - நோயினால்உடல்தேய்த

தேரையர் - ஓர் வைத்தியசாஸ்திரபண்டிதர். (இவரால் தமிழிற்பலவைத்திய நூல்கள் செய்யப்பட்டன).

தேர் - ரதம், ரோகிணிநாள்.

தேர்ச்சி - ஆராய்வு, ஆலோசனை.

தேர்ச்சித்துணைவர் - மந்திரிமார்.

தேர்தல் - அறிதல். ஆராய்தல், தெளிதல் நிச்சயித்தல்.

தேர்ப்பாகன் - புதன். [ம்.

தேர்முட்டி - தேரிலேறுதற்குரியகட்டிட

தேர்வகை ச - அதிரதம் மகாரதம் சமரதம் அர்த்தரதம் என்பன. (அதிரதம் முழுத்தேர். ஏனையவை முறையே முந்தியதினின்று சிறியன. வீரத்தால் மிக்கவர்களுக்கு அதிரதமும் குறைந்தார்க்கு அவரவர்தாரதம்மியப்படிமற்றைத்தேர்களும் உரியனவாம்).

தேவகன் - தேவகியின்பிதா.

தேவகி - வசுதேவருடையமனைவி. (கிருஷ்ணமூர்த்தியைப்பெற்ற தாய்).

கஞ்சன் தேவகியின் புதல்வனால் தனக்கிறுதியெய்துமென்பதையறிந்து பிறந்தவுடன் வாளால் வெட்டமுயன்றிருத்தலால் வசுதேவர் கிருஷ்ணமூர்த்தியைப் பிறந்தவுடன் கொண்டுசென்று யசோதையின் பிரசவமனையிற்சேர்த்துவிட்டு அவளறியாமலே அவள்பெற்ற பெண்குழந்தையைத் தேவகிபாற்சேர்த்தனர். அந்தப் பெண்குழந்தை திருமாலினுடைய மாயத்தாற்பிறந்ததாதலின், கஞ்சன் வெட்டமுயலும்போது, உன்னைக் கொல்லப்பிறந்தவனுயிரோடிருக்கின்றான் என்றுசொல்லி மறைந்துபோயிற்று. கிருஷ்ணமூர்த்தி யசோதையால் வளர்க்கப்பெற்றார்.

தேவகிரி - ஒருமலை.

தேவகுரு - வியாழன்.

தேவசேனாதிபதி-குமாரக்கடவுள்.

தேவசேனை - தெய்வயானை,தேவர்களாகியசேனை.

தேவடியாள் - தேவதாசி.
தேவதத்தம் - அருச்சுனனுடைய சங்கு.
தேவதத்தன் - கொட்டாவியையுண்டாக்கும்வாயு.
தேவதருக்கள் - சந்தானம் அரிசந்தனம் மந்தாரம் பாரிசாதம் கற்பகம் என்பன.
தேவதாசன் - அரிச்சந்திரன் மகன்.
தேவதாரு - தேவதாருஎன்னும் மரம், செம்புளிச்சைமரம்.
தேவதேவன் - கடவுள், சிவன்.
தேவதை - தெய்வம், துட்டதேவதை.
தேவநந்தி - இந்திரன்வாயில்காப்போன்.
தேவநாகரம் - சம்ஸ்கிருதபாஷைக்குரிய எழுத்துவகைகளுளொன்று.
தேவபாஷை - சம்ஸ்கிருதபாஷை.
தேவபாணி - இசைப்பாவின்பகுதியுளொன்று.
தேவயானம் - விமானம்.
தேவரன் - நாயகனுடையசகோதரன்.
தேவராசன் - இந்திரன்.
தேவராதன் - மிதிலையிலிருந்த ஓரரசன், வேறும்இப்பெயருள்ளாருளர்.
தேவராளன் - சன்னதகாரன். (பெண்பாலில் தேவராட்டி. தேவரைத் தம்மேலாவேசப்படுத்திச் சோதிடஞ்சொல்லுதலின் இப்பெயர்பெற்றனர்).
தேவருணவு - அமிர்தம்.
தேவர் - தேவர்கள்.
தேவர் முப்பத்துமூவர் - ஆதித்தர் பன்னிருவரும் அச்சுவினிதேவர்கள் இருவரும் உருத்திரர்பதினொருவரும் வசுக்கள் எண்மரும் ஆகியதொகையினர்.
தேவலன் - ஓர்முனிவர், (வியாதமுனிவரின் சீடர்).
தேவவைத்தியம் - சிந்தூரவைத்தியம்.
தேவனம் - துவையல்.
தேவாங்கம் - பணித்தூசு, (பலவகைச்சித்திரங்களமையப்பெற்றவஸ்திரம்.)
தேவாங்கு - ஒருவிலங்கு.
தேவாரம் - அப்பர் சுந்தரர் சம்பந்தர் என்னும் மூன்றடியார்களாலும் பாடப்பட்ட தோத்திரத்திருமுறை.
தேவாலயம் - தேவர்கோயில், சுவர்க்கம்.
தேவி - மனைவி, தலைவி, பிராமணப்பெண்களின் பட்டப்பெயர்.
தேள் - ஒருவிஷப்பிராணி, விருச்சிகராசி, அனுடநட்சத்திரம்.
தேறலர் - பகைவர், அறியாதார்.
தேறல் - கள், தேன், துணிதல், நிச்சயித்தல், துன்பந்தீர்த்தல்.
தேறு - (இஞ்சிமுதலியவற்றின் கிழங்கு), நிச்சயம்.
தேற்றம் - மனத்தெளிவு, தொழில்களைச் செய்யும்போது மெய்வருத்தமுதலியவற்றாற்கலங்காமை, (திருக் தெரிந்துவினையாடல் ௬), நம்பிக்கை. (திருக் படைமாட்சி ௬).
தேற்றரவு - தேற்றம்.
தேற்றா - தேற்றாமரம்.
தேற்றார் - பகைவர்.
தேனர் - திருடர்.
தேனீ - தேன்வண்டு.
தேனு - தெய்வப்பசு, பசு, பாற்பசு, கன்று.
தேனுகன் - கிருஷ்ணமூர்த்தியாற் கொல்லப்பட்ட ஒரு அசுரன்.
தேன் - பூந்தேன், கள், தேன்வண்டு, பெண்வண்டு, வாசனை.
தேன்கூடு - வண்டுகளால் தேன்சேருக்துவைக்கப்படுங்கூடு.
தேன்றேடை - ஒருமரம்.

## தை

தை - தைமாதம், பூசநட்சத்திரம், தாளக்குறிப்புக்களுளொன்று, தைத்தல்.
தைசிகை - குருபத்தினி.
தைதிலம் - கழுதை, பதினொருகரணங்களுளொன்று.
தைதேயர் - அசுரர்.
தைத்தல் - வஸ்திரமுதலிவற்றைத்தைத்தல், அலங்கரித்தல், செய்தல், (வேலன்றைஇயவெறியயர்களத்தினும்: திருமுரு).
தைத்தியகுரு - சுக்கிரன்.
தைத்தியர் - அசுரர்.
தைத்தியாரி - திருமால்.
தைத்திரீயம் - யசுர் வேதத்தின்சாகைகளுளொன்று, (கிருஷ்ணயஜுஸ்), தைத்திரீயஉபநிடதம்.
தைப்பு - தையல்வேலை.
தையல் - தையல்வேலை, பெண்; அழகு.
தைரியம் - திடம்.
தைலம் - எண்ணெய், பலவகையானவித்துக்களிலிருந்தெடுக்கப்படும் ஒருவகைச்சாரம்.
தைவரல் - தடவல்.
தைவிகம் - தெய்வத்தாற்சம்பவிப்பது.
தைனந்தினம் - நாடோறும்நிகழ்வது.

தைனியம் - ஏழைமை, வறுமை.
தைஷம் - புஷ்யமாதம்.

## தொ

தொகல் (தொகுதல்)- சுருங்கல், ஓரிடத்திற்கூடுதல்.
தொகாநிலைத்தொடர் - வேற்றுமையுருபு முதலியனவிரிந்துநிற்குந்தொடர்.
தொகுதி - கூட்டம், சபை, குவியல்.
தொகுத்தல்(தொகுதலின்பிறவினை)-ஒன்றாய்ச்சேர்த்தல், சுருக்குதல், தொக்குநிற்கச்செய்தல்.
தொகை- கூட்டம்,சுருக்கம், இலக்கணத்தில் உருபுமுதலியன மறைந்துநிற்றல், நூல்யாப்புவிகற்பங்களுளொன்று.
தொகைநிலைச்செய்யுள் - ஓரினச்செய்யுளாற்றொகுத்துப் பாடப்படும் பிரபந்தம். (நெடிலடியாற்றொகுத்தது நெடுந்தொகை; குறலடியாற்றொகுத்தது குறுந்தொகை; கலிப்பாவாற்றொகுத்தது கலித்தொகை; பிறவுமிவ்வாறே).
தொகைநிலைத்தொடர் - வேற்றுமையுருபு முதலியன தொக்குநிற்குந்தொடர்.
தொக்கடி - குடலை, சிறுகூடை. [ரீரம்.
தொக்கு- தோல், மரங்களின்பட்டை, ச
தொங்கல்- ஆபரணங்களில்முத்துமுதலியவற்றாற்செய்யப்பட்டதூக்கம், ஆபரணக்கடைப்பூட்டு, ஆண்மயிர், மயிற்பீலி, பீலிக்குஞ்சம், பீலிக்குஞ்சக்குடை, குடை, மாலை, (பெரியமாலையெனச்சிந்), தூங்குதல், குதித்தல், தொங்கமுடிந்தமயிர்முடி முதலியன.
தொடக்கம் - ஆரம்பம்.
தொடங்கல் - ஆரம்பித்தல், முயலுதல்.
தொடராமுறி - தொடர்பை நீக்குதற்காக எழுதுஞ் சாதனம்.
தொடர் - கோவை, சங்கிலி, தொடர்பு.
தொடர்ச்சி - தொடர்பு, பூங்கொத்து.
தொடர்தல் - பின்றொடர்தல், தேடுதல்.
தொடர்நிலைச்செய்யுள் - காப்பியம்.
தொடர்ந்தார் - சிநேகிதர். [ட்டு.
தொடர்பு - உறவு, சிநேகம், முறை, பா
தொடலை - மாலை, மகளிர் விளையாட்டுக்களுளொன்று.
தொடல் (தொடுதல்) - கைமுதலியவற்றாற்பரிசித்தல், *புசித்தல்.
தொடி - ஒருபலம், கைவளை (வளையலுக்கு முன்னும் பின்னுமணியப்படுவதெனச்சிந்விசேடக்குறிப்), வீரரணியுங்கங்கணம் (மதுரைக் எஉ௦).
தொடு-மருதநிலம், தோட்டம், வஞ்சகம்.
தொடுக்கம் - பொன்.
தொடுதோல் - செருப்பு.
தொடுத்தல் - கட்டல், பொருத்துதல், தொடங்குதல், வளைத்தல்.
தொடுப்பு - கட்டு, சங்கிலி, சேர்க்கை, கலப்பை, வெறும்புறங்கூறல்.
தொடுவாய்- இரண்டுநீர்நிலைகளையிணைக்
தொடுவான் - அடிவானம். [குஞ்சந்தி.
தொடை- அம்பு, அம்பையெய்தல், வில்நாண், மாலை, காற்றொடை, யாழ்நரம்பு, கட்டு. [தொடர்ச்சி.
தொடையல் - தொடுத்தமாலை, மாலை,
[தொட்டம் - துண்டுத்தரை].
தொட்டல் - தோண்டுதல்.
தொட்டா - துவட்டா.
தொட்டி - நீர்முதலியவற்றைநிறைத்தற்குரியதொட்டி.
தொட்டிமை - ஒற்றுமை.
தொட்டியம் - ஒருதேசம்.
தொட்டியர் - ஒருசாதியார். [ட்டில்.
தொட்டில்- குழந்தைகள்சயனிக்குந்தொ
தொண்டகம்- குறிஞ்சிப்பறை, (ஆகோட்பறையெனச்சிந்).
தொண்டரடிப்பொடியாழ்வார் - விஷ்ணுவின் அடியார்களுளொருவர்.
தொண்டலம் - யானைத்துதிக்கை.
தொண்டன் - அடியவன்.
தொண்டி - ஒருநகரம்.
தொண்டு - வழிபாடு, அடிமை, பழமை.
தொண்டை-கொவ்வைக்கொடி, ஆதொண்டைச்செடி, யானைத்துதிக்கை, மிடறு.
தொண்டைநாடு-தொண்டைமண்டலம், (தொண்டைமானென்பவனுலாளப்பட்டமையின்இப்பெயர்பெற்றது; காஞ்சிபுரத்தைஇராசதானியாகவுடையது)
தொண்ணூறு - ஒன்பதாலுறழ்ந்தபத்து.
தொத்து - அடிமை, பூங்கொத்து.
தொந்தம் - இரட்டை, தொடர்பு, சேர்க்கை, போர், பகைமை, நெடுங்காலமாகநிகழும்பகை, (சாதிப்பகை), பழையதொடர்பு.
தொந்தயுத்தம் - இருதிறப்படைகள் கை

கலந்துசெய்யும்போர்.
தொந்தரவு - உபத்திரவம்.
தொந்தி - வயிறு, பெருவயிறு.
தொந்தித்தல்- மாறுபடுதல், சிக்குப்படுதல்.
தொந்திலன் - பெருவயிறுடையோன்.
தொப்பி - தலையிலணியுந்தொப்பி, நெல்லிலிருந்துண்டாக்கிய கள்.
தொய்தல் - இளகுதல், இளைத்தல், தளர்தல்.
தொய்யகம் - தலைப்பாகையினுறுப்பாகிய தலைப்பாளை.
தொய்யல்-சேறு, உழவு, துன்பம், களிப்பு, இன்பம்.
தொய்யில் - கீரைவகையுளொன்று, மகளிர் சந்தனக்குழம்பு முதலியவற்றால் மேனியிலெழுதுங்கோலம்,எழுதுதற் கேற்ற குழம்புமுதலியன.
தொய்வு - இளைப்பு, ஈளை.
தொய் - குற்றம்.
தொலி - உமி, தோல்.
தொலித்தல்-அரிசி முதலியவற்றிலுள்ள உமியைப்போக்குதல்.
தொலைதல் - கெடுதல், சாதல்.
தொலைத்தல் - அழித்தல்.
தொலைவு - அழிவு.
தொல்காப்பியம்-தொல்காப்பியராற்செய்யப்பட்ட ஒருஇலக்கணநூல்.
தொல்காப்பியர் - இடைச்சங்கப்புலவருளொருவர். (இவருக்குத் திரணதூமாக்கினியெனவும் பெயருண்டு.)
தொல்லை - பழமை, [தொந்தரவு]
தொழல் (தொழுதல்) - இருகைகளையுங் குவித்துக்கும்பிடுதல், வணங்குதல்.
தொழில் - சீவியத்துக்காதாரமானமுயற்சி, பலவகையானகைத்தொழில், வினைச்சொல்.
தொழில் ௩ - படைத்தல் காத்தல் அழித்தல் என்பன. (இவை பிரமாமுதலிய மூன்றுதேவர்களாலும் முறையே செய்யப்படுவன).
தொழில் ௪ - உழவு தொழில் வரவு வாணிக்கம் வித்தை சிற்பம் என்பன.
தொழிற்படுதல் - காரியப்படுதல்.
தொழிற்பெயர் - வினைப்பகுதிகளினின்றுபிறந்தபெயர். (இப்பெயர்களுக்கு தல் அல் அம் ஐ கை வை கு பு உ தி சி வி உள் காடு பாடு அரவு ஆனை மை து முதலியன விகுதிகளாம்).

தொழு-இரேவதிநட்சத்திரம், பசுத்தொழுவம், பசுக்கூட்டம், தொழுமரம்.
தொழுகுலத்தோர் - அந்தணர்.
தொழுதி - கூட்டம், திரட்சி, பறவைக் கூட்டம்.
தொழுத்தை - குட்டினி.
தொழுநோய் - வெப்புநோய், குட்டநோய்.
தொழுமரம்-உழலைமரம், துலங்குமரம்.
தொழும்பு - அடிமையாள், அடிமைவேலை.
தொழுவம் - பசுக்கொட்டில்.
தொழுவர் - தொழில்செய்வோர், மருதநிலமாக்கள், அடிமைவேலைக்காரர்.
தொழுனை - யமுனை, யாறு.
தொளாயிரம் - ஒன்பதுநூறு.
தொளி - சோறு, சேறு.
தொள்கல் - துளைத்தல்.
தொள்ளல் - துளைத்தல், நெகிழ்வானது.
தொள்ளை - மரக்கலம்.
தொறு - பசுக்கூட்டம், பசுத்தொழுவம், இடைச்சாதி, அடிமை, கூட்டம்.
தொறும் (தோறும்) - பன்மையுணர்த்தும் ஓரிடைச்சொல். (மன்றுதொறுநின்றான் என்பதில் இடப்பன்மையையும், படிக்குந்தோறும் அறிவுவளரும் என்பதில் தொழிற்பன்மையையு முணர்த்திற்று).
தொறுவர் - இடையர், (பெண்பாலில் தொவியர், தொறுத்தியர்).
தொறுவிடம் - தொழுவம்.
தொற்று - பொருத்து, தொடர்பு.
தொற்றுதல்-பற்றுதல், தொடர்தல், ஏறுதல்.
தொனித்தல் - சத்தமிடல்.
தொன்மரம் - ஆலமரம்.
தொன்மை (தொன்று) - பழமை.
தொன்னை - இலைப்பாத்திரம்.

## தோ

தோகதம் - கருப்பமாயிருக்கும் பெண்களுக்குப் பலபொருள்களினுமுண்டாகும் விருப்பம்.
தோகம் - அற்பம், சந்ததி.
தோகை - மயில், மயிற்றோகை, துகிற்கொடி, பெண், முன்றானை, விலங்கின்வால், பனங்கிழங்கின்வால்.
தோசை - அப்பவர்க்கத்தொன்று.
தோடம் (தோஷம்) - குற்றம், வைத்தியத்தில் வாதம் பித்தம் கபம் என்பவற்றாலுண்டாகுந்தோஷம் நியாயசாத்

திரத்தில் விருப்பு முதலியவற்ருல்வி ளையுங்குற்றம்.
தோடா (திசைச்சொல், - வீரமுதலிய வற்ருற்சிறந்தோரணியுங் கையணி. பணையோலை. (சிந்தா),
தோடி . ஓரிராகம்.
தோடு - காதணி, பூவிதழ், கூட்டம்,
தோட்கோப்பு - பொதிசோறு,
தோட்சுமை - கா.
தோட்டம் - சோலை,
[தோட்டா - வெடிமருந்துச்சுருள்],
தோட்டி - அங்குசம், கதவு, அழகு, வா யில்.
தோணுமுகம்- சூழ்கழியிருக்கை, [
தோணி - அம்பு. ரேவதிநட்சத்திரம், சேறு, மரக்கலம், தெப்பம், மதிலு றுப்பு.
தோண்டல்- அகழ்தல், குடைதல், முக த்தல்.
தோண்டி- ஓர்வகைப்பானை.
தோண்மேல் - பிடர்
தோதகம் - வஞ்சகம்.
தோதனம் - உபத்திரவம்.
தோத்திரம் - துதி.
தோத்திரித்தல் - துதித்தல்,
தோப்பிக்கரணம் - இருகைகளையுமாற றிச்செவியைப்பிடித்துக் குந்தியெழு ம்புதல். (இது விநாயகக்கடவுளுக்கு வணக்கமுமாம்).
தோமரம் - இருப்புலக்கை, கைவேல்.
தோம் - குற்றம்.
தோயம் - நீர், கடல்.
தோய்தல்- ஆயுதங்களைக்காச்சிநனைத் தல், புணர்தல், முழுகுதல், பொருந் தல்.
தோய்த்தல் - நனைத்தல்.
தோரணம்-வாயில்களில்தூங்கக்கட்டுந் தோரணம்,அலங்காரத்தின்பொருட் டுப் பந்தர்களிற் புடவை மாந்தளிர் முதலியவற்ருற் செய்யப்படுந்தூக் கம், *குரங்கு.
தோரியமடக்கை-ஆடலின்முதிர்ந்தாள். (சிலப்).
தோரை - குளநெல், வெண்மைகலந்த சிவப்பானபழங்களைப் பழுக்கும் பனை, மூங்கிலரிசி, கையிறை. சரி மணி.
தோலடிப்பறவை - தாராமுதலிய தோ ற் காற்பட்சிகள்.
தோலனம் - சிறுத்தல்.
தோல் - தோல், பரிசை, யானை, சொல், திருத்தி, செய்யுள்வனப்புளொன் [று.
தோல்வி - அபசயம்.
தோல்வினைமாக்கள் - செம்மார்.
தோழமை - நட்பு.
தோழன் - நண்பன்.
தோழி - செவிலியின்மகளாய்த் தலைம களுக்குத்துணையாயொழுகுபவள்.
தோளணி - வாகுவலயம்.
தோள் - கை, புயம்.
தோறும் - தொறும்.
தோற்கட்டு - வில்வீரர் முதலாயினோர் படைகளாற்றழும்புருவண்ணங் கை யிற் கட்டுந்தோல்.
தோற்கருவி - தோலாலமைந்த வாத்தி யங்கள்.
தோற்கருவி கக - பேரிகை படகம் டக் கை உடுக்கை மத்தளம் சல்லிகை கரடிகை திமிலை குடமுழா தக்கை கணப்பறை தமருகம் தண்ணுமை தடாரி அந்தரி முழவு சந்திரவளயம் மொந்தை முரசு கண்டுவிடுதூம்பு நிசாளம் துடுமை சிறுபறை அடக் கம் தகுணிச்சம் விரலேறு பாகம் உபாங்கம் நாழிகைப்பறை துடி பெரும்பறை என்பன.
தோற்பரம் - பரிசை.
தோற்பாய் - மான்ருேல் புலித்தோல் முதலியவிரிப்பு.
தோற்றம் - உதயம், பிறப்பு, காட்சி, துலக்கம், வலி, புகழ்மொழி.
தோற்றம் உ - சரம் அசரம் என்பன.
தோற்றரவு - தோற்றம்.
தோற்றல் - உதித்தல், காணப்படுதல், புகழ்பெறுதல், வெளிப்படல்.
தோற்றுவாய் - தொடக்கம்.
தோற்றுன்னர் - தோலினுற் செருப்பு முதலியவற்றைத் தைப்பவர்கள்.
தோன்றல் - மகன், முல்லைநிலத்தலை வன், அரசன், தமையன், தலைவன், உயர்ச்சி, இலக்கணத்தில் எழுத்து முதலியன தோற்றுதலாகிய விகா ரம்.
தோன்றி - செங்காந்தள், *வெண்காந் தள்.

## தௌ

தௌகித்திரன் - மகளுடையமகன்.
தௌதம் - வெள்ளைநிறம், வெள்ளி யென்னும் உலோகம்.
தௌர்ப்பல்லியம் - பலவீனம்.

தௌவை - முன்பிறந்தாள், மூதேவி.
தௌவாரிகன் - துவாரபாலகன்.

## ந

ந - (வடமொழியிடைச்சொல்) தன்னுடன் சேர்ந்த சொல்லின் பொருளை நீக்குவதாய் இன்மை விலக்கு சிறுமை ஒப்புமை எதிர்மறை வேற்றுமை முதலிய பொருள்களைக் குறிக்கும். (இது சொற்களுடன் கூடும்போது விகாரப்பட்டு அன் எனவும் அ எனவும் நிற்கும். இன்மையில் அபாவம், விலக்கில் அகாலம், சிறுமையில் அநுதரி, ஒப்புமையில்அப்பிராமணன், (பிராமணன் போன்றிருப்பவனென்பது பொருள்), எதிர்மறையில், அசுரன், வேற்றுமையில் அகடம்(படம்). நகரவொற்றுக்கெட்டுப் புணர்வனவற்றை நஞ் என்றும் கெடாதுபுணர்வனவற்றை ந என்றும் வடநூலார்கூறுவர்).
நகக்குறி - புணர்ச்சிக்காலத்தில் நகத்தினுற் செய்யுந்தழும்பு.
நகச்சுற்று- நகக்கண்களில் வருங்கட்டு.
நகம் - உகிர், மலை, மரம், பூமி.
நகரம் - நகர், பலசாதியாரும் அறிஞர்களும் ஆலயம் இராசதானி முதலியவைகளுமமைந்தவூர், வீடு, கோயில், மண்டபம் (சிந்தா).
நகர்தல்- ஊருதல்-
நகர்படுதிரவியம் ௫ - அரசன் கண்ணுடி பித்தன் மந்தி யானை என்பன.
நகிலம் (நகில்) - முலை.
நகுடன்- சந்திரகுலத்தரசருளொருவன். (நூறு அசுவமேதங்கள் செய்தவன், இந்திரபதத்திற்கு அழைக்கப்பட்டுப் போம்போது அகத்திய முனிவராற் சபிக்கப்பட்டுச் சிலகாலம் பாம்பாகக் கிடந்தான்.
நகுதல்-சிரித்தல்,பரிகாசம்செய்தல், ஒளிசெய்தல்,சுடுதல்,(புற),கெடுத்தல்(சிந்)
நகுலம்- கீரி.
நகுலன்- பாண்டவர்களுளொருவன்.
நகை- பல், மகிழ்ச்சி, இன்பம், சிரிப்பு, ஆபரணம், பரிகாசவசனம்,ஒளி, *பூவரும்பு,முத்து,முத்துவடம் (சிந்தா).
நகைத்தல்-சிரித்தல்.
நக்கன் - அருகன், சிவன், நிர்வாணி.
நக்கிரம்- முதலை.
நக்கினம் - நிர்வாணம்.
நக்கீரன் - ஓர் புலவர்.
நக்குதல் -நாக்கினுல் நக்குதல்.
[நங்கூரம்(நங்கூரம்)- மரக்கலத்தை நிற்பித்தற்காகக்கடலிலிடப்படுங்கருவி.
நங்கை- பெண்களுட் சிறந்தவள்.
[நசல் - வியாதி].
நசிதல் (நசுங்குதல்) - நெரிதல்.
நசியம் - மூக்கினுலிழுத்தற்குரிய சூரணமுதலியவைகள்.
நசை- அன்பு, ஆசை, ஈரம், குற்றம்.
நசைதல்- விரும்புதல்.
நச்சினுர்க்கினியர்- ஒருரையாசிரியர் (இவர் தொல்காப்பியம் சிந்தாமணி பத்துப்பாட்டு கலித்தொகை முதலிய நூல்களுக்கு உரைசெய்தவர்).
நச்சு- ஆசை.
நச்சுதல்- விரும்புதல்.
நஞ்சு- விஷம்.
நடத்தல்-காலால் நடத்தல்.
நடமாடுதல்- வழங்குதல்.
நடம்- கூத்து.
நடராசன்- சிவன்.
நடர்- கூத்தர்.
நடலை- அசைவு, பொய்,வஞ்சனை, துன்பம்.
நடவல்- செலுத்துதல்.
நடவை- வழி, கடப்பு.
நடனம்- கூத்து.
நடன்- கூத்தாடுவோன்.
நடி- நாடகக்கணிகை.
நடித்தல்- கூத்தாடுதல்,அசைதல்.
நடு- அரை, மத்தியம், நிலவுலகம்.
நடுக்கம் - அச்சம்,சரீரம்பதறுதல்.
நடுங்குதல்- பதறுதல், அதிர்தல், பயப்படல்.
நடுதல்-பயிர்முதலியவற்றை நடுதல்.
நடுநாள்- சித்திரை.
நடுநிலை- மத்தியஸ்தம்.
நடுப்பகல்-மத்தியானம்.
நடுவன் - யமன், மத்தியஸ்தன்.
நடேசன்- சிவன்.
நடை- ஒழுக்கம், நடத்தை,வழி,வாயிற்கடவை, செல்வம், கூத்து.
நடைப்பரிகாரம்-பலபண்டம்.
நட்சத்திரகன்- விசுவாமித்திரருடைய சீடருளொருவன்.
நட்சத்திரநேமி-துருவநட்சத்திரம்.

நட்சத்திரம் - அச்சுவினிமுதலியநட்சத்திரங்கள், விண்மீன்.
நட்சத்திரம் உஎ- அச்சுவினி பரணி கார்த்திகை ரோகிணி மிருகசீரிடம் திருவாதிரை புனர்பூசம் பூசம் ஆயிலியம் மகம் பூரம் உத்தரம் அத்தம் சித்திரை சோதி விசாகம் அனுடம் கேட்டை மூலம் பூராடம் உத்தராடம் திருவோணம் அவிட்டம் சதயம் பூரட்டாதி உத்தரட்டாதி ரேவதி என்பன.
நட்டணம் - கூத்து.
நட்டபாடை - ஓர்பண்.
நட்டமுட்டிசிந்தனை - கெடுதிமுதலியவற்றைச்சொல்லும் ஓர் நூல்.
நட்டணம் - கூத்து, கேடு.
நட்டார்- உறவினர், சிநேகிதர்.
[நட்டுவக்காலி -ஓர் விஷப்பிராணி].
நட்டுவம் - நாட்டியம்பழகுந்தொழில்.
நட்டுவன் - பரதசாத்திரம்பயின்றோன்.
நட்பு - உறவு. சிநேகம்.
நணி - அணிமை.
நணுகலர் - பகைவர்.
நணுகுதல் - கிட்டுதல், சேர்தல்.
நண்டு - ஞெண்டு, கர்க்கடகராசி.
நண்டுக்கால்- நண்டிஞலாயகல். (நண்டுகளைக்கல்லாக்கும் ஓர் சிறுற்றுத் திருகோணமலைக்குச் சமீபத்திலுள்ளது).
நண்ணலர் (நண்ணார்) - பகைவர்.
நண்ணுதல் - கிட்டுதல், சேர்தல், இருத்தல்.
நண்பகல் - மத்தியானம்.
நண்பன் - தோழன்.
நதம் - ஆண்யாறு, இயற்கைப்பிரவாகமுள்ள சோணம் பைரவம் சிந்துமுதலியவற்றைநதமென்பர்; சிலர் மேற்குநோக்கிப்பாய்வதுநதமெனவுங்கிழக்குநோக்கிப்பாய்வது நதியெனவும் கூறுவர், சோதிடகணிதத்தில் பகற்பாதி இஷ்டகாடி என்னுமிவற்றின் அந்தரம்.
நதி - பெண்யாறு, சோதிடகணிதத்தில் நதநாடியினுற்காணப்படும் நாடி விநாடிகள்.
நதி எ- கங்கை யமுனை கோதாவரி சரசுவதி நருமத்தை சிந்து காவேரி என்பன. (சிந்துநதியைநீக்கிக் குமரிநதியைச்சேர்த்துக்கூறுவர் சிலர்).
நதிசரம்- யானையின்வகைகளுளொன்று.
நதிபதி - கடல்.
நதுத்தல் -தீமுதலியவற்றை அவித்தல், கொடுத்தல்.
நத்தத்தஞர் - சங்கப்புலவருளொருவர்.
நத்தமாலம் - புன்கமரம்.
நத்தம்- இராத்திரி, இருள், நத்தை, சங்கு, ஊர், *இடம், பகற்போசனமின்றியனுட்டிக்கும்விரதம், வளர்வு, தேய்வு.
நத்து - சங்கு.
நத்துதல் - விரும்புதல்.
நத்தை - கருநந்து.
நந்தகோபன்- கிருஷ்ணமூர்த்தியைவளர்த்ததந்தை.
நந்தன -அறுபதுவருடங்களுளொன்று.
நந்தனம்- இந்திரனுடையபூந்தோட்டம்
நந்தனவனம் - பூந்தோட்டம், இந்திரனுடையபூந்தோட்டம்.
நந்தனன் - மகன்.
நந்தன் - ஒருஅரசன், நந்தனுரென்னுந்தொண்டர்.
நந்தி - சிவன், நந்திதேவர், இடபம், செக்காட்டி, பேரிகை, நமிநந்தியடிகளென்னுஞ்சிவனடியார்.
நந்திக்கிராமம் -அயோத்திக்குச்சமீபத்திலுள்ள ஒருகிராமம். (இராமசுவாமி வனவாசத்தினின்று மீண்டுவருமளவும் பரதன் வசித்தஇடம்).
நந்தியாவர்த்ததாமன்- துரியோதனன்
நந்தியாவர்த்தம் - ஒரு பூச்செடி, அரசர் மனையின் விகற்பங்களுளொன்று.
நந்தினி - வசிட்டமுனிவர்வளர்த்த தேனு, உமாதேவி, புத்திரி, கங்கைநதி.
நந்து - நத்தை, சங்கு.
நந்துதல் - வளர்தல், கெடுதல்,
நந்தை - பிரதமை சட்டி ஏகாதசி என்னுந்திதிகள், கொத்தான்கொடி.
நபசியம் - பாத்திரபதமாதம்.
நபம் - ஆகாயம், *சிராவணமாதம்.
நபுஞ்சகன் - அலி.
நபோமணி - சூரியன்.
நம (இடைச்சொல்) - வணக்கம்.
நமன் - யமன், நம்மவன்.
நமஸ்காரம் - வணக்கம். இது அட்டாங்கமும் பஞ்சாங்கமும் திரயாங்கமும் ஏகாங்கமுமென நால்வகைப்படும். கால்களிரண்டும் கைகளிரண்டும் தோள்களிரண்டும் மார்பும் நெற்றியும் நிலத்திற்படவணங்குவது அட்டாங்கவணக்கம், (வடநூல்கள் சிலவற்றில்மனம் வாக்கு பார்வை என்பனவற்றின் அ

டக்கமும் அங்கமாகக்கூறப்பட்டது). முழங்கால்களிரண்டும் கைகளுந் தலையும் நிலத்திற்படவணங்குவது பஞ்சாங்கவணக்கம். இருகைகளையுந் தலைமேற்கூப்புவது திரயாங்கவணக்கம். தலைதாழ்த்தல் ஏகாங்கவணக்கம்.

நமிநந்தியடிகள் - ஒருசிவனடியார். (நெய் யகப்படாதபோது தகழியில்நீரை நிறைத்துத்திருவிளக்கேற்றியவர் இவரே).

நமுசி - ஒருஅசுரன். (சும்பன் நிசும்பன் என்பவர்களின் பின்பிறந்தோன்).

நலைதல் - சூடுதல். (சிந்).

நம்பன் - சிவன், கடவுள். [விரும்பத்தக்கவன்.

நம்பி - ஆண்மக்களுட்சிறந்தோன், அகப்பொருளிலக்கணஞ்செய்த ஆசிரியர், முருகக்கடவுளின் தேவியாகியவள்ளியம்மையைவளர்த்த வேட்டுவராசன்.

நம்பிக்கை - விசுவாசம்.

நம்பியாண்டார்நம்பி - தேவாரமுதலிய தோத்திரங்களைத் திருமுறையாகவகுத்தஒருஅடியவர்.

நம்பு - ஆசை, ஆசைப்பெருக்கம்.

நம்புதல் - விசுவாசித்தல், விரும்புதல்.

நம்பூரி - மலையாளப்பிராமணர்களிலொருபகுதியார்.

நம்மாழ்வார் - திருமாலின் அடியவர்களுளொருவர். (இவரால் திருமாலைக்குறித்துப் பல தோத்திர நூல்கள்பாடப்பட்டன).

நயச்சொல் - பரிகாசவசனம், முகமன்.

நயத்தல் - விரும்புதல், அன்புவைத்தல், இலாபமடைதல், மகிழ்தல்.

நயந்தோன் - மித்திரன், கணவன்.

நயப்பு - விருப்பம்.

நயப்புணர்வு - கண்ணோட்டம்.

நயம் - மகிழ்ச்சி, இன்பம், நன்மை, நற்பயன், முகமன், நீதி, இனிமை, விருப்பம்.

நயனதீட்சை - குரு கண்பார்வையினற் சீடனுடையபாவங்களை நீக்குதல்.

நயனப்பத்து - கண்களை வருணித்து ஆசிரியவிருத்தத்தாலாதல் கலித்துறையாலாதல் பாடப்படும் பத்துச்செய்யுள்.

நயனம் - கண்.

நரகம் - கீழுலகத்திற் பாவஞ்செய்தோரடைதற்குரியனவாயுள்ள இடங்கள்.

நரகம் எ - கூடசாலம் ரௌரவம் கும்பிபாகம் பூதி அள்ளல் செந்து மகாபூதி என்பன. (தமப்பிரபை இமப்பிரபை தூமப்பிரபை வாலுகப்பிரபை சாகரப்பிரபை இரத்தப்பிரபை அழற்பிரபை எனக்கூறுவர்சிலர்; பெருங்களிற்றுவட்டம் பெருமணல்வட்டம் எரிபரல்வட்டம் அரிபடைவட்டம் இருள்வட்டம் பெருங்கீழ்வட்டம்எனகூறுவாருமுளர்

நரகம் உஅ - தமம் அந்தமம் ரௌரவம் மகாரௌரவம் கும்பிபாகம் காலசூத்திரம் அசிபத்திரவனம் கிருமிபக்ஷணம் அந்தகூபம் சந்தஞ்சம் சன்மலி சூர்மி வைதரணி பிராணரோதம் வைசசம் லாலாபக்ஷணம் வீசிசாரபக்ஷணம் வச்சிரண்டகம்காரம்பிசிதபக்ஷணம் சூலப்பிராந்தம் விதோதகம் தந்தசூகம் பரியாவர்த்தம் திரோதானம் சூசீமுகம் பீடகம்என்பன.

நரகரி - நரசிங்கம்.

நரகர் - கீழுலகத்தார்.

நரகன் - நரகாசுரன். (இவனைத்திருமால் கொன்றதினமே (நரகசதுர்த்தசி).

நரசிங்கம் - இரணியனைக்கொல்லும்படி திருமால்கொண்டவடிவம்.

நரநாராயணர் - விஷ்ணுவின் அவதாரமான இரண்டுமுனிவர்கள்.

நரந்தம் - நாரத்தை, கஸ்தூரி, சரந்தப்புல். (பொருந உகூஅ).

நரந்தம் - (நரபாலன்), அரசன்.

நரம்புக்கருவி - வீணை முதலிய இசைக்கருவி.

நரமேதம்- மனிதரைப்பலிகொடுத்தல்.

நரம்பு - நாடி, வில்நாண், இலைமுதலியவற்றிலுள்ளநரம்பு.

நரர் - மனிதர்கள்.

நரலை - கடல், *மதிலுறுப்பு.

நரல் - செத்தை, [சனக்கூட்டம்].

நரல்பு - தொனி, எடுத்தலோசை, உள்ளோசை, மூங்கில்முதலியன ஒன்றோடொன்றுரையும்போதெழுமொலி.

நரவாகனம் - சிவிகை.

நரவாகனன் - குபேரன்.

நரன் - அருச்சுனன், திருமால், மனிதன்.

நரி - ஓர் மிருகம்.

நரிப்புறம் - மிருகசீரிடம்.

நருமதை - நருமதைநதி.

நரேந்திரன் - அரசன்.

நரை - வெண்மை, வெண்ணிறமுள்ள

மிருகமுதலியன, வயதுமுதிர்தலால் மயிர்களுக்குண்டாகும் வெண்மை, இடபம், சாமரம், நரை, கவரிமா, பெருமை. (மதுரைக் கூஅ).
நரைத்தல் - வெளுத்தல்.
நரோத்தமன் - திருமால், மனிதர்களிற்சிறந்தோன்.
நர்த்தகன் - நடனஞ்செய்வோன். (பெண்பாலில் நர்த்தகி).
நர்த்தனம் - நடனம்.
நலங்கு - விவாகச்சடங்கின் பின்செய்யப்படும் மங்களஸ்நானம்.
நலங்குதல் - அழுக்கடைதல், சகங்குதல்.
நலம் (நலன்) . உபகாரம், அழகு, இன்பம், அன்பு, (சிந்தா).
நலிதல் - வருந்துதல், மெலிதல்.
நலிவு - வருத்தம், மெலிவு.
நல் - வறுமை.
நல்கல் - கொடுத்தல், விரும்பல்.
நல்குரவு - வறுமை.
நல்கூர்ந்தோன் - வறியவன்.
நல்லம் - கரி, கருநிறம், இஞ்சி.
நல்லவர் - அறிஞர், சிநேகிதர், உத்தமர், பெண்கள்.
நல்லாங்கு - நன்மை. [ன்.
நல்லாதனர் - திரிகடுகநூலின் ஆக்கியோ
நல்லாப்பிள்ளை - மகாபாரதத்தைவிரித்து
நல்லாள் - பெண். [ப்பாடியஒரு புலவர்.
நல்வழி - சன்மார்க்கம், ஔவையார் செய்த ஒரு நீதிநூல்.
நல்வினை - புண்ணியம்.
நவசிராத்தம் - இறந்தாரைக்குறித்துச் செய்யும் பிரேதசிராத்தங்களுளொன்
நவச்சாரம் - ஓர் மருந்து. [று.
நவதி - தொண்ணூறு.
நவத்துவாரங்கள் - கண் உ காது உ மூக்கு உ வாய் குதம் குய்யம் என்பன
நவநீதம் - வெண்ணெய்.
நவமணிமாலை - வெண்பாவைமுற்கொண்டுவேறுபட்ட அல்லதுபாவினங்களால் ஒன்பதுசெய்யுளந்தாதித்துப்பாடுவது. (தேவர்காக்கவென்னுங்கருத்தமைய ஆசிரியவிருத்தமொன்பது பாடுவதென வச்சணந்திமாலையில்).
நவமி - ஒன்பதாந்திதி. [லம்
நவம் - ஒன்பது, புதுமை, நட்பு, கார்கா
நவரத்தினப்புலவர் - தன்வந்திரி சபண கர் அமரசிங்கர் சங்கு வேதாளபட்டர் கடகர்ப்பார் காளிதாசர் வராகமிகிரர் வரருசி என்பவர்கள்.
நவராத்திரம் - அசுவீஜசுத்தத்துப்பிரதமைமுதலிய ஒன்பதுதிதிகளிற்கொள்ளப்படுந் தேவிவிரதம்.
*நவாங்கம் - நாடகசாலை.
நவித்தல் - அவித்தல், குற்றுதல்.
நவியம் - கோடாலி, மழு.
நவிரம் - ஆண்மயிர், உச்சந்தலை, மயில் புன்மை, மலை.
நவிர் - ஆண்மயிர், வாள், மருதயாழ்த்திறம், தக்கேசிப்பண், குற்றம்.
நவிலல் - சொல்லுதல், சொல்லிப்பயிலு
நவீனம் - புதியது. [தல், செய்தல்.
நவை - குற்றம்.
நவ்வி (நௌவி) - மான், அத்தநாள். தோணி, அழகு.
நவ்வியம் - புதிது, (பூர்விகமல்லாதது), இளமை.
நழுவல் - வழுவுதல், விலகுதல்.
நள - அறுபதுவருடங்களுளொன்று.
நளகூபரன் - குபேரனுடையமகன்.
நளன் - நிடதநாட்டரசன், (இவனுடையசரித்திரம் நைடதத்திற்கூறப்பட்டது), இராமசுவாமி இலங்கைக்குவருவதற்கு அணைகட்டியவானரவீரன்.
நளி - குளிர்ச்சி, பெருமை, (நளிமலைநாடன்), செறிவு. (நளியிருள்), நண்டு, கூட்டம், தேள்.
நளிகை - தாமரை, வளைவுறச் செய்யப்பட்டகுழல். (இதினின்றுசிந்துகின்ற நீரினால்முற்காலத்திற் சிலயந்திரங்கள் இயக்கப்பட்டன).
நளிர் - குளிர்ச்சி, நண்டு, பெருமை.
நளிவிடம் - தேள்.
நளினம் - தாமரை, பரிகாசவசனம்.
நளினி - தாமரைவாவி, நளிகை.
நளினை - லக்குமி.
நள் - நடு, செறிவு.
நள்ளலர் - பகைவர்.
நள்ளல் - நண்புகொள்ளுதல்.
நள்ளார் - பகைவர்.
நள்ளாறு - ஓர்சிவதலம்.
நள்ளி - சுற்றம், ஞெண்டு, கர்க்கடகராசி, கடையெழுவள்ளலுளொருவன்.
நள்ளுநர் - சிநேகிதர்.

நறவம் [நறவு. நறு)- கள், தேன், வாசனை, அனிச்சமரம்.
நறளை - ஓர்பூடு.
நறுக்கு - பனையோலைத்துண்டு.
நறுக்குதல் - துண்டித்தல்.
நறுமணம் - சுகந்தம்.
நறுமருப்பு - இஞ்சி.
நறுமை - வாசனை, நன்மை.
நறுவிலி - நறவிலிமரம்.
நறை-தேன், கள், வாசனை, நறும்புகை, *குற்றம், நறைக்கொடி. (புற).
நறைக்காய் - சாதிக்காய். (திருமுருகக௯௦).
நற்றத்தர்-அகத்தியரது பன்னிருமாணாக்கருளொருவர்.
நற்றாய் - பெற்றதாய். [று
நற்றிணை - தொகைநூல் எட்டனுள் ஒன்
நனந்தலை - நடு, அகன்றவிடம்.
நனவு - விழிப்பு, அகலம், அரங்கம், (நனவுப்புகுவிறலியிற்றோன்றுநாடன்).
நனி (உரிச்சொல்) - பெருமை, மிகுதி.
நனை - பூமொட்டு, கள், தேன், ஈரம்.
நனைதல் - மழை முதலியவற்றில் நனைத
நன்காடு - சுடுகாடு. [ல்.
நன்கு - நன்மை, அழகு.
நன்கொடை - உபகாரம்.
நன்செய் - நெல்விளையும்புலம்.
நன்மை - நற்கருமம்.
நன்றி - நன்மை, உதவி.
நன்று - நன்மை, பெருமை, (இப்பொருளிற்குறிப்புவினை முற்றாயும் வரும்).
நன்னர் - நன்மை.
நன்னன் - மலைபடுகடாமென்னும் பாடலின் றலைவன்.
நன்னூல் - பவணந்திமுனிவர் செய்த இலக்கணநூல்.
நன்னெல் - செந்நெல்.
நன்னெறி- சன்மார்க்கம். ஓர் நீதிநூல்.

## நா

நா- நாக்கு, தராசினுக்கு, நடு.
நாகணவாய்-பறவையினங்களுளொன்று
நாகதந்தம்- யானைத்தந்தம், சுவரில் நீள வைத்துக் கட்டப்பட்டிருக்குமுளையா
நாகதாளி-ஓர்முட்செடி. [ணி.
நாகநகர்க்குநாதன்-இந்திரன்.
நாகபடம்-பாம்பின்படம், ஓர்காத ணி.
நாகபந்தம் - பாம்புகள் பிணைவதுபோற் சக்கரங்கிறியமைக்கும் பாடல்,(இரட்டைநாகபந்தம் அட்டநாகபந்தம் என இருதிறமாகவழங்குவர்).
நாகமணி - நாகரத்தினம்.
நாகம் - மலை, பாம்பு, பாம்பின்விகற்பம், ஆகாயம், யானை, குரங்கு, கல்லாடை. சுரபுன்னைமரம், துத்தநாகம், ஞாழல் மரம், தேவலோகம், காரீயம், நாகவகரணம், புன்னைமரம்.
நாகரம் - தேவநாகர எழுத்து. சுக்கு.
நாகரவண்டு- வண்டினங்களுளொன்று.
நாகரி - குருக்கத்திமரம்.
நாகரிகம் - [நகரப்பழக்கம்], அருள்.
நாகரிகர் -நகரத்தில்வாழ்வோர். [கள்.
நாகர் - தேவர், அனந்தன்முதலிய நாகர்
நாகர் எண்மர் - அனந்தன் வாசுகி தக்ஷகன் கார்க்கோடகன் பதுமன் மகாபதுமன் சங்கபாலன் குளிகன் என்பவர்கள். [லோகம்.
நாகலோகம் - சுவர்க்கலோகம், பாதல
நாகவம் - பதினொருகரணங்களுளொன்
நாகவல்லி-வெற்றிலைக்கொடி. [று.
நாகன் - தசவாயுக்களுள்ஒன்று. (பேசச்
நாகாந்தகன்-கருடன். [செய்வது).
நாகு - நத்தை, பெண்மை, இளமை.
நாகை - நாகபட்டணம்.
நாக்கறநளை .நாக்கில்வரும் ஓர்நோய்.
நாக்கு - நா.
நாங்கூழ் பூநாகம். (நாக்குளி).
நாசம் - அழிவு.
நாசயோகம் - வாரம் திதி நட்சத்திரம் என்னுமிவைகளின் கூட்டத்தினால் வருந்தீயகாலம்.
நாசி - மூக்கு, மாளிகையின் மேற்பாகத்துள்ள ஓருறுப்பு, (பெரிய திருஞான கஉ).
நாசிகாபீடம்-மூக்கினுள்தசைவளர்தலாகிய ஒருநோய்.
நாஞ்சில் - கலப்பை, மதிலுறுப்பு.
நாடகம் - கூத்து, முத்தமிழ்களுளொன்று, வடநூற்காவியங்களுளொன்று.
நாடகர் - கூத்தாடிகள்.
நாடன் - குறிஞ்சிநிலத்தலைவன், நாட்டிலுள்ளோன்.
நாடா - நூலுழி. (ஓர்வகைக்கயிறு).
நாடி - நரம்பு, நாளிகை, [தாடி].

நாடி கO - இடை பிங்கலை சுழுமுனை காந்தாரி அத்தி சிகுவை அலம்புடை புருஷன் குகு சங்கினி என்பன.
நாடு - பூமி, உலகம். [தல்.
நாடுதல் - தேடுதல், விரும்புதல், ஆராய்
நாடுபடுதிரவியம் ௬ - செந்நெல் செவ்விளநீர் சிறுபயறு வாழை கரும்பு என்பன.
நாடுரி - நாவுரி. (ஒன்றரைப்படி).
நாட்டமைதி ௬ - குறும்பின்மை செங்கோன்மை செல்வம் பலவளம் நோயின்மை விளைவு என்பன.
நாட்டம் - கண், ஓர்பண், வாள், விருப்பம், ஆராய்வு, அழகு. (சிந்).
நாட்டாண்மை - ஊரதிகாரம்.
நாட்டியம் - கூத்து, மனக்குறிப்பு.
நாட்டில்வரும் எண்வகைக்கேடு - விட்டில் தன்னரசு யானை மிகுமழை மிகு காற்று நட்டம் வேற்றரசு கிளி என்பன. (விட்டில் தொட்டியர் பன்றி கள்வர் கிளி அவமழையானை என வழாகவுங்கூறுவர்).
நாட்டுதல் - தாபித்தல்.
நாட்டை - ஓரிராகம்.
நாணகம் (நாணயம்) - வெள்ளி செம்பு முதலியவற்றால் அரசனுடைய முத்திரையுடன் செய்யப்பட்ட காசுமுதலியவைகள்.
நாணல் - ஓர்புல், வெட்கமடைதல்.
நாண் - வில்லினாண், கயிறு, வெட்கம்.
நாண்மீன் - நட்சத்திரம்.
நாதம் - ஒலி, சைவதத்துவம் முப்பத்தாறுளொன்று, இசைப்பாட்டு.
நாதன் - கடவுள், அரசன், தலைவன், கணவன், குரு.
நாதித்தல் - ஒலித்தல்.
நாத்திகன் - புண்ணியபாவங்களின் பயனையும் தெய்வத்தையும் இல்லையென்போன்.
நாத்தூண் - கணவனுடன்பிறந்தாள். (நாத்தனாரெனவழங்குவர்).
நாந்தகம் - வாள்.
நாந்தி - சுபகருமங்களிற்செய்யுஞ் சிராத்தம், மங்கலவாழ்த்து.
நாபி - கொப்பூழ்.
நாபிதன் - நாவிதன். [பு.
நாப்பண் - நடு, தேர்த்தட்டு, யாழினுறுப்
நாமகரணம் - பெயரிடுதல்.
நாமகள் - சரசுவதி.
நாமதேயம் - பெயர்.
நாமமாலை - ஆண்மகனைப் புகழ்ந்துபாடும் ஓர்வகைக்கவி.
நாமம் - பெயர், அச்சம், கீர்த்தி, வைஷ்ணவர் நெற்றியிலணியும்நாமம்.
நாமறல் - முற்றுமழிதல்.
நாம் - அச்சம், நாங்கள், (நாமம் என்பதன்றிரிபாயின்) பெயர்.
நாம்பல் - இளைத்தல்.
நாயகம் - தலைமை. [சேனுபதி.
நாயகன் - அரசன், தலைவன், கணவன்,
நாயகி - மனைவி, தலைவி.
நாயனர் - அடியார், தலைவர்.
நாயுருவி - ஓர்பூடு.
நாய் - ஞமலி, சூதாடுகருவிகளிலொன்று.
நாய்கர் - வைசியர். [மரம்.
நாரங்கம் - தேன்றூடைமரம், நாரத்தை
நாரசிங்கம் - உபபுராணங்களுளொன்று.
நாரசிங்கன் - திருமால்.
நாரணவன் - பசுக்களுக்குவரும் நோய்களுளொன்று. நாரணன் - திருமால்.
நாரணி (நாராயணி) - துர்க்கை.
நாரதன் - ஓர்முனிவர்.
நாரதீயம் - உபபுராணங்களுளொன்று.
நாரத்தை - ஓர்மரம். [சி.
நாரம் - நீர், அன்பு, நாரத்தைமரம், பா
நாராசம் - விட்டம், ஓர்ஆயுதம்.
நாராயணபலி - பாஷண்டர்முதலாயினேர் இறந்தபின்செய்யும் பிராயச்சித்தமாகிய கிரியை.
நாராயணன் - விட்டுணு.
நாராயணி - இலக்குமி.
நாரி - பெண், பன்னாடை, கள், வில்நாண், இடை.
நாரை - ஓர்பறவை.
நாரையூர் - காவிரியின் வடகரையிலுள்ள ஓர் சிவதலம்.
நார் - அன்பு, கயிறு, பனைமட்டைமுதலியவற்றின்நார், பன்னாடை. (புற).
நாலடியார் - ஓர்நீதிநூல்.
நாலல் - தொங்குதல்.
நாலறிவுயிர் - வண்டு ஞெண்டு முதலியன (பரிசம் கந்தம் சுவை உருவம் என்னும் நான்கையுமறிவன).
நால்வாய் - யானை.

நாவலர் - புலவர்.
நாவலூர் - சுந்தரமூர்த்திநாயனாரவதரித்தவூர் சிவதலம்.
நாவல் - ஓர்மரம், சம்புத்தீவு.
நாவாய் - ரேவதிநட்சத்திரம், மரக்கலம்.
நாவி - கத்தூரிமிருகம், புனுகுப்பூனை.
நாவிகன் - மரக்கலஞ்செலுத்துவோன்.
நாவிதன் - மயிர்களைவோன், கார்த்திகை நட்சத்திரம், பூரநட்சத்திரம்.
நாவிநெய் - மயிர்ச்சாந்து.
நாவுக்கரசு - திருநாவுக்கரசரென்னுஞ் சிவனடியார்.
நாவூறு - நாத்தோஷம்.
நாவை - கலப்பையின் நா.
நாழி - ஒருபடி, அளக்குங்கொத்து, நாழிகை, பூரட்டாதிநட்சத்திரம், உட்டுளைப்பொருள்.
நாழிகை - விநாடி60 கொண்டது.
நாழிகைவட்டம் - கடிகாரம்.
நாளம் - தாமரைத்தண்டு, உட்டுளை.
நாளிகம் - வள்ளைக்கொடி, உட்டுளையுள்ளபொருள்.
நாளிகேரம் (நாரிகேலம்) - தென்னமரம்.
நாளினி - புளிமா.
நாளும் - எப்போதும்.
நாளை - மறுநாள்.
நாள் - உதயகாலம், சூரியன்உதயமுதல் மறுநாட் சூரியன்உதயம்வரையான காலம், சுபதினம், நட்சத்திரம்.
நாறல் - பதனழிதல், முளைத்தல், கமழ்தல், தோன்றுதல்.
நாறு - நாற்று
நாற்காலி - ஓர்வகையாசனம்.
நாற்கால்மிருகம் - விலங்கு.
நாற்பது (நாற்பான்) - ஒரெண்.
நாற்றங்கால் - நாற்றிட்டிருக்கும்பாத்தி.
நாற்றம் - வாசனை, துர்க்கந்தம், தோற்றுகை, *கள்.
நாற்று - முளைப்பயிர்,
நானம் - கத்தூரி, புனுகு, ஸ்நாநம், வாசனை, வாசனைப்பூச்சு, கவரிமா.
நானா - பலவிதமான.
நான் - யான்.
நான்கு - நாலென்னும் எண்.
நான்மணிமாலை - வெண்பாவுங் கலித்துறையும் ஆசிரியவிருத்தமும்அகவலுமாக அந்தாதித்தொடையாற் பாடிய பத்துசெய்யுள்
நான்மருப்பியானை - ஐராவதம்.
நானிலம் - அகன் றநிலம்.
நான்மருப்பியானையூர்தி - இந்திரன்.
நான்முகன் - பிரமா, அருகன்.

## நி

நி (உபசர்க்கம்) - மிகுதி விலக்கு என்னும் பொருள்களைக்குறிக்கும். வேறும்பலபொருள்கள் வடநூலகராதிகளிலுள்ளன).
நிகடம் - சமீபம், விலக்கு
நிகண்டு - சொற்களின் பொருள்களை விளக்கும்நூல்
நிகமம் - வேதம், வேதத்தின்பொருளையறிதற்குக்கருவியான ஓர் நூல், ஆகமம், மருதநிலத்தூர், கடைவீதி, நெடுந்தெரு, தெரு.
நிகரம் - கூட்டம்.
நிகர் - ஒப்பு, ஒளி.
நிகர்த்தல் - பொருதல், ஒத்தல்.
நிகர்வம் - ஓர் பேரெண். (கர்வம் பத்துக் கொண்டது; பதினாயிரகோடி).
நிகழ்காலம் - நிகழ்ந்துகொண்டிருக்குங் காலம்.
நிகழ்ச்சி - சம்பவம்.
நிகழ்தல் - நடைபெறல், ஒளிசெய்தல்.
நிகழ்த்தல் - நடைபெறச்செய்தல், சொல்லுதல்.
நிகளம் - சங்கிலி, யானைச்சங்கிலி, விலங்கு.
நிகாதம் - வஞ்சகம்.
*நிகாயம் - நரகம், கூட்டம், இடம்.
நிகிதம் - தாபிக்கப்பட்டது, மறைக்கப்பட்டது, புதைக்கப்பட்டது.
நிகிலம் - எல்லாம்.
நிகுஞ்சம் - கொடிவீடு, மலைமுழை.
நிகும்பன் - கும்பகன்னனென்னும்அரக்கனுடையமகன்.
நிகும்பலை - இந்திரசித்துயாகம்செய்தஇடம்.
நிகேதனம் - தேவர்கோயில், வீடு, நகரம்.
நிக்கிரகம் - தடை, தண்டனை, தருக்கத்தில் எதிரியைவெல்லுதல்.
நிக்குவணம் (நிக்குவாணம்) - வீணைமுதலியவற்றின்தொனி.
நிசங்கம் (நிஷங்கம்) - அம்புக்கூடு.
நிசம் - உண்மையானது, நித்தியமானது, சொந்தம்.
நிசயம் - கூட்டம்.
நிசர்க்கம் - சிருட்டி, இயல்பு.
நிசா - இரவு.
நிசாகரன் - சந்திரன்.
நிசாசரர் - இராக்கதர், அசுரர்.

நிசாசரி - கோட்டான்.
நிசாதனம் - இடம்.
நிசாதன் (நிடாதன்) - கீழ்மகன், வஞ்சகன், பிராமணன் சூத்திரப்பெண்ணைச்சேர்ந்துபெற்றபுதல்வன்.
நிசாபதி - சந்திரன்.
நிசாளம் -ஓர் வகைத்தோற்கருவி.
நிசி - இரா, மஞ்சள், பொன்.
நிசிசரர் - அசுரர், இராக்கதர்.
நிசிதம் - கூர்மையுள்ளது.
நிசிதர் - இராக்கதர்.
நிசீதர் - இரவினடு. (சிலவிடங்களில்இரவமாம்).
நிசீதினி - இரவு.
நிசும்பன் - சும்பனுடையசகோதரனாகிய ஒரு அசுரன.
நிச்சயம் - உறுதியானதீர்ப்பு, உண்மை.
நிச்சலம் - அசைவின்மை.
நிச்சிதம் - நிச்சயிக்கப்பட்டது.
நிச்சிந்தன் (சிந்தனையற்றவன்) - கடவுள், அருகன்.
நிச்சிரேணி - ஏணி.
நிச்சிரேயசம் - மோட்சம்.
நித்சுவாசம் - உள்ளேயிருந்து மூக்கினால் வாயுவை வெளியேவிடுதல், சைவாகமங்களுளொன்று.
நிடதம் - ஐம்பத்தாறுதேசங்களுளொன்று. எட்டுமலைகளுளொன்று.
நிடாதம் (நிஷாதம்) - எழுவகையானஇசைகளுளொன்று.
நிட்கம் - ஒருவராகனிடை.
நிட்களம் - உருவின்மை.
நிட்காமியம் - விருப்பின்மை.
நிட்கிரமணம் - வீட்டினின்று வெளியேசெல்லுதல்.
நிட்சேபம் - புதையல், நம்பிக்கையினாற்பிறரிடத்தில் ஒப்படைத்துவைக்கும் பொருள்.
நிட்டூரம் - கொடுமை, கொடுமொழி.
நிட்டை-செயலற்றிருத்தல்.
நிட்பத்தி - ஒன்றிலிருந்து ஒன்றுதோன்றுதல். (பகுதியிலிருந்து விகுதிமுதலியவற்றைப்பெற்றுப் பதங்கள்தோன்றுதல் போல).
நிட்பன்னம் - உற்பத்தியானது, முடிவானது.
நிணத்தல் - கட்டுதல், கொழுத்தல்.
நிணம் - கொழுப்பு.
நிதம்பம் - அல்குல், மலைப்பக்கம்.
நிதர்சனம் - திருட்டாந்தங்காட்டி விளக்குதல், செய்யுளுக்குரிய பொருளணிகளுளொன்று.
நிதலம் - கீழுலகங்களுளொன்று.
நிதனம் - மரணம்.
நிதாகம்- முதுவேனிற்காலம், வெப்பம்.
நிதாந்தம் - மிகவும்.
நிதானம் -முதற்காரணம், பொன், பொற்காசு, நேர்மையானகுணம்], நவமணிகள், நவநிதிகள், *சேனை.
நிதி - திரவியத்தொகுதி, பொன்னின்தொகுதி, கடவுண்மணி, (நவனிதிகள்), உறைவிடம், (உ-ம்: தயாநிதி) உரியவரில்லாதிருக்கும்பொருள்.
நிதி கூ - மகாபதுமம் பதுமம் சங்கம் மகரம் கச்சபம் முகுந்தம் குந்தம் நீலம் சர்வம் என்பன. (இவை இந்திரனிடத்துங்குபேரனிடத்தும் இருப்பன).
நிதிக்கிழவன் - குபேரன்.
நிதித்தியாசனம் - குருமுதலாயினோரிடத்துக் கேட்டபொருளை ஆராய்தல்
நிதிபதி - குபேரன்.
நிதியம் - திரவியம், (பொன் வெள்ளி இரத்தினங்கள் முதலாயின).
நிதுவனம்-புணர்ச்சிக்காலத்திற்செய்யுங்கிரீடைகள்.
நித்தம் - ஓமகுண்டம், எப்போதும்.
நித்தன் (நித்தியன்) - சிவன், கடவுள்.
நித்தியம்- எப்போதும், என்றுமுள்ளது, அனுட்டியாவிடிற் பாபத்தைவிளைப்பனவாகிய (விரதமுதலிய) சிலகருமங்கள்.
நித்திரை - கண்படை.
நித்திலம் - முத்து.
நிநதம் (நிநாதம்) - ஒலி.
நிந்தகன் - பிறரையிகழ்வோன்.
நிந்தனை (நிந்தை) - இகழ்ச்சி.
நிந்தாஸ்துதி - பழிப்பதுபோலப் புகழ்தல்.
நிபதனம் - விழுதல்.
நிபந்தம் (நிபந்தனம்) - கட்டுப்பாடு.
நிபம் - நிறைவு, ஒப்பு, காரணம்.
நிபாதம் - விழுகை.
நிபானம் - கிணறு.
நிபிடம் - நெருக்கம்.
நிபுணன் - கருமங்களிற்சாமர்த்தியமுடையோன்.
நிமச்சனம் - நீரிலமிழ்ந்துதல்.
*நிமம் - பிடர்.

நிமலம் - அழுக்கின்மை.
நிமலன் - கடவுள்.
நிமி - சூரியகுலத்தரசருளொருவன், சந்திரகுலத்தரசருள்ளுமொருவன்.
நிமித்தகாரணம் - மூவகைக்காரணங்களுளொன்று. (குடத்திற்குக் குயவன் போல).
நிமித்தம் - காரணம், நன்மைதீமைகளைக் காட்டுங்குறி, பொருட்டு.
நிமித்திகன் - நிமித்தஞ்சொல்வோன், அரசனுடையகருமத்தலைவன்.
நிமிரல் - சோறு.
நிமிர்தல் - உயர்தல், ஓடுதல். [காலம்.
நிமிஷம் - இரண்டரை விநாடிகொண்ட
நிமீலனம் - கண்மூடுதல், சந்திரசூரியர்கள் கிரகணகாலத்தில் முற்றாய் மறைக்கப்படுதல்.
நிமேஷம் - கண்ணிமைப்பொழுது.
நிம்பம் - வேப்பமரம்.
நியக்குரோதம் - ஆலமரம்.
நியதன் - நியமமுடையோன், ஐம்பொறிகளையடக்கினோன்.
நியதி - இப்பிறப்பிலனுபவிக்கவேண்டிய நல்வினைதீவினைகளின்நியதி, (ஊழ்), செய்கடன், முறை, ௩௬ தத்துவங்களுளொன்று, கட்டளை.
நியமம் - ஸ்நாநம் சந்தியாவந்தனம் முதலியசெய்கடன், முறை, கட்டளை, நிச்சயம், யோகாங்கம் எட்டுளொன்று, (தவம் சௌசம் தத்துவநூலோர்தல் பெற்றதுகொண்டுமகிழ்தல் தெய்வம் வழிபடல் முதலியன), கோயில், கடைவீதி, தெரு, நீதி, பட்டினம், இடம்.
நியமனம் - நியமித்தல்.
நியமித்தல் - நிலைப்படுத்தல், அமைத்தல்.
நியாசம் - தாபித்தல். (தெய்வத்தை அல்லது மந்திரத்தை ஒவ்வோருறுப்பில் நியசித்தல் போல்வது).
நியாமகன் - கருமங்களை நடப்பிப்பவன், மரக்கலமோட்டுவோன்.
நியாயம் - நியாயசாஸ்திரம், நீதி, யுத்திக்கிசையக்காட்டுந் திருட்டாந்தம், (ஞாயமெனத்திரிபாயும் இச்சொல்லை வழங்குவர்), மெய்.
நியுதம் - லட்சம். (சிலவிடயங்களிற்பத்து சட்லத்தையுங்குறிக்கும்).

நியோகம் - கட்டளை, ஏவல், நியமம்.
நியோகித்தல் - ஏவுதல். [வகை
நிரசம் (நீரசம்) - சுவையில்லாப்பொருள்
நிரசனம் - பிறன்கோட்பாட்டை மறுத்தல், உணவின்றியிருத்தல், விலக்குதல்.
நிரஞ்சனம் - வெளி, நிறைவு, மோட்சம், களங்க மின்மை.
நிரஞ்சனன் - கடவுள், களங்கமற்றவன்.
நிரட்சம் - சமரேகை.
நிரதிசயம் - தனக்குமேற்பட்ட பொருளில்லாதது.
நிரத்தல் - நிறைதல்.
நிரந்தரம் - இடையின்மை, குரங்கு.
நிரப்பு - வறுமை, குறைவு.
நிரப்புதல் - நிறைத்தல்.
நிரம்பரன் - அருகன், கடவுள், சிவன், வஸ்திரந்தரியாதவன். [லவர்.
நிரம்பவழகியர் - சேதுபுராணம்பாடிய புலவர்.
நிரம்பாச்சொல் - மழலைச்சொல்.
நிரம்புதல் - நிறைதல்.
நிரயம் - நரகம்.
நிரல் - நிரை. [துதல்.
நிரவுதல் - மேடுபள்ளங்களைச் சமப்படுத்துதல்.
நிரனிறை - எண்ணிணுலொப்புமையுடையசொற்களை நிரைபடநிறுத்தி நிறுத்தியமுறையே இதற்கிதுஎனப் பொருள் கொள்ளல்.
நிராகரித்தல் - பிறன்கூற்றை மறுத்தல்.
நிராயுதன் - அருகன், ஆயுதமில்லாதவன்.
நிரியாசம் - பிசின்.
நிரியாணம் - யானைக்கடைக்கண், சாவு.
நிரீட்சணம் - பார்த்தல். (ஒருபொருளில் பார்க்கவேண்டியஉறுப்புமுதலியஎல்லாவற்றையுந்தவறுதுபார்த்தல்).
நிருதர் - இராக்கதர்.
நிருதி - தென்மேற்றிசைப்பாலன், முதலெழுவள்ளலுளொருவன்.
நிருத்தக்கை ௩௦ - சதுரச்சிரம் உத்துவீதம் தலமுகம் சுவத்திகம் விப்பிரகீர்ணம் அர்த்தரேசிதம் அராளகடகாமுகம் ஆவித்தவத்திரம் சூசீமுகம் இரேசிதம் உத்தானவஞ்சிதம் பல்லவம் நிதம்பம் கசதந்தம் இலதை கரிக்கை பக்கவஞ்சிதம் பக்கப்பிரதியோகம் கருடபக்கம் தண்டபக்கம் ஊர்த்துவமண்டலி பக்கமண்டலி உரோமண்டலி உரப்பார் சுவார்த்தமண்டலி

முட்டிகச்சுவத்திகம் நளினி பதுமகோசம் அலபதுமம் உற்பணம் வளிதை வலிதை என்பன.
நிருத்தக்கையின்வகை ச-பிண்டி பிணையல் எழிற்கை தொழிற்கை என்பன.
நிருத்தம் - நடனம், வேதாங்கங்களுளொன்று. (வேதத்திலுள்ளபதங்களைப் பகுதி விகுதிமுதலியஉறுப்புக்களாகப் பிரித்துப்பொருள் கூறுவது).
நிருத்தர் - கூத்தாடுவோர்.
நிருத்தன் - சிவன்.
நிருபதி, நிருபன் - அரசன்.
நிருமதம் - மதமில்லாதயானை.
நிருமலம் - அழுக்கின்மை.
நிருமலன் - அருகன், கடவுள், சிவன்.
நிருமாணம் - நியமிப்பு, ஏற்பாடு.
நிருமாலியம் - கடவுளுக்கு நிவேதித்த அல்லது சாத்திய பொருள்.
நிருமித்தல் - சிருட்டித்தல், ஆராய்தல், நியமித்தல்.
நிரூடபசுபந்தம் - ஓர்யாகம்.
நிரூபணம் - நிச்சயித்தல், செய்யுளின் பொருள்முதலியவற்றை விளக்கிக் காட்டல்.
நிரை - வரிசை, பசு, பசுக்கூட்டம், நிரையசை. (குறிலிரண்டு அல்லது ஒருகுறிலும் ஒருநெடிலும் வரும் அசை).
நிரைதல் (நிரைத்தல்) - நிரையாக்கல்.
நிரோஷ்டகம்-இதழ்குவிவாய்ப்பிறக்குமெழுத்துக்களைநீக்கிப் பாடியகவி.
நிரோதம் - தடை, கேடு.
நிர் (உபசர்க்கம்) - நீக்கம் விலக்கு நிச்சயம் முதலியபொருள்களைக் குறிக்கும். (நிரஞ்சனன்என்பதில் நீக்கம்; நிராகரணம்என்பதில் விலக்கு; நிருக்தம் என்பதில் நிச்சயம்; நிஸ்என்னும் உபசர்க்கம் பெரும்பாலும் இப்பொருள்களையும் உருவத்தையுமுடையதாய் வரும். அவற்றின் பேதம் வடமொழிப்பயில்வாலுணரற்பாலது).
நிர்க்குண்டி - வெண்ணொச்சி.
நிர்ச்சரம் - மலையருவி.
நிர்ணயம் - நிச்சயம். (இருபட்சமாயினவற்றில் விதி முதலியவற்றினுற்றெளிந்து ஒருபட்சத்தை உறுதிப்படுத்துதல்).
நிர்த்தேசம் - கட்டளை.
நிர்ப்பந்தம் - வலாற்காரம்.
நிர்ப்பரம்- தீவிரம்.
நிர்மலம் - அழுக்கின்மை.
நிர்மூலம் - ஆதாரமின்மை.
நிர்வகித்தல் - முழுப்பாரத்தையுமேற்றுநடத்துதல்.
நிர்வசனம் - பகுதி விகுதி முதலிய உறுப்புக்களாகப் பதங்களைப் பிரித்துப் பொருள் கூறுதல்.
நிர்வாணம் - மோட்சம், வஸ்திரந்தரியாமை.
நிர்விகற்பம் - ஒருமையுணர்வு.
நிலங்கு - ஓர்பறவை.
நிலத்தி - நுளம்பு.
நிலமகள் - பூமிதேவி.
நிலமகன் - செவ்வாய்.
நிலம் (நிலன்) - பூமி, இடம், தேசம்.
நிலம் ச - முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்பன. (பாலையையுங்கூட்டியவழி ஐந்தாம்).
நிலம்பி - கொதுகு.
நிலயம் - தேவர்கோயில், நகரம், வீடு
நிலவல் - ஒளிசெய்தல், கீர்த்தி முதலியனபரம்புதல்.
நிலவறை- நிலத்தின்கீழ்ச்செய்யப்பட்டசுரங்கம். [ரணம்.
நிலவு (நிலா) - ஒளி, சந்திரன், சந்திரகி
நிலாமுகி - சகோரம்.
நிலாமுற்றம் - அரசர்வீடுகளிலும் செல்வர்வீடுகளிலும் உலாவுகைக்காகவே கட்டப்பட்ட முற்றம்.
நிலுவை - பற்றுவரவுக்கணக்கில் வரவேண்டியதாயிருக்குந்தொகை.
நிலை - இடம், கதவுநிலை, நிலைபேறு, பூமி, தன்மை.
நிலைக்களம் - நிலையான இடம்.
நிலைத்தேர் - அலங்காரத்துக்காகச் செய்து நிறுத்தப்பட்டிருக்குந்தேர்.
நிலைபேறு - நிலைப்பட்டிருத்தல்.
நிலைமண்டிலவாசிரியப்பா- எல்லாவடிகளும் அளவொத்தநாற்சீர்களான் வரப்பெறும் ஆசிரியப்பா.
நிலைமை - நிலை, உண்மை.
நிலைமொழி-புணர்ந்துவரும் இருமொழிகளுள் முன்மொழி.
நில்லாமை - அநித்தியம்.
நிவகன் - ஏழுவாயுக்களுள்ஒன்று.
நிவசதம் (நிவசனம்) - வீடு.
நிவத்தல் - உயர்தல், வளர்தல், ஏறுதல்

நிவப்பு - உயர்ச்சி, வளர்ச்சி.
நிவர்த்தனம்- இருநூறுமுழநீளமும் அகலமுமுடைய நிலம், நிவாரணம்.
நிவாசம் - இருப்பிடம், வீடு.
நிவாதகவசர் - தோயமாபுரத்திலிருந்த அசுரர்கள். (இரணியனுடையவம்சத்திற்பிறந்தவர்கள்; ஆயுதங்கள் நுழைய இயலாத சட்டையையுடையாரென்பது சொற்பொருள்.)
நிவாரணம் - நிவிர்த்திசெய்தல், தடுத்தல்.
நிவிர்த்தி - ஒழிப்பு, துறவு, பிராயச்சித்தம்.
நிவீதம்- வலம்இடம்இரண்டுமின்றிக்கழுத்திற்றூங்கும்படி பூணூலைத்தரித்திருத்தல்.
நிவேசனம் - வீடு, ஊர்.
நிவேதனம் - தேவர்க்குணவுகொடுத்தல், ஒப்பித்தல்.
நிழத்கல்-இல்லையாக்கல்,(பொருநஉ௬௫), ஓய்சல். (மதுரை ௬௦௬).
நிழல் (நீழல்) - சாயை, குளிர், செல்வம், ஒளி, *நீதி.
நிழற்றல் - நிழல்செய்தல்.
நிறம் - ஒளி, மார்பு, பொருள்களினிறம்.
நிறம் ரு - வெண்மை கருமை செம்மை பச்சை பொன்மை என்பன.
நிறுத்தல்- தராசு முதலியவற்றிற் பொருளை வைத்துநிறுத்தல்,நிலைப்படச்செய்
நிறுவல் - நிற்கச்செய்தல். [தல்.
நிறை - பொருள்களின் எடை, தராசுக்கோல், துலாராசி, மனநிலை,நீர்ச்சால், மாட்சிமை, நூறுபலம், கற்பு.
நிறைகுடம் - பூரணகும்பம்.
நிறைதல் - நிரம்புதல்
நிறைவேறுதல் - செய்துமுடிதல்.
நிற்றல் - தங்குதல், நிலைத்தல்.
நினைத்தல் - கருதுதல்.
நினைவு - ஞாபகம்.
நின்று - அசைநிலை, ஐந்தாம்வேற்றுமையுருபு.
நிஷித்தம் - அறிஞர்களால் இகழப்படுஞ்செயல்முதலியன.
நிஷேகம் - மணமகனும் மணமகளும் முதலிற் புணர்தல்.
நிஷேதம் - விலக்கு.
நிஷ்கர்ஷம் - நிச்சயம்.
நிஸ் (உபசர்க்கம்) - நீக்கம் விலக்கு நிச்சயம் முதலியபொருள்களைக்குறிக்கும்.

## நீ

நீ - முன்னிலையொருமைப்பெயர். (பன்மையில் நீங்கள், நீயிர், நீவிர், நீர்).
நீகம் - தவளை.
நீகாரம் - பனி, பனிக்கட்டி.
நீகான் - மீகாமன்.
நீக்கம் - நீங்குதல்.
நீக்கல் - அகற்றுதல், விலக்குதல்.
நீங்கல் - அகலுதல், விலகுதல்.
நீசம் - இழிவு, தாழ்வு, உச்சத்துக்கேழாமிராசி.
நீசன் - தாழ்ந்தசாதியான். [மிராசி.
நீடம் - பறவைக்கூடு.
நீடாணம் - கறி, குழம்பு. [நீளுதல்.
நீடித்தல் (நீடுதல்) - காலதாமதமாதல்,
நீட்சி - நீளம்.
நீட்டலளவை - கோல் முதலியவற்றை நீட்டியளக்குமளவு.
நீட்டல் - நீளச்செய்தல், கையிலெடுத்து நீட்டுதல், கொடுத்தல்.
நீட்டித்தல் - காலம்நீடிக்கச்செய்தல்.
நீண்டோன் - விட்டுணு, நெடியவன்.
நீதம் - நீதி.
நீதி - நீதிநூல், சன்மார்க்கம்.
நீத்தம் - வெள்ளம்.
நீத்தல் - கைவிடுதல், விலக்குதல்.
நீத்தவன் - அருகன், துறவி.
நீத்து - பெருக்கம்.
நீந்தல் - தண்ணீரில்நீந்துதல், கடத்தல்.
நீபம் - கடப்பமரம், *உத்தரட்டாதி நட்
நீமம் - ஒளி. [சத்திரம்.
நீரசம் - சுவைப்பொருளல்லாதவை, (உலோகவகை இரத்தினவகை முதலிய
நீரம் - நீர். [ன.)
நீரரண் - நீரினால் நகருக்குச் செய்யப்படுங்காவல். (அகழி முதலியன.)
நீராசனம் -ஆராத்திரிகம்.
நீராடல் - ஸ்நானஞ்செய்தல், நீர்விளை
நிராழி - கடல். [யாடுதல்.
நீரிழிவு - ஓர்நோய்.
நீர் - சலம், குணம், கடல்.
நீர்க்கடன் - பிதிரர்க்குச்செய்யுங் கடன்களிலொன்று. (கையினல்எள்ளுடன் நீரையள்ளியிறைத்தல்).
நீர்க்காகம் - ஓர்பறவை. [டம்.
நீர்க்கீழ் - உதயலக்கினத்துக்குநான்காமி
நீர்ச்சிரங்கு-சேற்றிலுலாவுதலாற் காலில் வருஞ்சிரங்கு.

நீர்த்தல் - பதனழிதல், நீர்காலுதல்.
நீர்நாய் - நாய்மீன்.
நீர்நாள் - பூராடம்.
நீர்நிலே - குளம் கிணறு முதலியன.
நீர்ப்பத்தர்-நீர்நிறைத்தற்காகக் குழாய்வடிவாகச் செய்யப்பட்ட ஓர்கருவி. (மணிமேகலே.)
நீர்ப்பூ - நீரில்மலரும் தாமரை முதலிய மலர்கள்.
நீர்மட்டம் - சமனறிகருவி.
நீர்மை - நற்குணம், நல்லஒளி.
நீலகண்டன் - ஓர்விஷப்பிராணி, சிவன், திருநீலகண்டநாயனர். வேதாந்தசூத்திரத்துக்குச் சைவபாடியஞ் செய்த ஒரு சிவாசாரியர்.
நீலகந்தி - ஓர்வகைமாணிக்கம். (சிலப்).
நீலம் - கறுப்புநிறம், இருள், ஓர்மேகம், கருங்குவளே, நஞ்சு, நீலரத்தினம், நீலக்கட்டி, ஓர்மலே, துரிசு.
நீலலோகிதன் - சிவன்.
நீலன் - சனி, நீலநிறமுடையவன்.
நீலாம்பரன் - பலபத்திரன்.
நீலி - காளி, துர்க்கை, பார்வதி, கருநிறப்பெண், அவுரிச்செடி, கறுப்புப்பூவுள்ள குறிஞ்சிமரம்.
நீலோற்பலம் - கருங்குவளே.
நீல் - நீலநிறம்.
நீவரம் - காடு.
நீவல் - தடவல், துடைத்தல், பூசுதல்.
நீவாரம் - குளநெல்.
நீவி (நீவியம்) - கொய்சகம், வஸ்திரம்.
நீளம் - நெடுமை, தூரம்.
நீளல் - நீளுதல், ஓடுதல், உயர்தல்.
நீளி - நெடியவன்.
நீளிடை - தூரம்.
நீறணிந்தோன் - சிவன்.
நீறு - சாம்பர், விபூதி, துகள், சுண்ணும்பு.
நீறுதல் - சாம்பராதல்.
நீற்றுப்பூசனி - ஓர்கொடி.

## நு

நுகம்-நுகத்தடி, கணேயமரம், பாரம், வலி.
நுகர்ச்சி - அனுபவம், உணவு.
நுகர்தல் - அனுபவித்தல், புசித்தல்.
நுகைதல் - இளகுதல், தளர்தல்.
நுகைவு - இளக்கம், தளர்வு.
நுங்கல் - விழுங்குதல். [பர்.)
நுங்கு- பனையினிளங்காய், (கொங்குனன் றுங்கை - உன்றங்கை, உன்றாய்.
நுசுப்பு - இடை.
நுடக்குதல் - கழுவுதல், (பெரும்பாகூ கூ க.) வளேயச்செய்தல்.
நுடங்குதல் - துவளுதல்.
நுட்பம்-நுண்மை, ஓர்கரந்துறைகோள், செய்யுளணிகளுளொன்று. (அரிதிணேக்கியுணருந்தன்மையுடையது.)
நுணங்கு - நுண்மை, *தேமல்.
நுணலே - தவளே.
நுணவை - எண்ணுெலே, மா.
நுணு - ஓர்மரம்.
நுணுகுதல் - நுண்மையாதல், மெலிதல்.
நுணுக்கம் - நுண்மை, உள்ளோசை.
நுணுக்கல் - சிறிதாக்கல், அரிதிலுணரவைத்தல்.
நுணுங்கு - துகள்.
நுண்மை- நுட்பம், மிகச்சிறியபொருள்.
நுதலல்- குறித்தல், சொல்லல்.
நுதல் - நெற்றி, புருவம், தலே. (புற).
நுதி - நுனி, தோத்திரம், *வணக்கம்.
நுதுத்தல் - தீ முதலியவற்றையவித்தல். (திருக் அலரறிவுறுத்தல் அ).
நுமர் (நும்மோர்) - நும்மவர்.
நும்பி - உன்றம்பி.
*நுரம்பு - சேறு. [மிழி.
நுரை - நீர்முதலியவற்றினுரை, நீர்க்குமிழி.
நுவணே - கல்வி, நுட்பம், மா, திணேமா.
நுவலல்-சொல்லுதல்.
நுவறுதல் - அராவுதல். (மலேபடு கூ௭.)
நுழை - சிறுவழி. (நுழைந்து செல்லத்தக்கவாயில்), சாளரவாயில், நுண்மை, (உ-ம்: நுழை நூற்கலிங்கம்).
நுழைதல்- வளேந்து நெளிந்து யாதேனுமொன்றினுட்புகுதல்.
நுளம்பு - ஓர்வகைப்பூச்சி.
நுளேச்சியர் - நெய்தனிலப்பெண்கள்.
நுளேயர் - நெய்தனிலமாக்கள்.
நுள்ளான் - ஊர்வனவற்றிலொன்று.
நுள்ளுதல் - கிள்ளுதல்.
நுறுக்கல் - துகளாக்கல்.
நுனி - நுதி, நுட்பம்.
நுனித்தல் - நுட்பமாயாராய்தல்.
நுனே - நுனி.

## நூ

நூ - எள்ளு.
நூக்கல் - நெய்வார்கருவிகளுளொன்று, செலுத்துதல், தள்ளுதல்.

நூதனம் - புதுமை.
நூபுரம் - காற்சிலம்பின்பேதம்.
நூலழகு கo - சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் நவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல் ஓசையுடைமை ஆழமுடைத்தாதல் முறையின்வைப்பு உலகமலையாமை விழுமியதுபயத்தல் விளங்குதாரணத்ததாதல் என்பன.
நூலின்வகை ௩ - முதனூல் வழிநூல் சார்புநூல் என்பன.
நூலோர் - பிராமணர், புலவர், மந்திரிமார்.
நூல் - பஞ்சினூல், சாத்திரம், ＊ஆலோசனை.
நூலில் - கொடிக்கொத்தான், தன்மெய்யிற்புதைந்த படையைப்பறித்துப் பகைவருடனெதிர்த்து திற்றல், கொலை, படர்கொடி, கொடிப்பிணைக்குயானை, குவியல். [ல்.
நூழை - துவாரம், நுட்பம், நுழைவாயி
நூறல் - அழித்தல், அறைதல், வெட்டல். (புற).
நூறு - ஓரெண், துகள், சுண்ணாம்பு.
நூறை - மலங்குமீன்.
நூற்குற்றம் கo - குன்றக்கூறல் மிகைபடக்கூறல் கூறியதுகூறல் மாறுகொளக்கூறல் வழூஉச்சொற்புணர்த்தல் மயங்கவைத்தல் வெற்றெனத்தொடுத்தல் மற்றொன்றுவிரித்தல் சென்றுதேய்ந்திறுதல் நின்று பயனின்மை என்பன.
நூற்பயன் ௪ - அறம் பொருள் இன்பம் வீடு என்பன.
நூற்பா - சூத்திரம். (அடிவரையறையற்றதாய்ப் பல்வகைப்பொருளைச் சில்வகையெழுத்தால் விளக்கக்கூறுவது).
நூற்றல் - நூல்நூற்றல்.
நூனம் - குறைவு, நிச்சயம்.
நூனாதிகம் - குறைநிறைகள்.
நூனாழி - நாடா.
நூன்முகம் - பாயிரம்.

## நெ

நெகிழிசை - வல்லெழுத்துவராமற் பாடு
நெகிழ்ச்சி - இளக்கம். [ஞ்செய்யுள்.
நெகிழ்தல் (ஞெகிழ்தல்) - இளகுதல், பூக்களலருதல், உருகுதல், நகைதல்.
நெகிழ்த்தல் - நெகிழச்செய்தல்.
நெகிழ்வு - தளர்வு, நுகைவு.
நெசவு - வஸ்திரம்நெய்தல்.
நெஞ்சு - மனம், மார்பு.
நெஞ்சுவிடுதூது - சைவசித்தாந்தநூல்களுளொன்று.
நெடி - சிள்வண்டு.
நெடித்தல் - காலதாமதஞ்செய்தல்.
நெடியோன் - விஷ்ணு, நீண்டவடிவமுடையவன்.
நெடிலடி - ஐஞ்சீரடி.
நெடில் - நெட்டெழுத்து, நீளம், மூங்கி
நெடுங்கணக்கு - அரிச்சுவடி. [ல்.
நெடுங்கழுத்தல் - ஒட்டகம்.
நெடுத்தல் - நீளுதல், தாமதப்படல்.
நெடுமி - நெடியவள்.
நெடுமை - நீளம்.
நெடுமொழி - தனது அல்லது தன்னரசன் முதலியோரது மேம்பாட்டையெடுத்துக்கூறல், சபதம்.
நெடுவல் - நீண்டவடிவுடையோன்.
நெட்டி - நெட்டு, நெட்டிச்செடி.
நெட்டு - காம்பு, கிளை.
நெட்டுயிர்ப்பு - பெருமூச்சு.
நெட்டுருப்படுத்தல் - பாடமாக்கல்.
நெட்டெழுத்து - ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்பன.
நெட்டை - நெடுமை.
நெண்டுதல் - நெளிதல். [த்திரம்.
நெய் - பசுநெய், கிணம், சித்திரைநட்ச
நெய்தல் - ஆடை முதலியவற்றைநெய்தல், குவளை, கடல்சார்ந்தநிலம்.
நெய்தற்பறை - சாப்பறை.
நெய்தற்றிறம் - நெய்தற்பண்.
நெய்தை - பெருமை.
நெய்த்தல் - கொழுத்தல்.
நெய்த்துடுப்பு - நெய்யையெடுத்து ஓமஞ்செய்யுங்கருவி.
நெய்த்தோர் - இரத்தம்.
நெய்ப்பு - கொழுப்பு.
நெய்யரி - பன்னாடை.
நெய்வார் - நெசவுகாரர்.
நெரி - நெரிவு, புடவை, முரிப்பு.
நெரிதல் - நொருங்குதல், இரிதல், கூந்தலின்மயிர்கள்சுரித்தல்.
நெரிவு - நெரிதல், பகை, நெருக்கம்.
நெருக்கம் - செறிவு.

நெருக்கல்-செறித்தல், வலாற்காரஞ்செய்தல்.
நெருங்கல் - செறிதல்.
நெருஞ்சி - ஓர்முட்செடி.
நெருடல் - உறுத்தித்தடவல். இழைகளைப்பொருத்தல்.
நெருடு - இழைகளின்பொருத்து, வஞ்சனை.
நெருநல் - முன்னைநாள்.
நெருப்பு - அக்கினி.
நெல் - நெல்லு, நெல்விடை, நெற்பயிர்.
நெல்லி - நெல்லிமரம்.
நெல்லிமுள்ளி - நெல்லிக்காய்வற்றல்.
நெளிதல் - வளைதல், வருந்துதல்.
நெளிப்பு - நெளிவு, பரிகாசம்.
நெளியல் - நெளிவுள்ளபொருள்.
நெளிர்தல் - எடுத்தலோசை.
நெளிவு - வளைவு.
நெறி - ஒழுக்கம், சன்மார்க்கம், முறை, வழி, நீதி, [நரம்புத்திரட்சி], முடக்கம் அல்லது வளைவு.
நெறித்தல் - முரிப்புக்கொள்ளல்.
நெறிப்பு - முரிப்பு.
நெற்குறி-நெல்லிற் பார்த்துச்சொல்லும் நிமித்தம்.
நெற்சப்பி - ஓர்புல்.
நெற்பாப்பு - கஉ குழியளவினதாகியவயல் நிலம்.
நெற்றி-நெற்றியென்னுமுறுப்பு, முன்னணிச்சேனை.
நெற்றிக்கண்ணன் - சிவன்.
நென்பு - ஏணிமுதலியவற்றின் படி, விலா.
நென்னல் - முன்னைநாள்.

## நே

நே - நேயம்.
நேசநாயனார் - சாலியர்குலத்திற்பிறந்து சிவனடியார்க்குஉடையுங் கீளும்நெய்து கொடுத்த ஒருஅடியார்.
நேசம் - அன்பு
நேசி தல் - அன்புவைத்தல்.
நேட[illegible] - தேடல்.
நேதா - நடப்பிப்பவன்.
நேத்திரம் - கண், பட்டுவிகற்பம்.
நேத்திரோற்சவம் - கண்ணுக்கு ஆனந்தமானகாட்சி.
நேபாளம் - ஓர்தேசம்.
நேமி-வட்டம், சக்கராயுதம், கடல், தேருருள், யோதிரம், பூமி, சக்கரவாகப்புள், திருமால், மூங்கில்.
நேமிநாதம் - ஓரிலக்கணநூல். (குணவீரபண்டிதராலியற்றப்பட்டது; கசு வெண்பாக்களையுடையது.)
நேமிநாதன் - திருமால், அருகன்.
நேமிப்புள் - சக்கரவாகப்பறவை.
நேயம் - அன்பு, எண்ணெய், நெய்.
நேயன் - நேசன்.
நேரசை - குற்றெழுத்தேனும் நெட்டெழுத்தேனும் தனித்து அல்லதுஒற்றடுத்துவரும் அசை.
நேரம் - காலம், சமயம்.
நேரலர், நேரார் - பகைவர்.
நேரி - சோழதேசத்திலுள்ள ஓர்மலை.
நேரிசையாசிரியப்பா - ஈற்றயலடி முச்சீராய் மற்றையடியெல்லாம்நாற்சீராய் வருமாசிரியப்பா.
நேரிசையொத்தாழிசைக்கலிப்பா - தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம் என்னும் நான்குறுப்புக்களைக்கொண்டு வருங்கலிப்பா.
நேரிசைவெண்பா - நான்கடிகளையுடையதாய் இரண்டாமடியிறுதிச்சீர் முதற்றொடைக்கேற்றதாய்த் தனித்துநிற்ப அடிமுழுதுமோரெதுகையாகவேனும் முன்னிரண்டுமோரெதுகையும் பின்னிரண்டும் மற்றோரெதுகையுமாக வேனும் வரும்வெண்பா.
நேரிடுதல்-பொருந்துதல்.
நேரியன், நேரிவெற்பன் - சோழன்.
நேரிழை - பெண்.
நேரேடு - நாவல்மரம்.
நேர் - ஒப்பு, பாதி, வளைவற்றது, நீளம், செவ்வை, நுட்பம், எதிர், நேரசை.
நேர்தல் - உடன்படல், எதிர்த்தல், கிட்டல், சம்பவித்தல், கொடுத்தல்.
நேர்திறம்-பாலையாழ்த்திறங்களுளொன்று. செவ்வழியாழ்த்திறங்களுளொன்று.
நேர்மை-இணக்கம், வளைவின்மை.
நேற்று- முதனாள்.

## நை

நைசர்க்கிகம்-இயற்கையானது.
நைடதம் - நளராசனைக்குறித்துப்பாடிய ஓர்காப்பியம்.
நைட்டிகம் - ஒழுக்கம், மனச்சலனமற்றிருத்தல்.

நைட்டிகன் - ஆயுள்பரியந்தம்பிரமசரியத்தையனுட்டிப்போன், ஒழுக்கமுடையோன்.
நைதல் - வருந்துதல்.
நைத்தல் - அழித்தல்.
நைமிசாரணியம் - சூதமுனிவரிடம் பதினெண்புராணங்களைக்கேட்ட முனிவர்களிருந்த தபோவனம்.
நைமித்திகம் - யாதேனுமோர் காரணம் பற்றிச்செய்யப்படுங்கருமம், (பிராயச்சித்தம் முதலியன).
நையம் (நசியம்) - மூக்கில்விட்டுதுமருந்து.
நையல் - துன்பம்.
நையாயிகன் - நியாயநூல்கற்றோன்.
நைரந்தரியம் - இடையீடில்லாமை.
நைவளம் - குறிஞ்சியாழ்த்திறங்களுளொன்று. (நட்டபாடை).
நைவு - வருத்தம்.
நைவேத்தியம் - தேவர்க்குக்கொடுக்குமுணவு.

## நொ

நொ - துன்பம், நோய்.
நொசிவு - நுட்பம், (உ-ம்: நொசிமருங்குல்), வருத்தம்.
நொச்சி - நொச்சிமரம், சிற்றூர், மதில்.
நொச்சிமாலை - நொச்சிப்பூமாலைசூடித்தன் மதில்காக்குந் திறத்தைக்கூறும் பிரபந்தம், தன்னரண்காத்தல்.
நொடி - கைந்நொடிப்பொழுது, காலவிரைவு, விடுகதை, சொல்.
நொடித்தல் - கையினால்நொடித்தல் அழித்தல், சொல்லல்.
நொடை - விலை. (உலகிய கசு).
நொண்டல் - விழுங்குதல், முகத்தல், (சிந்தா), முடவிநடத்தல்.
நொண்டி - முடவன்.
நொண்டுதல் - முடவிநடத்தல்.
நொதி - அருவருத்தசேறு.
நொதுத்தல் - தீமுதலியவற்றை அவித்தல்.
நொதுமலர் - அயலோர், குறளைகூறுவோர். (புற).
நொதுமல் - அயல், நொய்மை, விருப்பு வெறுப்பின்மை.
நொய் - அரிசிமுதலியவற்றின் சிறுகுறுணி.
நொய்து - மென்மையானது.
நொய்தெனல் - விரைவுக்குறிப்பு.
நொய்ம்மீன் - அயிலைமீன்.
நொய்ம்மை - எளிமை, வறுமை கனமற்றது, (மென்மையானது), விரைவு.
நொய்யன் - எளியவன், பலவீனன், வறியவன், வெஞ்சொற்பொருதவன்.
நொலை - சிற்றுண்டிகளுளொன்று, (எள்ளுருண்டை).
நொவ்வு - கனமின்மை, வருத்தம்.
நொள்ளல் - அருவருத்தசேறு.
நொள்ளல் - நுளம்பு, கொசுகு, முகத்தல்.
நொறில் - விரைவு, அடக்கம்.
நொறுங்கல் (நொருங்கல்) - பலதுண்டுகளாதல்.
நொறுங்கு - அரிசிமுதலியவற்றின் குறுணி.

## நோ

நோ - துன்பம், நோய், நோவு.
நோக்கம் - கண்பார்வை, கருத்து, விருப்பம்.
நோக்கல் - பார்த்தல், காத்தல்.
நோக்காடு - நோவு, பிரசவவேதனை.
நோக்கு - கண்பார்வை, அழகு, அறிவு.
நோக்குதல் - பார்த்தல், கிருபைவைத்தல்.
நோண்டல் - கிளறுதல்.
நோதல் - நோவடைதல், துன்பப்படல்.
நோய் - சரீரவருத்தம்.
நோய்முகன் - சனி.
நோற்றல் - தவஞ்செய்தல், பொறுத்தல்.
நோனமை - பொறுமை.
நோனர் - பகைவர்.
நோன்பு - தவம், விரதம்.
நோன்மை - வலிமை, பெருமை, பொறுமை.
நோன்றல் - சகித்தல், நிறுத்துதல், தள்ளுதல்.

## நௌ

நௌ - மரக்கலம்.

## ப

பஃறி - படகு, மரக்கலம், இரேவதிநட்சத்திரம்.
பஃறியர் - நெய்தனிலமாக்கள்.
பஃறொடைவெண்பா - நான்கின்மிக்க அடிகளைப்பெற்றுவரும் வெண்பா.
பகடம் - வெளிவேடம்.
பகடி - வேடக்காரன்.
பகடு - யானை, எருது. ஆணெருமை, ஆண்யானை, ஏர், (புற), பெருமை, ஓடம், பரப்பு, வலி, பேரெருது.
பகடை - சூதுக்குரியதாயங்களிலொன்று.

பகட்டு - வெளிவேடம்.
பகண்டை - சிலப்பறவை.
பகதத்தன் - ஓர் அரசன்.
பகந்தரம் (பவுந்திரம்) - குய்யத்திற்கும் பீசத்திற்கும் இடையிலுண்டாகும் ஒரு நோய்.
பகம் - கொக்கு, பெண்குறி, ஐசுவரியம் வீரியம் கீர்த்தி திருஞானம் வைராக்கியம் என்னும் அறுவகைக் குணங்கள்.
*பகரி - ஆவிரை.
பகர்தல் - சொல்லுதல், விற்றல்.
பகலவன் - சூரியன், பாணிநட்சத்திரம்.
பகல் - சூரியன், ஒளி, நாள், பகற்காலம். நடுநிலை, ஒருமுகூர்த்தமளவினதாகிய காலம், (இரண்டுநாழிகை), பிரிதல், பிரித்தல், நுகத்தாணி.
பகவதி - உமை, தருமதேவதை, துர்க்கை.
பகவதிநாள் - பூரநட்சத்திரம்.
பகவற்கீதை - பாரதயுத்தத்திற் கிருஷ்ணமூர்த்தி அருச்சுனனுக்குபதேசித்த ஞானநூல். (பலனைவிரும்பாமலேகருமங்களைச்செய்துகொண்டு துறவியாயிருத்தலாகிய கர்மயோகம் இந்நூலிற் கூறப்பட்டது).
பகவன் - சிவன், திருமால், பிரமன், அருகன், புதன், சூரியன், குரு.
பகவான் - சிவன், கடவுள்.
பகழி - அம்பு, அம்புக்குதை.
பகற்குறி - களவிற்புணருந் தலைவனுந்தலைவியும் பகற்காலத்திலெதிர்ப்படுதற்கு நியமித்த இடம்.
பகன் - பன்னிருசூரியர்களுளொருவன், ஒரிராக்கதன், வீமனாற்கொல்லப்பட்ட ஒரு அசுரன், கிருஷ்ணமூர்த்தியாற் கொல்லப்பட்ட ஒரு அசுரன்.
பகன்றை - கிலுகிலுப்பை, சிவதைக்கொடி.
பகாப்பதம் - பிரிக்கப்படாதசொல்.
பகிரங்கம் - மறைப்பின்மை.
பகிர் - வெளி.
பகிர்தல் - பங்கிடுதல், பிளத்தல்.
பகினி - உடன்பிறந்தாள்.
பகீரதன் - சூரியகுலத்தரசருளொருவன். (ஆகாயகங்கையை நிலவுலகத்தில் வருவித்தவன் இவனே).
பகுதி - சொற்களின் முதனிலை, பிரிவு, பங்கு, வருவாய், *சேனை.
பகுத்தல் - பிரித்தல், கொடுத்தல், வெட்டல்.
பகுபதம் - பகுதிமுதலியவுறுப்புக்களான் முடியும்பதம்.
பகுப்பு - பிரிவு.
பகுளம் - அபரபக்கம்.
பகை - விரோதம்.
பகைத்தல் - விரோதப்படல்.
பகைமை - பகை.
பகோளம் - அச்சுவினிமுதலிய உள நட்சத்திரங்களாற்பாவிக்கப்படும் பெரிய வட்டம்.
பக்கணம் - வேடர்சேரி, ஊர்.
பக்கம் (பட்சம்) - பறவையினிறகு, அம்பிறகு, வலமுமிடமுமாகியபக்கங்கள், வாதிபிரதிவாதிகளில் அல்லதுபடைமுகத்தில் ஒருபகுதி, நட்பு, பிரதமைமுதற்பதினைந்துதிதிகளையுடைய காலம். திதி, *இடம், கூட்டம்,
பக்கம் உ - சுக்கிலபக்கம் கிருஷ்ணபக்கம் என்பன.
பக்கரை - குதிரைக்கல்லணை.
பக்காந்தம் - அமாவாசை அல்லது பூரணை.
பக்கி (பக்ஷி) - பறவை.
பக்கிணி - அற்றைப்பகலோடும் அடுத்தநாட்பகலோடுங்கூடிய இரா, அல்லது முதனாளிரவோடும் அற்றையிரவோடுங்கூடிய பகல்.
பக்குவம் - சமைந்தது, பருவமானது, அழியுந்தரத்தது.
பக்குவன் - அமைதியுடையவன், பருவமுடையவன்.
பக்குவாசயம் - உண்ட அன்னம் நீர்முதலியவைகளைப் பக்குவப்படுத்தற்குரிய தாய் வயிற்றிலுள்ள இடம்.
பங்கம் - சேறு, பாவம், தோல்வி, பின்னம், வஸ்திரம், குற்றம், குளம், சிறுதகில்.
பங்கயம் - தாமரை.
பங்கயாசனன் - பிரமா.
பங்காளன் - பங்குக்காரன்.
பங்கி - மயிர், ஆண்மயிர், பகுப்பு.
பங்கீடு - பங்கிடுதல்.
பங்கு - சனி, கூறுபாடு, பாதி, முடவன்.
*பங்குசம் - தலைக்கோலம்.
பங்குரம் - அழிவுள்ளது.
பங்குனி - உத்தரநட்சத்திரம், பங்குனி மாதம்.
பங்கேருகம் - தாமரை.
பசப்பு - ஓர்வன்னநிறம், (பொன்னிறம்).
பசப்புதல் - ஓயாமற்பேசல், வீண்சொற்பேசுதல்.
பசலை - பொன்னிறம், காமத்தால் மேனி

யிலுண்டாகும் பசப்பு, வருத்தம். (முல்லைப் கஉ.)
பசளி - ஓர்கொடி.
பசளை - பசளி, எரு முதலிய உரம்.
பசனம் - துதி, வணக்கம், சமைத்தல்.
பசாசக்கை கூ - அகநிலைப்பசாசம் முகநிலைப்பசாசம் உகிர்நிலைப்பசாசம் என்பன. (சிலப்.)
பசி - வயிற்றிலுண்டாகும் பசி, மிடி.
பசிதம் - சாம்பர், விபூதி.
பசித்தல் - பசியுண்டாதல்.
பசிரி - பசிரிக்கீரை. (பயிரி).
பசு - உயிர், விலங்கினங்களுளொன்றாகிய பசு, மிருகம்.
பசு ரு - நந்தை பத்திரை சுரபி சுசீலை சுமனை என்பன.
பசுங்கதிர் - குளிர்ந்தகிரணம், சந்திரன்.
பசுநா - பராய்மரம்.
பசுந்து - பசுமை, அழகு.
பசுபதி - சிவன்.
பசுபந்தம் - ஓர்யாகம்.
பசுமந்தை - பசுத்தொழுவம்.
பசுமை - ஈரம், குளிர்மை, பச்சைநிறம்.
பசும்பிடி - பச்சிலையென்னும் மரம்.
பசும்புல் - பயிர், இளம்புல்.
பசும்பொன் - மாற்றுயர்ந்தபொன். (கிளிச்சிறையென்னும் பொன்னென மதுரை சுகo.)
பசை - அன்பு, ஈரம், ஒட்டும்பசை, விருப்பம்.
பசைதல் - ஒட்டுதல், அன்புகொள்ளுதல்.
பசைந்தார் - சினேகிதர்.
பச்சடி - கறிவகையுளொன்று.
பச்சாத்தாபம் - செய்தகருமத்தின்பிழைக்காக இரங்குதல்.
பச்சிமம் - மேற்குத்திக்கு, பின்.
பச்செனல் - செழித்திருத்தல்.
பச்சை - அவிக்கப்படாதது, ஈரம், தோல் பச்சைநிறம், புதன், மரகதமணி, ஓர் வாசனைச்செடி, (விபூதிப்பச்சை), திருமால், கலியாணத்துக்கு வரும் வரிசை, (சிந்). போர்வை (சிறுபாஉசு).
பச்சைக்கர்ப்பூரம் - ஓர்வகைக்கர்ப்பூரம்
பச்சைப்பெருமாள் - ஓர்வகைநெல், விஷ்ணு.
பஞ்சிலம் - தொகுதி.
பஞ்சகம் - ஐந்தின்கூட்டம்; வாரமுதலியவற்றின் கூட்டத்தால் விவாகமுதலிய சிலசுபமுகூர்த்தங்களுக்குண்டாகும் ஐவகைக் குற்றம், அவிட்டமுதலிய ஐந்நாட்சத்திரங்களால் மரணம் தகனம்முதலிய சில அபரகருமங்களிலுண்டாகுங்குற்றம்.
பஞ்சகர்த்தாக்கள் - பிரமா விட்டுணு ருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்பவர்கள்.
பஞ்சகல்யாணி - நெஞ்சும் முதுகும் தலையும் பக்கமிரண்டுமாகிய ஐந்திடங்களில் மலர்போலுஞ் சுட்டியுள்ள குதிரை. (பஞ்சபத்திரமெனவுங்கூறுவர்.)
பஞ்சகவ்வியம் - பால் தயிர் நெய் கோசலம் கோமயம் என்பன.
பஞ்சதசி - பூரணை, அமாவாசை.
பஞ்சதிராவிடர் - தெலுங்கர் திராவிடர் கன்னடர் மகாராஷ்டிரர் கூர்ச்சரர் என்பவர்கள்.
பஞ்சத்துவம் - மரணம்.
பஞ்சநதம் - திருவையாறென்னுந்தலம்.
பஞ்சபல்லவம் - பலாசு அத்தி அரசு ஆல் நாவல் என்னும்மரங்களின் தளிர்கள் (இந்த மரங்களின் பட்டைகள் பஞ்சத்துவக் எனப்படும்).
பஞ்சபர்வம் - அமாவாசை பூரணை சதுர்த்தசி அட்டமி சங்கிராந்தி என்பன.
பஞ்சபாதகங்கள் - கொலை களவு கட்குடித்தல் குருநிந்தை பொய் என்பன. (சிலநூல்களிற் சில வேறாகவுங்கூறப்பட்டன).
பஞ்சபூதத்தலங்கள் - திருவாரூர் திருவானைக்கா திருவண்ணாமலை திருக்காளத்தி சிதம்பரம் என்பன.
பஞ்சப்பிரமம் - ஈசானமுதலிய ஐந்துமந்திரங்கள்.
பஞ்சமம் - ஓர்பண், ஐந்தாவது.
பஞ்சமர் - ஐந்தாஞ்சாதியார். (புலையர்).
பஞ்சமி - ஐந்தாந்திதி.
பஞ்சம் - வறுமை, ஐந்து.
பஞ்சரத்தினம் - வைரம் பவளம் நீலம் பதுமராகம் முத்து என்பன.
பஞ்சரம் - செருந்திமரம், மரமுதலியவற்றாற்செய்த கூடு,
பஞ்சலக்கணம் - எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்திலக்கணங்கள், புராணத்திற்குரிய ஐவகையிலக்கணங்கள்.
பஞ்சவடி - ஓர் தலம். (சனத்தானத்திலுள்ளது).

பஞ்சவர் - பாண்டவர்கள்.
பஞ்சவர்தூதன் - கிருஷ்ணமூர்த்தி.
பஞ்சவன் - பாண்டியன்,
பஞ்சாக்கரம் - ஐந்தெழுத்துக்களுள்ள ஓர் மந்திரம்.
பஞ்சாங்கம் - வாரம் திதி நட்சத்திரம் யோகம் கரணம் என்னும் நாளினுறுப்புக்கள் ஐந்து, பட்டை இலை பூ வேர் பழம் என்னும் மரத்தினுறுப்புக்கள் ஐந்து, செபம் ஓமம் தர்ப்பணம் அபிடேகம் பிராமணபோசனம் என்னும் உபாசனை உறுப்புக்கள் ஐந்து.
பஞ்சாமிர்தம் - சர்க்கரை தயிர் தேன் செய் பால் என்னும் ஐந்தினதும் கலவை. (தேங்காய்த்துருவல் சர்க்கரை வாழைப்பழம் பலாப்பழம் தேன் என்பவற்றின் கலவையுமாம்).
பஞ்சாயம் - ஐவர்கூடிய நியாயசபை.
பஞ்சாயுதம் - விட்டுணுவின் ஆயுதம்ஐந்து, (அவை சங்கு சக்கரம் தண்டு வில் வாள் என்பன), சிறுவர்க்குக் கழுத்திலணியும் ஒரு ஆபரணம்.
பஞ்சாயதன் - விட்டுணு.
பஞ்சாய்க்கோரை - திரள்கோரை. (தண்டாளுகிய கோரை எனப் பெரும் உகள்).
பஞ்சார்க்கம் - சூரியனின் சம்பந்தமான ஐந்து உபக்கிரகங்கள். (தூமம் வியதீபாதம் பரிவேடம் இந்திரதனு தூமகேது என்பன).
பஞ்சானனம் - சிங்கம்.
பஞ்சானனன் - சிவன்.
பஞ்சி - பஞ்சு, பெருந்தூறு, வஸ்திரம்.
பஞ்சு - பருத்தி முதலியவற்றின் பஞ்சு.
பஞ்சுரம் - குறிஞ்சியாழ்த்திறங்களுளொன்று. [கவரிமா.
படகம் - டக்கையென்னுந் தோற்கருவி,
படகு - ஓடம்.
படங்கு - மேற்கட்டி, படாமாளிகை, (கூடாரம்), பெருங்கொடி.
படப்பை - ஊர்ப்புறம், பூஞ்சோலை, தோட்டம், பக்கம்.
படப்பொறி - பாம்பின் படத்திலுள்ள அடையாளம்.
படம் - வஸ்திரம், சித்திரப்படம், யானைமுகபடாம், இடுதிரை, விருதுக்கொடி, பாம்பின்படம்.
படர் - நினைவாலுண்டாகிய துன்பம், படைவீரர், வழி, நினைவு, செல்லுகை.
படர்க்கை - புறத்திலுள்ளபொருள்களை யுணர்த்துஞ்சொல்.
படர்ச்சி - பரந்தவடிவு, துன்பம்.
படர்தல் - செல்லுதல், பரவுதல், விரிதல், நினைத்தல். (உ-ம்: வள்ளியோர்ப்படர்ந்து புள்ளிற்போகி).
படர்தாமரை - ஓர்நோய். (சரீரத்திற்செறிபடர்வது).
படலம் - நூலின்பகுதி, அடர்த்தி, காசநீரினுற்கண்களிலுண்டாகும் மறைப்பு.
படலிகை - பெரும்பீர்க்கு, வட்டவடிவு, கைம்மணி, பூந்தட்டு, அடர்த்தியானது.
படலை - தோட்டமுதலியவற்றின் வாயிலிலிடும் படலை, தழை, பரந்தவடிவு, வாயகன்ற பறை, குதிரைகிங்கிணிமாலை, சிகைமாலை, கோத்தமாலை.
படல் - தட்டி, சாதல், அகப்படுதல், கெடுதல், அத்தமித்தல், முட்டுதல்.
படவு - படகு.
படனம் - படித்தல்.
படன் - படைவீரன்.
படாடோபம் - உடைப்பகட்டு. [கொடி.
படாம் - வஸ்திரம், இடுதிரை, பெருங்
படார் - சிறுதூறுகள். (முல்லைப் டுக.)
படி - ஒப்பு, நாழியென்னுமளவு, சோபானம், பூமி, வாயிற்படி, கற்படி, நிறை அறியும் படி, குதிரையங்கவடி, பகை, குணம், உருவம், (சிங்), தன்மை. (சிங்).
படிகம் - பளிங்கு, *பிச்சை.
படிக்கம் - துப்பற்பாத்திரம்.
படிக்காசுப்புலவர் - ஒருபுலவர், வைத்தியநாதநாவலரின் மாணுக்கர், தொண்டைமண்டலசதகம் பாடியவர்,
படிக்கால் - ஏணி,
படிகம் - கூத்து.
படிதல் - அமர்தல், அமைதல், ஈராடல், கலத்தல்.
படித்தல் - வாசித்தல், கற்றல்,
படித்திரம் - சூட்டிறைச்சி.
படித்துறை - படிகட்டப்பட்ட குளமுதலியன.
படிப்பு - கல்வி, வாசிப்பு,
படிமக்கலம் - கண்ணுடி.
படிமம் - கண்ணுடி, பாவை,

*படிமத்தவன் - வெறியாட்டாளன்.
படிமம் - கண்ணாடி.
படியகம் - படிக்கம். [ணு
படியளந்தோன், படியிடந்தோன்-விஷ்
படிவம் - உடல், உருவம், விரதம் தான் வழிபடுந்தெய்வம், (பெரும் [உசுஅ).
படிவர் - முனிவர்.
படிவு - அடக்கம்.
படிறர் - திருடர், தூர்த்தர், பொய்யர், வஞ்சகர்.
படிறு - களவு, பொய், வஞ்சகம்.
படினம் - வெற்றி, அமைவு.
படீரம் - சந்தனமரம், சிவப்பு
படு - மரக்குலை, கள், பேரறிவுடையோன், (நிபுணன்) நீர்நிலை, மடு.
படுகர் - பவளம், நீர்நிலை, இழிந்தேறும் [வழி.
படுகளம் - போர்க்களம்.
படுகாடு - சுடுகாடு.
படுகுழி - யானை முதலிய விலங்குகள் அகப்படும்படி அமைத்த பொறிக்கிடங்கு.
படுக்கை - சயனம்.
படுதல் - அகப்படுதல், அத்தமித்தல், உண்டாதல், அநுபவித்தல், அழிதல், முட்டுதல், பூத்தல், ஒலித்தல், தாழ்தல், (திருமுரு ௮௦),
படுத்தலோசை . தாழ்ந்தவோசை.
படுத்தல் - அகப்படுத்தல், வீழ்த்துதல் (புற), செய்தல். (புற), கொலைசெய்தல், சயனித்தல், செறித்தல், உண்டாக்கல்,
படுத்துவம் - சாமர்த்தியம்,
படுநிலம்-பாலைநிலம்,மயானம்,யுத்தபூமி
படுமலை- குறிஞ்சியாழ்த்திறங்களுளொன்று, ஒருவகைப்பாலைப்பண்-(புற).
படுவர் - கள்விற்போர்.
படுவி - அசதி, கள்விற்பவள்.
படுவை - தெப்பம்.
படை - ஆயுதம், சேனை, கலப்பை, நித்திரை, குதிரைக்கல்லணை, படுக்கை.
படைக்கலம் - ஆயுதம்,
படைச்சால் - உழவுச்சால்.
படைத்தலைவன் - சேனாபதி.
படைத்தல் - சிருட்டித்தல், சோறு முதலியவற்றை உண்கலத்திலிடுதல்,
படைத்துணை - போர்க்குதவிசெய்தல்.
படைப்பு- சிருட்டித்தொழில், செல்வம், (புற),
படைமடம் - வீரரல்லார் முதுகிட்டார் புண்பட்டார் இளையார் மூத்தாரென்னுமிவர்மேற் போர்க்குச்செல்லுதல்.

படைமுகம் - போர்முகம்,
படையல் - நிவேதனப்பொருள்.
[படையாச்சி - ஓர்சாதி.]
படையாளர் - ஆயுதவீரர். [ருறுப்பு.
படைவாள் - கலப்பை கலப்பையிணை
படைவீடு - ஆயுதசாலை, பாசறை.
பட்சபாதம் - ஒருபாற்கோடிநடத்தல்,
பட்சம் - பக்கம். பறவைகளினிறகு.
பட்சி - பறவை.
பட்சி ஙு - வல்லூறு ஆந்தை காகம் கோழி மயில் என்பன.
பட்சித்தல் - புசித்தல்,
பட்சிராசன் - கருடன்.
பட்டடை - கம்மியரது அடைகுறடு. (திருக் கூடா நட்பு க).
பட்டணத்துப்பிள்ளை - ஓர் ஞானி, (பட்டணத்தடிகள் என்பவரும் இவரே, இவர் பாடிய தோத்திரம் பட்டணத்தார் பாடலென வழங்குகின்றது.)
பட்டணம் - (பட்டினம்,, பலதீவிற்பண்டம் விற்குமூர், நெய்தனிலத்தூர்,
பட்டம் , நெற்றிப்பட்டம், அரசர்முதலியோர் கொடுக்கும் பட்டம், சிறந்த பதவி), குளம், வஸ்திரம், வாள், கவரிமா, ஆபரண முதலியவற்றிலுண்டாகும் பட்டம், விலங்கு துயிலிடம், வழி, பெருங்கொடி, மரக்கலவிகற்பம், பலபண்டம்.
பட்டன் - அதிபதி, பண்டிதன்.
பட்டாங்கு - மெய்.
பட்டாணி - ஓர் சாதியான்.
பட்டாபிடேகம்- அரசியலதிகாரத்தைக் கொடுத்து முடிசூட்டுதல்.
பட்டாரகன் - கடவுள், அரசன், குரு.
பட்டி - இடம், நாய், சந்திரசர்மருடைய புத்திரன், (விக்கிரமாதித்தனுடைய மந்திரியும் தம்பியுமாயிருந்தவன்), பசுக்கொட்டில், பலகறை, ஆட்டுப்பட்டி.
பட்டிகை - அரைக்கச்சு, செவ்வந்திச்செடி, தெப்பம், அரைஞாண்.
*பட்டிமம் - கல்விபயில்களம்.
பட்டிமை - களவு, வஞ்சகம்.
பட்டினி - உணவற்றிருத்தல்,
பட்டு - பட்டுவஸ்திரம், சிற்றூர்.
பட்டை - நீரிறைக்கும்பட்டை, மரங்களின்தோல்.
பட்டோசிதீக்ஷிதர்-பாணினீயவியாகரணத்தைச் சித்தாந்தகௌமுதியென்னும்பெயராற் பிரகரணஞ் செய்தவர்.

பணதரம் - பாம்பு.
பணம் - காசு, (உலகிய உக), பொற்காசு, பாம்பின்படம், பாம்பு.
பணவம் - ஓர்வகைப்படகம். [பங்கு.
பணவெடை-வராகனில்ஒன்பதிலொரு
பணவை - பரண், கழுகு.
பணமணி - நாகரத்தினம்.
பணி-ஆபரணம், செய்தொழில், ஏவல், பாம்பு, தோற்கருவி, சொல்.
பணிக்கம் - திருத்தம்.
பணிக்கன் - உபாத்தியாயன், கூத்துமுதலியன பயிற்றுவோன்.
பணிதல் - தாழ்தல், வணங்குதல்.
பணிதி - கதை.
பணித்தட்டார் - ஆபரணங்களைச்செய்யுந்தட்டார்.
பணித்தல் - ஏவுதல், கட்டளையிடல், மிதித்தல், (சிந்), தாழ்த்தல், சொல்லுதல்.
பணித்தூசு - பலவகையான சித்திரங்களமையப்பெற்ற வஸ்திரம்.
பணிப்பெண் - குற்றேவற்காரி.
பணிலம் - சங்கு, சலஞ்சலமென்னுஞ் சங்கு.
பணிவு - தாழ்வு, வணக்கம்.
பணை-பருமை, வயல், யானைக்கூட்டம். மருதநிலம், குதிரைப்பந்தி, மூங்கில். அரசமரம், மரக்கொம்பு, பேரிகை, மருதநிலப்பறை, நீர்நிலை, *விலங்கின் படுக்கை, வாத்தியப்பொது.
பணைத்தல் - பருத்தல், *தவறுபடல். (தொல் உரி கஅ).
பணைப்பு - பருமை.
பண் - அமைவு, இசைப்பாட்டு, நிறைநரம்புள்ளது, குதிரைக்கல்லணை.
பண் ச - பாலை குறிஞ்சி மருதம் செவ்வழி என்பன.
பண்செய்தல் - பண்படுத்தல்.
பண்டசாலை - களஞ்சியம். (திரவியசாலை).
பண்டமாற்று-ஒருபொருளைக் கொடுத்து மற்றொருபொருளை வாங்குதல்.
பண்டம் - பலபண்டம், பொன்.
பண்டர் - பாணர், பாடற்கிழ்மாக்கள்.
பண்டாரம் - திரவியசாலை. திரவியம், பண்டாரச்சாதியான். (இப்பொருளில்பட்டாரம் என்பதன் றிரிபு).
பண்டி-சகடம், உரோகிணிநட்சத்திரம், வயிறு.
பண்டிகை - ஓர்வகைச்சிற்பவேலை, விழா, விழாவுக்குரியநாள்.
பண்டிதன்-புதன், சுக்கிரன், புலவன் வியாழன்.
பண்டு - பழமை.
பண்ணல் - செய்தல்.
பண்ணவர் - தேவர், முனிவர், பாணர்.
பண்ணவன் - அருகன், கடவுள், முனிவன், தேவன், குரு, திண்ணியன்.
பண்ணிகாரம் - அப்பவர்க்கம், பலபண்டம்.
பண்ணியமாது - வேசை,
பண்ணியம் - கடை, உண்ணுதற்குரிய பலபண்டங்கள்.
பண்ணுதல்- செய்தல், ஏற்பஅமைத்தல்.
பண்ணுறுத்தல் - சீர்ப்படுத்துதல், தேர்முதலியவற்றிற் குதிரை முதலியவற்றைப் பூட்டிச் செலுத்துதற்காயத்தமாய்வைத்தல்.
பண்ணை - ஆடவர்கூட்டம், மகளிர்கூட்டம், மகளிர்விளையாட்டு, மருதநிலம். வயல், நீர்நிலை, தோட்டம், விலங்கின் படுக்கை, ஓர்புதல்.
பண்படுதல் - சீர்ப்படுதல்.
பண்பி - பண்பையுடைய பொருள்.
பண்பு - குணம்.
பண்புச்சொல் - உரிச்சொல்.
பண்புத்தொகை - பண்பை யுணர்த்தும் ஆகிய என்னுஞ் சொற்றொக்குநிற்குந் தொடர்மொழி.
பண்புரைப்போர் - தூதர்.
பதகம் - பறவை.
பதகர் - பாதகர், கீழோர்.
பதக்கம் - மார்பணிகளுளொன்று.
பதக்கு - இரண்டு குறுணிகொண்டமுகத்தலளவை.
பதங்கம் - பறவைப்பொது, விட்டிற்பறவை, [சாம்பிராணி முதலியவற்றிலெடுக்குந்தயிலம்.]
பதங்கன் - சூரியன்.
பதச்சேதம் - செய்யுள் முதலியவற்றிலுள்ளசொற்களைத் தனித்தனிபிரித்தல்.
பதஞ்சலி - ஓரிருடி, (பாணினிசூத்திரத்துக்குப் பாடியமியற்றியவர்; பாதஞ்சலமென்னும் யோகசூத்திர மியற்றியவருமிவரே.) ஆதிசேடனுடைய அவதாரமாகக் கோயிற் புராணத்திற்கூறப்பட்டசிவனடியார்.
பதடி - பதர்.
பதனம் - மதிலுண்மேடை.

பதத்திரம் - சிறகு.
பதநீர் - கருப்பநீர்.
*பதப்பாடு - மதிலுறுப்பு, பசப்படுதல்.
பதம் - சொல், கால், சோறு, நாழிகை, பக்குவம், பதவி, காலம், வழி, இன்பம், உணவு, வேதத்திலோருறுப்பு, செவ்வி. அறுகம்புல், இளமடல், வரிசை.
பதரி- இலந்தை,
பதர் - பதடி.
பதலை - ஒருகட்பறைவாய்ப்பறை, மலை, சாடி. [தானம்.
பதவி- உலகம், அரசர்முதலியவர்களின்
பதவி ச - சாலோக்கியம் சாமீப்பியம் சாரூப்பியம் சாயுச்சியம் என்பன.
*பதவு - கதவு.
பதவை - வழி.
பதறல் - நடுங்கல், பதைத்தல்.
பதனம் - விழுதல்,
பதனழிதல் - ஊழ்த்தல்.
பதனிடுதல் - மிருதுவாக்கல்.
பதன் - பக்குவம்.
பதாகினி - சேனை.
பதாகை - பெருங்கொடி.
பதாதி - காலாள், சேனை, சேனைத்தொகைகளுளொன்று.
பதார்த்தம் - பொருள், சொற்பொருள்.
பதி - கடவுள், அரசன், தலைவன், கணவன், குரு, மூத்தோன், இடம், ஊர், நிலத்திற்பதித்து வேரூன்றச்செய்த கொடிமுதலியன.
பதிகம்- பாயிரம், (பலவகைப்பொருளைத் தொகுத்துச் சொல்வது), பிரபந்தவகையுளொன்று. (ஒரு பொருளைக் குறித்துப்பாடும் பத்துச்செய்யுள்.)
பதிகன் - வழிச்செல்வோன்.
பதிதல் - அழுந்துதல், தாழ்தல், கீழ்ப்படிதல், பள்ளமாதல். [நவறினோன்.
பதிதன் - குலவொழுக்கமுதலியவற்றிற்
பதித்தல் - அழுந்துதல்.
*பதியம் - பாசி,
பதிரன் (வதிரன்) - செவிடன்.
பதிவிரதை - நாயகனைத் தெய்வமென்று கொண்டொழுகும் மனைவி.
பதிவு - பள்ளம்.
பதிற்றந்தாதி - பத்துவெண்பாவினால் அல்லது பத்துக் கலித்துறையினால் அந்தாதியாகப் பாடும் பிரபந்தம்.
பதிற்றுப்பத்து- நூறுவெண்பாக்களடங்கிய ஓர் நூல். (ஒவ்வோர் பத்தும் ஒவ்வோர்புலவராற் பாடப்பட்டது.)
பதினெண்கீழ்க்கணக்கு- நாலடியார்நான்மணிக்கடிகை இன்னாநாற்பது இனியவைநாற்பது கார்நாற்பது களவழிநாற்பது. திணைநூல்கள் ஐந்து முப்பால் திரிகடுகம் ஆசாரக்கோவை பழமொழிநானூறு சிறுபஞ்சமூலம் முதுமொழிக்காஞ்சி ஏலாதி என்பன. (நாலடி நான்மணிநானாற்பதைந்திணைமுப்பால் கடுகங்கோவை பழமொழி - மாமூலமின்னிலைசொல் காஞ்சியுட னேலாதியென்பவே கைந்நிலையவாங் கீழ்க்கணக்குஎன்பது. இந்நூற்பெயர்களையுணர்த்தும் வெண்பா. இதிற் சிலபெயர்களை வேறுக்கிக்கூறுவாருமுளர்).
பதினோருருத்திராடல் - கொட்டி குரவை குடம் குடை வெறி மல் பேடு பாவை கடையம் பாண்டரங்கம் மரக்கால் என்பன.
பதுக்கம் - ஒளிப்பு, கபடம்
பதுக்கை - சிறுதிடர், பாறை,சிறுதூறு, பரலடுத்துயர்ந்தநிலம், கற்குவியல்.
பதுங்குதல் - ஒடுங்குதல்.
பதுமகோமளை -சூரபன்மனுடையமனைவி
பதுமநாபன் - விட்டுணு.
பதுமநிதி - நவநிதிகளிலொன்று, (தாமரைவடிவாயிருப்பது).
பதுமம் - க00 கோடி, தாமரை, கஅ புராணங்களுளொன்று, பதுமாசனம் (இருதொடைகளின்மேலும் இரண்டு கால்களையும் மாறி வைத்திருத்தல்), முடியுறுப்பைந்துளொன்று, யானைத்துதிக்கைப்பொறி, சேனைவியூகங்களுளொன்று, தாமரைமலர்வடிவாகநிறுத்தல்.)பதுமநிதி.
பதுமயோனி - பிரமன்.
பதுமராகம்- மாணிக்கவகையுளொன்று.
பதுமன் - அட்டநாகங்களுளொன்று.
பதுமாகரம் - தாமரைத்தடாகம்.
பதுமாவதி- ஒருநதி, ஒருமுனிபத்தினி.
பதுமினி - நால்வகைப் பெண்களுளொருத்தி. [காளி.
பதுமை - இலக்குமி, பிரதிமை, (பாவை),
பதைத்தல்-பதறுதல். [யெழுதியபத்ததி
பத்ததி- வழி,கிரியைகளைக்கிரமப்படுத்தி

பத்தர் - தொண்டர், [தட்டார்], நீர்ப்பத்தர். (பத்தல் எனவும்).
பத்தனம் - பட்டணம்.
பத்தி - கடவுள் குரு பிதா மாதா முதலியோரில் வைக்கும் அன்பு, ஒழுக்கம், நிரை, வீட்டிறப்பு.
பத்திமார்க்கம் - விதிக்கிலையயாவிடினும் அன்பின் வழியேசெய்யும் வழிபாட்டு முறை.
பத்திமான் - பத்தியுடையோன்.
பத்திமை - அன்புடைமை.
பத்தியம் - வடநூலிற் செய்யுணடையாகப்பாடப்பட்ட காவியம், நன்மை, கடுமரம், நோய்க்கியைந்த போசனம், அவுரிச்செடி.
பத்திரகாளி - ஓர் தேவி.
பத்திரகிரியார் - பட்டினத்தடிகளிடம் ஞானோபதேசம்பெற்றதோர் துறவி.
பத்திரம் - பறவைகளினிறகு, அம்பு, இலை, அழகு, உடைவாள், காகிதம், சாதனபத்திரம், திருமுகம், நன்மை பத்திராசனம், (பீசத்தின்கீழ்ச் சீவனியிடத்து இருகாற் பாட்டையும் வைத்து இரண்டு பாதங்களையும் இரண்டு கைகளாலும் இறுகப்பிடித்து அசையாதிருத்தல் *மலை.
பத்திரன் - வீரபத்திரக்கடவுள், நன்மை செய்வோன்.
பத்திராசுவம் - சம்புத்தீவின் ஒன்பது கண்டங்களிலொன்று. [வை.
பத்திரி - அம்பு. இலை, காளி, குதிரை, பற
பத்திரிகை - திருமுகம், புத்தகமாக்கப்படாத எழுத்துப் பிரதிகள்.
பத்திரை - துதியை சத்தமி துவாதசி என்னுந்திதிகள், நற்பசு, காளி, ஏழாவதாகிய கரணம்.
பத்திரைகேள்வன் - வீரபத்திரன்.
பத்தினி - விதிமுறையாக மணஞ்செய்யப்பட்ட மனைவி.
பத்து - ஓரெண்.
பத்துப்பாட்டு - பத்துப்பாடல்கள் ஒன்றிய நூல். (நூறடிச்சிறுமை நூற்றுப் பத்தளவே யேறியவடியினீரைம்பாட்டுத் தொடுப்பது பத்துப் பாட்டெனவருமே; அதுவேஅகவலின்வருமென வறைகுநர் புலவர் என்பதுவிதி; திருமுருகாற்றுப்படை பொருநராற்றுப்படை சிறுபாணாற்றுப்படை பெரும்பாணாற்றுப்படை முல்லைப்பாட்டு மதுரைக்காஞ்சி நெடுநல்வாடை குறிஞ்சிப்பாட்டு பட்டினப்பாலை மலைபடுகடாம் என்பனவற்றின் றொகுதி பத்துப்பாட்டென வழங்குகின்றது).
பந்தம் - கட்டு, யாப்பிலக்கணத்திற் செய்யுளுறுப்புக்களுளொன்றாகியதளை, தீப்பந்தம், திரட்சி, தொடர்பு, மயிர்முடி (ஆண்பான்மயிர்முடியெனப் பிங்), முடிச்சு, சுற்றம், அழகு, நூல், மதில், பொ
பந்தர் - பந்தல். [ன்.
பந்தர்ப்பாடு - பொறிவுதுறைவாதல்.
பந்தனம் - கட்டுப்பாடு.
பந்தனை - மகள்.
பந்தன் - ஓர் வாணிகன் (இவன்மேல் ஔவையார் பந்தனந்தாதியென்னும் நூலைப்பாடினர்).
பந்தி - நிரை. குதிரை யானை முதலியன நிற்குஞ்சாலை. போசனகாலத்தில், நிரைக்கப்பட்ட ஒருசாதியாரதுபந்தி, ஒருசந்தம். எண்களின்தானநிரைப்பு.
பந்தித்தல் - கட்டுதல்.
பந்து - எறியும் பந்து, சுற்றம், மட்டத்துருத்தி, திரிகை.
பந்தத்துவம் - இனத்தன்மை.
பப்பிரவாகன் - அருச்சுனனுக்குச் சித்திராங்கதையிடத்துப் பிறந்தபுதல்வன்.
பப்பு - பரப்பு, ஒப்பு.
பப்புவர் - புகழ்வோர்.
பம் - விண்மீன்.
பம்பரம் - சுழற்றி விளையாடுங்கருவி.
பம்புதல் - பரந்து நெருங்குதல், கிளர்தல்.
பம்பை - முல்லைநிலப் பறை, (தடாரி), வாத்தியப்பொது, ஓர்நதி.
பயசு - நீர், பால்.
பயணம் - பிரயாணம்.
பயத்தல் - பயன்விளைத்தல், பிறப்பித்தல்,
பயந்தாள் - தாய். [கிடைத்தல்.
பயப்பு - பயன்.
பயம் - அச்சம், அமிர்தம், நீர், பால், நீர்நிலை, பயன்.
பயம்பு - குழி, பள்ளம், நீர்நிலை, யானைபடுகுழி.
பயல் - பள்ளம், பாதி, சிறுபிள்ளை.
பயறி - ஓர்மரம். [திரம்
பயறு - ஓர் தானியம், சித்திரை நட்சத்

பயனிலாள் - வேசை.
பயனிலை - வாக்கியத்தின்முடிவு.
பயன் - உரை, நீர், பலன், பால்.
பயன்படுதல் - பிரயோசனப்படுதல்.
பயானகம் - அச்சம்.
பயிக்கம் - பிச்சை.
பயிர்-நெய்முதலியபயிர்கள், ஒலி, பயில், மிருகங்கள்ஒன்றைமற்ஜென்றுவிளிக் குங் குறிப்பு, பறவைக்குரல்.
பயிர்த்தல் - அருவருத்தல், தழைத்தல், அழைத்தல். (சிங்.)
பயிலல்- பழகுதல், அருவருத்தல், எடுத் தலோசை, நெருங்கல்.
பயில் - சைகை, சொல்.
பயில்வு - பயிற்சி.
பயினி - புணர்ச்சி.
பயின் - பிசின், உட்படுகுருத்து.
பயோததி - பாற்கடல்.
பயோதரப்பத்து - பெண்களின் முலை களை ஆசிரியவிருத்தத்தாலாதல் கலித் துறையாலாதல், பத்துச் செய்யுளாற் பாடுவது.
பயோதரம் - மேகம், முலை.
பயோவாகம் - மேகம். [ஒருநதி.
பயோஷ்ணி - விதர்ப்பதேசத்திற் பாயும்
பரகதி - முத்தி. [ஒருநதி.
பரகிதம் - கிரகபுடங்களைக் கணித்தற்கு ரிய ஓர்விதி.
பரகீயம் - பிறன் பொருளாயிருப்பது.
பரசமயகோளரி - திருஞானசம்பந்தர்.
பரசு- கோடாலி,மழுப்படை, *மூங்கில்
பரசுதல் - துதித்தல்.
பரசுபாணி - சிவன்.
பரசுராமன் - சமதக்கினியென்னும் அந் தணருக்கு இரேணுகைவயிற்றில் திரு மாலின்அவதாரமாகப்பிறந்தஒருவீரர், (கார்த்தவீரியனென்பவன் தன் பிதா வைக் கொன்றமைக்காக அவ்வரசனு டைய குலத்தையெல்லாங்கொலைத்து அவர்களுடைய இரத்தத்தாற் பிதிர் தர்ப்பணஞ்செய்தவர்).
பரசுவதம் - மழுப்படை.
பரஞ்சுடர்- சுயம்பிரகாசமாயிருக்குங்கட
பரஞ்சோதி - பரஞ்சுடர். [வுள்.
பரடு - கரடு. (காலின் கீழ்ப்பொருத்து).
பரணம் - போஷிப்பு.
பரணர்-கடைச்சங்கப்புலவருளொருவர்.
பரணி - அடுப்பு,ஓர்வகைச்செப்பு. (சிங் ககூ0சு), ஆயிரம்யானையைக் கொன்ற வீரனைத் தலைமகனாகக் கொண்டு அவன் கீர்த்திவிளங்க விதிப்படி
பரண் - இதணம். [பாடும் பிரபந்தம்.
பரதந்திரம்-சுதந்திரமின்மை. [விகற்பம்.
பரதம்-பரதகண்டம், பரதநூல்,கூத்தின்
பரதர் - வைசியர், நெய்தனிலமாக்கள். [இப்பொருளிற் பரதவர் எனவும்)
பரதன் - இராம சுவாமியின் தம்பியரு ளொருவன், சந்திரவம்சத்தரசருளொ ருவன், ஒருமுனிவர், (சடபரதர்), நட னஞ்செய்வோன். துஷ்யந்தனுக்குச் சகுந்தலையிடத்திற்பிறந்த ஒருஅரசன்.
பரத்தர் - தூர்த்தர்.
பரத்தல் - பரம்புதல்.
பரத்தியர் - நெய்தனிலப்பெண்கள்.
பரத்துவாசன்- ஒருமுனிவர் (துரோணா சாரியருடைய தந்தை).
பரத்தை-பொருள்கொடுக்குமாடவரைச்
பரந்தாமன் - திருமால். [சேர்பவள்.
பரபட்சம் . பிறர்மதம்.
பரபதம் - மோட்சம்.
பரபரப்பு - விரைவுக்குறிப்பு.
பரபுட்டம் - குயில், (முட்டையினின்று குஞ்சை வெளிப்படுத்துதற் கியலாத குயிற்பறவை காகத்தின் முட்டைக ளுடன் தன்முட்டைகளைச்சேர்த்துக் காகத்தின்முட்டைகளில்அத்தொகை யானவற்றைஅகற்றிவிடும்.அதன்மேல் அவை சிலகாலம்காகத்தினாற் காக்கப் பட்டு, முட்டையினின்று வெளிப்ப டுத்தப்பெற்று வளருங்காலத்திற்பிரத் தப்படுமென்பர்.)
பரப்பிரமம் - கடவுள்.
பரப்பு - விசாலம், நிலவளவைகளுளொ ன்று. (கஅ குழி கொண்டது நிலப் பரப்பு; கஉ குழி கொண்டது நெற் பரப்பு). [ஒன்று.
பரமகம்சம்- சன்னியாசவகை நான்குள்
பரமசுந்தரி - தருமதேவதை.
பரமநாழிகை - முழுநாழிகை.
பரமம் - சிரேட்டமானது,முதன்மையா
பரமன் - சிவன், கடவுள். [னது.
பரமாணு- நிலமுதலியபூதங்களின் அதி சூக்குமமானபாகம்.
பரமான்மா - பரப்பிரமம்.

பரமாயு - பூரணாயுள்.
பரமார்த்தம் - உண்மை.
பரமுத்தி - சாயுச்சியம்.
பரமேசுரன் - முத்தொழில்களை மூவராய் நின்று நடத்துங்கடவுள். (சகுணப்பிரமம்). [விட்டுணு,பிரமா.
பரமேட்டி - அருகன், கடவுள், சிவன்,
பரம்-பிரமம், பாரம், மேன்மை, மோட்சம்,கவசம்,சரீரம், குதிரைக்கல்லணை, முன்பு, பின், அன்னியமானது.
பரம்பரை - தொன்றுதொட்டுவழக்கம், தொடர்பு, சந்ததி.
பரம்பு - கழனிதிருத்தும்வகை.
பரம்புதல் - பரவுதல்.
பராசசேகரம் - ஓர் வைத்தியநூல்,(பராசசேகரராசனுலியற்றப்பட்டது].
பரராசசேகரன்-யாழ்ப்பாணத்தையாண்டஓர்தமிழரசன்.
பரர் - அன்னியர், பகைவர்.
பரல் - பருக்கைக்கல், விதை.
பரவசம் - பிறர்வசமாதல்.
பரவர் - வலைஞர். [வணங்கல்.
பரவல் (பராவல்) - பரத்தல், துதித்தல்,
பரவெளி-பராகாசம்.
பரவை-கடல்.சுந்தரமூர்த்தியின்மனைவி
பரப்பு*மதில்,*உப்பு. [ன்,சத்தரு.
பரன்-கடவுள்,சிவன், விஷ்ணு, அன்னிய
பரஸ்பரம் - ஒன்றுக்கொன்று.
பராகம்-துகள், பூந்தாதிற்றூள், குங்குமமுதலியவற்றின்றுகள்.
பராக்கிரமம் - வீரம்.
பராக்கு-பொழுதுபோக்கு,ஓர்வகைப்பா
பராசத்தி - சைவநூல்களிற்கூறப்பட்ட ஐவகைச்சத்திகளிலொன்று.
பராசயம் - தோல்வி.
பராசரகோரை - பராசரமுனிவரால்வடமொழியிற் செய்யப்பட்ட ஒரு சோதிடநூல்.
பராசரன் - வியாசமுனிவரின்பிதா.
பராபரன் - சிவன், கடவுள்.
பராபரை - பார்வதி.
பராபவ - அறுபதுவருடங்களிலொன்று
பராபவம் - தோல்வி, அவமானம்.
பராமரிசம் - தீர்க்கமாயாராய்தல்.
பராமுகம்- கண்ணோட்டமின்மை.
பராயணம் - யாதேனுமொன்றில் அதிகவிருப்புடையனாதல்.
பராய் - பராய்மரம். [த்தஅடி.
பராரை (பரு+அரை)- மரங்களின்பரு
பரார்த்தம் - பிரமாயுளின்பிற்பாதி, மத்தியம்பத்துக்கொண்ட ஒருபேரெண்,
பரி - குதிரை,குதிரையின்கதி,விரைவு, அச்சுவினிநட்சத்திரம்,பெருமை, வருத்தம், மாயம், பருத்திமரம், பருத்திப்பஞ்சு. உயர்ச்சி, சுமை, கள், செல்லுகை,சூழ முற்றாக மிக என்றற்றொடக்கத்த பொருள்களைத் தரும் உபசர்க்கம்.
பரிகம்- அகழி, மதில், மதிலுண்மேடை, எழுப்படை, இரு பத்தேழு யோகங்களுளொன்று. [தீர்க்கமுயலுதல்.
பரிகரித்தல் - நோய் முதலியவைகளைத்
பரிகர்மம் - சுத்தி, கணிதத்தில்கூட்டல் முதலிய எண்வகைக் கருமங்கள்.
பரிகலம்- பாத்திரம், போசனபாத்திரம், பீடை.
பரிகாசம்- சிரிப்பு, சிரிக்கத்தக்கசெயல்.
பரிகாரம்- நோய்முதலியவற்றை நீக்குதற்குச்செய்யும்பாவிப்பு, பிராயச்சித்தம்
பரிகாரி - வைத்தியன், நாவிதன்.
பரிகீர்த்தனை - ஒன்றையே பலமுறை சொல்லுதல்.
பரிகை- அகழி,*மதிலுள்ளுயர்ந்தநிலம்
பரிக்கிரகம் - ஏற்றுக்கொள்ளுதல்.
பரிக்கிரமம் - வலம்வருதல்.
பரிக்கிரியை - சமையற்றொழிலுக்குவேண்டிய ஆயத்தங்கள்செய்தல், ஓரிடத்தைவேலி முதலியவற்றால் வளைத்தடைத்தல்.
பரிசம்-பரிசித்தல்.(ஐம்புலன்களிலொன்
பரிசயம் - பயிற்சி,சிநேகம். [று).
பரிசரன் - பரிசாரகன்.
பரிசனம் - பரிவாரம், சுற்றம்.
பரிசனவேதி - பட்டவுடன் இழிந்த உலோகங்களைப்பொன்னாக்கும்மருந்து.
பரிசனன் - காற்று.
பரிசாரகம் (பரிசரியை) - ஏவல்வேலை.
பரிசாரகன் - ஏவல்வேலைக்காரன்.
பரிசிட்டம் - கூறப்படாதெஞ்சியநூற்பாகம், உண்டெஞ்சிய உணவு.
பரிசித்தல் - தீண்டுதல்.
பரிசிரமம்- வேலைமுதலியவற்றால்வரும் மெய்வருத்தம்
பரிசிலாளர் - இரப்போர்.

பரிசில் - பரிசு.
பரிசு - கற்றவர் முதலானவர்க்குக்கொடுக்கும் வெகுமதி, தன்மை.
பரிசுத்தம்-பலவாற்றாலுந்தூய்மையுடைமை.
பரிசை - வாள்முதலிய ஆயுதங்களாற் பகைவர்வெட்டும்போது அதனைத்தடுத்தற்காய் இடக்கையிலேந்துங்கருவி
பரிச்சித்து - அருச்சுனனுடைய பௌத்திரன்.
பரிச்சேதம் - நூற்கூறுபாடு, பகுத்தறிவு.
பரிச்சேதம் ௩ - காலபரிச்சேதம் தேசபரிச்சேதம் வஸ்துபரிச்சேதம் என்பன. (காலபரிச்சேதமாவது ஒருகாலத்துண்டு மற்றொருகாலத்தின்றென்பது. தேசபரிச்சேதமாவது ஒருதேசத்துண்டு மற்றொருதேசத்தின்றென்பது. வஸ்துபரிச்சேதமாவது ஒருபொருளிது மற்றொருபொருளிஃதன்றென்பது).
பரிணமித்தல் (பரிணாமம்) - இயற்கைமாறுதல், விகாரப்படுதல்.
பரிணயம் - விவாகம்.
பரிணாகம் - அகலம்.
பரிதபித்தல்- துக்கத்தினால் வருந்துதல்.
பரிதல்-அன்புபாராட்டுதல், அறுதல்,ஓடுதல், இரங்குதல்,வருந்துதல்,முறிதல்.
பரிதாபம்-மனத்துன்பம், துக்கம், பயம்.
பரிதாபி-அறுபதுவருடங்களுளொன்று.
பரிதானம் - கைக்கூலி பண்டமாற்று, அரையிற் றரித்த வஸ்திரம்.
பரிதி - சூரியன், சக்கராயுதம், தேர்ச்சில், வட்டவடிவு, பரிவேடம், வட்டத்தின்சுற்றளவு, யூபத்தம்பம், ஓமாக்கினிக்கு நாற்றிசைகளிலும் வைக்கப்படும் சமித்து.
பரிதேவனம்-புலம்புதல்.
பரித்தல் - காத்தல், சுமத்தல், தரித்தல், பாதுகாத்தல்.
பரித்தியாகம்-சிறிதுந்தொடர்பின்றிவிடுதல்.
பரித்திராணம்- ஒருவாற்றானுந்தமக்குத் தீங்கு முதவியனவாராவண்ணங்காத்தல்.
பரிபக்குவம் - பலவாற்றானும் பக்குவமுடைமை.
பரிபந்தி - எதிரி, கள்வன்.
பரிபவம்(பரிபாவம்) - நிந்தை.
பரிபாகம் - நன்றாய்ப்பக்குவப்படுதல்.
பரிபாடல் - கடைச்சங்கப்புலவர்சிலராற் பாடப்பட்ட ஓர் நூல். (எழுபதுபாடல்களையுடையது.)
பரிபாலனம் - ஒருதீங்கும் வாராமற்காத்தல்.
பரிபாஷை- குழூஉக்குறி.
பரிபுரம் - காற்சிலம்பு.
பரிபூரணம் - எங்கும்நிறைந்திருத்தல்.
பரிப்பிரமம் - சுழலுதல்.
பரிப்பிலவம் - துக்கம், மனச்சஞ்சலம்.
பரிமளகந்தி - வியாஸமுனிவரின் தாய்.
பரிமளம்- மிகுமணம், சந்தனம்முதலிய கந்தப்பொருள்களின்குழம்பு.
பரிமா - குதிரை.
பரிமாணம் - அளவு.
பரிமாறுதல்- உணவுப்பொருள்களைப்பந்தியில் வழங்குதல்.
பரிமிதம் - அளக்கப்பட்டபொருள்.
பரிமேலழகர் - திருக்குறளுக்குரைசெய்த புலவர்.
பரியகம்-காற்சரி,கைச்சரி.
பரியங்கம் - கட்டில்.
பரியந்தம் - எல்லை.
பரியாயம்-பலமுறைநிகழ்ச்சி,பிரதிபதம், ஒருபொருளை உரியவசனத்தாற் கூறாது பிறிதோர்வசனத்தாற் கூறுதல், ஒழுங்கு.
பரியாலோசனை - பலவகையாக ஆலோசித்துத்தெளிதல்.
பரியாளம் - பரிவாரம்.
பரியுதாசம் - விலக்குவிதி.
பரிரட்சணம் - ஒருவாற்றானுங் குறைவு வாராமற்காத்தல்.
பரிவகன் - ஏழுவாயுக்களுளொன்று.
பரிவட்டம் - மூடுதற்கும் அரையிலணிதற்குமுரியவஸ்திரம்.
பரிவர்ச்சனம் - விலக்கிவிடுதல்.
பரிவர்த்தனம் - பண்டமாற்று, செய்யுளணிகளுளொன்று, பரிவிருத்தி.
பரிவாகம் - நீர்கலங்குதல்.
பரிவாதம் - வீணையையியக்கும்வில், இகழ்ச்சி.
பரிவாரம் - பரிசனம், சுற்றம்.
பரிவித்தி - தம்பிக்கு விவாகம் நடக்கும்போது விவாகமாகாமலிருக்குந்தமையன்.
பரிவிராசனம் - யாசகன், சன்னியாசி.
பரிவிருத்தி - பலமுறை சுற்றுதல்.
பரிவு - அன்பு, துன்பம், இன்பம்.
பரிவேடணம்-போசனப்பொருள்களைப் பரிமாறுதல்.

பரிவேடம் - மேகமுதலியவற்றின் சம்பர்க்கத்தாற் சூரியனை அல்லது சந்திரனைச்சூழ்ந்து தோன்றும்வட்டம்.
பரிவேட்டனம் - சூழ்சல், சூழஅணியப்படும் வஸ்திரமுதலியன.
பரிவேதனம் - தமையனுக்குமுன் தம்பி மணஞ்செய்தல்.
பரிவேத்தி - தமையனுக்குமுன் மணஞ்செய்ததம்பி.
பரீட்சை-ஒருபொருளின் குணம் குற்றம் முதலியவற்றைநன்றுயாராய்தல்.
பரு - கட்டு.
பருகல் - குடித்தல்.
பருக்கன் - நுட்பமற்றது.
பருக்குதல் - குடிக்கச்செய்தல்.
பருக்கை - சிறுகல், பளிங்கு, சோறு.
பருணிதர் - புலவர்,
பருத்தல் - பெருத்தல்.
பருத்தி - பருத்திச்செடி.
பருந்து - ஓர்பறவை.
பருப்பதம் (பர்வதம்) - மலை.
பருப்பம் - பருமை.
பருப்பு - பயறுமுதலியவற்றின் பருப்பு.
பருமம் - பருப்பம், பதினெண்கோவை மணி, (பதினன்குகோவையென்பாருமுளர்), குதிரைக்கல்லணை, சட்டை.
பருமன் - பருப்பமானபொருள்.
*பருமித்தல் - கிரமஞ்செய்தல்.
பருமை - பருப்பம்.
பருவதம் - மலை. [க்குவம்.
பருவம் - இருது, பூரணைத்திதி, கணு, ப
பருவம் ௫ - பாலப்பருவம் குமாரப்பருவம் மன்னப்பருவம் விருத்தப்பருவம் மரணப்பருவம் என்பன.
பருவரல்-துன்பம், அருவல். (கி கூ. ௫கூ).
பருஷம் - கடுஞ்சொல்.
பரூஉ - பருமை, *பறித்தல். [பார்வதி.
பரை - ஐந்துமரக்கால்கொண்ட ஓரளவு,
பரோட்சம் - பிரத்தியக்ஷமல்லாதது.
பர்க்கம் - ஒளி, சூரியமண்டலத்திலுள்ள தெய்வீகமாகியசோதி.
பர்க்கன் - சிவன், சூரியமண்டலத்திலுள்ள கடவுள்.
பர்ணசாலை (பன்னசாலை)-முனிவராச்சிரமம். (இலைகளால்வேய்ந்த குடிசை.
பர்ணம் (பன்னம்) - இலை, ஓலைமுதலியவற்றாற்செய்யப்படும் வேலை.
பர்த்தா (பத்தா) - நாயகன்.
பர்த்திருகரி-விக்கிரமாதித்தனுக்குமுன் பிறந்த அரசர். (இவரைப் பத்திரகிரியென்பர் சிலர்). [னும் பூடு.
பர்ப்படம் (பற்படம்) - பற்படாகமென்
பர்ப்பரம் (பப்பரம்) - ஐம்பத்தாறுதேசங்களுளொன்று, பதினெண்பாஷைகளுளொன்று.
பர்வம் (பருவம்) - பூரணை, பஞ்சபர்வம், கிரந்தப்பகுப்பு, கரும்பு முதலியவற்றின் கணு, விரலிறை.
பல - அனேகம்.
பலகணி - சாளரவாயில் (கவாட்சம்).
பலகறை - சுவடி.
பலகாரம்-சிற்றுண்டி, யானைமேற்றவிசு.
பலகை - மரப்பலகை, *யானைமேற்றவிசு, கேடகம்.
பலசந்தமாலை - பப்பத்துச்செய்யுள் ஒவ்வோர் சந்தமாக நூறு செய்யுளாலமைக்கப்படும் பிரபந்தம்.
பலண்டு - வெண்காயம்.
பலதேவன் - பலபத்திரர்.
பலபத்திரன் - பலராமர்.
பலபூரம் - மாதுளம்பழம்.
பலபை - சங்குச்சாயை.
பலம் - செய்த தொழில் முதலியவற்றாலடையும்பயன், ஆதாயம், நிறையளவுகளிலொன்று. முற்றியகாய், பிரித்துக்கண்ட பேறு, பழம், சேனை, வலிமை, கிழக்கு, விநாடியென்னுங் காலவளவை, வலிமை.
பலராமன் - பலபத்திரர்.
பலர் - அனேகர்.'
பலவயிற்போலி - ஒரு தொடர்மொழிக்கண் பலவுவமைவரும் அலங்காரம்.
*பலவரி - ககரமுதல் னகரமீறாகிய பதினெட்டு எழுத்துக்கள்.
பலன் - பயன். இலாபம்.
பலா - பலாமரம். [சாப்பலா.
பலாசம் - இலை, பலாசமரம், பச்சைநிறம்,
பலாபலன் - நயநட்டம், சுபாசுபம்.
பலாயனம் - புறங்காட்டியோடுதல்.
பலாலம் - வைக்கோல்.
பலாற்காரம் (வலாற்காரம்) - தன்னெண்ணப்படிநடப்பிக்கப் பிறனை வலிதல்.
பலி - மாவலியென்னும் சக்கரவர்த்தி, சோறு, பூசை, பிச்சை, சாம்பர்,

சாகம், தேவருணவு, அரசருக்குக்கொ
டுக்கும் ஆறிலொன்று, திறை.
பலிதம் - காய்கனியுள்ளமரம், (பலின
மென்பர் சிலர்). நரைமயிர்.
பலித்தல் - பயன்படுதல்.
பலிபீடம்-பலிசெலுத்தும்பீடம்,
பலிபுட்டம் - காகம்.
பலினி - கோங்கமரம், ஞாழல்மரம்.
பல் - பல்லு.
பல்குதல்- விருத்தியாதல்.
பல்லகம்- காடி.
[பல்லக்கு- சிவிகை.]
பல்லணம்- குதிரைக்கல்லணை.
பல்லம்- காடி, இரண்டுவிரலகலத்தையும்
ஆறுவிரலாளத்தையுமுடைய குழியில்
நிறைக்கப்பட்ட மணலை எண்ணிய
கணக்கு, (திவா), அம்பின் விகற்பம்,
குதிரைக்கல்லணை.
பல்லவம்- தளிர், ஒருதேசம்.
பல்லவர்- தூர்த்தர், கீழ்மக்கள்.
பல்லவன்- பலராமரால் கொல்லப்பட்ட
ஒருஅரசன்.
பல்லவி- கீர்த்தனத்தின் முதலுறுப்பு.
பல்லாண்டு- வாழ்த்து.
பல்லி- கெவுளி.
பல்லியம் - வாத்தியப்பொது.
பல்லுகம் பல்லூகம் -காடி.
பல்வலம்- சிறுகுளம்.
பவ- அறுபதுவருடங்களுளொன்று.
பவணந்தி- நன்னூலென்னுமிலக்கணத்
பவனை-கழுகு. [தைச் செய்தபுலவர்.
பவமானன்- வாயு.
பவம்- சிங்கக்கரணம், பாவம், பிறப்பு.
*பவர்- கொடி, (புறநா), நெருக்கம்.
பவர்க்கம்- நரகம்.
பவளமல்லிகை- ஓர்பூச்செடி.
பவளம்- நவமணிகளுளொன்று.
பவனம்- வீடு, இராசி, காற்று, பூமி, அர
சர்வீடு, கீழுலகங்களு ளொன்றாகிய
நாகலோகம், பூனை, நெல்முதலியவற்
றைக் கொழித்தல், தூற்றுதல், சுத்தி
செய்தல், குயவர்வைக்குஞ்சூளை.
பவனன்- காற்று.
பவனி-உலாப்போதல்.
பவனிக்காதல்- உலாக்காட்சியாலெய்திய
காமமிகுதியைப் பிறரோடுமுரைத்து
வருந்துவதாகப் பாடிய பாட்டு.

பவன்- சிவன், ஒருருத்திரன், கடவுள்
பவானி-பார்வதி.
பவ்-இடி. [திர்காலம்.
பவிடியம்(பவிஷ்யம்) - ஓர் புராணம், எ
பவித்திரம் - தருப்பைப்புல்லாற் செய்த
முடி, சுத்தம், யஞ்ஞோபவீதம்.
பவுரி- கூத்தின்விகற்பம். [ளொருவன்
பவோர்பவன் - பதினொருருத்திரர்களு
பவ்வம் - பூரணை, நீர்க்குமிழி, கடல், ம
பவ்வீ-மலம். [ரக்கணு
பழகல்-பயிலுதல்.
பழக்கம்- பயிற்சி.
பழங்கண்- துன்பம், ஒலி, இளைப்பு.
(மெலிவு எனப் பிங்கலத்தில்).
பழஞ்சொல் - மூதுரை. [தலம்.
பழமலை- திருமுதுகுன்றமென்னுஞ் சிவ
பழமை- பூர்வீகம்.
பழமொழி - தொன்றுதொட்டு வழங்கும்
பழம் - கனி. [வாக்கியம்.
பழம் கூ-வாழைப்பழம் மாம்பழம் பலாப்
பழம்பாசி- ஓர்பூடு. [பழம் என்பன.
பழம்வினை- ஊழ்வினை.
பழனம்-வயல்.
பழனி - திருவாவினன்குடியென்னுஞ்
சுப்பிரமணியதலம்.
பழி- நிந்தை, குற்றம்.
பழிச்சல்- துதித்தல்.
பழித்தல் - நிந்தித்தல். [மைசெய்தல்.
பழிவாங்கல்- தீமை செய்தவனுக்குத்தீ
பழு- விலா, பருமை, ஏணிப்படி, பிசாசு,
(குறிஞ்சி உ௫௪.)
பழுக்காய் - பாக்கு. [மிடி.
பழுது- பயனின்மை, குற்றம், சிதைவு
பழுதை - வைக்கோற்புரி, கயிறு.
பழுத்தல்- கனிதல், முதிர்தல், பொன்
ஞபரணங்கள் நிறப்படுதல்.
பழுப்பு-நென்பு, பழுப்புநிறம், அரிதாரம்.
பழுமரம்- ஆலமரம்.
பழுவம்- காடு.
பழை-கள்.
பளபளத்தல்- பிரகாசித்தல்.
பளிங்கு- படிகம், சுக்கிரன், அழுங்கு.
பளிதம்- பச்சைக்கர்ப்பூரம், கர்ப்பூரம்,
(பாளிதமெனப் பிங்கல), பல்லமென்
பளு- பாரம். [னுங்கணக்கு.
பள்ளத்தாக்கு-இரண்டுமேடுகளுக்கிடை
யே யுள்ள பள்ளம்

பள்ளம்- தாழ்ந்தநிலம்
பள்ளர்- ஓர்சாதியார்.
பள்ளி - நகரம், இடம், இடைச்சேரி, (மலைபடு சஅக), சிற்றூர், நித்திரை, தேவர்கோயில், மக்கட்படுக்கை, முனிவர்வாசம், விலங்கின் படுக்கையிடம், வீடு, சாலை.
பள்ளியறை- படுக்கையறை.
பள்ளியெழுச்சி- கடவுள் துயிலெழும்படி பாடும் ஓர்வகைத்தோத்திரம்.
பள்ளை- ஆடு.
பறங்கி- ஓர்மேகவியாதி.
பறங்கியர்- போர்த்துக்கல்தேசத்திலிருந்துவந்து குடியேறினவர்களின் சந்ததியார்.
பறட்டை- வளர்ச்சியற்றது.
பறத்தல்- பட்சிமுதலியவைபறந்து செல்லுதல்.
பறந்தலை- சுடுகாடு, பாழிடம்,போர்க்களம்.
பறப்பை- நெய்விடும்பாத்திரம்.
பறம்பர்- தோல்வினைஞர்.
பறம்பு- மலை, முலை.
*பறலிகை- கதவுத்திறப்பு.
பறவை- பட்சி, ஓர்நோய், அவிட்டநட்சத்திரம்.
பறவைநாகம்- குக்குடசர்ப்பம்.
பறவைவேந்தன்-கருடன்.
பறழ்- புலி முயல் பன்றி நரி நாய் மரக்கோட்டில்வாழ்விலங்கு கீரி பூனை பாக்கன் இவற்றின் பிள்ளை.
பறி- மீன்பெய்கருவி,மீன்படுக்குங்கருவி.
பறிகொடுத்தல்-களவுகொடுத்தல்.
பறிதல்- வெளிப்படல், தவறிவிழல்.
பறித்தல்- வலாற்காரமாய்க்கவர்தல், பிடுங்குதல்.
பறிமுதல்-பறித்தெடுக்கப்பட்டது.
பறியலூர்- வீரட்டத்தலங்களுளொன்று.
பறிவை- பட்டிகை, (அரைக்கச்சு).
[பறுகு- சிறுஅறுகு.]
பறை- முரசு, சொல், பறவையினிறகு, ஓரளவு, [அளவுகருவிகளுளொன்று].
பறைசாற்றல்- பறையடித்தல்.
பறைதல்- சொல்லல், தேய்தல் (பெரும்பா கூ0).
பறையர்- பறையடிப்போர்.
பற்குனன்- அருச்சுனன்.
பற்குனி-உத்தரம். (சிலவிடங்களிற்பூரத்துக்கும்.)
பற்பம்- நீறு, தாமரை, துகள்.
பற்பேத்தை- முரசில்வருங்கட்டு.
பற்றலர்- சத்துருக்கள்.
பற்றல்- (பற்றுதல்) - ஆசைவைத்தல், பிடித்தல், தொடர்தல், நீளுதல், உலோகங்கள் பொருந்துதல்.
பற்றுக்கை-அம்புகட்டும்பாசம்.
பற்றுசு-உலோகத்தைப்பொருத்தும்போதுவைக்கப்படும் உலோகத்துண்டு.
பற்றார்- பகைவர்.
பற்றினர்- சுற்றத்தார், சினேகிதர்.
பற்று - விருப்பம், அன்பு, பொருத்து, பசை, கைப்பிடி, பற்றியதொகை.
பற்றுக்கோடு-ஊன்றுகோல், தஞ்சம்.
பற்றை- சிறுதூறு, செங்காந்தள்.
பனங்கட்டி- பனைவெல்லம்.
பனங்கற்றுழை-பனைமரத்தில் முளைத்து நிற்கும் தாழை.
பனங்காய்- பனம்பழம்.
பனங்கீரை- ஓர்வகைக்கீரை.
பனசம்-பலா.
பனந்தாமன்- பலபத்திரன்.
பனம்- பருமை.
பனம்பாரனார்-அகத்தியர்மாணாக்கர் பன்னிருவரிலொருவர். (தொல்காப்பியத்துக்குப் பாயிரஞ்செய்தவரிவரே).
பனவர்-பார்ப்பார். (சிவராத் சௌமினி கஅ), முனிவர்.
பனாட்டு- பனம்பழ ரசத்தினாலாக்கப்பட்ட ஓர்தீன்பண்டம்.
பனி-குளிர்ச்சி, பனி, நடுக்கம், துக்கம், நோய், அச்சம்.
பனிக்கட்டி- உறைந்தபனி.
பனிக்கதிர்- சந்திரன்.
பனிக்காற்று- குளிர்காற்று,
பனிச்சை- பின்னிவிடும்மயிர்முடி,கழுத்தின் பின்குழி.
பனித்தல்- துளித்தல், நடுங்கல், விடாமழைபெய்தல்.
பனிநீர்-ஓர்வகை வாசனைநீர்.
பனிப்பகை- சூரியன்.
பனிமலை- இமயமலை.
பனுவலாட்டி-சரசுவதி.
பனுவல்- நூல், சொல், *கல்வி, மிருதிநூல், எஃகும்பஞ்சு, (மலைபடு கூஅ).
பனை- ஓர்மரம், அனுட நட்சத்திரம்.
பனைக்கொடியோன்- பலபத்திரன், வீடுமன்.
பனைமீன்-பெருமீன்.
பனையன்- ஓர்வகை வைசூரிநோய்]
[பன்- ஓர் புல்.

பன்மணிமாலை (இது கலம்பகமாலையெனவும்படும்) - கலம்பகத்தில்வரும் ஒருபோகும் அம்மானையுமூசலுமின்றி ஏனையுறுப்புக்களமையக் கலம்பகம்போற்பாடும் பாடல்.
பன்மை - பலவாயிருக்குந்தன்மை.
பன்றி - ஒருமிருகம், கொடுந்தமிழ்நாட்டிலொன்று, கௌலவகரணம்.
பன்னகம் - பாம்பு.
பன்னகவைரி - கருடன்.
பன்னம் - இலை, இலைக்கறி.
பன்னல்-பருத்திச்செடி, பருத்திப்பஞ்சு, நொருக்கம், சொல்லுதல், பஞ்செஃகுதல்.
[பன்னுங்கு - தென்னிலையாற் பின்னப்பட்டமறைப்பு].
பன்னடை - நெய்யரி.
பன்னூன்குழி - பதினூன்குகுழியுள்ள ஓர் விளையாட்டுத்தட்டு.
பன்னி - மனைவி, ஓர்மரம்.
பன்னீர்க்குடம் - கருப்பத்தைச்சூழ்ந்திருக்கும்நீர்ப்பை.
பன்னை - ஓர்செடி.
பக்ஷணம் - சிற்றுண்டி.
பஸ்மம் - விபூதி, சாம்பர்.

## பா

பா - செசவுபா, பரப்பு, செய்யுள்.
பா ௪ - வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா என்பன. (மருட்பாவும் நாற்பாவுங்கூட்டி ஆறென்பர்).
பாகசாதனன் - இந்திரன்.
பாகசாதனி - சயந்தன்.
பாகசாலை - மடைப்பள்ளி.
பாகம் - சமையல், பங்கு, பாதி, பாகை, (விருத்தத்தின் ௩௬௦ ல் ஒருபங்கு), பிச்சை, பரிணமித்தல்.
பாகலம் - யானைநோய்.
பாகல் - கொடிவகையுளொன்று, பலாமரம்.
பாகவதம் - புராணங்களுளொன்று, உபபுராணங்களுள்ளுமொன்று.
பாகவதர் - வைணவர், கடவுளின்தோத்திரங்களைச் சங்கீதமுறைப்படி ஓதுவோர்.
பாகன் - புதன், யானை குதிரை முதலியவற்றைச்செலுத்துஞ்சாரதி, விருத்திரனுடையதம்பியாகிய ஒருஅசுரன். (இந்திரனூற்கொல்லப்பட்டவன்).
பாகியம் - புறம்பானது.
பாகிலீகம் - ஒருதேசம்.
பாகினேயன் - சகோதரியின்புதல்வன்.
பாகீரதி - கங்கை.
பாகு-குழம்பு, சர்க்கரை, பாகன், பாக்கு, பால், பங்கு.
பாகுடம் - அரசிறை.
பாகுதை - சரசுவதிநதியோடுசேருகிற ஒருநதி, மகாநதியிற்கலக்கிற சிறுநதி.
பாகுரி - ஓர் முனிவர்.
பாகுலம் - கார்த்திகைமாசம்.
பாகை (பாகமென்பதன்றிரிபு) - வட்டத்தின் ௩௬௦ ல் ஒன்று.
பாக்கம் - ஊர், மருதநிலத்தூர், நெய்தனிலத்தூர்.
பாக்கன் - பூனை, காட்டுப்பூனை.
பாக்கி - நிலுவை.
பாக்கியம் - செல்வம், நல்விதி.
பாக்கியவான்-செல்வன். (பெண்பாலில் பாக்கியவதி.
பாக்கு - துவர்க்காய்.
பாக்குவெட்டி - பாக்கைவெட்டுங்கருவி.
பாங்கர் - பக்கம், *இடம், *வாய், ஓமைமரம். (குறிஞ் அடு).
பாங்கன் - தோழன். (பெண்பாலில் பாங்கி).
பாங்கு - பக்கம், *இடம், முறை, தகைமை, அழகு, உரித்து.
பாசகன் - சமையற்காரன், அக்கினி.
பாசண்டர் - வருணூச்சிரமாசாரங்களினின்றுவழுவினோர்.
பாசம்-கயிறு, அன்பு, ஊசித்துளை, பேய், *கவசம். [டம்.
பாசறை - பகைமேற்சென்றோருறையுமிடம்.
பாசறைமுல்லை-பாசறையிலிருக்குந் தலைமகன் தலைவியைநினைத்தல்.
பாசனம் - பாத்திரம், உண்கலம், சுற்றம்.
[பாசாங்கு - வெளிவேடம்].
பாசி-வருணன், நாய், நீரில்வளரும்பாசி, பசும்பயறு.
பாசிதம் - பிரிக்கப்பட்ட சுவு.
பாசிப்பயறு - ஓர்வகைப்பயறு.
பாசிமணி - கரியமணி, பச்சைமணி.
பாசு - பச்சைநிறம், மூங்கில்.
பாசுபதம் - பாசுபதவிரதம், உட்சமயமாறிலொன்று, சிவப்படை.
பாசுபதர் - பாசுபதமதத்தவர்.
பாசுரம் - பாட்டு, வசனம்.
பாச்சாத்தியர் - மேலைத்தேசத்தார்.
பாச்சியம் - பிரிக்கப்படுந்தொகை.

பாஞ்சசன்னியம்- திருமாலின்சங்கு. (சலஞ்சலங்களாயிரஞ்சூழ்ந்தது).
பாஞ்சராத்திரம் - ஓர்வைணவாகமம், வைணவமதத்திலோர்பிரிவு.
பாஞ்சாலம்- ருக தேசங்களுளொன்று. (அக்கினிபுரிக்கு வாயுதிக்கிலுள்ளது).
பாஞ்சாலி - திரௌபதி.
பாடகம் - மாதர் காலணிகளுளொன்று,
பாடகன்-படிப்போன், உபாத்தியாயன்.
பாடங்கேட்டல்- மாணாக்கன் ஆசிரியனிடத்து நூல்களைக்கற்றல்.
பாடசாலை - பள்ளிக்கூடம்.
பாடணம் (பாஷணம்) - பேசுதல்.
பாடம் - படிக்கப்படுகிறபாடம், அடுக்கு, *சேரி, *முடிமாலை.
பாடலம் - வெண்சிவப்பு, பாதிரிமரம், குதிரை, சேரன்குதிரை.
பாடலி - கள்.
பாடலிபுத்திரம் - ஓரூர். (இது கங்கைப் பெருக்காலழிந்ததென்பர்).
பாடலின்வகை உ - செந்துறை வெண்டுறை என்பன).
பாடல் (பாடுதல்) - சங்கீதம்பாடல், செய்யுளியற்றல், படித்தல், புகழ்தல்.
பாடவம் - சாமர்த்தியம், உள்ளக்களிப்பு.
பாடாணம் (பாஷாணம்) - கல், நச்சுச்சரக்கு.
பாடாண்டிணை- புறப்பொருட்டிணைகளுளொன்று.
பாடி - நகரம், நாடு, சேரி, பகைமேற்சென்றோருறைவிடம், முல்லைநிலத்தூர், சேனை, வியக்தகணிதம்.
பாடியம் - சூத்திரங்களுக்குச் செய்யப்படும் விரிவுரை. [டம்.
பாடிவீடு - பகைமேற்சென்றோருறைவி
பாடினி - பாடுவிச்சி.
பாடு - பெருமை, இடம், ஓசை, கேடு, அஸ்தமனம், உதயத்துக்கேழாமிடம், துன்பம், பக்கம், ஒலி, முறைமை, (பாடறிந்தொழுகும்; புற), ஏழாம் வேற்றுமையுருபு. [றிறவள்.
பாடுவிச்சி-கீதமுதலியனவற்றைப் பாடு
பாடை - ஆசந்தி, பாஷை.
பாடை கஅ - அங்கம் அருணம் கலிங்கம் கௌசிகம் காம்போசம் கொங்கணம் கோசலம் சாவகம் சிங்களம் சிந்து சீனம்சோனகம் திராவிடம் துளுவம் பப்பரம் மகதம் மராடம் வங்கம் என்பன.
பாட்டம் - பட்டாசாரியர்செய்தமதம்.
பாட்டன் - மூதாதை.
பாட்டி-நரி பன்றி நாய் இவற்றின் பெண், பாட்டனுடையமனைவி, *பாடுவிச்சி, *நாய். [தமை.
பாட்டிமை, பாட்டியம்- பூருவபக்கப்பிர
பாட்டியல் - செய்யுள்பாடுதற்குவேண்டிய விதிகளைக்கூறும் நூல். (வச்சணந்திமாலை வெண்பாப்பாட்டியல் முதலியன).
பாட்டு-இசைப்பாட்டு, செய்யுள், [வசை
பாட்டை - வழி. [மொழி].
பாட்பம் (பாஷ்பம்) - கண்ணீர்.
பாணபத்திரன் - மதுரையிலிருந்த வரகுணபாண்டியனது மந்திரி.
பாணம்-அம்பு, மழைவண்ணக்குறிஞ்சி, பட்டுவஸ்திரம். [வோர்.
பாணர் - சங்கீதம்பாடுவோர், யாழ்பாடு
பாணலிங்கம் - பாணாசுரனாற்பூசிக்கப்பட்டு நருமதைநதியில் நாடோறுமிடப்பட்ட சிவலிங்கம்.
பாணன் (வாணன்) - மாவலியின்புத்திரனான ஒருஅசுரன்.
பாணி - இசை, தாளம், (புற), ஊர், ஓசை, காடு, நாடு, கை, நீர், பாட்டு, பழம் இலை முதலியவற்றின்ரசம், காலம், சோலை, ஊர்சூழ்சோலை, அழகு, பலபண்டம், அன்பு, வாத்தியப்பொது.
பாணிக்கிரகணம் - விவாகம்.
பாணித்தல் - காலதாமதஞ்செய்தல்.
பாணினி - பாணினீயவியாகரணஞ்செய்தமுனிவர்.
பாணினீயம் - பாணினிமுனிவர்செய்த வடமொழிவியாகரணம். (முந்தியவியாகரணங்களிறந்துபோக இதுவே முதன்மைபெற்றுவழங்குகின்றது).
பாண் - இசைப்பாட்டு, கள்.
பாண்டம் - பாத்திரம்.
பாண்டரங்கம் - சிவன்கூத்து. (பரமசிவன்திரிபுரசங்காரத்துக்குப் புறப்பட்டபோதுதேர்ச்சாரதியான பிரமா சரசுவதியின்பிரிவாலழுங்க, அதனைத்தவிர்க்குமாறு பரமசிவன் சரசுவதி வடிவாய் நின்றாடியதென்பர்).
பாண்டரங்கன் - சிவன்.

[பாண்டல் - பாழ்த்தது].
பாண்டவர் - பாண்டுவின் புத்திரராகிய (தருமர் வீமன் அருச்சுனன் நகுலன் சகாதேவன் என்பவர்கள்). [ட்டு.
பாண்டி - பாண்டியதேசம், ஓர் விளையா
பாண்டித்தியம் - வித்துவத்தன்மை.
பாண்டியன் - தமிழ்நாட்டுவேந்தரிலொருவன்.
பாண்டில் - கட்டில், எருது, பரிகள்பூண்டேர்க்குமூர்தி, வட்டம், வட்டக்கட்டில், மூங்கில், விளக்கின்றகழி, (அகல்), கைத்தாளம், வாகைமரம், வட்டில்.
பாண்டு - குருகுலத்தரசருளொருவன், பாண்டுநோய், வெண்மை.
பாண்டுரம் - பொன்மைகலந்தவெண்ணிறம்.
பாதகடகம் - பாடகம், சிலம்பு.
பாதகம் - பெரும்பாவம். (இது அதிபாதகம் மகாபாதகம் உபபாதகம் என
பாதசர் - சூத்திரர். [மூவகைப்படும்).
பாதசாரம் - கிரகங்களின்பாதப்பெயர்ச்சி.
பாதசாரி - காலாள்.
பாதசாலம் - பாணினிசூத்திரத்துக்குப் பதஞ்சலிமுனிவர்செய்த பாடியம், ஓர்யோகசாஸ்திரம்.
பாததீர்த்தம் - பெரியோருடையபாதங்களைக்கழுவிய நீர்.
பாததூளி - காலிலொட்டியமண்.
பாதபம் (பாதவம்) - மரம், மலை.
பாதம் - கால், கிரகங்கள்வடக்குத்தெற்காய் விலகுதல், அதனையுண்டாக்குகிற ராகுவென்னுந்தேவதை, செய்யுளினடி, நாலிலொருபங்கு, விழுகை.
பாதலம் - கீழுலகம், இலக்கினத்திலிருந்து நான்காமிடம்.
*பாதவம் - மரம், தோட்டம்.
பாதாதிகேசம் - அடிமுதல் முடியீருக அங்கங்களை வருணிக்கும் கலிவெண்பாவாகியபாடல்.
பாதாவனேசனம் - கால்கழுவுதல்.
பாதாளமூலி - கறையான்.
பாதாளம் - கீழுலகம், நரகம்.
பாதி - இரண்டிலொருபங்கு, பங்கிடு.
பாதிரி - பாதிரிமரம், மூங்கில்மரம்.
பாதிவிரத்தியம் - பதிவிரதைத்தன்மை.
பாதுகாசித்தி - மிதியடியுடன் நீர்மேல் நடக்குஞ்சித்தி.
பாதுகாத்தல் - இனிதுகாப்பாற்றல்.
பாதுகை - மிதியடி, செருப்பு.
பாதேயம் - கட்டுச்சோறு.
பாதை - மரக்கலம், மிதவை, வழி.
பாத்தல் - பங்கிடுதல்.
பாத்தி - சிறுசெய், (மரமுதலியவற்றினடியில் நீர்பாய்ச்சுதற்குக் கட்டும்பாத்தி), வீடு, பங்கு.
பாத்தியம் - உரிமை, கால்கழுவுதற்குரியநீர்.
பாத்திரபதம் - புரட்டாதிமாதம்.
பாத்திரம் - மண்ணினாலும் மித்தளை முதலியலோகங்களாலுஞ் செய்யப்பட்ட பாத்திரம், உண்கலம், இரப்போர் கலம், புரட்டாதிமாதம், தானத்துக் குப்பாத்திரமானோன். [ன்.
பாத்திரன் - தானமேற்பதற்குத்தக்கவ
பாத்து - சோறு.
பாந்தல் - பதுங்குதல்.
பாந்தவியம் - பந்துத்தன்மை.
பாந்தள் - பாம்பு, பெரும்பாம்பு.
பாந்தன் - வழிநடப்போன்.
பாந்து - அளை.
பாபக்கிரகங்கள் - சூரியன்செவ்வாய் சனி ராகு கேது என்பன.
பாபத்தி - வேட்டை.
பாபம் - பாவம்.
பாபி - பாவஞ்செய்வோன்.
பாமரர் - அறிவீனர்.
பாமம் - ஒளி.
பாமினி, பாமை - அழகுமுதலியவற்றுற்சிறந்து விளங்கும் பெண்.
பாம்பு - அரவு, ஆயிலியநாள், கரைஅல்லது வரம்பு.
பாம்புரி - அகழி. (அகழியிற்கீழ்புறப்படப்படுத்ததெனச் சிந்). [செடி..
பாயசம் - பாற்சோறு, பாற்சோற்றிச்
பாயம் - புணர்ச்சியைக்கருதுங்கருத்து. (பெரும்பா கசஉ), மனத்துக்கு விருப்பமானவை. (குறிஞ்சிப் ௫அ).
பாயல் - மக்கட்படுக்கை.
பாயிரம் - முகவுரை, வரலாறு கூறுதல்.
பாயிரம் உ - பொதுப்பாயிரம் சிறப்புப் பாயிரம் என்பன.
பாயு - குதம்.
பாய் - புல்முதலியவைகளாற்பின்னப்பட்டவிரிப்பு.
பாய்தல் - உருவுதல், ஓடல், குதித்தல், தாண்டுதல், நீர்முதலியபாய்தல், பரத்தல்.
பாய்த்து - பாய்ச்சல். [த்தல்.
பாய்மரம் - மரக்கலமுதலியவற்றிற்பாய் தூக்கும் மரம்.

பாய்மா - குதிரை, புலி
பாரகம் - இடுதிரை, பூவுலகம்.
பாரகர், பாரங்கதர் - தொடங்கியகருமத்தைமுடித்தோர், கிரம்பக்கற்றோர்.
பாரசவன் - பிராமணனுக்குச் சூத்திரப்பெண் பெற்றபிள்ளை.
பாரசிகை - பருந்து.
பாரசீகம் - ஓர் தேசம்.
பாரணம் - விரதங்களில் உபவாசமிருந்தபின்செய்யும் போசனம்.
பாரதம் - பரதமுனிவராற் செய்யப்பட்ட நாடக நூல், ஓர்இதிகாசம், (இது வடமொழியிலிருந்து பெருந்தேவனாரால் தமிழிற்பாடப்பட்டது, அதன்பின் வில்லிபுத்தூரராற் பாடப்பட்டது, பின் நல்லாப்பிள்ளை என்பவரால் விரிவாக்கப்பட்டது, பாரதவருடம், ரசம்.
பாரதர் - குருகுலவேந்தர்.
பாரதவருடம் - சம்புத்தீவின் கண்டங்களுளொன்று. (இமயத்துக்குத்தெற்கு. இதுவிதேகம் இரேவதம் மத்தியம் பரதம்எனநான்குபிரிவுகளையுடையது, விதேகம் மேல்பாலிலுள்ளது; இரேவதம் கீழ்பாலிலுள்ளது, பரதம் விந்தத்துக்குத் தெற்கிலுள்ளது; மத்தியம் இமயமலைக்கும் விந்தமலைக்குமிடையிலுள்ளது; பரதம் விந்தத்துக்குத் தெற்கிலுள்ளது: ஒன்பது பிரிவாகவும் பிரிக்கப்படுகின்றது).
பாரதி - சரசுவதி, தோணி,
பாரத்துவாசம் - வலியானென்னும் பறவை, செம்போத்து.
பாரத்துவாசன் - துரோணாசாரியர்.
பாரமார்த்திகம் - உண்மை, மறுமைக்குச்சாதனம் நல்வினைகள்.
பாரம் - கனம், சுமை, உஅ துலாங்கொண்டநிறை, (உ௦ கொண்டதெனப்பிங்கலம்), நீர்க்கரை, வரம்பு, கவசம், தோணி.குதிரைக்கல்லணை, பூமி, பருத்தி, (குறிஞ் கூஉ).
பாரம்பரியம் - குலமுதலியவற்றின் பரம்பரை,
பாராசாரியம் - ஓர்சோதிடநூல்.
பாராட்டல் - கொண்டாடுதல்.
பாராயணம் - வேதமுதலியவற்றைஆதியந்தமாக ஓதுதல்.
பாராவதம் - கரும்புறு.
பாராவளை - சுழல்படை.
பாராவாரம் - கடல், கடற்கரை.
பாரி - மனைவி, கடைவள்ளல்களுளொருவன், கட்டில், நல்லாடை, *கள், கடல், பூவுலகம்.
பாரிசம் (பார்சுவம்) - பக்கம், சமீபம்.
பாரிசாதம் - தேவதருக்களுளொன்று.
பாரிசேடம் - ஓர்நியாயம், (ஒன்றுக்கு ஒரிலக்கணங்கூறுதலால்எஞ்சியபொருளுக்கு எஞ்சியஇலக்கணமென்று கொள்வது; இராமன்வென்றானென்புழி இராவணன் தோற்றானெனக் கொள்ளப்படுதல்போல. இதுஒழிபெனவும்படும்).
பாரிடதர் - நந்திகணத்தவர்.
பாரிடம் - பூதம்.
பாரித்தல் - குற்றஞ்சார்த்துதல், படைத்தல், பரப்புதல். (பெரும் சசஉ).
பாரியாத்திரம் - ஓர்மலை. (விந்தமலைக்கு மேற்கில் மாளவதேசத்திற்கெல்லையாயுள்ளது).
பாருடியம் (பாருஷ்யம்) - கொடுஞ்சொல்.
பாரை - நிலத்தைக்கிண்டுதற்குரியகருவி.
பார் - பூமி, தேர்ப்பலகையின்பரப்பு, கற்பார், கல்லடுத்தநிலம்.
பார்கஸ்பத்தியம் - வியாழனுடைய இராசிசஞ்சாரத்தாற்கொள்ளப்படும் வருடம்.
பார்க்கவன் - சுக்கிரன்.
பார்க்கவி - உமை, இலக்குமி.
பார்த்தசாரதி - கிருஷ்ணமூர்த்தி.
பார்த்தல் - நோக்குதல்.
பார்த்தன் - அருச்சுனன்.
பார்த்திவ - அறுபதுவருடங்களுளொன்று.
பார்த்திவம் - பூமி.
பார்த்திவன் - அரசன்.
பார்ப்பதி - (பார்வதி) - உமை.
பார்ப்பான் - பிராமணன்.
பார்ப்பு - கோட்டில்வாழ்விலங்குகளினதும் தவழ்சாதிகளினதும் பிள்ளை, பறவைக்குஞ்சு,
பார்வணம் - பர்வந்தோறும் பிதிரரைக்குறித்துச்செய்யப்படும்யாகம். (இங்கேபர்வமென்றது அமாவாசையை).
பார்வல் - குஞ்சு.
பார்வை - நோக்கு, கண், கண்ணோட்டம்.
பாலகன் - சிறுவன், (பெண்பாலில் பாலகி), காவல்செய்வோன்.
பாலக்கிரகம் - சிறுவரைப்பீடிக்குந்தேவதை.
பாலம் - நெற்றி, மழுப்படை, பூமி, ஆற்றுப்பாலம்.
பாலர் - முல்லை நிலமாக்கள்.

பாலனம்- காத்தல்.
பாலன்- கசு வயதுக்குட்பட்டவன்.
பாலி- தொண்டைமண்டலத்திற் பாய்கிற ஒருயாறு, ஓர்பாஷை. (பௌத்தமத சாஸ்திரங்கள் இப்பாஷையிலுள்ளன), கள்ளு.
பாலிகை - சுபகருமங்களுக்காக முளையிடும்பாத்திரம், உதடு, வட்டம், படைவாளின் முட்டி, அடம்பங்கொடி.
பாலியம்- சிறுபிராயம். (கசு வயதுக்குட்பட்ட பிராயம்),
பாலேடு- பாலாடை.
பாலை- பாலைக்கொடி, பாலைமரம், பாலைநிலம், பாலைப்பண், மிருகசீரிடநட்சத்திரம்.
பாலைக்கிழத்தி-தூர்க்கை.
பால்-பக்கம், குணம், திக்கு, பாதி, நூல் முதலியவற்றின் பகுதி, விதி, (புற) இடம், பசு முதலியவற்றிற் கறக்கப்படும்பால், ஆண் பெண் முதலிய பால்கள், வெண்மை, உரிமை, இயல்பு.
பால் ரு-ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பன.
பாவகம்- தூய்மை, பாவனை.
பாவகன்- தீத்தெய்வம்.
பாவட்டை- ஆடாதோடைபோன்ற ஓர் மரம். (சிலர் ஆடாதோடையையும் பாவட்டையென வழங்குகின்றனர்)
பாவநாசம்- ஓர்நதி.
பாவபுண்ணியத் தொடர் ரு- செய்தல் செய்வித்தல் உடன்படல் என்பன.
பாவமூர்த்திகள்- வேடர், பாவிகள்.
பாவம்-இயல்பு, உள்ளது, அபிப்பிராயம், தீவினை, தீவினையினாலனுபவிக்கப்படுவன
பாவலர்-புலவர்.
பாவல்- மிதியடி.
பாவனம்-சுத்தம், [ளுகப்பாவித்தல்.
பாவனை - தியானம், ஒன்றை மற்றொன்
பாவாடை - நிலவிரிப்பு, சிறுமியர்களுக்குத் தைத்துடுத்தும் ஓர்வகையாடை.
பாவாற்றி- நெய்வார்குச்சு.
பாவி - பாவஞ்செய்வோன், வரத்தக்க நன்மைதீமைகள்.
பாவிகம்- ஓரலங்காரம். (காப்பியமுதலியவைகளில் எடுத்துக்கொண்ட கருத்துமுதலியவை இனிதமைதல்).
பாவிரி- பசிரிக்கீரை. [என்பன.
பாவினம் ரூ- தாழிசை துறை விருத்தம்

பாவுதல்- பரவுதல், விரித்தல்.
பாவை- சித்திரப்பாவை, பெண், பதினோருருத்திராடலுளொன்று, திருமகள்கூத்து, (போர்க்குவந்த அவுணர் மோகித்து விழும்படி கொல்லிப் பாவை வடிவாய் நின்றாடினளென்பர்; இக் கூத்தின் பேர் பாவையென்பர் சிலர்), கண்மணிப்பாவை.
பாவோடல்- ஆடைநெய்தற்காக இழையோடல்.
பாழி- குகை, முனிவர்வாசம், வலிமை, விலங்கின் படுக்கையிடம், ஊர், பகைவரூர், பெருமை, அகலம், பாழ், *இடம், தேவர்கோயில்.
பாழ்- சூனியம், வெறுமை.
பாளம்-உலோகக்கட்டி, பொற் பாளமுதலியன), வெடிப்பு.
பாளி- பாசறை, பனித்தூசு.
பாளிதம்- குழம்பு, சோறு, கண்டசர்க்கரை, பட்டுவர்க்கம்.
பாளை- தெங்கு கமுகு முதலியமரங்களில் வரும் பாளை.
பாளையம் - குறுநிலமன்னரூர், பாசறை.
பாறல்-இடபம்.(பேரெருது). இடபராசி. நீங்கல், விலகுதல், சிதறுதல் (சிங்). [ஓடுதல்,
பாறு- பருந்து, மரக்கலம்,
பாறை- கற்பாறை, மேடு.
பாற்கரன் (பாஸ்கரன்)-சூரியன்.
பாற்குனம்- பங்குனிமாதம்.
பாற்சோற்றி (பாற்சொற்றி) - பாற்சோற்றிச்செடி.
பாற்பீர்க்கு- பீர்க்கங்கொடியிலோர்சாதி
பானகம்- ஓர்வகைப் பானம்.
பானசர் (பானசிகர்)- சமையற்காரர்.
பானம்- பருகும்பொருள், கள்.
பானல்- கருங்குவளை, மருதநிலம்,வயல்.
பானன்- அர்த்தராத்திரி.
பானீயம்- நீர், பருகத்தக்கபொருள்.
பானு- சூரியன், ஒளி.
பானுமதி- விக்கிரமாதித்தனுடையமனை
பானுவாரம்- ஞாயிற்றுக்கிழமை. [வி.
பானை-ஓர்வகைப்பாத்திரம்.
பான்மை- தன்மை.
பாஸ்கராசாரியர்- கணிதத்தில் மிக்க திறமையுடையஓர்வடமொழிப்புலவர்-( இவராற்சித்தாந்தசிரோமணியென்னுஞ் சோதிடகணிதநூல்செய்யப்பட்டது).

## பி

பிகம் -குயில்.
பிகிதம்- மூடப்பட்டது, மறைக்கப்பட்ட [து
பிகு- இறுக்கம், சந்தத்தினூன்றுகை.
பிக்கு- சிக்கு.
பிங்கலம்- பொன், பொன்னிறம், பிங்கலநிகண்டு. (பிங்கலந்தை எனவும்).
பிங்கலன்- பிங்கல நிகண்டின் ஆசிரியர், குபேரன்,
பிங்கலை- வலமூக்கின் வழியே சுவாசம் வருதல், தென்றிசையானையின்பெண், ஆந்தை.
பிங்கள- அறுபதுவருடங்களுளொன்று.
பிசகு- தவறு, பிழை.
பிசகுதல்- பிழைபடுதல்.
பிசங்கம்- பொன்மைகலந்தசிவப்பு.
பிசங்குதல்- அழுக்கடைதல், கசங்குதல்.
பிசண்டம்- வயிறு, மிருகத்தின்முதுகு.
பிசறுதல்-கலத்தல்.
பிசனம்- செஞ்சந்தனம்.
பிசாசம்-பேய்.
பிசாசர் - தேவகணத்தரு ளொருபகுதியார், பேய்பிடித்தோர்.
பிசான்- பிசுபிசுப்பான அழுக்கு.
பிசி-பொய், சோறு, அரும்பொருள். [ரம்.
பிசிதம்- இறைச்சி, பொய், நீர், வேப்பம
பிசிதவுணர்- அசுரர். [கொடி.
பிசின்-மரத்தில்வடியும் பிசின், வஞ்சிக்
பிசுபிசுப்பு-பசைத்தன்மையானது. (கை முதலியவற்றிற் பட்டால் இலகுவிற் போக்குதற்கியலாதது.
பிசுமந்தம்- வேம்பு.
பிசுனம்- கோள், பொய், லோபம்.
பிசுனன்- கோள்மூட்டுவோன், பொய் சொல்வோன்.
பிசைதல்-குழைத்தல்.
பிச்சம் - ஆண்மயிர், மயிற்பீலி, பீலிக்குஞ்சக்குடை, குடை.
பிச்சர்- பித்தர், (பெண்பாலில்பிச்சி).
பிச்சி- ஓர்வகை மல்லிகை.
பிச்சை-பிட்சை.
பிஞ்சகம்-சடை, தலைக்கோலம், (இவ்விருபொருள்களிலும் பிஞ்ஞகம் எனவும்), பறவையினிறகு.
பிஞ்சம்-பறவைகளினிறகு, தலைக்கோல [ம்.
பிஞ்சு-இளங்காய்.
பிஞ்ஞகன்(பிஞ்சகன்)-சிவன்.
பிடகம்- புத்தாகமம், நூல்.
பிடகர்-வைத்தியர்.
பிடகன்- புத்தன்.
பிடகை- பூத்தட்டு. (நெடுநல் ருகூ.)
பிடர்- கழுத்தின்புறம்.
பிடாரர்- பாம்புபிடிப்போர்.
பிடாரி- தூர்த்தேவதைகளிலொன்று.
பிடி- ஒட்டகம் கவரிமா யானை இவற்றின்பெண். கைப்பிடி, நால்விரல் கொண்ட அளவு, பிடிமுழம்.
பிடிகம்-பிள்ளைக்கைவளை.
பிடிதம்-பிச்சை.
பிடித்தல்-கையாற்பிடித்தல்.
பிடியல்- சிறுதுகில்.
பிடுங்குதல்- கவர்தல், பறித்தல்.
பிட்சகன்- இரப்போன்.
பிட்சாடனம்- பிட்சைக்குத்திரிதல், பரமசிவனுடைய பிட்சாடனவடிவம்.
பிட்டம்-இடித்தமா, பிட்டு.
பிட்டு-ஓர் சிற்றுண்டி.
பிணக்கம்- பிணங்குதல், பின்னுதல்.
பிணக்கு- சண்டை.
பிணம்- சவம், பேய்.
பிணம்- ஒப்பமின்மை, *கோங்கமரம், சருக்கரை. (திருமுரு ௩௦)
பிணா- புல்வாய் நாய் பன்றி என்னும் விலங்குகளின் பெண். (பெண்பாலெவற்றிற்கும் பொதுவுமாம்).
பிணி- நோய், கட்டு.
பிணி ௩-பித்தம் வாதம் சேடம் என்பன.
பிணித்தல்-கட்டுதல்.
பிணிமுகம் - மயில், பறவைப்பொது, *அன்னம்,
பிணை- நாய் பன்றி புல்வாய் மான் என்னும்விலங்குகளின் பெண், கடன்முதலியவைகளை இறுத்தற்குக் கட்டுப்படு [தல்.
பிணைச்சு- புணர்ச்சி, ஆசை.
பிணைதல்-இணைதல்.
பிணைத்தல்- இணைத்தல், கட்டுதல்.
பிணையல்- கதவுகளுக்கிடும் இரும்புப்பிணையல். பின்னியபூமாலை, (மார்பின் மாலையெனச் சிந்தா), நிருத்தக் கைவகையுள் இரட்டைக்கை.
பிண்டம்- உடல், உருண்டை, தொகுதி, பிச்சை, பிதிரர்க்கிடும் பிண்டம்.
பிண்டி - அசோகமரம், மா, புனர்பூசநட்

சத்திரம், பிண்ணாக்கு, நிருத்தக்கைவ
கையில் ஒற்றைக்கை.
பிண்டித்தல் - தொகுத்தல்.
பிண்டிபாலம் - ஓராயுதம்.
பிண்டீகரணம் - உருண்டையாக்கல்.
பிண்ணாக்கு - எள் முதலியவற்றில் செய்
நீக்கிய சக்கை. (பிண்யாகம் என்னும்
வடசொல்லின்றிரிபு).
பிதற்றுதல் - பித்தாதிக்கமுதலியவற்றால்
வாயில் வந்தனவற்றைப் பேசுதல், வி
டாது பேசுதல். [பெருநாரை.
பிதா - தந்தை, பிரமா, அருகன், சிவன்,
பிதாமகன் - பிதாவின்பிதா, பிரமன்.
பிதானம் - மறைப்பு.
பிதிர் - பிதா, பிதிரரென்னுந்தேவகணத்
தவராய்ச் சந்திரலோகத்தின் மேலி
ருப்பவர்கள், திவலை, காலநுட்பம்,
கதை, துகள்.
பிதிர்காலம் - பகலை ஐந்தாக்கிய கூறுக
ளுள் நாலாங் கூறு.
பிதிர்தல், உதிர்தல், சொல்லல்.
பிதிர்திகி - சிராத்ததிதி.
பிதிர்தீர்த்தம் - பெருவிரல் சுட்டுவிரல்
இரண்டினதும்இடையால் விடப்படும்
பிதிர்நாள் - மகம். [நீர்.
பிதிர்பதி - யமன்.
பிதிர்யஞ்ஞம் - பிதிர்தர்ப்பணம்.
பிதிர்லோகம் - சந்திரமண்டலத்தின் மே
ற்பாகத்திலுள்ள உலகம்.
பிதிர்வனம் - சுடுகாடு.
பிதுகம் - நவமணிக்குற்றங்களுளொன்று.
பிதுக்கம் - பிதுங்குதல்.
பிதுங்கல் - உள்ளடங்காமற் புறப்படல்.
பிதுரம் - இடி.
பித்தம் - சரீரத்திலுள்ளமூவகைத்தாதுக்க
ளுளொன்று, முப்பிணிகளுளொன்று.
பைத்தியம். [து.
பித்தல் - மண்வெட்டிக்காம்பின் பொருத்
பித்தளை - ஓர் உலோகம். (செம்புமுதலிய
வற்றாற் சேர்க்கப்படுவது.
பித்தன் - சிவன், பைத்தியகாரன்.
பித்தி - சுவர்.
பித்திகை - சிறுசண்பகமரம், கருமுகைச்
செடி, அண்டச்சுவர்.
பித்தை - ஆண்மயிர்.
பிந்து - புள்ளி, நீர்முதலியவற்றின் திவலை,
பிந்துதல் - பிற்படுதல். [சுக்கிலம்.

பிபாசை - தாகம்.
பிபீலிகை - எறும்பு.
பிப்பலம் - அரசமரம்.
பிப்பலாதன் - ஓரிருடி.
பிப்பிலி - திப்பலி.
பிம்பம் - உருவம். [த்தியநூல்.
பியாகடம் - வடமொழியிலுள்ள ஒருவை
பிர - (உபசர்க்கம்). தொடக்கம் முதன்
மை சிறப்பு உற்பத்தி கதி புகழ் முத
லிய பொருள்களைக் குறிக்கும்.
பிரகடனம் - வெளிப்படுத்துகை.
பிரகணம் - முற்றம்.
பிரகதாரணியம் - ஓர் உபநிடதம்.
பிரகரணம் - அத்தியாயம், பகுதி.
பிரகலாதன் - இரணியகசிபுவின்புத்திரன்
பிரகற்பதி - (பிரகஸ்பதி) - வியாழன்.
பிரகாசம் ஒளி. [தோன்றுதல்.
பிரகாசித்தல் - ஒளிவீசுதல், விளங்கத்
பிரகாரம் - தடிமுதலியவற்றால்அடிக்கும்
பிரகிருட்டம் - மேலானது. [அடி, விதம்.
பிரகிருதி - இயல்பு, சொற்களின் பகுதி,
மூலப்பிரகிருதி, (பிரபஞ்சத்துக்குக்
காரணமான மாயை), அரசியலுறுப்
பு, நகர்ச்சனங்கள்.
பிரகீரணம் - பலஇனப்பொருள்களின் க
லப்பு, சிதறப்பட்டபொருள்.
பிரசங்கம் - நிகழ்ச்சி, கதை முதலியவற்
றைப் பிறர் கேட்கும்படி விரித்துச்
சொல்லுதல்.
பிரசண்டம் - வாயு முதலியவற்றின் உக்
பிரசமனம் - கொலை. [கிரம்.
பிரசம் - பூந்தாதின்றூள், தேன், கோற்
றேன், கள், வண்டு, தேன்வண்டு.
பிரசவம் - பிள்ளைப்பேறு.
பிரசவித்தல் - கருவுயிர்த்தல்.
பிரசன்னம் - தெளிவு, மலர்ந்த முகத்து
டன்தோன்றுதல்.
பிரசாதம் - அருள், களங்கமின்மை, கட
வுளுக்கு நிவேதித்த பொருள், குரு
முதலாயினோருண்டெஞ்சியஉணவு,
பிரசாபதி - பிரமா, ஆண்குறி. [ழ்தல்.
பிரசாரணம் - விரித்தல், சத்துருவைச் சூ
பிரசாரம் - உலாவுதல், பரத்தல்.
பிரசித்தம் - வெளிப்படுத்துகை.
பிரசினம் - கேள்வி, ஆரூடமுதலியன.
பிரசுரம் - வெளியீடு.
பிரசூதி - பிள்ளைப்பேறு.

பிரசூனம். பூ.
பிரசை- குடிசனம்.
பிரசோதனம்-அனுப்புதல், சொல்லுதல்,
பிரசோற்பத்தி- அறுபது வருடங்களு [ளொன்று.
பிரச்சாதனம்-மறைப்பு.
பிரஞ்ஞை- அறிவு.
பிரட்சாளனம்- கழுவுதல். [வறினோன்
பிரட்டன்- சாதியாசாரங்களினின்று த
பிரணயம்- நம்பிக்கை, சிநேகம், அன்பு.
பிரணவம்-ஓங்காரம்.
பிரணாசம்-அழிவு.
பிரணாமம்-வணக்கம்.
பிரணீதம் - ஒருபாஷையிலிருந்து வே றொரு பாஷையிலமைக்கப்பட்ட நூல் முதலியன, முந்திய வடிவத்திற் பொருணிலைபிறழாமல் மாற்றி வேறுவடிவமாக்கப்பட்ட செய்யுள் முதலியன.
பிரணீதை- யஞ்ஞபாத்திரங்களுளொன் [று
பிரண்டை-ஓர்கொடி.
பிரதக்ஷிணம்-வலம்வருதல்.
பிரதமம்-முதன்மை.
பிரதமை - முதற்றிதி.
பிரதம்- புகழ், கொடுப்பது.
பிரதாபம்- கீர்த்தி.
பிரதாபருத்திரீயம்- வடமொழியிலுள்ள அலங்கார நூல்களுளொன்று.
பிரதானம்- முதன்மை, கொடை.
பிரதி-(உபசர்க்கம்) எதிர் ஒப்பு என்னும் பொருள்களைக் குறிக்கும்.
பிரதிகிருதி - எதிர்செய்தல், இணையாயமைத்த உருவம்.
பிரதிகூலம்-எதிர். (எண்ணியதற்குமாறாய்முடிதல்).
பிரதிக்கிரகம்- வாங்குதல்.
பிரதிக்கினை (பிரதிஞ்ஞை)- அறிவிப்பு.
பிரதிசரம் - சுபகருமங்களுக் கங்கமாகக் கையிற்கட்டுங் காப்பு.
பிரதிசர்க்கம்-புராணத்தினோருறுப்பு.
பிரதிசூரியன்- ஒருசூரியனே இரண்டு சூரியர்களாகத் தோற்றப் படுதலாகிய துர்ச்சகுனம்.
பிரதிட்டை- விக்கிரகமுதலியவைகளில் தெய்வமுதலியவற்றைத்தாபித்தல்.
பிரதிதன் - புகழ்பெற்றவன்.
பிரதிதினம்- நாடோறும்.
பிரதித்தொனி- எதிரொலி.
பிரதிநிதி- ஒருபொருள் கிடையாதவிடத்து அதற்காக வைக்கப்படும்வேறொரு பொருள்.
பிரதிபதம்- பரியாயச்சொல்.
பிரதிபத்தி- வாக்குவன்மை, அடைதல், செய்வதின்னதென்று தெளிதல்.
பிரதிபந்தம்- தடை.
பிரதிபலனம்-பிரதிபிம்பித்தல்.
பிரதிபிம்பம்- கண்ணாடிமுதலியவற்றிலே தோன்றும் நிழல்.
பிரதிமானம்- யானையினுடைய இரண்டு கொம்புகளினடுவும் மத்தகத்தின்கீழுமான இடம்.
பிரதிமை- விக்கிரகம், ஒப்புமை.
பிரதியுபகாரம் -தனக்குப் பிறர் செய்த நன்றிக்காக அவர்க்கு வேண்டிய காலத்திற் செய்யும் நன்மை.
பிரதியோகம்- எண்ணியதற்கு மாறாய்
பிரதிரூபம்-பிரதிபிம்பம். [முடிதல்.
பிரதிலோமன்-உயர்குலப்பெண்ணு மிழிகுலத்தானுங் கூடிப்பெற்றபிள்ளை.
பிரதிவசனம்- எதிர்மொழி (விடை).
பிரதிவாதி- வாதியின் கோட்பாட்டை
பிரதிசேஷம்- நிஷேதம். [மறுப்பவன்
பிரதீகம்- அவயவம்.
பிரதீகாரம்- மாறுசெய்தல்.
பிரதீசி- மேற்கு.
பிரதீதி- நம்பிக்கை.
பிரதீபம் - பிரதிகூலம்.
பிரதேசம்-இடம்.
பிரதை- குந்திதேவி.
பிரதோடம்(பிரதோஷம்)- சாயங்காலம்.
பிரத்தம் (பிரஸ்தம்)-ஓரளவு.
பிரத்தரம் (பிரஸ்தரம்)- கல்.
பிரத்தாரம் (பிரஸ்தாரம்)-புற்செறிந்த இடம், தளிர்முதலியவற்றாற்செய்தபடுக்கை, செய்யுளிற் சீர்பிரித்தல்.
பிரத்தாவம் -(பிரஸ்தாவம்)- வெளிப்பட விரித்துப் பேசுதல், புகழ்.
பிரத்தியக்கு-மேற்கு. [வதை.
பிரத்தியங்கிரி-(பிரத்தியங்கிரை)-ஓர்தே
பிரத்தியட்சம்- கண்முன்னிலையிலிருத்தல், காணப்படும்பொருள்.
பிரத்தியயம்-விகுதி, நம்பிக்கை. [தல்.
பிரத்தியவாயம்-பாவம், நம்பிமோசம்போ
பிரத்தியாகாரம்- தொகை, பொறிசுளைப் புலன்வழிச் செல்லவிடாது தடுத்தல். (அட்டாங்கயோகங்களுளொன்று.)

பிரத்தியாலீடம் - வில்வீரர்நிற்கும் நிலைகளுளொன்று. (வலக்காலைமுன்வைத்து இடக்காலைமண்டலித்துநிற்றல்).
பிரத்தியும்னன் - கிருஷ்ணமூர்த்திக்குஉருக்குமணியிடத்துப்பிறந்த புதல்வன், (மன்மதன் சிவனுடைய கண்ணழலாலிறந்து பின் இப்பெயரோடு பிறந்தானென்றும் இரதிதேவி இவனோடுகூடி வாழ்ந்திருந்தாளென்றும் சிலநூல் கூறும்). வைணவாகமங்களில் விஷ்ணுவின் அம்சமாகச் சொல்லப்படும் ஒரு புருஷன்.
பிரத்தியூஷன் - அட்டவசுக்களிலொருவன்.
பிரத்தியேகம் - தனிமை.
பிரத்தியோதனன் - சூரியன்.
பிரபஞ்சம் - உலகம், மாயை, விசாலம், விரிவு.
பிரபஞ்சனன் - காற்று.
பிரபந்தம் - சரித்திர நூல்.
பிரபலம் - கீர்த்தி, பிரதானம்.
பிரபவ - அறுபதுவருடங்களுளொன்று.
பிரபவம் - பிறப்பு.
பிரபன்னன் - சரண்புகுந்தவன்.
பிரபாகரன் - சூரியன்.
பிரபாசன் - அட்டவசுக்களிலொருவன்.
பிரபாதம் - பிராதக்காலம்.
பிரபாவம் - மகத்துவம், வீரம்.
பிரபிதாமகன் - பிதாமகனுடையபிதா.
பிரபு - பெருஞ்செல்வன், அதிபதி.
பிரபுலிங்கலீலை - ஓர் நூல். (துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள் செய்தது).
பிரபை - ஒளி.
பிரபோதசந்திரோதயம் - வடமொழியிற் கிருஷ்ணமிசிரபண்டிதர்செய்த ஒரு வேதாந்தநாடகம். (காமக்குரோதம் முதலியவைகளை உருவாகப்படுத்தியசரித்திரம்; திருவேங்கடசுவாமிகளால் தமிழில்மொழிபெயர்க்கப்பட்டது).
பிரபோதம் - விழிப்பு, தெளிந்தஅறிவு.
பிரபோதனம் - விழிப்படைதல், துயில் சோம்பல்முதலியவற்றை நீக்குதல்.
பிரப்பு - ஒரு பாத்திரத்தில் அதிகமாகப் பரப்பிவைத்த பலவகையுணவு.
பிரமகத்தி - பிராமணரைக் கொன்றபாவம்.
பிரமகற்பம் - பிரமன்வாழ்நாள்.
பிரமகீதை - வேதாந்தசாத்திரங்களுளொன்று. (வடமொழியிற்பிரமதேவரால் அருளிச்செய்யப்பட்டது; தத்துவராயசுவாமிகளால் தமிழிற்பாடப்பட்டது).
பிரமகைவர்த்தம் - பதினெண்புராணங்களுளொன்று.
பிரமக்கிரந்தி - உபவீதத்தின் முடிகளுளொன்று.
பிரமசரியம் - உபநயனத்தின்மேல் விவாகத்துக்குமுன் ஒழுகவேண்டிய ஒழுக்கம், புணர்ச்சியையொழித்திருத்தல்.
பிரமசாரி - பிரமசரியவொழுக்கத்தினிற்போன், பெண்களைக் கூடாமலிருப்போன். (வீட்டுமன்போல).
பிரமசூத்திரம் - வியாசமுனிவர்செய்த வேதாந்தநூல், உபவீதம்.
பிரமஞானம் - பிரமத்தையுணர்தல்.
பிரமணம் - சுழற்சி.
பிரமதகணம் - திருக்கைலாசத்திற் பரமசிவனைச் சேவிக்கும் பத்தர்களுளொருசாரார்.
பிரமதரு - பலாசமரம்.
பிரமதாதிபன் - சிவன்.
பிரமதீர்த்தம் - பெருவிரலடியிற்றங்கிய தீர்த்தம். (ஆசமனத்துக்குரியது).
பிரமபத்திரம் - புகையிலை.
பிரமபிந்து - ஓர் உபநிடதம்.
பிரமபுத்திரை - பிரமபுத்திரநதி, சரஸ்வதி.
பிரமபுரம் - சீகாழிப்பதி.
பிரமம் - பரப்பிரமம், பதினெண்புராணங்களுளொன்று, நடு, எண்வகைமணங்களுளொன்று, (பிரமசாரிக்குக் கன்னிகையைத் தீ முன்கொடுத்தல்), வேதம், யாகம், மந்திரம், பிரமன், திருமால், சூரியன், நெருப்பு, சிவன், இருடிகள், மோட்சம், சந்திரன், கலக்கம், சுழற்சி, ஒன்றை மற்றொன்றாயுணர்தல்.
பிரமயஞ்ஞம் (பிரமயாகம்) - வேதமோதலும் ஓதுவித்தலும் அவற்றிற்காய்ச் செய்யப்படுந் தர்ப்பணாதிகளும்.
பிரமரந்திரம் உச்சித்துவாரம்.
பிரமரம் - வண்டு.
பிரமராட்சதம் - ஒருவகைப்பூதம். (பிராமணன் பெரும்பாதகங்கள்செய்தால் இவ்வடிவமாவான்).
பிரமரி - சுழலுதல், கூத்தின்விகற்பம்.
பிரமலிபி - பிரமாவினெழுத்து.
பிரமவித்தை - பிரமத்தையறிதல்.
பிரமனாள் - உரோகிணிநட்சத்திரம்.
பிரமன் - பிரமா.
பிரமன்மாற்கரியோன் - சிவன்.

பிரமன்றுணை - விட்டுணு.
பிரமாணம் - அளவு, சபதம், வேதமுதலிய நூல்களின் விதி.
பிரமாணித்தல் - நிரூபித்தல்.
பிரமாண்டம் - பதினெண்புராணங்களுளொன்று, சூரியன் சந்திரன் முதலாகிய பலவகைப் பொருள்களையுள்ளடக்கிய அண்டம். (பிரமாவிலிருந்து முற்காலத்திற்றோன்றுதலின் பிரமாண்டமெனப் பெயர்பெற்றது.
பிரமாதம் - மதிமயக்கம், அவதானக்குறைவு.
பிரமாதி - அறுபதுவருடங்களிலொன்று.
பிரமாதீச - அறுபதுவருடங்களிலொன்று.
பிரமாவர்த்தம் - சரசுவதி திருஷத்வதி என்னுமிரண்டுநதிகளுக்குமிடையிலுள்ளதேசம்.
பிரமி - ஓர் பூடு.
பிரமிதி - உண்மையுணர்தல்.
பிரமித்தல் - திகைத்தல்.
பிரமியம் - ஓர் நோய். (பிரமத்தையுண்டாக்குவது; பிரமம் - கிறுகிறுப்பு).
பிரமுகம் - தலைமை, முதன்மை.
பிரமேகம் - மேகநோய்விகற்பங்களுளொன்று.
பிரமேயம் - அளவிட்டறியப்படுவது.
பிரமை - மயக்கம்.
பிரமோதூத - அறுபதுவருடங்களிலொன்று.
பிரமோத்தரகண்டம் - பிரமபுராணத்தின்கண்டங்களுட் பிந்தியது, வரதுங்கபாண்டியனால் தமிழிற்பாடப்பட்டது.
பிரம்பு - கணுவுள்ளதண்டுகளையுடைய ஒருமரம்.
பிரயதன் - நியமமுடையோன்.
பிரயத்தினம் - பெருமுயற்சி, பிரயாசம்.
பிரயாகை - கங்கை யமுனை என்னுமிரண்டுநதிகளின் சந்தி, அந்தச்சந்தியையுடையதான தலம். (இதனைப்பிரஜாபதிக்ஷேத்திரமென்பர்).
பிரயாசம் - மெய்வருத்தத்தைப்பொருட்படுத்தாதுசெய்யும் முயற்சி.
பிரயுதம் - பத்துலட்சம்.
பிரயோகம் - உபயோகம், கிரியைமுதலியவற்றின் பிரயோகத்தைக்கூறும் நூல்.
பிரயோகவிவேகம் - வடமொழி தமிழ்என்னுமிரண்டிலுமுள்ள பிரயோக ஒற்றுமைமுதலியவைகளையெடுத்துக்கூறும் நூல். (திருக்குருகூர்ச் சுப்பிரமணியதீட்சிதர் செய்தது).
பிரயோசனம் - பலன், உபயோகப்படுத்துகை.
பிரலம்பன் - பலதேவராற் கொல்லப்பட்ட ஒரு அசுரன்.
பிரலாபம் - துக்கப்புலம்பல்.
பிரவகன் - கிரகங்களையும் நட்சத்திரங்களையுஞ் சுற்றச்செய்யும் வாயு.
பிரவசனம் - சிறந்தவாக்கியம், வேறிடத்திருத்தல்.
பிரவரம் - வம்சம்.
பிரவாகம் - பெருக்கு.
பிரவாசம் - வேறிடத்தில்வசித்தல்.
பிரவாளம் - பவளம்.
பிரவிருத்தி - பிரவேசிப்பு, முயற்சி.
பிரவீணதை - சாமர்த்தியம்.
பிரவேசம் - உட்புகுதல்.
பிரளயம் - அழிவு, உலகமுடிவு, வெள்ளம்.
பிரளயம் ௫ - தைனந்தினம் நைமித்திகம் பிராகிருதம் ஆத்தியந்திகம் மகாப்பிரளயம் என்பன.
பிரளயாகலர் - பிரளயகாலத்து முத்தியடைபவர்.
பிரற்றல் - எடுத்தலோசையாகச் சந்தித்தல்.
பிராகாமியம் - எண்வகைச் சித்திகளுளொன்று. (விரும்பியதைப் பெற்றுக்கொள்ளல்).
பிராகாரம் - மதில்.
பிராகிருதம் - இயற்கையானது, திசைமொழி.
பிராகிருதர் - நீசர்.
பிராசம் - முதல், எதுகை.
பிராசனம் - உண்ணுதல், பருகுதல்.
பிராசாதம் - கோயில்.
பிராசாபத்தியம் - வேதவிரதங்களுளொன்று, எண்வகைமணங்களுளொன்று. (தலைமகனுடைய இனத்தார்வேண்டத் தலைமகளினத்தார் உடன்பட்டுத் தீமுன்கொடுப்பது).
பிராசி - கிழக்கு.
பிராசீனம் - பழையது.
பிராசீனவீதம் - இடமாகப் பூணூல் தரித்தல்.
பிராட்டி - தலைவி.
பிராணமயகோசம் - பிராணன் கன்மேந்திரியங்களுடன் சம்பந்தமுற்று நிற்றல்.
பிராணன் - உயிர், பிராணவாயு.

பிராணயாமம்-பிராணவாயுவை விதிப்படிஉள்ளேதடுத்து நிறுத்துதல். (யோகாங்கமெட்டுளொன்று).
பிராணி - உயிர்ப்பொருள்.
பிராதக்காலம் - உதயகாலம்.
பிராதமிகன் - முதல்வன்.
பிராதா - சகோதரன்.
பிராதிபதிகம் - வேற்றுமையுருபுகளையும் விகுதிமுதலியவைகளையும் ஏற்றற்குரியதாயிற்கும்பெயர். (வடமொழிவழக்கு).
பிராதுர்ப்பவம் - வெளிப்படுகை.
பிராதேசம்- ஒட்டை, (பெருவிரலையுஞ் சுட்டுவிரலையும் நீட்டியளக்கும் அளவு).
பிராந்தம் - அருகு.
பிராந்தி - திரிபானவிளக்கம், மாறுட்டம்.
பிராப்தி - அடைதல், எண்வகைச்சித்திகளுளொன்று.
பிராப்பியம் - அடையத்தக்கது.
பிராமம்-விடிதற்குமுந்திய முகூர்த்தம்.
பிராமி - சரசுவதி.
பிராயச்சித்தம் - பாவத்தை நீக்குதற்குச் செய்யும்நிவிர்த்தி.
பிராயம் - பருவம். (இளமை முதுமை முதலியன).
பிராரத்தம் - இப்பிறப்பிலனுபவிக்க வேண்டியதாய் நியமிக்கப்பட்ட வினைப்பயன்.
பிரார்த்தனை - வேண்டுகோள்.
பிராறு - நிறைபுனல்.
பிரான் - எப்பொருட்குமிறைவன், கடவுள்.
பிரிதல்-அகலுதல், ஒன்றுபலகூறுதல்.
பிரியம் - விருப்பம், உவகை.
பிரியன் - கணவன், சினேகிதன்.
பிரியை - மனைவி.
பிரிவினை - பிரிவு.
பிரிவு - வேற்றுமை.
பிரீதி - சந்தோஷம், திருப்தி, ஊனயோகங்களுள் ஒன்று.
பிருகதி - கத்தரிச்செடி.
பிருகச்சாதகம் - வராகமிகிரர் வடமொழியிற்செய்த ஓர்சோதிடநூல்.
பிருகற்சங்கிதை-வராகமிகிரர்வடமொழியிற்செய்த ஓர்சோதிடநூல்.
பிருகு - சுக்கிரன்.
பிருகுடி - புருவம்.
பிருங்கம் - வண்டு.
பிருங்கி-சிவனைச்சேவிக்கிறஒரு இருடி.
பிருச்சகன்-விசாரணைக்காரன், வினவுவோன்.

பிருட்டம் - பின்பக்கம், முதுகு.
பிருதகன் - கூலிக்குவேலைசெய்வோன்.
பிருதிவி (பிருதுவி) - பூமி.
பிருதுகம் - அவல்.
பிருதை - குந்திதேவி.
பிருத்தியன் - அடிமைவேலைக்காரன்.
பிருந்தம் - துளசி, கூட்டம்.
பிருந்தாரகர் - தேவர்கள்.
பிருந்தாவனம் - துளசிவனம். (யமுனநதிக்கு மேற்கிலுள்ள ஸ்ரீகிருஷ்ண க்ஷேத்திரம்).
பிருந்தை - சலந்தரன்மனைவி, துளசி.
பிரேடணம் (பிரேஷணம்) - ஏவுதல்.
பிரேதகருமம் - தகனமுதற் சபிண்டீகரணமீறான அபரக்கிரியை.
பிரேதம் - பிணம், பிசாசம், இறந்தபின்னுண்டாகும் பிரேததேகம்.
பிரேமம் - சினேகம்.
பிரேரகன் - ஏவிக் கருமத்தைநடப்பிப்போன்.
பிரேரணம் - ஏவுகை.
பிரேரித்தல் - ஏவுதல்.
பிரை - பாலுக்கிடும் உறை.
பிரௌடை-முப்பதின்மேல்ஐம்பத்தைந்துக்குட்பட்ட வயதுடையவள்.
பிரௌட்டபதம் - புரட்டாதிமாதம்.
பிலஞ்சுலோபம் - எறும்பு.
பிலம்-பாதலம், கீழறை, மலைமுழை.
பிலவ- அறுபதுவருடங்களுளொன்று.
பிலவங்க -அறுபதுவருடங்களுளொன்று.
பிலவங்கம் - குரங்கு, தேரை.
பிலவம் - தெப்பம், பாய்தல்.
பிலிற்றல்-சிறிதுசிறிதாய்க்கொப்பளித்தல்.
பில்கல்-சிறிதுசிறிதாய்க்கொப்பளித்தல்.
பில்லடை -சஃகுல்லியென்னும் அப்பவர்க்கம்.
[பில்லி - ஓர்வகைப்பேய்.]
பிழம்பு - திரட்சி.
பிழா - பனையோலையாற்செய்யப்பட்ட ஓர்வகைப்பாத்திரம்.(பெரும்.உஎசு).
பிழார் - இறைகூடை.
பிழி-கள், (சிவராத் சுகுமார கூசு), தேன். (சிந்தா).
பிழிதல்-சாறுமுதலியவற்றைப்பிழிதல்.
பிழியர் - கள்விற்போர்.
பிழை - குற்றம்.
பிழைத்தல் - பிழைசெய்தல், உய்தல், சீவனஞ்செய்தல்.
பிழைபாடு - தவறு.
பிழைப்பு - சீவிப்பு, பிழைப்படுதல்.

பிளத்தல் - மரம் சுவர்முதலியன வெடித்தல், வெடிக்கச்செய்தல்.
பிளவு - கீற்று.
பிளவை - ஓர்வகைக்கட்டு. பிளப்பு.
பிளிச்சு-மூங்கில்முதலியவற்றைப்பிளந்தெடுத்த சலாகை. (சிங் விசேடக்குறிப்பு; இக்காலத்தார் பிளாச்சு என்பர்).
பிளிறல்-யானைபிளிறுதல், பெருந்தொனியாய்ச்சத்தமிடல்.
பிள்ளை - மகன், [மகன் மகள் இரண்டுக்கும்பொது], காக்கை, கரிக்குருவி, கிளி (சிங்), வேளாளர்பட்டப்பெயர், சிறுமை, (உ-ம்: பிள்ளைப்பிறை), கீரி பூனை முயல் தவழ்சாதி சங்கு மான் கோட்டில்வாழ்விலங்குஎன்னுமிவற்றின்பிள்ளை, பறவைக்குஞ்சு, மரக்கன்று.
பிள்ளைக்கவி - பிரபந்தவகைகளுளொன்று. (பிள்ளைத்தமிழெனவும் இதனைக் கூறுவர். பிள்ளைமைப்பிராயத்தினிகழ்ச்சிகள் இந்நாலில்வருணிக்கப்படும். இது ஆண்பாற்பிள்ளைக்கவியும் பெண்பாற் பிள்ளைக்கவியுமென இருவகைத்து. காப்பு செங்கீரை தால் சப்பாணி முத்தம் வாரானை அம்புலி சிறுபறை சிற்றில் சிறுதேருருட்டல் என்னும் பத்தையும் உறுப்பாகவுடையது. பெண்பாற்பிள்ளைக்கவி- முன்குறித்த காப்புமுதலிய ஏழுடன் கழங்கு அம்மானை ஊசல் என்பவற்றைக்கூட்டிய பத்தையும் உறுப்பாகவுடையது. ஒவ்வோருறுப்பும்பப்பத்து ஆசிரியவிருத்தத்தாற் கூறப்படும்).
பிள்ளைமை - பிள்ளைத்தன்மை, புத்திக்குறைவு.
பிள்ளையார் - விநாயகக்கடவுள், திருஞானசம்பந்தமூர்த்தி.
பிள்ளைலோகாசாரியர் - திருவரங்கத்தந்தாதி திருவரங்கக்கலம்பகம்முதலியவற்றைப்பாடிய வைணவப்புலவர்.
பிற - வேறு, அசைச்சொல்.
பிறக்கிடல் - பின்னிடல்.
பிறக்கு - தவறு பின், அசைச்சொல்.
பிறங்கடை - மகன், மருமகன்,
பிறங்கல் - மலை, மிகுதி, ஒலி, உயர்ச்சி, பெருத்தல், பிரகாசித்தல், வளைதல், மிகுதல், நிறைதல்.
பிறங்கு - விரலிறை.
பிறத்தல் - சன்மித்தல்.
பிறந்தை - பிறப்பு.
பிறப்பு - உற்பத்தி, நெருக்கம், அச்சம்
பிறப்பு ௩ - உண்மை இம்மை வறுமை என்பர்.
பிறப்பு ௭ - தேவர் மக்கள் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்பன.
தேவர் பதினொன்றுநூறுயிரயோனிபேதம், மக்கள் ஒன்பது நூறுயிரயோனிபேதம், விலங்குபத்துநூறுயிரயோனிபேதம், புள் பத்துநூறுயிரயோனிபேதம், ஊர்வன பதினொருநூறுயிரயோனிபேதம், நீர்வாழ்வன பத்துநூறுயிரயோனிபேதம், தாவரம் இருபதுநூறுயிர யோனிபேதம், ஆக எழ்வகைப்பிறப்பினுமுள்ளயோனிபேதம்எண்பத்து நான்கு நூறுயிரம்.
பிறர் - அன்னியர்.
பிறவினை-பிறகருத்தாவின்புடைபெயர்ச்சியானிகழுந் தொழிலையுணர்த்துஞ்சொல்.
பிறழுதல்- நடுங்குதல், வேறுதல், ஒளிசெய்தல், *பேசுதல், முரிதல், பொருன களஅ).
பிறண்டு-வேறிடத்து.
பிறிதல்-பங்குபடுதல்.
பிறிதின் கிழமை- தன்னோடொற்றுமையில்லாத சம்பந்தம்.
பிறிது-வேறு
பிறை- இளஞ்சந்திரன்.
பிற்கொழுங்கோல்-உத்தரட்டாதி.
பிற்பக்கம்- அபரபக்கம்.
பிற்றை- பின்னைநாள்.
பிநாகபாணி(பிநாகி)-சிவன்.
பிநாகம்-சிவனுடைய வில்.
பினைதல்-பிசைதல்.
பின்-தம்பி, இடம், எதிர்காலம், இறுதி முதுகு, ஏழாம்வேற்றுமையுருபு.
பின்செல்லுதல் - தொடர்ந்து செல்லுதல்.
பின்பனிக்காலம்-மாசிபங்குனிமாதங்கள்
பின்பு-பின்.
பின்வருநிலை- முன்வந்த சொல்லாவது பொருளாவது பின்னும் வரச் செய்யுள் தொடுப்பது.
பின்றல்- பின்னிடுதல்.
பின்றை-பின்னைநாள், பின்,
பின்னகம்- மயிர்முடி, (ஆண்பான்மயிர் முடியெனப் பிங்கலம்).

பின்னடைப்பன்- பசுக்களுக்கு வரும் நோய்களுளொன்று.
பின்னம்-சிறுபங்கு, பின்னவெண், பிரிவு வேறுபாடு,
பின்னல்- மயிர்முதலியவற்றின்பின்னல், சிக்கு. சடை.
பின்னவர்- சூத்திரர்.
பின்னவன்- தம்பி.
பின்னை-இலக்குமி, தங்கை,பின்பு.
பின்னைகேள்வன்-திருமால்.

## பீ

பீ - மலம்.
[பீங்கான் - கண்ணாடிச்செய்கையானபாத்திரங்கள்].
பீசம்- வித்து, அண்டம், மூலம்.
பீச்சல்- மலங்கழித்தல், துவாரங்களினின்று நீர் முதலியன வேகமாய்க்கொப்பளித்தல்.
பீடணம்(பீஷணம்)- அச்சம்.
பீடம்- ஆசனம். [ருத்துதல்.
பீடனம்- பிழிதல், இறுகப்பிடித்தல், வ
பீடிகை- வணிகர்தெரு, பூந்தட்டு, ஆசனம், முகவுரை, ஆபரணச்செப்பு.
பீடு- பெருமை.
பீடை- துக்கம், நோய், உபத்திரவம்.
பீட்டன்- பாட்டனுடையபிதா. (பெண்பாலிற்பீட்டி). [ஞ்சூல்.
பீட்டை- நெல்முதலியபயிர்களின் இள
பீதகம்- இருவேலி, பொன், பொன்னி
பீதசாலம்- வேங்கைமரம். [றம்.
பீதம் - பொன், பொன்னிறம், நால்வகைச்சாந்திலொன்று, பருகப்பட்டது.
பீதன் - அச்சமுள்ளோன், பொன்னிறமுடையோன்.
பீதாம்பரம் - பொன்னூலாற் செய்யப்பட்டவஸ்திரம்.
பீதாம்பரன் - திருமால்.
பீதி - அச்சம். [முள்ளவன்.
பீதை - பொன்வண்ணக்குறிஞ்சி, அச்ச
பீமம் (வீமம்) - அச்சம்.
பீயூடம் (பீயூஷம்) - அமிர்தம்.
பீரம் - பீர்க்கு.
பீரு- அச்சமுள்ளோன், புருவம் [லை.
பீர் - அச்சம், பீர்க்கு, முலைப்பால், பச
பீர்க்கு - பீர்க்கங்கொடி.
பீலி - பெருஞ்சவளம், மலை, மயில், மயிற்றோகை, சிறுசின்னம், பறைவிசற்பம், பனங்கிழங்கின் பீலி, விசிறிவிகற்பம், வாத்தியப்பொது.
பீலித்தண்டு - பிண்டிபாலமென்னும் ஆ
பீழை - துன்பம். [யுதம்.
பீளை - கண்ணிலுண்டாகும் ஓர்வகை அழுக்கு.
பீள் - கருப்பம், இளங்கதிர். [தல்.
பீறல்- கிழிந்தபுடைவைமுதலியன, கிழித்
பீனசம் - நாசிரோகங்களுளொன்று.
பீனம் - பருமை, பாசி.

## பு

புகட்டல் - உட்புகுத்தல்.
புகர் - கபிலநிறம், குற்றம், சுக்கிரன், நிறம், யானைமத்தகத்துப்புள்ளி.
புகர்முகம் - யானை.
புகலல் - சொல்லுதல், குறித்தல், விரும்
புகலி - சீகாழி. [புதல்.
புகலூர் - திருப்புகலூர்.
புகல் - தஞ்சம், சரீரம், சொல், வெற்றி, விருப்பம், நெல்முதலியவைக்குங்கூடு, புகுதல், நுழைதல், (மதுரைக்கிகக).
புகல்வு - மனச்செருக்கு. (குறிஞ் கருகு).
புகழாப்புகழ்ச்சி - செய்யுளணிகளுளொன்று. (பழிப்பதுபோலப்புகழ்தல்).
புகழேந்தி - ஓர்புலவர். (நளவெண்பாமுதலியன இவராற்பாடப்பட்டன.)
புகழ்ச்சிமாலை - அகவலடியுங் கலியடியும் வந்து மயங்கியவஞ்சிப்பாவால் மாதர்களின்சீர்மையைப்பாடிய பிரபந்தம்.
புகழ்ச்சோழர் - கூகூதொண்டர்களுளொ
புகழ் - கீர்த்தி. [ருவர்.
புகழ்தல் - துதித்தல், பாராட்டல்.
புகழ்த்துணைநாயனர் - கூகூதொண்டர்களுளொருவர். [ள்.
புகழ்பொருள் - வருணிக்கப்படும்பொரு
புகா (புகவு) - சோறு.
புகார்-காவிரிப்பூம்பட்டினம், மதில், ஆ
புகுதி - வாயில். [ற்றுமுகம்.
புகுடி - புருவம்.
புகை - ஆவி, தூபம், யோசனைதூரம்.
புகைதல்- கோபத்தால்மனம்புழுங்குதல், புகைகாலுதல்.
புகையிலை - ஓர்செடி.
புகையுறை - ஒட்டறை.
புகைவு - புகைதல், மனப்புழுக்கம்.

புக்கில் - வீடு, புகுமிடம்.
புக்கு - பராய்மரம்.
புங்கம் - உயர்ச்சி, அம்பு, அம்புக்குதை, *புடவை, சிறுதுகில்.
புங்கவர் - தேவர்.
புங்கவன் - குரு, சிறந்தோன்.
புசித்தல் - உண்ணுதல்.
புசிப்பு - அனுபவம். [பருகுவன.
புசிப்பு ச - உண்பன தின்பன நக்குவன
புசை - இராசிமண்டலக்கூறு நான்கனு ள் முதலாவது அல்லது மூன்றுவதா னகூறு, முக்கோணம் சதுர்க்கோணம் முதலியவற்றின் ஒவ்வொருபக்கம்.
புச்சம் - வால், பிற்பாகம்.
புஞ்சம் - தொகுதி, திரள்.
புடம் - பொன் முதலியவற்றைஅறவைத் தல், மருந்தைச்சுத்திசெய்தல், சோ திடத்திற் கிரகங்களின் நிலையைக் காட்டும் புடம், புறம், மூடுதல்.
புடவி - பூமி.
புடவை - வஸ்திரம். [ற்றுமைபுருபு.
புடை - பக்கம், அடி, இடம், எழாம்வே
புடைத்தல் - அடித்தல், [சுளகுமுதலிய வற்றாற் கொழித்தல்], பறவைகள் சி றகடித்தல், குட்டுதல்.
புடைபெயர்ச்சி - இயக்கம்.
புடையல் - மாலை.
புடையன் - ஓர்வகைப்பாம்பு.
புடோல் - கொடிவகையுளொன்று.
புட்கரம் - நிறைவு, பாண்டமுகம், நாரை, ஆகாயம், எழுதீவுகளிலொன்று, தா மரை, நீர், தீர்த்தம், பருந்து, வாள், யானைத்துதிக்கைநுனி.
புட்கரிணி - தாமரைக்குளம்.
புட்கலம் - நிறைவு, ஒன்பதுமேகங்களு
புட்கலை - ஐயனரின் தேவி. [ளொன்று.
புட்கலைமணாளன் - ஐயனர்.
புட்டம் - காக்கை, சீலை, நிறைவு.
புட்டி (புஷ்டி) - சரீரமுதலியவற்றின் செழிப்பு.
புட்டில் - விரலுறை, ஆயுதங்கள்வைக் கும் உறை, இறைகூடை, குதிரைக் கெச்சை, (சிந்தா), குதிரைக்குணவு கட்டுங்கருவி. (சிந்தா).
புட்பகம் - குபேரனுடையவிமானம்.
புட்படுத்தல் - பட்சிகளை வலையிலகப்ப டுத்துதல்.
புட்பதந்தம் - வடமேற்றிசை யானை.
புட்பம் - பூ, பெண்கள்பூப்பு.
புட்பராகம் (புருடராகம்) - பதுமராகர
புட்பித்தல் - மலர்தல். [த்தினம்.
புணரி - கடல், கடற்கரை, கரை.
புணர் - புதுமை.
புணர்ச்சி - கலவி, இணக்கம், இசைப்பு.
புணர்தல் - இசைதல், கலத்தல், பொ ருந்துதல், அளவளாவல். [தல்.
புணர்த்தல் - உபாயஞ்செய்தல், இணங்கு
புணர்நிலை - இருபொருள்களின் தொழில் பண்பு முதலியவற்றை ஒன்றாகப் புணர்த்திக் கூறுதலாகிய அலங்காரம்
புணர்ப்பு - உபாயம், உடல்.
புணை - மரக்கலம், தெப்பம்.
புண் - விரணம், ஊன். [ழுகு.
புண்டரம் - இரேகை, விபூதிக்குறி, *க
புண்டரீகம் - தாமரை, வெண்டாமரை, தென்கீழ்த்திசையானை, புலி, வண் டு, கழுகு. [தி.
புண்ணியசாந்தம் - பசுவின்சாணம், விபூ
புண்ணயத்தின்மூர்த்தி - புத்தன்
புண்ணியபூமி - புண்ணியத்தையிட்டுதற் குரியதேசம்.
புண்ணியமுதல்வன் - புத்தன்.
புண்ணியம் - நல்வினை. [க்கம்என்பன.
புண்ணியம் ச - தானம் கல்வி தவம் ஒழு
புண்ணியன் - புண்ணியமுடையோன், அருகக்கடவுள்.
புண்ணியாகம் - புண்ணியதினம்.
புண்ணியாகவாசனம் - சுத்திக்காகச் செய்யும் ஓர்கிரியை.
புண்ணீர் - இரத்தம்.
புதர் - சிறுதூறு.
புதல் - புருவம், பூடு, சிறுதூறு. [வி.
புதல்வன் - மகன். (பெண்பாலில் புதல்
புதவு - கோபுரவாயில், கதவு, ஓர்வகைப் புல். (அறுகம்புல்லென மலைபடு சசக).
புதன் - ஓர்கிரகம், புதவாரம், அறிஞன்.
புதிதுண்ணல் - புதியவிளைவாலாகிய அன்னத்தைச் சுபதினத்தில் உண்ணு
புதுக்குதல் - புதுப்பித்தல். [தல்.
புதுச்சேரி - ஓர்பட்டினம்.
புதுமை - நூதனம், மிகுதி.
புதை - உடல், அம்புக்கட்டு, *புதுமை.
புதைதல் - மறைதல்.

புதையல் - நிலத்திற்புதைத்து வைத்த திரவியம்.
புத்தகம் - ஏடு, புத்தகம், சித்திரப்பிரதி [மை
புத்தம் - புத்தமதம்.
புத்தன் - அருகன், திருமால், புத்தன்.
புத்தி - நற்புத்தி, அறிவு, போசனம். அந்தக்கரணங்களுளொன்று, மகத்தத்துவம், சோதிடத்தில் மகாதசை முதலியவற்றின் புத்தி.
புத்திக்குரியஇயல்பு அ - சுசுருஷை சிரவணம் கிரகணம் தாரணம் ஊகம் அபோகம் அர்த்தவிஞ்ஞானம் தத்துவஞானம் என்பன.
புத்திரகன் - விசேடதீட்சைபெற்றோன் (சைவமதவழக்கு).
புத்திரகாமேட்டி - புத்திரப்பேற்றைக் குறித்துச்செய்யும் யாகம்.
புத்திரன் - மகன், (புத் என்னும்நரகத்திற் செல்லாவண்ணம் பிதாவைக் காப்பவனென்பதுபொருள்; பெண்பாலில் புத்திரி).
புத்தேளிர் - தேவர்கள்.
புத்தேள் - தெய்வம், புதுமை.
புந்தி - அறிவு, புத்தி, புதன்.
புபுட்சு - போகத்தை விரும்பியவன்.
புமான் - ஆடவன்.
பும்சவனம்-கருப்பமாயிருக்கும்போது செய்யுஞ்சம்ஸ்காரங்களுளொன்று.
புயங்கம் - பாம்பு.
புயம் - தோள்.
புயல் - மேகம்.
புய்த்தல் - ஈர்த்துப்பிடுங்குதல்.
புரசு - பலாசமரம்.
புரசை - யானைகட்டுங்கயிறு.
புரஞ்சயன் - சூரியகுலத்தரசருளொருவன்.
புரட்டாதி - ஓர்மாதம். [ருவன்.
புரட்டு - விபரீதமானசெயல்.
புரட்டுதல்-உருட்டுதல், மாறுபடுத்தல்.
புரட்டை - பூரட்டாதிநட்சத்திரம்.
புரத்தல்-காத்தல், கொடுத்தல், வணங்குதல்.
புரந்தரன் - இந்திரன்.
புரம் - நகரம், வீடு, முன், உடல்.
புரம் ௩ - பொன் வெள்ளி இரும்பு என்னும் மூன்று லோகங்களாற் செய்யப்பட்ட (அசுரர்களுடைய) புரங்கள். (இவைபரமசிவனுலெரிக்கப்பட்டன).
புரவலன் - அரசன், கொடையாளன்.
புரவி - குதிரை, அச்சுவினிநட்சத்திரம்.
புரவிவட்டம் - குதிரைவையாளிவீதி.

புரவு-கொடை, அரசிறை, விளைநிலம்
புரளல் - புரளுதல், மாறுபடுதல்.
புரளி - புரட்டு.
புராணம் - வியாசர்முதலியவர்களாற் சொல்லப்பட்ட புராணங்கள்.
புராணம் ௧அ - சிவபுராணம் ௧0; விஷ்ணுபுராணம் ௪; பிரமபுராணம் ௨; சூரியபுராணம் ௧; அக்கினிபுராணம் ௧; ஆகப்பதினெட்டு.

சிவபுராணம்பத்து: சைவம் பவிடியம் மார்க்கண்டேயம் இலிங்கம் காந்தம் வராகம் வாமனம் மற்சம் கூர்மம் பிரமாண்டம் என்பன. விஷ்ணுபுராணம் ௪: காருடம் நாரதீயம் விஷ்ணு பாகவதம் என்பன. பிரமபுராணம் ௨: பிரமம் பதுமம் என்பன. சூரியபுராணம்: பிரமகைவர்த்தம். அக்கினிபுராணம்: ஆக்கினேயம்.

புராணவிலக்கணம் - உலகத்தோற்றம் ஒடுக்கம் மன்வந்தரம் அரசர் முனிவர்முதலியோர்சரித்திரம் முத்திநெறி கடவுளின் மகத்துவம் முதலியன. (ஐந்தாகவும் பதினொன்றாகவும் சிலர் கூறுவர்).
புராதனம் - தொன்றுதொட்டுள்ளது.
புராந்தகன் (புராரி) - சிவன்.
புரி - சங்கு, நகரம், கயிறு, கட்டு, முறுக்கு.
புரிசை - மதில்.
புரிதல் - செய்தல், விரும்பல்.
புரிந்தார் - மித்திரர்.
புரியட்டகம் - தன்மாத்திரையைந்து மனம் புத்தி அகங்காரம் என்பன.
புரியம் - கூத்தின்விகற்பம்.
புரிவு - அன்பு.
புரீடம் - (புரீஷம்) - மலம்.
புருகுற்சன் - ஓர்சக்கிரவர்த்தி.
புருகூதன் - இந்திரன்.
புருடத்துவம் - ஆண்டன்மை, வீரம்.
புருடவாகனம் - விமானம்.
புருடவாகனன் - குபேரன்.
புருடன் - ஆண்மகன், சீவான்மா, இறைவன், மனிதன்.
புருடார்த்தம் ௪ - அறம் பொருள் இன்பம் வீடு என்பன.
புருடோத்தமன் - திருமால்.
புருவம் - நெற்றிப்புருவம், விளிம்பு.
புருவை - ஆடு, இளமை, செம்மறியாடு.
புருணம் - கருப்பம்.

புரூரம் - நெற்றிப்புருவம்.
புரூரவன் - சந்திரவம்சத்தரசனான ஒரு சக்கிரவர்த்தி.
புரை - உட்டுளை, உட்டுளைப்பொருள், குற்றம், வீடு, உயர்ச்சி, ஒப்பு.
புரைதல் - தைத்தல், ஒத்தல். [மக்கள்.
புரையோர் - கள்வர், கீழ்மக்கள், மேன்
புரோகதி - நாய்.
புரோகிதன் - கிரியைகளைச் செய்விக்கும் ஆசாரியன், இந்திரன்.
புரோசர் - குறுநிலமன்னர், புரோகிதர், (உலகிய ௫௫).
புரோசனன் - குபேரனுக்குவாகனமாயிருக்கும் நரன், துரியோதனனுக்கு நண்பனுயிருந்து பாண்டவர்களைக் கொல்லும்படி அரக்குமாளிகைசெய்வித்தோன்.
புரோசு - புரோகிதம்.
புரோசைக்கயிறு - யானைக்கழுத்திற்கட்
புரோடாசம் - நெய். [டுங் கயிறு.
புரோட்சணம் - தெளித்தல்.
புலகன் - எழுமுனிவர்களுளொருவர்.
புலத்தல் - கலவியிற்பிணங்கல், வெறுத்தல்.
புலத்தியன் - எழுமுனிவர்களுளொருவர்.
புலப்படுதல் - விளங்குதல். [னம்.
புலமை - வித்துவத்தன்மை, மெய்ஞ்ஞா
புலமையோர் நால்வர் - கவி கமகன் வாதி வாக்கி என்பவர்கள்.
புலம் - இடம், ஐம்புலம், வயல், அறிவு, திசை, மெய்ஞ்ஞானம். [த்தல்.
புலம்பல் - பிரலாபித்தல், ஒலித்தல், தனி
புலம்பன் - நெய்தனிலத்தலைவன்.
புலம்பு - ஒலி, தனிமை, பயம், துன்பம்.
புலரி - விடியற்காலம்.
புலர்தல் - காய்தல், விடிதல்.
புலர்த்தல் - காய்ச்சுதல், பூசுதல்.
புலவர் - தேவர், கூத்தர், கம்மாளர், பண்டிதர், பாடுவோர்.
புலவன் - புதன், இந்திரன், முருகக்கடவுள், அருகன், அறிஞன்.
புலவி - கூடியுங்கூட்டமின்மை. (ஆடவர் மகளிரைக்கூடும்போதுவருஞ் சிறுபிணக்கு).
புலவு - புலால்மணம், ஊன், நரகம்.
புலனிடம் - வாய்.
புலன் - அறிவு, இந்திரியவுணர்ச்சி.
புலன் ௫ - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன.
புலாகம் - சோறு, பதர். [றம் என்பன.
புலால் - ஊன்.
புலானீர் - இரத்தம்.
புலி - சிங்கம், புலி, நால்வகைச்சாந்திலொன்று, (பைம்புலி புலர்த்தும்; சிவரா கன்மா உ).
புலிங்கம் - தீப்பொறி, ஊர்க்குருவி.
புலிதொடக்கி - இண்டங்கொடி.
புலித்தோலுடையோன் - சிவன்.
புலிப்பாணி - போகரிஷியின் சீடர்களுளொருவர்.
புலிமுகச்சிலந்தி - ஓர்விஷப்பிராணி.
புலிமுனி - வியாக்கிரபாதமுனிவர்.
புலியுயர்த்தோன் - சோழன்.
புலியூர் - சிதம்பரம்.
புலுதம் - அளபெடை, பாய்ந்துநடத்தல்.
புலை - புன்குணம், புலால்விற்றல்.
புலையன் - சண்டாளன். (பெண்பாலில்
புலோமசித்து - இந்திரன். [புலைச்சி).
புலோமசை - இந்திராணி.
புல் - புலி, புதல், சிவற்பறவை, அற்பம், பனை, அனுடநட்சத்திரம், புல்லெனல், புறக்காழ்மரம்.
புல்லகண்டம் - கண்டசர்க்கரை.
புல்லகம் - நுதலணி.
புல்லம் - எருது, இடபராசி, மலர்ந்தபூ.
புல்லர் - கீழோர்.
புல்லல் - தழுவுதல், புணர்தல், பொருந்
புல்லாந்தி - ஓர்மரம். [தல்.
புல்லார் - பகைவர்.
புல்வி (புல்விதழ்) - புறவிதழ்.
புல்லிங்கம் - ஆண்பால்.
புல்லுநர் - மித்திரர்.
புல்லுருவி (புல்லூரி) - குருவிச்சை.
புல்லெனல் - ஒளிமழுங்குதல், பொலிவுகெடுதல்.
புல்வாய் - கலைமான், மான்.
புவலோகம் - மேலேழுலகங்களிலொன்
புவனம் - உலகம், பூமி, நீர். [று.
புவி - பூமி.
புழக்கம் - வழக்கம்.
புழல் - மீன், சலதாரை, துளை.
புழு - கிருமி, கீடம். (கிருமி-சிறுபுழு; கீடம்-பெரும்புழு).
புழுகு - அம்புக்குப்பி.
புழுக்கம் - வெப்பமாற்றாமை.

புழுக்கல் - அவித்தல், சோறு.
புழுக்கை - ஆடுமுதலியவற்றின்மலம்.
புழுக்கையன் - அற்பன்.
புழுங்கல் - கோபமுதலியவற்றால் மனம்
வெதும்புதல், புழுக்கப்பட்டபொருள்.
புழுதி - தூளி.
புழுத்தல் - புழுவுண்டாதல்.
புழை - சிறுவாயில், உட்டுளை, துளையு
டைப்பொருள்.
புழைக்கடை - பின்புறவாயில்.
புழைக்கை - யானை, யானைத்துதிக்கை.
புளகம் - மயிர்ச்சிலிர்ப்பு, கண்ணாடி,
சோறு.
புளி - அறுசுவைகளிலொன்று, புளியம
புளிஞர்(புளினர்) - வேடர். [ரம்.
புளிதம் - ஊன்.
புளித்தல் - புளிப்பாதல்.
புளிந்தன் - வேடன்.
புளிப்பு - அறுசுவைகளுளொன்று.
புளினம் - மணற்குன்று.
புள் - வண்டு, பறவைப்பொது, அவிட்
டநட்சத்திரம், கைவளை. (மலைபடு
௨௫௬).
புள்ளடி - பறவையினடிச்சுவடுபோன்ற
அடையாளம்.
புள்ளம் - அரிவாள்,
புள்ளி - ஒற்றெழுத்து, அடையாளம், இ
ரத்தினக்குற்றங்களுளொன்று, பல்லி.
புள்ளுவம் - வஞ்சகம்.
புள்ளுவர் - கீழோர், பாலைநிலமாக்கள்,
வேடர். (புள்ளினோசையைத் தம்மி
டத்துடையோர்).
புறக்கணித்தல் - (அன்பின்றிப்) பராமுக
மாயிருத்தல்.
புறக்காழ் - புறவைரமுள்ளமரம்.
புறக்காடு - சுடுகாடு.
புறங்கால் - புறவடி.
புறங்கூறல் - காணாதவிடத்தேதூற்றுதல்.
புறச்சமயம் ௬ - உலோகாயதம் பௌத்தம்
ஆருகதம் மீமாஞ்சம் மாயாவாதம்
பாஞ்சராத்திரம் என்பன.
புறஞ்சிறை - வேலிப்புறம்.
புறணி - தோல், புலால், புறம், குறிஞ்
சிநிலம், முல்லைநிலம், மரப்பட்டை.
புறத்தவன் - ஐயனார், அன்னியன்.
புறத்திணை - வெட்சிமுதலிய எழுவகை
புறநானூறு - ஓர்நூல். [யொழுக்கம்.

புறந்தருதல் - தோற்றல், பாதுகாத்தல்,
(மலைபடு ௯௭௪).
புறப்படுதல் - வெளியேபோதல்.
புறப்பொருள் - அறம்பொருள் என்னும்
இருவகையின்பாற்பட்டன, அவற்
றைக் கூறும் நூல்.
புறமயிர் - உரோமம்.
புறம்(புறன்) - இடம், பக்கம், முதுகு,
பின்பக்கம், வீரம், அகமல்லாதது,
*மதில், ஏழாம்வேற்றுமையுருபு.
புறம்பணை - முல்லைநிலம், குறிஞ்சிநிலம்.
புறவணி - குறிஞ்சிநிலம், முல்லைநிலம்.
புறவம் - காடு, முல்லைநிலம், குறிஞ்சிநி
லம், புறா, சிறுகாடு.
புறவிதழ் - பூக்களின் புல்லிதழ்.
புறவீச்சு - ஓர்சன்னி.
புறவுரை - பாயிரம்
புறனடை - புறத்தேயடுத்துச்சொல்லும்
புறா - ஓர்பட்சி [விதி.
புறாக்காலி - ஓர்பூடு.
புற்கலம் - உடல்.
புற்கலன் - உயிர்.
புற்கு - புகர்நிறம்.
புற்கை - கூழ், மிக்கநீராலடப்பட்ட உ.
புற்கொடி - பேய்ச்சுரை. [ணவு, (புற).
புற்பதி - பனை.
புற்பாய் - பன்பாய்.
புற்புதம் - நீர்க்குமிழி.
புற்றாஞ்சோறு - கறையான்கூடு.
*புற்றாளி - பனை.
புற்று - கறையான்களாலுண்டாக்கப்படு
புனமுருக்கு - பலாசமரம். [ம் புற்று
புனம் - வயல், கொல்லை.
புனருத்தி - கூறியதுகூறல். [ரம்
புனர்தம் - (புனர்வசு) - புனர்பூசநட்சத்தி
புனர்பூசம் - ௭நட்சத்திரங்களுளொன்
புனலை - ஓர்மரம். [று.
புனல் - நீர், யாறு, கடல்.
புனல்வேந்தன் - வருணன்.
புனவர் - குறிஞ்சிநிலமாக்கள்.
புனனாடன் - சோழன்.
புனிதம் - தூய்மை, புனர்பூசநட்சத்திரம்.
புனிலன் - சுத்தமுடையோன், அருகன்.
புனிறு - புதுமை, ஈன்றணிமை.
புனுகு - ஓர்வாசனைத்திரவியம்,
புனை - அழகு, பொலிவு, அலங்காரம்,
கால்கைகளிலிடும் விலங்கு.

புனைதல் - அலங்கரித்தல், செய்தல்.
புனைந்துரை - பாயிரம்.
புனைந்தோர் - கம்மியர்.
புனைவிலி - உபமானம்.
புனைவுளி - உப்மேயம்.
புன்கண் - துன்பம், நோய், வறுமை.
புன்கம் - சோறு, புன்கமரம்.
புன்காலி - பாதிரிமரம், காயாமரம்.
புன்கு - புன்கமரம், புனமுருங்கை.
புன்செய் - சிறுதானியம்விளையுமிடம்.
புன்மை - எளிமை, சிறுமை.
புன்னகம் (புன்னை) - புன்னைமரம்.

## பூ

பூ - மலர், தாமரைப்பூ, பூமி, நிலம். பொலிவு, அழகு, ஆயுதங்களின் கூர்மை, கண்ணில்விடும்பூ, புகர்நிறம், (திருமுரு ௯௦௯).
பூகதர் - புகழ்வோர்.
பூகம் - கமுகு, திரட்சி, கழுகு.
பூக்கம் - ஊர், கமுகு, மருதநிலத்தூர்.
பூங்கா - நந்தவனம்.
பூசகன் - பூசைசெய்வோன்.
பூசம் - உஎ நட்சத்திரங்களுளொன்று.
பூசல் - போர், ஆரவாரம், பூசுதல், வீடு முதலியவற்றையலங்கரித்தல்.
பூசனி - ஓர்கொடி.
பூசித்தல் - பூசைசெய்தல்.
பூசுரர் - அந்தணர்.
பூசை - வழிபாடு, பூனை, *வெண்கிடை.
பூச்சி - சிறுபிராணிகள்.
பூச்சியம் - சுன்(0), பூசிக்கப்படுந்தன்மை.
பூஞை - பூனை.
பூஞ்சு - சிலந்திகள்கட்டும்பூஞ்சு.
பூடணம் (பூஷணம்) - ஆபரணம், அலங்கரிப்பு.
பூடா (பூஷா) - பன்னிரு சூரியருளொருவன்.
பூடு - சிறுசெடி.
பூட்கை - சிங்கம், யானையாளி, யானை, மேற்கோள். (நிக கூ கூக), வலி. (திருமுரு உசஎ).
பூட்சி - உடல்.
பூட்டல் - தொடுத்தல்.
பூட்டு - கதவுமுதலியவற்றின்பூட்டு, பொருத்து, வில்நாண், பிணிப்பு.
பூட்டை - இறைகூடை, நீரிறைக்குமியந்திரம்.
பூணல் - அணிதல்.
பூணி - இடபம், இடபராசி.
பூணூல் - உபவீதம்.
பூண் - ஆபரணம், கிம்புரி, உலக்கை முதலியவற்றிலிடும் பூண்.
பூண்டி - ஊர்.
பூண்டு - பூடு.
பூதக்கண்ணாடி - சிறுபொருளைப்பெரும் பொருளாகக்காட்டுங் கண்ணாடி.
பூதசுத்தி - சரீரத்துட்பட்ட தத்துவங்களைச் சுத்திசெய்யுங்கிரியை.
பூததாத்திரி - பூமி.
பூதநாதன் - சிவன், வயிரவக்கடவுள்.
பூதநிருத்தம் - ஒருகாலைமுடக்கிநடித்தல்.
பூதம் - ஆலமரம், சுத்தம். ஐம்பூதங்கள், பிசாசம், இறந்தகாலம், பரணிநட்சத்திரம், சீவான்மா.
பூதம் ரு - நிலம் நீர் தீ காற்று ஆகாயம் என்பன.
பூதயஞ்ஞம் - காகமுதலியபிராணிகளைக் குறித்துப் போசனகாலத்தில் இல்வாழ்வான் கொடுக்கவேண்டியபலி.
பூதரம் - மலை.
பூதர் - சிவன்முதலியவர்களைச் சேவிக்குங் கணத்தவருள் ஒருசாரார்.
பூதலம் - பூமி.
பூதவம் - மருதமரம், ஆலமரம்.
பூதனை - நஞ்சுபூசிய முலையின்பாலைப்பருகச்செய்து கிருஷ்ணராற்கொல்லப்பட்டவள், ஒருபெண்தேவதை.
பூதி - சாம்பர், விபூதி, புலால், மலமுதலியவற்றினாற்றம், புழுதி, நரகம், கொடுமை, செல்வம், சேறு.
பூதிகம் (பூதியம்) - சரீரம், பூமி, செல்வம், நிலமுதலிய ஐம்பூதங்களின் சம்பந்தமானபொருள், எண்வகைச்சித்தி.
பூதேவர் - பிராமணர்.
பூதை - அம்பு.
பூத்தல் - மலர்தல், பொலிவுபெறுதல், பெண்களிருதுவாதல், உண்டாதல், பிறத்தல்.
பூநாகம் - நாங்கூழ். (நாக்குளி).
பூந்தட்டு - மலர்சித்திரிக்கப்பெற்றதட்டம்.
பூந்தை (மரூஉ) - பூதன்றந்தை.
பூபதி (பூபன், பூபாலன்) - அரசன்.
பூப்பகம் - பெண்குறி.
பூப்பு - மகளிர்சூதகம்.
பூமகள் - இலக்குமி, சரசுவதி, பூமிதேவி.
பூமகன் - செவ்வாய்.
பூமத்தை - மதமத்தையென்னுஞ்செடி.
பூமன் - செவ்வாய், பிரமன்.

பூமி - நிலம், பூகோளம், இடம்.
பூமிசை நடந்தோன் - புத்தன், அருகன்.
பூமிதேவி - நிலத்தின்றெய்வம்.
பூயிஷ்டம் - அதிகமாதல், திதிமுதலிய வைகள் அதிகவியாபகமாய்நிற்றல்.
பூரகம் - நிறைத்தல், வாயுவைமூக்கினல் இழுத்து உள்ளேநிறைத்தல்.
பூரணகும்பம் - நீர்நிறைந்தகுடம்.
பூரணம் - நிறைவு.
பூரணன் - அருகன், கடவுள்.
பூரணி - இலவமரம், உமாதேவி.
பூரணை - பூரணைத்திதி, பஞ்சமி, தசமி பூரணை அல்லது அமாவாசை என்னு [ந்திதிகள்.
பூரணைகேள்வன் - ஐயனார்.
பூரம் - ஓர் நட்சத்திரம், தேன், (பூரானெனவழங்கும் விஷப்பிராணி), மூளைத் ததேங்காயினுள்ளும் பனம் வித்தினுள்ளுமிருப்பது.
பூராடம் - ஓர் நட்சத்திரம்.
பூரி - வரிக்காது கொடுக்குந்தானம், பொன், மிகுதி, வில்நாண்.
பூரிகை - அப்பவர்க்கம்.
பூரித்தல் - நிறைத்தல்.
பூரிப்பு - நிறைவு, மிகுதி.
பூரிமாயன் - நரி.
பூரியம் - ஊர், அரசர்வீதி, அரசிருக்கும [ண்டபம்.
பூரியர் - கீழோர்.
பூரு - புருவம், குருகுலத்தரசரிலொருவ [வன்,
பூருகம் - மரம்.
பூருண்டி - மல்லிகை.
பூருவபக்கம் - வளர்பிறை, தருக்கமுதலியவற்றில் மறுக்கப்படவேண்டியன.
பூருவபற்குனி - பூரம். [களின் முன்.
பூருவம் - கிழக்கு, இடம் காலம் இவை
பூர்ணமாசம் - பூரணையிற்செய்யப்படுகின் [றஒருயாகம்.
பூர்த்தி - நிறைவு.
பூர்வவாதி - வழக்காளி.
பூர்வான்னம் - முற்பகல்.
பூவகை ச - கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூ புதற்பூ என்பன.
பூவணம் - மதுரைக்குச் சமீபமாகவுள்ள [ஓர்சிவதலம்.
பூவரசு - ஓர்மரம்.
பூவல் - சிவப்புநிறம்.
பூவாளி - மன்மதன். [பெண்.
பூவை - காயாமரம், நாகணவாய்ப்புள்,
பூழி - கொடுந்தமிழ் நாடுகளிளொன்று, புழுதி, *சேறு.

*பூழியன் - சேரன், பாண்டியன்.
பூழில் - அகில், பூமி.
பூழிவேந்தன் - பாண்டியன்.
பூழை - துவாரம், மலைக்கணவாய்.
பூழ் - நிலங்கொன்னும்பறவை.
பூழ்க்கை - யானை.
பூழ்த்தி - கொடுமை, தசை, நுண்பொடி முடைநாற்றம்.
பூளை - இலவின்பஞ்சு, மலைக்கணவாய் [ஓர்செடி.
பூனை - பூஞை.

## பெ

பெடை - பறவைப்பெண். [ட்டி
பெட்டகம் - மரமுதலியவற்றாலானபெ
பெட்டல் - அதிகமாகஆசைப்படல்.
பெட்டார் - மித்திரர்.
பெட்டி - மரமுதலியவற்றாலானபெட்டி, ஓலைமுதலியவற்றா லிழைத்தபெட்டி.
பெட்டு - பொய்.
பெட்டை - ஒட்டகம் கழுதை குதிரை சிங்கம் மரை இவற்றின்பெண், பறவைப்பெண்.
பெட்பு - ஆசை, பெருமை, அன்பு.
பெண் - பெண், மனைவி, விலங்கினதும் பறவைகளதும் பெண்.
பெண்களான்மலர்மரம் கO - மகிழ் பாலை பாதிரி முல்லை புன்னை குரா அசோகு குருக்கத்தி மா சண்பகம்என்பன.
இவற்றுள் மகிழ் சுவைத்தலாலும் பாலை நண்புசெய்தலாலும் பாதிரிநிந்தித்தலாலும் முல்லை நகைத்தலாலும் புன்னை ஆடுதலாலும் குரா அணைத்தலாலும் அசோகு உதைத்தலாலும் குருக்கத்தி பாடுதலாலும் பார்த்தலாலும் சண்பகம் நிழல்படுத்தலாலும்தளிர்த்துப்பூப்பனவாரம்.
பெண்களின்குணம் ச - நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்பன.
பெண்களின்பருவம் எ - பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம்பெண் என்பன.
பெண்குறி - யோனி.
பெண்கை அ - கடகம் சுகதுண்டம் காங்கூலம் பிறைக்கை அராளம் பக்சம் தாம்பிரசூடம் மான்றலை என்பன.
பெண்டாட்டி - மனையாள்.
பெண்டிர் - மனைவி.

பெண்டு - பெண்.
பெண்ணை - பனைமரம், அனுடநட்சத்திரம், ஓர்நதி.
பெண்பனை - காய்க்கும்பனை.
பெண்மரம் - புறவைரமுள்ளமரம்.
பெண்வகை ௪ - அத்தினி சித்தினி சங்கினி பதுமினி என்பன.
பெதும்பை- ஏழுவயதின்மேற் பதினொருவயதுக்குட்பட்டபெண், பெண்.
பெம்மான் - பெருமான்.
பெயரிடுதல் - நாமகரணம்.
பெயரின்னிசை- பாட்டுடைத் தலைவன் பெயரைவைத்து இன்னிசை வெண்பாவால் ௯0 ௭0 ௫0 என்னுந்தொகையமையப்பாடுவது.
பெயரெச்சம் - பெயரெஞ்சிநிற்கும்வினைச்சொல்.
பெயர் - நாமம், கீர்த்தி, பெயர்ச்சொல், பெருமை.
பெயர்ச்சி- கிரகங்கள் ஒருராசியில்அல்லது ஒருபாதத்திலிருந்து வேறோரிராசிக்கு அல்லது பாதத்திற்குப்போதல், சலனம், மாற்றம்.
பெயர்தல் - பிறழ்தல், சஞ்சரித்தல், வேறுபடுதல், அசைத்தல், கூத்தாடல், கிளர்தல்.
பெயர்திறம் - செவ்வழியாழ்த்திறங்களுளொன்று.
பெயர்த்தல் (பெயர்தலின்பிறவினை) - கிளப்புதல், திரும்புதல், வேறுபடுதல்.
பெயர்நேரிசை - பாட்டுடைத்தலைவன் பெயரைவைத்து நேரிசைவெண்பாவால் ௯0 ௭0 ௫0 என்னுந்தொகையமையப்பாடுவது.
பெயர்வேற்றுமை - எழுவாய்.
பெயல் - மழை.
பெய்கலம் - கொள்கலம்.
பெய்தல்- நீர்முதலியவற்றைச்சிந்துதல், செறித்தல்.
பெய்துரை - பாயிரம்.
பெரியபுராணம் - திருத்தொண்டர்களின்சரித்திரத்தைக்கூறும் புராணம்.
பெரியாழ்வார் - திருமாலின் அடியவர்களுளொருவர்.
பெரியோரியல்பு ௭ - அறம் பொருள் இன்பம் அன்பு பொறுமை புகழ் மதிப்பு என்பன.
பெரியோர் - பெரியவர்கள்.
பெரியோர்க்குச்செய்யும்புண்ணியம் ஒன்பது - எதிர்கொள்ளுதல் பணிதல் ஆசனத்திருத்துதல் கால்கழுவுதல் அருச்சித்தல் தூபமிடல் தீபங்காட்டல் உணவுகொடுத்தல்துதித்தல் என்பன.
பெருகல்-மிகுதல், விருத்தியடைதல்.
பெருகு- தயிர்.
பெருக்கம்- விருத்தி, செல்வம்.
பெருக்கல்- பெருக்கற்கணக்கு, மிகுவித்தல்.
[பெருக்கன்-பெருத்தது.நுட்பமற்றது].
பெருக்காளர்- சூத்திரர்.
பெருக்கு-வெள்ளம்.
பெருங்கதை- விநாயகருடைய ஓர்சரித்திரம்.
பெருங்காப்பியம் - காப்பியவிலக்கணமுற்றுமமைந்த பிரபந்தம்.
பெருங்காயம்-ஓர் சரக்கு.
பெருங்கிராமம்- ௫00 குடியுள்ளவூர்.
பெருச்சாளி-எலிவகையுளொன்று.
பெருஞ்சொல்- பலரறிசொல்.
பெருத்தல்- பெருமையாதல்.
பெருநாள்-இரேவதி நட்சத்திரம்,விசேஷதினம்.
பெருநீர்-கடல்.
பெருந்தகை-பெருந்தன்மையுடையான்.
பெருந்திணை- பொருந்தாக்காமம்.
பெருந்தேவனார்-சங்கப்புலவருளொருவர்.
பெருமகிழ்ச்சிமாலை-அரசர்பிறந்தநாளிற் சிறைசெய்தன் முதலியசெற்றங்களை விட்டுச் சிறைவிடுதன் முதலிய சிறப்புக்களை நிகழ்த்துவதாகக் கூறும் பாடல், தலைவியின் குணம் சிறப்பு முதலியவற்றைக்குறித்துப் பாடியபாடல்.
பெருமஞ்சிகன்- நாவிதன்.
பெருமலை- மேருமலை.
பெருமல்லிகை- சிறுபஞ்சமூலங்களுளொன்று.
பெருமா-யானை.
பெருமாட்டி- தலைவி.
பெருமாள்- திருமால், பெருமையிற்சிறந்தோன்.
பெருமான்-கடவுள், சிவன், திருமால், பெருமையிற்சிறந்தோன், அரசன்.
பெருமிதம்- செருக்கு.
பெருமீன்- யானைமீன்.
பெருமூச்சு- நெடுமூச்சு.
பெருமை - மகிமை.
பெரும்பஞ்சமூலம்- தழுதாழை பாதிரி பெருங்குமிழ் வாகை வில்வம் என்பவற்றின் மூலங்கள்.
பெரும்புள் - கூகை.
பெரும்பேது-இறப்பு.
பெரும்பொழுது- கார் கூதிர் முதலிய ஆறு பருவங்கள். (ஆண்டுமுதலியனவுமாம்].

பெருவியர்தி - ஓர்யோய்.
பெறல் - அடைதல், கிடைத்தல், பிரசவித்தல்.
பெறுக்கல் - பொறுக்கல்.
பெறுமதி - விலை.
பெறுவகொள்வாள் - வேசி.
பெற்றம் - எருது, இடபராசி, பசு.
பெற்றார் - பிதாமாதாக்கள்.
பெற்றி - தன்மை.

## பே

பேகம் - தவளை.
பேகன் - கடைவள்ளல்களுளொருவன்.
பேசகம்- ஆந்தை, யானைவாலடி, மேகம்.
பேசலம் - சாமர்த்தியம், அழகுடைமை.
பேசல் - சொல்லுதல்.
பேசி - முட்டை, மாமிசத்திரட்சி.
பேச்சு - சம்பாஷணை.
பேடகம் - பேழை.
பேடணம் (பேஷணம்) - குழைத்தல்.
பேடி - அலி.
பேடியிலக்கணம் உ௫ - நச்சப்பேசல் நல்விசையோர்தல் ஆண் பெண்ணுமடையற்றல் உச்சியிற்கையைவைத்தல் ஒருகையைவீசிநடத்தல் விழிகளை வேறுகச் செய்தல் முலையை வருத்திநிற்றல் கண்சுழலநோக்குதல் நாணுதல் தொக்தோமென்று தானமிடல் நடித்தல் காரணமின்றிக்கோபித்தல் அழுதல் நடுங்கிப் பக்கம்பார்த்தல் இரங்குதல் வருந்தல் யாவருமிரங்கும்படிபேசுதல் வளைதல் கோதாடல் கூடல் கூவிளிகொள்ளல் மருங்கிற்கையைவைத்தல் அசனைபெடுத்தல் பாங்கியைநோக்கல் ஏலேலென்று பாடல் என்பன.
பேடு - அலி, பறவைப்பெண், ஊர், காமனுடல், (இதனைப்பேடியெனவும்வழங்குவர். காமன் அநிருத்தனைச்சிறைமீட்டற்காக வாணாசுரனுடையநகரத்துட்சென்று பேடியுருக்கொண்டாடினன்), பதினொருருத்திரராடலுளொன்று, சிறுமை.
பேடை - பறவைப்பெண்.
[பேட்டி - பெரியவரதுவரவைக்காத்திருந்துகொண்டாடுதல்].
பேட்டை- நகரத்தருகுள்ளசந்தைக்கூடலுமாகியவூர், (பேடு என தி க க ன ௩).
பேணல்- பாதுகாத்தல், கருதுதல், விரும்புதல், வழிபடல், ஆண்பெண்களுள்ஒருவரையொருவர் விரும்பல்.
[பேண் - தலாத்தாங்கி].
பேதம் - வேறுபாடு, சினேகிதரைப்பகைப்பித்தல் (இது நால்வகையுபாயங்களுளொன்று)
பேதனம்- வேறுபடுத்துதல்.
பேதி - கழிச்சல்.
பேது - மதிமயக்கம், வருத்தம்.
பேதை - அறிவிலான், தரித்திரன், ஐந்துமுதல் ஏழுக்குட்பட்டவயதுடைய பெண், பெண், அலி.
பேதைமை - அறிவீனம்.
பேதையர்- பாலகிலப்பெண்கள், பெண்கள்.
பேத்தை - ஓர்மீன்.
பேம் - அச்சம்.
பேயம் - கஞ்சிமுதலிய பருகும்பதார்த்தங்கள்.
பேயோடாடி - சிவன்.
பேய்- பிசாசம். (பேய்ப்புடோல் பேயத்திஎனச் சில மரப்பெயர்களுக்கடையாய்அவற்றின்விகற்பத்தையுமுணர்த்தும்).
பேய்த்தேர் - கானல்.
பேரம் - விக்கிரகம்.
பேரன் - மகனின்மகன்.
பேராண்மை-பகைவரிடத்து அருஞ்செயல்களைச்செய்தல்.
பேராந்தை - கிலாமுகி.
பேராளன் - மிருகசீரிடநட்சத்திரம், பெருமையுடையோன், பொது.
பேரிகை - பேரி, (தவில்), வாத்தியப் பொது.
பேரிளம்பெண் . முப்பத்தொன்றின்மேல்நாற்பதுக்குட்பட்ட வயதுள்ளபெண்.
பேரின்பம் - மோட்சம்.
பேர்ஞ்சு - ஓர் மரம்.
பேர் (பெயரென்பதன் மரூஉ) - பெயர், கீர்த்தி.
பேழை - பேடகம்.
பேழ் - பெருமை.
*பேஹிகை, உச்சிட்டம்.
பேறு - பெற்றபொருள், வரம்.
பேறு கசு- புகழ் கல்வி வலி வெற்றி நன்மக்கள் பொன் நெல் நல்லூழ் நுகர்ச்சி அறிவு அழகு பெருமை இளமை துணிவுநோயின்மை வாழ்நாள்என்பன. (பொன்னைநீக்கி மனையைச்சேர்த்துச் சொல்வார் சிலர்).
பேனம் - நுரை, பேன். (தலையிற்பற்றுஞ்சிறுபிராணி).
பேனா (பறங்கிச்சொல்) - எழுதுகோல்,

## பை

பை - பசுமை, அழகு, பச்சைநிறம், பாம்பின்படம், பொக்கணம்.
பைங்குழி - கருப்பம்பயிலிடம்.
பைங்கூழ் - பயிர்.
பைசந்தி - நால்வகை வாக்குகளுளொன்று, *கருப்பம்பயிலிடம்.
பைசாசம் - வில்வீரர்நிலைகளுளொன்று, எண்வகைமணங்களுளொன்று.(துயின்றாளையுங் கட்குடி முதலியவற்றால் மயங்கினாளையுங்கூடுதல்).
பைஞ்ஞீலி - ஓர்சிவதலம்.
பைஞ்ஞீல் - மக்கட்பரப்பு.
பைடீனசி - ஒருமுனிவர்.
பைதல் - துன்பம்.
பைத்திரம் - காடு.
பைத்தல் - பசுமையாதல், பாம்புபடம்விரித்தல், கோபித்தல்; ஈரமாதல். (பெரும்பா உளசு).
பைத்தியம் - பித்தமதிகரித்தல்.
பைந்திணை - ஓர்வகைத்தினை.
பைபீலவாதம் - எறும்புகளின்பேச்சையறிதல். (கசச கலைகளுளொன்று).
பைமை - பசுமை, ஈரம், தவப்பெண்.
பைய - மெல்லவாக. (அடுக்கில் பைப்பைய எனவும்).
பையல் - துன்பம்.
பையுள் - நோய், அற்பம், துன்பம்.
பையெனல் - மந்தக்குறிப்பு, ஒளிமழுங்குதல். [வயிரவமதம்.
பைரவம் - ஒருநதம், பயங்கரமானரூபம்
பைரவி - ஓரிராகம் காளி.

## பொ

பொகுட்டு - தாமரைக்கொட்டை, தாமரைக்காய், மலை, சேற்றிலெழுங்குமிழி.
பொக்கணம் - ஓர்வகைப்பை.
பொக்கணை - குழிந்தஉரல், மரப்பொந்து.
பொக்கம் - பொய், பொலிவு.
[பொக்கிஷம் - பண்டாரம், பலவகைத்திரவியங்கள்].
பொக்கு - பொள்ளல், மரப்பொந்து, குற்றம்.
பொக்கை - சிறுதுளை.
*பொங்கடி - யானை.
பொங்கர் - சோலை, மரக்கொம்பு, மலை, இலவமரம்.
பொங்கல் - கோபித்தல், மேற்கிளர்தல பொலிதல், உயர்தல், மிகுதல்.
பொங்கழி - தூற்றுதநெல்லின் பொலி.
பொசிதல் - நீர்முதலியன அருகிவெளிப்படுதல்.
பொச்சம் - குற்றம்.
பொச்சாப்பு - பொல்லாங்கு, மறதி, சோர்வு. (திருக் கள்ளாமை ௫).
பொச்சை - காடு, கரிந்தகாடு, மலை.
பொடி - சூரணம், திருநீறு, சாம்பர், பராகம், புழுதி,
பொடிதல் - துகளாதல், வெறுத்தல். (புற)
பொடித்தல் (பொடிதலின்பிறவினை) - துகளாக்கல், மயிர்சிலிர்த்தல், முளைத்தல். (கிக கூ சுஉ).
பொடிப்பு - புளகம்.
பொடிவெட்டி - பொன் வெள்ளி முதலியவற்றைச்சிறுதுண்டாகவெட்டும் ஆயுதம்.
பொட்டளம் - பொதி.
பொட்டு - நெற்றியிலணியுந்திலகம், திலகம்போலச்செய்த பொன்னுபரணம், புழு.
பொட்டுப்பூச்சி - சிலந்தி.
பொதி - முடிச்சு, கரிந்தகாடு, சபை, *தவிடு' மரப்பட்டை, மரங்களின்குலை, (மலைபடு கஉக).
பொதிதல் - பொதிந்துவைத்தல்.
பொதியமுனி - அகத்தியமுனிவர்.
பொதியம் - தென்மலை. (பாண்டியதேசத்திலுள்ளது).
பொதியவெற்பவன் - பாண்டியன்.
பொதியில் - அம்பலம்.
பொதியெருது - சுமக்குமெருது.
பொதிர்ப்பு - நடுக்கம்.
பொது - சாதாரணம், நடுநிலை, சபை.
பொதுக்குதல் - மறைத்தல்,
பொதுச்சொல் - திணைபால்முதலியவைகளுக்குப்பொதுவாயிருக்குஞ்சொல்,
பொதுத்தன்மை - உபமானஉபமேயங்களின் பொதுவியல்பு.
பொதுப்பெண் - வேசை.
பொதும்பர் - மரச்செறிவு, இளமரச்சோலை.
பொதும்பு - சோலை, மரப்பொந்து.
பொதுவர் - இடையர்
பொதுவிதி - பலவற்றிற்குப்பொதுவானவிதி.
பொதுவெழுத்து - ஆரியம் தமிழ்என்னுமிரண்டுபாஷைகளிலும் உச்சரிப்பால்ஒரேவிதமாய்வழங்குமெழுத்து.
பொதுளல் - நெருங்குதல், தழைத்தல்.

பொத்தல்-துவாரமிடுதல்-மூடுதல்.
பொத்தி- வாழைமுதலியவற்றின் பொத்
பொத்துதல்- புரைதல், மூடுதல்' (தி.
பொத்தை - பருத்தது.
பொந்து- மரப்பொந்து, பல்லி, துவாரம்
பொம்மல்- சோறு, பொருமல், பொலிவு.
பொம்மை- பிரதிமை.
பொய்- உண்மையல்லாதது, *மரமுதலியவற்றின் பொந்து.
பொய்கை- குளம். (மானிடராலாக்கப்படாத நீர்நிலையெனச் சிந்).
பொய்கையார்-களவழிநாற்பது என்னும் நூலைப் பாடியபுலவர்.
பொய்ச்சு-கொட்டை சுளை முதலியஇல்லாதது, பயனற்றது. [யாட்டு.
பொய்தல்- மகளிர்கூட்டம், மகளிர்விளை
பொய்யாமொழி-ஓர்புலவர் (தஞ்சைவாணன்கோவை பாடியவர்,) பொய்படாதவாக்கு.
பொரி - நெல்முதலியவற்றின் பொரி, மரங்களினடியிலுள்ள பொருக்கு.
பொரிகாரம்- வெண்காரம்
பொரிதல்- பொரியாதல், தீதல்.
பொரித்தல்- பறவைகள் முட்டையினின்று குஞ்சைவெளிப்படுத்துதல், வறுத்தல்.
பொரியல், நெய் முதலியவற்றிற்பொரிக்கப்பட்ட பொருள்.
பொரு- ஒப்பு.
பொருக்கு- உலர்ந்துவெடித்தசேறு, மரங்களின் பொருக்கு.
பொருக்கெனல்- விரைவுக்குறிப்பு.
பொருட்டு- காரணம்.
பொருட்படுதல்-பயன்படுதல்.
பொருட்படுத்தல்- பொருளாகமதித்தல்.
பொருட்பெண்டு- வேசி.
பொருதல்-போர்செய்தல், ஒத்தல், மாறுபடுதல், முட்டுதல்), விண்பொருபுகழ்;
பொருத்தம்- இணக்கம். [புற)
பொருத்தல்- பொருத்துதல்.
பொருத்து-இசைப்பு.
பொருநராற்றுப்படை- ஓர் நூல்.
பொருநர்- கூத்தர், படைத்தலைவர், அரசர், பாணர், வீரர், திண்ணியோர், குறிஞ்சிநிலத்தலைவர்.
பொருநை- (பொருத்தம்), தாமிரபர்ணியாறு, ஆன்பொருந்நதி (இது கருவூர்க்குச்சமீபத்தில் பாய்கிறது. (புற)
பொருநையாற்றேன் - சேரன்.
பொருந்தர்-கூடைமுதலியவற்றைப்பின்னுவோர். [
பொருந்தலர்-பகைவர்.
பொருந்தல்- இயைதல், அமைதல், அளவளாவல்.
பொருப்பன்- குறிஞ்சிநிலத்தலைவன்.
பொருப்பு- மலை.
பொருமுதல்-வீங்குதல், அழுதல்,
பொருவு- ஒப்பு.
பொருளணி - பொருணிலையாற் செய்யுளுண்டாக்கும் அணி.
பொருளின்செல்வி,-இலக்குமி.
பொருள்-சம்பத்து பலபண்டம், பொன், குணம், உண்மைசொல்லின்பொருள்.
பொருள் உ- கல்வி செல்வம் என்பன.
பொருள்கோள்-செய்யுளுக்குப்பொருள் கொள்ளும் முறை.
பொருள்கோள் அ- ஆற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண் தாப்பிசை அளைமறிபாப்பு கொண்டுகூட்டு அடிமறிமாற்று என்பன.
பொலம் (பொலன்)-பொன், பொலிவு.
பொலி- தூற்றுதநெல்.
[பொலிக்கொடி - வைக்கோல்].
பொலிசை - இலாபம் (சிந்தா).
பொலிதல்- மிகுதல்.
*பொல் - பதடி.
பொல்லம் - துண்டு, தையல்.
பொல்லர்- தையற்காரர், செம்மார்.
பொல்லாங்கு- தீங்கு.
பொல்லார்- தீயோர்.
பொல்லு- ஊன்றுகோல்.
பொழிதல்-மழைமுதலியன அதிகமாகப் பெய்தல், கொடுத்தல்.
பொழிப்பு- சருக்கம், யாப்பிலக்கணத்தில் இடையிட்டு மோனை முதலாயின வரத்தொடுப்பது.
பொழிப்புரை-செய்யுளின் கருத்தைமாத்திரம் தொடுத்தெழுதும் உரை.
பொழில்-சோலை, பூமி, பெருமை.
பொழிவு-பொழிதல்.
பொழுது- காலம், சூரியன்.
பொழுதுபோக்கல்- காலத்தைக் கழிக்கும்படி விளையாடுதல்.
பொள்ளல்-மரப்பொந்து, அப்பவர்க்கம்.
பொள்ளெனல் - விரைவுக்குறிப்பு.

பொருமை-அழுக்காறு.
பொறி - அடையாளம், பொலிவு, அறிவு, யந்திரம், இலக்குமி, மரக்கலம், செல்வம், எழுத்து, இரேகை, நெருப்புப்பொறி, மதிலுறுப்பு, , தேமல், வீரலிறை, ஒளி, விதி, (திருக் ஆள்வினையுடைமை அ). ஐம்பொறிகள், புள்ளி.
பொறி ௩- மனம் வாக்கு காயம்என்பன
பொறி ௫-மெய் வாய் கண்மூக்கு செவி
பொறிதல்- சாய்தல். [என்பன.
பொறித்தல், சித்திரமுதலியவற்றையெழுதல், அடையாளமிடுதல், சாய்த்தல்.
பொறியிலார்- கீழோர்.
பொறிவு- சாய்வு.
பொறுக்கல்- பொறுக்குதல்.
பொறுதி- பொறுமை.
பொறுத்தல்- சகித்தல், சுமத்தல்.
பொறை- சிறுமலை, மலை, சுமை, பூமி, பொறுமை, கர்ப்பம்.
பொறையன். தருமபுத்திரன், சேரன், பொறுமையுடையோன்.
பொறையுயிர்த்தல்-மகப்பெறுதல்.
பொற்கொல்லர்-தட்டார்.
பொற்பு- அழகு, பொலிவு, அலங்காரம்
பொற்றை-சிறுமலை.
பொன்- அழகு, இலக்குமி, பொன், பஞ்சலோகப்பொது. பொற்காசு, இரும்பு, பொலிவு, வியாழன்.
பொன்மலை-இமயமலை, மேருமலை.
பொன்மை-பென்னிறம்.
பொன்வகை ௪- சாதரூபம் கிளிச்சிறை ஆடகம் சாம்பூநதம் என்பன,
பொன்வாய்ப்புள்- சிச்சிலிப்பறவை.
பொன்வினைமாக்கள்- தட்டார்.
பொன்றல்- அழிதல், இறத்தல்.
பொன்னகர்- சுவர்க்கலோகம்.
பொன்னரிமாலை-ஓர்வகைமாலை.
பொன்னாங்காணி- ஓர்வகைக்கீரை.
பொன்னி-காவேரியாறு.
பொன்னித்துறைவன்-சோழன்.
பொன்னுலகு-சுவர்க்கலோகம்.
பொன்னெயிற்கோன்-அருகன்.

## போ

போ - போவாயென்னும் ஏவல்வினை, அசைச்சொல். (உ-ம்: பிரியின்வாழாதென்போ).
போகபூமி- நல்வினைப்பயனை யனுபவித்தற்குரிய இடம், (சம்புத்சிவின் கண்டங்களொன்பதிற் பாரதமொழிந்த எட்டுமாம்; ஆறெனவுஞ்சிலர்கூறுவர்).
போகபூமி ௬ - ஆதியரிவஞ்சம் நல்லரிவஞ்சம் ஏமதவஞ்சம் ஏமவஞ்சம் தேவகுருவம் உத்தாகுருவம் என்பன.
போகம் - சுகம், சுகமுந்துக்கமுமாகியஇவற்றின் அனுபவம், பெண்போகம், பாம்பினுடல், வியூகவகைகளுளொன்று.
போகர் - ஓர்சித்தர். (இவர் வைத்தியத்திலும் பௌதிகதத்துவ ஆராய்ச்சியிலுஞ்சிறந்தவர்).
போகல் - நீளுதல், நேராதல், நடத்தல்
போகி - இந்திரன், பாம்பு, இன்பத்தை விரும்புவோன். [கொப்பூழ்
போகில்- பறவைப்பொது, பூவரும்பு.
போக்கல் - போக்குதல்.
போக்கன் - வழிநடப்போன், துட்டன்.
போக்கியம்-அனுபவித்தற்குரிய பொருள்கள், செல்வம்.
போக்கியல்- சுரிதகம். [
போக்கு - வழி, சாட்டு, சாவு, நடை, குற்றம், *இளமரக்கன்று.
போசசம்பு-போசராசனால் வடமொழியிற்செய்யப்பட்ட சம்பு என்னும் நூல், (சம்புராமாயணமென்பதும்இதுவே).
போசம் - ஓர்தேசம்.
போசனம் - உணவு.
போசன் - தாராபுரத்தரசன்.
போச்சியம் - உண்ணுதற்குரியபொருள்.
போடல் - வழுவவிடல், இடுதல்.
போதகம் - யானை, யானைக்கன்று, புலி சிங்கம் இவற்றின்பிள்ளை, இளமை, மரக்கன்று, அப்பவர்க்கம்,
போதகன் - போதிப்பவன்.
போதப்பிரகாரம் ௩- உத்தேசம் லக்ஷணம் பரீக்ஷை என்பன. அவற்றுள் உத்தேசம்: தான்விபகரிக்கும்பொருளின் பெயரைக்கூறல். லட்சணம்: அப்பொருளின் சிறப்புத்தன்மைகளைக்கூறல். பரீக்ஷை: அப்பொருளில் அவ்விலக்கணங்களுண்டோ இன்றோ எனப் பார்த்தறிதல். [ழிப்பு.
போதம்- அறிவு, ஞானம், மரக்கலம், வி
போதரல் - எதிர்கொண்டுபோதல், பெறப்படுதல்.

போதல் - செல்லுதல், வருதல், நீளு தல், நேராதல்.
போதனம் - நற்புத்தியைப்போதித்தல், நித்திரையினின்று விழிப்பித்தல்.
போதன் - பிரமன், அருகன், அறிவுடையோன்.
போதா - பெருநாரை.
போதாமை - குறைவு.
போதாயனர் - ஓர் முனிவர்.
போதி - அரசமரம், மலை.
போதிகை - குறுந்தறி. (சுமையடைக்கட்டை).
போதித்தல் - புத்திசொல்லல்.
போதிவேந்தன் - புத்தன்.
போது - காலம், பூ.
போதுதல்- திருப்தியாதல், தகுதியாதல்.
போதை - மயக்கம்.
போத்திரம் - பன்றியின்முகத்துநுனி, கலப்பைக்கொழு நுனி.
போத்திரி - பன்றி.
போத்து - யானை குதிரை பசு புலி மரை புல்வாய் பூனை என்னும் விலங்குகளி னதும்நீர்வாழ்வனவற்றினதும் மயில் எழால் என்னும் பறவைகளினதும் ஆண், செம்போத்து, மரக்கன்று, விலங்கின்படுக்கை.
[போந்தி - பருமை, வீக்கம்].
போந்தின்றாரோன் - சேரன்.
போந்து - பனை, பல்லி.
போந்தை- இளம்பனை, அனுடநட்சத்திரம்.
போர்-யுத்தம்,நெற்போர்,சதயநட்சத்திரம், மரப்பொந்து).
போர்த்தல்-மூடுதல்.
போர்ப்பு - நெற்போர், மூடுகை.
போர்மடந்தை - துர்க்கை, வீரலக்குமி.
போர்வை - மேற்போர்வை, தோல், கவசம்.
போலி - கருதியபொருளோடு உருவமுதலியவற்றாலொப்புமையுடைய வேறொருபொருள். இலக்கணத்தில்சொற்களிலும் சிலஎழுத்துக்களிலும் வரும் போலி.
போலுதல் - ஒத்தல்.
போலும் - ஒக்குமென்னும் வினைமுற்று அல்லது பெயரெச்சம், அசைச்சொல்.
போல் - ஒப்பு.
போழ்தல் - பிளத்தல்.
போழ்து - காலம்.
போழ்முகம் - பன்றி.
போற்றல் - பாதுகாத்தல், வளர்த்தல், விரும்புதல், துதித்தல்.
போற்றி- துதி, வியங்கோளாய்த் துதிக்கப்படுக என்னும்பொருளையுமுணர்த்தும்.
போற்றிமார் - ஓர்வகைப்பிராமணர்.
போற்று - துதி.
போனகம் - சோறு, உணவு.
போஷணம் - அன்னவஸ்திராதிகளாற் சம்ரட்சணை செய்தல்.

## பௌ

*பௌடிகம் - முதலாம்வேதம்.
பௌதிகம் - பூதசம்பந்தமானது. (ஐம் பூதங்களாலாவது பிசாசுமுதலியவற்றாலாவது வருந்துன்பமுதலியன).
பௌத்தம் - புத்தமதம்.
பௌத்திரன் - மகனுடையமகன்.
பௌமன் - செவ்வாய்.
பௌரவர் - குருகுலவேந்தர்.
பௌராணிகம் - புராணமதம்.
பௌராணிகன்- புராணநூல்களைப்பாடுதல் பொருள்கூறுதல்முதலியவற்றால் அனுசரிப்போன்.
பௌருஷம் -ஆண்டன்மை, வீரம், முயற்சி, தலைமுறை.
பௌர்ணிமை - பூரணைத்திதி.
பௌலஸ்தியன் - இராவணன், குபேரன்.
பௌலோமி - இந்திராணி.
பௌவம் (பவ்வம்) - கடல், நீர்க்குமிழி.
பௌனர்ப்பவன் - இரண்டாவதாகஒருவனைவிவாகஞ்செய்தவள் பெற்றபிள்ளை.

## ம

மகதம் - ஐம்பத்தாறு தேசங்களுளொன்று, பதினெண்பாடைகளுளொன்று
மகதி - நாரதருடைய யாழ்.
மகத்து - மகத்தத்துவம். (புத்திதத்துவம்).
மகத்துவம் - மேன்மை.
மகபதி - இந்திரன்.
[மகமது - மகமதுமதத்தையுண்டாக்கியவர்.
மகம் - யாகம், ஓர் நட்சத்திரம்.
மகரகுண்டலம்- காதணிகளுளொன்று.
மகரகேதனன் - மன்மதன்.
மகரச்சா - புடகணனத்தில்மகரமுதலியஆறிராசிகள் வரும்போது கணிதஞ்செய்தற்குரிய சாவாக்கியம்.
மகரதோரணம் (மகரிகை) - மகரமீன் வடிவாகச் செய்யப்பட்ட தோரணம்.

மகரத்துவசன் - மன்மதன்.
மகரந்தம் - பூந்தாது, பூவிலிருக்குந்தே
மகரமாதம் - தைமாதம். [ன், கன்.
மகரம் - சுறுமீன், மகரராசி, பூந்தாது,
மகரப்பகுவாயென்னும் அணி.
மகரயாழ் - நால்வகையாழ்களிலொன்று.
(பதினேழு நரம்புடையதென மணி
மேகலை உரை).
மகரவாழை - ஓர் மரம்.
மகராலயம் - கடல்.
மகலோகம் - மேலேழுலகங்களிளொன்
மகவான் - இந்திரன். [று.
மகவு - பிள்ளை, கோட்டில்வாழ் விலங்
கின் பிள்ளை.
மகள் - புத்திரி, பெண், (பன்மையில்
மகளிர், மகளீர்).
மகன் - புதல்வன், சிறுவன், (பன்மை
யில் மகார், மக்கள்), சிறப்புற்றோன்,
மகா - பெரிய. [ஆடவன்.
மகாசேனன் - முருகக்கடவுள்.
மகாசைவன் - வைதிகப்பிராமணர்க
ளுட்சைவதீக்கைபெற்றோன்.
மகாதலம் - கீழேழுலகங்களுளொன்று.
மகாதேவன் (மாதேவன்) - சிவன்.
மகாத்துமா - பெருந்தன்மையுடையோ
ன். (பெருந்தன்மைகளெல்லாமமைத
லாற் காந்தியடிகள் மகாத்துமா என்
னும் பெயரைப்பெற்றார்).
மகாநிசி - அர்த்தராத்திரியின்மேல்வரும்
நான்கு நாழிகைகள்.
மகாபதுமம் - குபேரனுடைய நவநிதிக
ளுளொன்று. லட்சகோடி. [று.
மகாபதுமன் - அட்டநாகங்களுளொன்
மகாபாதகம் ரு - பிரமகத்தி கட்குடித்தல்
களவு குருவின்மனைவியைப் புணர்
தல் இந்நான்கையுஞ் செய்வோரு
டன் கூடுதல் என்பன.
மகாபிலம் - ஆகாயம்.
மகாப்பிரளயம் - பிரமகற்பம்.
மகாமகம் - வியாழன் சிங்கராசியினிற்
கும்போது மாசிமாதத்தில் மகநட்சத்
திரம்வருந்தினம். (இது கும்பகோ
ணத்திற் கொண்டாடப்படுகின்றசிறந்
தபுண்ணியகாலம்).
மகாயுகம் - கிருதமுதலிய நான்குயுகங்
கள். (சஙஉ0000 வருடம்).
மகாரதன் - பதினாயிரம் வில்வீரரு
டன்தனித்து நின்றுபோர்செய்யவல்
லோன்.
மகாராஷ்டிரம் - ஓர்பதசம், ஓர்மாவை.
மகாரௌரவம் - ஓர்நரகம்.
மகாவாக்கியம் - தத்துவமசிமுதலியஉபநி
டதவாக்கியங்கள், பலசொற்றொடர்
களை ஒருதொடர்ப்படுத்தியவசனம்.
மகாவிந்தம் - நளராசனுடையநகரம்
வைகுண்டம்.
மகாளயம் (மாளயம்) - பாத்திரபதமாதத்
து அபரபக்கத்தில்வரும் பிதிர்திதிக
ளிற்செய்யப்படுஞ்சிராத்தம்.
மகி - பூமி.
மகிடம் - எருமை.
மகிடற்செற்றாள் - துர்க்கை.
மகிடன் - மகிடாசுரன்.
மகிடி (மகிஷி) - இராணி.
மகிதலம் - பூமி.
மகிபதி - அரசன். [களுளொன்று.
மகிமை - மகத்துவம், எண்வகைச்சித்தி
மகிழித்தல் - கைகால் முதலியவற்றின்
பூட்டுகளில் நரம்புசுருங்குதல்.
மகிழ் - ஓர்மரம், மகிழ்ச்சி.
மகிழ்ச்சி - மனச்சந்தோஷம்.
மகிழ்தல் - சந்தோஷித்தல். [வன்.
மகிழ்நன் - கணவன், மருதநிலத்தலை
மகுடம் - தலை, தலையிலணியும் முடி,
உஅ ஆகமங்களுளொன்று.
மகேசுரன் - சிவன்.
மகேசுவரி - பார்வதி.
மகேந்திரசாலம் - ஓர் வித்தை.
மகேந்திரம் - ஓர்மலை. (இது எழுகுலம
லைகளுளொன்று), ஓர்நகரம்.
மகோதயம் - ஓர் புண்ணியகாலம். (தை
மாசிமாதங்களில் திங்கட்கிழமைஉத
யத்தில் அமாவாசைத்திதியும் திரு
வோணநட்சத்திரமும் வியதீபாத
யோகமுங் கூடிவருந்தினம்).
மகோதரம் - ஓர்நோய். (பெருவயிறு).
மகோதரன் - இராவணனுடையமந்திரி
களிலொருவன். [ம்.
மக்கம் - மகமதியருடைய பிரதானஸ்தல
மக்களின்வடிவு ௩ - ஆண் பெண் அலி எ
மக்கள் - மனிதர், பிள்ளைகள். [ன்பன.
மக்கினம் - அமிழ்ந்துகை.
மங்கலச்சொல் - நூல்செய்யும்போது மு
தற்செய்யுளின்முதலில்வருதற்கேற்ற

சொல், (சீர் மணி பரிதி யானை திருவிலம் உலகு திங்கள் கார் மலை சொல் எழுத்து கங்கை நீர் கடல் பூ தேர் பொன் மா முதலியனவும் அவற்றின் பரியாயச் சொற்களுள் இயைந்தனவுமாம்), மங்கலகரமானவசனம்.
மங்கலபாடகர்-சோபனம்பாடுவோர்.
மங்கலம் - சுபம், சுபகருமம், வாழ்த்து, அட்டமங்கலம், பொலிவு.
மங்கலவள்ளை - உயர்குலத்துதித்தமடவரலை ஒன்பது வெண்பாக்களால் அல்லது வகுப்புக்களாற்பாடும்பாடல்.
மங்கலன் - செவ்வாய், மங்கலமுடையோன்.
மங்கலியம் - மணஞ்செய்யும் போது பெண்களுக்குத்தரிக்கும் அணி, மங்கலகரமான பொருள்.
மங்கல் - ஒளிகெடுதல்.
மங்குல் - ஆகாயம், மேகம், இருள்.
மங்கை-பதினொருவயதின்மேற் பதின்மூன்றுவயதுக்குட்பட்ட பெண், பெண்.
மங்கைபாகன் - சிவன்.
மங்கையர்க்கரசி - கூன்பாண்டியனுடையமனைவி.
மசகம் - கொசுகு, மயக்கம்.
மசகரி - ஓவியவெழினி. (சிலப்).
மசரதம் - பேய்த்தேர்.
மசி - மை.
மசிதல் - குழைதல்.
மசூரம் (மஞ்சூரம்) - கடலை.
மசூரிகை - அம்மைநோய். (வசூரி என வழங்குவர்).
மச்சிகை - மோர்.
மச்சு - கற்பாவினால்மூடப்பட்ட வீடு.
மச்சை - எலும்பினுள்ளிருக்கும் ஒருவகைத்தாது. (தைலம் போன்றது).
மஞ்சம் - கட்டில், மேல்வீடு.
மஞ்சரி - இளந்தளிர், பூங்கொத்து, மாலை, ஒழுங்கு.
மஞ்சள் - ஓர்சரக்கு.
மஞ்சனம் - அபிடேகத்துக்கு வைக்கப்படுந்தீர்த்தம், ஸ்நாநம்.
மஞ்சாடி - மஞ்சாடிமரம், மஞ்சாடிவித்து, இரண்டுகுன்றுமணிநிறை.
மஞ்சிகம் - தாளிக்கொடி, மரமுதலியவற்றாற்செய்தபெட்டி.
மஞ்சிகன் - நாவிதன்.
மஞ்சிகை - பேழை. (பெட்டகம்).
மஞ்சில் - முதுவரம்புவழி.
மஞ்சு-மேகம், குண்டலம், ஆபரணம், யானைமுதுகு, முகடு, பனி. மஞ்சம், வலிமை, அழகு, இளமை. (பின் மூன்றுபொருள்களில்மைந்து எனவும்).
மஞ்சுளம் - அழகு.
மஞ்ஞை - மயில்.
மஞ்ஞையூர்தி - முருகக்கடவுள்.
மடக்கியல் - சுரிதகம்.
மடக்கு-ஓர்வகைப்பாத்திரம், முடக்கு, செய்யுளில் ஓரடிமுழுவதும் அல்லது அடியினோர்பகுதி வேறுபொருளுடையதாகப் பின்னும் வைக்கப்படுதல்.
மடங்கல்-இடி, சிங்கம், யாளி, யுகமுடிவு, ஊழித்தீ, யமன், நோய், மீளுதல், முடங்குதல், கீழ்ப்படுதல்.
மடங்கற்கொடியோன் - வீமன்.
மடங்கு - பங்கு.
மடந்தை-௧௩வயதின்மேற் ௧௯ வயதுக்குட்பட்ட பெண், பெண்.
மடப்பம் - ௫௦௦ கிராமத்துக்குத்தலைமைபெற்றகிராமம், மடமை.
மடமை - கல்வியறிவும்விவேகபுத்தியுமின்மை.
மடம் - கடவுளுடையஅடியவர்களிருக்குமிடம், சத்திரம், மடமை, அழகு.
மடலூர்தல்-தன்னுடன்கூடிய தலைமகளை மணஞ்செய்துகொடுக்க மறுத்துழித் தலைமகன் பனைமடலாற்செய்யப்பட்ட குதிரையிலேறிச்செல்லுதல்.
மடல் - வாழைமடல், பனைமட்டை, பூவிதழ், ஓர்பிரபந்தம்.
மடவரல் - பெண், மடமை.
*மடவை - கடவை.
மடன் - அறிவிலான்.
மடி - சோம்பல், பொய், வறுமை, பசுவின்மடி, வயிறு, நோய், தாழை, *பகை. கேடு, மடித்தபுடவை, சுகாசனமாயிருக்கும்போது குழந்தைகளையிருத்துதற்கேற்றஇருதொடைகளின் மேலிடம்.
மடிதல் - கெடுதல், சாதல், நித்திரைகொள்ளல், (மதுரைக் ௬௨௮),அடங்குதல், தொழிலொழிந்திருத்தல்.(பெரும்பா ௨௫௪).
மடித்தல்-உழக்குதல், புடவைமுதலியவற்றைமடித்தல்.
மடிப்பு-வஸ்திரமுதலியவற்றின் மடிப்பு, வஞ்சகம்.
மடிவு - சாவு.
மடு - ஆற்றினுட்பள்ளம், கரைகட்டி-

மழைநீர்முதலியவைகளைநிறுத்திவை
மடுத்தல்-நிறைத்தல். [க்குமிடம்.
மடை-நீர்பாயுமதகு, சோறு, தேவதை களுக்குப்படைக்கும் நிவேதனம், அணிகளின் கடைப்பூட்டு.
மடைத்தொழில் - சமையல்வேலை.
மடைப்பள்ளி - அடுக்களை.
மடையன்-சமையற்காரன், அறிவீனன்.
மட்கல் - அழுக்கேறல். (ஒளிமழுங்கல்).
மட்சிகை (மக்ஷிகை) - ஈ.
மட்டத்துருத்தி - பனிநீர்த்துருத்தி.
மட்டப்பலகை - சமனறிகருவி.
மட்டம் - ஒப்பம், நெல் மூங்கில் வாழை இவைகளின்கன்று.
மட்டாயுதம் - வாள்.
[மட்டி - மதியிலான்].
மட்டித்தல் - பூசுதல்.
மட்டு - கள், அளவு, எல்லை, தேன்.
மட்டை - தெங்கு பனை முதலியவற்றின் மட்டை, தலையற்றவுடல்.
மட்பகைவன் - குயவன். [சேர்தல்.
மணத்தல்-கமழுதல், விவாகஞ்செய்தல்,
மணமகள் - விவாகஞ்செய்யும்பெண்.
மணமகன் - விவாகஞ்செய்வோன், நாயகன்.
மணம் - வாசனை, விவாகம், கூட்டம்.
மணம் அ - பிரமம் பிராசாபத்தியம் ஆரிடம் தெய்வம் காந்தருவம் ஆசுரம் இராக்கதம் பைசாசம் என்பன. [மண்.
மணல்- அழுக்கற்றதாயுதிர்ந்துகிடக்கும்
மணவாளமாமுனிவர்-தென்கலைவைணவருடைய ஆசாரியரான ஒருவிஷ்ணு
மணற்குன்று-மணற்றிடர். [பத்தர்.
மணி - இரத்தினம், நீலரத்தினம், முத்து, பெருமணி, அழகு, கறுப்பு, நன்மை, இரண்டரைநாளிகைகொண்ட காலம், கண்விழி, பொன் முதலியவற்றாற்செய்தமணி, நெல்முதலியதானியம், விஷந்தீர்க்குங்கல், அடிக்கும் மணி. [ம்.
மணிகர்ணிகை-காசியிலுள்ள ஓர் தீர்த்த
மணிகுயிற்றுநர்-முத்தங்கோப்பார், இரத்தினம்பதிப்போர்.
மணிகூடம்-மணிபர்வதமென்னும் மலை.
மணிக்கட்டு - முழங்கைக்குக்கீழுள்ளபாகம்.
மணிக்காற்பள்ளி-அரசரேறுஞ்சிவிகை.
மணிக்கிரீவன் - குபேரனது புத்திருளொருவன்.
மணிக்குடர் - சிறுகுடர்.
மணிக்கூடு - மணியறியுமியந்திரம்.
மணிபந்தம் - மணிக்கட்டு.
மணிபூரகம் - ஆறாதாரங்களுளொன்று. (நாபித்தானத்திலுள்ள பதுமவடிவான ஒருசக்கரம்).
மணிப்புறா - ஓர்வகைப்புறா.
மணிமாலை - வெண்பாவிருபதும் கலித்துறை நாற்பதும் விரவியபாடல்.
மணிமேகலை - ஒருபெண்தெய்வம், கோவலனுக்கு மாதவிவயிற்றிற்பிறந்த புத்திரி, அவளுடையசரித்திரத்தைத்தெரிவிக்குங்காப்பியம். (கடைச்சங்கப்புலவருளொருவராகிய சாத்தனாராற் செய்யப்பட்டது.
மணியாசம் - சுவர்முதலியவற்றையழுத்தும் பலகை.
மணை - குருவலகுமுதலியன, யானைமேற்றவிசு, வதுவைத்திண்ணை, பலகை.
மண் - பூமி, நிலப்புழுதி, முழவின்மார்ச்சனைமண், அணு, சிப்பிமுதலியவற்றைச்சுட்ட சாந்து.
*மண்கணை - குடமுழா.
மண்டபம்-பலர்வந்துதங்குதற்குரிய கட்டிடம்.
மண்டலபுருடன்-சூடாமணிநிகண்டுசெய்த ஆசிரியன்.
மண்டலம் (மண்டிலம்) - வீரர்நிலைகளுளொன்று, (இருகாலுமண்டலித்து நிற்றல்), பூமி, நாடு, வட்டம், குதிரை, வியூகவகையில் ஒன்று.
மண்டலி - ஓர்வகைப்பாம்பு, பூமி, பூனை, நாய், காட்டுப்பூனை.
மண்டலித்தல் - வட்டமிடுதல்.
மண்டல் - நெருங்குதல்.
மண்டனம் - அலங்காரம்.
மண்டி - காலைமடக்கிநிற்கும்ஓர்விதநிலை,
மண்டூகம் - தவளை. [கலங்கனீர்.
மண்டூரம் - இரும்பின் கிட்டம்.
மண்டை - தலையோடு.
மண்ணல்-கழுவுதல், முழுகுதல், அலங்கரித்தல், ஒப்பமிடுதல்.
மண்ணவர் - மனிதர்.
மண்ணாங்கட்டி - மண்கட்டி.
மண்ணீடு - வேயாமாடம், திண்ணை.

சுதையாற்செய்யப்பட்டஉருவம்.
மண்ணீட்டாளர் - குயவர்,சிற்பாசாரியர்
மண்ணுணி - ஓர்பாம்பு.
மண்ணை - அறிவிலான், பேய், இளமை,
மண்பொதுத்தந்தை - பிரமா.
மண்மகள்புதல்வர் - வேளாளர்,
மண்வெட்டி - நிலத்தைக்கொத்தும் ஆயு [தம்.
மதகு - நீரோடி.
மதங்கம் - மிருதங்கம்.
மதங்கர் - ஓர்முனிவர்.
மதங்கி - பாடுவிச்சி, காளி.
மதத்தல் - கொழுத்தல்.
மதமத்தம் - பொன்னூமத்தை.
மதமா - யானை.
மதம் - கொழுப்பு,செருக்குமிகுதி,சமயம், யானைமதம், வலி, அபிப்பிராயம், சந்தோஷம், சுக்கிலம், மிருகமதம்.
மதம்எ-உடன்படல் மறுத்தல் பிறர்மத மேற்கொண்டுகளைதல் தானாட்டித் தனாதுநிறுத்தல் இருவர்மாறுகோ ளொருதலைதுணிதல் பிறர்நூற் குற் றங்காட்டல் பிறிதொடுபடான்றன்ம தங்கொளல் என்பன.
மதர்த்தல் - களித்தல்.
மதர்ப்பு - உள்ளக்களிப்பு, அழகு, வலி மை, இடம், மிகுதி.
மதர்வு - இடம்.
மதலிகை - ஆபரணத்தொங்கல்,
மதலை - கொன்றைமரம், மரக்கலம், தா ண், கொடுங்கை, மகன், பற்றுக் கோடு.
மதவு - மதகு, மடமை, (தொல் உரி கஅ).வலி, உள்ளக்களிப்பு, வனப்பு. (தொல் உரி அஉ).
மதனம் - காமநோய், கடைதல்.
மதனலீலை - காமவிளையாட்டு,
மதனன் - மன்மதன்.
மதனைவென்றோன் - அருகன், யோகி.
மதன் - மன்மதன், வலிமை, அழகு, மா ட்சிமை, அறியாமை, செருக்கு.
மதாணி - பெரும்பதக்கம்.
மதாவளம் - யானை.
மதி - புத்தி, சந்திரன், மாதம், முன்னி லையசை,(உ-ம்: கேண்மதி), மிருக சிரிடநட்சத்திரம்.
மதிதம் - மோர்.
மதித்தல் - வரையறுத்தல், கடைதல்.
மதிப்பகை - இராகு.
மதிப்பு - அளவிடுகை.
மதிமகன் - புதன்.
மதியம் - சந்திரன், மாதம், மத்தியம்.
மதிரை - கள்.
மதிலுறுப்பு - மதிலின்சித்திரம்.
மதில் - கோயில்முதலியவற்றிற்குக் காவ லாகப் புறத்தேசூழ்ந்திருக்குஞ் சுவர்.
மது - ஓரரக்கன், கள், தேன், இளவே னில், இனிமை. நீர், மதுவெனனும் அசுரன்; சித்திரைமாதம்,
மதுகம் - இலுப்பைமரம், எட்டிமரம், அ திமதுரம், தரா, இனிமை, வண்டு, அ ழகு, [ன்.
மதுகரம் - தேன்வண்டு, ஆண்வண்டு,*க
மதுகை - வலிமை, அறிவு,(சிந்தா).
மதுசூதனன் - திருமால்.
மதுபதி - காளி.
மதுதம் - வண்டு.
மதுபர்க்கம் - மணமகன்முதலாயினோர் க்குகொடுக்கும் பால் பழம் தேன் மு தலிய சேர்ந்ததொகுதி,
மதுபர்ணிகை - சீந்தில். [தை.
மதுமத்தை -(மதமத்தை)- பொன்னூமத்
மதுரகவி -நால்வகைக்கவிகளிலொன்று சொல் பொருள் தொடை அலங்கார ம் ஓசைமுதலியவைகளாலினிமையு றப்பாடுங்கவி, மதுரகவிபாடும் புலவ [ன்,
மதுரசம் - முந்திரிகை
மதுரம் - தித்திப்பு,தித்திப்புள்ளபொரு ள், சமனிசை, அதிமதுரம்.
மதுரை - மதுராபுரி.(யமுனைகதிக்கரை யில் கிருஷ்ணமூர்த்திக்குரியதாயிருந் தநகரமும் பாண்டியனுடைய ராசதா னியும்இப்பெயருள்ளன).
மதுரைக்காஞ்சி - மாங்குடிமருதனாரா ற் பாடப்பட்டஒருநூல். (பத்துப்பாட் டிலடங்கியது)
மதுரைவீரன் - மதுரைக்குப்படையெடு த்துவந்த சோழனுக்குப் படைத்தலை வனாயிருந்த ஒருவீரன். (இவனை சில சாதியார்தெய்வமாகவணங்குவர்.
மதூகம் - இலுப்பை, வண்டு.
மதோற்கடம் - மதயானை,யானைமத்தகம்.
மத்தகம் - நெற்றி, தலை, யானைநுதல்.
மத்தங்காய்ப்புல் - ஓர்புல்.
மத்தம் - உள்ளக்களிப்பு, மதயானை,மய

க்கம், பூமத்தை, வெறி, நெற்றி, தலை, மத்து.
மத்தளம் - ஓர்வாத்தியம்.
[மத்தாப்பு] - ஓர்வாணம்.
மத்திகை-குதிரைச்சம்மட்டி, விளக்குத் தண்டு, பூமாலை.
மத்திமகதி-சோதிடகணிதத்திற் கிரகங் களுக்குச் சொல்லப்படுங் கதிகளு ளொன்று.
மத்திமம் - நடு, சமனிசை, ஏழிசைக ளுள் ஐந்தாமிசை.
மத்திமை-நடுவிரல், வைகரிமுதலியநால் வகைவாக்குக்களுளொன்று.
மத்தியதேசம்-பிரயாகை விந்தம் வினச ணம் இமயம் என்பவற்றை முறையே நான்குதிக்குகளுக்கும் எல்லையாகவு டையதேசம்,
மத்தியத்தன் - வாதி பிரதிவாதிகளுக்கி டையிலிருந்துதீர்ப்புச்சொல்வோன்.
மத்தியமாவதி - ஓரிராகம்.
மத்தியம் - நடு, நடுநிலை, கள், அந்தியம் பத்துக்கொண்டஎண், சமனிசை.
மத்தியானம் - உச்சிப்பொழுது.
மத்திரம்-விராடதேசத்துக்கும் பாண்டி யதேசத்துக்குமிடையே (முறையேகி ழக்குந்தெற்குமாக) உள்ளதேசம்.
மத்திரன் - மத்திரதேசத்தரசன்.
மத்து - தயிர்கடையுமத்து, ஊமத்தை, வெறி.
மத்துவாசாரியர் - மாத்துவமதஆசாரியர்.
மத்தை - ஊமத்தை.
மந்தகாசம் - புன்னகை.
மந்தணம் - இரகசியஆலோசனை.
மந்தமா-யானை.
மந்தம் - அசீரணம், கூர்ந்தபுத்தியின்மை, மெல்லெனவு, சோம்பல், சோதிடக ணிதத்தில் மந்தச்சாவாற்கணிக்கப் பட்ட பலம்முதலியன.
மந்தரம் - ஓர்மலை, மந்தவோசை.
மந்தரை - கைகேசியின்தோழி.
மந்தனம்-யானைமுகப்படாம், கடைதல்.
மந்தன் - கூர்மையில்லோன், சனி.
மந்தாகினி - கங்காநதி, ஆகாயகங்கை.
மந்தாரகாசம் - ஓர்நோய்.
மந்தாரம்-ஐந்தருக்களுளொன்று, வெய் யிலின்மை, செவ்வரத்தம்.
மந்தாரை- ஓர் பூச்செடி.
மந்தார்த்தம்-சோதிடகணிதத்தில்மந்தச் சாபலத்தின் பாதி.
மந்தி-குரங்கு முசு இவற்றின்பெண் வ ண்டு.
மந்திரம்-இரகசியம், ஆலோசனை, கோ யில், வீடு, வேதமுதலியவற்றின் மந் திரம், அரசரின்மாளிகை.
மந்திரி - அரசனதுதேர்ச்சித்துணைவன், குபேரன், சுக்கிரன், வியாழன்.
மந்திரை (மந்துரை) - குதிரைப்பந்தி.
மந்தினி - தயிர்கடைதாழி.
மந்தேகர் - சூரியனுடன் பொருகின்ற அசுரர்கள். (இவர்கள் சந்தியாகாலத் தில் வேதியர்களாற்கொடுக்கப்படுகிற அர்க்கியமாகிய அஸ்திரத்தாலழிந்து வரபலத்தாற்பின்னுந்தோன்றிப்பொ ருவார்கள்.
மந்தை - ஆடுமுதலியவற்றின்கூட்டம்.
மந்தோச்சம்- கிரகங்கள்சுற்றும் வட்டத் திற்பூமிக்கதிகதூரமானமூலை. (இத ற்கெதிரிலுள்ளதுநீசக்கிரோச்சமாம்).
மந்தோதரி(மண்டோதரி)-இராவணனு டைய மனைவி.
மப்பு - மந்தாரம், மயக்கம்.
மமகாரம் - தனதல்லாதனவற்றைத் தன் னுடையனவென்றுநினைத்தல்.
மமதை - அகங்காரம்.
மம்மர் - துன்பம், மயக்கம்.
மயக்கம் - அறிவுதெளியாமை, ஒன்றை மற்றொன்றாய்விளங்குதல்.
மயக்குதல் - அறிவைக்கெடுத்தல், ஒரு பொருளை மற்றொருபொருளாய்க் காட்டல்.
மயங்கல் - மயக்கங்கொள்ளல், கலத்தல்.
மயம் - அழகு, வடிவம்.
மயர்வு - மயக்கம்.
மயல்-உன்மத்தம், மயக்கம், பேய், செத் தை, ஆசை.
மயனூல் - சிற்பசாத்திரம்.
மயன் -ஒருசிற்பபண்டிதன், தச்சன், ஒரு அசுரன், (இவன் சூரியனுடைய அம் சமான ஒருதெய்வபுருஷனாற் சோதி டசித்தாந்தமுழுவதையும் உணர்ந்த வன்).
மயானம் - சுடுகாடு.
மயிரகம் - மயிர்ப்படாம்.
மயிரெறிகருவி - கத்தரிக்கை.
மயிர் - உரோமம்.
மயிர்க்கால் - உரோமத்துவாரம்.
மயிர்க்குட்டி - கம்பளிப்பூச்சி.

மயிர்க்கூச்சு-உரோமப்புளகம்.
மயிர்மாட்டி-ஓராபரணம்.
மயிர்முடி. குடுமி- கூந்தல்,
மயிர்வாரி- சீப்பு.
மயிர்வினை-மயிர்கழித்தல்,
மயிலாப்பூர் - ஒருசிவதலம்.
மயிலை - மீன். மீனராசி, இருவாட்சி, [கருமைகொண்டவெள்ளை].
மயில் - ஓர்பட்சி.
மயிற்பகை - பச்சோந்தி.
மயூகம் - சூரியகிரணம். ஒளி.
மயூரம் - மயில், ஆசனவகை ஒன்ப தில்ஒன்று. (முழங்கையிரண்டு மூந் திப்புறத்திலழுந்தப்பூமியிற்கையூன் றிக்கால்களைநீட்டித் தலைநிமிர்ந்தி ருத்தல்).
மரகதம் - பச்சைமணி.
மரகதவல்லி - உமை, தருமதேவதை.
மரகதன் - குபேரன்.
மரக்கலம் - தோணி.
மரக்கால் - ஓர்அளவுகருவி. (கலத்தின் பன்னிரண்டிலொருபங்கு), ஆயிலி யநட்சத்திரம், சோதிநட்சத்திரம், திருமால்கூத்து, துர்க்கையாடல், உப்பளம்.
மரங்கொத்தி - ஓர்பறவை.
மரச்செறிவு - சோலை.
மரணகண்டி - ஓர்சோதிடநூல்.
மரணசாதனம்-மரணமானால்தனதுநில முதலியவைகள் இன்னாருக்கென்றெ ழுதுஞ் சாதனம்.
மரணம் - இறப்பு, ஐங்கணையவத்தை களுள் நீலமலரினவத்தை.
மரணயோகம் - நாசயோகம்.
மரநாய் - மரத்தில்வாழும் ஓர்மிருகம்.
மரபு - முறை, மேம்பாடு, பழமை, தன் மை, வம்சம்.
மரபுஉ-தந்தைமரபுதாய்மரபுஎன்பன.
மரம் - விருட்சம்.
மரல் - கழலைச்செடி.
மரவம் - குங்குமமரம். கடப்பமரம்.
மரவள்ளி - கிழங்குவகையுளொன்று.
மரவினையாளர் - தச்சர்.
மரவுரி - மரத்தோல்.
மரவை - மரப்பாத்திரம்.
மரா - கடப்பமரம். (வெண்கடம்பு).
மராடம் (மராட்டியம்)-ஒருதேசம், பதி னெண்பாஷைகளுளொன்று.
மராட்டம் -பெண்களின்கூந்தல், மிருக முதலியவற்றின் மயிர், *இடம்.
மாராமரம் - ஆச்சாமரம்.

மராளம் - அன்னம்.
மரிசி (மரிசு) - புதுவரம்புவழி, வரம்பு, வரம்பருகு.
மரித்தல் - சாதல்.
மரியாதை - நீதி ஒழுக்கம்முதலியவற் றையுடைமை.
மரீசம் - மிளகு.
மரீசி - ஒருமுனிவர், சூரியகிரணம், மிளகு.
மரு - வாசனை, நீர்வளமில்லாததேசம், பாரதயுத்தத்திற் குருகுலத்தாருடை ய சேனைதங்கியிருந்த இடம்.
மருகன் - மருமகன், மரபிலுள்ளோன். (பெரும் சடுச; பெண்பாலில் மருகி)
மருகு - மகரவாழை.
மருக்கொழுந்து - ஓர்வாசனைப்பூடு.
மருங்கு - பக்கம், இடை, *இடம், கு லம், (திருமுரு உஎ௫), கூறு. (தி ருமுரு கஎக).
மருங்குல் - உடம்பு, (பெரும் கடுஉ), வயிறு, (புற உகூ0), இடை.
மருட்சி - மயக்கம், வெருட்சி, மடமை.
மருட்டல்(மருளலின்பிறவினை)-மயக்கு தல், ஏமாற்றுதல்.
மருட்பா-புறநிலைவாழ்த்துமுதலியபொ ருள்களில் முதலில் வெண்பாவும் இ றுதியில் அகவலுமமையப்பாடும்பா டல்.

இது: புறநிலைவாழ்த்து கைக் கிளைவாயுறைவாழ்த்து செவியறிவு றூஉ எனநான்குவகைப்படும். புற நிலைவாழ்த்தாவது: வழிபடுதெய்வ நிற்புறங்காப்பப் பழிதீர்செல்வமொ டு காலந்தோறுஞ்சிறந்து பொலிக வென்னுங்கருத்தமையப் பாடுவது. கைக்கிளையாவது: ஒருதலைக்காமமா க, ஈற்றில்வருமாசிரியம்இரண்டடி யினதாய் அவ்விரண்டடியுள்ளும் ஈற்றயலடிமுச்சீர்த்தாய்ப் பாடுவது. வாயுறைவாழ்த்தாவது: மெய்ப்பொ ருளுணர்த்துவது, அல்லது உறுதி கூறுவது. செவியறிவுறூஉவாவது: உயர்ந்தோர் கண்வியந்தொழுகுதல் கடனெனக்கூறுவது.

மருண்மா - யானை.
மருதநிலவேந்தன் - இந்திரன்.
மருதம் - வயல், வயல்சார்ந்தநிலம்,மரு தமரம், மருதப்பண்.
மருதயாழ் - மருதப்பண்ணைவாசித்தற் குரியயாழ்.
மருது - மருதமரம்.

மருதோன்றி- ஓர் மரம்.
மருத்தீடு- மருந்திடுதலால்வரும்நோய்.
மருத்து - காற்று.
மருத்துநீர்- பலவகைமருந்துகள் சேர்த்துக்காய்ச்சிய நீர். (வருடப்பிறப்பில் ஸ்நானஞ்செய்தற்குரியது).
மருத்துவம்-வைத்தியம்.
மருத்துவளள்- அச்சுவினிநட்சத்திரம்.
மருத்துவன்- இந்திரன், வைத்தியன்.
மருத்துவிச்சி-பிரசவவைத்தியஞ்செய்பவள்.
மருந்து - பலவகையான மூலிகைகள். (உ-ம்:மாமலையிலுள்ள மருந்தே பிணி தீர்க்கும்; வாக் உ0). மூலிகைகளையும் பிறவற்றையுஞ் சேர்த்துச்செய்த ஔடதம், அமிர்தம்.
மருந்துவகை ச- சல்லியகரணி சந்தானகரணி, சமனியகரணி, மிருதசஞ்சீவினி என்பன.
மருப்பு- யானைமுதலிய விலங்குகளின் கொம்பு, மரக்கொம்பு, யாழின்தண்டு (பொருந கரு).
மருமகள்- சகோதரியின் மகள், மகனுடைய மனைவி. [புருஷன்.
மருமகன்-சகோதரியின் மகன், மகளின்
மருமம்- மார்பு, இரகசியம்.
மருமாஞ்சம்-வஸ்திரம் அல்லது இலைகள்அசைதலாலெழுமொலி,நாணொலி.
மருமான்-மகன், மருமகன், வழித்தோ
மருவகம்-மருக்கொழுந்து. [ன்றல்.
மருவலர் (மருவார்)-பகைவர்.
மருவல்- கிட்டுதல், அடிப்பட்டுப் பதங்கள் சுருங்கிவழங்குதல்.
மருளல்- மயங்குதல், வெருளுதல்.
மருள்- மயக்கம், குறிஞ்சியாழ்த் திறம், பிசாசம், ஓர் கிழங்குச்செடி, வியப்பு, எண்வகையுடற்குறைகளுளொன்று.
மரூஉ- மருவிவழங்குஞ்சொல்.
மரை- ஓர்மிருகம், தாமரை.
மர்க்கடம்- குரங்கு.
மர்த்தனம்- அடித்தல், தாளாக்கல்.
மர்த்தித்தல்(மத்தித்தல்)-கலந்துகுழைத்
மர்த்தியன்-மனிதன். [தல்.
மர்மம்-இரகசியம், உயிர்நிலையானஇடம்
மலங்கல்- கலங்குதல், கெடுதல், சுழலுதல், பிறழ்தல். (பின்மூன்றுபொருள்களுஞ் சிந்தாமணியில்.)

மலங்கு- ஓர் மீன்.
மலடு - சந்ததியில்லாமை.
மலமாசம்-இரண்டமாவாசைகள் சங்கிராந்தியாலிடையிடப்படாது முடிந்த மாதம்.
மலம்- அழுக்கு, பவ்வீ, வேர்வை, சளி முதலியன, பாவம், *கிட்டம், செம்பு முதலிய உலோகங்களின் களிம்பு, சைவ சித்தாந்தத்தில் ஆன்மாவைப் பந்தித்த மும்மலங்கள், [பன.
மலம் ௩- ஆணவம் மாயை கன்மம் என்
மலம் ௫- மலம் சிறுநீர் வாயு செந்நீர் கந்தம் என்பன. (இவை சரீர சம்பந்தமானவை.
மலயக்கால்-தென்றற்காற்று.
மலயசம்- சந்தனம், தென்றற்காற்று.
மலயத்துவசன்- ஓர் பாண்டியராசன், (தடாதகைப்பிராட்டியின்பிதா).
மலயயான்-சேரன்.
மலயம்- பொதியமலை, மலையுச்சி.
மலயன்- கடைவள்ளல்களுளொருவன், பாண்டியன்.
மலரவன்- பிரமா.
மலர் - பூ.
மலர்க்கணைவேள்-மன்மதன்.
மலர்ச்சி- பொலிவு; பூக்களலருதல்,உள்ளக்களிப்பு.
மலர்தல்- பூக்களலர்தல். பொலிதல், பர
மலாடு- (மரூஉ)- மலயநாடு. [த்தல்
[மலாம்- ஓர்வகைப்பூச்சு].
மலாவகம்- பிண்ணாக்கு.
மலிதல்- நிறைதல்.
மலிவு- நிறைவு, விலைக்குறைவு.
மலினம்- அழுக்கடைந்தது, குற்றமுள்ளது,கறுப்புநிறமானது. *தழைமரம்
மலீமசம்- அழுக்கு.
மலை - பர்வதம்.
மலை எ- மகேந்திரம் மலயம் சையம் சத்திமான் இருட்சம் விந்தம் பாரியாத்திரம் என்பன. (கயிலை இமயம் மந்தரம் விந்தம் நிடதம் ஏமகூடம் நீலகிரி என்பன பிங்கலத்திற் சொல்லப்பட்டன).
மலை அ- இமயம் மந்தரம் கயிலை விந்தம் நிடதம் ஏமகூடம் நீலம் கந்தமாதனம் என்பன.
மலைதல்-பொருதல், சூடுதல், ஒத்தல்,மாறுபடல்.

மலைநாடு- சேரனாடு.
மலைநெல்- ஓர்சாதிநெல்.
மலைபடுகடாம் - பெருங்குன்றூர்ப் பெருங்கவுசிகனாரியற்றியஒருநூல்.(இது பத்துப்பாட்டிலடங்கியது).
மலைபடுதிரவியம் ரு - மிளகு கோட்டம் அகில் தக்கோலம் குங்குமமென்பன,
மலைப்பச்சை- ஓர்செடி.
மலைப்பாம்பு- ஓர்வகைப்பாம்பு.
மலைப்பு- மலைவு - கூத்தின்விகற்பம்.
மலைமகள்- உமை.
மலையரண்-மலையினாலாகிய காவல்.
மலையன்-குறிஞ்சிநிலத்தலைவன், சேரன்.
மலையாளம்- ருசு தேசங்களுளொன்று.
மலைவு- மாறுபாடு.
மல் - வலிமை, மற்போர், வளம், திருமால்வாணாசுரனைக்கொன்றபோதாடிய கூத்து, வருவாய், பதினொருகூத்திராடலுளொன்று.
மல்கல்- நிறைதல்.
மல்லகதி-குதிரையின் கதிகளுளொரன்
மல்லல்-வளம், வலிமை, பொலிவு. [று.
மல்லன்- வலியவன்,மற்போர்செய்வோன், (பெண்பாலில் மல்லி).
மல்லாத்தல்- முதுகுகீழாகக்கிடத்தல்.
மல்லி- கொத்துமல்லி-
மல்லிகார்ச்சுனம்-ஓரூர். [டு.
மல்லிகை- ஓர்பூங்கொடி,விளக்குத்தண்
மல்லிநாதன்- வடமொழியில் இரகுவம்சம் நைடதம் மாகம் என்னும்நால்களுக்கு வியாக்கியானஞ்செய்தபுலவர்.
மல்லை- வட்டவடிவு.
மழலை- நிரம்பாவிளஞ்சொல்·
மழவர்- வீரர்.
மழவு- இளமை.
மழித்தல்-முண்டிதமாக்கல் (உலகி சஉ)
மழு-மழுவாயுதம், கோடரி.
மழுக்கம்- கூரின்மை, விவேகமின்மை.
மழுக்கல்- கூர்நீக்குதல்.
மழுங்கல்- ஒளிமழுங்குதல்,கூர்தேய்தல், பொலிவழிதல்.
மழை - மேகம், மழை, நீர், குளிர்ச்சி.
மழைக்கண்ணி- ஓர்பட்சி.
மழையலர்- நீர்.
மழைவண்ணக்குறிஞ்சி-ஓர்கொடி.
[மளிகை- பல பொருள்களுள்ளசாலை].
மள்ளம்-வலிமை·

மள்ளர் - படைவீரர், திண்ணியர், தானைத்தலைவர், குறிஞ்சிநில மாக்கள், மருதநிலமாக்கள்.
மறதி - ஞாபகவீனம், மயக்கம்,பொறுமை.
மறத்தல்-மறந்துவிடுதல். [மை.
மறத்துறை எ- வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி உழிஞை நொச்சி தும்பை என்பன.
மறநிலைப்பொருள்-பகைஞர்பாற்கவர்ந்த பொருளும் திறைப்பொருளும் தண்டத்தில் வந்த பொருளும் சூதில் வென்ற பொருளுமாம்.
மறநிலையறம்- பகைத்திறந் தெறுதலும் செஞ்சோற்றுதவியில்லாதாரைச் செகுத்தலும் நிரைமீட்டலுமாம்.
மறநிலையின்பம்- ஏறுதழுவல் வில்லாலிலக்கமெய்தல், பொருள் கொடுத்துக்கோடல் வலிந்துகோடல் ஆகிய இவற்றாற் கன்னிகையைவிவாகஞ்செய்தனுபவிக்குமின்பம்.
மறம்- கோபம், பிணக்கு, யமன், வீரம், பாவம், வலி, சண்டை, மயக்கம்.
மறலி- யமன், மறதி, பொறுமை.
மறல்- எழுச்சி, பிணக்கு, போர்,யமன், மறதி, பகை, மயக்கம், *வறுமை.
மறவர்-பாலைநிலமாக்கள்,(பெண்பாலில், மறத்தியர்), படைவீரர், வேடர், கொடியோர்.
மறவி- கள், மறதி, பொறுமை.
மறி - ஆடு குதிரை மான் இவற்றின்குட்டி, இவற்றின்பெண், ஆடு, மேடராசி மான், அழுங்கு, அழுங்கின் குருளை.
மறிதல்-திரும்புதல் - தடைப்பட்டு மீளு
மறித்தல்- தடுத்தல். [தல்.
மறியல்-சிறை.
மறு- குற்றம், மாசு.
மறுகல், சுழலுதல், இணங்காமை, மனம் வேறுபடுதல்.
மறுகு- குறுந்தெரு, தெரு.
மறுதலை- மறுப்பு (வினையில் மறுதலித்தல்).
மறுத்தல்- உடன்படாமை. மறையுழவுழுதல், நாணுதல், கொடாமை.
மறுபுலம்- பாலைநிலம்,வேற்றுத்தேசம்.
மறுமை-வருபிறப்பு.
மறுமொழி- விடை.
மறுவி- நாவி.

மறை-இரகசியம். இரண்டாமுழவு,மறு மொழி, சொல், மந்திரம், வேதம்.
மறைக்காடு - வேதாரணியமென்னுஞ் சிவதலம்.
மறைக்கொடியோன்- துரோணசாரியர்.
மறைசை-வேதாரணியம்.
மறைஞானசம்பந்தர்- மெய்கண்டாரது மாணாக்கரிலொருவர். (சிவதருமோத்தரத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடியவர்).
மறைதல்- ஒளித்தல்.
மறைபுகல்- சரண்புகுதல்.
மறைமுதலி- சிவன்.
மறையவர்- அந்தணர்.
மறையவன்-பிரமா.
மறைவினை-எதிர்மறையில்வரும் வினைச் சொல்.
மற்குணம்- மூட்டுப்பூச்சி.
மற்சம்- மீன், மீனராசி, மற்சபுராணம், கூர்ச்சரதேசத்திற்கு மேற்கிலுள்ள விராடமென்னுந்தேசம், (இப்பெயரால் வேறுமோர் தேசமுண்டென்பர்).
மற்சரம்- பொறாமை, கோபம்.
மற்று-வினைமாற்றிலும் அசைநிலையிலும் பிறிதென்னும் பொருளிலும் வரும் இடைச்சொல். (உ-ம்: மற்றறிவாநல் வினையாமிளையம் என்பதில் அறஞ் செய்தலைப் பின்னறிவாமென அக்காலத்து வினையை மாற்றுதலால் வினைமாற்று. மற்றென்னையாள்க என்பதில் வேறுபொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை. ஊழிற்பெருவலியாவுளமற்றொன்று சூழினுந்தான் முந்துறும் என்பதில் ஊழல்லாததொன்றென்னும் பொருடருதலாற் பிறிது.
மனசாதேவி- ஒருதேவதை.
மனம்-(மனசு)- பொறிகளின்வழியேசென்று விடயங்களை உணரும் உணர்வு.
மனவாசகங்கடந்தார்- உண்மைவிளக்கமென்னும்சைவசித்தாந்தநூலாசிரியர்.
மனவு (மணவு)- மணிப்பொது, சங்குமணி, அரைப்பட்டிகை.
மனனம்- ஞாபகப்படுத்தல்.
மனிதர்- மானுடர்.
மனிலா (மண்ணிலா)-வேர்க்கடலை.
மனு- பதினான்கு மனுக்கள், மந்திரம், மனுஸ்மிருதி, விண்ணப்பம், ஓர்முனிவர்.
மனுக்கள் பதினால்வர்-சுவாயம்புவன் சுவாரோசிஷன் உத்தமன் தாபசன் ரைவதன் சாக்ஷுஷன் வைவஸ்வதன் சூரியசாவர்ணி தக்ஷசாவர்ணி பிரமசாவர்ணி ருத்திரசாவர்ணி தர்மசாவர்ணி ரௌச்சியன் பௌச்சியன் என்பவர்கள். (சில நூல்களிற் சிலபெயர்கள்பேதமாகவுங்காணப்படுகின்றன).
மனுசர்- மனுடர்- (மனுவினின்றுதோற்றினோரென்பது சொற்பொருள்).
மனுடர்-மனிதர்.
மனுநீதிகண்டசோழன்- நீதியிற் சிறந்த ஒருஅரசன். (இவன் தேர்க்காலிலகப்பட்டகன்றைநெரித்தகுற்றத்துக்காகத் தன்மகனைத் தேர்க்காலி லகப்படுத்திக் கொல்லமுயன்றபோதுகடவுளருளால் இறந்தகன்று உயிர்பெற்றது).
மனுவந்தரம்- ஒவ்வொரு மனுவின் ஆணைக்குட்பட்டகாலம் (ஏக சதுர்யுகம் ௬0௬௭உ0000) வருடம்.
மனுவர்-கொல்லர்.
மனை - வீடு. மனைவி.
மனைக்கோள்- பல்லி.
மனையறம்- இல்லறம்.
மனையாட்டி- மனைவி.
மனைவி-விவாகஞ்செய்யப்பெற்று இல்லறத்திற்குத் துணையாயிருக்கும்பெண்.
மனோகதி- மனவேகம்போன்றவேகம்.
மனோகரம்- மனத்துக்கினிமையாயிருப்பது, பேரழகு.
மனோசன் (மனோபவன் மனோபு)-மன்மதன்.
மனோசிலை-ஓர் பாஷாணம்.
மனோதம்- விருப்பம்.
மனோரமம்- மனத்துக்கினிமையாயிருப்பது.
மனோன்மனி-பார்வதி.
மன்- அரசன், உத்தரட்டாதிநட்சத்திரம், இடைச்சொல்லாயின் கழிவு ஆக்கம் ஒழியிசை மிகுதி என்னும் பொருள்களினொன்றைக் குறிப்பதும் அசைநிலையுமாம். (சிறியகட் பெறினே யெமக்கீயுமன்னே என்பதில் இனி அதுகழிந்ததென்னும் பொருளைக் குறித்தது. பண்டுகாடுமனின்று கயல்பிறழும்வயலாயிற்று என்பதில் ஆக்கத்தைக்குறித்தது. கூரியதோர்வாண்ம

ன் என்பதில் திட்பமின்று அல்லது இலக்கணமின்று என ஒழிந்தசொற்களின் பொருளைக்குறித்தது. எந்தையெமக்கீயுமன் என்பதில் மிகுதியைக் குறித்தது. அதுமற்கொண்கன்றேரே என்பதில் ஒருபொருளையுங்குறிக்காது அசைநிலையாய்நின்றது).

மன்பதை - மக்களின்பன்மை. (மன்பதை காக்குநின்புரைமை; புற).

மன்மத- அறுபதுவருடங்களுளொன்று.

மன்மதன் - காமன்.

மன்ற- தெளிவுப்பொருளுணர்த்துமிடைச்சொல், (உ-ம்: மடவைமன்றவாழிய முருகே), அசைநிலையாயும் வரும்.

மன்றம் - பொதியில், செண்டுவெளி, வெளி, நெடுந்தெரு, உண்மை, வாசனை.

மன்றல் - விவாகம், வாசனை, பாலையாழி[சை).

மன்றுபடுதல் - இரந்துகேட்டல்.

மன்னர்பின்னர்- வைசியர்.

மன்னல்- நிலைபெறுதல், பொருந்துதல், பெருமை, வலிமை.

மன்னன் (மன்னவன்) - அரசன், எப்பொருட்குமிறைவன், மூப்பத்திரண்டுக்குமேல் நாற்பத்தெட்டுக்குட்பட்ட வயதுடையோன், உத்தராட்டாதிநட்[சத்திரம்.

மன்னார் - பகைவர், ஓரூர்.

[மன்னித்தல் - பொறுத்தல்].

மன்னியு (மன்னை) - கோபம், துக்கம், வறுமை, செருக்கு.

## மா

மா - இலக்குமி, பெருமை, அழகு, வலிமை, நிறம், கருமை, செல்வம், விலங்கு, விலங்குவடிவானபிறப்பு, அரிசிமுதலியவற்றின் மா, மாமரம், இருபதிலொருபங்கு, குதிரை, யானை குதிரை பன்றி என்னும் விலங்குகளினாண், வயல்நிலம், சிங்கராசி, வண்டு, அழைத்தல், வெறுத்தல், வியங்கோளைச்சார்ந்துவரும் அசைநிலை. (உம்: உப்பின்றுபுற்கையுண்கமாகொற்கையோனே).

மாகதர் - அரசர்முதலாயினோருடைய அவையிலிருந்து அவரைப்புகழ்வோர்.

மாகதி- திப்பிலி, முல்லைமரம்.

மாகம் - ஆகாயம், மாசிமாதம், வடமொழிக்காவியங்களுளொன்று. (கிருஷ்ணமூர்த்தி சிசுபாலனை வதைத்தசரித்திரம் இதிற்கூறப்பட்டது; மாககவியாற்செய்யப்பட்டது).

மாகாணம் - தேசத்தின்பிரிவு.

மாகாணி - பதினாறிலொருபங்கு.

மாகாளர் (மகாகாளர் - சிவன், ஐயனாருடைய சேனைத்தலைவருளொருவர். (கம் மகாகாள ௬).

மாகுலவர் - வேடர்.

மாகேசுவரசூத்திரம்- வடமொழிவியாகரணத்துக்கு முதலாகப்பரமசிவனருளிய பதினான்கு சூத்திரங்கள்.

மாகேசுவரி - பார்வதி, (சத்தமாதர்களுளொருதேவியுமாய்).

மாகேந்திரம்- உள யோகங்களுளொன்று, விவாகப்பொருத்தங்களுளொன்[று.

மாக்கள் - மனிதர்.

மாசம் - மாதம்.

மாசாத்தன்-ஐயனார், கண்ணகையின் தந்[தை.

மாசாத்துவான்- கோவலனுடைய பிதா.

மாசி - ஓர்மாதம், மகநட்சத்திரம்.

மாசிகம் - இறந்தோரைக்குறித்து மாசந்தோறுஞ்செய்யப்படுங்கிரியை.

இது ஊனம் துவிதீயம் திரைபக்ஷம் திருதீயம் சதுர்த்தம் பஞ்சமம் ஊனஷாண்மாசம் ஷஷ்டமம் ஸப்தமம் அஷ்டமம் நவமம் தசமம் ஏகாதசம் துவாதசம் ஊனாப்திகம் எனப் பதினைந்துவகைப் படும். இவற்றுள் ஊனம்இறந்ததிதியினின்று இருபத்தேழாந்திதியின்மேல் மூன்றுதிதிகளுளொன்றிலும், திரைபக்ஷம் (இறந்ததிதிமுதற்பின்னே அத்திதிவருதற்கிடைப்பட்டதிதிகளை ஒவ்வொருபக்ஷமாகக்கொண்டு) மூன்றும்பக்ஷத்திற் பின்னைந்துதிதிகளுளொன்றிலும், ஊனஷாண்மாசம் ஆறுமாதமுடிவில்வருந் திதிக்குமுன்பதுத்திதிகளுளொன்றிலும், ஊனாப்திகம் ஆப்திகத்துக்குமுன்வரும் பதினைந்துதிதிகளுளொன்றிலும், ஏனையமுறையேமாசந்தோறும் இறந்ததிதிவருந் தினங்களிலுஞ் செய்யத்தக்கன.

மாசு- களங்கம், அழுக்கு, குற்றம், அற்ப[ம், மேகம்.

மாசுணம்- பெரும்பாம்பு.

மாசேனன் - அருகன், குமரவேள்.

மாசை - பொன்.

மாஞாலம் - மகாசாலம்.

மாஞ்சி - சடாமாஞ்சியென்னுஞ் சுகந் தச்சரக்கு.
மாடகம் - யாழின்முறுக்காணி.
மாடப்புறா - ஓர்வகைப்புறா.
மாடம்- வீடு, உழுந்து. (மாஷம் எனவு
மாடி - அரமனை. [ம்).
மாடு - பக்கம், பொன், செல்வம், [பசுப்
மாடை - பொன். [பொது].
மாட்சி - அழகு, பெருமை, நன்மை.
மாட்டல் - கடாவுதல், இசைத்தல், இயலுதல், அழித்தல், (முல்லை உசு), எரித்தல், (சிறுபா கஙசு), பூணுதல்.
மாட்டறைதல் - ஒன்றோடுமற்றொன்றைத்தொடர்த்துதல்.
மாட்டாமை - இயலாமை.
மாட்டார் - இயலாதார்.
மாணவகன் (மாணவன்) - மாணுக்கன். (கல்வி கற்கும் பிராயத்தோனுமாம்).
மாணூர் - பகைவர்.
மாணிகை-எட்டுப்பலங்கொண்டநிறை.
மாணிக்கத்தின்சாதி ச- சாதுரங்கம் குருவிந்தம் சௌகந்திகம் கோவாங்கம் என்பன.
மாணிக்கம்- நவரத்தினங்களுளொன்று.
மாணிக்கவாசகர் - திருவாதவூரடிகள்.
மாணிபத்திரன் - குபேரனுடையசேனுபதியாகிய ஒரு இயக்கன்.
மாண்டவியர் - ஒரு இருடி.
மாண்பு - மாட்சிமை. (மகத்துவம்).
மாதங்கம் - யானை.
மாதங்கர் - சண்டாளர்.
மாதங்கி - துர்க்கை, காளி.
மாதம் - பன்னிருமாதங்கள், செருக்கு, மகிழ்ச்சி.
மாதம் கஉ - சித்திரை வைகாசி ஆனி ஆடி ஆவணி புரட்டாதி ஐப்பசி கார்த்திகை மார்கழி தை மாசி பங்குனி என்பன.

சைத்திரம் வைசாகம் ஜ்யேஷ்டம் ஆஷாடம் சிராவணம் பாத்திரபதம் ஆசுவீஜம் கார்த்திகம் மார்க்கசீர்ஷம் புஷ்யம் மாகம் பாற்குனம் என்பன சாந்திரமாதங்கள்- மேடமுதலியஇராசிகளின்பெயர்களாலமைந்தன சௌ
மாதரி - காளி. [ரமாதங்கள்.
மாதர் - அழகு, ஆசை, பெண்கள்.
மாதர் எழுவர் - பிராமி மாகேசுவரி கௌமாரி வைஷ்ணவி வாராகி இந்திராணி சாமுண்டி என்பவர்கள்
மாதலி - இந்திரனுடையதேர்ச்சாரதி.
மாதவகை ச - சௌரம் சாந்திரம் சாவனம் நாக்ஷத்திரம் என்பன.

சௌரம்: சூரியன் ஒவ்வோரிராசியிற்சஞ்சரித்தலாற் கொள்ளப்படுவது. சாந்திரம்: பூருவபக்கப்பிரதமை முதல் அமாவாசையீறுகக்கொள்ளப்படுவது. சாவனம்: முப்பதுநாட்களாற்கொள்ளப்படுவது. நாக்ஷத்திரம்: நாக்ஷத்திரநாள்நாடிவிநாடிகளாற் கணித்துக் கொள்ளப்படுவது.
மாதவம்- அருந்தவம், வசந்தகாலம், கள்.
மாதவர் - முனிவர்.
மாதவன் - திருமால்.
மாதவாசாரியர் - வித்தியாரணியர்.
மாதவி - குருக்கத்திமரம், கோவலனுடைய காதற்பரத்தை, அருச்சுனன் மனைவி.
மாதா - தாய், உமாதேவி, இலக்குமி, சரசுவதி, அளவிடுவோன்.
மாதாமகன் - தாயின்பிதா.
மாதாமகி - தாயின்மாதா.
மாதி - மண்டலமாயோடல்.
மாதிகம் - குதிரைபோமார்க்கம்.
மாதிரம் - திக்கு, மலை, யானை, பூமி.
மாதிரு - மாதா.
மாது - பெண், காதல், (சிந்தா), அசைநிலையிடைச்சொல். [சை.
மாதுகரம் - சிறிது சிறிதாயேற்கும் பிச்
மாதுரியம் - மதுரத்தன்மை. [வன்).
மாதுலன் - மாமன். (மாதாவுடன்பிறந்த
மாதுலானி(மாதுலி) - மாமன்மனைவி.
மாதுளுங்கம் (மாதுளங்கம்) - மாதுளைமரம்.
மாத்தியந்தினம் - சுக்கில யசுர்வேதத்தின் சாகைகளுளொன்று.
மாத்திரம் - அற்பம், தனிமை.
மாத்திரி - மத்திரராசனதுபுதல்வி. (பாண்டுவின்மனைவி; நகுலசகாதேவர்களின் தாய்).
மாத்திரை - கண்ணிமை அல்லது கைந்நொடியளவாகிய காலம், காலவிரைவு, குளிகை, அளவு.
மாத்திரைக்கோல் - அளவுகோல்.
மாந்தம் - ஓர் நோய்.

மாந்தர் - மனிதர்.
மாந்தல் - பருகுதல். சாதல், உண்ணுதல்.
மாந்தாதா - சூரியவமிசத்தரசருளொருவன்.
மாந்தி - குளிகன், (ஒருஉபக்கிரகம்), மாமரம்.
மாப்பிள்ளை - மணவாளன்.
மாமணி - மாணிக்கம்.
மாமன் - மாதுலன், பிதாவின் சகோதரியின்கணவன், மனைவியின்பிதா, கணவனுடையபிதா.
மாமாத்தியர் - முதன்மந்திரிகள், வைத்தியர்.
மாமி - மாதுலன்மனைவி, பிதாவின் சகோதரி, மனைவியின்தாய், கணவனுடையதாய்.
மாமிசம் - இறைச்சி. (இஃதிரத்தத்தின் பரிபாகத்தாலுண்டாவது).
மாமை - அழகு, நிறம், கருநிறம். (மலைபடு கூடு).
மாயம் - பொய், வஞ்சம், கறுப்புநிறம்.
மாயவள் - இடாகினி, (காளியேவல்செய்வாள்), காளி, சூரபன்மன்முதலிய அசுரர்களின்தாய்.
மாயன் - திருமால், கருநிறமுடையவன், கபடமுடையவன்.
மாயாதேவிசுதன் - புத்தன்,
மாயாபுரி - பித்தளை, முத்திநகரங்களி லொன்று. (அரித்துவாரம்).
மாயாவாதம் - மாயையாலே உலகங்கள் தோன்றிநின்றழியுமென்றும் கடவுளுஞ்சுவர்க்கநரகங்களுமில்லை யென்றுங்கூறும்மதம்.
மாயாவி - மாயக்காரன்.
மாயூரம் - ஓர்சிவதலம்.
மாயை - வஞ்சனை, காளி, முத்திநகரமேழனுளொன்று, இந்திரசாலமுதலியன, பிரபஞ்சத்துக்குக் காரணமாகிய மாயை, பொய்த்தோற்றம், சூரன்முதலிய அசுரர்களின் தாய்.
மாயையின்வகை ௩ - சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயை என்பன. (இவை சைவநூல்களிற் கூறப்பட்டன).
மாயோள் - பெண்.
மாயோன்நாள் - திருவோணநட்சத்திரம்.
மாயோன் - திருமால்.
மாயோன்மருகன் - முருகக்கடவுள்.
மாய்தல்(மாய்வு) - சாதல், அழிதல், மறைதல்.
மாரகத்தானம் - இலக்கினத்திற்கு மூன்றெட்டாமிடங்கள்.
மாரகம் - மரணம்.
மாரகன் - சோதிடத்தில் தன்தசாபுத்தி முதலியவற்றிற் கொல்லுங்கிரகம்.
மாரணம் - மந்திரசக்திமுதலியவற்றாலிறக்கச்செய்தல், கொலை.
மாரன் - மன்மதன்,
மாராப்பு - நெஞ்சில்முடிந்து முதுகில் விட்டுச் சுமக்கும் புடைவைப்பொதி.
மாராயம் - உவகை.
மாராளம் - பாம்பு.
மாரி - காடுகாள், மழை, நீர், மாரிக்காலம், மேகம், சாவு, கள், ஓர்நோய்.
மாரீசம் - மாயம், உபபுராணங்களிலொன்று.
மாரீசன் - இராவணனுடையமாமனாகிய ஓரரக்கன்.
மாருதம் - காற்று.
மாருதி - அனுமான், வீமன்.
மார் - நெஞ்சு, அசைநிலையிடைச்சொல்.
மார்கழி - ஓர்மாதம், மிருகசீரிடநட்சத்திரம்.
மார்க்கசீரிடம் - மார்கழிமாதம்.
மார்க்கணம் - அம்பு, தேடுகை.
மார்க்கண்டேயம் - பதினெண்புராணங்களுளொன்று.
மார்க்கண்டேயர் - ஓர் முனிவர்.
மார்க்கம் - வழி, சமயம், நெடுந்தெரு.
மார்ச்சனம் - துடைத்தல், குப்பைமுதலியவற்றையொதுக்குதல்.
மார்ச்சனி - விளக்குமாறு.
மார்ச்சனை - முழவிற்பூசப்படும்மண்.
மார்ச்சாரம்(மார்ச்சாலம்) - பூனை.
மார்த்தம் - மிருதியின்வழியானஒழுக்கம்.
மார்த்தாண்டன் - சூரியன்.
மார்பு - நெஞ்சு.
மாலதி - மல்லிகை, முல்லை, சிறுசண்பகம், *விளக்குத்தண்டு, ஒருநதி, இளம்பெண்.
மாலி - கள், சூரியன்.
மாலிகை - பூமாலை, ஒழுங்கு.
மாலியவான் - ஒருமலை, (இஃதிந்தைக்குச்சமீபத்திலுள்ளது; கேதுமாலகண்டத்துக்கும் இளாவிருதகண்டத்துக்குமெல்லையாயுள்ளதுமாம்), இராவணனுடையமந்திரி.
மாலினி - காளி.
மாலினுக்கிளையாள் - துர்க்கை.
மாலுதல்(மாறல்) - மயங்குதல்.

மாலுதானன் - கண்குத்திப்பாம்பு.
மாலுந்திவந்தோன் - பிரமா.
மாலுமி - மீகாமன்.
மாலூரம் - வில்வமரம்.
மாலை - சாயங்காலம், இரா, பூமாலை, ஒழுங்கு, ஒழுக்கம், இயல்பு.
மாலை அ- வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி நொச்சி உழிஞை தும்பை வாகை என்பன. (இவை முறையே நிரைகவர்தல் நிரைமீட்டல்பகைமேற்சேறல் எதிரூன்றல் மதில்காத்தல் அரண்வளைத்தல் அதிரப்பொருதல் போர் வெல்லல் என்னுமிவற்றிற்குரியன).
மாலைமாற்று - முதலிலிருந்துமுறையாயும் இறுதியிலிருந்து எதிராயும் வாசிக்கும்போது ஒருபடித்தாய்வரும்பா.
மால் - திருமால், அருகன், சோழன், புதன், பெருமை, ஆசை, மயக்கம், காற்று, மேகம், கறுப்புநிறம், கண்ணேணி.
மால்பு - கண்ணேணி.
மால்மைந்தன் - மன்மதன், பிரமா.
மாவலர் - குதிரைப்பாகர்.
மாவலி - ஓர் சக்கிரவர்த்தி.
மாவிரதம் (மகாவிரதம்)- உட்சமயமாறுனொன்று. (வீரசைவம்).
மாவிலங்கை - ஓர் மரம்.
மாவிளம்- வில்வமரம்.
மாவெனல் - அழைத்தல்.
மாழாத்தல் - மயங்குதல்.
மாழை - அழகு, பொன், உலோகக்கட்டி, அறிவின்மை, மாமரம், புளிமா, ஓலை, திரட்சி.
மாழ்கு - மிருகசீரிடநட்சத்திரம்.
மாழ்குதல்- மயங்குதல், ஒளிமழுங்குதல்.
மாள - முன்னிலையசை, மாள் என்னும் பகுதியாற்பிறந்த செயவெனெச்சம்.
மாளல் - சாதல்.
மாளவம் - ருசு தேசங்களுளொன்று.
மாளிகை - வீடு, அரசர்வீடு.
மாளிகைத்தேவர் - ஒரு சிவனடியார்.
மாறல் (மாறுதல்)- தவிர்தல், மறுபுறமாக்கல், வேறுக்கல், விற்றல், *கூத்தாடல்.
மாறன் - பாண்டியன்.
மாறு - துடைப்பம், பகை, விதம், (விளங்கக்கேட்டமாறுகொல்; புற), ஏதுப்பொருள்படுவதோரிடைச்சொல். (அனையையாகன்மாறே; புற).
மாறுகோள் - விரோதம்.
மாறுபடுபுகழ்நிலை - செய்யுளணிகளுள்ஒன்று, (கவி தான்கருதியபொருளை மறைத்து,அதனைப் பழித்தற்குவேறொன்றைப்புகழ்தல்
மாற்சரியம்-பொருமை.
மாற்றம்- சொல், வேறுபாடு.
மாற்றலர் - பகைவர்.
மாற்றல் -மறுத்தல், மாறுபடுத்தல், பண்டமாற்றுதல், விலக்குதல்.
மாற்றுட்டி - சக்களத்தி.
மாற்றுந்தகப்பன் - பெற்றபிதாவல்லாதவனுய் மாதாவுக்கு இரண்டாங்கணவனுல்வந்தோன்.
மாற்றுந்தாய் - பெற்றதாயல்லாதவளாய்ப் பிதாவுக்குத்தாரமாயிருப்பவள்.
மாற்றுர் - பகைவர்.
மாற்று - பொன் வெள்ளிகளினிறம், பதிற்புடவை, மாறுதல்.
மானக்கஞ்சாறர் - ஒருசிவனடியார்.
மானசம் - ஓர்வாவி, (கயிலைமலைக்குச்சமீபத்திலுள்ளது), மனத்தாற் செய்யப்படும் நல்வினைதீவினைகள்.
மானமா - கவரிமா.
மானம் - அபிமானம், சன்மானம், அளவு, வலி, விமானம், வெட்கம், குற்றம்
மானல் - ஒத்தல், மயங்குதல்.
மானவர் - மனிதர், படைவீரர்.
*மானவு - தெளிவு.
மானனம் - மதிப்புவைத்துநடத்தல்.
மானி - மானமுடையோன்.
மானிடமேந்தி - சிவன்.
மானியம் - அரசர்முதலாயினேர் சன்மானமாய்க்கொடுத்த நிலமுதலியன.
மானினி - பெண்.
மானுடம் - மனுடப்பிறப்பு.
மானுடர் - மனிதர்.
மானுதல் - ஒத்தல்.
மான் - ஓர்மிருகம், குதிரை, பெண், மகரமீன், மீன், மகராசி, விலங்கின் பொது, ஒப்பு.
மான்மதம் - கஸ்தூரி.
மான்மியம் - மகிமை.
மான்றலை - மிருகசீரிடநட்சத்திரம்.

## மி

மிகல் (மிகுதல்) - அதிகப்படல்.
மிகிரம் - மேகம், காற்று.
மிகிரன் - சூரியன், சந்திரன்.

மிகுதி (மீதி) - அதிகம், சேடம்.
மிகை - குற்றம், மிகுதி, கேடு, துன்பம்
மிகைபடக்கூறல் - வேண்டியஅளவிலி ருந்து சொற்களை அல்லது வசனங்க ளை அதிகமாகச்சொல்லுதல்.
மிக்கோர் - அறிஞர்.
மிசை - உணவு, மேடு, மேல், சோறு.
மிசைதல் - உண்ணுதல், அனுபவித்தல்.
மிசைத்திரள் - கரடு.
மிச்சம் - சேடம்.
மிச்சிரம் - கலப்பு. [உணவு.
மிச்சில் - மிகுபொருள், புசித்தெஞ்சிய
மிச்சை - பொய், சரித்திரம், அஞ்ஞான
மிஞிறு (ஞிமிறு) - தேனீ. [ம்.
மிஞசல் - மிஞ்சுதல், எஞ்சுதல்.
*மிஞ்சிகம் - பெண்களின்மயிர்முடி.
மிடல் - வலிமை.
மிடறு - கழுத்து.
மிடா - குழிசி, பானை.
மிடி - வறுமை
மிடியன் - தரித்திரன்.
மிடுக்கு - பலம்.
மிடை - தாறு.
மிடைதல் - நெருங்குதல், தாக்கித்தல்.
மிண்டல் - நெருங்குதல், கிளப்புதல்.
மிண்டன் - திண்ணியன்.
மிண்டி - கிளம்புங்கருவி.
மிதத்தல் - உயர்த்துதல், கிளப்புதல்.
மிதப்பு - நீர் முதலியவற்றில் மிதக்கும்ப டியிடும் பொருள், மேடு.
மிதம் - அளவு.
மிதவை - தெப்பம், சோறு. (கூழெனப் புறநானூற்றில்.)
மிதி - காலடி, மதிப்பு, கிணற்றுமிதி.
மிதித்தல் - காலால்மிதித்தல், குதித்தல்.
மிதியடி - பாதக்குறடு.
மிதிலை - சனகராசனுடையபட்டணம்.
மிதுனம்- ஆணும்பெண்ணும், மிதுனரா
மித்திரம் - நட்பு. [சி.
மித்திரர் - சினேகர்.
மித்திரலாபம்- பஞ்சதந்திரங்களுளொன் று. (சினேகத்தைப் பெற்றுக்கொள்ளு
மித்திரனுள்- அனுடநட்சத்திரம். [தல்).
மித்திரன் - சூரியன், சினேகிதன்.
மித்தை (மிச்சை) - பொய்.
மியா - முன்னிலையசை. (உம்: கேண்மி
மிரியல் - மிளகு. [யா).

மிருகசீரிடம்- உள நட்சத்திரங்களுளொ
மிருகண்டு - ஓர் முனிவர். [ன்று.
மிருகமதம் - கஸ்தூரி.
மிருகம் - மான், விலங்கின் பொது.
மிருகராசன் (மிருகபதி, மிருகாரி, மிரு கேந்திரன் முதலியனவும்) - சிங்கம்.
மிருடன் - சிவன்.
மிருடானி - பார்வதி.
மிருணாளம் - தாமரை நூல், தாமரைநா
மிருதங்கம் - முழவு. [ளம்.
மிருதசஞ்சீவினி - மூர்ச்சைதீர்த்துக்குற் றுயிர்தருமருந்து. (முற்காலத்திற் சத் திரவைத்தியஞ்செய்வோர் செய்துமு டிந்தபின் இம்மருந்தினால் மூர்ச்சை யை நீக்குவர்).
மிருதம் - மரணம், இரப்பு கலவு முதலி யவற்றூற் சீவித்தல்.
மிருதி - தரும நூல், நினைப்பு, மரணம்.
மிருது - மென்மை, மிருதுநட்சத்திரங் கள் (சித்திரை அனுடம் மிருகசீரி டம் ரேவதி என்பன).
மிருத்திகை - மண்.
மிருத்தியுஞ்சயன் - சிவன்.
மிருத்து - மண், மரணம், யமன். (பிந்தி யபொருள்களில் மிருத்யு எனவும்).
மிலேச்சதேசம்- நால்வருணப் பகுப்புவ ழங்காததேசம்.
மிலேச்சர் - (மிலைச்சர்) - ஒழுக்கந்தவறி னோர், சீசர், சோனகர்முதலிய அன் னியதேசத்தார்.
மிலைதல் (மிலைச்சல்) - சூடுதல்.
மிழலை - நிரம்பாமென்சொல்.
மிழற்றுதல் - சொல்லுதல். (மெல்லக்கூ றலெனச் சிலர்).
மிளகாய் - ஓர்செடி, அச்செடியின்காய்.
மிளகு - ஓர்சரக்கு.
மிளகுசம்பா - ஓர்சாதிநெல்.
மிளிர்தல் - பிரகாசித்தல், பிறழ்தல்.
மிளிறு - கரடி.
மிளை - காவற்காடு, (புற). [சிறை.
மிறை - கடினம், குற்றம், வருத்தம், அர
மிறைத்தல் - துன்பப்படல், பாடுபடுதல்.
மினுக்குதல் - விளக்குதல்.
மின் - ஒளி, பெண், மின்னல்.
மின்மினி - இருளில்மின்னும் பிராணி.
மின்னல்- பிரகாசித்தல், மேகங்கள்மின் னுதல்.

## மீ

மீ - ஆகாயம், மேல், மேற்புறம்.
மீகண் - கண்ணின்மேலிடம்.
மீகாமன் (மீகான்) - மாலுமி.
மீக்கூற்று - புகழ்.
மீக்கொளல் - ஏறுதல், மேற்படுதல்.
மீக்கோள் - போர்வை.
மீசை - மேலுதட்டிலுள்ளமயிர்.
மீட்சி - திரும்பிவருதல்.
மீட்டல் - ஒருபாத்திரத்திலுள்ளதை வேறொன்றில் மீட்டல், வீணைவாசித்தல், திரும்பிவரச்செய்தல்.
மீட்டும் - பின்னும்.
மீது (மீசு) - மேல்.
மீதுரை - பலமுறைசொல்லல்.
மீதூர்தல் - நெருங்குதல், அதிகப்படல்.
மீமாஞ்சகன் - மீமாஞ்சைநூல்பயின்றோன்.
மீமாஞ்சை - வேதத்தின் கிரியாகாண்டத்தைவிவகரிக்கும் நூல். (இது பூருவமீமாஞ்சையெனவும்படும். சைமினிமுனிவராற்செய்யப்பட்டது).
மீமிசை - மேன்மேலும்.
*மீயை - செங்குடை.
மீலனம் - கண்விழித்தல்.
மீளி - பாலைநிலைத்தலைவன், கூற்றுவன், (பெரும் எரு), மேன்மையுள்ளோன், வலியுள்ளோன், வலிமை, பெருமை.
மீளுதல் - திரும்புதல்.
மீறுதல் - அடங்காமை.
மீனகேதனன் - பாண்டியன், மன்மதன்.
மீனம் - மீன், மீனராசி.
மீனவன் - பாண்டியன்.
மீனாட்சி - மதுரையிலிருக்குந்தேவி.
மீனேறு - மகரமீன்.
மீன் - மற்சம், சித்திரைநாள், விண்மீன், நெய்தற்பறை.
மீன்கொத்தி - ஓர் பறவை.

## மு

முகக்குறி - மனதிலுள்ளதை வெளியிற் காட்டுகின்ற மகிழ்ச்சி துக்கம் முதலிய குறிப்புகள்.
முகடி - மூதேவி.
முகடு - வீடுமுதலியவற்றினுச்சி.
முகதலை - சேலையின்முகப்பக்கம்.
முகதா - சமுகம்.
முகத்தல் - நிரப்புதல், நால்வகையளவைகளிலொன்று.
முகத்திடு - பிரேதத்தைமூடிப்போர்க்கும் புடவை.
முகத்துவாரம் - ஆறுகள் கடலிற்சங்கமிக்குமிடம்.
முகப்படாம் (முகபடாம்) - யானைமுகப்போர்வை.
முகப்பு - முன்பக்கம், முகத்தல்.
முகமன் - உபசாரவார்த்தை.
முகம் - இடம், வாய், வதனம், பருவின்முகம், மண்டபமுதலியவற்றின்முகப்பு, வாயில், முன், ஆற்றுநீர்க்சழிமுகம், தலைமை, தொடக்கம், நாடகமுதலியவற்றிற்கூறப்படுஞ் சந்திவிகற்பங்களுளொன்று.
முகம்பார்த்தல் - கண்ணோட்டம்.
முகரன் - முதல்வன்.
முகரிமை - முதன்மை.
முகவாசம் - வெற்றிலைமுதலியவற்றின் கூட்டு.
முகவாதம் - ஓர்நோய்.
முகவுரை - பாயிரம்.
முகாரி - ஓரிராகம்.
முகில் - மேகம், திரள்.
முகில் எ - ஆவர்த்தம் புட்கலம் சங்காரம் ஆசவனம் சீர்க்காரி ருதிரோற்காரி சிலாவர்ஷம் என்பன.
முகில் க - ஆவர்த்தம் சம்வர்த்தம் புட்கலம் துரோணம் நீலம் காளம் வாருணம் வாயு தமம் என்பன.
முகிழ் - அரும்பு, சிற்றெரும்பு, தேங்காய்முதலியவற்றின் முகிழ்.
முகிழ்த்தல் - குவிதல், அரும்புதல்.
முகுடம் - முடியுறுப்புளொன்று.
முகுந்தம் - நவநிதிகளுளொன்று.
முகுந்தன் - விஷ்ணு. (முகும் - மோட்சத்தை, தன் - கொடுப்பவன்).
முகுரம் - கண்ணாடி.
முகுளம் - மலரும்பருவமான மொட்டு, *ஆன்மா, *சரீரம்.
முகூர்த்தம் - இரண்டுநாழிகையளவினதாகியகாலம், மூன்றேமுக்கால்நாழிகை, சுபமுகூர்த்தம்.
முகை - அரும்பு, சிற்றரும்பு, கூட்டம்.
முகைத்தல் - அரும்புதல்.
முக்கண்ணன் - சிவன், விநாயகக்கடவுள், வீரபத்திரக்கடவுள்.
முக்கண்ணி - காளி, உமாதேவி.

முக்கல்- எடுத்தலோசை, முக்குதல்.
முக்காணியர்- திருச்செந்தூரிலுள்ள பிராமணரிலொருபகுதியார்.
முக்காலி- மூன்றுகாலுள்ளபீடம்.
முக்கால்- நாலில் மூன்றுபங்கு.
முக்காழி- மூன்று வித்துள்ள பனம்பழம்.
முக்கியம்- பிரதானம், முதன்மை.
முக்குடைச்செல்வன் - அருகன்.
முக்குற்றமில்லோன்-புத்தன்.
முக்கூட்டு- பரணிநட்சத்திரம்.
முக்கூட்டுநெய் - எண்ணெய் பசுநெய் ஆமணக்குநெய்மூன்றுஞ்சேர்த்தது.
முக்கோல் - திரிகண்டம், திருவோணநட்சத்திரம்.
மூங்குதல் - முழுகுல். (மணிமே).
முசர் - மோர்.
முசலம் - இருப்புலக்கை, உலக்கை.
முசலி - பலபத்திரன், உடும்பு, தாழை, ஓந்தி, பச்சோந்தி.
முசிறு (முசுறு) - ஊரும்பிராணிகளிலொருசாதி.
முசுகுந்தன் - அறுவகைச்சக்கிரவர்த்திகளிலொருவன்.
முசுடர் - கீழ்மக்கள்.
முசுட்டை (முசுண்டை) - ஓர்கொடி.
முசுண்டர் - கீழ்மக்கள்.
முசுண்டி - ஆயுதவகைகளுளொன்று. (சிறுவாள்).
முசுப்பு - எருத்தினேரி.
முச்சந்தி-மூன்றுதெருக்கள்கூடுமிடம்.
முச்சி - உச்சி, மயிர்முடி.
முஞ்சம் - முஞ்சப்புல். (தருப்பைவிகற்பம்).
முஞ்சல் - இறத்தல்.
முஞ்சி - முஞ்சப்புல்.
முடக்கம் - அடக்கம், மடங்குதல்.
முடங்கல் - மடங்குதல், ஓலைச்சீட்டு, தாழை, மூங்கில், நோய்.
முடங்குளை - சிங்கம்.
முடம் - காற்பழுது.
முடலை - உருண்டைவடிவு, பெருமை, வலி, முறுக்கு. (நெடுநல் கூஉ).
முடவன் - நொண்டி, சனி.
முடவுதல் - நொண்டுதல்.
முடி - கிரீடம், குடுமி, தலை, மயிரை உச்சியின் முடித்தல், *துளசி.
முடிச்சு - முடியப்பட்டபொருள்.
முடிதல் - முற்றுதல், அழிதல், சாதல், கட்டுதல்.
முடித்தும்பை - ஓர்பூடு.
முடித்தல் - முடியச்செய்தல், அழித்தல்.
முடிப்பு - தீர்ப்பு, முடிச்சு.
முடிய - எல்லாம்.
முடியுறுப்பு ரு - தாமம் மகுடம் பதுமம் கோடகம் கிம்புரி என்பன.
*முடிவாழை - வெட்டிவேர்.
முடிவு - அந்தம், சாவு.
முடுகல்-வலிமை, கிட்டுதல், எதிர்த்தல், நெருங்குதல், விரைதல்.
முடுகியல்-அராகம். (கலிப்பாவுறுப்புக்களுளொன்று).
முடுக்கர் - மலைமுழை, அருவழி. (சிந்)
முடுக்கு - கோணத்தெரு, ஒடுங்கியவழி,
முடுக்குதல் - கடாவுதல், விரையச்செய்தல்.
முடுவல் - செந்நாய், நாய், பெண்ணாய்.
முடுவற்படையோன்-வைரவக்கடவுள்
முடை - புலால்நாற்றம், தவிடு.
முடைதல்-பின்னுதல், பகைமூட்டுதல், முடைநாற்றமுண்டாதல்.
முட்கோல் - தாற்றுக்கோல். (குதிரை செலுத்துதற்குரியது.)
முட்டம் - ஊர்.
முட்டல் - ஒன்றோடொன்று ஒற்றுதல், எதிர்த்தல், நெருங்குதல்.
முட்டி- கைப்பொத்து, கைப்பொத்துளடங்கத்தக்க தானியமுதலியவற்றினளவை, கலசம், எட்டிமரம்.
முட்டியுத்தம் - கைக்குத்துச்சண்டை.
முட்டு - வறுமை, வயிற்றில் நீர்முதலியவற்றாலுண்டாகும்முட்டு, விக்கினம். (உ-ம்: முட்டின்றுமுடித்தான்).
மூட்டுக்காய் - இளந்தேங்காய்.
முட்டுப்பாடு - வறுமை, இடையூறு.
முட்டை - பறவைகளின்முட்டை, *தவிடு.
முணங்குதல் - அடங்குதல்.
முண்டம் - தாமரை, நெற்றி, முள்ளிச்செடி, நீர்முள்ளி, முட்செடிகள், தாழை, கள்.
முண்டகன் - பிரமா.
முண்டகாசனை-இலக்குமி, சரசுவதி.
முண்டம்-மொட்டை, உடற்குறை, நெற்றி, தலை, திரட்சி.
முண்டனம் - மொட்டையாக்கல்.
முண்டை - விதவை, (மொட்டையானவள்).
முண்ணுபகி - ஓர்கொடி.

முதம் - சந்தோஷம்.
முதலெழுஞ்சனி - மகநட்சத்திரம்.
முதலெழுத்து - உயிருமெய்யுமாகிய முப்பதெழுத்துக்கள்.
முதலே - முதலை, செங்கிடை, இறகினடிக்குருத்து.
முதல் - முன், இடம், கடவுள், வர்த்தகத்தில் முதலில்விடும்பணம், ஏழாம் வேற்றுமையுருபு.
முதல்வள்ளல் - கேளாமலே குறிப்பறிந்துகொடுப்போன்.
முதல்வள்ளல்கள் எழுவர் - செம்பியன் காரி விராடன் நிருதி துந்துமாரி சகரன் நளன் என்பவர்கள்.
முதல்வன் - கடவுள், தலைவன், (பெண்பாலில் முதல்வி).
முதற்பா - வெண்பா.
முதற்பொருள் - பொருளிலக்கணத்திற் குறிஞ்சிமுதலியஐவகைத்திணைகளுக்குமுரிய நிலமும் பொழுதுமாம்.
முதனாள் - அச்சுவினிநட்சத்திரம்.
முதனிலே - பகுதி.
முதனூல் - இறைவனூல்.
முதன்மை - தலைமை.
முதாரி - முதன்மை. (புற).
முதிதம் - உவகை.
முதியாள் - தேவராட்டி.
முதியான் - ஓர் பட்சி.
முதியோர் - மூத்தோர், பெரியோர்.
முதிரை - துவரை கடலைமுதலிய புன்செய்த்தானியங்கள், *பயறு.
முதிர்தல் - சாய்முதலியன முற்றுதல், வயசேறுதல், காய்தல்.
முதிர்வு - மூப்பு.
முதுகாஞ்சி - இளமைகழிந்தஅறிஞர் இளமை கழியாத அறிவின்மாக்கட்குக் கூறுவதாகப்பாடிய நூல்.
முதுகுன்று - விருத்தாசலம்.
முதுக்கு - பேரறிவு.
முதுக்குறைவு - பேரறிவுடைமை.
முதுசொல் - மூதுரை.
முதுநிலம் - களர்நிலம்.
முதுமகன் - சனி.
முதுமை - பழமை, பழமொழி, மூப்பு.
முதுமொழி - பழமொழி.
முதுவர் - அமைச்சருட்டலைவர், நீதியிவிற் சிறந்தோர், வயோதிகர்.
முதுவேனில் - ஆனி ஆடி மாதங்கள்.
முதையல் (முதைப்புனம்) - முதிர்காடு.
முத்தகம் - பிறசெய்யுட்களுடன்றொடராது தனித்து முடியுஞ்செய்யுள், குருக்கத்திமரம்.
முத்தக்காசு - கோரைக்கிழங்கு.
முத்தமிழ் - இயல் இசை நாடகம் என்பன.
முத்தம் - முத்து, கொஞ்சுதல், பிரீதி, உதடு, மருதநிலம், விடப்பட்டது, (ஆசனவகைகளுளொன்று. (இடக்காற் பரட்டாற் சீவினியையழுத்தி வலக்காற்பரடு அப்பரட்டின் கீழழுந்தவிருத்தல்.
முத்தலைப்படை - சூலம்.
முத்தன் - வைரவக்கடவுள், அருகன், டத்தன், சிவன், பிரபஞ்சத்தைநீக்கிநிற்பவன்.
முத்தாபலம் - முத்து, இசங்கஞ்செடி.
முத்தாவலி - முத்துமாலை.
முத்தி - மோட்சம்.
முத்திநகரம் எ - அயோத்தி மதுரை மாயை காசி காஞ்சி அவந்திகை துவாரகை என்பன.
முத்திமண்டபம் - காசியிலும் சகநாதத்திலுமுள்ள மண்டபம்.
முத்திரை - அடையாளம். (இலச்சினை).
முத்தின்வகை உ - தலசம் சலசம் என்பன.
முத்து - இரத்தினவகைகளுள்ஒன்று.
முத்துச்சம்பா - ஓர்சாதிநெல்.
முத்துத்தாண்டவர் - பலகீர்த்தனங்களைப் பாடிய ஒருசங்கீதவித்துவான்.
முத்துப்பிறக்குமிடம் ௨0 - சந்திரன் மேகம் சங்கு சிப்பி மீன் நந்து முதலை உடும்பு தாமரை வாழை கமுகு கரும்பு செந்நெல் மூங்கில் யானைக்கொம்பு பன்றிக்கொம்பு பசுவின்பல் நாகம் கொக்கு பெண்களின்கழுத்து என்பன.
முத்தை - திரட்சி.
முத்தொகை - ஓரினமான இரண்டெண்களுடன் கூறப்பட்ட வேற்றினவெண்ணினால் அதனினமாகிய மற்றைய (நான்காம்) எண்ணையறியுங் கணக்கு.
முத்தொள்ளாயிரம் - கடைச்சங்கப் புலவர்கள் சேர சோழ பாண்டியர்கள் மேற்பாடிய ஓர் நூல்.
முந்திரி - முந்நூற்றிருபதிலொருபங்கு.
முந்திரிகை - ஓர் கொடி, ஓர்மரம்.

முந்து - முன்.
முந்துதல் - முற்படுதல்.
முந்தூழ் - பெருமூங்கில்.
முந்தை - பழமை.
முந்நீர் - கடல். (ஆற்றுநீரும்ஊற்றுநீரும் மழைநீருமாகிய மூன்று நீரையுமுடைமையால் இப்பெயர்த்தாயிற்று.)
முந்நூல்- உபவீதம்.
முப்பாட்டன் - பாட்டனுடைய பாட்டன்.
முப்பான்- முப்பது.
முப்புரிநூல் - உபவீதம்.
முப்புரிநூன்மார்பர் - அந்தணர்.
முப்பூரம் - பூரம் பூராடம் பூரட்டாதி என்பன.
முமுட்சு - முத்தியை விரும்புவோன்.
மும்மணிக்கோவை - ஆசிரியப் பாவும் வெண்பாவும்கட்டளைக்கலித்துறையுமாக முறையே அந்தாதித்துப்பாடிய முப்பதுசெய்யுள். முப்பதிற்குறைந்தும் வழங்குகின்றது.
மும்மணிமாலை - வெண்பாவுங் கலித்துறையும் அகவலுமாக முறையே அந்தாதித்துப்பாடிய முப்பதுசெய்யுள்.
மும்மீன் - மிருகசீரிடநட்சத்திரம்.
மும்மூர்த்திகள் - பிரமா விட்டுணு உருத்திரர் என்பவர்கள்.
மும்மை - மூன்றுயிருக்குந்தன்மை, முற்பிறப்பும் இப்பிறப்பும் வருபிறப்புமாகிய மூவகைப்பிறப்புக்கள்.
முயக்கம் - கலவி.
முயங்கல் - தழுவுதல்.
முயலல் - முயற்சிசெய்தல்.
முயலின்கூடு - சந்திரன்.
முயல்- ஓர்மிருகம்.
முயற்களங்கம் - சந்திரனிலிருக்குங்களங்கம்.
முயற்சி - பிரயத்தினம். (உற்சாகம்).
முரசக்கொடியோன் தருமபுத்திரர்.
முரசு - துந்துபி, பறைப்பொது, உத்தரட்டாதிநட்சத்திரம், பல்லின்முரசு.
முரசு ௩- வீரமுரசு கொடைமுரசு மணமுரசு என்பன.
முரஞ்சல் - முதிர்தல். (மலைபடு ௧௪௪).
முரஞ்சு - மனிதர் வாசஞ்செய்யத்தக்கமலைமுழை, முதுமை.
முரடு - கடினத்தன்மை.
முரணல் - விரோதித்தல்.
முரண் - வலிமை, பகை, மாறுபாடு, போர்.
முரண்டொடை - முன்வைத்த சொல்லோடு அல்லது பொருளோடு பின்வைக்குஞ்சொல் அல்லதுபொருள்முரணத்தொடுப்பது. (இருள்பரந்தன்ன மாநீர்மருங்கி னிலவுகுவித்தன்னவெண்மணலொருசிறை என்றற்றொடக்கத்தன போல).
முரம்- ஓர் வாசனைத்திரவியம்.
முரம்பு - மேடு, பாறை, கழிநிலம், பரலுடைத்துயர்ந்தநிலம்.
முரல்வு - எடுத்தலோசை, ஆலாபனஞ்செய்தல், (சிந்), ஒலி, உள்ளோசை.
முரவை - அரிசிமுதலியவற்றில் நன்றாய்க்குற்றப்படுதற்கு முன்னுள்ள வரி. (பொருந ௧௧௩).
முரற்கை - கலிப்பா, காளம். (மலைபடு ௩௪௦).
முரன் - ஒரு அசுரன்.
முராரி - திருமால்.
முரிகம் - மயிர்ப்படாம்.
முரிதல் (முறிதல்) - ஒடிதல், கெடுதல்.
முரிப்பு - எருத்துத்திமில்.
முரியல் - முரியப்பெற்றது.
முருகன்-குமாரக்கடவுள், இளையோன், வெறியாட்டாளன்.
முருகியம் - குறிஞ்சிப்பறை.
முருகு- எலுமிச்சை, இளமை, வாசனை, அழகு, முருகக்கடவுள், விவாகம், விழா, கள், தேன், தெய்வத்தன்மை. (மதுரைக் ௬௮௧).
முருக்கு - முருக்கமரம்.
முருக்குதல் - அழித்தல், கொல்லல்.
முருங்கை - முருங்கைமரம்.
முருடர் - வேடர்.
முருடு - விறகு, மத்தளம், வாத்தியப்பொது, பெருங்குறடு.
முருந்து-வெண்மை, இறகின்முள், மரத்தினுட்குருத்து.
முலை - தனம்.
முல்லை - முல்லைமரம், காடுசார்ந்தஇடம், முல்லைக்கொடி, பெண்களின் கற்பு, வெற்றி, செவ்வழியாழ்த்திறங்களுளொன்று.
முல்லைப்பாட்டு - நப்பூதனார்பாடிய ஒரு நூல். (பத்துப்பாட்டிலடங்கியது).
முல்லையர் - முல்லைநிலமாக்கள். (இடையர்).
முழக்கம் - ஒலி.

முழக்கோல் - ஒருமுழநீளமுள்ள அளவு
முழங்கல் - ஒலித்தல். [கருவி.
முழந்தாள் (முழந்து) - முழங்கால்.
முழம் - இரண்டுசாண்கொண்ட அளவு.
முழல் - கழற்காய், கழற்கொடி.
முழவு - முரசு, தண்ணுமை, பறைப்பொது, குடமுழா.
முழவு எ - அகமுழவு அகப்புறமுழவு புறமுழவுபுறப்புறமுழவு பண்ணமை முழவு காலைமுழவு நாண்முழவு என்
முழுகுதல் - நீராடுதல். [பன.
முழுதும் - எல்லாம்.
முழுமகன் - அறிவிலான்.
முழை (முழைஞ்சு) - குகை.
முளரி- தாமரை, காடு, விறகு, கடைக்கொள்ளி, நெருப்பு, நுண்மை, முட்
முளவுமா - முட்பன்றி. [செடி.
முளிதல் - காய்தல்.
முளை- மகன், வித்துக்களின்முளை, மூங்கில், தண்டு, முளைக்கட்டை.
முளைத்தல் - வித்துக்கள்முளைத்தல், தோற்றுதல்.
முள்- மரங்களினதும் மீன்முதலியவைகளதும் முள், நுண்மை.
முள்கல் - மங்கையரைப்புணர்தல்.
முள்காந்திருத்தல்- குரங்கு முசுமுதலியன மரங்களிற்குந்தியிருத்தல்.
முள்ளி - முள்ளிச்செடி.
முறம் - சுளகு, விசாகநட்சத்திரம்.
முறி - தளிர், துண்டு, முறிப்பத்திரம், *சேரி.
முறுகல்- கோபமுற்றுதல், மருத்தெண்ணெய் முதலியவைகள் அளவுக்கதிகமாகக்காய்தல், கயிறுமுதலியன முறுகுதல், மீறுதல்.
முறுக்காணி - யாழினரம்புகளை இறுக்குமாணி. [க்கு.
முறுக்கு - கயிறு முதலியவற்றின் முறு
முறுவலித்தல் - சிரித்தல்.
முறுவல் - சிரிப்பு, பல்.
முறை - கிரமம், புத்தகம், ஊழ், ஒழுக்கம், குணம், நீதி.
முறையிடுதல்- சிறியோர் தமக்குநேர்ந்த குறையைப்பெரியோர்க்குச் சொல்லு
முறையிலார் - கீழ்மக்கள். [தல்.
முற்கம் - பயறு.
முற்கரம் - ஓராயுதம்.
முற்கலன் - ஒருமுனிவர்.
முற்குளம் - பூராடம்.
முற்கொழுங்கோல்- பூரட்டாதிநட்சத்தி
முற்படல் - முந்துதல். [ரம்.
முற்பா - வெண்பா.
முற்ற - எல்லாம்.
முற்றம் - முன்றில்.
முற்றல் - முடிதல், காய்முதலியனமுற்றுதல், வைரங்கொள்ளுதல், சூழுதல், முதுமையாதல், தங்குதல்.
முற்றில்- சிறுமுறம், முற்றம், விசாகநட்
முற்றிழை - பெண். [சத்திரம்.
முற்று - முழுதானது. (முற்றியலுகரம் முற்றாய்தம் என்பவற்றில் ஓசைகுன்றாமையைக்குறிக்கும்), முடிவு, வினைமுற்று.
முற்றுகை - கோட்டையைப் புறத்தேவளைந்துபோர்முயன்றுநிற்றல், முடிதல்.
முற்றும் - எல்லாம்.
முனி- அகத்திமரம், முனிவன், (விருப்பு வெறுப்பு முதலியன இல்லாதவன்), வில், யானைக்கன்று.
முனிதல் - சினங்கொள்ளல்.
முனிவர் - இருடிகள்.
முனிவர் எழுவர் - மரீசி அத்திரி வசிட்டர் அங்கிரா புலத்தியர் புலகர் கிரது என்பவர்கள்.

அகத்தியர் புலத்தியர் அங்கிரா கௌதமர் வசிட்டர் காசிபர் மார்க்கண்டேயர் என்பர் சிலர்; அத்திரி அங்கிரா கௌதமர்சமதக்கினி பரத்துவாசர் வசிட்டர் விசுவாமித்திரர் என்பாருமு
முனிவு- கோபம், வெறுப்பு. [ளர்.
முனீந்திரன் - புத்தன், முனிசிரேட்டன்.
முனை - நுனி, பகைப்புலம், வெறுப்பு, வினை, தவம். (சிந்தா).
முனைதல்- எதிர்த்தல், பெருங்கோபமுறுதல், வெறுத்தல்.
முனைப்பதி - பாடிவீடு.
முனையடுவார் - சுரு தொண்டர்களுளொருவர்.
முனையிடம் - பாலைநிலத்தூர்.
முனைவர் - முனிவர்.
முனைவன் - அருகக்கடவுள்.
முனைவு - வெறுப்பு, விரோதம்.
முன் - முன்னிலை, முற்காலம், பழமை, தொடக்கம், ஏழனுருபு.

முன்சொல் - மூதுரை. [ள்.
முன்பனிக்காலம்- மார்கழி தைமாதங்க
முன்பன் - முதல்வன்.
முன்பு - வலிமை.
முன்றானை - உடுக்கும்போது முன்னே விடப்படும் வஸ்திரத்தலைப்பு.
முன்றில் - இல்லத்தின்முகப்பு.
முன்னடைப்பன் - பசுமுதலியமிருகங்களுக்குவரும்ஓர்நோய்.
முன்னம் - மனம், மனக்குறிப்பு, சீக்கிரம், முற்காலம்.
முன்னர் - முன்.
முன்னல் - நினைத்தல், நெஞ்சு.
முன்னவள் - மூதேவி.
முன்னவன்(முன்னோன்) - தமையன், முதல்வன், கடவுள், அருகன், சிவன், விநாயகக்கடவுள், பழையவன், முதன்மந்திரி.
முன்னவிலக்கு- தண்டியலங்காரத்திற்கூறப்பட்ட அணிகளுளொன்று. (ஒருபொருளைக் குறிப்பினால் விலக்குவது).
முன்னிலை - சன்னிதி. மூவிடங்களிலொ
முன்னிளவல் - தமையன். [ன்று.
முன்னீடு - தலைமை.
முன்னோர் - மந்திரித்தலைவர்,முதியோர்.

## மூ

மூகம் - ஊமை, வறுமை.
மூகன் - ஊமை, வறியவன், ஒருஅசுரன்.
மூகை,மூங்கை - ஊமை.
மூக்கு - நாசி.
மூக்குத்தி-பெண்கள்மூக்கிலணியும்ஒருஆபரணம்.
மூங்கில் - மூங்கில்மரம்.
மூசல் - மூசுதல், மொய்த்தல்,சாதல்.
மூச்சு - சுவாசம். [எலி.
மூஞ்சூறு-கெட்டநாற்றமுள்ளஒருவகை
மூடம்-அறியாமை, துட்டத்தன்மை, சந்தேகம், எட்டுமரக்கால்கொண்டஓரளவை.
மூடர் - அறிவில்லாதவர்கள், படியாதவ
மூடல்-போர்த்தல், கவித்தல். [ர்கள்.
மூடி - பாத்திரமுதலியவற்றின்மூடி.
மூடிகம்(மூஷிகம்)-எலி, பெருச்சாளி.
மூடை(மூட்டை)-பொதி.
மூட்டல் - இசைத்தல், கோள்மூட்டுதல்.
மூட்டு- யாக்கையின்பொருத்து, கோள். *குதிரைக்கடிவாளம்.
மூட்டை - மூட்டுப்பூச்சி.
மூதணங்கு - காடுகாள்.
மூதா - இந்திரகோபம்.
மூதாதை - பாட்டன்.
மூதாளர் - முதியோர்.
மூதிரை-திருவாதிரைநட்சத்திரம், *சிவ
மூதுணர்வு - பேரறிவு, [ன்.
மூதுரை - பழமொழி,
மூதேவி - மூத்தாள்,
மூத்தல் - முதிர்தல்
மூத்தாள் - மூதேவி.
மூத்திரம்- சிறுநீர், [திரித்தலைவர்.
மூத்தோர் - முதியோர், பண்டிதர்; மந்
மூத்தோன்-தமையன், விநாயகக்கடவுள் வயசுமுதலியவற்றால் முதிர்ந்தோன்.
மூப்பு - முதுமை.
மூய்தல் - மூடுதல்.
மூரல் - சிரிப்பு, பல், சோறு.
மூரி - எருது, எருத்தின்முரிப்பு, இடபராசி, எருமை, வலிமை, பழமை, பெருமை, ஓலைமூரி, நெரிவு, சோம்பல், முரண்.
மூர்க்கநாயனார்-௬௩தொண்டர்களுளொருவர். [மை.
மூர்க்கம் - துட்டத்தன்மை, மூடத்தன்
மூர்க்கன் - துட்டன், மூடன், நாகபாம்பு.
மூர்ச்சை - அறிவுமயக்கம்.
மூர்த்தம் - உடல், தலை, உருவுடையது, உடலிற்பிரித்தறியப்படும் சிலம்பீர் முதலியவற்றின் அம்சங்கள்.
மூர்த்தி - உடல், உருவம், பிரதிமை.
மூர்த்திநாயனார் - ௬௩ தொண்டர்களுளொருவர்.
மூலகர்தம் - இருவேலிச்செடி.
மூலதனம்-வர்த்தகத்தின்முதற்பொருள்
மூலத்தானம்-கோயிலின்கர்ப்பக்கிருகம்
மூலத்திரிகோணம் - சிங்கம் இடபம்மேடம் கன்னி தனு துலாம். கும்பம் என முறையே சூரியன்முதலேழுகிரகங்களுக்குமுரியனவாகச் சோதிடத்திற்கூறப்பட்டஇராசிகள்.
மூலப்பிரகிருதி- பிரகிருதிதத்துவம். (இது பிந்தியதத்துவங்களெல்லாவற்றுக்கும்மூலமாதலின் மூலப்பிரகிருதியெனப்பெயர்பெற்றது)

மூலம் - ஆதி, காரணம், வேர், கிழங்கு, மூலநட்சத்திரம், மூலபாடம், மூலநோய், மரப்பொது.

மூலவல்லி - வெற்றிலைக்கொடி.

மூலாதாரம் - ஆறாதாரங்களுளொன்று. (நாபிக்கும்இலிங்கத்துக்குமிடையிலுள்ள ஓரிடம்; இதனைச்சரீரத்திலுள்ள நாடிகளெல்லாவற்றுக்கும் மூலமென்பர்).

மூலி(மூலிகை) - வேருடன்கூடிய மருந்துச்செடி.

மூலியம் - விலை.

மூலை - கோணம்

மூவறிவுயிர் - கறையான் எறும்பு முதலியன. (பரிசம் சுவை கந்தம் என்னும் மூன்றையுமறிவன).

மூவிலைவேல் - சூலம்,

மூவுலகுணர்க்தமூர்த்தி - அருகன்.

மூழி - குளம், சோறு, அகப்பை.

மூழிவாய் - பூப்பெட்டி.

மூழை - அகப்பை, சோறு, [ல்.

மூழ்கல் - அமிழ்ந்துதல், ஸ்நாகஞ்செய்த

மூளல் (மூளுதல்) - நெருப்புப்பற்றல், கோபமிகுதல்.

மூளி - காதற்றவன் அற்றவள் அற்றது.

மூளை - தலையினுள்ளிருக்கும்மூளை.

மூன்று - ஓரெண்.

## மெ

மெச்சல் - கொண்டாடல், துதித்தல், பு

மெட்டு - மேடு. [கழ்தல்.

மெதுக்கு - ஓர்கொடி.

மெத்தெனவு - மிருதுத்தன்மை.

மெத்தை - பஞ்சுமுதலியவற்றைப்பொதிந்துதைத்தபடுக்கை, சட்டை.

மெத்தைவீடு - மேல்வீடு.

மெய் - உண்மை அறிவு, (உ-ம்: மெய்யறந்து புற), உடல், ஒற்றெழுத்து.

மெய்கண்டார் - ஓர்சைவசித்தாந்தி, (சிவஞானபோதமென்னுஞ் சைவசித்தாந்தநூலாக்கியோன்).

மெய்காப்பாளர் - உற்றகாவற்காரர்.

மெய்க்கீர்த்திமாலை - அரசரது உண்மைக்கீர்த்தியைக்குறித்துப்பாடும்பாடல்.

மெய்க்குற்றம் ௰ - கொட்டாவி நெட்டைகுறுகுறுப்பு கூன்கிடை நட்டுவிழுதல் என்பன.

மெய்க்கூத்துரு - தேசிகம் வடுகு சிங்களம் என்பன.

மெய்த்தல் - உண்மைப்படுத்தல்.

மெய்ந்நூலாளன் - துரோணாசாரியர், உண்மைநூலுணர்ந்தோன்,

மெய்ப்பரிசம்அ - தட்டல் பற்றல் தடவல் தீண்டல் குத்தல் வெட்டல் கட்டல் ஊன்றல் என்பன.

மெய்ப்பாடு - குறிப்பைவெளிப்படுத்துந் தோற்றம், புகழ்.

மெய்ப்பு - புகழ்மொழி, உண்மையாதல்.

மெய்ப்பை - சட்டை.

மெய்ப்பொருளுயனார் - சுரு தொண்டர்களுளொருவர்.

மெய்ம்மறதி - அறிவுகெடுதல்.

மெய்ம்மை - உண்மை.

மெய்ம்மைவிரதன் - தருமபுத்திரர்.

மெய்யர் - முனிவர், பிராமணர், மெய்பேசுவோர்.

மெய்யன் - மகன், மெய்பேசுவோன்.

மெய்யுரை - விருத்தியுரை, உண்மைகூறுதல்.

மெய்யுறை - சட்டை.

மெருகு - ஆபரணமுதலியவைகளில் ஒளியுண்டாகும்படி அழுத்தித்தேய்த்தல்.

மெலிதல் - வாடுதல்.

மெலித்தல் - செய்யுளில் எதுகைமுதலியவற்றிற்காக வலலொற்றை மெல்லொற்றாய்வழங்குதல். மெலியச்செய்தல்.

மெலிவு - வாட்டம்.

மெல்கோல் - பற்கொம்பு.

மெல்லடை - அப்பவர்க்கம்.

மெல்லல் - மெல்லெனக்கடித்தல்.

மெல்லன் - நெய்தனிலத்தலைவன்.

மெல்லி - பெண்.

மெல்லியல் - பெண், மரத்தினிளங்கொம்பு.

மெல்லிலை - வெற்றிலைக்கொடி. [ம்பு.

மெல்லினம் - மெல்லொலியையுடைய எழுத்துக்கள். (ங ஞ ண ந ம ன என்பன).

மெல்லெனல் - மந்தக்குறிப்பு: மிருதுவாயிருத்தல்.

மெழுகல் - தீற்றுதல். [யிருத்தல்.

மெழுகு - அரக்கு.

மென்கணம் - மெல்லினம்.

மென்பால் - மருதநிலம். (மருதமும் நெய்தலுமெனப் புறநா).

மென்மை - மிருது.

## மே

மேகநாதம்- சிறுகீரை.
மேகநாதன்- இராவணனுடைய புத்திரனாகிய இந்திரசித்து.
மேகபுட்பம்- மழை.
மேகம்- முகில், மேகநோய்.
மேகலை-படி, இடைக்கட்டு, பெண்கள் அரையிற்றரிக்கும்ஏழுகோவை மணி, பிரமசாரிக்கு உபநயன காலத்திற்றரிக்கப்படும் கடிசூத்திரம்.
மேகவாகனன்- இந்திரன்.
மேக்கு-மேற்குத்திக்கு, மேல்.
மேசகம் - குதிரைமயிர், மயிலின் விரிந்த தோகை, இருள், கருமை, மயிற்றோகைக்கண், *புகை, *மேகம்.
மேசை (பறங்கிச்சொல்) - நாற்காலிப்பீடம்,
மேடமாதம்- சித்திரைமாதம்.
மேடம்- ஆடு, ஆட்டுக்கடா, மேடராசி, செம்மறியாடு.
மேடு- திடர்,உயர்ச்சி,பெருமை, வயிறு.
மேடை-வேதிகை.
மேட்டிமை-அகந்தை.
மேட்டிரம்-ஆண்குறி.
மேதம்- கொலை.
மேதாவியர்- பண்டிதர், புத்தியுள்ளவர்.
மேதி- எருமை.
மேதிச்சென்னிமிதித்தாள்-துர்க்கை.
மேதினி- பூமி.
மேதினிபடைத்தோன்-பிரமா.
மேதை- பேரறிவு, அறிஞன், புதன், நிணம் (இதுமாமிசத்தினின்று தோன்றுவது), கள், நரம்பு.
மேதையர்- அறிஞர்கள்.
மேத்தியம்- சுத்தம்.
மேம்பாடு-மேன்மை.
மேயம்- அளவிடத்தக்கது, அறியத்தக்கது.
மேய்தல்- உண்ணுதல்.
மேய்ப்பன்- இடையன்.
மேரு- பொன்மலை (பூகோளத்தில் வடதுருவத்தைச் சார்ந்த பிரதேசங்களை மேருமலையென்பர்), சப மாலையில் மேலே கோக்கப்பட்டிருக்கும் மணி, கையிலாயின் செபிக்கும்போது தொடத்தகாத விரலிறைகள்.
மேருவில்லி- சிவன்.
மேலீடு-அதிகரிப்பு, ஓராபரணம்.
மேலுலகம்- சுவர்க்கலோகம், மேலேழுலகம்.
மேலுலகம் எ- பூலோகம் புவலோகம் சுவர்லோகம் மகலோகம் சனலோகம் தவலோகம் சத்தியலோகம் என்பன.
மேலோர்- அறிஞர், தேவர்.
மேல்- ஆகாயம், ஏழாம் வேற்றுமையுருபு, மேற்கு, மேலிடம், வருங்காலம், மேன்மை.
மேல்காற்று-கோடைக்காற்று.
மேல்வாய்- அண்ணம், ஒன்றுமுதலிய அபின்னவெண்கள்.
மேல்வீடு - மச்சுவீடு.
மேவலர்(மேவார்)- பகைவர்.
மேவல்-பொருந்துதல், கலத்தல், விரும்புதல்.
மேவு- ஆசை.
மேழகம்- ஆடு, கவசம், செம்மறியாட்டாண்.
மேழி -கலப்பை,கலப்பையின்கைப்பிடி,
மேழியர் - வேளாளர், மருதநிலமாக்கள்.
மேளம் - தவில், தவில்முதலியவாத்தியங்களின் கூட்டம்.
மேற்கட்டி - விதானம்.
மேற்கணக்கு - ஐம்பதுமுதல் ஐஞ்ஞூறீருகப் பாடிய அகவல் முதலியபாக்களால் தொகுக்கப்படும் நூல், மேல்வாயெண்.
மேற்கு - சூரியனத்தமிக்குந்திசை.
மேற்குலர் - அந்தணர்.
மேற்கோள் - முன்னோர்வழக்கு, உதாரணம், சனி.
மேனகை - ஓர்தேவதாசி.
மேனி - உடல், உருவம், நிறம்.
மேனிலை - மேன்மாடம், மேலானநிலை.
மேனை - மலையரசனுடையதேவி.
மேன்மக்கள் - பெரியோர்.
மேன்மை - மகிமை.

## மை

மை - அஞ்சனம், மலடு, எழுதும் மை, இருள், கருநிறம், குற்றம், செம்மறியாடு, வெள்ளாடு, மேடராசி, மேகம்.
மைசூர் - ஓர்தேசம்.
[மைதானம் - பெருவெளி].
மைதிலி - சீதாதேவி.
மைதுனம் - புணர்ச்சி.
மைத்தல் - ஒளிகெடுகல். (சிந்தா).

மைத்திரம் - சினேகம்.
மைத்திராவருணி - அகத்தியமுனிவர்.
மைத்திரி - சினேகம்.
மைத்திரேயன் - ஒருமுனிவர்.
மைத்துனள் - மனைவியுடன் அல்லது கணவனுடன்பிறந்தான், தாயின்சகோதரனின் புத்திரன், பிதாவின்சகோதரியின் புத்திரன், சகோதரியின்கணவன்.
மைத்துனி- மனைவியுடன்அல்லது கணவனுடன்பிறந்தாள், தாயின்சகோதரனின்புக்திரி, பிதாவின்சகோதரியின் புத்திரி, சகோதரன்மனைவி.
மைநாகம்- ஓர்மலை, (இதை இமயமலையின் புத்திரனென்பர்).
மைந்தன்- மகன், திண்ணியன், ஆடவன்.
மைந்து-வலிமை, மயக்கம், மறம், அழகு.
மைம்மா- பன்றி.
மைம்முகன்- முசு.
மைம்மை- மலடி.
மையம்- (மத்தியமென்பதன்றிரிபு) நடு.
மையல் - மயக்கம், ஆசை.

## மொ

மொக்கு- மரத்தின்கணு.
மொக்குள்- நீர்க்குமிழி, கொப்பூழ், பூவின் சிற்றரும்பு, கொப்புளம்.
மொசித்தல்-தின்னுதல்.
மொசுமொசுக்கை. ஓர்கொடி.
மொச்சை-ஓர்வகைப்பயறு.
[மொடு- இலாபம்]. [ளது.
மொட்டு- பூவரும்பு, குமிழ்த்த வடிவுள்
மொட்டை- கூரின்மை, முண்டிதம்.
மொண்டி-ஓர்வகைச்சாமை,
மொத்தம்-தொகை, பருப்பம்.
மொத்தல்(மொத்துதல்)-அடித்தல்.
மொத்தி - புடைப்பு.
மொத்து - அடி.
மொத்துணல் - அடிபடல்.
மொத்தை -பருத்தது.
மொந்தன் - வாழையினங்களுளொன்று.
மொந்தை- ஒருகட்பறை.
மொய்- கூட்டம், வலிமை, போர், போர்க்களம், யானை, வண்டு.
மொய்த்தல் - நெருங்கல்,
மொய்ம்பு - தோள், வலி.
மொய்யெனல் - மந்தக்குறிப்பு.

மொழி-சொல், பாஷை.
மொழிகூ- பழிகூறல் புகழ்கூறல் மெய்கூறல் என்பன.
மொழிதல்- சொல்லுதல்.
மொழிபெயர்த்தல் - ஒருபாஷையிலுள்ளதைவேறொருபாஷையில் மாற்றிவைத்தல்.
மொழிமை - மூதுரை,
மொள்ளல் - அள்ளுதல்.

## மோ

மோ - முன்னிலையசை.
மோகம்- ஆசைப்பெருக்கம், அஞ்ஞானம், விபரீதஞானம், மூர்ச்சை, ஐங்கணையவத்தைகளுள் முல்லையின் குணம். (அழுதலும் பிதற்றலும்).
மோகரம் - உக்கிரம்.
மோகர்-சித்திரகாரர் மயக்கமுடையோர்
மோகனம்-மயக்குந்தொழில். (இதுவசிய முதலியகருமங்களுள்ளும் சுசு கலைகளுள்ளுமொன்றும்).
மோகன் - மன்மதன், மயக்கமுடையோன்
மோகித்தல் - மயங்குதல். [ன்
மோகினி - திருமால் அசுரரையழித்தபோதும் தாருகவனத்திருடிகளை மயக்குதற்குச் சிவனுடன் போனபோதும்கொண்டபெண்ணுருவம்.
மோக்கம்(மோட்சம்) - முத்தி, விடுதல்.
மோசம் - தவறுபடுதல்.
மோசனம் - விடுதல்.
மோடி - காடுகாள். [ர்ச்சி.
மோடு - பெரியவுடல், வயிறு, மேடு, உய
மோதகம் - அபூபவர்க்கங்களுளொன்று.
மோதம் - ஓமமென்னுஞ்சரக்கு, சந்தோ
மோதல் - அடித்தல். [ஷம்.
மோதவம் - மணம்.
மோதனம் - சந்தோஷம்.
மோதிரம் - விரலணி.
மோத்தல் - முகத்தல்.
மோத்தை - வெள்ளாட்டுக்கடா, ஆடு.
மோய் - தாய்.
மோர் - தயிருடன்நீர்சேர்த்துக்கடைந்த
மோலி - முடி. [து.
மோவாய் - தாடி.
மோழல் - பன்றி.
மோழை - மடமை, கஞ்சி.
[மோறு - பொற்காசு.]
மோனை - செய்யுளின் அடிசீர்முதலியவற்றின்முதலெழுத் தொன்றிவரத்தொ

டுப்பது. (இது அடிமோனை இணைமோனை பொழிப்புமோனை ஒரூஉமோனை கூழைமோனை மேற்கதுவாய்மோனை கீழ்க்கதுவாய் மோனை முற்றுமோனை என எண்வகைபடும்).

## மௌ

மௌஞ்சி - முஞ்சமென்னும்புல்லால் திரிக்கப்பட்டு உபநயனஞ்செய்யும்போது மாணவகனது அரையிற்கட்டப்படுங்கயிறு.
மௌஞ்சிபந்தம் - உபநயனம்.
மௌட்டியம் - மூடத்தன்மை.
மௌத்திகம் - முத்து.
மௌலி (மவுலி) - முடி, ஆண்பான்மயிர்முடி, சடைமுடி.
மௌவல் - முல்லை, வனமல்லிகை.
மௌற்கலியன் - ஓர் முனிவர்.
மௌனம் (மவுனம், மோனம்) - பேசாதிருத்தல்.

## ய

யசமான் (எசமானன்) - யாகஞ்செய்விப்பவன், தலைவன், பெண்பாலில் யசமாட்டி), ஆன்மா.
யசனம் - யாகஞ்செய்தல், பூசித்தல்.
யசுர்வேதம் (எசுர்வேதம்) - இரண்டாம் வேதம் (இதுசுக்கிலயஜுஸ்கிருஷ்ணயஜுஸ்எனஇருபிரிவுகளையுடையது).
யசோதை - நந்தகோபன்மனைவி.
யஞ்ஞசூத்திரம் - யஞ்ஞோபவீதம். (பூணூல்).
யட்டி - அதிமதுரம், உருட்சியானதண்டு.
யதாக்கிரமம் - முறைப்படி.
யதார்த்தம் - உண்மை.
யதி - சன்னியாசி.
யது - ஓரரசன். (இவன் வம்சத்தவர் யாதவரெனப்பட்டார்; இவனுடையவம்சத்திற் கிருஷ்ணமூர்த்தியும் அவதரித்தார்).
யதேச்சை - தன்னிட்டம்.
யத்தினம் - முயற்சி, முயற்சியினால்வரும் ஆயாசம்.
யந்திரம் - எந்திரம். (௩௪ ம்பக்கத்திற் காண்க).
யமகண்டன் - தினந்தோறும்வருந் தீயகாலங்களுளொன்று. (இது ஒரு உபக்கிரகமெனப்படும்).
யமகம் - இயக்கம். (௬௬ ம் பக்கத்திற் காண்க).
யமகோடி - சோதிட சித்தாந்தங்களிற் சொல்லப்பட்ட ஒரு பட்டணம்.
யமம் - அடக்கம், தருமநூல் பதினெட்டில் ஒன்று, யோகாங்கங்களுளொன்று. (௬௬ ம்பக்கத்தில் இயமத்திற்பார்க்க).
யமளம் - இரட்டை.
யமன் - கூற்றுவன், சனி.
யமுனை - காளிந்திநதி.
யயாதி - சந்திரகுலத்தரசர்களிலொருவன்.
யயு - அசுவமேதக்குதிரை.
யவச்சாரம் - ஓர்வகையுப்பு. (வெடியுப்பு).
யவம் - நெல்லு, சோளரைநெல், நெல்லிடை, (ஒருஅங்குலத்தின் எட்டிலொன்று; யவை எனவும் வழங்கும்), கோதுமை.
யவனம் - ௫௬ தேசங்களுளொன்று.
யவனர் - சோனகர், கம்மாளர், சித்திரகாரர், யயாதியின்புத்திரனாகிய துர்வசுவின் வம்சத்திற்பிறந்தவர்கள்.
யவனன் - சோதிடசாஸ்திரபண்டிதரானவோர்புலவர்.
யவனிகை - திரைச்சீலை.
யவாகு - கஞ்சி.
யவ்வனம் (யௌவனம்) - இளமை.

## யா

யா (வினாவிடைச்சொல் - எவை, (இதிவிருந்து யாவன்முதலியபெயர்களுங் குறிப்புவினைகளும் யாங்குமுதலிய இடைச்சொற்களும் பிறக்கும்), அசைநிலையிடைச்சொல். (உ - ம்: யாபன்னிருவர்), ஒருமரம்.
யாகசாலை - வேள்விச்சாலை.
யாகசேனன் - ஓரரசன்.
யாகத்தம்பம் - வேள்வித்தூண்.
யாகம் - வேள்வி.
யாகம் ௫ - தேவயாகம்பிரமயாகம்பூதயாகம் பிதிர்யாகம் மானுடயாகம் என்பன.
யாகம் ௨௧ - அக்கினிஷ்டோமம் அத்தியக்கினிஷ்டோமம் உத்தியம் சோடசி வாஜபேயம் அதிராத்திரம் ஆப்தோர்யாமம் அக்கினியாதேயம் அக்கினிகோத்திரம் தரிசம் பூர்ணமாஸம் சாதுர்மாஸ்யம் நிரூடபசுபந்தம் சௌத்திராமணி அட்டகை பார்வணம் சிராத்தம் சிராவணி ஆக்கிரயணி சைத்திரி ஆஸ்வயுஜிஎன்பன. (இவற்றுள்முந்திய எழும் சோமயஞ்ஞமெனவும் இடையிலுள்ளஎழும் ஹவிர் யஞ்ஞமெனவும் ஈற்றிலுள்ள எழும்பாகயஞ்ஞமெனவும் கூறப்பட்டன).
யாக்கை - உடல், கட்டு.

யாக்கைக்குற்றம் கஅ-பசி அதிசயம் நினைப்பு பயம் கையறவு மூப்பு வியர்ப்பு நீர்வேட்டல் வேண்டல் வெகுளி மதம் சேசம் நோய் பிறப்பு இறப்பு உவகை உறக்கம் இன்பம்என்பன.
யாங்கு - எங்கே.
யாங்ஙனம் - எவ்விடத்தில், எப்படி.
யாசகம் - இரப்பு.
யாசகன் - இரப்போன்.
யாசனம் - யாசித்தல், யாகஞ்செய்வித்தல்.
யாசிதம் - யாசிக்கப்பட்டபொருள்.
யாசித்தல் - இரத்தல்
யாஞ்ஞவற்கியம் - ஒருஸ்மிருதி.
யாஞ்ஞவற்கியர் - ஒருமுனிவர்.
யாணர் - அழகு, புதுமை, நன்மை, புதியவருவாய், (பெரும் உ-அ), தச்சர்.
யாண்டு - எவ்விடத்து.
யாதீசாம்பதி - வருணன்.
யாதவர் - யதுவின்வம்சத்தவர்.
யாதவன் - கிருஷ்ணமூர்த்தி.
யாதனை - துன்பம், நரகவேதனை.
யாதுதானர் - இராக்கதர்.
யாத்தல் - கட்டுதல்.
யாத்திரை - பிரயாணம்.
யாபனம் - வீணாகக் காலத்தைப்போக்குதல்.
யாப்பருகலம் - யாப்பிலக்கணநூல்களுளொன்று.
யாப்பியம் - அதிகபாகம் மாற்றிக்கொள்ளத்தக்கதாயும் அற்பபாகம் மாற்ற இயலாத தாயுமிருக்கும் நோய்.
யாப்பு - கட்டுப்பாடு அல்லதுஉறுதி, *சூழ்ச்சி, செய்யுள், நூல்யாப்பு, (தொகுத்தல் விரித்தல் முதலியவற்றால் நூல்செய்யப்பெறுவது), தொண்ணூற்றாறுவகையான பிரபந்தம்.
பிரபந்தம் கூசு - சாதகம் பிள்ளைக்கவி பரணி கலம்பகம் அகப்பொருட் கோவை ஐந்திணைச்செய்யுள் வருக்கக் கோவை மும்மணிக்கோவை அங்கமாலை அட்டமங்கலம் அநுராகமாலை இரட்டைமணிமாலை இணைமணிமாலை நவமணிமாலை நான்மணிமாலை நாமமாலை பலசந்த மாலை பன்மணி மாலை மணிமாலை புகழ்ச்சிமாலை பெருமகிழ்ச்சிமாலை வருக்கமாலை மெய்க்கீர்த்திமாலை காப்புமாலை வேனின்மாலை வசந்தமாலை தாரகைமாலை உற்பவமாலை தானைமாலை மும்மணிமாலை தண்டகமாலை வீரவெட்சிமாலைவெற்றிக்கரந்தைமஞ்சரி போர்க்கெழுவஞ்சி வரலாற்றுவஞ்சி செருக்களவஞ்சி காஞ்சிமாலை நொச்சிமாலைஉழிஞைமாலை தும்பைமாலை வாகைமாலை வாதோரணமஞ்சரி எண்செய்யுள் தொகைநிலைச்செய்யுள் ஒலியலந்தாதி பதிற்றந்தாதி நூற்றந்தாதி உலா உலாமடல் வளமடல் ஒருபாவொருபது இருபாவிருபது ஆற்றுப்படை கண்படைநிலை துயிலெடைநிலை பெயரின்னிசை ஊரின்னிசை பெயர்நேரிசை ஊர்நேரிசை ஊர்வெண்பா விளக்குநிலை புறநிலை கடைநிலை கையறுநிலை தசாங்கப்பத்து தசாங்கத்தயல் அரசன்விருத்தம் நயனப்பத்து பயோதரப்பத்து பாதாதிகேசம் கேசாதிபாதம் அலங்காரபஞ்சகம் கைக்கிளை மங்கலவள்ளை தூது நாற்பது குழமகன் தாண்டகம் பதிகம் சதகம் செவியறிவுறூஉ வாயுறைவாழ்த்து புறநிலைவாழ்த்து பவனிக்காதல் குறத்திப்பாட்டு உழத்திப்பாட்டு ஊசல் எழுகூற்றிருக்கை கடிகைவெண்பா சின்னப்பூ விருத்தம் முதுகாஞ்சி இயன்மொழிவாழ்த்து பெருமங்கலம் பெருங்காப்பியம் சிறுகாப்பியம் என்பன.
யாமம் - சாமம், (ஏழரைநாழிகை), இரவின்மை இடையாமம்.
யாமளம் - இளமை, இரட்டை, ஒரு ஆகமம்.
யாமளை - காளி, பார்வதி.
யாமியம் - தெற்கு.
யாமினி - இராத்திரி.
யாமை - ஆமை.
யாம் - நாம்.
யாய் - தாய்.
யாவதும் - சிறிதும்.
யாவும் - எல்லாம்.
யார் - யாவர். (வினாவினைக்குறிப்புமுற்று).
யாழ - முன்னிலையசை.
யாழின்பகைநரம்பு ச - செம்பகை ஆர்ப்பு அதிர்வு கூடம் என்பன. (செம்பகை: தாழ்ந்தவிசை; ஆர்ப்பு: மாத்திரையிறந்தசுருதி; அதிர்வு: நரம்பைச்சிதறவுந்தல்; கூடம்: இசைசிறவாதது; மழுங்கிசை).
யாழ் - வீணை, மிதுனராசி, அச்சுவினிநட்

சத்திரம், திருவாதிரைநட்சத்திரம்.
யாழ்நரம்பின்வகை ச-இணை கிளை பகை நட்பு என்பன.
யாழ்ப்பாணம் - ஓர்தேசம்.
யாழ்மூரி - ஓர்வகைத்தேவாரம்.
யாழ்வகை ச - பேரியாழ் மகரயாழ் சகோடயாழ் செங்கோட்டியாழ் என்பன. (இவற்றிற்கு முறையே நரம்பு இருபத்தொன்றும் பதினேழும் பதினாறும் ஏழும் ஆம்).
யாழ்வல்லோர் - கந்தருவர்.
யாழ்வாசிக்கும்வகை அ - வார்தல் வடித்தல் உந்தல் உறழ்தல் உருட்டல் தெருட்டல் அள்ளல் பட்டடை என்பன.
யாளி - சிங்கம், யாளியென்னும்மிருகம்.
யாளியூர்தி - காளி, துர்க்கை.
யாறு - ஆறு. [வாகனம்.
யானம் - மரக்கலம், போதல், சிவிகை,
யானை - விலங்கினங்களுளொன்று.
யானைக்குருகு - சக்கரவாகப்பறவை.
யானைமீன் - பெருமீன்.
யானைமுகவற்கிளையோன் - வீரபத்திரக் கடவுள், குமரவேள்.
யானையின்மும்மதம் - கன்னமதம் கோசமதம் கரமதம் என்பன. (கைத்துளையிரண்டும் கன்னமிரண்டும் கோசமும் கண்ணிரண்டும் ஆக ஏழிடங்களாலவருதலின் ஏழெனவுங்கூறப்பட்டது).
யானையின்வகை ந - கிரிசரம் வனசரம் நதிசரம் என்பன.
யானைவஞ்சி - கொலைபுரிந்துதிரியும் யானையையடக்கியணைத்த அரசனது வீரத்தைவஞ்சிப்பாவாற்கூறுவது. (வாதோரணமஞ்சரியென்பர் சிலர்).

## யு

யுகம் - இரண்டு, நுகம், கிருதமுதலிய யுகங்கள், பூமி.
யுகம் ச - கிருதயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் கலியுகம் என்பன. (கிருதயுகம் கஎஉஅ000 வருடமுடையது. திரேதாயுகம் கஉகக௬000 வருடமுடையது. துவாபரயுகம் அ௬ச000 வருடமுடையது. கலியுகம் சங௨000 வருடமுடையது.
யுகளம் - இரண்டு.
யுகாதி - அருகன், யுகங்கள் தொடங்கிய தினங்களாகக்கருதப்படுஞ்சிராத்ததினங்கள், யுகத்தொடக்கம்.
யுகம்-கூடியது. (வேறொருசொல்லுடன் சேர்ந்துவரும்).
யுதிட்டிரன் - தருமபுத்திரர்.
யுத்தம் - போர், பொருத்தமானது.
யுத்தி - விவேகம், அனுமானம், பொருத்தம்.
யுவ - கூ0 வருடங்களுளொன்று. [ண்.
யுவதி-பதினாறுவயதுப்பெண், இளம்பெ
யுவராசன் - இளவரசன்.
யுவனாசுவன் - சூரியகுலத்தரசருளொருவன். (மாந்தாதாவின்பிதா).
யுவா - இளம்பிராயமுடையோன்.

## யூ

யூகம் - கருங்குரங்கு, பெண்குரங்கு, உட்பொருளைத் தன்னுள்ளே தர்க்கித்தறிதல், படைவகுப்பு, கவந்தம், கோட்டான், பேன், ஊகமென்னும்புல்.
யூகி - விவேகி.
யூகித்தல் - ஆராய்ந்தறிதல்.
யூகை - பேன்.
யூதநாதன் - இனத்தைக்காக்கும் யானை, (யானைக்கூட்டத்துக்குத் தலையானை).
யூதம் - யானைமுதலியவிலங்குகளுள் ஓரினத்தின்கூட்டம்.
யூதர் - ஓர்சாதியார்.
யூதிகை - முல்லைக்கொடி.
யூபத்தம்பம்-யாகப்பசுவைக்கட்டுந்தம்பம்
யூபம் - தலையற்றவுடல், வேள்வித்தூண், வெற்றித்தம்பம்.

## யோ

யோகசம் - இருபத்தெட்டாகமங்களுளொன்று.
யோகசித்திரை-பிரளயகாலத்தில்திருமால்செய்யும் யோகரூபமான நித்திரை.
யோகபட்டம் - யோகிகள் தரிக்கும்பட்டவஸ்திரம்.
யோகம் - கூட்டம், தியானம், விட்கம்பமுதலியயோகங்கள், உபாயம், உயர்ச்சி, மருந்து, (உ-ம்: யோகராத்திருகரம்), நற்பலன்கள் நிகழுதற்கேற்ற வாரமுதலியவற்றாலறியப்படுஞ் சுபாசுபயோகங்கள்.
யோகம் உஎ - விஷ்கம்பம் பிரீதி ஆயுஷ்

மான் சௌபாக்கியம் சோபனம் அதிகண்டம் சுகர்மம் திருதி சூலம் கண்டம் விருத்தி துருவம் வியாகாதம் அர்ஷணம் வச்சிரம் சித்தி வியதிபாதம் வரீயான் பரிகம் சிவம் சித்தம் சாத்தியம் சுபம் சுப்பிரம் பிராமியம் மாகேந்திரம் வைதிருதி என்பன.

யோகரூடி-காரணவிடுகுறிப்பெயர், (பங்கயமென்பது சேற்றிற்பிறத்தலாற் குமுதமுதலியபலவற்றிற்குஞ் செல்லுமாயினும் இடுகுறியால் தாமரைக்கு மாத்திரம் வழங்குதல்போல).

யோகர் - முனிவர்.

யோகாங்கம் அ - இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்பன.

யோகாசாரம்-பௌத்தமத விகற்பங்களுளொன்று.

யோகி-அருகன், யோகஞ்சாதிப்போன். சிவன், ஐயனர்.

யோகினி-காளி, காளியேவல்செய்வாள், ஒருதுர்த்தேவதை.

யோக்கியதை - தகுதி, நல்லொழுக்கம்.

யோக்கியம் - நன்னடை, தகுதி.

யோக்கியன் - நன்னடையுடையோன், தகுதியுடையோன்.

யோசனகந்தி - வியாசமுனிவரின் தாய்.

யோசனை - தூரவளவையிலொன்று. (ஐந்நூறு மனுக்குச் சற்றதிகமானது; நான்குகாதமெனவும் நான்குநாளிகை வழியெனவும் எழுநாழிகைவழியெனவும்நான்குகுரோசமெனவும் பலவாறு கூறுவரெனச் சிந்தாமணிவிசேடக்குறிப்பில்).

யோசித்தல் - ஆராய்தல், ஆலோசித்தல், கூட்டுதல்.

யோனி - பெண்குறி, பிறப்பு.

## யௌ

யௌவனம் (யவ்வனம், எவ்வனம்) - இளமை.

## ரி

ரிஷிதீர்த்தம் - இருகனிட்டவிரல்களினதும்இடையினுல் விடப்படுந் தீர்த்தம்.

## ரு

ருதிரோற்காரி - அறுபது வருடங்களுளொன்று.

## வ

வகித்தல் - சுமத்தல்.

வகிர் - பிளவு, வழி.

வகிர்தல் - பிரித்தல்.

வகுணி - ஒலி.

வகுத்தல் - சொல்லுதல், வகைப்படுத்துதல்.

வகுந்து - வழி.

வகுப்பு-தொகுதியாயுள்ளதைப் பலகூறுக வகைப்படுத்துதல். அழகு, வண்ணம், (இசைப்பரட்டின் வகையுளொன்று).

வகுளம் - மகிழமரம்.

வகை - கூறுபாடு, உபாயம், *இடம்.

வகையுளிசேர்தல் - ஒருசொல் ஒருசீரினீற்றிலும் அடுத்தசீரின் முதலிலுமாய்ப்பிரிவது.

[வணக்கம் - பலவிதமாய் விரித்துப்பேசல்].

வக்கபாகை - ஓரூர்.

வக்கிரதந்தம் - வளைந்துபுறப்பட்டபல்.

வக்கிரம் - கொடுமை, மீளுதல், கிரகங்களின்வக்கிரம், வளைவு, வட்டம், பொருமை.

வக்கிரன் - சனி, செவ்வாய், இடைவள்ளலெழுவரிலொருவன். (இவனைத்தந்தவக்கிரனெனவுங்கூறுவர்).

வக்கிராங்கம்-அன்னம், வளைந்த அவயவம்.

[வக்கு- சாந்துமுதலியவற்றைத்துவைத்தற்காயமைக்குந்தொட்டி].

வங்கம் - ஈயம், டுசு தேசங்களுளொன்று, (வங்காளம்), பதினெண்பாஷைகளுளொன்று, மரக்கலம், வெள்ளி, கத்தரிச்செடி.

வங்கர் - சண்டாளர்.

வங்காரம்-உலோகக்கட்டி.

வங்கியம் - இன்னிசைக்குழல், (வேய்ங்குழல்).

வங்கு - அளை, காற்று, மலைமுழை.

வங்கூழ் - காற்று.

வசதி - நல்லிடம், ஊர், வீடு.

வசந்தமண்டபம்-வேனிற்காலத்திற் சுகத்துக்காகப்போய்த்தங்கும்படியமைக்கப்படும் மண்டபம்.

வசந்தமாலை-வசந்தகாலத்தைச் சிறப்பித்துப்பாடும் பிரபந்தம்.

வசந்தம்-இளவேனில், தென்றற்காற்று, வாசனை, சல்லாபம்.

வசந்தன்- மன்மதன், தென்றல்.

வசந்திகை - தேமல்.

வசம் - அமைவு, கீழ்ப்படிவு.
வசம்பு - ஓர்வகைச்சரக்கு.
வசலி - துட்டை.
வசனம்- வார்த்தை, தருமநூல்களில் விதிநிஷேதமுதலியவற்றைக் கூறும் வசனம், வஸ்திரம், வீடு.
வசி - ஆயுதங்களின்கூர்மை, வசியம், வாள், உடற்றழும்பு. மழை, பிளப்பு, (மலைபடு) ௩௦௩.
வசிட்டன்- ஓரிருடி.
வசித்தல் - இருத்தல், பேசுதல்.
வசித்துவம் - எண்வகைச்சித்திகளுளொன்று. (யாவரும்வசப்படசிற்றல்).
வசியம் - வசமாதல். (மாந்திரிகருடைய எண்வகைக்கருமங்களுளொன்று).
வசிவு - வளைவு, பிளப்பு.
வசீகரணம் - வசப்படுத்துதல்.
வசு- அட்டவசுக்கள், அக்கினி, பொன், பசவின்கன்று, திரவியம், இரத்தினம்.
வசுக்கணாள் - அவிட்டநட்சத்திரம்.
வசுக்கள் எண்மர்- தரன் துருவன் சோமன் ஆபன் அனிலன் அனலன் பிரத்தியூஷன் பிரபாசன் என்பவர்கள் (ஹேமா விரதகன்).
வசுதாதிபன் - அரசன். [தும் பிதா.
வசுதேவன் - பலராமரதும் கிருஷ்ணர
வசுதை
வசுந்தரை } பூமி.
வசுமதி
வசுவாசி - ஓர்சரக்கு. (சாதிக்காய் வித்தைச்சூழ்ந்திருப்பது).
வசூரி - மசூரிகைநோய்.
வசை - அபவாதப்பேச்சு, குற்றம், பசு, மலட்டுப்பசு, *கன்னிகை, நிணம்.
வசைதல் - வளைதல்.
வச்சயம் - கலைமான்.
வச்சிரதந்தி- ஓர்புழு, (கங் மகாசாத்), எலி, பன்றி.
வச்சிரதரன்
வச்சிரபாணி } இந்திரன்.
வச்சிரம் - வச்சிராயுதம், (குலிசம்), சதுரக்கள்ளி, வைரரத்தினம், ஓர்பசை, எஃகு, உஎ யோகங்களுளொன்று.
வச்சிரவல்லி - பிரண்டைக்கொடி.
வச்சிரவாகு - சூரபன்மனது புதல்வருளொருவன்.
வச்சிராங்கம் - சதுரக்கள்ளி.
வஞ்சகம் - கபடம், பொய்.
வஞ்சகன் - கபடமுடையோன்.
வஞ்சப்பெண் - காளியேவல்செய்வாருளொருத்தி.
வஞ்சம் - கபடம், கொடுமை, வாள், பொய்.
வஞ்சனை - தெய்வப்பெண், பொய், கபடம்.
வஞ்சி - வஞ்சிக்கொடி, பகைவர்மேற்செல்லுதல், பகைவர்மேற்செல்வோர் புனையுமாலை, பெண், கருவூர், சேரராசனுடைய ராசதானி, வஞ்சிப்பா, மருதயாழ்த்திறங்களுளொன்று.
வஞ்சித்தல் - வஞ்சனைசெய்தல்.
வஞ்சித்தளை - கனி நிழலென்னும் வாய்பாடுகளின் பின் நேரசையேனும் நிரையசையேனும் வருவது.
வஞ்சித்தாழிசை - வஞ்சிப்பாவின் மூன்றனுளொன்று (இருசீரடிநான்குகொண்டதொருபொருண்மேன் மூன்றடுக்கிவருவது). [டது.
வஞ்சித்துறை- இருசீரடிநான்குகொண்
வஞ்சிப்பா-பெரும்பான்மைவஞ்சித்தளையுஞ் சிறுபான்மைபிறதளையுந் தழுவி இரண்டு அல்லது மூன்றுசீர்களையுடைய அடிகளைக் கொண்டு தனிச்சொற்பெற்று அகவற்சுரிதகத்தான் முடியும் பா.
வஞ்சிமாலை - பகைவர்மேற் போர்குறித்துச் செல்லுதலைக்குறித்து ஆசிரியப்பாவாற்பாடியது.
வஞ்சியுரிச்சீர் - கனிச்சீர்.
வஞ்சிவிருத்தம் - முச்சீரடிநான்குகொண்ட செய்யுள்.
வஞ்சிவேந்தன் - சேரன்.
வஞ்சினம் - சபதம்.
வஞ்சுளம் - அசோகமரம்.
வஞ்சுளன் - காரிப்பிள்ளை.
வடகம் - தோல், மேற்போர்வை, (உடைவிசேடமெனச்சிந்தா), அரைக்கப்பட்டகூட்டுவர்க்கங்களோடு சேர்த்துருட்டிக்காய்ச்சப்பட்ட சிலபொருள்கள்.
வடகலையார் - வைணவரிலொருபகுதியார்.
வடகாற்று - வாடைக்காற்று.

வடகிழக்கு - ஈசான திக்கு.
வடக்கு - உத்தரதிக்கு.
வடசொல் - ஆரியத்திலிருந்து தமிழில்
வந்துவழங்குஞ்சொல்.
வடந்தை - வடகாற்று.
வடமர் - பிராமணரிலொருபகுதியார்.
வடமலை - மேருமலை, இமயமலை.
வடமீன் - அருந்ததி.
வடமேற்கு - வாயுதிக்கு.
வடம்-ஆலமரம், கயிறு, மணிவடம், வில்
வடலி - இளம்பனை. [நாண்.
வடவாமுகம் - ஊழித்தீ.
வடவை - ஊழித்தீ, பிடியானை, பெண்
குதிரை, எருமை.
வடி - திருத்தம், தெளிவு, கயிறு: குதிரை
வாய்க்கயிறு, கூர்மை, கள். (கந்தே
வர்புலம் டு).
வடிக்கருவி - நூல்முறுக்குங்கருவி.
வடிதல் - நீர்முதலியன வடிதல், வற்று
தல், நீளுதல்.
வடித்தல் - நீர்முதலியனவற்றை வஸ்திர
முதலியவற்றால் வடித்தல், தெரிந்தெ
டுத்தல், வசமாக்கல், பயிற்றல் (சிந்
தா), சுட்டுவிரலும் பெருவிரலுங்கூட்
டி யாழ்நரம்பையுருவுதல், கூராக்கல்.
வடிவம் - உருவம்.
வடிவு - அழகு, உருவம்.
வடு-இளங்காய், குற்றம், உடற்றழும்பு,
பிரமசாரி, வசை, செம்பு, வண்டு.
வடுகன் - பிரமசாரி, வைரவக்கடவுள்.
வடுகன்றாய் - காடுகாள்.
வடுகி - துர்க்கை, காடுகாள்.
வடுகு - ஓர்சாதி, ஓர்தேசம், ஓர்வகைக்
கூத்து, ஓர்பாஷை. இந்தளராகம்.
(மருதயாழ்த்திறங்களுளொன்று.)
வடை - ஓர்சிற்றுண்டி.
வட்கல்-பொலிவுகெடுதல் அல்லது ஒளி
மழுங்கல், நாணுதல்.
வட்கார் - பகைவர்.
வட்டகை - சிறுகிண்ணம்.
வட்டணை-தாளம்போடல், வட்டவடிவு.
வட்டம்-பரிசை, (வட்டணம் எனவும்),
நீர்ச்சால், கைம்மணி, வஸ்திரம், பரி
வேடம், வட்டவடிவு, நீர்நிலை, சுழல்
படை, (வளைதடியெனப்பிங்), நாண
கத்தைமாற்றிக்கொடுப்போரெடுக்குங்
கழிவு, ஆலவட்டம், திரிகை, வாகு
வலயம், யானைச்செவியினடு.
வட்டாடல் - சூதாடுதல்.
வட்டி - பொருளைக் கடனாகக்கொடுத்து
வாங்கும்போது பெற்றுக்கொள்ளுமி
லாபம், நாளியென்னுமளவுகருவி, க
டகம். (புற).
வட்டிகை-கூடை, சித்திரம், நால்வகை
ச்சாந்திலொன்று.
வட்டித்தல்-வட்டமாதல், தாளம்போட
ல், சபதஞ்சொல்லல், சுழற்றுதல்.
வட்டில் - ஓர்வகைப்பாத்திரம்.
வட்டு - ஓர்செடி, சூதாடுதற்குரிய ஒருவ
கையுருண்டை, மரங்களின்வட்டு, தி
ரட்சி.
வட்டுடை - கச்சு, வஸ்திரம், முழங்கால
ளவாகஉடுக்கும் உடைவிசேடம். (ம
வட்டை - வழி. [ணிமே).
வணக்கம் - நமஸ்காரம், கீழ்ப்படிதல்.
வணங்கல் - பணிதல், வளைதல்.
வணங்காமுடியன் - துரியோதனன்.
வணத்தல் - வளைதல்.
வணர் - வளைவு.
வணிகர் - வைசியர்.
வணிசம் - எருது, வணிசக்கரணம்
வண்டர் - கடிலைகமாக்கள். [ட்டு.
வண்டல் - பொருக்கு, மகளிர்விளையா
வண்டன் - திண்ணியன்.
வண்டானம் - கொய்யடிநாரை.
வண்டி - பண்டி, வயிறு, பூசம்.
வண்டு - வண்டென்னும்பிராணி, சங்கு,
கைவளை, அம்பு, பூசநட்சத்திரம்,
குற்றம்.
வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா-கலி
ப்பாவகையுளொன்று. (ஒருதரவும்
மூன்றுதாழிசையும் அராகமும் அம்
போதரங்கமும் தனிச்சொல்லுஞ்சுரி
தகமுமாகியஆறுறுப்புக்களையும் ஒன்
றன்பின்ஒன்றாகக்கொண்டு வரு
வது).
வண்ணமகள் - பிறபெண்களுக்கு அலங்
காரஞ்செய்பவள்.
வண்ணம்-அழகு, நிறம், குணம், சந்தம்.
உருவம், முடுகியல், (இசைப்பாட்டு
விசேடமெனச் சிந்).
வண்மை - கொடை, உண்மை, வளம்,
புகழ், வலிமை, குணம்.
வதங்கல் - வாடுதல்.

வதந்தி - பேச்சு.
வதம் - கொலை.
வதரி- இலந்தை.
வதரிகாச்சிரமம் - வியாசமுனிவரிருந்த
வதனம்- முகம். [தபோவனம்.
வதி- வழி
வதிதல்- தங்குதல்.
வது- பெண், மணப்பெண், மனைவி.
வதுவை- விவாகம், வாசனை.
வதை- கொலை, [தேன்வதை].
வதைத்தல்- கொல்லுதல்.
வத்திரம்- முகம், வஸ்திரம்.
வத்து (வஸ்து)- பொருள். [திரம்.
வந்தனம் (வந்தனை)- வணக்கம், தோத்
வந்தி- மலடி, நட்டமறவிடுதல், மங்கல
பாடகன்.
வந்தித்தல்- துதித்தல். வணங்குதல்.
வந்து- காற்று.
வபனம்- மயிர்களைதல், விதைத்தல்.
வபு- உடல்.
வபை- நாபிக்குளிருக்கும் வெண்டுகில்
வப்பிரம்-ஈபம்,மதில் [போன்ற நிணம்.
வமனம்- சத்திசெய்தல்.
வமிசம் (வம்சம்)- குலம், மூங்கில்.
வம்பர்- அயலவர், புதியோர்.
வம்பலர்- விருந்தோர், அயலோர், பிரயா
ணஞ்செய்துவந்தோர்.
வம்பன்- சோரபுத்திரன்.
வம்பு- புதுமை, வாசனை, முலைக்கச்சு,
யானைக்கச்சு, நிலையின்மை, வஞ்ச
னை, கயிறு.
வய- (வயவு)- வலிமை, வெற்றி, வயா.
வயங்கல்- ஒளிசெய்தல்.
வயசு- வயது.
வயப்புலி (வயப்போத்து)- சிங்கம்.
வயமா- குதிரை, புலி, சிங்கம், யானை.
வயம்- வசம், வெற்றி, வலிமை, நீர், பற
வைப்பொது. முயல்.
வயல்- நெல்விளையும்வயல், வெளி.
வயவரி- புலி.
வயவர்- படைவீரர்.
வயவன்- திண்ணியன், வீரன், வலியா
னென்னும்பறவை, தலைவன், கரிக்
வயவை- வழி, கணவன். [குருவி.
[வயற்கோவியன்- ஓர்வகைநீர்ப்பாம்பு].
வயா (வயாவு) - ஆசை, கருப்பம், வருத்
தம், கருப்பவேதனை, கருப்பமாயிரு
க்குங்காலத்தில் நுகரப்படும்பொருள்
களில் உண்டாகும் ஆசை.
வயாப்பண்டம் - கருப்பவதி விரும்பும்
பொருள்.
வயானம் - பறவை, *தண்டாயும்.
வயிரம் (வைரம்) - வைரரத்தினம் மர
வைரம், நெடுங்காலமாகநிகழுங்கோ
பம். கூர்மை, வச்சிராயுதம், கொம்
புமுதலியவற்றிலிடும் பூண்.
வயிரியம் - மயிர்ப்படாம்.
வயிரியர் - கூத்தர், பாணர்.
வயிர் - ஊதுகொம்பு.
வயிறு - உதரம், நடு. [ல்.
வயிறுவளர்த்தல்-உணவுதேடிச் சீவித்த
வயிறுவாய்த்தல் - கருப்பமாதல்.
வயிற்றுளைவு - ஓர்நோய். [னுருபு.
வயின்-இடம், வயிறு, வீடு, முறை, ஏழ
வயோதிகன் - விருத்தன்.
வரகவி - தெய்வத்தினருளாற் கவி பாடு
வரகு- ஓர் தானியம். [வோன்.
வரகுணன்-சேரமான்பெருமாள் காலத்
தில் மதுரையிலரசுசெய்த பாண்டிய
வரட்சி - புலர்வு. [ன்.
வரட்சுண்டி - ஓர்செடி.
வரணம் - வரித்தல். (சிராத்தங்களிற் பி
திரர் முதலியோராகப் பிராமணர்க
ளை நியமித்துப்பூசித்தல் முதலியன).
வரதபண்டிதர் - யாழ்ப்பாணத்திற்சுன்னா
கப்பதியிலிருந்த ஒருபுலவர். (இவராற்
சிவராத்திரிபுராணம் ஏகாதசிப்புரா
ணம் முதலியன பாடப்பட்டன).
வரதம் - கொடை, வேண்டியவரங்க
ளைக்கொடுப்போமென்பதைக் குறித்
துங்கைக்குறி.
வரதன் - அருகன், திருமால், சிவன்,
விரும்பியவற்றைக் கொடுப்போன்.
வரத்து - வருகை.
வரநதி - கங்கை.
வரந்தருவான்- வில்லிபுத்தூராழ்வாரின்
புதல்வரான ஓர்புலவர்.
வரம்-கடவுள்முதலாயினோரிடத்துப்பெ
றவிரும்பியபொருள்கள், மேன்மை.
வரம்பு - அணை, எல்லை.
வரம்புளர் - வயல்.
வரருசி - பாணினிசூத்திரத்திற் வார்த்
திகஞ்செய்த காத்தியாயனரென்னும்
முனிவர், விக்கிரமாதித்தனதுசபை

யிலிருந்த ஒருபுலவர், கிரகங்களின் கதிகளை எளிதிக்கணிக்கத்தக்க வாக்கியங்களையியற்றிய புலவர்.

வரலாறு - முறை, குலமுறைமுதலிய பூர்வீகம்.

வரலாற்றுவஞ்சி - குலமுறை பிறப்புமுதலியமேம்பாடுகளையுங் கீர்த்தியையுங்குறித்து வஞ்சிப்பாவாற்பாடியபா
வரல் - வருதல். [டல்.

வரவு - வருகை, ஆதாயம்.

வராுதல் - உலர்தல்.

வரன் - கணவன். சிவன், பிரமா, அருகக்கடவுள், புத்தன்.

வரன்முறை - வரலாறு, ஊழ். [தல்.
வரன்றல் - கொழித்தல் அல்லது அரித்

வராகமிகிரர் - ஒரு சோதிடசித்தாந்தி. (இவராற் பிருகற்சங்கிதை பிருகற்சாதகம் என்னும் நூல்கள் செய்யப்பட்டன).

வராகம் - பன்றி, திருமாலினவதாரங்களுளொன்று, பதினெண்புராணங்களுளொன்று.

வராகன் - ஓர்நிறை, ஓர்பொற்காசு.

வராகி - இரசவாதிகளுடைய ஓர்மருந்து. (கந் மார்க்கண்டேய கரு).

வராடகம் - தாமரைக்காய்.

வராடி - பலகறை.

வரால் - ஓர்மீன்.

வரி - தேமல், எழுத்து, விரலிறை, இசைப்பாட்டு, கடல், வேற்றுநிறமான அடையாளம், (திருமுரு எஅ), நெல், குடியிறை, நிரை, வண்டு, நீளம், *உயர்வு, கடன்.

வரிசை - ஒழுங்கு, வெகுமானம்.

வரிட்டன் - மிகுந்தமகத்துவமுள்ளவன்.

வரிதல் - கட்டுதல்.

வரித்தல் - நியமித்தல், பூசுதல், எழுதுத
வரிப்புறம் - அணில். [ல், தடுத்தல்.

வரிவடிவு - எழுத்துக்களினுருவம்.

வரீயான் - உஎ யோகங்களுளொன்று.

வருகை - வரவு.

வருக்கக்கோவை - அகரமுதலாமெழுவருக்கங்களுள்ஒவ்வோரெழுத்தைமுறையேமுதலில்வைத்துப்பாடியபிரபந்தம்.

வருக்கமாலை - உயிர்வருக்கத்தேனும் கசதநபமவ என்னும் வழுயிர்மெய்வருக்கங்களிலேனும் அவ்வவ்வருக்கமுறையேபாடப்படுமெட்டுஆசிரியப்பா.

வருக்கமூலம் - வருக்கவெண்ணின் மூலமானவெண். (நான்குக்குஇரண்டும் ஒன்பதுக்கு மூன்றும் போல.)

வருக்கம் (வர்க்கம்) - இனம், குலம், கூட்டம், நூல்களின்பிரிவு, சோதிடத்தில் இலக்கினத்தை ஆறாக அல்லது பத்தாகப்பிரித்துக்காணப்படும்வருக்கங்கள்

வருக்கம் ௬ - இலக்கினம் ஓரை திரேக்காணம் நவாம்சம் துவாதசாம்சம் திரிம்சாம்சம் என்பன.

வருக்கம் ௧0 - இலக்கினம் ஓரை திரேக்காணம் சப்தாம்சம் நவாம்சம் தசாம்சம் துவாதசாம்சம் சோடசாம்சம் திரிம்சாம்சம் ஷஷ்டியம்சம் என்பன.

வருக்கை - பலா, பலாவிலோர்சாதி.

வருடம் (வர்ஷம்) - ஆண்டு, மழை, கண்டம்

வருடம் ௬0 - பிரபவ விபவ சுக்கில பிரமோதூத பிரசோற்பத்தி ஆங்கிரச ஸ்ரீமுக பவ யுவ தாது ஈசுவர வெகுதானிய பிரமாதி விக்கிரம விஷு சித்திரபானு சுபானு தாரண பார்த்திவ விய சர்வசித்து சர்வதாரி விரோதி விகிர்தி கர நந்தன விஜய ஜய மன்மத துன்முகி ஏவிளம்பி விளம்பி விகாரி சார்வரி பிலவ சுபகிருது சோபகிருது குரோதி விசுவாவசு பராபவ பிலவங்க கீலக சௌமிய சாதாரண விரோதிகிருது பரிதாபி பிரமாதீச ஆனந்த ராக்ஷத நள பிங்கள காலயுத்தி சித்தார்த்தி ரௌத்திரி துன்மதி துந்துபி ருதிரோற்காரி ரத்தாக்ஷி குரோதன அக்ஷய என்பன. (இவற்றுட்சில வடமொழிப்பெயர்களின்விரிபாயுள்ளன; திரிபின்றி வழ
வருடல் - தடவுதல். [ங்குவர் சிலர்).

வருடை - ஆடு, வரையாடு, எண்காற்புள்,
வருட்டல் - வற்புறுத்தல். [மேடராசி.

வருணம் - சாதி, நிறம், *நீர், எழுத்து.

வருணநாள் - சதயநட்சத்திரம்.

வருணனை - பலபடப்புனைந்துகூறல்.

வருணன் - சமுத்திரராசன், நீர்.

வருத்தம் - துன்பம்.

வருத்தனம் - பெருக்குதல்.

வருந்தல் - துன்பப்படுதல்.

வருபுனல் - யாறு.

வருமதி - வரவேண்டியபொருள்.
வருமொழி-நிலைமொழிக்குப்பின்மொழி.
வருவாய் - வரவுக்கான வது.
வருதினி - சேனை.
வரை - மலை, அளவு, மூங்கில், விரலி றை. நீர்க்கரை, வரம்பு, வரைவு. எழுத்து.
வரைகோல். வரைசம்பு. (மரவினையாளர்கருவிகளிலொன்று)
வரைதல்-எழுதுதல், சித்திரந்தீட்டல், உரிமையாக்கிக்கொள்ளல், விவாகஞ்செய்தல், கூறுபடுத்தல், நீக்கல், அளவிடல்.
வரைபகவெறிந்தோன்- குமரவேள்.
வரைப்பு- எல்லை, மதில்.
வரையறை-அளவு, எல்லை.
வரைவின்மாது- வேசி. [நீக்கம்.
வரைவு- விவாகம், அளவு, எழுதுகை,
வர்க்கம்-வருக்கம்.
வர்க்கோத்தமம்-இராசிகளில்சட்வர்க்கங்களாற் சுபமுடையனவாயமைந்த அம் [சம்.
வர்ச்சனம்-விலக்குதல்.
வர்ச்சியம்- விலக்கத்தக்கது.
வர்த்தகம்- வியாபாரம்.
வர்த்தமானம்- நிகழ்ச்சி, பெருகுகை.
வர்த்தனி-துடைப்பம்-கரகம்.
வர்த்தி-திரி, இரத்தினங்களைப்பதிக்கும்போது கீழ்வைக்கபடுந் தகடு, ஊது
வர்த்துலம் - வட்டவடிவு. [வர்த்தி.
வர்மம்- வன்மம், சட்டை.
வர்ஷருது-கார்காலம்.
வலக்காரம்-பொய்.
வலசை- கூட்டம்.
வலசைவாங்கல்-சேனைமுதலியன கூட்டத்தோடு பிற்பட்டுப்போதல்.
வலத்தல்- நிணத்தல் நிக ௬ உ அ. சூழ்தல். கட்டுதல், சொல்லுதல்.
வலம்-வலப்பக்கம், இடம், வெற்றி, வலி, ஏழனுருபு.
வலம்புரி - வலமுறுக்குள்ளசங்கு, (இடம்புரியாயிரஞ் சூழ்ந்தது) நந்தியாவர்த்தச்செடி, பெண்களின் தலைக்கோலங்களுளொன்று. [க்கடகம்.
வலயம்(வளையம்)-வட்டம், நீர்நிலை, கை
வலவன்- தேர்ப்பாகன், விஷ்ணு, வெற்றியாளன் [வல்லவன்.
வலவை- காளி, காளியேவல்செய்வாள்,
வலன்-ஓரசுரன், வலப்பக்கம், வலி, வெற் [றி.
வலாகம், கொக்கு, மேகம்.
வலாரி- இந்திரன்.
வலாற்காரம்-குறும்பு.
வலி- பற்றிரும்பு, வல்லமை, ஒருநோய், *ஒலி, *கபடம், நறுவிலிமரம், குணவலங்காரம் பத்தனுளொன்று, (தொகைச்சொற் றொடர்த்திச் செய்யுள் தொடுப்பது).
வலிதல்-வலாற்காரஞ்செய்தல்.
வலித்தல்- வலாற்காரஞ்செய்தல், காய்தல், கொழுத்தல், இழுத்தல், மெல்லொற்றை வல்லொற்று யுச்சரித்தல், வளைத்தல், ஒரு கருமத்தை மனத்தில் நிச்சயித்தல். உடன்படல், சொல்லுதல் ( நி ௧௦ நு ).
வலிமுகம்- குரங்கு,
வலிமை- பலம், வலாற்காரம்.
வலியன்- (வலியான்), வல்லூறென்னும் பறவை, வலிமையுடையோன்.
வலை- மீன் முதலியனவற்றையகப்படுத்தும் வலை.
வலைஞர்- நெய்தனிலமாக்கள்.
வல்- சூதாடுகருவி, வலிமை, சீக்கிரம்.
வல்சி- சோறு, உணவு.
வல்மீகம். (வன்மீகம்)- புற்று.
வல்லகி- வீணை.
வல்லணங்கு-காளி, துர்க்கை.
வல்லபம்- வல்லமை. பிரியம்.
வல்லபன்- நாயகன், பிரியமுள்ளோன்.
வல்லபை-விநாயகருடைய சத்தி.
வல்லமை-சாமர்த்தியம்.
வல்லயம்- எறியீட்டி.
வல்லரி- இளந்தளிர், பசுங்காய்.
வல்லவன்-வலிமையுள்ளோன், நாயகன்
வல்வாரல்-ஓர்பூண்டு.
வல்லாரை-கேட்டைநட்சத்திரம்.
வல்லார்-மாட்டாதவர்.
வல்லாளன் - திருவண்ணாமலையிலிருந்த ஓரரசன். திண்ணியன்.
வல்லி - படர்கொடி, வள்ளிக்கொடி, இடைச்சேரி. பல்லி என்பதன் விகாரம்), பிரிதல், அளவு, கால்விலங்கு, பெண், கொல்லிமலை,
வல்லிகை- காதணிகளுளொன்று.
வல்லிசை-உரத்தவிசை.
வல்லியம்-புலி, கொல்லிமலை, இடைச்

சேரி, (பல்லியமென்பதன்விகாரம்)
வல்லினம்- வல்லெழுத்து. (க ச ட த ப ற என்பன).
வல்லு- சூதுவிளையாட்டு.
வல்லுனர்- வல்லோர்.
[வல்லுவம்- அடைப்பை, கைப்பை].
வல்லுளி- பன்றி.
வல்லூறு- ஓர் பறவை.
வல்லை-விரைவு, பெருங்காடு, காட்டுத் துருக்கம். வலிமை, வட்டம்.
வல்லொற்று-வல்லினமெய்.
வல்விலங்கு-யானை.
வவ்வல் (வவ்வுதல்)- கவர்தல்.
வழக்கம்- வழங்கிவருவது
வழக்கு- வழக்கம், வியாச்சியம்.
வழக்கு உ- உலகவழக்கு செய்யுள்வழக்கு என்பன.
வழங்கல்-கொடுத்தல், உலாவுதல், *பேசுதல், அசைதல், நடைபெறல்.
வழலை-ஓர்வகைப் பாம்பு, புண்ணினின் றும்வடியுஞ் சீ.
வழாநிலை-திணை பால் முதலியன வழுவா
வழாறு-நிறைபுனல். [துவழங்குதல்.
வழி-புத்திரர்கள், மார்க்கம், இடம், பின், முறைமை, பழமை, ஒழுக்கம், திரட்சி, ஏவல், (மதுரைக் கஅகூ) ஏழாம்வேற்றுமையுருபு.
வழிதல்-நீர்முதலியனமிஞ்சிச்சிந்துதல்.
வழித்தல்-பரந்துகிடக்கும்பொருள்களை ஓரிடத்திற் சேர்த்தற்காகத் தடவல்.
வழித்தெய்வம்-குலதெய்வம்.
வழித்தொண்டு - பாரம்பரியமாகச்செய்யும் அடிமைவேலை.
வழித்தோன்றல்- பிற்சந்ததியிற்பிறந்தவ
வழிநடை- பிரயாணம். [ன்.
வழிநூல் - முதனூலுக்குப்பின்றோன்றிய நூல்.
வழிபடல் - வணங்குதல்,பூசித்தல்.
வழிபார்த்தல் - வரவுகாத்திருத்தல்.
வழிப்படுதல் - இணங்குதல், அறநெறியிற்றவுறுதொழுகுதல்.
வழிமோனை - அடிகளிற்பலசீர்களின்முதலெழுத்தொன்றிவருவது.
வழியுரைப்போர் - தூதர்.
வழு - தவறு, கேடு, பாதகம்.
வழுக்கல் - இளநீரின்வழுக்கல்,இழுக்குறல், அடித்தல், வழுக்குதல்.
வழுக்கு - வழும்பு, மறதி, தவறு.
வழுதலை - கத்தரி.
வழுதி - பாண்டியன்.
வழுது - வைக்கோல்,பொய்.
வழுதுணை - கத்தரி.
வழுத்தல் - துதித்தல்.
வழுந்தல் - தோல்கிளம்புதல்.
வழும்பு - வழுக்கு, (ஈன்றபோதுவிலங்கின்குட்டிகளிற் பற்றியிருக்குமழுக்கும் அது போன்றனவும்). நிணம்,குற்றம்.
வழுவமைதி - திணைபாலிடமுதலியவற்றுள் ஒன்றற்குரியசொல் வேறொன்றற்குரியசொல்லோடு முடியினுந் தவறன்றென்று அமைத்துக்கொள்வது.
வழுவல்- இளநீரின்வழுக்கல், வழும்பு, நழுவுதல், தவறுபடுதல்.
வழுவை - யானை.
வழை - சுரபுன்னைமரம்.
வளப்பம் - செழுமை,கொழுப்பு.
வளமடல் - இரந்துகுறைபெறாத்தலைமகன் மடலேறுவதாக இன்னிசைக்கலிவெண்பாவால்கூ0 அல்லது எ0 அல்வது ௫0பாடுவது.
வளமை - பலபண்டங்களின்மாட்சிமை, கொழுப்பு.
வளமையர் - வேளாளர்.
வளம் (வளன்) - பலபண்டம், பதவி,அழகு, மாட்சிமை, வருவாய், கொழுப்பு, தகுதி.
வளர்த்தல் - வளருதல், விருத்தியாதல்.
வளர்த்தல் உணவுமுதலியவற்றைக்கொடுத்துப்போஷித்தல்.
வளர்பிறை - பூருவபக்கம்.
வளவன் - சோழன்.
வளவி - வீட்டிறப்பு.
வளவு - கொல்லை.
வளாகம் - இடம், சூழ்வு, திணைப்புனம்,
வளார் - இளங்கொம்பு. [பரப்பு.
வளாவல் - வளைவு, அளவளாவல்-
வளி - காற்று. சுழல்காற்று.
வளிசம் - தூண்டில்.
வளை -கைவளை, சங்கு, சக்கரப்படை, நுழைவளை, வளைதடி.
வளைதடி - ஓராயுதம்.
வளைதல் - சூழுதல்.
வளைத்தல் - வளையச்செய்தல், சூழ்தல், பொருள்களைக்கவர்தல்.

வளைபோழ்நர் - சங்கறுப்போர்.
வளையம் - தாமரைச்சுருள்.
வளையல் - கைவளை, வளைவுள்ளது,
வளையாபதி - ஓர் காப்பியம்.
வளைவு - நேர்மையற்றது.
வள் - காது, ஆயுதங்களின்கூர்மை, வாள், வலிமை, வளம், வகிர், பற்றிரும்பு, வார், பெருமை, (சிறுபா கஉகூ).
வள்ளம் - சவள்வலிப்பினால் நீரிலோடுகிற ஓடம், மரக்கால், கிண்ணம், நாழிகைவட்டில்.
வள்ளல் - கொடையாளி.
வள்ளன்மை - கொடை.
வள்ளி - கொடி, வள்ளிக்கொடி, முருகக்கடவுளின்தேவி, கைவளை, ஆபரணம்.
வள்ளித்தண்டை - பிரம்பாற்செய்தவட்டம்.
வள்ளிமணவாளன் - முருகக்கடவுள்
வள்ளியோன் - வரையாதுகொடுப்பவன்.
வள்ளூரம் - ஊன், பசுவினிறைச்சி.
வள்ளுவன் - அரசனுடைய கருமத்தலைவன், வருங்காரியஞ்சொல்வோன்.
வள்ளை - உலக்கைப்பாட்டு, ஓர் கொடி.
வறட்சுண்டி - ஓர் மரம்.
வறத்தல் - வற்றுதல்.
வறம் - வறுமை.
வறல் - சுள்ளி. (வெண்கிடையென்றாழ் வாடுவறல்போல; புற), உலர்தல்.
வறிஞர் - தரித்திரர்.
வறிது - குறைவு, சிறுமை, அறியாமை, வெறுமை, பயனில்சொல், இயலாமை.
வறுகுதல் - நகமுதலியவற்றாற் கீறுதல்.
வறுத்தல் - வரளச்செய்தல், பொரித்தல்.
வறுமை - தரித்திரம்.
வறையல் - பொரித்தகறிகள்.
வற்கடம் - வறுமை.
வற்கம் (வற்கரி) - குதிரைவாய்க்கயிறு, மரவுரி.
வற்கலம் (வற்கலை - மரவுரி.
வற்காலி - வெள்ளாடு.
வற்சம் - எருமை பசு என்னும் விலங்குகளின்கன்று.
வற்சரம் - வருடம்.
வற்சலம் - தயை, சிநேகம்.
வற்சலை - ஈன்றபசு.
வற்புறுத்தல் - உறுதிப்படுத்தல்.
வற்றல் - உலர்த்தப்பட்ட பொருள்கள், பொரியல், நீர்முதலியனவற்றுதல்.
வற்றுழை - கிழங்குக் கொடிவகைகளுளொன்று.
வனசந்தனம் - அகில்.
வனசம் - தாமரை.
வனசரர் - வேடர்.
வனதேவதை - காட்டுத்தெய்வம்.
வனபதி - பூவாமற்காய்க்குமரம். (அரசு முதலியன).
வனப்பு - அழகு, செய்யுளின்வனப்பு.
வனப்பு அ - அம்மை அழகு தொன்மை தோல் விருந்து இயைபு புலன் இழைபு என்பன. (இவை செய்யுட்குரியன).
வனமல்லிகை - காட்டுமல்லிகைச்செடி.
வனமாலி - திருமால்.
வனம் - ஊர்சூழ்சோலை, காடு, துளசி, நீர், மிகுதி, சுடுகாடு, சோலை, வழி.
வனிதை - பெண்.
வனைதல் - அலங்கரித்தல், செய்தல்.
வன்கட்பிணா - மறத்தி.
வன்கணம் - வல்லினவெழுத்து.
வன்கண்மை - தறுகண்மை, வீரம்.
வன்பால் - குறிஞ்சிநிலம், பாலைநிலம், (குறிஞ்சியு முல்லையுமெனப் புறநா).
வன்பூல் - புறவைரமுள்ள தென்னை கமுகு பனை முதலியன.
வன்புறை - வற்புறுத்தல்.
வன்பொறை - பெரும்பாரம், சகித்தற்கியலாத துன்பமுதலியவற்றை அரிதிற் சகித்திருத்தல்.
வன்மம் - வைராக்கியம், கவ்சம்.
வன்மரம் - அகக்காழுள்ளமரம்.
வன்மனம் - இரக்கமற்றமனம்.
வன்மீகம் - புற்று.
வன்மீன் - முதலை.
வன்மை - வலிமை, மனக்குறிப்பு.
வன்னம் - நிறம், எழுத்து.
வன்னி - வன்னிமரம், அக்கினி, பிரமசாரி, கிளி.
வன்னிமை - வன்னியருக்குரிய மேன்மை.
வன்னியர் - ஓர் சாதியார்.
வஸ்திரம் - புடைவை.

## வா

வாககன் - சுமப்பவன்.
வாகடம் - வைத்தியநூல்.
வாகம் - குதிரை, வாகனம்.

வாகனம் - ஏறிநடத்தப்படுபவை.
வாகியம் - வெளி.
வாகினி - நதி, சேனை, சேனைத்தொகையிலொன்று. (சேனைத்தொகையிற் பார்க்க).
வாகீசன்-பிரமா, திருநாவுக்கரசர், வியாழன், சைவாக்கினிகாரியத்திற் சொல்லப்பட்ட வாகீசுவரரென்னுந் தேவதை.
வாகு - அழகு, புயம்.
வாகுலேயன் - முருகக்கடவுள்.
வாகுவலயம் - தோளணி.
வாகை-வாகைமரம், குணம், ஒழுக்கம், தவம், தொழில், கொடுத்தல், மிகுதி, படை வலி முதலியவற்றான்மிக்காரைப் போரில்வென்றவெற்றி, வெற்றிக்காயணியப்படும் (மாலைமுதலிய) விருது.
வாகைமாலை - மாற்றாரைவென்று வாகைமாலை சூடியதைக்குறித்து ஆசிரியப்பாவாற் பாடும் பிரபந்தம்.
வாக்காள் - சரசுவதி.
வாக்கி - அறமுதலிய நாற்பயன்களைவிரித்து எவரும் விரும்பக்கூறுவோன். (வாகவியெனினுமாம்).
வாக்கியம் - பயனிலையோடுகூடியசொற்றொடர்.
வாக்கு - சொல், ஒன்றுக்கொன்று வேற்றுமையான பார்வை, வாய், உதயலக்கினத்துக்கிரண்டாமிடம்.
வாக்குத்தத்தம்-வாக்குமூலமாய் வரனுக்குக் கன்னிகையைக்கொடுப்பதாக உறுதிப்படுத்துதல் முதலியன.
வாக்பதி - வியாழன்.
வாங்கல் - கொள்ளுதல், வளைவு.
[வாங்கு (பறங்கிச்சொல்) - ஓர்வகையாசனம்].
வாசகம் - வசனம்.
வாசநெய் - புனுகு.
வாசந்தி - குருக்கத்திமரம்.
வாசபேயம் - ஓர்வேள்வி.
வாசப்பொருள் ரு - ஏலம் தக்கோலம் இலவங்கம் சாதிக்காய் பச்சைக்கர்ப்பூரம் என்பன.
வாசம் - இருக்கை, இருப்பிடம், வஸ்திரம், வாசனை, பறவையினிறகு.
வாசவன் - இந்திரன்.
வாசனம் - படித்தல்.
வாசனை - சுகந்தம், தொடர்பு.
வாசாமகோசரம் - வாக்குக்கெட்டாமை.
வாசாலம் - வாக்குவன்மை.
வாசி - குதிரை, அச்சுவினிநட்சத்திரம், சுவாசம், நாணகங்களை மாற்றும்போது கழித்தெடுக்கும் வட்டம், (வட்டிக்கு மேலதிகமாய்க்கழித்தெடுக்குங் கழிவுபணமென்பர் சிலர்), இலாபத்துக்கேதுவான தொழில்முதலியன.
வாசிகம் - வாக்கினாலுண்டாகும் புண்ணியபாவங்கள்.
வாசிகை - கோத்தமாலை, சிகைமாலை.
வாசிசாலை - குதிரைப்பந்தி.
வாசிட்டம்- வசிட்டராற்சொல்லப்பட்ட தருமநூல், அவராற்சொல்லப்பட்ட யோகநூல்.
வாசிதம்- பறவைகளின்சத்தம், அழைப்பு.
வாசித்தல் - படித்தல்.
வாசுகி - அட்டநாகங்களுளொன்று.
வாசுதேவன் - திருமால், கிருஷ்ணர்.
வாசை - ஆடாதோடை.
வாச்சியம்-சொல்லப்படத்தக்கது, பறைமுதலியவாத்தியம்.
வாஞ்சித்தல் - ஆசைப்படுதல்.
வாஞ்சை - ஆசை.
வாடகை- வீடுமுதலியவற்றிற்குடியிருத்தல் முதலியவற்றுக்காகக்கொடுக்கும் பொருள்.
வாடல் - மெலிதல், உலர்ந்தபூ.
வாடாக்குறிஞ்சி - ஓர் மரம்.
[வாடாமல்லிகை - ஓர் பூச்செடி].
[வாடி - தங்குமிடம்].
[வாடிக்கை - வழக்கம்].
வாடை-வடகாற்று, தெரு, வீட்டிற்குடியிருப்பதற்காய்க்கொடுக்கும்பணம், கிரை, இடையர் முதலியவர்களிருக்குஞ்சேரி, பெண்களைவசப்படுத்தும் மருந்துவகைகளுளொன்று. (சிவராத்சுகுமா ககூச).
வாட்கோரை-ஓர்வகைப்புல். (கோரைப்புல்).
வாட்டம் - சோர்வு.
வாட்டுதல்-மெலிவித்தல், அழித்தல்.
வாணன் - ஓரசுரன், வாழ்வோன்.
வாணி - சரசுவதி, வசனம், ஓர்கூத்து.
வாணிகம் (வாணிச்சியம்) - வர்த்தகம்.
வாணிகன் - துலாராசி, வர்த்தகன்.
வாணிகேள்வன் - பிரமா.

வாதமடக்கி - ஓர்செடி.
வாதம்- இரும்புமுதலிய இழிந்தலோகங்களைப் பொன்னுக்கும்வித்தை, காற்று, வாதநோய், தருக்கம்.
வாதராயணன் - வியாசமுனிவர்.
வாதனம் - மிருதங்கமுதலிய வாத்தியங்களில் ஒலிபிறப்பித்தல்.
வாதனை - வருத்தம்.
வாதாயனம் - பலகணி. (சுவர்களிற்காற்றுவரும்படி விடப்பட்டிருக்குந் துவாரம்).
வாதாவி - ஓரசுரன், (அகத்தியமுனிவராற் கொல்லப்பட்டவன்).
வாதி - தருக்கிப்போன், வழக்காளி.
வாதித்தல் - தருக்கித்தல்.
வாதித்திரம் - வாத்தியக்கருவி.
வாது - வாய்ச்சண்டை.
வாதுமை - ஓர் மரம். [கர்.
வாதுவர் - குதிரைப்பாகர், யானைப்பா
வாதுளம் - சைவாகமங்களுளொன்று.
வாதூலன்- வாதரோகி, உன்மத்தன்.
வாதை - உபத்திரவம்.
வாத்தியங்களை வாசிக்கும்வகை ௩ - கீதானுகம் கிருத்தானுகம் உபயானுகம் என்பன.
வாத்தியம் - தோற்கருவியாகிய இசைக்கருவி. (சிறுபான்மை பிறகருவிகளுமாம்).
வாத்து - மனையெடுக்குநிலம், வீடு, வாத்துபுருடன். (நிலத்தின்தெய்வம்).
வாத்துசாந்தி - மனைக்குற்றங்கள் நீங்கும்படிசெய்யுஞ் சாந்தி.
வாந்தி - சத்தி.
வாமதேவன் - சிவன்.
வாமம் - குறுமை, அழகு, இடப்பக்கம், ஒளி, வாமசமயம், (கள் இறைச்சிமுதலியவற்றுடன் சத்திபூசைசெய்யுஞ்சமயம்), தொடை.
வாமனம்- குறள், திருமாலினவதாரங்களுளொன்று, தென்றிசையானை, பதினெண்புராணங்களுளொன்று.
வாமனர் - அகத்தியர்மாணுக்கருளொருவர்.
வாமனன் - குறியவடிவுடையவன், திருமால், திருமாலின் தசாவதாரங்களுளொன்று, பாணினிசூத்திரத்துக்குக் காசிகாவிருத்திசெய்தபண்டிதர்.
வாமன் - அருகன், புத்தன்.
வாயசம் - காக்கை.
வாயவியம் - எழுவகையானஸ்நானங்களுளொன்று. (பசுக்களுலாவும்போதெழுந்தூளியிற்படிதல்).
வாயிலாளர் -வாயிலிலிருந்துகாவல்செய்வோர், தமிழ்க்கூத்தர்.
வாயில்- கதவின்வாயில், துவாரம், வழி, ஐம்பொறி, காரணம். தூது.
வாயு - காற்று, சுவாசம், வாயுரோகம்.
வாயு எ - ஆவகன் பிரவகன் உத்வகன் சம்வகன் சுவகன் பரிவகன் பராவகன் என்பன; (இவை அண்டத்திற்சஞ்சரிப்பன; சிந்தா.
வாயு ௧௦ -பிராணன் அபானன்சமானன் உதானன் வியானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சயன் என்பன. (இவை உடலிற்சஞ்சரிப்பன).

இவற்றுட் பிராணன் இதயத்திற்றங்குவது; அபானன் குதத்திற்றங்குது; சமானன் நாபியினிற்பது; உதானன் கண்டத்தினிற்பது; வியானன் சரீரமுழுதும் வியாபித்திருப்பது; நாகன் பேசச்செய்வது; கூர்மன் கண்களைவிழிக்கச்செய்வது; கிருகரன் தும்மச்செய்வது; தேவதத்தன்கொட்டாவியையுண்டாக்குவது; தனஞ்சயன் உயிர்போனபின்னுமின்று தலைகிழிந்தபின்போவது.

வாயுசகன் - அக்கினி.
வாயுதிக்கு - வடமேற்கு.
[வாயுத்தவனி - காற்றுவீசுந்திசையைக் காட்டும் ஓர் கருவி].
வாயுமைந்தன் - அனுமன், வீமன்.
வாயுறை- வாயிற்கொடுக்குமுணவு, நல்லுபதேசம்.
வாயுறைவாழ்த்து-வெஞ்சொற்களாகத் தோன்றினும் பின்னர் நன்மை பயக்குமென வெண்பாமுதலு மாசிரியமிறுதியுமாகப்பாடிய கவிகள். [ல்.
வாயூறல்- வாயில்நீரூறுதல், ஆசைப்பட
வாய் - பேசுமுறுப்பு, உண்மை, ஊதுகுழல், இடம், துவாரம், வாயில், எழுனுருபு. [அரிசி.
வாய்க்கரிசி - பிரேதத்தின் வாயிலிடும்
வாய்க்கால் - நீரோடுங்கால், மகநட்சத்
வாய்ச்சி- மரம்வெட்டுமாயுதம். [திரம்.

வாய்த்தல் - பொருந்துதல், மாட்சிமையாதல், கிடைத்தல். [னுதி.
வாய்த்தாரை (வாதாரை) - ஆயுதங்கவி
வாய்பாடு - கணிதமுதலியவைகளைச்செய்தற்காகப் பாடமாக்கிவைத்திருக்குங்கணக்கு, செய்யுளின் அசை சீர் முதலியவற்றையுணர்த்தும் வாய்பாடு.
வாய்பூசறுத்தல் - போசனத்தின் பின் வாயைச் சுத்திசெய்தல்.
வாய்ப்பியர் - அகத்தியரின் மாணாக்கருளொருவர்.
வாய்ப்புள் - நன்னிமித்தம், மங்கலச்சொல். (முல்லை கஅ).
வாய்மலர்தல் - பேசுதல்.
வாய்மை - உண்மை, வலிமை.
வாய்வடம் - குதிரைவாய்க்கயிறு.
வாய்விடல் - பேசுதல்.
வாரணம் - கோழி, யானை, கவசம், சங்கு, கடல், தடை.
வாரம் - அன்பு, உரிமை, முறை, நீர்க்கரை, வரம்பு, மலைப்பக்கம், பட்சபாதம், பங்கு, கடல், ஏழுவாரங்கள்.
வாரம் எ - ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி என்பன.
வாராகி - சத்தமாதர்களிலொருதேவி.
வாராணசி - காசி.
[வாராவதி - பாலம்].
வாரி - கடல், நீர், கதவு, வழி, வெள்ளம், மதில், மதிற்சுற்று, வருவாய், வளம், யானைக்கூட்டம், இசைக்குழல், பகுதி, விளைவு, வாயில், கோபுரவாயில், யானைகளையகப்படுத்துமிடம், (மலைபடு ௫௭௨), செண்டு வெளி. (சிந்தா).
வாரிசம் - தாமரை.
வாரிதி - கடல்.
வாரித்தல் - தடுத்தல்.
வாரிராசி - கடல்.
வாரிருகம் - தாமரை.
வாரிவாகம் - மேகம்.
வாருணம் - மேற்குத்திக்கு, கடல், ஓர் மேகம், கள், சதயநட்சத்திரம்.
வாருணி - கள், மேற்குத்திக்கு.
வாருண்டம் - சரபப்பறவை.
வாருதல் - கவர்தல், அள்ளுதல், கொள்ளையிடல்.
வார் - கச்சு, தோல்வார், நீர், நீளம், நேர்மை, வகிர்.
வார்கடை - வார்ந்துதள்ளிய ஓலைமுதலியன.
வார்தல் - நீளுதல், நேரிதாதல், உயர்தல், மயிர் ஓலை முதலியவற்றை வகிர்தல், நீர்வடிதல், சுட்டுவிரலால் யாழ் நரம்பை முற்றுய்த்தடவல்.
வார்த்தல் - நீர்முதலியவற்றைச்சிந்துதல்.
வார்த்திகம் - கிழத்தன்மை, உரைவகையுளொன்று, (சூத்திரத்திற்சொல்லப்படாதவற்றையும்வெளிப்படுத்துவது).
வார்த்தை - வசனம்.
வாலகில்லியர் - பிரமாவின் மானசபுத்திரராகிய அறுபதினாயிரவிருடிகள்.
வாலதி - விலங்கின்வால்.
வாலவாயம் - வைடூரியம்.
வாலாமை - பெண்கள் பூப்பாயிருத்தல், சுத்தமின்மை.
வாலி - கிட்கிந்தையையாண்டு இராமசுவாமியாற்கொல்லப்பட்ட வானரவீர
வாலுகம் - வெண்மணல். [ன்.
வாலுங்கி - கக்கரிக்கொடி.
வாலுகம் - சமைபற்றெழில்.
வாலேயம் - கழுதை.
வாலை - கஉ வயதுப்பெண், பதினாறுவயதுப்பெண், ஓர் சத்தி.
வால் - சுத்தம், வெண்மை, விலங்கின் வால், மயில்முதலிய பறவைகளின் தோகை, மிகுதி, *பெருமை இளை
வால்மிளகு - ஓர்சரக்கு. [மை.
வால்வெள்ளி - ஓர்நட்சத்திரம்.
வாவல் - வாவற்பறவை, (வௌவால்), தாண்டுதல். [ய நீர்நிலை.
வாவி - குளம், நீண்டவடிவமானபெரி
வாவெனல் - அழைத்தல்.
வாழி (வாழிய) - வாழ்கவென்னும் பொருளைத்தரும்வியங்கோள். முன்னிலையசை, உடன்பாட்டுக்குறிப்பு, இகழ்ச்சிக்குறிப்பு. (திருக் நலம்புனைந்துரைத்தல் அ).
வாழை - வாழைமரம்.
வாழ்க்கை - வாழ்வு, மனைவி, ஊர், செல்வம்.
வாழ்க்கைத்துணை - மனைவி.
வாழ்தல் - சீவித்தல்.
வாழ்த்தல் - துதித்தல், ஆசிர்வதித்தல்.

வாழ்நாள் - சீவியகாலம்.
வாளம் - சக்கரவாளகிரி, சூழ்வு.
வாளரி - சிங்கம். [மையாக.
வாளா - வீணாக, மௌனமாக, வெறு
வாளி - அம்பு, மண்டலமாயோடல்.[மா
தர்காதணிகளுளொன்று]
வாளுழவர் - படைவீரர்.
வாளை - ஓர்மீன்.
வாள் - வாட்படை, ஈர்வாள், ஒளி.
வாள்கைக்கொண்டாள் - துர்க்கை.
வாறு - பெலம்.
வாற்சல்யம் - மைந்தர் முதலாயினோரிட
த்துவைக்கும் ஆவல். [ள்.
வானபத்தியம் - பூத்துக்காய்க்கும்மரங்க
வானப்பிரத்தம் - வனத்திற்போயிருந்து
தவஞ்செய்தல். (நால்வகைஆச்சிரம
ங்களுளொன்று).
வானம் - ஆகாயம், மழை, உலர்ந்தமரம்.
வானம்பாடி - ஆகாயத்திலுலாவிக்கொ
ண்டுபாடுகிறஓர்பறவை.
வானரக்கொடியோன் - அருச்சுனன்.
வானரம் - குரங்கு.
வானவரம்பன் - சேரன்.
வானவர் - தேவர்கள்.
வானவன் - சேரன், தேவன்.
வானவில் - இந்திரவில். (கிழக்கிற்றோ
ன்றுவதும்மேற்கிற்றோன்றுவதுமாக
இதுஇரண்டாமென்பர்.)
வானி - மேற்கட்டி, சேனை, துகிற்கொ
டி, படாமாளிகை. (கூடாரம்).
வானீரம் - நீர்வஞ்சி.
வானுலகம் - சுவர்க்கலோகம், ஆகாயம்.
வானேறு - இடி.
வானோர் - தேவர்கள்.
வானோர்கோமான் - இந்திரன்.
வானோர்முதுவன் - பிரமா.
வான் - ஆகாயம், மேகம், மழை, பெரு
மை, வலி, தூய்மை. (வான்கதிர்த்தி
ருமணி; புற).
வான்கோழி - ஓர்வகைக்கோழி.
வான்மீகி - இராமாயணத்தைவடமொ
ழியிற்செய்தஓர்முனிவர்.
வான்மீன் - நட்சத்திரம், வால்வெள்ளி.

## வி

வி(உபசர்க்கம்) - விசேடம் இன்மை
அற்பம் பிரிவு வேற்றுமை என்னும்
பொருள்களுளொன்றையுணர்த்தும்.
(இவற்றிற்கு முறையே விக்கியாதி
விமலம் விநாடி விகிரம் விகாரம்
என்பனஉதாரணங்கள். [வை
விகங்கம் - அம்பு, பறவை, அன்னப்பற
விகசனம் (விகசித்தல்) - மலர்தல், சிரி
த்தல்.
விகடம் - வேறுபாடு, விகடக்கூத்து.
விகடிகை - விநாடி.
விகர்த்தனன் - சூரியன்.
விகலம் - இயற்கைக்குமாறானது, (உறு
ப்புக்குறைந்துங்கூடியும்பிறத்தல்முத
லியன),குறைவு.
விகலை - காலநுட்பம்.
விகற்பம் - பலதன்மையவாதல், ஒன்றற்
கொன்று இணக்கமற்ற இரண்டுவிதி
களைக்கொள்ளல், (எவன்முன்வல்வி
னமில்பொடுவிகற்பேஎன்புழிஇறல்பு
மிகலுமாமெனக்கொள்ளுதல்போல. [போல),
விகாசம் - விரிவு, ஒளி.
விகாதம் - எதிர், தடை, விரோதம்.
விகாயசம் - பட்சி, ஆகாயம்.
விகாரம் - வேறுபடுதல், பௌத்தாலயம்,
கையாற்கருவியாற்பண்ணுதமனத்தா
னிருமித்த அரங்கமுதலியன. (சிலப்)
விகாரி - அறுபதுவருடங்களுளொன்று.
விகிதம் - சிநேகம், வீதம், விதிப்படி
செய்யும் போதனை.
விகிரம் - சிதறும்பொருள், பறவை.
விகிர்தம் - விகாரம்.
விகிர்தி - அறுபதுவருடங்களுளொன்று.
விகுணி - கள்.
விகுதி - பகுபதங்களினீற்றில்நிற்கிற அ
ன் ஆன் முதலிய இடைச்சொற்கள்.
விக்கல் - விக்குதல்.
விக்கியாதி - பெருங்கீர்த்தி.
விக்கியாபனம் - (விஞ்ஞாபனம்) - அறி
விப்பு.
விக்கிரகம் - உடல், பிரதிமைகளினுருவ
ம், போர், தொக்கசொற்களை விரித்
துக்கூறும் வாக்கியம்.
விக்கிரம - அறுபது வருடங்களுளொன்
விக்கிரமம் - வீரம். [று.
விக்கிரமாதித்தன் - ஓரரசன். (சந்திர
சர்மனென்னும் பிராமணனுக்குச் சு
ருதகீர்த்தியென்னுமரசனதுமகளிட
ம்பிறந்த புத்திரன்.

விக்கிரயம் - விற்பனவு.
விக்கினம் - இடையூறு, தீமை.
விக்கினேசுரன் (விக்கினராசன்)- விநாயகக்கடவுள்.
விக்குள் - விக்கல். (திருக் கிலேயாமை கு).
விசதம் - வெளிப்படை, சுத்தமானது, தெளிவானது.
விசய - அறுபதுவருடங்களுளொன்று.
விசயநகரம் - ஓர்பட்டணம் (கன்னடதேசத்திராசதானி)
விசயம் - வெற்றி, வெல்லம் சர்க்கரை, சைவாகமங்களுளொன்று, சூரியனதுமண்டலம்.
விசயன்- அருச்சுனன், வைகுண்டத்தில் திருமாலின் வாயிலேக்காப்பவர்களுளொருவன்.
விசயார்த்தம் - வெள்ளிமலே.
விசயை- துர்க்கை, உமாதேவியின்தோழியர்களுளொருத்தி.
விசர்க்கம்- சிறுநீர்முதலியவற்றைக்கழித்தல், துறவு, கொடை, உலகசங்காரம், ஆரியபாஷையில்ஒரெழுத்து.
விசனே - சட்டி.
விசனம்- துன்பம், எழுவகையான விசனங்கள்.
விசனம் எ- சூதாடுதல் மாமிசம்புசித்தல் கட்குடித்தல் பரத்தையரைச்சேர்தல் வேட்டையாடல் திருடுதல் பிறர் பெண்களைச்சேர்தல் என்பன. (இவைஅவ்வவற்றில் மேன்மேலும் மனத்தை யேவிக் கெடுப்பனவாதலின் விசனமெனப்பட்டன).
விசாகம் - உஎ நட்சத்திரங்களுளொன்று.
விசாகன் - முருகக்கடவுள்.
விசாரதன்- பண்டிதன், சாதுரியமுடையோன்.
விசாரம் - ஆராய்ச்சி.
விசாரித்தல் - ஆராய்தல்.
விசாலம் - அகலம், பரப்பு, கடப்பமரம்.
விசாலாட்சி - பார்வதி, காசியிலிருக்குந்தேவி.
விசி - கட்டு, பறையிறுக்கும்வார், தாமரைச்சுருள், ஓடத்தையோட்டுந்தடுப்பு.
விசிகம் - அம்பு.
விசிகை - கச்சு.
விசிட்டம் - மேன்மை.
விசிட்டாத்துவைதம் - இராமாநுஜர்கூறும் அத்துவிதமதம்.
விசித்தல் - இறுக்கிக்கட்டுதல், விம்முதல்.
விசித்திரம் - ஆச்சரியம், பலநிறமுடைமை, பேரழகு.
விசித்திரவீரியன் - சந்திரகுலத்தரசருளொருவன்.
விசிறி- காற்றையுண்டாக்குதற்காக விசிறுங்கருவி.
விசிறுதல் - வீசுதல்.
விசுத்தம் - மிகத்தூய்மையாதல்.
விசுத்தி - ஆறுதாரங்களுளொன்று.(இதனிடம் கண்டம்).
விசும்பு - ஆகாயம், சுவர்க்கலோகம், மேகம், திக்கு.
விசுவசாரம் - சிற்பநூல்களுளொன்று.
விசுவசித்தல் - நண்புகொள்ளுதல், நம்புதல்.
விசுவநாதன் - காசித்தலத்திலிருக்குஞ்சிவன்.
விசுவம்பரன் - விட்டுணு.
விசுவம்பரை - பூமி.
விசுவரூபம்- பிரபஞ்சமுழுவதுந் தாமேயாய்நிற்கும் வடிவம்.
விசுவாசம் - சினேகம், நம்பிக்கை.
விசுவாமித்திரம் - ஓர் புல்.
விசுவாமித்திரன் - ஓரிருடி. (காதிராசனது புதல்வர்; தபோபலத்தாற் பிரமவிருடியானார்).
விசுவாவசு - அறுபதுவருடங்களுளொன்று, ஓர்கந்தருவன்.
விசுவேதேவர்- சிராத்தமுதலியகாலங்களிற்பூசிக்கப்படுகின்றஇருதேவதைகள்.
விசேடணம் - அடைமொழி.
விசேடம் -மேன்மை, சிறப்புவிதி, செய்யுளுக்குரிய அணிகளுளொன்று,(குணம் தொழில் முதலியனகாரணமாக ஒருபொருட்கு மேம்பாடுதோன்றவுரைப்பது).
விசேடியம் - வர்ணியப்பொருள். (அடைமொழிகளைக்கொண்டு நிற்பது).
விசை - வேகம்.
விசைத்தல் - துள்ளல்.
விச்சிரவா-புலத்தியமுனிவரின்புத்திரர். (இவருக்கு இளாவலையென்பவளின் வயிற்றிற்குபேரனும் சுமாலியென்பவளின்வயிற்றில் இராவணன் கும்பகர்ணன் விபீடணன் என்னுமரக்கர்களும் இவள்தங்கையாகிய ராகைவயிற்

நிற்கரன் தூஷணன் திரிசிரன் என்பவர்களும் பிறந்தார்கள்).
விச்சிராமம் - இளைப்பாறுகை.
விச்சின்னம் - இடையீடுபட்டது.
விச்சுருதி - கீர்த்தி.
விச்சுவகன்மா - தேவத்தச்சன், கடவுள்.
விச்சுவகேது - அநிருத்தன். (விஷ்ணுவின் அம்சமாக வைணவாகமங்களிற் சொல்லப்படும் ஒருதேவதை).
விச்சுவநாள் - உத்தராடநட்சத்திரம்.
விச்சுவம் (விசுவம்) பிரபஞ்சம்.
விச்சுவேசன் - சிவன், கடவுள்.
விச்சேதம் - பிரிவுபடுதல், தொடர்புநீங்
விச்சை - வித்தை, தெரு. [குதல்.
விஞ்சுதல் - மிகுதல்.
விஞ்சை - கல்வி.
விஞ்சையர் - வித்தியாதரர்.
விஞ்ஞானகலர் - சைவமதத்தில் மூவகையான்மாக்களுளொருமலமுடையவர்.
விஞ்ஞானமயகோசம் - புத்தி ஞானேந்திரியங்களோடுகூடிநிற்றலாகிய கோசம்.
விஞ்ஞானம் - சிறந்த அறிவு.
விடகாரி - விஷவைத்தியன்.
விடக்கு - ஊன்.
விடங்கத்தலம் எ - தியாகராசமூர்த்தி கோயில்கொண்டுள்ள எழுதலங்கள்; அவையாவன: ஆரூர் நாகை நள்ளாறு மறைக்காடு காறுயல் கோலிளி வாய்மியூர் என்பன.
விடங்கம் - அழகு, வீதியிற்கட்டிய கொடி, கொடுங்கை, உளிபடாமல் (மனத்தாற்) செய்தவிக்கிரகம், முகடு, ஆண்மை.
விடங்கர் - சிறுவழி, முகடு.
விடதரம் - பாம்பு. [ம்பு.
விடபம் - இடபம், இடபராசி, மரக்கொ
விடபி - மரம், பெருந்தூறு.
விடமுள் - தேள், நச்சுமுள்.
விடம் - விஷம், நஞ்சு, தேள்.
விடம்பம் - தாமதம். [தமுதலியன.
விடயம் - ஐம்பொறிக்கு விடயமாகிற சத்
விடர் - நிலப்பிளப்பு, மலைப்புழை, காடு, தூர்த்தர்.
விடலை - பாலைநிலத்தலைவன், வெற்றியாளன், காமத்துக்குரியோன், திண்ணியன், பெருமையிற் சிறந்தோன், கசூன் மேல் கூ௦ க்குட்பட்டவயதுடையான். (சிங் விசேடக்குறிப்).
விடல் - அனுப்புதல், ஒழிதல், விள்ளுதல். *குற்றம்.
விடன் - தூர்த்தன். [ம்பு.
விடாணம் (விஷாணம்) - விலங்கின்கொ
விடாமழை - ஓயாதமழை.
விடாய் - தாகம்.
விடாலம் (விடாரகம்) - பூனை.
விடியல் - சூரியனுதிக்குங்காலம்.
விடுகாலி - கட்டாதமாடு.
விடுகை - விடுதல்.
விடுதலை - அந்தம், தொழிற்றலம் கல்விச்சாலைமுதலியவற்றின் விடுதலை.
விடுதல் - ஏவுதல், ஒழித்தல், எறிதல்.
விடுதி - தங்குமிடம்.
விடை - இடபம், இடபராசி, எதிர்மொழி, அனுமதிகொடுத்தனுப்புதல்.
விடைத்தல் - பெருங்கோபங்கொள்ளல்.
விடையோன் - சிவன்.
விட்கம்பம் - உஎ யோகங்களுளொன்று, தடை.
விட்சேபம் - விலகுதல், சோதிடத்திற் சூரியன்முதலியகிரகங்களுக்குச் சொல்லப்படும் விக்ஷேபம்.
விட்டம் - வீடுகளினுறுப்பாகியஉத்திரம்.
விட்டரச்சிரவன் - திருமால்.
விட்டரம் - தருப்பையால்முடியப்பெற்ற ஆசனம், ஆசனம்.
விட்டி - கோழிக்கரணம்.
விட்டில் - ஓர்சிறுபறவை, வெட்டுக்கிளி பராய்மரம்.
விட்டுணு (விஷ்ணு) - திருமால், ஓர்முனிவர்.
விட்டுணுக்கிராந்தி - ஓர்பூடு.
விட்டுணுபதம் - இடப சிங்க விருச்சிக கும்ப சங்கிராந்திகளாகிய புண்ணியகாலம், வைகுண்டலோகம்.
விட்டுணுதரன் - கருடன்.
விட்டுணுவின் அவதாரம் க௦ - மச்சம் கூர்மம் வராகம் நரசிங்கம் வாமனம் பரசுராமம் ஸ்ரீராமம் பலபத்திரம் கிருஷ்ணம் கர்க்கி என்பன.
விட்டுணுவின் அவதாரம் கரு - சனகன் சனந்தனன் சனாதனன் சனற்குமாரன் நாராயணர் கபிலன் இடபன் நாரதன் அயக்கிரீவன் தத்தாத்திரே

யன் மோகினி யாகபதி வியாதன் தன்வந்திரி பௌத்தன் என்பவர்களின் அவதாரங்கள்.
விட்டேறு-ஓராயுதம் (வேலெனப்பிங்).
விட்டை - மலம்.
விண்-ஆகாயம், மேகம், சுவர்க்கலோகம்.
*விண்டல் - மூங்கில்.
விண்டாண்டு - ஊஞ்சல்.
விண்டு - திருமால், மலை, மூங்கில், மேகம், காற்று.
விண்ணப்பம் - மன்ருட்டம்.
விண்ணவன் - அருகன், கடவுள்.
விண்ணுங்கு - ஓர்மரம்.
விண்ணணம் - விஞ்ஞாபனம்.
விண்ணுலகு - சுவர்க்கலோகம்.
விண்ணேறு - இடி.
விண்ணோர் - தேவர்கள்.
விண்மணி - சூரியன்.
விண்மீன் - நட்சத்திரம்.
விண்முழுதுமாளி - இந்திரன்.
விண்வீழ்கொள்ளி - ஆகாயத்தினின்று கொள்ளிபோல்நிலத்தில்விழுவது.
விதண்டாவாதம்-தன்மதத்தைநிறுத்தாமற் பிறர்மதத்தைக் கண்டித்தலாகிய வாதம்.
விததம் (விததி) - விலாசம், பொய்.
விதத்தல் - விதந்துசொல்லுதல். [ப்பு.
விதப்பு - மிகுதி, விபரம், *மதிலுறு
விதம் - வகை.
விதரணம் - கொடை.
விதர்ப்பம் - ஓர்தேசம்.
விதலம் - கீழுலகங்களுளொன்று.
விதலை - நடுக்கம்.
விதவை- நாயகனிறக்கப்பெற்றபெண்.
விதனம் - மனத்துயர்.
விதஸ்தி - விரித்துநீட்டிய பெருவிரல் சிறுவிரல் என்னுமிரண்டாலும் அளக்கப்படும் அளவு.
விதாதா - அருகன், பிரமா.
விதாரணம் - பிளத்தல்.
விதானம் - மேற்கட்டி, விதிகளையமைத்தல்.
விதி-பிரமா, ஊழ், கட்டளை, வேதமுதலியவற்றிற் சொல்லிய அனுட்டானமுறை, குணம், செய்தொழில் இலக்கணத்தில் விகாரம்.
விதிக்கு - கோணத்திசை.
விதித்தல்-படைத்தல்,நியமித்துச்சொல்லுதல்
*விதியுளி - விவாகம், யாகம். (விதிப்படிநடக்குங்கிரியையென்பது சொற்பொருள்).
விதிர்த்தல்- நடுங்குதல், சிதறுதல், உதறுதல் (திருக் கயமை எ).
விதிர்ப்பு - நடுக்கம், மிகுதி.
விதிவினை - உடன்பாட்டுவினை.
விது - சந்திரன், கர்ப்பூரம்.
விதுப்பு - ஆசை, நடுக்கம், விரைவு.
விதும்பல் - ஆசைப்படல், நடுங்குதல், விரைதல்.
விதுரன் - அம்பிகையின்தோழிவயிற்றில்வியாசமுனிவர்க்குப்பிறந்தவன், (திருதராட்டிரனுடையமந்திரி), மனைவியில்லாதவன்.
விதுவனம்-நடுக்கம், புணர்ச்சிக்கிரிடை
விதூஷகன் - பரிகாசங்களைச் செய்துகொண்டுநிற்கிற ஒருநடன்.
விதேகமுத்தி - பரமுத்தி.
விதேகன் - சனகராசன்.
விதேகை - மிதிலைநகரம்.
விதேசம் - பிறதேசம்.
விதேயன் - சொற்கேட்டுநடப்பவன்.
விதை - வித்து.
வித்தகம் - ஞானம், அதிசயம், சாமர்த்தியம்.
வித்தகர்-பெரியோர், தூதர், கம்மாளர், சிற்பர்.
வித்தகன் -வைரவக்கடவுள், அறிஞன்.
வித்தம் - பொன், இகழ்ச்சி, ஞானம்.
வித்தாரகவி - நால்வகைக்கவிகளிளொன்று, (பலசெய்யுட்கள் கூடிவந்த தொடர்நிலைச்செய்யுளும் அடிபலவாய்நடக்குந் தனிச்செய்யுளும்), வித்தாரகவியைப்பாடுவோன்.
வித்தாரம் - அகலம், விரிவு.
வித்தியாகலை-ஐந்துகலைகளுள் ஒன்று.
வித்தியாசம்(வியத்தியாசம்) விபரீதம்.
வித்தியாதத்துவம் - சைவமததத்துவப்பகுதிமூன்றனுளொன்று.
வித்தியாதரர் - விஞ்சையர்.
வித்தியாதானம்- கல்விகற்பித்தல், புத்தகத்தைத்தானஞ்செய்தல்.
வித்தியாரணியர் -வேதாந்த ஆசிரியருளொருவர்; (வேதம் உபநிஷத்துமுதலியவற்றிற்குப்பாஷ்யஞ்செய்தவர்: இவருக்கு மாதவாசாரியரெனவும் பெயருண்டு).
வித்தியாரம்பம்-கல்விகற்கத்தொடங்குதல்.
வித்தியார்த்தி-வித்தையைவிரும்பிக்கற்போன்.

வித்து - விதை, அறிவிற்சிறந்தோன்.
வித்துதல் - விதைத்தல், பரப்புதல்.
வித்துத்து (வித்துரு) - மின்னல்.
வித்துருமம் - பவளம்.
வித்துவேடணம் - விரோதப்படுத்தல். (வசியமுதலியகருமங்களுளொன்று).
வித்தை - கல்வி, கற்றற்குரியநூல், ஞானம்.
வித்தை கச -வேதம் ச வேதாங்கம் சு தருக்கம் மீமாஞ்சை புராணம் தரும நூல் என்பன.
விநாசம் - அழிவு.
விநாடி - நாழிகையின் அறுபதிலொன்றாகிய காலம்.
விநாயகன் - விநாயகக்கடவுள், அருகன், புத்தன்.
விநியம் - பண்டமாற்று.
விநியோகம் - இதனுலிது செய்யத்தகுமென் றுபயோகித்தல், கொடை.
விநீதன் - பயிற்றப்பட்டவன், கீழ்ப்படிவிக்கப்பட்டவன்.
விநோதம்-பொழுதுபோக்கு, அதிசயம்.
விந்தம் - சேனைத்தொகையிலொன்று, விந்தமலை, காடு.
விந்தர் - இடையர்.
விந்து - தாது, நீர்த்துளி, புள்ளி.
விந்தை - துர்க்காதேவி, ஆச்சரியம்.
விபக்கம் - பகைவர்பக்கம்.
விபஞ்சி - யாழ்.
விபணி - கடைவீதி.
விபத்தி - பெயர்ச்சொற்களுக்கு இலக்கணவிதிப்படியுண்டாகும் வேற்றுமை யுருபு (வடமொழிவழக்கு).
விபத்து - ஆபத்து.
விபரம்- விரிவு. (விவரத்தின்விகாரம்)
விபரீதம் - மாறுபாடு.
விபவ- அறுபதுவருடங்களுளொன்று.
விபவம் - செல்வம்.
விபன்னன் - ஆபத்துற்றவன்.
விபாகம் - கூறுபாடு.
விபாகரன் - சூரியன்.
விபாசை- ஓர்நதி. (மத்திரதேசத்திலுள்ளது).
விபாவசு - சூரியன், அக்கினி.
விபாவரி -இராத்திரி.
விபாவனை - செய்யுளுக்குரிய பொருளணிகளுளொன்று. (பிரசித்தியானகாரணங்களையொழித்துக் காரியநிகழ்வதாகக்கூறல்).
விபாஷை - விகற்பவிதி.
விபினம் - காடு.
விபீடணன் - இராவணனுடையதம்பி.
விபீதகம் - தான்றிமரம்.
விபு - கடவுள், தலைவன், ஞானி.
விபுதர் - பேரறிவுடையோர், தேவர்.
விபுலம் - பூமி, விரிவு, பெருமை, மேருவுக்கு மேற்குத்திசையிலுள்ளமலை.
விபுலை - பூமி.
விபூதி - செல்வம், திருநீறு, *குற்றம், கொடுமை, பொல்லாங்கு, ஓர் நரகம்.
விப்பிரயோகம் - ஐங்கணையவத்தைகளுள்மாம்பூவால் நிகழுமவத்தை.(பெருமூச்செறிந்துவருந்துதல்);
விப்பிரர் - பிராமணர்.
விப்பிரலம்பம் - விபரீதமாக யாதேனுமொன்றைச்சொல்லுதல், வஞ்சனை, பிரிவு.
விப்பிலவம்- அரசரால்நிகழும் உபத்திரவம். (வேற்றரசரால் நிகழ்வதுமாம்).
விப்புருதி - ஓர் நோய்.
விமர்சனம் - ஆராய்வு.
விமலம் - அழுக்கின்மை, (பரிசுத்தம்). சைவாகமங்களுளொன்று.
விமலன் - சிவன், அருகன், கடவுள்.
விமலை- பார்வதி, துர்க்கை, கோதாவரிநதி, கங்கைநதி.
விமானம் - தேவவூர்தி, தேர், அரசர் வீட்டின்விகற்பம், சுவர்க்கலோகம், உரோகிணிநட்சத்திரம்.
விமுகம் - பராமுகம்.
விமோசனம் - நீக்கம்.
விம்சதி - இருபது.
விம்பம் - சாயை, சந்திரசூரிய மண்டலங்கள், கொவ்வைக்கொடி, சைவாகமங்களுளொன்று.
விம்மல் - இரங்கல், (அழுதல்), ஒலித்தல், பொருமுதல், யாழ்நரம்போசை.
விம்மிதம் - அதிசயம்.
விய - அறுபதுவருடங்களுளொன்று.
வியங்கோள் - ஐம்பால்களுக்கும் மூவிடங்களுக்கும் பொதுவாய் ஏவல் ஆசி என்னும் பொருள்களில்வழங்கும்வினைமுற்று.
வியசனம் - துன்பம், விசிறி.
வியஞ்சகம் - மனக்கருத்தை அல்லது செய்யுள் முதலியவற்றின் கருத்தை வெளிப்படுத்துங்குறிப்பு.

வியஞ்சனம்- ஒற்றெழுத்து,கறிவர்க்கம்.
வியட்டி - விரி. (சமட்டிக்குதாரணம் பதி; வியட்டிக்குதாரணம் ஆன்மாக்கள்).
வியதிரேகம் - எதிர்மறை, இல்லாமை.
வியதீபாதம் - உஎ யோகங்களுளொன்று, உற்பாதங்களுளொன்று.
வியதை - வேதனை.
வியத்தம் - வெளிப்படை, தெளிவு.
வியத்தல் - அதிசயப்படல்.
வியந்தரம் - பிசாசம்.
வியபதேசம் - குழூஉக்குறி, கபடம்.
வியபிசாரம்- பரபுருடனோடாவது பரஸ்திரீயோடாவது கூடுதல், நியாயநூலில் ஏழுதோஷங்களுளொன்று, கூடா வொழுக்கம்.
வியப்பு - அதிசயம்.
வியம் - ஏவல், வியயமென்பதன் விகாரமாயின் செலவும் இலக்கினத்திலிருந்து கஉ மிடமும், வழி, (மலைபடு சஉஎ), *பறவை, பெருமை.
வியயம்- செலவு. இலக்கினத்திலிருந்து பன்னிரண்டாமிடம்.
வியர்த்தம் - பயனின்மை.
வியர்த்தல் - வேர்த்தல், கோபித்தல்.
வியர்ப்பு - வேர்வை, கோபம்.
வியல் - அகலம், பெருமை, காடு.
வியவகலனம் - கழித்தற்கணக்கு.
வியவகாரம் (விவகாரம்) - வழக்குரைத்தல், வழக்குத்தீர்த்தல், வழக்கம்.
வியவத்தை - வழக்கத்தின்பாகுபாடு.
வியவன் - திண்ணியன், ஏவுவான், *வழிச்செல்வோன்.
வியனிலை - ஏகதேசம்.
வியனுலகு - சுவர்க்கலோகம்.
வியன்- வேறுபாடு, அகலம், பெருமை.
வியாகரணம் - வடநூலிலக்கணம்.
வியாகாதம் - இடையூறு, தடை, உஎ யோகங்களுளொன்று.
வியாகிருதி - ஓமமுதலியவற்றுக்குரிய நான்கு மந்திரங்கள்.
வியாகுலம் - பெருந்துன்பம்.
வியாக்கியானம் - விரிவுரை.
வியாக்கிரபாதன் - வியாக்கிரபாதமுனிவர்.
வியாக்கிரம் - புலி.
வியாசம் - வியாசராற்செய்யப்பட்ட ஓர் தருமநூல், அகலம், விருத்தத்தின்குறுக்களவு, கபடம், யாதேனுமொரு பொருளை விரித்தெழுதல்
வியாசன் (வியாதன்) - வியாசமுனிவர். (பராசாருடைய புத்திரர்).
வியாசன்மாணாக்கர்நால்வர் - பயிலர் வைசம்பாயனர் சைமினி சுமந்து என்பவர்கள்.
வியாச்சியம் - வழக்கு.
வியாதி - நோய்.
வியாபகம்- எங்குந்நிறைந்துநிற்கும்பொருள்.
வியாபாரம் - தொழில், வர்த்தகம்.
வியாபி - வியாபகப்பொருள்.
வியாபித்தல் - நிறைந்துநிற்றல், அமைந்துநிற்றல்.
வியாப்தி - வியாபகப்பொருளின் வியாபிப்பு.
வியாப்பியம் - வியாபகப்பொருளால் வியாபிக்கப்பட்டது. (வியாபகமும் வியாப்தியும் வியாப்பியமுமாகிய மூன்றும் முறையேஅதிகதேசவிருத்தியும் சமவிருத்தியும் அற்பதேசவிருத்தியுமாம் உதாரணங்கள்: பதி ஆன்மா மலம்என்பன; சூரியன் கண் இருள் என்பனவுமாம்).
வியாவிருத்தி - நிவிர்த்தி.
வியாழன் - எழு வாரங்களுளொன்று. (கிரகங்களுளொன்று.
வியாளம் - பாம்பு, புலி.
வியானன் - வாயுக்களுளொன்று. (சரீரமுழுவதினும் உலாவுவது).
வியுற்பத்தி - சொற்களின்பொருள்முதலியவற்றை விளங்குதல்.
வியூகம் - படைவகுப்பு, விலங்கின்கூட்டம்.
வியூகம் ச - தண்டம் மண்டலம் அசங்கதம் போகம் என்பன. (தண்டம்: சேனையைக்குறுக்காகநிறுத்துதல்; மண்டலம்: வட்டமாகநிறுத்துதல்; அசங்கதம்: வேறுவேறாகநிறுத்துதல்; போகம்: நால்வகைச்சேனைகளையும் ஒன்றன்பின்னொன்றாக நிறுத்துதல்).
வியூகம் ௩0 - பிரதரம் திருடகம் வியாவஸ்தம் குக்ஷி பிரதிட்டம் சுப்பிரதிட்டம் சியேனம் விசயம் சஞ்சயம் விசாலம் நியசம் சூசி தூணம் கர்ணம் சமூமுகம் ரதாசியம் வலயம் சர்வதோபத்திரம் தூர்ச்சயம் அர்த்தாந்திரம் உத்தானம் சிருங்காடகம் கர்க்கடசிருங்காரி காகபாரி கோதிகை

சோமூத்திரிகை கிஞ்சுகம் சஞ்சாரி சகடம் பந்தம் என்பன. முன்குறித்த தண்டமுதல் நால்வகைக்கும் முறையே களம் உம் சும் டும் ஆக விரி கூ0 ஆயிற்று (காம).
வியோகம் - பிரிதல், இறத்தல்.
வியோமகேசன் - சிவன்.
வியோமம் - ஆகாயம்.
விரகம் - காமநோய், பிரிவு.
விரகு - உபாயபுத்தி.
விரசிதம் - எழுதப்பட்டது.
விரசுதல் - நெருங்குதல், கலத்தல்.
விரசை - ஓர்நதி.
விரணம் - புண், விழற்புல்.
விரதம் - உபவாசமுதலியவற்றோடு கூடியவிரதம், நியமம்.
விரதி - விஷயங்களை வெறுப்பவன், விரதமனுட்டிப்போன்.
விரத்தன் - துறவி.
விரத்தி - வெறுப்பு.
விரயம் - செலவு.
விரலணி - மோதிரம்.
விரலம் - நெகிழ்வு, (இறுக்கமின்மை), நீக்கம்,
விரல் - கைகால்களிலுள்ள விரல்கள்.
விரவல் - கலத்தல்.
விரவுப்பெயர் - பொதுப்பெயர்.
விரளம் - நீக்கம் நெகிழ்வு.
விரற்புட்டில் - விரலுறை.
விராகம் - வெறுப்பு.
விராகன் - அருகன்.
விராடம் - மற்சதேசம்.
விராடன் - மற்சதேசத்தரசன், முதல் வள்ளல்களுளொருவன்.
விராட்டு - அண்டத்தைத் தூலதேகமாகவுடைய ஆதிபுருஷன்.
விராத்தியன் - அனுலோமப்பெண்ணும் பிரதிலோமத்தாணுங் கூடிப்பெற்றபிள்ளை, உபநயனஞ்செய்யப்படாது தவறினோன்.
விராமம் - முடிவு, ஒற்றெழுத்து.
விராலி - ஓர்மரம்.
விராவம் - ஒலி.
விரி - விரிவு, பொதியெருதிலிடுஞ் சேணம்.
விரிசிகை-முப்பத்திரண்டுகோவைமணி
விரிச்சி - நன்னிமித்தம், நற்சொல்.
விரிஞ்சன் - பிரமா.
விரிதல் - அகலுதல், பரத்தல், அலர்தல்.
விரித்தல்-சொல்லுதல்,விரியச்செய்தல்.
விரித்துரை-விரிவுரை.(உரைப்பொருள் முதலியவற்றுடன் கூடிய உரை.)
விரிபம் - சிறுதுகில்.
விரிப்பு - நிலமுதலியவற்றில் விரிக்கப்படும் பாய்முதலியன,
விரியல் - ஒளி, பரப்பு, பூ.
விரியன் - ஓர்பாம்பு.
விரிவு - பரப்பு.
விரீகி - நெல்.
விருகம் - செந்நாய், கொக்கு.
விருச்சிகம் - தேள், விருச்சிகராசி.
விருச்சிகன் - சூரியன்.
விருடணம் (விருஷணம்) - பீசம்.
விருடலன் (விருஷலன்) - சூத்திரன், தருமநெறியிற்றவறினோன்.
விருடலி (விருஷலி) - விவாகமாகமுன் இருதுவானவள்.
விருட்சம் (விருக்கம்) - மரம்.
விருட்சவாடிகை - சோலை.
விருட்டி (விருஷ்டி) - மழை.
விருதா - பயனின்றி. (வீணாக).
விருது - வெற்றிமுதலியவற்றினடையாளம், வெற்றிக்கொடி.
விருத்தகங்கை - கோதாவரிநதி.
விருத்தப்பிரபிதாமகன் - பிரபிதாமகனுடைய பிதா.
விருத்தம் - செய்தி, முதுமை, வட்டம், விரோதமானது, பாவினங்களுளொன்று, வில் வாள் வேல் செங்கோல் யானை குதிரை நாடு ஊர் குடை என்னும் ஒன்பது அங்கங்களையும் பப்பத்துவிருத்தத்தாற்பாடுவது. (அவை வில் விருத்தம் வாள்விருத்தம் முதலிய பெயர்களையுடையனவாம்): ஒழுக்கம்.
விருத்தன் - வயோதிகன். (எழுபதுக்கு மேற்பட்ட வயதுடையவன்.)
விருத்தாசலம் - ஒருசிவதலம்.
விருத்தாந்தம் - நிகழ்ந்த சம்பவத்தைச் சொல்லுதல்.
விருத்தி - விரித்துரை, பெருக்கம், இருபத்தேழுயோகங்களுளொன்று, சீவனத்துக்குரிய தொழில், விருத்திசந்தி, அடிமை, இலாபம், செல்வம், சித்தவிருத்தி.
விருத்திசிராத்தம் - நாந்திசிராத்தம்.

விருத்திரன் - ஓரசுரன்.
விருத்திராரி - இந்திரன்.
விருத்தை-வயதான்முதிர்ந்தபெண், நல்லொழுக்கமுடையவள்.
விருந்தம் - கூட்டம்.
விருந்தர் - புதியவர்களாய் வந்தவர்கள்.
விருந்தனை - மனைவி.
விருந்தாரகர் - தேவர்.
விருந்து - புதுமை, புதியவர்களாய்வந்தவர்களுக்குக்கொடுக்கும் போசனம்.
விருந்தை(பிருந்தை)-சலந்தரன்மனைவி, துளசிச்செடி.
விருப்பம் - ஆசை, பிரியம். [தல்,
விரும்புதல் - ஆசைப்படல், பிரியப்படு
விருளை - குதிரைக்கடிவாளப்பூண்.
விரூபாக்கன் - சிவன்.
விரேசனம் - மலங்கழித்தல். [புகை..
விரை-வாசனை, கலவைச்சாந்து, நறும்
விரைடு - சந்தனம் அகில் தகரம் துருக்கம் கோட்டம் என்பன.
விரைதல் - விரைவுபடுதல்.
விரைவு - சீக்கிரம்.
விரோசனன் - சூரியன், பலிச்சக்கிரவர்த்தியின்றந்தை. [று.
விரோதகிருது - சுO வருடங்களுளொன்
விரோதம் - பகை, செய்யுளணிகளுளொன்று, (மாறுபட்டசொல்லானும்பொருளானும் மாறுபாட்டுத்தன்மை தோன்றவுரைப்பது).
விரோதி - சுO வருடங்களுளொன்று, சத்துரு.
விரோதித்தல் - பகைத்தல்.
விலகல் - அகலுதல், எறிதல்.
விலக்குதல் - தவிர்த்தல்.
விலங்கல் - மலை மாறுபடுதல்.
விலங்கு-மிருகங்கள், கால்கைகளிவிடும் விலங்கு, குறுக்கு.
விலங்குதல்- மாறுபடுதல், குறுக்கிட்டுக்கிடத்தல், எதிர்நின்றுதடுத்தல், விலகுதல். (சிலப்)
விலட்சணம் - வேற்றுமை.
விலபனம் - புலம்புகை
வியலம் - அழிவு, ஒடுக்கம்.
விலா - பழு.
விலாங்கு - ஓர்மீன்.
விலாசம் - அழகு, கடிதங்களின்மேலெழுதும் பெயர் ஊர் முதலியன, விளையாட்டு.
விலாசனை - மகளிர்விளையாட்டு.
விலாசினி - வேசி.
விலாபம் (விலாவம்) - புலம்பல்.
விலாழி - குதிரைவாயினுரை, யானைக்கையுமிழ்நீர்.
விலாவம் - பூனை, ஆண்பூனை.
விலேசயம் - பாம்பு.
விலேபனம் - பூச்சு.
விலை - கிரயம்.
விலைஞர் - வைசியர், (பொருள்களைவிற்போர்).
விலைமகள் - வேசி.
விலோசனம் - கண்.
விலோடனம் - கலக்குதல்.
விலோதம் - பெண்மயிர், மயிர்க்குழற்சி, துகிற்கொடி.
விலோமம் - விபரீதம்
வில் - அம்பேவும்வில், தனுராசி, ஒளி, மூலநட்சத்திரம்.
வில்லம் - வில்வமரம்.
வில்லவன் - சேரன்.
வில்லி-வீரபத்திரக்கடவுள், மன்மதன்.
வில்லிபுத்தூரன் - பாரதத்தைத் தமிழிற் பாடிய ஓர்புலவர்.
வில்லை - தகட்டுவடிவும் வட்டவடிவுமமைந்தபொருள்.
வில்வம் - வில்வமரம்.
வில்வீரர்சிற்கும்நிலை ச-வைசாகம் மண்டிலம் ஆலீடம் பிரத்தியாலீடம் என்பன. (வைகல்யம்சமபாதம்இரண்டையுஞ்சேர்த்து ஆறென்பர்சிலர்; வைசாகமென்னும் வடசொல்லைப் வைசாகமெனத்தமிழில் வழங்கினர்).
விவசாயம்-கிருஷிகத்தொழில், முயற்சி.
விவரம் - குகை, விரிவு. [துக்கூறுதல்.
விவரித்தல்-உரைமுதலியவற்றை விரித்
விவாகப்பொருத்தம் கO - தினம் கணம் யாகேந்திரம் ஸ்திரீதீர்க்கம் யோனி ராசி ராசியதிபதி வசியம் ரச்சு வேதை என்பன; கிரகநிலை ஆயுள் புத்திரர் முதலியவற்றின் பொருத்தங்களுமாம்.
விவாகம் - மணச்சடங்கு.
விவாதம்-ஒருவர்க்கொருவர் விரோதமாகப்பேசிக்கலகமிடல்.
விவிதம் - பலவிதம்.
விவேகசிந்தாமணி - ஒருநூல்.

விவேகம் - பகுத்தறிவு, நுண்மையான புத்தி.
விவேகானந்தன்-அமரிக்காமுதலியஅன்னியதேசங்களிலுஞ்சென்று இந்துமதத்தினுண்மையைநாட்டிய ஒரிரு...
விழல் - விழுதல், வீண், விழற்புல்.
விழவு (விழா) - உற்சவம், (தேவோற்சவமும் விவாகமுதலிய மானுடோற்சவமுமாம்), மிதுனராசி.
விழி - கண்.
விழித்தல்- பார்த்தல், உறங்காதிருத்தல், விளங்குதல்.
விழுக்காடு - விழுகை.
விழுக்கு - கிணம்.
விழுங்கல் - விழுங்குதல்.
விழுதல் - வீழ்தல்.
விழுது - ஆலமரத்தின்வீழ்.
விழுப்பம் - சிறப்பு, மேன்மை, உயர்குலப்பிறப்பு, ஆசை.
விழுப்பொருள் - சிறந்தபொருள்.
விழுமம் - பலவகைத்துன்பம், சிறப்பு, நன்மை.
விழைச்சு - இளமை, புணர்ச்சி.
விழைதல் - ஆசைப்படல்.
விழைந்தான்- கணவன், விரும்பினோன்.
விழைவு - ஆசை, உள்ளோசை.
விள- விளாமரம், இளமை, நிலத்திலுண்டாகும்வெடிப்பு.
விளக்கல் - தெளிவித்தல், பாத்திரமுதலியவற்றை விளக்குதல்.
விளக்கீடு- கார்த்திகைமாதத்திற் கார்த்திகைநட்சத்திரத்திலும் பூரணைத்திதியிலுஞ்செய்யப்படுந் தீபோற்சவம்.
விளக்கு - தீபம், சோதிநட்சத்திரம்.
விளக்குநிலை - வேலும் வேற்றலையுமொன்றுபட்டோங்கியவாறுபோலக் கோலொடு விளக்குமொன்றுபட்டோங்குமாற்றைச் சிறப்பித்துக்கூறும் பிரபந்தம்.
விளக்குமாறு - துடைப்பம்.
விளங்குதல் - யாதேனுமொரு பொருளைமனத்தில்விளங்கிக்கொள்ளுதல், பிரகாசித்தல்.
*விளங்குபொன் - கண்ணாடி. (புற).
விளம்பம் (விலம்பம்) - தாமதம்.
விளம்பல் - சொல்லுதல்.
விளம்பி - அறுபது வருடங்களுளொன்று.
விளம்பிதம்- மந்தநடையையுடையசிருத்தமுதலியன.
விளரி- ஏழிசைகளுளொன்று, இளமை, இரங்கற்பண், வேட்கைப்பெருக்கம்.
விளர் - வெண்மை, இளமை, கொழுப்பு.
விளர்த்தல் - வெளுத்தல்.
விளவு (விளா)- விளாமரம், நிலப்பிளப்பு.
விளாகம் - போர்க்களம்.
விளி - அழைப்பு, (எட்டாம் வேற்றுமை) ஓசை, இசைப்பாட்டு.
விளிதல் - சாதல், கெடுதல்.
விளித்தல் - அழைத்தல்.
விளிம்பு - அருகு, வஸ்திரமுதலியவற்றின் கரை, கண்ணிமை.
விளைஞர் - மருதநிலமாக்கள்.
விளைதல் - தளிர்முதலியனமுதிர்தல், அனுபவித்தல். (திருக் வெஃகாமைஎ).
விளையாட்டு - சிறுவர்கள்முதலாயினோர் செய்யும்விளையாட்டு.
விளையுள் - வயல், விளைவு.
விளைவு தானியமுதலியவைகளின்விளைவு.
விள்ளல் -சொல்லல், பூக்கள் மலருதல், வெடித்தல், வேறுபடுதல், தழுவுதல்.
விள்ளோடன் - சிரட்டைவேறாய்க்கழலுந்தேங்காய்.
விறகு - தீமூட்டியெரித்தற்குரியஉலர்ந்தமரம்.
விறப்பு - செருக்கம் அச்சக்குறிப்பு, போர், வெற்றி, வலி.
விறலி - பாடியாடும் மகளிர்.
விறலோன் - அருகன், திண்ணியன்.
விறல் - வலி, வெற்றி, *பெருமை.
விறன்மிண்டன் - ௬௩ நாயன்மார்களுள் ஒருவன்.
விறைத்தல் - திமிர்த்தல்.
விற்பன்னர் - கற்றோர்.
விற்றல் - விக்கிரயஞ்செய்தல்.
வினசனம் - குருக்ஷேத்திரத்திலுள்ள ஒரு தீர்த்தம்.
வினதை - கருடனுடைய தாய்.
வினயம் - நற்பழக்கம், செய்தொழில், பஞ்சேந்திரியங்களையடக்கல்.
வினவல் - வினவுதல்.
வினா - கேள்வி.
வினா டு-அறியாமை அறிவொப்புக்காண்டல் ஐயந்தீர்தல் அவனறிவுதான்கோடல் மெய்யவற்றுக்காட்டல் என

னுங்காரணங்களானிகழ்வன. (அறிவினு அறியாவினு ஐயவினு கொளல்வினு கொடைவினு ஏவல்வினு என ஆருகக்கூறுவர் சிலர்.)
வினுவிடை - கேள்வியும் விடையும் நிகழ்தல்.
வினிதை - அயோத்திநகர்.
வினை - முயற்சி, தொழில், இருவினைகள், தீவினை, மனக்குறிப்பு, போர் வினைச்சொல்.
வினை உ - நல்வினைதீவினையென்பன.
வினைச்சொல் - தொழில்பற்றிவருஞ்சொல்.
வினைஞர் - சூத்திரர், தொழில்செய்வோர்.
வினைத்தொகை - விகுதிமுதலிய உறுப்புக்கள் தொகப்பெற்று முதனிலைமாத்திரையாய்கிற்கும் பெயரெச்சவினைச்சொல், அச்சொல்லையுடையதொடர்.
வினைமுதல் - கருத்தா.
வினையுரைப்போர் - தூதர்.
வினையெச்சம் - சிறிதொருவினை யெஞ்சிகிற்குஞ்சொல்.
வின்னூலாளன் - துரோணுசாரியர்.
விஷயம் - ஒற்றை. (இரட்டையல்லாதது).
விஷு - அறுபதுவருடங்களுளொன்று.
விஷுவம் - சித்திரை ஐப்பசிமாதச்சங்கிராந்திகள்.
விஷ்ணுசர்மன் - சுதரிசனனென்னுமரசனுடையபுத்திரர்க்காக இதோபதேசஞ்செய்தபுலவர்.

## வீ

வீ - பறவை, மலர், முன்னிலையசைச்சொல்.
வீகம் - மோதிரம்.
வீக்கம் - கட்டு, பெருமை, (சிக்; சரீரத்திலுண்டாகும்வீக்கமும்), மிகுதி.
வீக்கல் - பருத்தல், கைகால்முதலியன வீங்குதல், மிகுதல், நெருங்கல், இறுகுதல்.
வீசகணிதம் - பாஸ்கராசாரியரால் வடமொழியிற்செய்யப்பட்ட ஓர் கணிதசாஸ்திரம்.
வீசம் - பதினுறிலொன்று.
வீசல் - காற்றுவீசுதல், அடித்தல், சிதறுதல், எறிதல், பெருங்கொடை.
வீசனம் - விசிறி.
வீசி - அலை, கிரணம்.
வீசை - ஓர் நிறை.
வீடல் - அழிதல், சாதல்.
வீடு - மனை, மோட்சம், விடுதல்.
வீக்ஷணம் (வீக்ஷணம்) - பார்வை.
வீட்டல் - அழித்தல்.
வீட்டுமன் - சந்தனுராசனுக்குக் கங்கைவயிற்றிற்பிறந்த புத்திரன்.
வீணன் - ஒன்றுக்கும்பிரயோசனப்படாதவன்.
வீணை - நரம்புக்கருவிகளி லொன்று, மின்னல்.
வீண் - பயனின்மை.
வீதசோகன் - அருகக்கடவுள், கடவுள்.
வீதம் - விகிதம், விடப்பட்டது.
வீதல் - இறத்தல், கெடுதல், நீங்குதல், வறுமைப்படல்.
வீதி - தெரு, நேரோடல்.
வீதி ௩ - மேடவீதி இடபவீதி மிதுனவீதி என்பன. (இடபம் சிங்கம் மிதுனம் கடகம் என்னும் நான்கிராசிகளும் மேடவீதி; மீனம் மேடம் கன்னி துலாம்என்னும்நான்கும்இடபவீதி; தனு மகரம் கும்பம் விருச்சிகம் என்னும் நான்கும் மிதுனவீதி. (இவை சூரியன் முதலியோர் சஞ்சரிக்கும் வீதிகளாம்).
வீதிகோத்திரம் - அக்கினி.
வீபற்சு - அருச்சுனன்.
வீமன் - பாண்டவர்களுளொருவன்.
[வீம்பு - தற்புகழ்ச்சி].
*வீயம் - அரிசி.
வீரகத்தி - வீரரைக்கொன்றபழி.
வீரகத்திவிநாயகர் - வீரகத்திதோஷத்தை நீக்கும் விநாயகர்.
வீரசேனன் - நளராசனின்பிதா.
வீரசைவம் - சைவமதத்திலோர்பிரிவு.
வீரசொர்க்கம் - வீரர்சேரும்பதவி.
வீரசோழியர் - வீரசோழனென்னுமரசனுலியற்றுவிக்கப்பட்ட ஒரு இலக்கணநூல்.
வீரச்செல்வி - துர்க்கை.
வீரட்டத்தலம் அ - திருக்கண்டியூர் திருக்கடவூர் திருவதிகை திருப்பறியல் திருவிற்குடி திருவழுவூர் திருக்குறுக்கை திருக்கோவல் என்பன. (இவற்றில் முறையே பிரமன்றலைகிள்

ஆல் யமனையுதைத்தல் முப்புரதகனம் தக்கசங்காரம் சலந்தரவதம் கயாசுரவதம் காமதகனம் அந்தகாசுரவதம் என்னும் வீரங்கள் பரமசிவனால் நிகழ்த்தப்பெற்றன).
வீரட்டானம்- வீரட்டத்தலம், கூத்தின் விகற்பம்.
வீரபத்திரன் - வீரபத்திரக்கடவுள்.
வீரபத்தினி - கண்ணகை, வீரனுடைய மனைவி.
வீரம் - வீரத்தன்மை, (பகைவர்முன் அஞ்சாதுநின்றுபொருதல்), வலிமை, ஆசனவகையுளொன்று, (வலத்தொடையில்இடக்காற்பாட்டைச் சேர்த்திவிறுமாந்திருத்தல்), உஅ ஆகமங்களுளொன்று, மலை.
வீரவாகு-முருகக்கடவுளின் கணத்தலைவர்.
வீரன் - வீரமுடையோன், வலியுடையோன், சேனைத்தலைவன்.
வீரி - காளி.
வீரியம்- சுக்கிலம், சீரபலம், வீரம்.
வீரை - கடல், துன்பம், வீரைமரம்.
வீவு - சாவு, அழிவு.
வீழி(வீளி) - ஓர்செடி.
வீழ் - ஆல்முதலியமரங்களின்விழுது.
வீழ்க்கை -விருப்பம்,சோதிநட்சத்திரம்.
வீழ்தல் - விழுதல், விரும்புதல்.
வீறு - பொலிவு, வெற்றி, பெருமை, வேறு. (வீற்றுவீற்றியங்கும்: புற).
வீற்றிருத்தல் - இறுமாந்திருத்தல், பெருந்தன்மையோடிருத்தல்.

## வெ

வெஃகல் - விரும்புதல்.
வெஃகா - தொண்டைநாட்டிலுள்ள ஓர் விஷ்ணுஸ்தலம்.
வெஃகாமை - விரும்பாமை.
வெகு - பல.
வெகுதானிய-௬0 வருடங்களுளொன்று.
வெகுத்தல் - மிகுதல்.
[வெகுமதி - வெகுமானம்].
வெகுவிரீகி - அன்மொழித்தொகை. (வடமொழிவழக்கு).
வெகுளல் - கோபித்தல்.
வெகுளி - கோபம்.
வெங்கண் - பொறாமை, கோபம்.
வெடி - நறும்புகை, இடி, பயம், வெளி, கள், கேடு, ஓசை.
வெடித்தல் - வெடிப்புண்டாதல்.
வெடிப்பு - பிளவு.
வெடியுப்பு - ஓர்வகையுப்பு.
வெடில் - துர்நாற்றம்.
வெட்கம் - நாணம்.
வெட்சி - ஓர்பூச்செடி, பகைவரது பசுக்கூட்டத்தைக்கவர்தல்.
வெட்சிமாலை - நிரைகவர்ந்துவந்த அரசனைத்தசாங்கச்சொல்வைத்துவருணிக்கும்பிரபந்தம்.
வெட்டல் - தறித்தல்.
வெட்டியான் - சவஞ்சுடுவோன்.
வெட்டிரும்பு- இரும்பைத்தறிக்கும்உளி.
வெட்டிவேர் - இருவேலிவேர்.
வெட்டு -வாள்முதலியஆயுதங்களால்வெட்டும்வெட்டு.
வெட்டுக்கிளி - ஓர்சிறுபறவை.
வெட்டெனல் - கடுஞ்சொற்பேசல்.
வெட்டை - உட்டணநோய்.
வெட்பாலை - ஓர்மரம்.
வெண்கடுகு - ஓர்வகைக்கடுகு.
வெண்கலம் - ஓர் உலோகம்.
வெண்கலிப்பா- கலிப்பாவகையுளொன்று. (கலித்தளை விரவி யீற்றடிமுச்சீரான்முடிவது).
வெண்காடு - ஓர்சிவதலம்.
வெண்காந்தள் - ஓர்கொடி.
வெண்காயம் - ஓர்பூடு.
வெண்சலசமுற்றூள் - சரசுவதி.
வெண்டயம் - ஓர்வகைக்சிறுமணி.
வெண்டலை - தலையோடு.
வெண்டளை - வெண்பாவுக்குரிய தளை.
வெண்டாது - விபூதி, வெள்ளி.
வெண்டாழிசை - வெண்பாவினங்களுளொன்று.
வெண்டி - வெண்டைச்செடி.
வெண்டுறை - வெண்பாவினங்களுளொன்று, பாடற்கேற்கும்பாட்டு.
வெண்டேர் - பேய்த்தேர்.
வெண்ணெய்- தயிரிற்கடைந்தெடுக்கும் வெண்ணெய்.
வெண்ணெய்நல்லூர் - பெண்ணைநதிக்கரையிலுள்ளஒருசிவதலம்.
வெண்பலி - சாம்பல்.
வெண்பா - ஓர்வகைப்பா. (இது குறள்

வெண்பா நேரிசைவெண்பா இன்னிசைவெண்பா பஃறொடைவெண்பா நேரிசைச்சிந்தியல்வெண்பா இன்னிசைச்சிந்தியல்வெண்பா எனப்பலவகைப்படும்).
வெண்பு - வெண்ணிலம், வெண்மை.
வெண்பொன் - வெள்ளி.
வெண்மட்டம் - சித்திரமில்லாதது.
வெண்மை - வெள்ளைநிறம், இளமை, விவேகமின்மை, வெளிப்படையானவசனமுதலியன.
வெதிர் - மூங்கில், செவிடு, விரிந்தபூ.
வெதிர்ப்பு - கோபம்.
வெதுப்பல் - வெதும்பச்செய்தல்.
வெதும்பல் - தணியாக்கோபம், சூட்டினாலவிதல்.
வெந்தயம் - ஓர்சரக்கு.
வெந்தை - பிட்டு.
வெந்நீர் - சுடுநீர்.
வெப்பம் - அழற்சி, விருப்பம்.
வெப்பு - ஓர்நோய், வெப்பம், விருப்பம்.
வெம்பல்-கோபத்தால்மனம்புழுங்குதல், விரும்பல், வெதும்புதல்.
வெம்மை - வெப்பம், விருப்பம்.
வெயில் - சூரியகிரணம், ஒளி.
வெய்துயிர்த்தல் - நெடுமூச்செறிதல்,
வெய்துரை - கடுஞ்சொல்.
வெய்துறல் - அச்சப்படுதல்,கோபித்தல், துன்பமுறல்.
வெய்தென - விரைவாக.
வெய்யவன் - சூரியன், கொடியவன், விருப்புற்றவன்.
வெரிந் - முதுகு.
வெரு(வெருவு) - அச்சம்.
வெருகம் - விலங்கின்வாற்கீழிடம்.
வெருகு - பூனை, ஆண்பூனை,* வெண்கிடை.
வெருட்சி - அச்சம்.
வெருளல் - அஞ்சுதல்.
வெருளி - தோட்டம்முதலியவைகளில் விலங்குபறவைமுதலியவைகள் அணுகுதற்கஞ்சும்படி தாபிக்கும் உருவம்.
வெல்லல் - வெல்லுதல்.
வெல்லம் - கரும்பின்கட்டி.
வெல்லுமா - புலி.
வெவ்வேறு - வேறுவேறு.
வெளி - ஆகாயம், புறம், வெளியிடம்.
வெளித்தோற்றம் - உள்ளொன்று புறமொன்றாயிருப்பது, உருவெளித்தோற்றம்.
வெளிப்படல் - வெளியாய்த்தோற்றுதல்
வெளில் - அணில், தயிர்கடைதறி, யானைகட்டுந்தூண், தூண்.
வெளிவிருத்தம் - வெண்பாவினங்களுளொன்று. (மூன்றடிகளையேனும் நான்கடிகளையேனுமுடையதாய் அடிதோறுமிறுதியில் தனிச்சொற்பெற்றுவருவது).
வெளிறு - வைரமில்லாதமரம், விவேகமின்மை, வெண்மை.
வெளிறுதல் - வெளிப்படையாதல்,வெண்ணிறமாதல்.
வெளிற்றுரை - பொருளாழமில்லாதகவிமுதலியன.
வெளுத்தல் - வெண்மையாதல், வெண்மையாக்கல்.
வெள்கல் - நாணுதல், குலைதல்.
வெள்ளடை - வெற்றிலை.
வெள்ளம் - நீர்ப்பெருக்கு, சேனைத்தொகைகளிலொன்று, மிகுதி, கடல், கடற்றிரை, ஈரம்.
வெள்ளரி - வெள்ளரிக்கொடி.
வெள்ளாடு - ஆட்டினங்களுளொன்று.
வெள்ளானை - ஐராவதமுதலியதெய்வீகமான யானை.
வெள்ளி- வெண்பொன், வெண்மை, சுக்கிரன்.
[illegible]
வெள்ளிமலை - கயிலைமலை.
வெள்ளில் - விளாமரம், பிரேதங்களைவைத்தற்குரியபாடை.
வெள்ளீயம் - ஓர்வகையீயம்.
வெள்ளெழுத்து - வயதுமுதிர்ச்சியினாலுண்டாகும்பார்வைக்குறைவு.
வெள்ளை - வெண்ணிறம், வெள்ளாடு, வெள்ளாட்டின்பெண், சங்கு, பலபத்திரன், மேற்கட்டி, வெண்பா, ஆழ்ந்தகருத்தின்மை, கள்.
வெள்ளைமெய்யான் - சரசுவதி.
வெள்ளையானையூர்தி-இந்திரன், ஐயனார்,
வெறி - கள், வாசனை, அச்சம், கலக்கம், வட்டம், மடமை, ஆடு, பேய், வியாதி, வெறியாட்டு, தேவர்க்காடுங்கூத்து, பதினோருருத்திராடலுளொன்று.
வெறிதல் - செறிதல்.
வெறியாட்டாளன்-சன்னதகாரன்.

வெறியாட்டு - சன்னதம். [தல்.
வெறுக்கை-செல்வம், பொன்,வெறுத்
வெறுத்தல்- கோபித்தல், வெறுப்புறு
தல், செறிதல் (மலைபடு கூரு).
வெறுநுகம்-சோதிநட்சத்திரம்.
வெறுப்பு - அச்சம், அவாவின்மை,
துன்பம், செறிவு.
வெறுமை- இல்லாமை.
வெற்பன்- குறிஞ்சிநிலத்தலைவன்.
வெற்பு - மலை.
வெற்றம் - வெற்றி.
வெற்றி - பகைவரைவெல்லுதல்.
வெற்றிலை- தாம்பூலம்.
வெற்றிவேற்கை- ஓர் நீதிநூல்.
வெற்றுரை- பயனில்சொல்.
வென் - முதுகு, வெற்றி.
வென்றி- வெற்றி.
வென்றோன்- அருகன், வெற்றிபெற்
றோன்.

## வே

வே - வேகுதல்.
வேகடம் - இரத்தினங்களை ஒப்பஞ்
செய்தல்.
வேகம் - செல்லுதலின்விரைவு.
வேகவதி- கம்பைநதி, வைகைநதி.
வேகி - வேகமுடையோன்.
வேக்காடு- வேகுந்தன்மை.
வேங்கடம் - தமிழ்நிலத்தின் வடக்கெல்
லையான மலை.
வேங்கை - ஓர்மரம், புலி, பொன்.
வேசகம்- யானைவாலினுனி, விலங்கின்
வால்.
வேசந்தம் - சிறுகுளம். [கழுதை.
வேசரி (வேசரம்) - கழுதை, கோவேறு
வேசனம் - ஊர்.
வேசாறல் - இளைப்பாறுதல், துக்கம
டைதல்.
வேசி - வேசை.
வேடதாரி -வேடம்பூண்டு திரிவோன்.
வேடம்(வேஷம்)- அலங்கரித்தல்முதலி
யவற்றால் வேற்றுருவாதல்.
வேடன் - வேட்டுவன்.
[வேடிக்கை - ஆடம்பரம்].
வேடு - பொட்டணி, பாத்திரங்களின்
மேல் மூடிக்கட்டும்புடவை.
வேடை - வெப்பம்.
வேட்கை - விருப்பம்.
வேட்கோவன் - குயவன்.
வேட்டகம் - மனைவியின் பெற்றோரு
டைய வீடு.
வேட்டம்-கொலை,வேட்டை,விருப்பம்
வேட்டல்-ஓமஞ்செய்தல், விவாகஞ்செ
ய்தல், விரும்புதல்.
வேட்டணம் - வஸ்திரமுதலியவற்றை
அரையிற்சுற்றுதல், சூழச்செய்தல்.
வேட்டார்-மித்திரர்,மணஞ்செய்தோர்,
யாகஞ்செய்தோர்.
வேட்டி - வஸ்திரம்.
வேட்டிதம் - சூழப்பட்டது.
வேட்டுவன்-வேட்டையாளியென்னும்
பிராணி, வேடன், மகநட்சத்திரம்.
வேட்டை - வேட்டம்.
வேட்டோன் - நாயகன், யாகஞ்செய்
தோன்.
வேணகை - மதில்.
வேணவா - ஆசைப்பெருக்கம்.
வேணி - சடை, ஆகாயம், நதி, *தெரு,
*சேரி.
வேணு - மூங்கில், வேய்ங்குழல், வில்,
வாள்.
வேண் - அவா, கொடுந்தமிழ்நாடுகளு
ளொன்று.
வேண்டல் - இரத்தல், விரும்புதல்.
வேண்டாமை - வெறுப்பு. [கில்,
வேதகம்-வ[illegible]கிரம், சிறகு
வேதண்டம் - மலை, வெள்ளிமலை.
வேதபாரகன்-வேதமுழுவதையும் ஓதி
யுணர்ந்த அந்தணன்.
வேதமாதா - காயத்திரி.
வேதம் - இருக்குமுதலிய வேதங்கள்,
அறிவு.
வேதம் ௪ - இருக்கு யசுர் சாமம் அதர்
வணம் என்பன.
வேதல் - வேகுதல்.
வேதவனம் - வேதாரணியமென்னுஞ்
சிவதலம்.
வேதவித்து - வேதநூற்பொருளையறிந்
தோன்.
வேதனம் - கூலி, துளைத்தல், வேதனை
செய்தல், அறிதல்.
வேதனை - வருத்தம்.
வேதனை கஉ - அனல் இடியேறு குளிர்
ஆயுதம் நஞ்சு மருந்து நீர் காற்று பசி

தாகம் முனிவருமை பிணி என்பவற்ருல்வரும் வருத்தங்கள்.
வேதன் - பிரமா, அருகன், கடவுள், வியாழன்.
வேதா - பிரமா.
வேதாங்கம்-வேதத்துக்கு அங்கமாயிருக்கும்நூல். (சிட்சை வியாகரணம் சந்தசு நிருத்தம் சோதிடம் கற்பம் என்னும் ஆறுமாம்.
வேதாதி - பிரணவம்.
வேதாந்தசூடாமணி - துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகளியற்றிய ஒரு வேதாந்தசாத்திரம்.
வேதாந்ததேசிகர் - வடகலைவைணவர்களின் ஆசாரியர்.
வேதாந்தம் - உபநிடதம் பிரமசூத்திரம் முதலிய ஞானநூல்கள்.
வேதாந்தன் - அருகன், கடவுள்.
வேதாரணியம் - திருமறைக்காடென்னுஞ்சிவதலம்.
வேதாளம் - பிசாசம்.
வேதாளி - காளி.
வேதாளியர்-மங்கலப்பாட்டுமுதலியவைகளால் நித்திரையாயிருக்கும்அரசனை விழிப்பிப்போர்.
வேதி - ஓமகுண்டம், திண்ணை, கேட்டைநட்சத்திரம், மதில்.
வேதிகை-பரிசை, திண்ணை, வதுவைத்திண்ணை.
வேதித்தல் - ஒன்றைமற்றொன்ருகவிகாரப்படுத்துதல்.
வேதியர் - பிராமணர்கள்.
வேதினம் - ஈர்வாள்.
வேதை - கிரகங்கள்நிற்கும் நிலையினுல் வேதிக்கப்படும்நட்சத்திரம், துன்பம்.
வேத்தவை - அரசிருக்குமண்டபம்.
வேத்தா - நூற்பொருள்களையறிபவன்.
வேத்தியம் - அறியத்தக்கது.
வேத்திரகீயம் - ஓர் நகரம்.
வேத்திரம் - பிரம்பு.
வேத்திரவதி - ஓர்நதி. (மாளவதேசத்திலுள்ளது).
வேந்தன் (வேந்து)-அரசன், இந்திரன், வியாழன், சூரியன், சந்திரன்.
வேபனம் - நடுக்கம்.
வேம்பத்தூர்-பாண்டிநாட்டிலுள்ள ஒரு அக்கிரகாரம்.
வேம்பின்ருரோன் - பாண்டியன்.
வேம்பு - வேப்பமரம்.
வேயர் - தூதுவர்கள்.
வேயல் - வேய்தல், வேயப்பட்டவீடு.
வேயுள் - வேயப்பட்டவீடு.
வேய் - மூங்கில், உட்டுளைப்பொருள், தூது.
வேய்ங்குழல் - ஓர் இசைக்கருவி.
வேய்தல் - அணிதல், அலங்கரித்தல், மூடுதல், வேயப்பட்டவீடு.
வேய்வை - குற்றம். (பொருந களம்).
வேரம் - விக்கிரகம்.
வேரல் - சிறுமூங்கில், மூங்கிலரிசி.
வேரி-கள், இருவேலிச்செடி, வாசனை.
வேர் - மரங்களின்வேர்.
வேர்க்கொம்பு - சுக்கு.
வேர்த்தல் - கோபித்தல், வியர்த்தல்.
வேர்வை - வியர்வை.
வேலன்-முருகக்கடவுள், வெறியாட்டாளன்.
வேலாவலயம் - கடல், பூமி.
வேலி - நிலம், ஊர், மதில், காவல், எல்லை, வயல், பசுத்தொழுவம், சூழ்தல்.
வேலிப்பருத்தி- உத்தமாகாணிக்கொடி.
வேலை - கடல், கடற்கரை, திரை, காலம் தொழில்.
வேலையிற்றுயின்ரேன் - திருமால்.
வேல் - வேற்படை, ஆயுதம், வேலமரம், மூங்கில்.
வேவு - தூது, வேகுதல்.
வேழம் - கரும்பு, மூங்கில், யானை, சௌறுக்கைமரம், இசை.
வேழம்பர் - கழைக்கூத்தர்.
வேளாண்மை-உபகரிப்பு, உண்மை, கெல்முதலியவற்றைவிளைவித்தல்.
வேளாளரியல்பு கo - விருந்தோம்பல் ஆணைவழிநிற்றல் ஒழுக்கம் முயற்சி மனத்துமாசின்மை கைக்கடனுற்றல் அரசர்க்கிறைகொடுத்தல் ஒற்றுமைகோடல் சுற்றம்பேணல் மாட்சிமையானதொழில்களைத் தொடங்குதல் என்பன.
வேளாளர் - சூத்திரர், கொடையாளர்.
வேளிர் - குறுநிலமன்னர்.
வேளை - காலம், ஒருசெடி. (வேளை வெண்பூ; புற).
வேள் - ஆசை, ஆண்மகன், குமரவேள், மன்மதன், சாளுவன்.
*வேள்புலவரசர் - சாளுவவரசர்கள்.
வேள்வி - பூசனை, யாகம், ஒருமண்டபம்

கொடை, மகநட்சத்திரம்.
வேள்விக்குவேந்தன்- இந்திரன்.
வேள்வியாளர்- பிராமணர், கொடையாளிகள்.
வேள்வு- அரும்பண்டம்.
வேறல் - வெல்லுதல்.
வேறு- பிறிது.
வேறுபடுதல்- பிரிதல்.
வேறுபாடு- வேற்றுமை.
வேற்றிசைப்பா- சருக்கமுதலியவற்றின் முடிவில் வேற்றிசையாய்வரும் பா.
வேற்றுநிலைமயக்கு- ஒருமெய்யுடன் பிறிதொரு மெய் மயங்குவது.
வேற்றுப்பொருள்வைப்பு - செய்யுளணிகளிலொன்று, (சொல்லியபொருளை நிச்சயித்தற்கு வலியுடைய பிறிதொருபொருளை உலகறிபெற்றியான் வைத்துக்கூறல்).
வேற்றுமை- எழுவாய்முதலிய வேற்றுமைகள், வேறுபாடு, செய்யுளணிகளுளொன்று. (ஒப்புடைய இரு பொருளைத் தம்முள் வேற்றுமைபடச் சொல்வது).
வேனிலாளி - மன்மதன்.
வேனில் - கோடை, பொலிவு, *கொடை, அழகு, *பேய்த்தேர்.
வேனின்மாலை - இளவேனிலையும் முதுவேனிலையுஞ் சிறப்பித்துப்பாடும் நூல்.

## வை

வை - கூர்மை, வைக்கோல்.
வைகரி - அகங்காரமூன்றிலொன்று, (நால்வகைவாக்குக்களிலொன்று, (பொருளுடைத்தாய்க் கண்டத்திலிருந்து பிறக்குஞ்சத்தம்).
வைகல் - நாள், தங்குதல்.
வைகல்லியம் - குறைபாடு.
வைகறை - விடியல்.
வைகனிகை-இரத்தினங்களைத் துளைக்குமூசி.
வைகாசி-ஓர்மாதம், விசாகநட்சத்திரம்.
வைகானசம்-வைணவமதநூல்களுளொன்று.
வைகுண்டம் (வைகுந்தம்) - திருமாலுடையபதவி.
வைகுண்ணியம் - ஒவ்வாமை.
வைகை (வையை) - வையையாறு.
வைகைத் துறைவன் - பாண்டியன்.
வைக்கோல் - தானியங்கள்நீக்கப்பெற்ற நெல் முதலிய சிலபயிர்களின் தாள்.
வைசம்பாயனர்- வியாசருடைய மாணக்கருளொருவர். (வேதவியாசர் செய்த மகாபாரதத்தை ஜனமேஜயனுக்கு விரித்துச் சொன்னவர் இவரே).
வைசயந்தம்- இந்திரனுடையமாளிகை. (சுவர்க்கலோகத்திலுள்ளது).
வைசாகம் - வைகாசிமாதம், சாம்விடுநிலைகளுளொன்று. (ஒன்றுக்கொன்று ஒருசாண் இடைவெளியமையும் படி கால்களை வைத்துநிற்றல்).
வைசிபரியல்பு அ-உறுவதுதெரிதல் ஈட்டல் கொடுத்தல் இறுவதஞ்சாமை இடனறிந்தொழுகல் தனிமையாற்றல் முனிவிலனாதல் பொழுதொடுபுணர்தல் என்பன.
வைசியர் - செட்டிகள்.
வைசியர்தொழில் சு- ஓதல் வெட்டல் வேளாண்மை வாணிகம் பசுக்காத்தல் உழவு என்பன.
வைசுவதேவம் - பிராமணர்கள் போசனத்தின்முன் தினந்தோறுஞ் செய்ய வேண்டிய ஓர்வகையோமம்.
வைசுவானரன் - அக்கினி.
வைசேடிகம் - பதார்த்தபேதங்களைக்குறித்துக் கணாதரியற்றிய ஒரு நூல்.
வைச்சிரவணன் - குபேரன்.
வைடூரியம் - நவமணிகளுளொன்று.(பூனைக்கண்போன்றிருப்பது).
வைணவம் - விஷ்ணுமதம். (இம்மதத்தினர் வடகலையாரெனவும் தென்கலையாரெனவும் இருபகுப்பினர். (வடகலையார் வடநூல்களாகிய வேதம் புராணம் முதலியநூல்களைச்சிறந்ததென்பர்; தென்கலையார்தமிழ்நூலாகிய நாலாயிரப் பிரபந்தத்தையும் அவற்றோடொப்பானதென்பர்).
வைணவி - சத்தமாதர்களுளொருதேவி
வைதரணி - ஆன்மாக்கள் யமலோகத்துக்குச் செல்லும்மார்க்கத்தி லுள்ள அக்கினியாறு.
வைதருப்பம் - செய்யுணெறிகளுளொன்று. (அணிநூலிற்சொல்லப்பட்டசெறிவுமுதலியபத்துக்குணங்களையுமின்றியமையாதனவாயுடைமை).
வைதல் - ஏசுதல்.

வைதவியம் - விதவைத்தன்மை.
வைதிகம் - வேதமார்க்கம்.
வைதிருதி - உள யோகங்களுளொன்று.
வைதேகன் - வைசியனுக்குப்பிராமணப் பெண்வயிற்றிற்பிறந்தவன்.
வைதேகி - சீதை.
வைத்தல் - பொருளை ஓரிடத்துவைத்தல்
வைத்தியநாதநாவலர் - ஐந்திலக்கணங்களையுமடக்கி இலக்கணவிளக்கமென்னும்நூலைச்செய்த ஒருபுலவர்.
வைத்தியம் - நோயைத்தீர்த்தற்குச் செய்யும்பரிகாரம்.
வைத்தியன் - ஆயுள்வேதம்பயின்றோன்.
வைநாசிகம் - சன்மநட்சத்திரத்தினின்று உகும் நட்சத்திரம்.
வைபவம் - செல்வம்.
வைப்பாட்டி - குடிப்பெண்ணல்லாதவளாய்க் காமநுகர்ச்சியின்பொருட்டுக் கூடப்பெறும்பெண்.
வைப்பிராசம் - தேவர்களுடையபூந்தோட்டங்களுளொன்று.
வைப்பு - இடம், ஊர், சேமத்திரவியம், *வாய்.
வைமாத்திரேயன் - பின்னோதரப்பிரா தா.
வையகம் - பூமி.
வையம் - பூமி, தேர், உரோகிணிநட்சத்திரம், பண்டி, எருது, சிவிகை, வாகனம்.
வையாகரணி - வியாகரணங்கற்றோன்.
வையாபிகர் - அகத்தியரது மாணாக்கருளொருவர்.
வையாபுரி - பழனிமலை.
வையாளி - குதிரையின்மிகுகதி.
வையாளிவீதி - குதிரையிலிவர்ந்து வேகமாய்ச்சென்றுபயிலும் வீதி.
வைரம் (வயிரம்) - வைரரத்தினம், மரவைரம், நெடுங்காலமாகநிகழுங்கோபம், கூர்மை, வச்சிராயுதம், வலி, *வாத்தியப்பொது, கொம்புமுதலியவற்றிலிடும் பூண்.
வைரவம் - உட்சமயங்களுளொன்று.
வைரவர் - வைரவக்கடவுள். (சிவபிரான் தம்மைமதியாத பிரமாவின்தலையைக் கிள்ளும்படி தோற்றுவித்த மூர்த்தி.
வைராக்கியசதகம் - சாந்தலிங்கசுவாமிகளியற்றிய ஞானநூல்.
வைராக்கியதீபம் - இதுவும்சாந்தலிங்கசுவாமிகளியற்றியஞானநூல்
வைராக்கியம் - விடயங்களைவெறுத்தல்.
வைரி - சத்துரு.
வைரியர் - கூத்தர், பாணர்,
வைவச்சுவதன் - ஏழாமனு, யமன்.
வைனதேயன் (வைனன்) - கருடன்,

## வெள

வெளவல் - கவர்தல், கவ்வுதல்.
வெளஷட் - ஓமமுதலியவற்றிற் சொல்லப்படுவதோர்மந்திரம்.

## சொற்பொருள் விளக்கம்.

முற்றுப்பெற்றது.

---

செந்தமிழ்முனிவன் திருவடிவாழ்க.

18

Saxaphone